

திங்கள் இருமுறை
ஆக 16.1971. 35 காசு

# தமிழ்முரசு



# 251-வது லட்சாதிபதியாக நீங்களே இருக்கலாமே!

**இன்றே வாங்குவோம்**
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

தமிழ்நாட்டின் பரிசுத் திட்டத்தால் இதுவரை 250 லட்சாதிபதிகள் தோன்றியுள்ளனர். பரிசுத் திட்டத்தின் பெருமைதான் என்னே! 251-வது லட்சாதிபதியாக நீங்களே ஆகிவிடலாமே! ஒரு ரூபாய்தான். அது உங்களுக்கு உயர் வாழ்வு தருகிறது. நாட்டுக்கு நல்வாழ்வு அளிக்கிறது. வளம் சேர்த்து உங்கள் வீட்டையும், கல்வி, மருத்துவ, வீட்டு வசதிகள் மூலம் நாட்டையும் காக்கிறது.




**ரூ.3,00,000 உங்களுக்கே கிடைக்கலாம்!**

மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 17,50,000

மொத்தப் பரிசுகள் : 5328

தமிழ்நாடு தான் இவ்வளவு பெரிய பரிசுகளைத் தருகிறது.

கவனிக்கவும்



செலவு ஒரு ரூபாய்
வரவோ பல லட்ச ரூபாய்

**திருத்தியமைக்கப்பட்ட புதிய பரிசுத் திட்டங்கள்**

**சிறப்புப் பரிசுகள்**

| | |
|---|---|
| முதல் சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 3,00,000 |
| இரண்டாவது சிறப்புப் பரிசுகள் இரண்டு: (ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,00,000) | ரூ. 2,00,000 |
| (பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்) | ரூ. 5,00,000 |

**சாதாரணப் பரிசுகள்**

| | | |
|---|---|---|
| மூன்றாவது பரிசுகள் ஐந்து ஒவ்வொன்றுக்கும் | ரூ. 10, 000 : | ரூ. 50,000 |
| நான்காவது பரிசுகள் பத்து ஒவ்வொன்றுக்கும் | ரூ. 5,000 : | ரூ. 50,000 |
| ஐந்தாவது பரிசுகள் ஐம்பது ஒவ்வொன்றுக்கும் | ரூ. 1,000 : | ரூ. 50,000 |
| ஆறாவது பரிசு ஆயிரம் ஒவ்வொன்றுக்கும் | ரூ. 100 | ரூ, 1,00,000 |
| (இது ஒவ்வொரு வரிசைக்கும்) | | ரூ. 2,50,000 |

**குலுக்கல் நாள்: 30-8-1971**
பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்
உடனே வாங்குங்கள். இல்லையேல் கிடைக்காது.

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.
* 5 வரிசைகள் வெளியீட்டுக்கு உட்பட்டது


# தமிழரசு

மலர் 1 16—8—1971 இதழ் 4




மின்வசதி முழுமை விழா
மஞ்சள் காமாலை
சிற்பத்திறனில் சிறந்த தாராசுரம்
மரமும் மணிக்குறளும்
திருவாளர் பொன்மொழியார்
பஞ்சம் பறந்துவிடும்
அரங்கேற்றம் (கவிதை)
ஏன் இந்தக் காதல்? (தொடர்கதை)
வெண்பாப் போட்டி

முதல்வரின்
தூங்கிய மணலி
தொழில் நகராகிறது

அரசுத்துறை டெண்டர்
விளம்பரங்கள்
பக்கம் 29—44, 66


முகப்பில்:
சட்டமன்ற உறுப்பினர் நாளையொட்டி
நடைபெற்ற போட்டிகளில்
சில காட்சிகள்




## செய்திச் சித்திரங்கள்







# தூங்கிய மணலி தொழில் நகராகிறது

### முதலமைச்சர் கலைஞர்

சில ஆண்டுகளுக்கு முன் வரையிலும்கூடத் தூங்கிவழிந்து கொண்டிருந்த மணலி கிராமம் தற்போது தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க இடமாக உருமாறியிருக்கிறது.

தமிழக அரசு மணலியில் 1,700 ஏகரா நிலத்தை வாங்கி, அதனை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை, உரத்தொழிற்சாலை, டில்லி நூற்பாலை, அடிப்படை இரசாயனத் தொழிற்சாலை, நாக்பால்—அம்பாடி ஆகிய பல்வேறு தொழிற்சாலைகளுக்குக் கொடுத்திருக்கிறது.

இங்கு இப்பொழுது, நாடு முழுவதும் புகழ்பெற்று விளங்கும் கமானி நிறுவனத்தார் 'கார்பன் பிளாக் தொழிற்சாலையை அமைக்க முன்வந்ததன் வாயிலாகத் தமிழ் நாட்டோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக ஆகிவிட்டது எனக்குப் பெரிதும் மன நிறைவைத் தருகிறது.

தமிழ் நாட்டில் பெரிய டயர்த் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. தமிழக அரசும் கூட்டுத் துறையில் ஒரு டயர்த் தயாரிப்புத் தொழிற்சாலையினை அமைக்க இருக்கிறது. இந்த ரப்பர் டயர்த் தயாரிப்பிற்கும் அச்சு யந்திர மை தயாரிப்பிற்கும் கார்பன் பிளாக் என்னும் மூலப் பொருள் மிகவும் இன்றியமையாத் தேவையாகும். எனவே, இங்கு கார்பன் பிளாக் தொழிற்சாலை அமைவதில் தமிழக அரசுக்கும் அக்கறை இருக்கிறது.

இதுதவிர, மணலியில் 65 கோடி ரூபாய் மூலதனமுள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை ஏற்கனவே இயங்கத் துவங்கிவிட்டது. எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து கிடைக்கும் துணைப் பொருள்களைக் கொண்டு, மணலி வட்டாரத்தில் 'பெட்ரோ கெமிகல்' தொழிற்சாலைகள் பலவற்றை அமைக்க வேண்டும் என்பதிலும் மாநில அரசு பேரார்வம் காட்டி வருகிறது.

மணலியில் ஓர் உரத் தொழிற்சாலை விரைவில் இயங்க இருக்கிறது. நாக்பால்—அம்பாடி, இந்தியன் ஆர்கானிக் கெமிகல்ஸ், டில்லி நூற்பாலை ஆகியவை இன்னும் இரண்டாண்டுகளில் வேலை செய்யத் தொடங்கும். பாலிதீன், பிளாஸ்டிக், பாலியஸ்டர்இழை ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலைகள் குழுவை (Complex) 80 கோடி ரூபாய் மூலதனத்தில் அமைக்க மத்திய அரசு பச்சைக் கொடி காட்டவேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. விரைவில் மத்திய அரசு அனுமதி வழங்கும் என்று நம்புகிறோம்.

தொழில் நிர்வாகிகளின் முயற்சியாலும், அரசின் முயற்சியாலும் 130 முதல் 150 கோடி வரை இந்த வட்டாரத்தில் மூலதனம் போடப்பட்டிருக்கிறது. இந்த மூலதனத்தின் காரணமாக இரண்டாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த வட்டாரத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தருவதற்காக எல்லா வசதிகளும் கொண்டதாக விளங்கும் குடியிருப்புகளைத் தோற்றுவிக்க அரசு 500 ஏக்கர் நிலத்தை வாங்கியிருக்கிறது. இந்தத் தொழிலாளர் குடியிருப்பு முன்மாதிரியான நகரமைப்பாக விளங்கும். இங்குள்ள தொழிற்சாலைகளுக்கு நீர் வசதி, மின்விசை வசதி, தகவல் தொடர்பு, சாலைகள் அமைக்க அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது. தனியார் துறைக்கும் அரசுக்கும் இடையே இத்தகைய ஒத்துழைப்பு நிலவிடுவதன் காரணமாகச் செழிப்பான சகாப்தத்தை நோக்கி நாம் முன்னேற முடி

யும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கும் முறையைப் பரவலாகவும், எளிதாகவும் ஆக்க வேண்டும் என்பதை நாம் அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம். இதைச் செய்யவில்லை என்றால், நம் நாட்டில் புதிய முறையில், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது. பொதுவாக, அதிகாரக் குவியல் மூலம் ஏற்படுகிற தாமதங்கள் தொழில் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்து வருகின்றன. எனவே, தொழில்களின் மீது மத்திய அரசுக்குள்ள கட்டுப்பாடு தளர வேண்டும் என்பதிலே இங்கு யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

மாநிலங்களுக்குத் தான் தொழில்களின் தேவை தெரியும். எனவே, தொழில்களின் தேவைகளை உணர்ந்து நிறைவேற்ற மாநிலங்களுடன் மத்திய அரசு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் தமிழக அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகிறது. தொழில் அமைதிக்கான சூழ்நிலையை உருவாக்குவதில் நாம் எல்லா வகையான முயற்சிகளையும் செய்து வருகிறோம்.

பின் தங்கிய மாவட்டங்களில் தொழில்கள் துவங்குவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டுப் பலவித முடிவுகளைக் கொள்கை அடிப்படையில் நாம் மேற்கொண்டுள்ளோம். தேசிய வளர்ச்சிக் குழுவில் நாம் பல முறை வாதாடிய பிறகு நமது வாதத்தின் நியாயத்தை உணர்ந்து தமிழ் நாட்டிலுள்ள எட்டு மாவட்டங்களைப் பின்தங்கிய மாவட்டங்களாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

பின்தங்கிய இந்தப் பகுதிகளில் தொழில்களைத் துவங்க முன் வருகிறவர்களுக்கு நிதி வழங்கும் நிறுவனங்கள் மூலம் பல்வேறு சலுகைகள் கிடைக்கும்.

இராமநாதபுரம், திருச்சி, மதுரை மாவட்டங்களில் உள்ள பதினேரு பின் தங்கிய தாலுகாக்களில் தொழில்கள் துவங்க முன்வருகிறவர்களுக்கு அத்தகைய நிறுவனங்களின் மூலதனச் சொத்தில், பத்தில் ஒரு பங்கை ஒட்டு மொத்த மானியமாக மத்திய அரசு வழங்கும்.

இவை தவிர தமிழ்நாட்டில் உள்ள பின்தங்கிய 40 தாலுகாக்களில் தொழில் துவங்கினால், மின் கட்டணத்தில் தமிழக அரசு சலுகை அளிக்கும் என்று அறிவித்திருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த எட்டு பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் துவங்க தொழில் நிறுவனங்கள் முன்வந்தால் அவர்கள் முன்பு செலுத்திய அல்லது செலுத்த வேண்டிய விற்பனை வரியை ஒட்டியதான நீண்டகால வட்டியில்லாக் கடன் வழங்குகின்ற ஒரு திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் தனியார் துறைக்கு இருக்கிற பங்கைத் தமிழக அரசு உணர்ந்திருப்பதையே இந்தச் சலுகைகள் நிரூபித்துக் காட்டும்.

தனியார் துறையும், பொதுத் துறையும் இடைவெளி அதிகம் உள்ளவை என்பதைத் தமிழக அரசு ஏற்பதில்லை. தொழில் துறையில் தனியார் துறையும், பொதுத்துறையும் இணைந்த கூட்டுத் துறை என்னும் கோட்பாடு—இரு துறைகளும் இணைந்து நற்பயன்களை விளைவிக்க முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. தொழில் துறையில் கடுமையான போக்கு என்று ஒன்று இருக்கமுடியாது. உண்மை நிலைக்கு ஏற்ப—வளைந்து கொடுக்கக் கூடிய—ஒரு கண்ணோட்டம்தான் தேவையானது.

அடிப்படையான நோக்கங்களையும், பரந்த கொள்கைக் குறிக்கோள்களையும் குறித்துக் கருத்து ஒருமைப்பாடு ஏற்பட்டு விடுமானால்—தனியார்துறை தொழில் அதிபர்களின் ஊக்கம், முன் முயற்சி ஆகியவற்றினுடன் அரசின் சமுதாய நோக்கமும், செல்வ வசதியும் ஒருங்கிணைந்து செயல்பட முடியும். இப்படிப்பட்ட கலவை ஒன்று நிகழ்ந்தால் செழிப்புக்கு வேறு தடைகள் இருக்க முடியுமா ?

தமிழ் நாட்டில் தொழில்துறையில் மூலதனம் போடுவதை ஊக்குவிக்கத் தன்னால் ஆன முயற்சிகள்—தேவையான முயற்சிகள் அனைத்தையும் தமிழக அரசு செய்யும்.



நாமாகவே, நமக்காகவே, நம்முடைய நாட்டுக்காகவே, நம்முடைய மக்களுக்காகவே நினைப்பதும் சிந்திப்பதும் செயல்படுவதும்தான் பொது வாழ்க்கையினுடைய மிக இன்றியமையாத இலக்கணம்.


# மதராஸ் ரி:பைனரியைப் பொறுத்த மட்டிலும் சுதந்திர தினம் எழுச்சியூட்டும் இன்பத் திருநாள்!



சுதந்திரம் பெறுவதற்காக நாம் ஏற்ற இன்னல்களும், செய்த உயிர்த் தியாகங்களும் நினைவுக்கு வருகின்றன. அரும்பாடு பட்டுப் பெற்ற இந்த சுதந்திரத்தை எப்பாடு பட்டாவது நாம் காத்தாக வேண்டும்.

வெறும் பேச்சுக்களும், வேடிக்கை கேளிக்கைகளும் மட்டும் போதாது. உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் நம் அனைவரது வாழ்வை வளப்படுத்தவும் வேண்டும்.

எம் ஆர் எல் இதற்கெனத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது.

உணவு உற்பத்தி பெருக, தொழில்துறை செழிக்க, போக்குவரத்து தழைக்க, வாழ்க்கைத் தரம் உயர உதவி செய்யும் பல பொருள்களை எம் ஆர் எல் தயாரித்தளிக்கிறது.

அத்துடன் தன்னைச் சுற்றிலும் சிறியதும் பெரியதுமாகப் பல தொழில்கள் வளரவும் எம் ஆர் எல் வகை செய்கிறது.

## சுதந்திரத் திருநாளில் எழுச்சிமிக்க நல்வாழ்த்துக்கள்!

எம் ஆர் எல்லின் தயாரிப்புகள்: பெட்ரோல் ● கெரோஸின் ● டீஸல் எண்ணெய் ● ஜெட் எரிபொருள் ● விமான எரிபொருள் ● சமையலுக்கு உதவும் எரிவாயு ● நா:ப்தா ● லூப் கச்சாப் பொருள் ● தார் ● கந்தகம் ● தொழிற்சாலைக்குத் தேவையான எரிபொருள்

MRL

மதராஸ் ரி:பைனரீஸ் லிமிடெட்,
சென்னை

# மின் வசதி முழுமை விழா



1953-ஆம் ஆண்டு இறுதியில் ஒருநாள் எழும்பூர் ரயிலடியில் ஏகப்பட்ட கூட்டம். உணர்ச்சிப் பிழம்புகளாக கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. பிளாட்பாரத்திலும், ரயிலடிக்கு உள்ளேயும் வெளியேயும் எங்கும் வெள்ளம்போல் தமிழர் கூட்டம். கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டத்திலே கலந்து கொண்டு சிறைத் தண்டனை ஏற்று மீண்டு வந்த தங்களுடைய அருமைத் தலைவனை, தண்டவாளத்திலே தலைவைத்துப்படுத்துத் தமிழகத்திற்காகத் தன் உயிரையே அளிக்க வந்த ஒப்பற்ற தியாகியை வரவேற்கத்தான் அந்தக் கூட்டம். ரயிலடிக்கு வெளியே பெரிய வளைவு ஒன்றிலே அழகுத் தமிழிலே ஒரு சொற்றொடர் என்னைக் கவர்ந்தது. ''அழகு மணி மாளிகையின் அலங்காரத் திருவிளக்கே வருக வருக! .... .....''

காலம் ஓடுகிறது—பந்தயக் குதிரை வேகத்திலே......... அன்று கண்ட தமிழகமா இன்று? எங்கு பார்த்தாலும் வியத்தகு வளர்ச்சிப் பணிகள். தமிழகமே மாறி வருகிறது. புன்னகைப் பூங்காவாகப் பூத்துக் குலுங்குகிறது இன்று.

1971 ஆகஸ்ட் திங்கள் 5-ஆம் நாள். மந்தமாருதத் தென்றல் இதயத்தைக் கிறங்க வைக்கும் இனிய மாலை வேளை. நாதசுர இசை, கூடியிருந்தோரைக் குளிர வைக்கிறது. அழகு மணிமாளிகையே மிஞ்சிவிடும் எழில்மிகு அலங்காரப் பந்தல். எங்கு பார்த்தாலும் விளக்குகள்! விளக்குகள்! காவல்துறை பாண்டுக் குழுவினர் ரம்யமான இசையை வழங்குகின்றனர். ஊரெல்லாம் திருவிழா. ஆலந்தூர் நகரமே அழகுத் திருக்கோலம் பூண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம். அலங்காரப் பந்தல் கொள்ளவில்லை. நிரம்பி வழிகிறது. எல்லோர் இதயங்களிலும் இனம் புரியாத ஓர் மகிழ்ச்சி. அன்று கல்லக்குடிப் போராட்டத்திலே கலந்து கொண்டு சிறை மீண்ட தமிழ்த் தாயின் திருமகனை—இன்று நாலு கோடித் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கு வழி வகுக்கும் தமிழக முதல்வரை—ஊரெல்லாம் ஒளி வழங்கும் உத்தமத் தலைவரை—டாக்டர் கலைஞரை—வரவேற்க, அந்தத் தமிழ்ப் பெரு மகனின் தெள்ளு தமிழினை அள்ளி அள்ளிப் பருக ஆர்வத்துடன் கூடியிருந்தனர் மக்கள்.

கொள்ளை அழகு நிரம்பி வழியும் மேடையிலே, டாக்டர் கலைஞர், மின்துறை அமைச்சர், புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ஆர்., வாரியத் தலைவர், தலைமை மின்பொறியாளர், செங்கை மாவட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஆலந்தூர் நகராட்சி தலைவர்,

டாக்டர் கலைஞர் ஒரு மின் விசைக் குமிழை அழுத்துகிறார். நீலத்திரை மறைகிறது. 'கிராம மின்சார வளர்ச்சி' என்றெழுதப் பட்ட தமிழகத்தின் வரைபடம் காட்சி அளிக்கிறது. தமிழகத்தின் அத்தனை மாவட்டங்களும் வரையப்பட்டிருந்த அந்தப் படத்திலே செங்கை மாவட்டம் மின்வசதி முழுமையாகப்பெற்றுவிட்டதைக் காட்டும் வகையில் ஒளிவிளக்குகளால் நிரப்பப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சிப் பெருக்கால் மக்கள் எழுப்பிய கரவொலி வானைப்பிளக்கிறது. நீலத்திரை விலகி செங்கை மாவட்டம் ஒளிப்பிழம்பாக வரைபடத்தில் காட்சி அளிக்க, மெல்லிய இசை—

பொன்சாரம் இட்டிழைக்கும்
பூமான்கள் வீட்டுக்கே
மின்சாரம் போகு மென்ற
நிலை மாற்றி,
எழுபத்தி ரண்டுக்குள்
எங்கணுமே மின்இணைப்பு
என்தமிழ்த் திருநாட்டில்
ஏற்படவே உழைக்கின்றோம்'

கலைஞரின் கவிதை வரி ஒலிபரப்பப்படுகிறது.

டாக்டர் கலைஞர் விழாவில் முழக்கமிடுகிறார்:—

''செங்கை மாவட்டத்து மக்களின் உள்ளமெல்லாம் களிப்படைகின்ற ஒப்பரிய விழா இது.

1969-ஆம் ஆண்டு தமிழகத்தை ஆளுகின்ற முதல்வர் பொறுப்பை அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு நான் ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுத் தமிழகச் சட்ட மன்றத்தில் முதல்வர் என்ற முறையில் முதல் உரையினை ஆற்றிய பொழுது இரண்டொரு சூளுரைகளை எடுத்துக் கொண்டேன்.

அப்படி எடுத்துக் கொண்ட சூளுரைகளில் ஒன்று தான் 1972-ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் மின்சாரவிளக்குகள் இல்லாத கிராமமே இருத்தலாகாது என்ற நிலையினை உருவாக்குவோம் என்பதாகும். இப்படிப்பட்ட ஆர்வத் துடிப்பு இருந்தால் மட்டும் போதாது. வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்று தீவிரமாக ஈடுபட்டோம்.

நல்ல சுறுசுறுப்பும், பேரார்வமும், கட்டுப்பாடும், தன்மையும் கண்ணிய உணர்ச்சியும், கடமையாற்றுவதில் அக்கறையும் கொண்ட அருமை நண்பர் மின்சாரத்துறை அமைச்சர் ஓ. பி. இராமன் அந்தப் பணியை வெகு வேகமாக நடத்தத் தொடங்கினார்.

மின்வாரியத்தின் தலைவர் அவர்களின் ஒத்துழைப்போடும், வாரிய ஊழியர்களின் உறுதுணையோடும் பணியாற்றினர்.

இதற்கிடையே எத்தனையோ தட்டுப்பாடுகள், இடர்கள், இன்னல்கள், தேவையான சாமான்கள் வந்துசேருவதில் தாமதங்கள் ஆகியவற்றையெல்லாம் கடந்து இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் இன்முகம் காட்டிப் பணியாற்றிய அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் நன்றியறிதலையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே இருக்கின்ற அழகான படத்தை உங்களின் பலத்த கரவொலிக்கிடையே திறந்து வைத்தேன்.

குமரியும் நெல்லையும்—இராமநாதபுரமும், மதுரையும்—திருச்சியும், தஞ்சையும்—சேலமும். கோவையும்—நீலகிரியும், தர்மபுரியும் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களும் முழுமையாக ஒளிவிளக்குகள் சூழப்பெறுமல்செங்கை மாவட்டம் மட்டுமே ஒளி விளக்குகளால் சூழப்பட்டிருக்கும் இந்த வரைபடத்தைக் கண்டீர்கள்.

ஒரு மாவட்டத்தில் எல்லாக் கிராமங்களிலும் மின் விளக்கு ஏற்றி முடிக்கப்பட்டு விட்டது என்று தான் செங்கை மாவட்ட எல்லையைச் சுற்றிலும் மின் விளக்கு போடப்பட்டிருக்கிறது.

இந்தப் படம் முழுவதும் மின் விளக்குகள் இருக்கத் தக்க விதத்தில் இந்தப் பாமரர்களால்இந்தக் காரியம் முடியுமா? இந்த ஆட்சியில் இதை நிறைவேற்றமுடியுமா? இந்தச் சாமானியர்களால் இது முடிகிற செயலா என்று ''ஆகா ஊகூ'' என்றவர்களெல்லாம் மூக்கின்மேல் விரலைவைக்கத்தக்க விதத்தில் 1972-க்குள் சென்னை நகரில் அப்படிப்பட்ட தமிழகம் பூராவும் மின்வசதி பெற்றுவிட்ட நிறைவு விழாவினை நடத்திக் காட்டத்தான் போகிறோம்'' அந்த வீரத்திருமகனின் சூளுரை கேட்டு மக்கள் வெள்ளம் பெருத்த கரவொலியினை எழுப்புகிறது.

மக்கள் தலைவரின் கம்பீரக் குரல் தொடர்கிறது:

''1933-ஆம் ஆண்டுதான் தமிழ் நாட்டுக்கு மின்சாரம் அறிமுகமானது என்று கருதுகிறேன்.

33-ஆம் ஆண்டிலிருந்து 66-ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு மின்சார வசதிசெய்யப் பட்டது என்று பார்க்க வேண்டும்.

1933-ஆம் ஆண்டிலிருந்து 66—67 வரை மின்சாரம் பெற்ற கிராமங்கள் 25 ஆயிரம். மொத்தக் கிராமங்களின் எண்ணிக்கை 57 ஆயிரம். இதில் மின்சாரம் பெற்றவை 25 ஆயிரம் கிராமங்களாகும்.

பிறகு 67—68-ல் ஓராண்டுக் காலத்தில் மின்சாரம் பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை மூவாயிரம் உயர்ந்து 28 ஆயிரம் கிராமங்களாயிற்று.

1968—69-ல் கிராமங்கள் என்றாகி,

1969—70-ல் 31,727 கிராமங்கள் என்றாகி,

1970—71-ல் 42,229 கிராமங்களாகவும் உயர்ந்திருக்கின்றன.

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் 33 ஆண்டுக் காலத்தில் மின் விளக்கு வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை 25 ஆயிரம்.

இந்த நான்காண்டுக் காலத்தில் மட்டும் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப் பட்டு அவர் வழியில் நடக்கும் இந்தச் சாதாரணமானவர்களின் ஆட்சியில் மின் விளக்கு வசதி பெற்றிருக்கின்றன.

இந்த ஆண்டு இறுதிக்குள் இன்னும் 7 மாவட்டங்களில் மின் விளக்கு பூர்த்தி விழா நடைபெற இருக்கிறது. இதில் செங்கை மாவட்டம் முந்திக்கொண்டது. செங்கை மாவட்டத்திற்கு அந்தப் பெருமை இருக்க வேண்டியது தானே!

ஏனென்றால், தமிழர்களைத் தட்டி எழுப்பி, தமிழ் நாட்டைத் தன்மான புரியாக்கி 'தமிழன் என்ெருரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்பதை மெய்ப்பித்துக்காட்டியபேரறிஞர் அண்ணு அவர்கள் பிறந்த மாவட்டம் இது. அந்த மாவட்டம் இந்தப் பெரும் பணியில் பெருமை பெற்றிருக்கிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் செங்கை என்று அழைக்கக் காரணம் என்ன?

கொடுத்துக் கொடுத்துக் கை சிவந்தவன் குமணன் என்பார்கள்; கொடுத்துக் கொடுத்துச் சிவந்தவன் பாரி என்பார்கள்.

அந்த முறையில் கொடுத்துக் கொடுத்துச் சிவந்த செங்கை படைத்த எம்.ஜி. ஆர். இருக்கின்றகாரணத்தால்முன்கூட்டியே செங்கை என்று பெயர் இட்டிருக்கக்கூடும் என்று கருதுகிறேன்''

மீண்டும் மக்களின் கரவொலி.

பிரச்சினையைத் தொடுகிருர் முதல்வர்:

"'சாத்வீகமான முறையில் முன்னேற்றக்காரியங்கள் தமிழகத்தில் நடைபெறுகின்றன என்று மற்ற மாநிலத்தார் பாராட்டுகின்றனர்; விழுந்து போற்றுகிருர்கள்.

இந்தப் பாராட்டுக்குக் காரணம் நானே, இந்த அரசாங்கமோ மாத்திரமல்ல. நான்கு கோடி மக்களின் ஆதரவு தான் இதற்குக் காரணம்.

இந்த அமைதி தொடர்ந்து இருக்கவும்—அமைதி காக்கப்படவும்—அதற்கு ஊனமேற்படாமலிருக்கவும் — கேடு படாமல் இருக்கவும் இன்று போல் என்றும் உங்களது ஆதரவு இருக்க வேண்டும்.

உரிமையுணர்ச்சியும், கடமை உணர்ச்சியும் உள்ள ஊழியர்கள் மின் வாரியத்திலே இருக்கின்றனர். அவர்களிடையே நல்ல மரத்தில் சில புல்லுருவிகள் இருப்பதுபோல் சிலர் இருக்கிருர்கள். அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு தொழிலாளர்களுக்கும் உண்டு. கடமை உணர்ந்து பணியாற்றினுல் தான், செங்கை மாவட்டத்தில் மட்டுமல்ல; மின்வசதி முழுமை பெற்று விட்டதாக அறிவிக்கப்படும் நீலகிரி மாவட்டத்தில் மட்டுமல்ல; தமிழகத்தில் உள்ள எல்லாச் சிற்றூர்களிலும் இந்தப் பணியை நிறைவேற்ற முடியும்.

இருண்ட தமிழகத்தை ஒளிமயமாக்கினேம் என்று பெருமை நமக்கு உருவாகும்.

அது மட்டுமல்ல. தமிழகத்தில் உள்ள 20 ஆயிரம் அரிசனக் காலனிகளிலும் மின் விளக்குப் போட வேண்டும் என்ற என் அன்புக் கட்டளையை அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் அவர்கள் செயல்பட வேண்டும்

அடிக்கடி நான் சொல்வது போல், பந்தயக் குதிரை வேகத்தில் நான் சென்று கொண்டிருக்கிறேன்.

அதிகாரிகளும், அரசு அலுவலர்களும் பந்தயக் குதிரை வேகத்தில் வர முடியாவிட்டாலும்; குதிரை எப்படிச் செல்கிறது, சரியான இலக்கில் செல்கிறதா என்பதை அறிய பின்னுலே விரைந்து செல்லும் ஜீப் கார் வேகத்திலாவது என்னைத் தொடர்ந்து வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்பொழுதுதான் செங்கை மட்டுமல்ல ; செந்தமிழ் நாடு முழுமைக்கும் பரிமளிக்கத்தக்க அளவுக்கு அரசுப் பணி அமைந்திட முடியும்.''

உயிரூட்டமுள்ள முதல்வரின் பேருரை கேட்டுக் கூடியிருந்த மக்கள் உணர்ச்சிப் பிழம்பாக மாறி நின்ற காட்சியினை அந்த விழாவுக்கு நேரில் வந்தவர்கள் புரிந்து கொள்ளாமலிருக்க முடியாது.

செங்கை மாவட்டத்தில்உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டு விட்டதைக் குறிக்கும் அந்த மின்வசதி முழுமை விழாவிற்குத்தலைமைதாங்கிஞர் மாண்புமிகு மின்துறை அமைச்சர். தனது தலைமை உரையில் ''கலைஞரின் தலைமையிலே கட்டுப்பாடுடன் பணியாற்றுவோம். செங்கை மட்டுமல்ல. நீலகிரி மாவட்டம் முழுமைக்கும் மின்வசதி அளிக்கப்பட்டு முடிக்கப்பட்டு விட்டது என்ற செய்தியையும் நான் அறிவித்துக் கொள்கிறேன். அகில இந்தியாவில் யாராலும் செய்ய முடியாததைத் தமிழ்நாடு செய்துள்ளது'' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்கள்.

மின்சார வாரியத்தின் சார்பில் பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதிக்கு இரண்டு இலட்சத்து இரண்டாயிரத்து இருநூறு ரூபாயினை முதல் தவணையாக மின்சாரத் தலைமைப் பொறியாளர் திரு கோதண்டபாணி அவர்கள் கலைஞரிடம் அளித்தார்கள்.

மின்வாரியத்தின் சார்பில், மின்துறை அமைச்சர் மாண்புமிகு ஓ.பி. இராமன் அவர்கள் ரூபாய் முப்பது இலட்சத்து எழுபதாயிரத்து நூறுக்கான காசோலையைச் சிறு சேமிப்புத் திட்டத் துணைத் தலைவர் புரட்சி நடிகர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் அளித்தார்.

செங்கை மாவட்டச் சட்ட மன்ற உறுப்பினர்கள் சார்பில் திரு முனுஆதி அவர்கள் உரையாற்றினார்.

தலைமை மின் பொறியாளர் நன்றி கூற, நாட்டுப் பண் இசைக்க, செங்கை மாவட்ட மின்வசதி முழுமை விழா நிறைவு பெற்றது.

எழுச்சி மிகு மகிழ்ச்சி விழாவிலே கலந்து கொண்ட பூரிப்பில் திரும்பிச் செல்ல வண்டியில் ஏறி உட்கார்ந்தேன். அண்ணுசாலை. இருபுறமும் இருளைப் பகலாக்கும் ஒளி உமிழ் விளக்குகள் ! எங்கு பார்த்தாலும் ஒளி வெள்ளம் ! காப்பி சாப்பிடக் கடைக்குள் நுழைகிறேன். வானெலிப்பெட்டியில் இனிய இசை :—

''விளக்கேற்றி வைக்கிறேன், விடிய விடிய எரியட்டும் ; விடியும் நாட்களெல்லாம் நல்ல நாளாய் விடியட்டும் ''

சிந்தனை எங்கெங்கோ ஓடுகிறது. '' அழகுமணி மாளிகையின் அலங்காரத் திரு விளக்கே வருக! வருக! '' என்ற அந்த வரிகள் நினைவுக்கு வருகின்றன. தமிழகத்தின் திருவிளக்கு டாக்டர் கலைஞர். அவருடைய பொற் கரங்களால் அவருடைய சீரிய தலைமையின் கீழ் இன்று ஊரெல்லாம் ஒளிமயமாகிக் கொண்டு வருகிறது கண்டு உள்ளமெல்லாம் சிந்தையெல்லாம் தேனுகத் தித்திக்கிறது.

—வ.ச.






### "விளக்கத்திற்கு" முன்னுரை

' நமது நிலை ' இலவச இணைப்பை முன்பு கொடுத்த நீங்கள் ' நமது விளக்கத்தை ' ஆகஸ்டு முதல் தேதி இதழுடன் இலவச இணைப்பாகத் தந்திருக்கிறீர்கள். நன்றி ! விளக்கத்தைப் படித்துச் சுவைத்தேன்.

முதல்வர் ஆற்றிய நிதி நிலை அறிக்கையையும், அதன் மீது எடுத்த விவாதத்திற்குப் பின்னர் முதல்வர் ஆற்றிய மறுமொழியையும் நூலாக்கித் தந்திருக்கும் ' தமிழரசு ', நிதி நிலை உரை மீது அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் சட்டமன்றத்தில் செய்துள்ள விவாதங்களின் சுருக்கத்தை ' நமது விளக்கத்தின்' முன்னுரையாகக் கொடுத்திருக்கலாம் என்றே தோன்றுகிறது.

—எம். சிவராமன், தேனீ.

### பருப்பிருக்க அறுவைச் சிகிச்சை ஏன் ?

''பருப்பு வகைகளை அதிகமாக உண்பதால் இயற்கையாகவே குடும்பக் கட்டுப்பாடு ஏற்பட்டு விடும் '' என்று சொல்லியிருக்கிறீர்களே, அப்படி என்ருல் எதற்காக அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் ! பேசாமல் வீட்டுக்கு வாரத்துக்கு ஒரு லிட்டர் பருப்பு வகைகளைக் கொடுத்துவிடலாமே !

—ந. சுந்தரராஜன்,
வத்திராயிருப்பு.

### நகை நிறைந்த மாணவர்

' பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் ' பரிசு பெற்ற மாணவப் பேச்சாளர்களுக்கு—அறுவைச் சக்கரவர்த்தி, அறுவை மன்னர், அறுவைப் பேரரசு என்பது போன்ற பட்டங்களைத் தருகின்ருர்கள் என்பதைப் படித்ததும் விழுந்து விழுந்து சிரித்தேன். மாணவர் தம் நகைச்சுவையே தனி !

—கே. எஸ். சந்திரா, பி.ஏ,
குடந்தை.

### கிடங்கிற்குப் பாராட்டு

அரசினர் எழுது பொருள் கிடங்கு ஒன்று இருப்பது தெரியும் ; ஆனால் அதன் பணி என்னென்ன என்பது இதுவரை எனக்குத் தெரியாது. ஆகஸ்டு முதல் தேதி இதழில் எழுது பொருள் கிடங்கின் தொண்டுகளைப் பற்றித் தெளிவாக எழுதியிருக்கிறீர்கள். இப்படி மக்களுக்கு அதிகமாகத் தெரியாத செய்திகளைத் தொடர்ந்து தெரிய வைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

—ஏ. எம். அழகப்பன்,
கண்டனூர்.

### பெண்மை வெல்லும்!

' ஆவதும் பெண்ணுல் அழிவதும் பெண்ணுல் ' என்று பெரியவர்கள் சொல்வதுண்டு ; அதிலிருந்து, 'பெண் வலிமையானவள் ; அவளால் எதுவும் நடக்கும்' என்ற கருத்துத் தெளிவாகியுள்ளது. அதே கருத்தைத் 'தாய்மை வெல்லும்' என்ற கட்டுரை தெரிவித்திருக்கிறது.

—கே. மருதப்பன்,
கோபிசெட்டிபாளையம்.

### ஆசிய அதிசயம்!

அடேயப்பா ! நமது தமிழ் நாட்டிலுள்ள அரசு ஸ்டுடியோ, ஆசியாவிலேயேபெரிய ஸ்டுடியோவாக மாறிக்கொண்டிருக்கிறது என்பதை எண்ணும்போது அதிசயமாக இருக்கிறது ! நமது நாடுதாஞ இந்த அளவு முன்னேற்றம் அடைந்து வருகிறது என்று வியக்கத் தோன்றுகிறது.

—ஆர். நடராஜன்,
தரங்கம்பாடி.

### வளர்ப்பின் பெருமை

'வளர்ப்புப் பெண்' சுவையாக இருந்தது. இறுதி வரை வளர்ப்புப் பெண் ' நாய் ' என்பது தெரிந்துவிடாத வண்ணம் அமைந்திருந்தது பாராட்டுக்குரியது.

—சிவ. அருணசலம்,
காளையார்கோயில்.

### செங்குளமா ? பசுங்குளமா ?

' செங்குளமே வாழி ' என்ற கவிதை படிப்பதற்குச் சுவையாக இருந்தது. ஆனுல், செங்குளத்தைப் பசுங்குளமாக்கிவிட்டீர்களே—வண்ணக் கலவையினுல் ! சிவப்பு உங்களுக்குப் பிடிக்காதோ ?

—முரளி, திண்டிவனம்.

### ஆராய்ச்சி அரிச்சுவடி

' அன்னைத் தமிழில் அறிவியல் நூல்கள் ' என்ற கட்டுரையில் ' அரிச்சுவடியையே மாற்ற வேண்டு மென்று' ஆணித்தரமாகக் கூறியிருக்கும் ஆசிரியரின் கருத்து பாராட்டத் தகுந்தது. இந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கு அறிஞர்கள் ஆதரவு தர வேண்டும் என்பது மட்டுமல்ல—அது போன்ற ஆராய்ச்சியைத் தொடர வேண்டும்.

—இரா. கலையன்பன், தில்லை.

### உயர்ந்த பதவி!

' உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை ' என்று ஔவைப் பாட்டி சொன்ன அருங் கருத்துக்கு வடிவாக அமைந்திருக்கிறது 'பதவி உயர்வு'—சிறு கதை; உயர்ந்த கதை இது.

—கே. கோபிநாத்,
சென்னை-23.



297

BALAJI FERTILISERS - MADRAS -

அன்று : அணை கட்ட அணிலும் உதவியது.

இன்று : பசுமைப் புரட்சிக்கு நாங்களும் உதவுகிறேம். பசுமைப் புரட்சியை நாடெங்கும் உண்டாக்கத் தமிழக அரசு செய்து வரும் பணிகள் ஏராளம். அவைகளைச் செயல்படுத்துவது நம் கடமை.

எப்படி : அதிக விளைச்சல்—அதிக மகசூல்—அதிக விளைச்சலைப் பெற—தக்கபடி உரமிட வேண்டும். யூரியா, அமோனியம் சல்பேட், அமோனியம் பாஸ்பேட், கலப்பு உரங்கள், பூச்சி மருந்துகள் எதுவாயினும்—உங்கள் தேவைகளுக்கோ, அல்லது ஆலோசனைக்கோ எங்களை அணுகலாம்.


திரு S. T. S. லக்ஷ்மி நரசிம்மன்,
மேனேஜிங் பார்ட்னர்.

மற்றும் : எங்கள் கம்பெனி மேனேஜிங் பார்ட்னர், திரு. லக்ஷ்மி நரசிம்மன், ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கெல்லாம் சென்று உர விநியோக முறைகளை நேரில் தெரிந்துகொண்டு வந்திருக்கிருர்.

விவரங்களுக்கு எழுதுக :

**K. B. கோபாலன்,**
சேல்ஸ் மேனேஜர்,

பாலாஜி பெர்டிலைசர்ஸ்

54, நல்லதம்பி முதலி தெரு,
சென்னை-5.

போன் : 86905

# விவசாயத்திற்கும், வீட்டிற்கும் கிராமகுடிநீர்த்திட்டங்களுக்கும்

பலவித ஈசன் பம்புகள்




## ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி லிட்

5-7 செகண்ட் லைன் பீச், சென்னை-1. தந்தி: EASUN போன்: 29321




# மாணவர் அரங்கம்

பசி, பஞ்சமென்ற சொல் இல்லாத தஞ்சையில் கல்விக்கும் பஞ்சமில்லை. கிராமப்பகுதியில்—பூண்டியில் (தஞ்சையிலிருந்து 7 மைல் கிழக்கில்) திருபுட்பம் கல்லூரி உள்ளது. மிகச் சாதாரண ஏழை எளியவர்கள்—உயர்படிப்பறியாத மக்கள் வாழும் இந்தக் கிராமப் பகுதியில் பிறந்த என்போன்ற—என்னுடன் பயிலும் மாணவர்கள், எந்த வகையில் நன்றி சொல்வதென்று தெரியவில்லை !

'அண்ணா மாணவர் இல்லம்' என்று பெயரிட்டோம் நாங்கள் தங்கி இருக்கும் இல்லத்திற்கு. அண்ணா இல்லில் உள்ள ஒவ்வொரு மாணவரும் வாரம் 25 காசு சேர்க்கின்றோம். எங்களை மாணவச் சீரணியினர் என்று பெயரிட்டுக் கொண்டோம். ஒவ்வொரு வாரமும் சேரும் பணத்தைக் கொண்டு தாள், எழுதுகோல், கரும்பலகை, கரும்பலகைக்குரிய குச்சிகள் வாங்கிக் கொண்டு பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை விடுமுறையிலும் செல்கின்றோம்.

அங்கு, கையொப்பமிடத் தெரியாதவர்களுக்குக் கையொப்ப மிடவும், எழுத்துக் கூட்டித் தட்டுத்தடுமாறிப் படிப்பவர்களுக்குத் தடங்கலின்றிப் படிக்கவும் கற்றுத் தருகிறோம். நம்நாட்டின் இன்றைய நிலையையும், உலக அறிவியலையும், அதில் உழவர்களாகிய அவர்கள் பங்கு என்னவென்பதையும் எடுத்துக் கூறுகிறோம். நவீன முறை விவசாயத்தைப் பற்றிக் கூறுவோம், அதை அவர்கள் மிகவும் விரும்பிக் கேட்கின்றனர்.

நாகரிகமான மாணவ நண்பர்களுடன் கூடிப்பேசி இன்புற்று அறிவை வளர்க்கும் நாங்கள் கல்வி அறிவை மட்டும்தான் வளர்க்கின்றோம். கிராமப் புறத்து மக்களின் மனத்திலே நாங்கள் கற்ற கல்வியைப் பயனுள்ள தாக்குவதில் முழு இன்பத்தை அடைகின்றோம். நாங்கள் முதன் முதலில் ஒவ்வொரு கிராமத்திற்குச் செல்லும்போதும் அவர்கள் எங்களைக் கிருத்துவப் பள்ளி மாணவர்கள் தங்கள் மதத்தைப் பரப்ப வருவதாக எண்ணினராம். எங்களுக்கெனச் சேரிவாழ் மக்கள் தனிப்பாத்திரத்தில் தண்ணீரைக் கிணற்றினின்று தங்கள் கைபடாமல் மொண்டு கொடுத்தனர். தீண்டாமை ஒழிப்புப் பற்றி நாங்கள் எடுத்துக்கூறினோம். அதிகப்படியான மரியாதை காட்டி எங்கள் பால் பேரன்பு காட்டினர். 'நாங்கள் உங்களின் பிள்ளைகளே' என்றோம். இருந்தும் பல தடவை சென்றபின்தான் எங்களுடன் சரிநிகர் சகோதரத்துவம் காட்டிப் பழகினார்கள்.

காலையில் கிராமத்திற்குச் செல்லும் நாங்கள் மாலையிலே தான் திரும்புவோம். இதனால் அக்கிராமத்து மக்கள் எங்களுக்காக வீடுதோறும் மதிய உணவு தயாரித்துத் தருவர். நாங்கள் அவர்களுடன் அன்புடன் ஆடம்பரமின்றிப் பழகியது கண்டு ஒவ்வொருவரும் அவர்கள் பகுதிப் பழக்கத்திற்கேற்ப உறவு முறை கொண்டே அழைக்கின்றனர்.

ஒரு நாள், எல்லா வீட்டினரும், நாங்கள் கோடை விடுமுறையில் வீடு செல்கின்றோம் என்று உணர்ந்து தங்கச் செய்தனர். எங்களுடைய சொந்த வீட்டிற்குக் கொண்டு செல்லும்படி நிறையக் காய்கறி, தின்பண்டங்கள், தயாரித்துக் கொடுத்தனர்; மீண்டும் இந்த ஆண்டும் அதே பணியை மேற்கொண்டு செயல்பட்டு வருகின்றோம்.

வெள்ளை உள்ளம் கொண்ட கிராம மக்களுக்குத் தொல்லை தரும் அறியாமையைப் போக்க இன்றைய இளைய சமுதாய மாணவச் சகோதர, சகோதரிகள் அனைவரும் பாடுபட வேண்டும். இது ஒரு சிறந்த தொண்டு என்று நாங்கள் கருதுகிறோம். இத் தொண்டில் நாங்கள் பெரு மகிழ்ச்சியடைகிறோம். இன்றைய மாணவருலகம் இந்தப் பெருமகிழ்ச்சியில் பங்கு பெற முன் வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். யாம் பெறும் இன்பம் அனைவரும் பெறுக !

—தங்க. கைலாசம்
பி.காம்., (மூன்றாம் ஆண்டு).

**மாணவர் சீரணி**


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00
அரை ஆண்டு ரூ. 4.00
தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிர்வாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2




கண்களில் வெள்ளைவிழி மஞ்சளாக மாறித் தோன்றுகின்ற காமாலை நோய் முக்கியமாக இரண்டு வகைப்படும்.

1. மஞ்சள் காமாலை.

2. குருதி நீர்க் காமாலை.

## மஞ்சள் காமாலை—

காய்ச்சல், பசியின்மை, வாந்தி வருவது, போன்ற உணர்வு, வாந்தி, தலைவலி, முதுகு, கை கால் வலி, வயிற்றுக்கோளாறு முதலிய அறிகுறிகளுடன் வருவது மஞ்சள் காமாலை. இந்த அறிகுறிகள் தோன்றிய நான்கைந்து நாட்களில், காய்ச்சல் குறையும்; சிறுநீரில் மஞ்சள் நிறம், களிமண் போன்ற மலம் தோன்றுவது மஞ்சள் காமாலை வருவதை உணர்த்தும் அறிகுறிகளாகும். சிறுநீரிலும், மலத்திலும் தோன்றுகின்ற நிறத்தில் சில வேறுபாடுகள் இருக்கலாம்; காலதாமதமாக அதாவது 20-வது நாளுக்குப் பின்னர் கூட இவை தெரியக் கூடும். இந்த அறிகுறிகள் ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் இருக்கும். பின்னர் மறைந்துவிடும். சிலருக்கு ஆறு மாதங்களும் அதற்கு மேலும் கூட இவ்வறிகுறிகள் இருந்துவரும்.

மெல்ல மெல்லத்தான் உடம்பு தேறிவரும். சில நேரங்களில் திரும்பவும் நோய் கடுமையாவதுமுண்டு. 5 சதவீத நோயாளிகளுக்கு, நோய் தோன்றி நான்கு மாதங்கள் கழிந்த பின்னரும் காமாலை அறிகுறிகள் இருந்துவரும். இந்த வைரஸ் தாக்கப்பட்டு நோய்க்காளாகாமல் இருப்பவர் அதிகம். ஆனால் இவர்களிடமிருந்து மற்றவர்களுக்கு நோய் பரவுகிறது. காமாலை நோய்க்கு ஆளாகி இறப்போர் தொகை மிகவும் குறைவு.

இந்த நோய்க்குக் குறிப்பிட்ட சிகிச்சை எதுவும் இல்லை.

அறிகுறிகள் வெளிப்படத் தெரியாமலே கூட வந்து குணமாகிவிடும். அதே நேரத்தில் கடுமையாகத் தாக்கும்போது நோயாளியின் ஈரல் மிகவும் பாதிக்கப்பட்டுவிடுகிறது.

## நோய் பரப்பும் கிருமி—

காமாலை நோய் 'வைரஸ்' எனப்படும் கண்ணுக்குப் புலப்படாத ஒரு நுண் கிருமியினால் வருவதாகக் கூறப்படுகிறது. இந்த நுண் கிருமிகள் வெப்பம், குளோரின் முதலான கிருமி கொல்லி மருந்து முதலியவற்றால் பாதிக்கப்படுவதில்லை என்று தெரிகிறது.

## நோய் உருவாகும் காலம்

சாதாரணமாக 23 முதல் 28 நாட்கள் அல்லது ஒரு மாதத்துக்கு ஓரிருநாள் குறைந்த காலத்தில் இந்த நோய் உருவாகிறது. அதாவது குறைந்தது 10 நாட்கள், உயர்ந்த அளவு 40 நாட்கள் என்ற கால அளவு எனலாம். இதுவே மஞ்கள் காமாலைக்கும், குருதி நீர்க் காமாலைக்கும் உள்ள வேறுபாடாகும். அதாவது குருதி நீர்க் காமாலை உருவாகும் காலம் சராசரி மூன்று மாத காலமாகும்.

## பரவும் வகை

நோயாளியிடமிருந்து நெருங்கிப் பழகும் மற்றவருக்கு இந்த நோய் பரவுகிறது. சமுதாயத்தில் இந்த நோய் மெல்ல மெல்ல பல மாதங்கள் ஓராண்டு அல்லது அதற்கு மேலும் பெரிய அளவில் பரவிவரும்.

மலத்தின் வழியே வெளிப்படும் நோய்க்கிருமிகள் வாய்வழி உடல் நலமுள்ளோரின் உடலுக்குள் புகுந்து நோய் தொற்றுவதாகத் தெரிகிறது. நாகரிக நோய்களில் குடும்பத்ினருக்குத் தொண்டை அடைப்பான், சீதபேதி போன்ற நோய்களைப் போல் பெரிய அளவில் வரத்தக்க ஆபத்து விளைவதாக ஒரு கருத்து நிலவுகிறது. நோய்க் கிருமி பரவுவதற்குப் பள்ளிக்கூடச் சூழ்நிலையும் ஒரு காரணமாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாக நோய்த்தொற்று ஏற்பட்ட குடிநீர் முதலானவை மூலம் நோய் பெரிய அளவில் பரவுகிறது. பால், உணவு, முதலியவற்றின் மூலம் நோய்க் கிருமிகள் அவ்வளவு அதிகமாகப் பரவுவதில்லை.

1955 நவம்பர்—1956 ஜனவரி மாத கால இடைவெளியில் சுமார் ஆறு வார காலத்தில் டெல்லியில் இந்த நோய் அதிகமாகப் பரவியதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுமார் 29,300 பேருக்கு மஞ்சள் காமாலை தோன்றியதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்குச் சுமார் ஒரு வார காலம் கழிவுநீர் நகரத்திற்குக் குடிநீர் வழங்குகின்ற யமுனை நதியில் கலந்தது தான் காரணம். இந்தக் கொள்ளை நோய்த் தொற்றுதலில் ஒரு குறிப்பிடத்தக்க தன்மை யாதெனில் தண்ணீர் மூலமும் பரவுகின்ற டைபாய்டு காய்ச்சல் முதலான நோய்கள் தண்ணீரைச் சுத்தப்படுத்தும் முறைகளினால் தடுக்கப்பட்டன. ஆனால் காமாலை நோய் குளோரின் முதலியவை வால் தடுக்கப்படவில்லை.

## நோய் பரவும் நிலை

இலேசான காமாலை நோய்கள் உட்பட நோய் பரவுதல் குறித்த புள்ளி விவரம் போதுமானதாக இல்லை. குழந்தைகளுக்கே இந் நோய் மிகுதியாகத் தோன்றுவதிலிருந்து வயதுவந்தவர்கள் காலப்போக்கில் நோய் தொற்றுதலினால் தாங்கும் சக்தியைப் பெற்றுவிடுகிறார்கள் என்று தெரிகிறது. அனாதை இல்லங்கள், நெருக்கடியான மருத்துவமனைகள் முதலான பொது நிறுவனங்களில் நெருக்கடி, சுகாதாரக் குறைவு ஆகிய காரணங்ளினால் சாதாரணமாகக் காமாலை நோய் பரவுகிறது. இராணுவ முகாம்களில் மிகுதியாகப் பரவி, பலரைச் செயலற்றவர்களாக்குகிறது. சில இராணுவத்தினர் நோயுற்று செயலற்றவர்களாக இருக்க இது ஒரு முக்கிய காரணமாகிறது.

சிறு குழந்தைகளிடையே நோய்த் தொற்று வீதம் குறைவாகவும் 5 முதல் 9 வயதினரிடையே மிகுதியாகவும், அந்த வயதினர்க்கு மேல் வயது ஆக ஆக நோய் வீதம் குறைந்தும் தோன்றுகிறது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் இந்நோய் தொற்றுவதில் வேறுபாடு இல்லை.

மறுமுறையாக நோய் வராமல் தடுப்புச் சக்தி வளருவதாகத் தெரிகிறது. அத்தகைய தடுப்புச் சக்தி எவ்வளவு காலம் நீடிக்கும் என்று தெரியவில்லை என்றாலும், பல்வேறு காரணங்களால் இரண்டாவது முறையும் நோய் தாக்கலாம்.

மஞ்சள் காமாலை பெரிய அளவில் தொற்றுநோயாகச் சமுதாயத்தில் பரவும்போது, சாதாரணமாக நோய்பரப்பும் சாதனங்களான தண்ணீர், உணவு, முதலியவற்றில் நாம் கவனம் செலுத்த வேண்டும். பெரிய அளவில் நோய் பரவுவதற்கு, இந்தச் சாதனங்களில் நோய்க் கிருமிகள் கலந்தமை காரணமாக இருக்கலாம்.

டைபாய்டு காய்ச்சலுக்குப்பின் தண்ணீர் வழி பரவும் இந்தக் காமாலை நோய் பரவாமலிருக்கத் தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

## குருதிநீர்க் காமாலை

1883—84 ஆண்டுகளுக்கிடையில் ஜெர்மனியில் கப்பல் கட்டும், இயந்திரத் தொழிற்சாலைப் பணியாளரிடையே காமாலை நோய் பெரிய அளவில் பரவியது. அந்த நேரத்தில் நோயுற்ற அனைவரிடையேயும் பொதுவாக நிலவிய ஓர் உண்மையை டாக்டர் லூர்மென் என்பவர் கண்டறிந்தார். அந்த நோயாளிகள் அனைவரும் 2 முதல் 8 மாதங்களுக்கு முன்னதாகப் பெரியம்மைத் தடுப்புக்காக அம்மைப் பால் வைக்கப்பட்டிருந்தவர்.

மேலும் சிலர் இரத்த தானத்தின் பின் காமாலை நோய்க்கு ஆளாயினர். இரத்த தானச் சேர்க்கையினால் வருகின்ற காமாலை நோய் 5 முதல் 20 சதவீதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தனிப்பட்ட இரத்த தானம் அளிப்பவரைக் காட்டிலும் இரத்ததானச் சேர்க்கை இரத்தத்தால் காமாலை நோய் ஆபத்து மிகுதி என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நன்கு சுத்தம் செய்யப்படாமல் அவசரத்தில் சுத்தம் செய்யப்பட்ட (Sterilize) ஊசிகளினாலும் சிரிஞ்சுகளினாலும் இந்நோய் பரவுகிறது. பெரிய மருத்துவமனைகளில் அநேகம் பேர்களுக்கு ஊசி செலுத்தியதைத் தொடர்ந்து காமாலை நோய் வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது; ஏனென்றால் அவசரத்தில் சரியாக ஸ்டெரிலைஸ் பண்ணாத ஊசி சிரிஞ்சுகளால் வருகிறது.

இத்தகைய முறைகளினால் ஊசிமூலம் காமாலை நோய் பரவுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பச்சை குத்திக் கொள்வதன் மூலமும் காமாலை நோய் தோன்றியிருக்கிறது. லேபரேட்டரிகளில் பணிபுரிவோர் சிலரும் காமாலை நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

## குருதிநீர்க் காமாலை நோய்க் கிருமி—

சாதாரணமாக உடல் நலத்துடன் இருந்து இரத்ததானமளிக்கும் ஒரு சிலரின் இரத்தத்தில் 'காமாலைக் கிருமி' இருக்கிறது. இவர்களைக் கண்டறிவதற்கு எந்த ஒரு இரத்த சோதனையும் இல்லை. இவர்களுடைய கடந்தகால நோய்களைப் பற்றி விசாரிப்பதாலும் இவ்வுண்மையை அறியமுடியாது.

அறிகுறிகளினால் இவ்வேற்றுமையைக் கண்டறிய முடியாது.

குருதிநீர்க் காமாலை நோயின்-நோய் உருவாகும் காலம் மிக நீண்ட காலம் அதாவது 3 அல்லது 6 மாத காலம் என்பதே இரண்டுக்குமுள்ள வேற்றுமையாகும்.

## தடுப்பு முறை—

இரத்ததானம் அளிப்போரைப் பரிசோதனை செய்து எவரது இரத்தத்தில் 'வைரஸ்' இருக்கிறது என்று கண்டுபிடித்து அவர்களை நீக்குவது முடியாத காரியம் என்றாலும், இரத்த தானமளிப்போரை நன்கு சோதனை செய்ய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும். முந்திய ஆண்டிலோ அல்லது சில மாதங்களுக்கு முன்னரோ காமாலை நோய்க்கு ஆட்பட்டவர்களை இரத்ததானம் கொடுப்பதிலிருந்து நீக்கவேண்டும்.

பலரிடமிருந்து சேகரிக்கப்பட்ட இரத்தத்தைவிட ஒரே ஒருவரிடமிருந்து இரத்தத்தைக் கொடுப்பது விரும்பத்தக்கது.

பெரிய மருத்துவமனைகளிலும் சிகிச்சை நிலையங்களிலும் தோலைக் குத்தப் பயன்படுத்தப்படும் கருவிகள் அனைத்தையும், இரத்த சேமிப்புக்குப் பயன்படுத்தும் கருவிகள் அனைத்தையும் நன்கு 160 டிகிரி சென்டிகிரேட் உலர் வெப்பத்தில் ஒரு மணி நேரத்துக்குக் கொதிக்க வைத்தால் 15 நிமிடம் கொதிக்க வைத்து நோய்த் தடைச் சுத்தம் செய்து (Storilizo) பயன்படுத்துவதன்மூலம் குருதிநீர்க் காமாலை தொற்றுவதைத் தவிர்க்கலாம்.

ஒரே ஊசி மூலம் தொடர்ந்து பல நோயாளிகளுக்கு ஊசி போடக்கூடாது.

ஒரு முறையே பயன்படுத்தி எறிந்துவிடக்கூடிய (Plastic போன்ற) ஊசி மருந்துச் செலுத்துக் குழாயையும், ஊசியையும் பயன்படுத்துவது நல்லது.

குருதிநீர் காமாலைக் வேறு எந்த முறையில் பரவுகிறது. என்பது தெரியவில்லை.

மக்கள் தொகையில் ஒரு பகுதி முதியவர்கள், தங்கள் இரத்தத்தைப் பிறருக்குச்செலுத்துகையில், காமாலை நோய் பரப்பும் வைரஸை இரத்தத்தில் பெற்றுள்ளனர் என்று தெரிகிறது. இத்தகையவர்களே குருதிநீர்க் காமாலை நோய் பரப்புவோராக உள்ளனர். ஒரு முறை இத்தகைய இரத்தம் செலுத்தப்படுவோர் இத் தொற்றுதலை நீண்டகாலத்துக்கு வைத்துக் கொள்கின்றனர். இது ஊசி மூலமாகச் செயற்கை முறையில் பரவுகின்ற விந்தையான நோய்.




# வெண்பாப் போட்டி

முத்து

## 14. நிலையை ஒழிக்க நினை!

● பிள்ளையர்கள் ஒன்றிரண்டு பெற்றால்நம் வாழ்வினிலே
எள்ளளவும் தொல்லைதுயர் இல்லையடி—கிள்ளையே
பலசெய்கள் பெற்றுப் பயனின்றி வாடும்
நிலையை ஒழிக்க நினை!

—கலைநம்பி, சீர்காழி.

இரவும் முழுநிலவும் என்தலைவி ! உன்றன்
வரவு தனையெண்ணி வாட்டும்!—உறவே
அலைபோலென் நெஞ்சத்தில் ஆர்ப்பரிக்கும்! தாக
நிலையை ஒழிக்க நினை!

—நெல்லை. ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

வல்லதாந் தாய்மொழியின் வாயிலாய்க் கற்பதுவே
நல்லதாம் என்றுணர்ந்து நந்தமிழில்—எல்லாக்
கலையும் அறிவியலுங் கற்பதற் கில்லா
நிலையை ஒழிக்க நினை!

—பு. தே. வேங்கடகிருஷ்ணன், சென்னை-1.

மின்னல்விழிப் பார்வையினை வேண்டியுள்ளம் ஏங்குதடி
என்றன்நிலை காண்பதற்கும் ஏன்தயக்கம்?—உன்றன்
கொலைவாள் விழிவீச்சின் கூர்மையில்என் துன்ப
நிலையை ஒழிக்க நினை!

—சிவ. மு. சிவலிங்கம், சிவகாசி.

செந்தமிழ்வாழ் நாட்டினிலே சீர்பரப்பும் ஏருழவா!
வந்தவரை வாழவைப்பா யுன்தொழிலால்!—இந்த
நிலையதனை நன்கறிந்து நீயுழைத்துப் பஞ்ச
நிலையை ஒழிக்க நினை!

—அ. முத்துசாமி, பேரையூர்.

நாட்டிலே உற்பத்தி நாளும் பெருக்கென்றால்
வீட்டின் தொகைபெருக்கம் வீண்மனமே!—கேட்டிலையோ!
அளவுக்கு மிஞ்ச அமுதமும்நஞ் சாகுமிந்
நிலையை ஒழிக்க நினை!

—கூ. ச. சூசை, போச்சம்பள்ளி.

ஆண்டா னடிமையென ஆண்டவனு செய்திட்டான்?
வேண்டாத இக்கொடுமை வேண்டாமே—தீண்டாப்
புலைச்சாதி என்றோர் புறம்வாழ விட்ட
நிலையை ஒழிக்க நினை!

—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டாம்பாக்கம்.

விண்ணூர்தி யின்றேல் வெளிநாட்டை வேண்டலாம்
தண்ணீரின் ஊர்தியும் 'தா' எனலாம்;—உண்ணும்
நிலக்குணவு கேட்டிரத்தல் நீதியல்ல வென்(று)அந்
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் சோ. பா., வேதாரண்யம்.

எண்ணிப்பார் பிள்ளைகள் எத்தனை என்பதையும்
எண்ணிப்பார் இத்துன்பம் ஏனப்பா?—வண்ணக்
கலையைப்போல் எண்ணிக் கருத்தடைசெய் திந்த
நிலையை ஒழிக்க நினை!

—இரா. வைரமுத்து, சென்னை-30.

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

திரு கலைநம்பி,
மே/பா. புலவர் மருதங்குடி வெங்கடேசன்,
வள்ளுவக்குடி (அஞ்சல்),
மாயூரம், தஞ்சை மாவட்டம்.

299

கூட்டில் உயிர்வாழக் கூலிகளாய்ப் பாடுபட்டும்
வாட்டும் துயரில் வதைவாரை—நாட்டில்
பலவழியில் ஏய்த்துப் பயனடைவோர் வாழும்
நிலையை ஒழிக்க நினே!

—துறவி, சென்னை-12.

செய்யாதே நற்பணிகள்; செய்பவரைப் பார்த்துவசை
பெய்வாரே பண்பில்லார் பீடழித்(து)—உய்ய
மலைபோல நீநிமிர்ந்து மாற்றலரின் பொய்யாம்
நிலையை ஒழிக்க நினே!

—தா. கு. ஆ. தமிழ்க்குமரன், ஈரோடு-1.

இன்பத் தமிழ்நாடும் ஏற்றமிகு செந்தமிழும்
அன்புத் தமிழ்மக்கள் அத்தனைபேர்—இந்நாள்
கலைஞர் அருளால் களிப்பதனுல் ஏழ்மை
நிலையை ஒழிக்க நினே!

—வித்துவான் ஆ. சுப்புலட்சுமி, எழும்பூர்.

வர்க்கம் இரண்டு வகுத்தான் இறைவனெனத்
தர்க்கம் புரிவோர் தலைகுனிய—சொர்க்கம்
இலையென்ற போதும் இருவர்க்கம் என்னும்
நிலையை ஒழிக்க நினே!

—புலவர் துரை. முருகு, திண்டுக்கல்-1.

உண்ண உணவின்றிக் கட்ட உடையின்றி
ஒண்ட இடமின்றி ஊரெல்லாம்—உண்டிக்
கலைந்திரந்து வீதியிலே அல்லலுறு வோரின்
நிலையை ஒழிக்க நினே!

—எஸ். ஆரோக்கியசாமி, கடலூர்-1.

பன்னுட்டில் பெற்ற படிப்பினையால் தான்பிறந்த
பொன்னுட்டை நன்கு புதுக்கிவிட—உன்னும்
கலைஞர் மனம்போல் கடும்உழைப்பால் துன்ப
நிலையை ஒழிக்க நினே!

—சி. செள. கருப்பன் செட்டி, திருச்சி-15.

பிஞ்சுக் குழந்தை பிணியால் தவிக்குதென
நெஞ்சம் துடிக்கக்கை நீட்டிநிதம்—கஞ்சிக்(கு)
அலைந்து திரிவார் அவதியுறும் இந்த
நிலையை ஒழிக்க நினே!

—க. ஒப்பிலான், திருச்சி-15.

மலையும் விரிகடலும் மாநதியும் மீனும்
குலையும் பெரும்பொழுது கோளு—நிலைபாய்
அலைகா விரிபாய அண்டையர்தம் பேத
நிலையை ஒழிக்க நினே!

—புலவர் கு. பக்தவத்சலன், கல்லக்குடி.

கல்விக்குக் கால்பங்கைக் கன்னித் தமிழரசு
ஒல்லும் வகையான் ஒதுக்கியதால்;—நல்லாய்!
அலையும் மனத்தை அடக்கிநீ கல்லா
நிலையை ஒழிக்க நினே!

—ந. செஞர்த்தனன், அரக்கோணம்.

பாதிப்பேர் பிச்சைபெறப் பாதிப்பேர் இன்பமுறல்
நீதியன்று தோழா நிமிர்ந்துடனே—யாதும்
இலமென்றே யாண்டும் இரந்துண்ணும் தீய
நிலையை ஒழிக்க நினே!

—மு. முத்துக்கிருஷ்ணன், புரிசை.

சிறுதொழிலும் நல்லுறவும் சீராகக் காத்துப்
பெருகிவரும் நம்மக்கட் பேற்றைச்—சுருக்கின்
இலையாம் துயரம்; இடும்பை; வறுமை
நிலையை ஒழிக்க நினே!

—புலவர் ச. சுந்தரேசன், பூட்டுத்தாக்கு.

உள்ளத்தில் நஞ்சும் உதட்டில்தேன் பேச்சுமுள்ளோர்
கள்ளத் தனவாழ்க்கைக் காட்சியெலாம்—முள்ளை
மலர்மறைக்கும் காட்சியே; வாழ்வரிக்கும் இந்நோய்
நிலையை ஒழிக்க நினே!

—வித்துவான் ச. சீத்தாராம், கோம்பை.

உண்ண உணவும் உடுக்க உடையோடு
கண்ணயரத் திண்ணையும் காணுராய்—மண்ணில்
"இலையே கதி!" யென்று ஏங்கிடும் ஏழ்மை
நிலையை ஒழிக்க நினே!

—தி. லீலா, நெல்லை.

காட்டைத் திருத்திக் கதிர்கண்டே நற்றமிழ்
நாட்டை உயர்த்தி நலமெங்கும்—காட்ட
அலையெனப் பாய்ந்தே அழித்திடுமச் சோம்பல்
நிலையை ஒழிக்க நினே!

—பாக்கியமணுளன், மட்டப்பாறை.

எல்லா நலத்துடனும் ஏற்றம் பலவுற்று
வல்லார் மிகச்சிலரே வாழ்கின்ருர்—பல்லோர்
தலைக்கெண்ணெய் இல்லாது தாழ்கின்ருர்! இந்த
நிலையை ஒழிக்க நினே!

—வெ. செகநாதன், பி.எஸ்ஸி., பி.டி., குறிச்சி.

நின்றுகுத்த கண்ணீரும் நீள்மூச்சும் நெட்டுயிர்ப்பும்
அன்றுகுத்த ஆவியும் கொண்டன்பாய்—இன்றும்
இலையென்றே வாழ்விழக்கும் எம்வங்க மக்கள்
நிலையை ஒழிக்க நினே!

—புலவர் அரு. பெரியசாமி, குமாரபாளையம்.

பாலும் பழச்சாறும் பத்தடுக்கு மாடிகளும்
மேலும்பல் வாய்ப்பும் சிலர்பெறவா?—கூழும்
இலையென்று கூவி இரக்கும் கொடிய
நிலையை ஒழிக்க நினே!

—ஆ. சுப்பிரமணியன், அணியாப்பூர்.

கன்னித் தமிழ்மொழியில் காணுத எக்கலையைப்
பின்னைப் பிறமொழியில் கண்டாரோ?—அன்னைத்
தலைமொழிதான் ஈண்டிருந்தும் கல்லார் இழிவு
நிலையை ஒழிக்க நினே!

—புலவர் மு. கண்ணுசாமி, அப்பநாயக்கன்பட்டி.

நற்றமிழர் நெய்யும் நயமான கைத்தறியைப்
பற்றுடனே வாங்கிப் பயனடைவோம்—பெற்ருேர்
நிலையறிந்து, நேர்மையுடன் "டெர்லின், டெரிகாட்"
நிலையை ஒழிக்க நினே!

—செ. செயராஜ், தொண்டாமுத்தூர் அஞ்சல்.

கண்ணுறங்க வீடில்லோர் கட்டும் உடையில்லோர்
மண்ணுறங்கித் துன்ப மடிதவழ்ந்தோர்—புண்ணேய்
மலையை ஒழித்தே மறுவாழ்வாம் பிச்சை
நிலையை ஒழிக்க நினே!

—பூ.அ. இரவீந்திரன், கோவை-2.

சின்னக் குழந்தையைச் சிற்றிடையிற் றூக்கியே
இன்னல் சுமந்துண(வு) ஏற்கின்ற—சின்னங்
குலையக் கருணை குரலைக்கேள்; ஏழ்மை
நிலையை ஒழிக்க நினே!

—கோவை புகழேந்தி, சென்னை-24.

வாட்டும் வெயிலில் வருந்துகின்ற பாட்டாளி
மாட்டுக்கும் கீழினமாய் வாழ்கின்ருன்—நாட்டின்
தலைவிதியை நாம்மாற்றி வைக்கத்தான் அந்த
நிலையை ஒழிக்க நினே!

—சோலை இளம்பரிதி, சேயாறு.

ஆயகலை அத்தனையும் ஆங்கிலத்தில் கற்ருல்தான்
தூயபயன் கிட்டுமெனச் சொல்வோரின்—மாய
வலையில் விழுந்து மதிமயங்கும் மக்கள்
நிலையை ஒழிக்க நினே!

—மு. சிவலிங்கம், பி.எஸ்ஸி., வேடசந்தூர்.

எத்திப் பிழைப்பாரும் பெற்றுப் பிழைப்பாரும்
கொத்திப் பிடுங்கும் கொடுமையினுல்—நித்தம்
தலைகவிழ்ந்து சிந்தும் தலைவர்கள் கண்ணீர்
நிலையை ஒழிக்க நினே!

—ஆர். பூமா, அருப்புக்கோட்டை.

தீண்டாமை எண்ணம்; திருந்தாத சாதிமுறை
மாண்டேனும் நீக்கிடுவாய் மாத்தமிழா!—ஈண்டே
அலையின் துரும்பாய் அலைகின்ற ஏழை
நிலையை ஒழிக்க நினே!

—மு. வில்லவன், திண்டுக்கல்.

திறமைக்குப் பட்டத்தைத் தேர்ந்தளித்தால் காணப்
பொறுமையால் தொல்லைதரும் போக்கை—அறவே
கலைசூழ்நம் நாட்டில் கருவறுத்தே தீய
நிலையை ஒழிக்க நினே!

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

சிங்கமெனச் சீறியெழு தீதகற்ற ; கல்லாமை
மங்கிவிழப் பொங்கியெழு, வீறுகொண்டு—எங்கும்
வலைசூழ் பறவையென வாடிநிற்கும் இல்லார்
நிலையை ஒழிக்க நினே!

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

பொருளென்று சொல்லிப் புறப்பட்டாய்; யானே
பொருளற் றவனாயிங்(கு) ஆனேன்—திருவே!
கலைநிலவும் சுட்டெரிக்கும் வாட்டும் தனிமை
நிலையை ஒழிக்க நினே!

—செண்பகப்பிரியன், லோகநாதபுரம்.

தொழுநோயால் துன்புற்றுத் துர்நாற்றச் சீழ்வீழ்ந்(து)
அழுகியகால் கையினராய் யாண்டும்—பழுதாம்
புனேவாழ்வால் பிச்சைக்குப் போயிலவார் தங்கள்
நிலையை ஒழிக்க நினே!

—புலவர் மா. கணபதி, திருச்செங்கோடு.

திட்டமிட்டுப் பெற்றுச் சிறுகுடும்ப மாய்வாழ
நட்டமில்லாப் பல்வழிசொல் நற்குடும்பத்—திட்டக்
கலையை அறியாது கற்ருரும் வாழும்
நிலையை ஒழிக்க நினே!

—க. தங்கமுத்து, இராயப்பன்பட்டி.

இல்லாமை யால்வாடும் ஏழையர்கள் வாழ்ந்திடவும்
கல்லாமை நீங்கிக் கவின்பெறவும்—நல்லாய்!
தலையைக் கொடுத்தேனும் தாளா வறுமை
நிலையை ஒழிக்க நினே!

—பாட்சா கிருட்டிணமூர்த்தி, பூரிப்பாக்கம்.

பஞ்சுபடும் பாடு படுமேழை வாடுகிருர்
வஞ்சகத்தால் செல்வரிங்கு வாழுவதோ?—நெஞ்சே!
உலைக்கரிசி இன்றி உழல்வாரின் ஏழ்மை
நிலையை ஒழிக்க நினே!

—குழ. அண்ணுமலை, கோவை.

வேலையில்லை நாளெல்லாம் வேர்வைமிகப் பாடுபட்டும்
கூலியில்லை என்ற குறையோடும்—ஞாலம்
நலமதனைத் தேடி நலிகின்ற பிச்சை
நிலையை ஒழிக்க நினை!

—ச. குஞ்சிதபாதம், வேலூர்.

கல்லாமை, மூடம், கணக்கில் மகப்பெருக்கம்,
இல்லாமை, இன்றமிழிற் பற்றின்மை,—பொல்லாக்
கொலைகளவு, வஞ்சம், கொடுநோய்க ளென்ற
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் சயராமன், தொட்டியம்.

வன்முறை யால்நாட்டை வாழவைக்க லாமென்று
கொள்முறையைக் கையாளும் கூட்டமே!—என்றும்
தலையை அழித்துத் தருக்கிடவே எண்ணும்
நிலையை ஒழிக்க நினை!

—சாரதா ஆறுமுகம், இலப்பைக்குடிக்காடு.

நல்வளஞ்சேர் நாடிருக்க, நாடி உழைத்திடவே
வல்ல உடலிருக்க வாடுவதேன்?—செல்வர்
தலைவாசல் தோறும் தலைதாழ்ந் திரக்கும்
நிலையை ஒழிக்க நினை!

—ஆசிரியர் பி. சிவலிங்கம், ஆலப்பட்டி.

அற்பத் தொழிலாய், அடிமைக் கொருவித்தாய்,
கற்றுரும் நாணும் கறையுடைத்தாய்—நிற்கும்
நிலையை உருவாக்கும்; நீளுலகின் பிச்சை
நிலையை ஒழிக்க நினை!

—கோ. பாலசுப்பிரமணியன், மணக்குடி.

அன்பாய், அமுதாய், அறிவார்ந்த பேரழகாய்
இன்ப மழைபொழியும் ஏந்திழையே!—துன்ப
வலைசூழ வாடுகிறேன்; வந்தேன்; தனிமை
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

ஆக்கப் பணிசெய்ய ஆர்வங்கொள்! நல்லறிவை
நோக்கித் தொழுதிடு; நன் நூலைக்கல்!—நாக்கில்
விளையாட வேண்டாம்! விரைந்துநீ அஞ்சும்
நிலையை ஒழிக்க நினை!

—அ. வை. முத்துச்சாமி, அந்நியூர்.

தண்டா மரைமுகத்துச் சந்தனக் கன்னங்கள்
கண்டால் சிவக்காதோ, கார்குழலே!—உண்டால்
மலைத்தேன் உதட்டில் வழியாதோ? எந்நோய்
நிலையை ஒழிக்க நினை!

—காங்கேயன், வெங்கல்பாளையம்

சின்னஞ் சிறுகுடிசை; சிற்றுடை நூறுதையல்;
உண்ணும் உணவிற்கும் ஓடேந்தல்—கண்ணில்
உலைபாயக் காய்கின்ற உம்மக்கள் துன்ப
நிலையை ஒழிக்க நினை!

—இராம சுப்பையா, தஞ்சாவூர்

பிறவாத பேரின்பம் பிள்ளை அதிகம்
பிறவாது காத்தலின் பின்னும்—பிறந்தார்
அலைந்தும் இரந்தும் அழுதே பிழைக்கும்
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் துரை. தில்லான், கோவிலூர்

சேலத் திரும்புக்கும் சேதுக் கடல்துறைக்கும்
ஆலயத்தில் செந்தமிழில் அர்ச்சனைக்கும்—சீலக்
கலைஞர் வழிவகுத்தார்; காய்மனத்தார் தாக்கும்
நிலையை ஒழிக்க நினை!

—கரு. சிவப்பிரகாசம், நாட்டரசன்கோட்டை.

நாட்டுரிமை வாக்குரிமை நாவுரிமை மற்றும்நாம்
ஏட்டில் எழுதுரிமை பெற்றுமென்?—நாட்டில்
தொலைவில்நில் தீண்டாதே தொட்டால்தீட் டென்பார்
நிலையை ஒழிக்க நினை!

—பாரி, இலாலாப்பேட்டை

எச்சில் இலையை இழுக்கின்ற நாயுடனே
பிச்சை யெடுப்போர் பெரும்போரை—நச்சி
அலையும் துயரத்தை ஆக்கம் சிதைக்கும்
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் க. நாகேஸ்வரன், திருத்தணி.

ஏடன்றிப் பிச்சை யெனும்சொல்லை இன்றிந்த
நாடறியா தென்றேதும் நாள்வரவே—ஓடி
அலைந்துழைக்கும் ஆட்சியிதை ஆதரித்தே ஈன
நிலையை ஒழிக்க நினை!

—எம். மார்க்கபந்து, அரக்கோணம்.

ஊழை வலியுறுத்தி உண்டுபலர் வாழ்ந்தாலும்
ஏழைச் சிரிப்பில் இறைவனைக்காண்—தோழா!
அலைந்துண்டு வாழும் அவலமிகு ஏழ்மை
நிலையை ஒழிக்க நினை!

—அரசுப் புலவர், வில்லிசேரி.

வள்ளுவன் கூறிய, வாணிய நீதியினை
எள்ளளவும் நெஞ்சில் இருத்தாது—கள்ள
விலைக்குப் பொருட்களை விற்றுயரும் வஞ்ச
நிலையை ஒழிக்க நினை!

—சு. மாரியம்மாள், முதலிபட்டி.




[redacted] தமிழ் நாட்டில் இருக்கின்றன. இவைகளைப் பொதுமக்கள் அறியாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் உள. அவற்றுள் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை வல்லுநர்கள் இவற்றைப்பற்றித் தமிழில் நல்ல நூல்கள் எழுதாமல் இருப்பதும் ஒன்று. சில சமயங்களில் வரலாற்றுக் கதை எழுதும் ஆசிரியர்கள் இச்சின்னங்களைச் சுற்றிக் கதை புனைந்து எழுதியவுடன் அச்சின்னங்களுக்குப் பெருமை கிடைத்து வருகிறது. இவ்வாறுகப் பெருமை அடைந்த இரு ஊர்களை நாம் இங்கே எடுத்துக் காட்டலாம். மாமல்லபுரத்தைப் பற்றி நூறு ஆண்டுகளாக தெரிந்திருந்தாலும் பொதுமக்களிடையே மாமல்லபுரத்துக் கலைக்கோயில்கள் அவ்வளவு புகழ் பெறவில்லை. 'கல்கி' எழுதிய சிவகாமியின் சபதம் வெளி வந்தபின் அக்கலைக் கோயில்களைக் காணவும் புகழவும் மக்களிடையே பேரார்வம் ஏற்பட்டது. அதேபோல் ராஜராஜேஸ்வரம் என்னும் தஞ்சைப் பெரிய கோயில் பொன்னியின் செல்வன் வெளியான பிறகு பெருமதிப்புப் பெறத் தொடங்கியது. சுமார் இருபது, இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயில் கவனிப்பாரற்ற நிலையில் புதர் மண்டிக் கிடந்ததை உள்ளூர்வாசிகள் நன்கு அறிவார்கள்.

இவ்விரண்டு இடங்களைப் போலவே இன்னும் பல முக்கியமான வரலாற்றுச் சின்னங்களும் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயில். விஜயாலய சோழன் காலத்துக்குச் சற்று முன்னர் தொடங்கிய சோழர் சிற்பக்கலையின் திறமையை மிகப் பெரிய வடிவில் ராஜராஜனின் ராஜராஜேஸ்வரமாக நாம் காண்கிறோம். இக்கோயில், வடிவில் பெரியது; கலைத் திறமையுடன் கட்டப்பட்டுள்ளது.

சோழர் கலை முதிர்ச்சி அடையாத காலத்தில் தஞ்சைப் பெரிய கோயில் கட்டப்பட்டது என்றால், நல்ல தேர்வும் முதிர்ச்சியும் பெற்ற சோழர் சிற்பக்கலை எப்படி இருக்கும் ? இதைத்தான் நாம் தாராசுரம் ஐராவதேஸ்வரத்தில் காண்கிறோம். ஐராவதேஸ்வரத்தை விடச் சிறந்த சோழர் சிற்பத் திறன் கொண்ட கோயில் வேறு இல்லை என்றே சொல்லலாம். தாராசுரம் என்று இப்பொழுது அழைக்கப்படும் ஊர், முன்னர் ராஜராஜபுரம் என்றே வழங்கிவந்தது. இக்கோயில் கட்டப்பெற்ற காலத்திலேயே ராஜராஜபுரம் ராரரரம் என்று பெயர் மருவி வழங்கி வந்தது. இவ்வூர் கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் செல்லும் இரயில்பாதையில் உள்ளது. கும்பகோணத்துக்கு அடுத்த நிலையம் ஆகும். நிலையத்துக்கு வெகு அருகிலே இக்கோயில் இருக்கிறது. கும்பகோணத்திலிருந்து தஞ்சை செல்லும் பெருவழியில் பட்டீசுவரத்துக்காகப் பிரியும் கிளைப் பாதையில் சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் இக்கோயில் இருக்கிறது. கோயிலுக்கு முன்பாகத் தற்பொழுது பட்டு நூல் நெசவு செய்வோர் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

இக்கோயில் தற்பொழுது ஒரு மதிலுடன் இருக்கிறது. இதையும் இதற்கடுத்த தேவநாயகி அம்மன் கோயிலையும் சேர்த்து மதில்கள் ஓடி இருக்கின்றன என்று தெரிகிறது. கோயிலுக்கு முன் தற்போது தோரணவாயில் எனப்படும் வாயிலொன்று இருக்கிறது. இதற்குமேல் ஒரு கோபுரம்

இருந்திருக்க வேண்டும் என்று இதுவரை இக் கோயிலைப் பற்றி எழுதியுள்ள அனைவரும் கூறி இருக்கிறார்கள். ஆனால், நன்றாக ஆராய்ந்து பார்த்தால் வாயில் கட்டப்பட்டதே தவிர கோபுரம் எழும்பவில்லை என்பது தெரியும். இதற்குச் சான்றாக வாயிலின் உள், மேல் பாரத்தைத் தாங்குவதற்காகப் பெருங்கற்களைக் கொண்டு அடுக்கப்பட்ட கல் சுவர் இன்னும் எடுக்கப்படாமலேயே இருக்கிறது. இது மட்டுமன்றி வாயிலின் இருபுறத்தேயும் உள்ள இடிபாடுகளினின்றும் இத்தோரண வாயிலின் அடிப் பீடத்துக்கு மேல் உள்ள பகுதிகள் கட்டுத் தளர்ந்திருப்பதையும் கொண்டு, இவ்வாயில், மிக அவசரமாகக் கட்டப்பெற்று இருக்கிறது என்றும் தெரிகிறது. இதைவிடப் பழைமையான சோழர் கோயில்கள் கட்டுத் தளராமல் இருப்பதையும் நாம் கவனிக்கலாம். இந்த அவசர நிலைமைக்குக் காரணம் இக்கோயில் கட்டிய இரண்டாம் ராஜராஜனுக்குப் பின் சோழ நாட்டில் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் நிகழ்ந்த போர்களும் அரசியல் குழப்பங்களுமேயாகும். கோயிலைச் சுற்றியுள்ள இரண்டாவது மதில் இருந்த சுவடுதான் தெரிகிறதேயொழிய அக்கற்களை அவ்விடத்தில் காணவில்லை. கும்பகோணத்தில் நாயக்கர் காலத்திலும் மராட்டிய மன்னர்கள் காலத்திலும் கட்டப்பெற்ற கோயில்களுக்கும் கட்டடங்களுக்கும் இக்கற்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

தற்போதுள்ள முன் கோபுரத் தோரண வாயிலில் இரண்டு அழகான சாளரங்கள் உள்ளன. இவ்வாயிலினின்றும் நேராக உள்ளே நுழைந்தவுடன் ஒரு நந்தி மண்டபமும் அழகான பெரிய ஒரு பலிபீடமும் உள்ளன. கட்டப்பட்டபோது இந்த நந்தி திறந்த வெளியில் இருந்திருக்கிறது. பலிபீடமும் சதுர வடிவாகத்தான் அமைந்துள்ளது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் இக்கோயில் அமைப்பில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் ஒன்று இப்படி பீடத்துக்குப் படிகள் அமைக்கப்பெற்றது. சற்றுப் பழக்கம் உள்ளவர்களுக்குப் பலி பீடத்தினுடைய சிற்ப அமைப்பும் படிகளினுடைய சிற்ப அமைப்பும் மாறுபட்டன என்று உடனே தெரிந்துவிடும். மேலும் பின் சேர்க்கையான படிகள் பீடத்துடன் சரியாகப் பொருத்தப்படவில்லை என்பது படத்திலிருந்து தெளிவாகிறது. கைப்பிடிச் சுவர்களின் இருபக்கமும் கோட்டம் (கோஷ்டம்) எனப்படும் இடத்தில் சிற்ப இலச்சினையாக அடிக்கடி காணப்பெறும் கொடியைப் பிடித்துக் கொண்டு ஒரு கால் பெண்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இவர்களது தாதியர்கள் இருபக்கமும் நிற்கின்றனர்.

சுமார் ஒன்றரை அடியே உள்ள இவ்வுருவங்கள் தலை அலங்காரம், ஆபரணங்கள் யாவற்றையும் நுண்ணியதாகக் கொண்டுள்ளன. இவ்விரண்டு பெண்களிலும் இடது பக்கத்துப் பெண் மிக அழகானவள். இப்பீடமும் படிக்கட்டுகளும், சமீப காலம் வரை, கீழிருந்து சுமார் மூன்றடி வரை மூடப்பட்டு இருந்தபோது, இவ்வுருவங்கள் வெளியில் தென்படாமல் மண்ணுள்ளேயே இருந்தன. இதனால் ஓரளவுக்கு இந்த யாளிப் பெண்களின் அங்கங்களும் அழகும் விஷமிகளால் பாதிக்கப்படாமல் இருந்தாலும் உருவத்தின் வழவழப்பான பூச்சு எப்படியோ கெட்டுப் போயிருக்கிறது.



பலிபீடம்-படிகள் மூன்றாம் குலோத்துங்கனால் சேர்க்கப்பட்டவை

பலிபீடத்துப் படிகளில் உள்ள சில போர் வீரர்களும் அவர்களின் முகங்களும் கிரீடமும் கிழக்கிந்தியத் தீவுகளில் உள்ள சிற்ப வகையை நினைவூட்டுகின்றன. படிகளின் தலைப்பில் உள்ள மூன்று கலசங்கள் இக்கோயிலில் உள்ள மூன்று முக்கிய தெய்வங்களுக்குக் கொடுக்கப்படும் பலி உள்ளது என்பது சிற்ப இலக்கணப்படி தெரியவருகின்றது. படிகளின் நுணுக்கமான வேலைகளைப்பற்றி இங்கு விவரிக்க இயலாது. இரண்டாம் ராஜராஜன் கட்டிய போது இருந்ததைவிட மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் ஆகம வழிபாடுகள், பலிகள் அதிகப்பட்டு வந்தன என்பதை இப் பலிபீடத்தின் சேர்க்கை தெளிவுறுத்துகிறது.

இதன் அருகிலுள்ள நந்தி சிறியது. ஆனால் மிக அழகானது. அரச இலச்சனைகள் அவற்றின் முன்னங்கால்களில் பொருத்தப்பட்டுள்ளன. பத்ம, குமுத வரிசைகள் கொண்ட பீடத்தில் அமைக்கப்பட்ட இந்த நந்திக்கு முன் இதற்கான ஒரு சிறிய பலிபீடம் பத்ம வடிவில் அமைந்துள்ளது. இக் கோயிலின் முகப்பு-அதாவது முன் தோற்றம் போல் தமிழ் நாட்டில் வேறு எந்தக் கோயிலிலும் இல்லை. இது இந்து ஆகம சில்ப விதிகளுக்கும் புறம்பானது. இதை வரலாற்று ஆசிரியர்கள் எப்படிக் கூறியிருந்தாலும் சரியான காரணத்தை எவரும் கூறவில்லை. இது ஆராய்ச்சிக்குரிய மிக முக்கியமான விஷயம். துவாரபாலகர்கள் இல்லை. தூண்களும் அவற்றின் போதிகைகளும் அவற்றில் உள்ள மிக நுண்ணிய சிற்பங்களும் சிற்பங்களின் பாவமும் பௌத்த சிற்பக்கலையை நினைவூட்டுகின்றது.

முன் மண்டபத்துத் தூண்கள் சிற்பங்களைக் கொண்ட பட்டைகளை நாலாபுறமும் பெற்றுள்ளன. இச் சிற்பங்கள் மிகச் சிறியவை. அவ்வளவு ஆழமான வடிவம் கொண்டவை அல்ல. கொடிக்கருக்கு என்று கூறப்படும் வேலைகளை அதிகமாக இம் மண்டபத் தூண்களில் காணலாம். அமராவதி, காஞ்சிச் சிற்பங்கள்போல் ஆழமின்றிச் செதுக்கப்பட்டுள்ளன. மண்டபத்து விதானத்திலும் சிறுசிறு சதுரங்களாகப் பகுக்கப்பட்ட அறைகளில் கண் கவரும் சிற்பங்கள் உள்ளன. இவைகளைப்பற்றி விளக்கப் புகுந்தால் அது தனிக்கட்டுரையாகிவிடும்.

பொதுவாக, இரண்டாம் ராஜராஜன் காலம் வரை சோழர் கோயில்களில் காணப்படாத பல வடிவங்களை நாம் இத் தூண்களில் காணலாம். மேலோட்டமாகப் பார்த்தாலும் இவை யாவற்றையும், கடக்கப் பல மணி நேரம் வேண்டும். இச்சிற்பக் கொடிக்கருக்கு வேலைகளின் வரலாற்றை ஆராய வேண்டும்.

இம் மண்டபத்திற்குச் செல்ல இடது பக்கத்திலுள்ள சிங்கத் தூண்கள் அமைந்த ஒரு சிறு மண்டபத்தின் வழியாகப் படியேறிச் செல்ல வேண்டும். இப்படிகள் தற்பொழுது அவற்றின் பழைய அகலத்துக்குத் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தால் திருத்திக் கட்டப்பட்டுள்ளன. இம் மண்டபம் சோழர்கள் காலத்தியப் பிற்சேர்க்கையோ என்று ஐயப்பட இடம் கொடுக்கிறது. முக மண்டபத்துக்கு மேல் உள்ளவை பல்லவர் பாணியில் அமைந்துள்ள பஞ்சரங்கள். ஆனால் ஸ்வஸ்திஸ்ரீ ராஜகம்பீரன் திருமண்டபம் என்னும் இம்மண்டபத்தின் மீது 'நந்திகள்' அமைக்கப் பெற்றுள்ளதைக் காணலாம். இம்மண்டபத்துப் பெயர் இதன் தூண்களுக்கு மேல் வெட்டப்பட்டுள்ளது. இம் மண்டபத்துத் தூண்களும் மிக கம்பீரமும் அழகும் வாய்ந்தவை. சோழர்களால் பல்லவ பாணியில் வடிக்கப்பெற்ற தூண்கள்; தூண்களைத் தாங்குகின்றன கம்பீரமான யாளிகள்.



இராஜகம்பீரன் திருமண்டபத் தூண்கள் பல அடுக்குகளாக வெட்டப்பட்டு ஒவ்வொரு அடுக்கிலும் சுமார் இரண்டிலிருந்து ஆறு அங்குல உயரம் வரை உள்ள அழகிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இந்த மண்டபத்தின் இடத்தையும் அமைப்பையும் கவனிக்கும்போது உத்ஸவ மூர்த்திகளின் கொலுக் காட்சிக்கு மட்டுமின்றி அரசாங்க தர்பார்களுக்கும் ஏற்றதாக இருந்திருக்கிறது. இராஜகம்பீரன் என்பது அரசனுடைய பெயர்.

கோயிலினுள்ளும் திருச்சுற்று மாளிகை எனப்படும் சுற்றுப் பிரகாரத்திலும் உள்ள பல திரு உருவங்கள் காலப் போக்கில் மறைந்துவிட்டன. அதாவது காணாமல் போய்விட்டன. எஞ்சியவற்றில் சில, தஞ்சைக் கலைக்கூடத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றிற்கும் பின்தங்கிய கற்சிலைகளே அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கோயில் கோட்டங்களில் இடம் கொண்டுள்ளன. இவைகளில் மிக முக்கியமானது மூன்று முகம் கொண்ட அர்த்தநாரி! முக மண்டபத்தின் உள்ளே உள்ள அம்மன் சந்நிதி துவாரபாலகி அழகானவள். உள் மண்டபத்து நுழை வாயி

லின் புறமுள்ள அன்னலக்ஷ்மியும் அதே அழகு கொண்டுள்ளாள். மற்றச் சிற்பங்களுக்கு முகம், மார்பு, ஆகியவை கம்பீரமாக அமைந்திருந்தாலும் கால்களுக்குப் போதிய உயரம் கொடுக்கப்படவில்லை.

கர்ப்பக்கிருகத்தின் வாயிலுக்கு அருகில் உள்ள மூர்த்தம் முருகனுடையது. பார்ப்பதற்கு பிரம்ம மூர்த்தம் என்றாலும் அயிலும், கேடயமும், வாளும் நெற்றிக் கண்ணும் கொண்டுள்ளதால் உண்மையில் அது முருகனே. சண்டேஸ்வரர் சந்நிதிக்கு எதிரில் அமைந்துள்ள துர்க்கை, சோழ மகிஷாசுர மர்த்தினிக்குரிய எல்லா அம்சங்களும் அழகும் பொருந்தியவள். அவளது கம்பீரமான பார்வை மனத்தில் நிலைக்கிறது. சாளுக்கியத் தலைநகரான கலியாணபுரத்தை எரித்துச் சோழ அரசனால் கொண்டு வரப்பட்டு இக்கோயிலினுள் வைக்கப்பட்டிருந்த சாளுக்கிய துவார பாலகர் திருவுரு, தற்போது தஞ்சைக் கலைக் கூடத்தில் இருக்கிறது. இச் சாளுக்கிய சிலையின் கிரீடமும் தஞ்சைக் கலைக்கூடத்தில் இருக்கிறது. இச் சாளுக்கிய சிலையின் கிரீடமும் அணிகலன்களும் அழகான வேலைப்பாடுகள் அமைந்தவை. ஐராவதேஸ்வரத்திலிருந்து கலைக்கூடத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட மற்ற முக்கியச் சிற்பங்கள் நர்த்தன கணபதி, சிவன், சிவன்மீது காதல் கொண்ட ரிஷி பத்தினியர். இவைகளில் ரிஷி பத்தினியர் சிற்ப வகை சற்றுக் கூர்ந்து நோக்கற்குரியது. பத்தினிகள் ஒவ்வொருவரையும் கவனிக்கும்போது முகவேற்றுமையை நன்கு காண்கிறோம். சிற்பமோ எவ்வித நுணுக்க வேலைப்பாடுகளும் இன்றி, வெறும் முதல் வரையாக இருக்கிறது என்றாலும் முகத்தில் கொண்ட ஏக்கம் கண்கள் மூலமாக நன்றாகத் தெரிகிறது. உளியில் இரண்டொரு வெட்டாலேயே கண்கள் அமைக்கப் பட்டுள்ளன. மிகப் பழைய சோழர், அதாவது முத்தரையர் வகைச் சிற்பக் கலையை மீண்டும் ஐராவதேஸ்வரத்துச் சிற்பிகள் எண்ணிப் பார்த்திருக்கின்றனர். தூண்களில் பல்லவர் வாகை இச் சிற்பியர் வடித்திருக்கின்றனர். கையில் சிவனுக்கு உணவு இடுவதற்குச் சென்ற ஒருத்தியிடம் அவனைக் கண்டு ஆடை குலையும் மற்றொரு பத்தினி பிக்ஷாடனனைப் பற்றிப் பேசுவதைக் காணலாம். இச் சிற்பங்களுக்கு நேர்மாறாக, உள்ள பாவத்தைக் கொண்டது நெற்றிக் கண்களைத் திறந்துகொண்டு கோபத்தால் நெறிந்த புருவங்களுடன் கஜசம்ஹார மூர்த்தியைக் காண்கிறோம். இடம் பெயர்ந்த இன்னொரு சிறந்த சிற்பம் நர்த்தன வினாயகர். ஐராவதேஸ்வரத்தில் தற்பொழுது இச் சிற்பங்கள் இல்லை. இத் திருமூர்த்திகளுடன இக் கலைக்கோயில்களைக் கற்பனை செய்துதான் பார்க்க வேண்டும். தெய்வங்களாக இத்திருக்கோயிலில் இருந்த அநேக அழகிய சிற்பங்கள், கலைக்கூடத்தில் இருந்தாலும், பெருமை இழந்து கம்பீரம் குறைந்து ஓரளவு பொம்மைகளாகத்தான் தோன்றுகின்றன. தற்பொழுது எஞ்சியுள்ள சிற்பங்கள் பல. அவைகளையும் கோயிலெடுப்பித்த மன்னன் வைத்த இடத்திலேயே வைத்துக் காப்பதுதான் நமது கடமை. இந்தச் சிற்பங்களை எல்லாம் கூர்ந்து ஆராய்ந்த பின்பு இரண்டாம் ராஜராஜன் காலம் முதல் மூன்றாம் குலோத்துங்கன் அல்லது மூன்றாம் ராஜராஜன் வரை வெவ்வேறு காலத்தில் இவை செய்யப்பட்டனவாகக் கருத இடமேற்படுகிறது.

இராஜ கம்பீரன் திருமண்டபத்தின் தூண்களைத் தாங்கும் யாளிகள்



இதேபோல், இக் கோயிலும் இரண்டாம் ராஜராஜன் காலத்துக்கு முன்னமேயே திட்டமிடப் பட்டு இருக்க வேண்டும். மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு சிற்ப வேலைகளையும் நுண்ணிய வேலைப்பாடுகளையும் உள்ளிட்டு திருத்திக் கட்டப் பெற்றது ஐராவதேஸ்வரம். இக்கோயிலின் பின்புறமுள்ள திருச்சுற்று மாளிகை தற்பொழுது மிகச் சேதமடைந்து காணப்படுகிறது. இப் பகுதிதான் மிக மிக முக்கியம். இப் பகுதி ஒரு பௌத்த விகாரத்தைச் சார்ந்தது என்று தெளிவாகிறது. இப் பகுதியின் அதிஷ்டமானவரிசை, மூலஸ்தானத்தை விடத் தேய்ந்து போன பகுதிகள், திருக்கோயிலை விடக் காலத்தால் சில நூற்றாண்டுகளுக்கு முந்தியது என்று தெரிவிக்கிறது. தூண், போதிகை, அஷ்ட தேவர்கள் கொண்ட பலி பீடம், வெவ்வேறு விதமான பல கணிகள், நாட்டிய வகைகள் இவையும் மற்றும் பலவும் இதற்குச் சான்று. இவை எல்லாவற்றையும் விட இப் பகுதியின் படியின் அருகில் உள்ள கல்வெட்டு இதனைப் 'பள்ளி' என்று குறிப்பிடுவதால் இக் கருத்து உறுதியாகிறது. இதே பந்த வரிசையைக் கொண்டு இக் கோயில் கட்டப்பெற்றதனால், பௌத்தப் பள்ளியாக இருந்த பகுதிக்கும் சிவன் கோயிலாக இருந்த மூலஸ்தானத்துக்கும் வேறுபாடின்றிப், பார்ப்போருக்கு எந்தவித ஐயப்பாட்டையும் எழுப்பாமல் திறமையாக வேலை செய்திருக்கிறான்.





இராஜகம்பீரன் திருமண்டபம்

பௌத்தமதம் பதினொன்றாம் நூற்றாண்டுக்குள் தமிழ் நாட்டில் முழுமையும் மறைந்துவிட்டது. இவ்விடத்தைப் பயன்படுத்தி அரசன் நல்ல சிவன் கோயிலை அமைத்திருக்கிறான். இவற்றில் பழைய பகுதியாகத் தெரிவது வாயில் முக மண்டபம், பின் திருச்சுற்று மாளிகை, புதியன, மூலஸ்தானம், கோபுரம், இராஜகம்பீரன் திருமண்டபம் கோயிலின் ஏனைய பகுதிகள் தோரணவாயில் முதலியன.

ராஜராஜபுரத்து ராஜராஜேஸ்வரம் எனப்படும் ஐராவதீச்வரமும் திரிபுவனத்து கம்பகரேஸ்வரமும் நடனக் கலை ஆராய்ச்சிக்கு மிக உதவி செய்வன. இசையும் ஆடலும் கோயில்களின் உதவியால் எவ்வளவு தழைத்து வந்தன என்பதற்குச் சான்றாகச் சுற்றுப் பிரகாரங்களின் பீடத்தில் கோயிலைச் சுற்றி நூற்றுக் கணக்கான நாட்டியத் தோற்றங்கள், இசைக் கருவிகள் வாசிப்போர்களுடன் செதுக்கப்பட்டுள்ளன. இவைகளின் உயரம் ஆறு அங்குலத்திற்கும் குறைவாகவே அழகிய தெளிவுடன் செதுக்கப் பட்டுள்ளன. இவைகளைக் கவனிக்கும்பொழுது கோயிலினுள் சுமார் முன்னூறு ஆண்டுகளாக வளர்ந்து கிடந்த புதர்களும் கரையான் புற்றுகளும் இச் செல்வங்களின் புதுமையை அழித்துவிட்டன. கோயிலின் பின் பகுதியில் இக் கோயிலைக் கண்காணித்து வரும் மத்திய அரசின் தொல் பொருள் ஆராய்ச்சி தென் வட்டத்து அதிகாரிகள், இப் புற்றுக்களை அப்புறப்படுத்தும்போது நூற்றைம்பது பாம்புகளுக்கும் மேலாகக் கொல்லப் பட்டதென்று தெரிவித்தார்கள். இவைகளில் தப்பிய பல இன்னும் இந்தச் சிவத் தலங்களுக்கிடையில் வாழ்கின்றன. இக் கோயிலுக்கு இயற்கையின் அழிவாலும் நாயக்கர் காலத்திலிருந்து உண்டான அக்கறைக் குறைவாலும் ஏற்பட்ட சேதத்தைச் சரிப்படுத்தப் பல லட்சக் கணக்கான ரூபாய்கள் வேண்டும்.

இக் கோயிலின் ஒரு பகுதி பௌத்தர்களுடையதாக இருந்து அழிந்தது என்பதற்கு அடையாளமாகத் திகழ்வது வெள்ளைக்கல்லில் பிரபையுடன் கூடிய யானைமேல் வீற்றிருக்கும் அரசன் (இந்திரன்) வடிவில் தற்போது சற்றுத் துண்டாக உடைந்து இருக்கும் இரண்டடி உயரமுள்ள சிலையே. இதை நான் ஆராய்ந்து பார்த்ததில் இவ் வடிவம் ஏழு அல்லது எட்டாவது நூற்றாண்டுச் சிற்ப வகையைச் சேர்ந்தது என்றும், பௌத்த விகாரமாக இருந்த பொழுது வணங்கப்பட்ட தெய்வமாக இருக்க வேண்டும் என்றும் தோன்றுகிறது. சோழர்கள் இத் தெய்வத்தையோ, அல்லது விகாரத்துப் பகுதியையோ வாழ வைக்கவில்லை. அதைக் கோயிலினுள் சேர்த்துப் படிப்படியாக அதன் பெருமையைக் குறைத்திருக்க வேண்டும். மேலும் சில பௌத்த தெய்வங்களின் உருவங்களையும், இக் கோயிலுக்கு வெளியில் பழைய காலத்திலேயே எறிந்திருக்கிறார்கள். நல்ல வரலாற்று அறிவு கொண்ட கும்பகோணத்தைச் சேர்ந்த என் நண்பரொருவர், அக் கோயில் பலிபீடத்துக்குச் சற்றுத் தொலைவில் பத்மாசனத்தில் அமர்ந்திருந்த புத்தர் சிலையொன்று கிடந்ததாகவும், அதைச் சுற்றுப்புறத்தில் உள்ள சிறுவர்கள் '' கடன்காரச் செட்டி '' என்று கல்லால் அடித்துக் கொண்டு விளையாடுவதையும் தெரிவித்தார். இது முப்பது ஆண்டுகளுக்கு முன். திருக்கோயிலின் மூலஸ்தானம், கோபுரம் ஆகியவற்றில் இவ் வகையான எத்தகைய சான்றுகளும் கிடைக்கவில்லை. அவ்வாறு இருந்திருந்தால் அவை மாற்றப்பட்டு இருக்க வேண்டும். அதிஷ்டானம் தேவகோட்டங்கள், மூர்த்தங்கள், கோபுரத்திலுள்ள கூரையாலான தெய்வங்கள் முதலிய யாவும் சில்ப ஆகம விதிகளுக்குப் புறம்பில்லாமல் அமைந்துள்ளன. காலத்தால் சிதைந்துபோன கோபுரத்திலிருக்கும் சில சிலைகளை நாயக்கர் திருத்தியுள்ளார். இன்னும் சில, பழைய அழகு குலையாமல் இருக்கின்றன. விமானமும் அதன் அடியிலுள்ள பகுதிகளும் நாயக்கருடைய வண்ணப் பூச்சுகள் பெற்றிருந்தன.

இவை யாவற்றையும் விடத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு உதவி செய்வன கருவறையின் வெளிப் பக்கத்தில் சைவ நாயன்மார்கள் அனைவருடைய கதைகளையும் சிற்பங்கள் அதிஷ்டானத்தில் மேல் வரிசையில் கோயிலைச் சுற்றி அமைக்கப் பெற்றுள்ளன. கல்வெட்டுகள் யாருடைய கதை என்பதைக் குறிப்பிடுகின்றன. இதைப் பற்றி ஏற்கனவே ஆராய்ச்சி நடந்து வருகிறது.

சைவ இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் இந்த நாயன்மார்கள் கதை வரிசையைக் கவனிப்பது இலக்கியச் சான்றுகளுக்குக் கால வரையறை செய்ய உதவியாக இருக்கும்.

இராஜராஜபுரமான தாராசுரம் சோழர் தலைநகர்களில் ஒன்றான பழையாறைக்கு அருகிலிருக்கிறது. இக்கோயிலினின்று சில சுரங்கப்பாதைகள் பழையாறைக்கும் அருகிலுள்ள திருவலஞ்சுழிக்கும் அரண்மனைக்கும் சென்றன என்பதற்குரிய அடையாளங்கள் தென்படுகின்றன. சுந்தர பாண்டியனால் பழையாறைக்கும் மற்ற தலைநகரங்களுக்கும் பொதுவாகச் சோழ நாட்டுக்கும் ஏற்

> கட்டுரை ஆசிரியர், டாக்டர் சுரேஷ் பிள்ளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம். ஏ., பயின்றவர். பின்னர் சில ஆண்டுகள் பூனா மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தில் உருசிய மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றி வந்தார். அங்கே உள்ள பல்கலைக் கழகத்தைச் சார்ந்த தொல்பொருள் இயல் உயர் ஆராய்ச்சிக் கழகத்தில் தமிழ்க் கல்வெட்டுகளை ஆராய்ந்து, தொல் பொருள் ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெற்றார்.
>
> தமிழ்நாட்டில் தொல்பொருள் ஆராய்ச்சியில் முதன் முதலில் டாக்டர் பட்டம் பெற்றவர் இவரே.

பட்ட அழிவின்போது இக்கோயிலின் வழிபாடும் செல்வமும் குறைந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. பின்னால் ஏற்பட்ட நாயக்கர் ஆட்சியில் கோயிலின் கருப்பக்கிரகத்தைவிட வடகிழக்குமூலையில் உள்ள பகுதிக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்து இருக்கிறார்கள் என்பதை அப் பகுதியும் அதைச் சார்ந்த மண்டபமும் விதானமும் நாயக்க வண்ண வேலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதைக் கொண்டு கூறலாம். சுமார் அறுநூறு ஆண்டுகளாக வாழ்விழந்து கிடக்கும் தாராசுரம் கோயில் சோழர் சிற்பக் கலைக்கு மட்டுமின்றி, இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றுக்கும் எடுத்துக் காட்டாக உள்ளது. சிற்பத் திறனில் சோழர்கள் கட்டிய கோயில்களுள் தாராசுரம் ஐராவதேஸ்வரத்தை விடச் சிறந்த ஒன்றைக் காண்பது அரிது.




நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, ரூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath



தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்



DR. S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப் பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள், முதலியவற்றைக் குணப்படுத்திப்புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.-யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்.

டாக்டர் S. காளிமுத்து, B.M.P.(IND), V.V.C., A.M.I.H.
பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி, S.I.
போன்: 16 தந்தி: சித்தர்

சென்னை கிளை ஆபீஸ்:
41, நைனியப்பன் தெரு, G. T., சென்னை-1.
போன்: 21448


இரசாயனங்களின் மும்முனைப் பயன்—




உலகில் பெருகிவரும் மக்கள் தொகையை வைத்து, உணவுப் பற்றாக் குறை குறித்துப் பயங்கரமான ஒரு சித்திரத்தையே பலரும் உருவாக்கிக் காட்டுகிறார்கள். வடக்கு மித வெப்ப மண்டலத்தில் 90 கோடி மக்கள் வாழும் தொழில் வளம் மிக்க 30 நாடுகளில் மட்டுமே இன்று போதுமான அளவு உணவு கிடைத்து வருகிறது. ஆனால் முன்னேற்றம் குறைந்த 70 நாடுகளில் 190 கோடி மக்களுக்குச் சரிவர உணவு கிடைக்கவில்லை. ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கானவர்கள் பட்டினியால் மரித்து வரும் நிலை உள்ளது. 1960-லிருந்து 1970 முடிய உள்ள பத்தாண்டுக் காலத்தில் முன்னேறி வரும் நாடுகளில் எல்லாம் உணவு உற்பத்தி பெருகியதை விட வேகமாக மக்கள் தொகை பெருகி வந்தது. இதே வகையில் பெருகிக்கொண்டு போனால் 1975 வாக்கில் உலகப் பஞ்சமே வரும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

ஆனால், பஞ்ச அபாயத்தை முந்திக் கொண்டு பசுமைப் புரட்சி வந்தது. அமெரிக்க நாட்டின் பகுதிகளிலும், தென் கிழக்கு ஆசியாவிலும் கோதுமை, அரிசி விளைச்சல் பெருகியது.

சோற்று விஞ்ஞானம்

இன்றைய மக்கள் தொகைக்கும் இனிப் பெருகும் மக்கள் தொகைக்கும் உணவு அளிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் உணருகின்றனர். மக்களும் இதில் நம்பிக்கை கொள்ளத் தொடங்கியுள்ளனர். இத் தலைமுறையிலேயே எல்லாருக்கும் போதிய உணவு கிடைக்கும் என்ற நம்பிக்கை வளர்ந்துள்ளது.

உணவு உற்பத்தியைப் பெருக்கச் செயற்கை இரசாயனங்களைப் பயன்படுத்தும் முனைப்பு 1840ஆம் ஆண்டிலேயே தொடங்கியது. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த வேளாண் துறை இரசாயன வல்லுநர் வான் லீபிக் என்பவர், தழை உயிர்களுக்கு வேண்டிய ஊட்டம் யாது என்பதை ஆராய்ந்தார். "தாவரம் வளர்ச்சி பெறுவதற்குக் கரையக் கூடிய உருவத்தில் ஓரளவு நைட்ரஜன் (வெடியம்), பாஸ்வரம் (எரியம்), பொட்டாசியம் (சாம்பரம்) ஆகியவை வேண்டும். இவற்றுக்குப் பதிலாகப் பிறவற்றைக் கொள்ளமுடியாது. இம் மூன்றும் தேவைப்படும் அளவுகளை மாற்றி அளித்தாலும் பயன்படாது'' என்று அவர் கூறினார். அவருடைய ஆராய்ச்சியின் விளைவாக பாஸ்பேட், பொட்டாசியம் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்கள் வளர்ந்தன.

காற்றில் கலந்த சத்து

ஆனால், காற்றிலுள்ள நைட்ரஜனைப் பொருத்தமான கூட்டுப் பொருளாக மாற்றுவதற்குச் செய்த முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கவில்லை. 1908-ஆம் ஆண்டில்தான் பிரிட்ஸ் ஹேபர் என்பவரும் கார்ல் பாஸ்ச் என்பவரும், காற்றிலுள்ள நைட்ரஜனுக்கு நைட்ரஜன் ஏற்றி அம்மோனியா (நவச்சாரம்) உண்டாக்கும் முறையைக் கண்டு பிடித்தார்கள். அதன் பின்பு நைட்ரஜனைத் தாதுக்களுடன் கலந்து உரங்களாகப் பயன்படுத்தும் முறை வந்தது.

செயற்கை உரங்களைப் பெருமளவில் பயன்படுத்தி, வேளாண்மைத் துறையில் புதிய நுட்ப

> மண்வளத்தைப் பெருக்கும் இரசாயன உரங்கள் பூச்சி பொட்டுகளை ஒழிக்கும் புதிய மருந்து வகைகள், தானியங்களின் ஊட்டச் சத்தைப் பெருக்கும் இரசாயனச் சேர்ப்பங்கள்—இவற்றின் விளைவாக உலகில் உணவுப் பஞ்சம் நேராதபடி பற்றுக்குறை அபாயத்தை விரட்டியடிக்க முடியும் என்பதை விவரிக்கிறது இக் கட்டுரை!

முறைகளைக் கையாண்டு உலகில் 3,500 கோடி மக்களுக்கு, அதாவது இன்றுள்ள உலக மக்கள் தொகையைப் போல 10 மடங்கு மக்களுக்கு வயிறார உணவு விளைவிக்க முடியும் என்று நம்பப்படுகிறது. இன்று சாகுபடியில் உள்ள நிலங்களே அவ்வாறு விளைச்சல் தர முடியும். பெல்ஜியம், ஹாலந்து, ஜப்பான் ஆகிய நாடுகளில் கையாளும் முறைகள் போதும்.

கண்ணாடிக் கூண்டில் பண்ணை—

கண்ணாடியால் ஆன சுவர்களும் கூரையும் கொண்டு, முற்றிலும் மூடப்பட்டு, உள்ளே விரும்பிய வகையில் தட்ப வெப்பம் அமைத்துப் பயிர் விளைவிக்கும் கண்ணாடி அறைப் பண்ணைகளைப் பல்கேரிய நாட்டில் சுமார் 140 ஏக்கர் பரப்பிடத்தில் அமைத்திருக்கிறார்கள். இவைகளில் செயற்கை உரங்களை முறையாகப் பயன்படுத்தி ஆண்டு முழுதும் காய்கறிகள் விளைவிக்கிறார்கள். மேற்கு ஐரோப்பாவில் ஆண்டு முழுதும் காய்கறிகள் கிடைத்து வருவதற்கு இப்பண்ணைகளே பெரிதும் காரணம்.

இப்போது உலகில் ஆண்டு ஒன்றுக்கு 27 மில்லியன் மெட்ரிக் டன் அளவு செயற்கை உரம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. செயற்கை உரங்களின் விளைவால் கிடைக்கும் உபரி விளைச்சலைக் கொண்டு உலகில் பாதிப்பேருக்கு உணவு அளிக்கப்பட்டு வருகிறது. கி.பி.2000-ஆம் ஆண்டில் வாழப் போகும் மக்கள் தொகையினருக்கு உணவு அளிக்க வேண்டுமானால் உர உற்பத்தியை ஆண்டுக்கு 90—95 மில்லியன் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்த்த வேண்டும்.

புதுப்புதுப் பூச்சுகள்—

விளையும் பயிரும் உணவுப் பொருள்களும் பாழாகாமல்

காப்பதற்கும் இரசாயனம் உதவ வேண்டியுள்ளது. ஆண்டுஒன்றுக்கு 6 கோடிப் பேர்வீதம் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்குக் கூடுதல் உணவு உற்பத்தி செய்ய முயற்சிகளை மேற்கொள்ளும் போது, விளை நிலங்களின் கூறுகள் பத்தாயிரம் வகைப் பூச்சிகள் பெருகி வளரக் கூடிய தன்மையில் இருக்கும். அப்படிப் பெருகும் பூச்சி இனம், உணவுக்காக மனிதனோடு போட்டியிடும்.

பெருகும் பூச்சிகளை அப்படியே விட்டு விடுவோமானால் அவை தின்று மிச்சமிருந்தால் மட்டுமே மனிதனுக்கு என்ற நிலைமை கூட ஏற்பட்டு விடும். உணவுப் பொருள்களில் ஏற்படும் மொத்த நட்டத்தில் பூச்சிகளால் ஏற்படும் நட்டம் 12 சத விகிதம் என்றும், தாவர நோய்களினால் விளைவது 12 சதவிகிதம் என்றும் களைகளினால் ஏற்படுவது 10 சதவிகிதம் என்றும் மதிப்பிட்டிருக்கிறார்கள். இப்போதுள்ள பூச்சி கொல்லி மருந்துகளை விரிவான அளவில் பயன்படுத்தி வரும் போதே இத்தகைய நிலைமை உள்ளது.

பூச்சி மந்திரம்—

உணவுப் பொருள்கள் மிகுதியாக விளையும் ஐக்கிய அமெரிக்காவில் கூட இரசாயனப் பூச்சிகொல்லி மருந்துகள் பயன்படுத்தப் படாமல் விடப்படுமானால் உணவுப் பங்கீடு முறை அமலுக்கு வர நேரிடும் என்றும் உணவுக்கு முன்னைக் காட்டிலும் கால் பங்கு விலை கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.

பூச்சிகொல்லி இரசாயன மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்ட பின்பு, பழங்கால மௌடீக முறைகள் பல மறைந்தன. மந்திரம் போட்டுப் பூச்சிகளை விரட்டுதல் பயிர் நோய் நீக்கத்துக்காக, சேவல் அல்லது ஆடு அறுத்தல், ஆட்களைக் கொண்டு பெரிய பெரிய விசிறிகளை வீசி விரட்டுதல், போன்றவை மறைந்தன. இரசாயன பூச்சி கொல்லிகளில் 200 வகை மருந்துகள் இப்போது பயன்படுத்தப்படுகின்றன.

ஜப்பானில் ஒரு ஹெக்டேர் (2.47 ஏக்கர்) நிலத்தில் பயன்படுத்தப்படும் பூச்சி கொல்லி மருந்தின் அளவு, ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகியவைகளில் பயன்படுத்துவதைப் போல ஐந்து மடங்கு ஆகும். ஜப்பானின் விளைச்சல் அமெரிக்கா, ஐரோப்பா விளைச்சலை விட இரு மடங்கு ஆகும்.

சேமிப்பில் சேதங்கள் —

இந்தியாவில் இப்போது விளைச்சல் அளவு குறைவாக இருக்கின்ற போதிலும் பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தி, சேமிப்புக் கிடங்குச் சேதங்களைக் குறைப்பதால் பற்றாக் குறை நீங்கி அனைவருக்கும் போதுமான உணவு கிடைக்கும் என்று புள்ளி விவர ஆராய்ச்சியில் தெரிகிறது. 1962—64 ஆண்டுகளில் இந்தியாவில் உணவு தானியச் சேமிப்பில் 50 லட்சம் டன் சேதமாகி வீணாயிற்று. 1962-ல் இந்தியாவில் இறக்குமதியான உணவு தானியத்தின் மொத்த அளவை விட இது 10 லட்சம் டன் அதிகமானதாகும்.

எதைப் பற்றியும் விவகாரம் செய்வதில் திறமை வாய்ந்த சிலர் பூச்சிகொல்லி மருந்துகளால் தீமை விளையும் என்று பேசுகின்றனர். ஆனால் உண்மை நிலவரம் இதற்கு மாறாகத்தான் உள்ளது. பயிர்களில் மிச்சமாகத் தங்கியிருந்த பூச்சிகொல்லி மருந்துகளால் யாருக்கும் எத் தீமையும் இதுவரை விளையவில்லை. பூச்சி கொல்லி மருந்துகளை மனிதன் உட்கொண்டால் ஆபத்து விளையும் என்பது உண்மை. ஆனால் தற்செயல் விபத்தாகவோ, கொலை நோக்கத்துடனோ, தற்கொலை எண்ணத்துடனோ தவிர, இம் மருந்துகள் மனித உடலுக்குள் தாமாகப் போக வாய்ப்பு இல்லை. அப்படியே போனாலும் ஆபத்து மிகக் குறைந்த அளவில் தான் இருக்கும்.

களை கொல்லிகள்—

உயிரியல் முறையில் பூச்சிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன ; என்றாலும் இரசாயன முறைக்கு மாற்றாக, பூச்சி ஒழிப்புக்கு வேறு முறை கிடையாது என்பதே இன்றுள்ள நிலைமை. விளை நிலங்களில் நெடுங்காலமாக நிலவியுள்ள சூழ்நிலை அமைப்பில் மேற்கொள்ளப்படும் மாறுதல்களில், பயிர்—பூச்சி சமன நிலை பாதிக்கப்படக் கூடும். அதன் விளைவாக நீண்ட நாள் வாழக் கூடிய புதுவகைப் பூச்சிகள் தோன்றக் கூடும். புதுத் தொற்று நோய்கள் பரவக் கூடும். இதனை யொட்டி இனி வரும் ஆண்டுகளில் பயிர்ப் பாதுகாப்பு வேலைகள் கூடுதல் முக்கியத்துவம் பெறும். பூச்சி ஒழிப்பு மருந்துகளை, விவசாயிகள் இப்போது வரவேற்கிறார்கள். இந்த மனப்பாங்கு ஒரு நல்ல அறிகுறியாகும்.

வருங்காலத்தில் பாஸ்வர அமிலக் கொதியிலிருந்து தயாரிக்கப்படும் பூச்சிகொல்லிகள் முக்கியத்துவம் பெறும். இவை பல வர்த்தகப் பெயர்கள் பூண்டு ஏற்கனவே விற்பனைக்கு வந்துள்ளன. வளர்ந்து வரும் நாடுகளில் களை கொல்லி மருந்துகள் இனி மிகுதியாகப் பயனாகும்.

'அகத்தாகும் இரசாயனப் பொருள்' என்பது ஒரு புதிய இரசாயனம். இதனைத் திரும்பத் திரும்பப் பயிர்களுக்குப் போட வேண்டியதில்லை. இது பயிர்களின் நாளங்களுக்குள் பாய்ந்தோடிக் காப்புச் சக்தியைப் பயிரின் எல்லாப் பாகங்களுக்கும் பரவச் செய்கிறது.

உரத்துக்கும், பயிர்ப்பாதுகாப்புக்கும் இரசாயனம் உதவுவது போலவே தானியங்களின் புரதச் சத்து மிகுவதற்கும் இரசாயனம் பயன்படுகின்றது. லைசின், டிரிப்டோபான், மெத்தியோனைன் முதலிய அமினோ அமிலச் சேர்ப்பங்கள் இவ் வகையில் பயன்படுகின்றன. கோதுமையுடன் 0.4 சத விகித லைசின் சேர்த்தால் அதன் புரதச் சத்து 50 சதவிகிதத்துக்கு மேல் அதிகரிக்கிறது. தக்க லிசினையும், டிரிப்டோபானையும் சோளத்துடன் சேர்த்தால், புரதச் சத்து கிட்டத் தட்ட இரு மடங்கு ஆகிறது. சோயா அவரையுடன் மெத்தியோனைன் சேர்த்துச் சிக்கன முறையில் புரதச் சத்தைப் பெருக்கலாம்.

கி.பி. 2000 ஆண்டில் இவ்வுலகில் வாழப்போகும் 700 கோடி மக்களுக்கும் போதிய உணவும், உடையும், உறையுளும், கல்வி, வேலை வாய்ப்பு முதலிய வசதிகளும் தந்து, மக்கள் சூழ்நிலைக்கு அடிமையாகாமல், அதனை வென்று ஆளக் கூடியவர்களாக விளங்க வேண்டுமானால் பயன்பாட்டு விஞ்ஞானம் தான் அதாவது செயல் வடிவம் பெற்ற தொழில் முறை தான் அதற்கு உதவ முடியும்.

# சிட்-டெண்டர் விளம்பரங்கள்

## தமிழ்நாடு குடிநீர் - வடிகால் வாரியம்

### சிட்-டெண்டர் அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் கடித உறையின்மேல் கீழ்க்குறிப்பிடப்பட்ட பணியின் பெயர் எழுதப்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள், மக்கள் நல்வாழ்வு பொறியியல் துறை, பொதுப்பணித்துறை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது அவைபோன்ற அரசுத் துறைகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளரால் (மக்கள் நல்வாழ்வு பொறியியல்)எண் 17, சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியிலுள்ள அவரது அலுவலகத்தில் 25—8—1971 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 3-30 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

**வேலையின் பெயர்**

மக்கள் நல்வாழ்வு பொறியியல் பிரிவு, திருச்சி—நன்கு சோதனை செய்யப்பட்டு ISS/226/1962-லும் அதன் பின்பு திருத்தப்பட்ட விதிகளில் குறிப்பிட்டபடியுள்ள எம். எஸ். ராட்ஸ் சப்ளையும் டெலிவரியும் செய்தல்.

**ஒப்பந்த வகை**

முழுத் தொகை.

**முன்வைப்புத் தொகை**

ரூ. 6,000 (ஆறாயிரம் ரூபாய் மட்டும்.)

இந்தத் தொகை, டெண்டருடன் கஜானா செலானாக அல்லது டிமாண்ட் டிராப்டாக அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு பாங்கில் நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வு பொறியியல் கோட்டம், திருச்சி-3-ன் கணக்கில் வழங்கக் கூடிய பாங்க் காரண்டியாக ( Guarantee ) செலுத்தப்படவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் செக் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வேலை முடிக்கப்படவேண்டிய காலம் 2 மாதம்.

டெண்டர் பத்திரங்களின் விலை:

ரூ. 15.45 (விற்பனை வரி உட்பட).

டெண்டர் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வு-பொறியியல் கோட்டம், பி-15, தில்லைநகர் மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் கிடைக்கும். (21—8—1971 மாலை 5 மணி வரை.)

**கே. கோவிந்தமேனன்,**
மேற்பார்வை பொறியாளர்,
(P.H.E.).

மதுரை-2,
20—7—71.

---

## டெண்டர் அறிவிப்பு

1—9—1971 முதல் 31—12—1971 வரையுள்ள காலத்தில் மருந்துகள் (drugs and medicines) சப்ளை செய்ய, புகழ்பெற்ற வட்டார நிறுவனங்களிடமிருந்து "Tender for the supply of medicines due on 21—8—1971" என்று

உறையின்மீது தலைப்பிடப்பட்ட டெண்டர்கள் 21—8—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. டெண்டர் பாரம், அடியில் தரப்பட்ட முகவரியில் 20—8—1971 வரை எல்லா வேலை நாட்களிலும் கிடைக்கும். "XXIII. Medical—J. Miscellaneous—Other receipts" என்ற தலைப்பில் டெண்டர் பாரத்தின் விலையான ரூ. 3-ஐ ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் கட்டி அந்தச் செலானைத் தந்து டெண்டர் பாரம் பெறலாம். 11 காசுக்கு தனியாக ஒரு செலான் " XII Sales tax—Receipts under States Sales tax Act M.G.S.T. for sale of Tender Forms" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும்.

மேற்கண்ட தலைப்பில் கட்டப்பட்ட கட்டணம் எந்தச் சூழ்நிலையிலும் டெண்டர்தாரர்களுக்குத் திருப்பித்தரப்படமாட்டாது.

டாக்டர்
**(திருமதி) எம். சாரதா மேனன், M.D., D.P.M.,**
கண்காணிப்பாளர்,
அரசினர் மனநோய் மருத்துவமனை,
சென்னை-10.

---

## உதகை நகராட்சி

### டெண்டர் அறிவிப்பு

1971-ஆம்வருடம் செப்டம்பர் மாதம் 8-ஆம் தேதி புதன்கிழமை மாலை 3·30 மணிக்குள் டைகர் ஹில் அணைக்கட்டைப் பழுது பார்ப்பதற்கும் மராமத்து செய்வதற்கும் உதகை கமிஷனர் அவர்களால் டெண்டர்கள் வாங்கப்படும். டெண்டர் நிபந்தனைகளும், டெண்டர் பத்திரங்களும் 6—9—1971 மாலை 4·00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 10·30 செலுத்தி அன்று மாலைக்குள் டெண்டர் பத்திரங்களைமுனிசிபல் இன்சினியர் ஆபீசிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டெண்டர் பத்திரத்தின் விலை ரூ. 10·30, செப்டம்பர் 6-ஆம் தேதிக்குள் முனிசிபல் கஜானாவில் செலுத்தப்பட வேண்டும்.

**கி. அப்பாநாராயணன்,**
ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
உதகமண்டலம்;
நாள் : 29—7—1971.

## தமிழ்நாடு அரசு

### பொதுப் பணித் துறை

ஓட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

ஆர்.சி. எண். 19091/71, டி5. நாள் : 28-7-1971.

வேலையின் பெயர்—நாமக்கல் அரசினர் மாதர் கலைக் கல்லூரிக்குக் கூடுதல் தளம் கட்டுதல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, சேலம், தர்மபுரி சர்க்கிள், சேலம்-4 அவர்களால் 6-9-1971 பிற்பகல் 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப் படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| 1 ஒப்பந்த வடிவம் .. .. | மொத்தத் தொகை. |
| 2 கட்டுத் தொகைப்பணம் (செலான் வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெப்பாசிட்டு வகையிலோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப்டாகவோ மாநில அரசின் கடன் பத்திரங்களாகவோ—அல்லது தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களாகவோ ஏற்றுக் கொள்ளப்படும்.) | ரூ. 10,000 |
| 3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ) "P. W. Remittance III other remittance)" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பில்டிங்க் டிவிஷன்ஸ், சேலம்—5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும். | ரூ. 20. |
| 4 விற்பனைவரி [விற்பனைவரி XII Sales tax (d)] பல்வகை என்ற தலைப்புக் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும். | ரூ. 0·60 |

5. வேலை முடிப்பதற்குரிய காலம்: (ஒன்பது மாதங்கள்) 9 மாதங்கள்.

| | |
|---|---|
| மேற்பார்வைப் பொறியாளர், சேலம்—தர்மபுரி சர்க்கிள், சேலம் 4 அவர்தம் அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கக் கூடிய தேதி. | 16-8-1971 முதல் 3-9-1971 வரை. |

மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ் நாடு மின்வாரியப் பத்திரங்களும், மதிப்பில் 25 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும்.

கால் ரசீது டெப்பாசிட்டுகளும், பிக்சட் டெப்பாசிட் ரசீதுகளும் தொகை வசூல் நிபந்தனைக்குட்பட்டுக் கட்டுத் தொகைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆர். ராதாகிருஷ்ணன்,
28—7—1971.

## தமிழ்நாடு வனத்துறை.

மதுரை வடக்குக் கோட்டம்.

### ஸ்டேஷன் வேகன் ஏல விற்பனை.

1955 மாடல் MSY 2667 பதிவு எண் கொண்ட பழுதடைந்த ஸ்டாண்டர்டு வேன் கார்டு ஸ்டேஷன் வேகன் ஒன்று அது எங்கு எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் தமிழ் நாடு கவர்னர் சார்பில் மதுரை வடக்குப் பிரிவு மாவட்ட வன அலுவலர் (திண்டுக்கல்) அவர்களால் மதுரை காந்தி நகரிலுள்ள மதுரை மண்டல வனப் பாது காவலர் அலுவலகத்தில் 17—8—1971 அன்று காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் அந்த வேனை, மதுரை மேலூர் சாலையிலுள்ள மதுரை தெற்குப் பிரிவு மாவட்ட வன அலுவலர் பங்களா காம்பவுண்டில் பார்த்துக் கொள்ளலாம். விற்பனை நிபந்தனைகளுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கி. திருமலைராஜ்.

திண்டுக்கல்,
21—7—1971

மாவட்ட வன அலுவலர்,
மதுரை வடக்குக் கோட்டம்,
திண்டுக்கல்.

# டெண்டர்கள்

## தமிழ் நாடு அரசு,

### அரிசன நலத் துறை

ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

முத்திரையிட்ட விலைப் புள்ளிகள் பின்கண்ட இனங்களை வழங்குவதற்காக வரவேற்கப் படுகின்றன. விலைப் புள்ளிகளை ஒவ்வொரு இனத்திற்கும் தனித் தனியாக எழுதி, இயக்குநர், அரிசன நலத்துறை, சென்னை-5, அவர்களுக்கு 26-8-1971க்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்தின் தலை நகரிலும் உள்ள மாவட்ட நல அலுவலர் அவர்களின் அலுவலகத்தில் பொருள்களை எப். ஓ. ஆர். (F. O. R.)-ல் வழங்க வேண்டும். விலைப் புள்ளிகளுடன் ஒப்பந்தக்காரர்களால் அளிக்கப் படும் பணி வசதிகள் பற்றிய தகவல்களும் அடங்கியிருக்க வேண்டும். விலைப்புள்ளிகள் அடங்கிய உறையின் மேலே, எந்த இனத்திற்கு விலைப்புள்ளிகள் என்ற விவரம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். விலைப் புள்ளிகளை ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது எந்த வித காரணமும் குறிப்பிடாமல் தள்ளுபடி செய்வதற்கும் அரிசன நலத்துறை இயக்குநர் அவர்களே முடிவான அதிகாரம் பெற்றவராவார்.

ஒப்பந்த விதிகளின்படி திருப்தியடைந்தால், ஒப்புக் கொண்ட விகிதத்தில் மாவட்ட நல அலுவலகர்கள், தொகையை பட்டுவாடா செய்வார்கள். இந்தப் பொருள்களுக்கான வரையறை விவரங்களை (Specification) இயக்குநர், அரிசன நலத்துறை, எழிலகம், சென்னை-5 அவர் களிடமிருந்து 21-8-1971-க்குள் எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணிக்குள் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டியே தெரிவிக்கப்படும் தேதியில், மாதிரிக் கருவிகளையும் இயந்திரங்களையும் ஒப்பந்தக்காரர்களே தங்கள் சொந்தச் செலவில் சென்னை-5-ல் உள்ள அரிசன நலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் பார்வையிடுவதற்காகக் கொண்டுவர வேண்டும். மாவட்ட அலுவலகங்களில் வழங்கப்படும் பொருள்கள், சென்னையில் பார்வையிட்டு தேர்ந்தெடுத்த மாதிரிப் பொருள்களின் தரத்தை ஒத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், அவைகள் முழுவதும் மாவட்ட தலைநகரில், அதிகாரம் பெற்ற தொழில் நுட்ப அதிகாரியால், தள்ளுபடி செய்யப்படும்.

ஒவ்வொரு இனங்களிலும் வழங்க வேண்டிய எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக் காரருக்கு அறிவிக்கப்படும். அவர் பொருள்களை வழங்குவதற்கு முத்திரைத்தாளில் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்தத்தில் கண்ட விதிப்படி பொருள்களைக் குறிப்பிட்ட காலத்திலும், முறையாகவும் வழங்குவதற்காக, ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பில் 10 சதத் தொகையைப் பிணைப்பணமாகக் கட்ட வேண்டும்.

வழங்கவேண்டிய பொருள் இனங்கள்.

1. கருமான் வேலைக் கருவிகள்.

2. தச்சுக் கருவிகள்.

3. தையல் இயந்திரம் (காலால் இயக்குதல்) (துணி தைத்தல்), ஸ்டாண்டு கவர் மற்றும் துணைக் கருவிகள்.

4. தோல் தைக்கும் இயந்திரம் (காலால் இயக்குதல்), கருவிகளுடன்.

5. லாண்டிரிகளுக்கான இஸ்திரிப் பெட்டிகள்.

6. முடிதிருத்துவோர் கருவிப் பெட்டி.

7. மரம் வெட்டுவதற்குரிய கருவிகள்.

இயக்குநர்,
அரிசன நலத்துறை,
சென்னை-5.

## ஏல விற்பனை அறிவிப்பு

ஒரு லாரி, எம். எஸ். ஐ. 1438 (பெட்ரோலில் ஓடுவது), காலி கோணிப்பைகள், எண்ணெய் பட்ட கோணித் துண்டுகள், தகரங்கள், இரும்புக் கழிவுகள், துத்தநாகத் துண்டுகள் முதலியன சென்னை-1, மின்ட் பில்டிங்ஸ், அரசினர் அச்சகத்தில் 9-9-1971 முற்பகல் 11-30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப் படும்.

மேற்கொண்டு விவரங்களுக்கும், ஏல அறிவிப்பு நகல்களுக்கும் இயக்குநர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசினர் அச்சகம், சென்னை-1 அவர்களுடன் தொடர்பு கொள்க.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.

எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர், அலுவலகம்.
சென்னை-1.
நாள் : 28—7—1971.

## கோர்ட் விசாரணை

ஸ்மால் காஸ் கோர்ட் மதராஸ்
M. P. No. 1308 of 1971
Suit No. 3190 of 1963.

கே. வி. ராமானுஜ ஆச்சாரி —வாதி

எதிராக

வி. கோபாலகிருஷ்ண ரெட்டி பிரதிவாதி—இறந்தவர்

1. காந்தம்மாள்
2. குருமூர்த்தி
3. சுந்தரமூர்த்தி
4. மோகன்

} பிரதிவாதியின் வாரிசுகள்.

14. ஜி. எச். ஹைரோட் க்ரோம்பேட் மதராஸ்.

இறந்துபோன கோபாலகிருஷ்ண ரெட்டியின் வாரிசுகளாக உங்கள் 4 பேரையும் சேர்ப்பதற்கு போடப்பட்டிருக்கும் மேற்படி மனு, 21-8-1971 காலை 11 மணிக்கு 3-வது கோர்ட்டில் விசாரணைக்கு வருகிறது. அறியவும்.

கே. திருவேங்கடாசாரி,
வாதி அட்வகேட்.

## தமிழ்நாடு அரசு

## போக்குவரத்துத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காக, ஆளுநர் சார்பில் தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், மவுண்ட்சாலை, சென்னை-2ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் மாலை 3·00 மணி வரை கீழே ஐந்தாவது பத்தியில் குறிக்கப்பட்ட தேதியில் பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர். | முடிக்கும் காலம். | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தத் தேதி. | ஒப்பந்தப் பத்திரம் விகிதங்களின் விலை விற்பனை வரி உட்பட. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | காஞ்சீபுரம் பணிமனையில் நேரப்பதிவறை, கழிவறை மற்றும் மதில்சுவர் கட்டுதல். | 8 மாதங்கள். | ரூ. 2,250. | 2—9—71. | ரூ. 15.55. |

கட்டுதல்/ஒப்பந்தம் : மொத்தத் தொகை ஒப்பந்தம்

ஒப்பந்தங்கள் மேலே ஐந்தாவது பத்தியில் குறிக்கப்பட்ட தேதியில் மாலை 3·15-க்குத் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றை நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அலுவலகத்தில் மேலே குறிப்பிட்டவேலைக்கு மேலே குறிப்பிட்ட தொகையைக் கட்டி கீழ்க்கண்ட தேதிகளில் எல்லா அலுவலக நாட்களிலும் (16-8-1971 முதல் 1—9—71 முடிய)பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை, நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களுக்கு அரசாங்க கருவூலத்தில் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின்கீழ் செலுத்திச் செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

எஸ். சிவாநந்தா,
தலைமைப் பொறியாளர்,
தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து,
போக்குவரத்து இல்லம்,
சென்னை-2.

---

## ஏலம்

---

### தடிகள் ஏலம்

தேக்கு, மருது

வேங்கை, வெந்தேக்கு

மற்றும் பல ஜாதிகள்

இடம் : அரசாங்க தடி மண்டி, பேட்டை.

தேதியும், நேரமும் : 6—9—1971 முற்பகல் 9·00.

அளவு : ஏறத்தாழ 300 கன மீட்டர்.

மேற்கொண்டு விபரங்களுக்குப் பேட்டை மண்டிச்சிறக அலுவலருக்கு எழுதவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென்பிரிவு.

# டெண்டர்கள்

## தமிழ்நாடு அரசு

### தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம் (கட்டுமானங்கள் பிரிவு), கிண்டி, சென்னை-25.

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர் :

வேலையின் எண் 1 .. .. மதுரைப் பல்கலைக் கழகத்தில் 30,000 காலன் திறனுள்ள ஆர்.சி.சி. மேல் மட்ட தண்ணீர்த் தொட்டி கட்டுதல்.

வேலை எண் 2 .. — மதுரை, மதுரை-தேனி சாலையில் மதுரைப் பல்கலைக் கழக மையத்தில் கணிதத் துறைக்காக ஃபேகல்டி கட்டடம் கட்டுதல்.

வேலை எண் 3 ... ... மதுரை, மதுரை-தேனி சாலையில் மதுரைப் பல்கலைக் கழக மையத்தில் அஞ்சல் அலுவலகம் கட்டுதல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், மேலே கண்ட வேலைகளைத் தொழில் நுட்பக் கல்விப் பகுதிகளில் மேற்கொள்ளுவதற்காக, உரிய பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேலே கண்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் 23—8—1971 பிற்பகல் 3-00 மணி வரை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால், அதே நாளில் மாலை 3-30 மணிக்கு, வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| | வேலை எண் 1. | வேலை எண் 2. | வேலை எண் 3. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 ஒப்பந்த வடிவம் .. .. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை |
| 2 கட்டுத் தொகை ... .. | 1,875 | 4,000 | 1,375 |
| 3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை பிளானுடன் | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்). | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்). | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்). |
| 4 வேலையை முடிக்க வேண்டியகாலம். | 6 மாதம். | 8 மாதம். | 6 மாதம். |
| 5 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேலே கண்ட அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கக் கூடிய தேதிகள். | 12—8—1971 முதல் 21—8—1971. | | |
| 6 ஒப்பந்தப் புள்ளிகள் அளிக்க தகுதி வாய்ந்த பதிவாளர் பிரிவு. | III-ம் பிரிவும் அதற்கு மேலும். | III-ம் பிரிவும் அதற்கு மேலும். | III-ம் பிரிவும் அதற்கு மேலும் |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணம் (எக்காரணம் கொண்டும் இது திருப்பித் தரப்படாது) அரசு கருவூலத்திலோ, அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ '' P. W. Remittances III other Remittances '' என்ற தலைப்பில் மதுரை, பல்கலைக் கழக டிவிஷன் நிர்வாகப் பொறியாளர் கணக்கில் கட்ட வேண்டும். விற்பனை வரியை தனி சலானில், கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பாங்கிலோ ''XII. Sales tax (b) Receipts under state sales tax–Act. General Sales Tax)'' என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். சலான்கள் வந்த பின்னரே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் கட்டுமானப் பிரிவில் ஏற்ற பிரிவில் பதிவு செய்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப் படமாட்டா.

கட்டுத் தொகை, சலான் வடிவிலும், ஷெட்யூல் பாங்குகளின் ' கால் டிபாசிட் ' தொகை வடிவிலும் பெற்றுக் கொள்ளப்படும். அரசு புரோ நோட்டுகள், மாநில மின்சார வாரிய ' பாண்டுகள் ' தேசிய சேமிப்புப் பத்திரங்கள் ஆகியனவும் கட்டுத் தொகைக்காக, விற்பனை மதிப்பில் 5 சத விகிதம் குறைவாக அல்லது நிர்ணய மதிப்பு, இதில் எது குறைவாக இருக்கிறதோ அந்த வகையில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளி தர உத்தேசித்திருப்பவர்கள், உரிய வேலைப்பிரிவில் பெரிய கட்டுமான வேலைகளை மேற் கொள்ளுவதில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க சென்னை-25, தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் உண்டு.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,
சென்னை.

# டெண்டர்கள்

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

''விருத்தாசலத்தில் உள்ள அரசினர் பிராந்திய அச்சகத்தில் 1971—72-ஆம் ஆண்டுக்குக் கழிவுத்தாள்கள் வாங்கவும் அப்புறப்படுத்திக் கொள்ளவும் ஒப்பந்தப் புள்ளிகள்'' என்று குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், இயக்குநர், எழுதுபொருள் அச்சகம், சென்னை-1, அவர்களால் 25—8—1971-ல் அல்லது அதற்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில், பதிவு அஞ்சல் ஒப்பத்துடன், இயக்குநர் எழுதுபொருள் அச்சகம், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 என்ற முகவரிக்கு இயக்குநர் பெயரில் அனுப்ப வேண்டுமே தவிர, வேறு முறையில் அனுப்பலாகாது. மேற்கொண்டு விவரங்களுக்கு 4—8—1971 தேதியிட்ட தமிழ் நாடு அரசினர் அரசிதழைப் பார்க்க.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.
எழுதுபொருள் அச்சக
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-1.
24—7—1971.

## தமிழ் நாடு சிறு தொழில்கள் நிறுவனம், லிமிடெட்.

35/2, உட்ஸ் சாலை, சென்னை-2.

### ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

எண் 70358/பிபிஜ/71,
நாள் 28—7—1971.

இந்த நிறுவனத்தின் ஒரு யூனிட் ஆன டான்சி லெதர் வொர்க்ஸ், பல்லாவரம், சென்னை-43க்குத் தேவைப்படும் காக்கி கான்வாஸ் (ஆலிவ் பச்சை) சப்ளை செய்வதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

23—8—1971 பிற்பகல் 2—00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் பிற்பகல் 3—00 மணிக்கு அவை திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை இந்த நிறுவனத்தின் துணை மேலாளர் (கொள் முதல்) அவர்களிடமிருந்து அலுவலக நேரத்தில், விற்பனை வரி உள்பட ரூ. 5.25 ரொக்கமாகச் செலுத்தி அல்லது இந்த நிறுவனத்தின் சீனியர் அக்கவுண்டன்ட் அலுவலருக்குப் பண அஞ்சல் மூலம் செலுத்தி (இத் தொகை திருப்பித் தரப்படக் கூடியதல்ல) பெற்றுக் கொள்ளலாம்.

நிர்வாக இயக்குநர்.

## வேலை வாய்ப்பு

### தமிழ் நாடு அரசு.

### தமிழ் நாடு கொதிகலன் பணியாளர் தேர்வு.

1971-ஆம் ஆண்டு செப்டம்பரில் சென்னையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கொதிகலன் பணியாளர் (பாய்லர் அட்டண்டன்ட்) தேர்வுக்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. தேர்வு நடக்கும் இடம், தேர்வு நாள் பற்றிய விவரம் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்பெறும்.

இதற்குரிய மனு வடிவங்களையும் இதர விவரக் குறிப்புகளையும் பெற 9"×4½" அளவுள்ள 35 காசு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரை உள்ளே வைத்துக் கடிதம் எழுதிப் பெறலாம். பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள் 15-9-1971-க்குள் கிடைக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காத மனுக்களும், குறிப்பிட்ட முறையில் இல்லாத மனுக்களும் நிராகரிக்கப்படும். கொதிகலன் தொழிலில் கோரப்படும் செயல் முறை அனுபவமுடையவர்கள் மட்டுமே மனுச் செய்க.

என். பி. ராமரெட்டி,

நீராவிக் கொதிகலன் தலைமை ஆய்வாளர், தமிழ் நாடு கொதிகலன் பணியாளர் தேர்வு நடத்தும் குழுத் தலைவர், ஜம்மி பில்டிங்ஸ், மயிலாப்பூர், சென்னை-4.

## ஏலம்

### தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு

மற்றும் பல ஜாதிகள்.

இடம் : அரசாங்க தடிமண்டி, நாகர்கோவில்.

தேதியும் நேரமும்: 27, 28—8—71 முற்பகல் 9·00.

அளவு : ஏறத்தாழ 800 கன மீட்டர்.

மேற்கொண்டு விபரங்களுக்கு நாகர்கோவிலிலுள்ள மண்டிச்சிறக அலுவலருக்கு எழுதவும்.

எஸ். கொண்டாஸ்
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென்பிரிவு





## டெண்டர்

### தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

### ஒப்பந்த விவர அறிக்கை

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும் அன்னாரது ஆணைப்படியும், திருநெல்வேலி வட்டம், நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 3—9—1971 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி வரையில் (அன்னாரது அலுவலகக் கடிகாரப்படி) இலக்கம் 18. திருச்செந்தூர் சாலை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி—2-ல் உள்ள அன்னாருடைய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1. தொண்டி சுந்தரபாண்டியன் பட்டிணம் சாலை கி.மீ. 14.8-ல் பாலம் கட்டுதல். | 9,400 |
| 2. தொண்டி சுந்தரபாண்டியன் பட்டிணம் சாலை கி.மீ. 3.2-ல் பாலம் கட்டுதல். | 9,095 |

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள், பத்திரங்கள், நமூனக்கள் முதலியன கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித்துறை, சிவகங்கை அலுவலகத்தில் வேலை ஒன்றுக்கு ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும் விற்பனை வரி நீங்கலாக) விண்ணப்பத்துடன் செலுத்தி 19—8—1971-ஆம் தேதியிலிருந்து 1—9—1971-ம் தேதி முடிய (இரு தினங்கள் உட்பட) அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

ஒப்பந்தங்களுக்கான முன்வைப்புத் தொகை சிவகங்கை கோட்டப் பொறியாளரின் பெயரில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின் கீழ் அன்னாரது அதிகார எல்கைக்கு உட்பட்ட ஏதாவதொரு அரசினர் கருவூலத்தில் கட்டி அதற்கான செல்லுச் சீட்டுடன் ஒப்பந்தத்தை அனுப்ப வேண்டும்.

பூ. சு. சதாசிவசாமி.

18, திருச்செந்தூர் ரோடு, பாளையங்கோட்டை,

மேற்பார்வைப் பொறியாளர், நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணி, திருநெல்வேலி வட்டம்.

## இடமாற்ற அறிவிப்பு.

தமிழ் நாடு அரசு சிறு சேமிப்புத் துறை, சென்னை-9 கோட்டையிலிருந்து கீழ்க்கண்ட இடத்திற்கு 26—7—1971 முதல் மாற்றப்பட்டிருக்கிறது.

34, அண்ணா சாலை (மவுண்ட் ரோடு)
(கலைக் கல்லூரி எதிர்புறம்),
சென்னை-2.

புதிய தொலை பேசி எண் : 812223

ரா. குழந்தைவேலு, ஐ.ஏ.எஸ்.
இயக்குநர்.

## ஏல விளம்பரம்.

ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையைச் சேர்ந்த கிழக்கு மற்றும் மேற்குப் பகுதித் தோட்டங்களில் உள்ள கீழ்க்கண்ட மரங்களிலிருந்து பலன்களைச் சேகரித்துக் கொள்ளும் உரிமையை ஒரத்தநாடு மாவட்டக் கால் நடைப் பண்ணைக் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலகத்தில் 26—8—1971 காலை 11 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | மா மரங்கள் | 847 |
| 2 | புளிய மரங்கள் | 233 |
| 3 | இலுப்பை மரங்கள் | 479 |
| 4 | விளா மரங்கள் | 22 |
| 5 | முந்திரி மரங்கள் | 43 |
| 6 | நெல்லி மரங்கள் | 32 |
| 7 | கொய்யா மரங்கள் | 17 |
| 8 | தென்னை மரங்கள் | 377 |
| 9 | பலா மரங்கள் | 41 |
| 10 | பனை மரங்கள் | 1,549 |
| 11 | இலவம் பஞ்சு | 29 |

ஏலம் பற்றிய நிபந்தனைகள் மற்றும் விதிகளை ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணைக் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். கே. காளிமுத்து,
கண்காணிப்பாளர்,
மாவட்ட கால்நடைப் பண்ணை
ஒரத்தநாடு.

## டெண்டர்கள்

### நெடுஞ்சாலே கிராமப் பொறியியல் பணித்துறை

### தமிழ் நாடு

### ஒப்பந்த அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலேகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் டெண்டர்கள் மேற்பார்வை பொறியாளர் (நெடுஞ்சாலே கிராமப் பொறியியல் பணித்துறை), திருச்சிராப்பள்ளி, அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 26—8—1971 (வியாழன்) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ் நாடு கவர்னருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த டெண்டர்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலேயின் பெயர். | டேவணித் தொகை டெபாசிட் | டெண்டர் ஷெட்யூல் கிடைக்கும் விலாசம், |
|---|---|---|---|
| | | ரூ, | |
| 1 | கும்பகோணம் நகரசபை எல்லேக்குள் கும்பகோணம்—நீடாமங்கலம் சாலேயில் மைல் 0/7-ல் ஒரு மேம் பாலம் கட்டுதல். | 31,000 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப) தஞ்சாவூர். |
| 2 | முத்துப்பேட்டை—மீமிசல் சாலேயில் கி.மீ. 58/2 (மைல் 36/3-ல்) ஒரு பாலம் கட்டுதல். | 7,350 | ஷை |
| 3 | முத்துப்பேட்டை—மீமிசல் சாலேயில் கி.மீ. 65/8 (மைல் 41/1-ல்) ஒரு பாலம் கட்டுதல். | 5,500 | ஷை |
| 4 | பட்டுக்கோட்டை ஒன்றியம் பலத்தலே கிராமசாலேயில் நரையாற்றின் குறுக்கே மைல் 0/8-ல் ஒரு தரைப் பாலம் கட்டுதல். | 3,000 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனே வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப்பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலே—கிராமப் பொறியியல் பணித்துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 11—8—1971 முதல் 25—8—1971 வரையிலான வேலே நாட்களில் அலுவல் நேரங்களில் டெண்டர் நிபந்தனே விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெடியூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலே—கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லேக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும், "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலேப்பில் செலுத்தியதற்கான சலானே டெண்டருடன் இணேத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ் நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும், டிமாண்ட் டிராப்ட்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் டேவணித் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பாங்கு காரண்டிகளேச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதலேப் பெற்று டெண்டருடன் இணேத்து அனுப்பப்படவேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத டெண்டர்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**அ. தேவப்பிரியம்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப)

## ஏலம்

### தமிழ் நாடு அரசு வேளாண்மைத் துறை
### ஏல அறிக்கை.

1945 மாடல் ஒரு போர்டு ஜீப் (எம்.டி.யு. 2512) மதுரை 10, எல்லீஸ் நகர், மாவட்ட வேளாண்மை அலுவலர் அலுவலகத்தில் 25—8—1971 முற்பகல் 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மேற்கண்ட இடத்தில் எந்த வேலே நாளிலும் அலுவல் நேரத்தில் வண்டியைப் பார்வையிடலாம்.

அரசு நலன் கருதி ஏலத்தை ஒத்தி வைக்கவோ ரத்து செய்யவோ வேளாண்மைத் துறைக்குப் பூரண உரிமை உண்டு.

ஏல நிபந்தனேகள் குறித்து மேல் விவரங்களே மாவட்ட வேளாண்மை அலுவலர், மதுரை-10, அவர்களிடமிருந்து பெறலாம்.

**வேளாண்மைத் துறை இயக்குந**

### தமிழ்நாடு அரசு
### ஒப்பந்த விவர அறிக்கை
### நெடுஞ்சாலே கிராமப் பொறியியல் பணித்துறை
### திருநெல்வேலி வட்டம்

தமிழ் நாடு அரசு ஆளுநர் சார்பிலும் அன்னரது ஆணேப்படியும் திருநெல்வேலி வட்டம் நெடுஞ்சாலே கிராமப் பொறியியல் பணித்துறை, மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலேகளுக்கு அரக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 22—9—1971 புதன்கிழமை பிற்பகல் 3 மணி வரையில் (அன்னரது அலுவலகக் கடிகாரப்படி) இலக்கம் 18, திருச்செந்தூர் சாலே, பாளேயங்கோட்டை, திருநெல்வேலி-2-ல் உள்ள அன்னருடைய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலே 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

| | வேலேயின் பெயர். | முன்வைப்புத் தொகை. |
|---|---|---|
| | | ரூ: |
| 1 | தொண்டி சுந்தரபாண்டியன் பட்டினம் சாலே கி.மீ. 60 (மைல் 3/6)ல் பாலம் கட்டுதல். | 12,250 |
| 2 | தொண்டி சுந்தரபாண்டியன் பட்டினம் சாலே கி.மீ. 13·8 (மைல் 8/4·5)-ல் பாலம் கட்டுதல். | 14,850 |
| 3 | தொண்டி சுந்தரபாண்டியன் பட்டினம் சாலே கி.மீ. 1·8 (மைல் 1/1)ல் பாலம் கட்டுதல். | 8,080 |
| 4 | தொண்டி சுந்தரபாண்டியன் பட்டினம் சாலே கி.மீ. 6·6 (மைல் 4/1)-ல் பாலம் கட்டுதல். | 9,075 |

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனேகள், பத்திரங்கள், நமுனைக்கள் முதலியன கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலே கிராமப் பொறியியல் பணித்துறை, சிவகங்கை அலுவலகத்தில் வேலே ஒன்றுக்கு ரூபாய், 20 (ரூபாய் இருபதுமட்டும் விற்பனே வரி நீங்கலாக) விண்ணப்பத்துடன் செலுத்தி 13—9—1971-ம் தேதியிலிருந்து 20—9—1971 தேதி முடிய (இரு தினங்கள் உட்பட) அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

ஒப்பந்தங்களுக்கான முன்வைப்புத் தொகை சிவகங்கை கோட்டப் பொறியாளரின் பெயரில் ''ரெவின்யூ டெபாஸிட்' என்ற தலேப்பின்கீழ் அன்னரது அதிகார எல்லைக்கு உட்பட ஏதாவதொரு அரசினர் கருவூலத்தில் கட்டி அதற்கான சீட்டுடன் ஒப்பந்தத்தை அனுப்ப வேண்டும்.

**பூ. கு. சதாசிவசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
நெடுஞ்சாலே கிராமப்
பொறியியல் பணித்துறை
திருநெல்வேலி வட்டம்

18, திருச்செந்தூர் சாலே,
பாளேயங்கோட்டை.

16—8—10

### தமிழ்நாடு அரசு
### பொதுப்பணித் துறை

319

**ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 31**
**உரிய நாள் 30–8–1971**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் கீழே கையொப்பமிட்டிருப்பவரால், அடியில் குறிப்பிடப்பட்டுள்ள வேலேகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30—8—1971 பிற்பகல் 1 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

பாளேயங்கோட்டை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி காம்பவுண்டில் பல்வேறு திறனுள்ள நான்கு கேஸ் ஹோல்டர்கள் பழுது பார்த்தல்.

ஒப்பந்தப்புள்ளி வரையறைகள், நிபந்தனேகள் ஆகியவைகளேக் கீழ்க்கண்டவருக்கு மனுச் செய்து இலவசமாகப் பெறலாம்.

**எஸ். சச்சிதானந்தம்,**
பொது மேற்பார்வையாளர்,
பொதுப்பணி ஒர்க் ஷாப்ஸ் &
ஸ்டோர்ஸ், சென்னே-1.

## டெண்டர்

### தமிழ்நாடு அரசு
### ஒப்பந்தப் புள்ளி விவரம்

**ந. க. பி. 3. 7976/71**

சலவை மற்றும் முடி திருத்தும் கருவிகள் 'சப்ளே' செய்யக் கீழே கையொப்பமிட்டவரால் ஒப்பந்தப் புள்ளிகள் 25—8—71 தேதி மாலே 3 மணிக்குள் சீலிடப்பட்ட உறைகளில் வரவேற்கப்படுகின்றன. தேவைப்படும் கருவிகள் மாவட்டத் தலேநகரிலுள்ள அந்தந்த மாவட்ட நல அலுவலர்களுக்கு நேரடியாக ரயில் மூலம் கம்பெனியார் செலவில் அனுப்பப்படவேண்டும்.

கருவிகளேப்பற்றிய விவரங்களே சென்னே சேப்பாக்கம் பிற்பட்டோர் நல அலுவலகத்திலிருந்து ஏதாவது ஒரு வேலே நாளில் பெற்றுக்கொள்ளலாம்.

**தி. பா. பாரதி,**
இயக்குநர்,
பிற்பட்டோர் நலத் துறை.

எழிலகம்,
சென்னே-5.

## தமிழ்நாடு நீர் வழங்கு வடிகால் வாரியம்

### குறுகிய சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

பின்கண்ட பொருள்களை வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் சர்க்கிள், மதுரை-2 அவர்களால், எண் 17, சர்.பி.டி. ராஜன் சாலை, நரிமேடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 28—8—1971 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| ஒப்பந்த வடிவம். (1) | வேலை விவரம். (2) | கட்டுத்தொகை (இ.எம்.டி.) (3) | வேலையை முடிக்க வேண்டிய காலம். (4) | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. (5) |
|---|---|---|---|---|
| மொத்தத் தொகை. | கோவில்பட்டி நீர் வழங்கும் திட்டம்—ஹியூம்-ஸ்டீல் ஸ்பெஷல் சப்ளை, டெலிவரி. | ரூ.2,500 | 4 மாதங்கள். | ரூபாய் 10·40 |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை ' 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் ' என்ற முகவரியில் உள்ள ' நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் (நிர்மாணம்) கோட்டம் ' அவர்களது அலுவலகத்தில், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை ரொக்கமாகக் கட்டியோ அல்லது மணியார்டர் மூலம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத் தொகையை நிர்வாகப் பொறியாளர் (பொ.சு.பொ.) நிர்மாணக் கோட்டம், கோவில்பட்டி அவர்களது கணக்கில் ஷெட்டியூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ அல்லது கருவூல சலானாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். அல்லது முழுத் தொகைக்கும் ஏதாவது ஒரு தேசிய உடமையாக்கப்பட்ட வங்கியின் காரண்டி வகையிலும் ஏற்றுக் கொள்ளப்படும். எந்தக் காரணத்தைக் கொண்டும் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

கே. கோவிந்தமேனன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு.பொ.)

17, சர். பி.டி. ராஜன் சாலை,
மதுரை-2.
நாள்: 26—7—1971.

---

## குடிசைப்பகுதி மாற்று வாரியம்,

### கோட்டம்-6.

### டெண்டர் மறு அறிக்கை.

இடம் : லாக் நகர்—மாடிகள் உள்ள வீடுகள் கட்டும் வேலைக்கு முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் 26—8—1971 அன்று காலை 11-00-க்குள் வரவேற்கப்படுகின்றன.

| பிரிவு எண். (1) | வேலையின் பெயர். (2) | கட்டிடம் எண். (3) | குடியிருப்புகளின் எண்ணிக்கை. (4) | வேலையின் குத்து மதிப்பீடு. ரூ. (5) | டெபாசிட் தொகை. ரூ. (6) | டெண்டர் விவரங்களின் விலை. ரூ. (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. | மாடிகள் உள்ள வீடுகள் கட்டும் வேலை டீ. டி. நெ. 7/71. 24-ல் 1 | 1 | 24 | 1,25,000 | 1,875 | 15·00 |
| 2. | ,, ,, | 2 | ,, | 1,25,000 | 1,875 | 15·00 |
| 3. | ,, ,, | 3 | ,, | 1,25,000 | 1,875 | 15·00 |
| 4. | ,, ,, | 4 | ,, | 1,25,000 | 1,875 | 15·00 |

அதே நாளில் 26—8—1971 11-05 மணிக்கு டெண்டர்கள் பிரிக்கப்படும். மேற்கொண்டு விவரங்களும் டெண்டர் நகல்களும் மேற்படி அலுவலகத்தில் 19—8—1971 தேதியிலிருந்து காலை 10 மணி முதல் 2 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் விலைக்குக் கிடைக்கும். நிர்வாகப் பொறியாளர் டெண்டர்களை ஒத்துக்கொள்ளவோ, நிராகரிக்கவோ உரிமை உள்ளவர்.

ஜே. பிரேமானந்தராவ்,
நிர்வாகப் பொறியாளர்,
குடிசைப்பகுதி மாற்றுவாரியம்,
கோட்டம்-6, பட்டினப்பாக்கம்,
சென்னை-28.

---

## தமிழ்நாடு குடிநீர்வழங்கு வடிகால் வாரியம்.

### குறுகிய சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

கீழ்க்கண்டவைகளைச் சப்ளை செய்வதற்காக, சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொது சுகாதாரம் இஞ்சினீயரிங் சர்க்கிள், மதுரை-2 அவர்களால் எண் 17, சர்.பி.டி. ராஜன் சாலை, நரிமேடு, மதுரை-2ல் அவரது அலுவலகத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15-9-1971 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| ஒப்பந்த வடிவம். 1 | வேலை விவரம். 2 | கட்டுத்தொகை. 3 | வேலையை முடிக்க வேண்டிய காலம். 4 | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை. 5 |
|---|---|---|---|---|
| | | ரூ. | | ரூ. |
| மொத்தத் தொகை. | கோயில் பட்டி, நீ.வ.தி. காரைக்குடி நீ.வ.தி. நீர் சப்ளை மெயின்களில் பயன்படுத்துவதற்காகப் பல்வேறு அளவுகளில் சி.ஐ.-ல் தூயில் வால்வுகள் சப்ளை டெலிவரி. | 3,700 | ஆறு மாதங்கள். | 10·35 |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை, நிர்வாக இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீயரிங் டிவிஷன், 48, கல்லூரி சாலை, சுப்பிரமணியபுரம், காரைக்குடி அலுவலகத்தில் பெறலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்குரிய தொகையை ரொக்கமாகவோ மணியார்டரிலோ செலுத்தி 10-9-1971 வரை பெறலாம்.

கட்டுத்தொகையை ஷெடியூல் பாங்கி ஒன்றின் டிமாண்டு டிராப்ட் வடிவிலோ அல்லது கருவூல சலான் வடிவிலோ, நிர்வாக இஞ்சினீயர், பொதுச்சுகாதார இஞ்சினீயரிங் டிவிஷன் 48, கஸ்தூரி சாலை, சுப்பிரமணியபுரம், காரைக்குடி அவர்களின் கணக்கில் செலுத்தவேண்டும். தேச உடமையாக்கப்பட்ட வங்கி ஒன்றில் இத்தொகை முழுதுக்குமான பாங்க் காரண்டியும் கட்டுத்தொகைக்காக ஏற்கப்படும். கட்டுத்தொகைக்காக செக்குகள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

கே. கோவிந்த மேனன்,
மேற்பார்வைப் பொறியாளர், (பொ.சு.இ.).

17, சர். பி. டி. ராஜன் சாலை,
மதுரை-2,
நாள் : 2-8-1971.

---

## தர்மபுரி மாவட்ட ஆட்சியரின் விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால் தர்மபுரி மாவட்டத்திலுள்ள அரசினர் அலுவலகங்களில் 1—4—1971 முதல் 31—3—1972 வரை தேங்கும் கழிவுக் காகிதங்களை விலைக்கு எடுத்துக் கொள்வதற்கான டெண்டர் நோட்டீஸ், தர்மபுரி மாவட்ட 1971-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்கான பிரத்யேக கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். மேற்படி டெண்டர் நோட்டீஸில் கண்ட நிபந்தனைக்குட்பட்டு முத்திரையிட்ட (sealed) டெண்டர் கொடுக்க விரும்புகிறவர்கள் 31—8—1971-ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு டெண்டர்கள் வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும். டெண்டர்கள் அன்றே மாலை 4 மணிக்குப் பிரித்துப் பரிசீலிக்கப்படும். மேற்கொண்டு தகவல்தேவைப்படுகிறவர்கள் தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம். 31—8—1971-ஆம் தேதி மாலை 3 மணிக்குப் பிறகு வரும் டெண்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ரா. பத்மநாபன்,
மாவட்ட ஆட்சியர், தர்மபுரி.

---

## ஏல அறிக்கை.

செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி பேட்டை உப தாலுக்கா உல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் குருவாயல் கிராம ஏரிக்கரையிலிருக்கும் சுமார் 1,000 டன் எடையுள்ள கருவேல மரக்கிளை மேற்படி கிராமத்தில் திருவள்ளூர் உதவி ஆட்சித் தலைவர் அவர்களால் 27-8-1971 காலை 11 மணிக்கு குருவாயல் கிராமத்தில் ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகளையும் மற்ற தகவல்களையும் திருவள்ளூர் உதவி ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து அலுவலக நாட்களில் நேரிடையாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்

ஏ. கே. ரஸ்தோகி,
உதவி ஆட்சித் தலைவர்
திருவள்ளூர்.

## தமிழ்நாடு அரசு

## தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அகம் நிர்மாணப் பகுதி,

**கிண்டி, சென்னை-25**

### சிட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

வேலையின் பெயர்—மதுரைப் பல்கலைக் கழகச் சுற்றுப்புறங்களில் தெரு விளக்கு அமைத்தல்—தேனி சாலை.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைகளுக்காக, தொழில் நுட்பக் கோட்டத்தில் வேலைகளைச் செய்வதற்காகப் பதிவு செய்துகொண்டுள்ள 'ஏ' வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்கூறிய அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் 30-8-1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் இதே நாள் மாலை 3-30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்த வடிவம் .. | 'சி' பாரம். |
| 2. | கட்டுத் தொகை .. | ரூபாய் 2,650 (ரூபாய் இரண்டு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்). |
| 3. | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. | ரூபாய் 15.00 (விற்பனை வரி 3 சதவீதம்). |
| 4. | வேலை முடிக்க வேண்டிய காலம். | மூன்று மாதங்கள். |
| 5. | ஒப்பந்தப் பத்திரங்களை மேற்கூறிய அலுவலகத்திலிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளும் தேதி. | 16-8-1971 முதல் 28-8-1971 வரை. |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பி அளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "P. W. Remittances III Other Remittances" என்ற தலைப்பிட்டு நிர்வாகப் பொறியாளர், பல்கலைக்கழகக் கட்டடக் கோட்டம், மதுரை" அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை தனிச்சலானில் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XII விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வரவினம்—பொது விற்பனை வரி" எனத் தலைப்பிட்டுச் செலுத்தப்பட வேண்டும். சலான்களைக் கொடுத்த பின்பு தான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்குநராக நிர்மாணப் பகுதியில் உரிய பிரிவில் பதிவு செய்துகொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது.

கட்டுத் தொகை சலான் வடிவத்திலும், ஷெட்யூல்டு வங்கிகளின் 'கால் டெப்பாசிட்' வடிவிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அரசு புரோ நோட்டுகள், மாநில மின்சார வாரியம் பாண்டுகள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள், ஆகிய வைகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்த வேலை, வேறு எந்தக் கோட்டத்திற்கும் மாற்றப்பட்டால், அந்த வேலையை முடிக்கும் அதிகார வரம்பு பெற்ற வரும் கோட்டத்தின் பொறுப்பேற்றுள்ளவருமான நிர்வாகப் பொறியாளரே, அரசாங்கத்தின் சார்பாக எல்லா அதிகாரங்களையும், சிறப்பு உரிமைகளையும் பயன்படுத்தும் தகுதி படைத்தவராவர்.

எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எந்தவித காரணமும் கூறாமல் தள்ளுபடி செய்யத் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அவர்கள் உரிமை பெற்றுள்ளார்.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,**
சென்னை.

---

## தமிழ்நாடு வனத்துறை

### டெண்டர்

தமிழ்நாடு ஆளுநருக்காக நீலகிரி மாவட்ட வன அலுவலரால் கீழ்க்கண்ட சாலைகளுக்கு முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் 1-9-1971-ம் தேதி மாலை 3 மணி வரை நீலகிரி மாவட்ட வன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். டெண்டர்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும் | முன்வைப்புத் தொகை மதிப்பீட்டுத் தொகையில் 3 சத வீதம். | ஏலப் பத்திரத்தின் விலை. |
|---|---|---|
| 1. பார்சன்ஸ்வேலி சரகம், ஊட்டி, மைசூர் சாலையிலிருந்து கவர்னர் சோலைக்குச் செல்லும் சாலைக்கு சோலிங் கற்கள் பாவி சரளைக் கற்கள் போடுதல். | ரூ. 2,586 | ரூ. 3.11 |

1. ஏல விதிகள், பத்திரங்கள், பட்டியல்கள், வரைபடங்கள் முதலிய நீலகிரி மாவட்ட வன அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் அரசாங்க விடுமுறை தினங்கள் நீங்கலாக மற்ற எல்லா நாட்களிலும் அலுவலக நேரம் காலை 10-30 மணி முதல் மாலை 5 மணி வரை அவற்றிற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

2. ஏல விதிகள், பத்திரங்கள் மற்றும் பட்டியல்கள் விற்பனை 31-8-1971-ம் நாள் மாலை 3-00 மணிக்குப் பின்னர் நிறுத்தப்பட்டுவிடும்.

**எஸ். சுப்பராயலு நாயுடு,**
மாவட்ட வன அலுவலர், உதகை.

---

## தமிழ்நாடு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியம்.

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

பொருள்.—525 எம். எம். (21") 450 எம்.எம். (18") விட்டம். ஆர்.சி.சி. 'பி-2' கிளாஸ் பைப்புகள், வேண்டுமான ஆர்.சி.சி. காலர்களுடன் சப்ளை, டெலிவரி குறித்து.

தமிழ் நாடு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் மேற்கண்ட ஆர்.சி.சி. பைப்புகள், காலர்கள் சப்ளைக்காக, ஆர்.சி.சி. பிரஷர் பம்பு உற்பத்தியாளர்களிடமிருந்தும் முக்கிய சப்ளையாளர்களிடமிருந்தும், சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொ. சு. இஞ்சினீயரிங் சர்க்கிள், 52, கெங்கு ரெட்டி சாலை, எழும்பூர், சென்னை-8 அவர்களால் துறைக்குரிய முறையான வடிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20–8–1971 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்கு சூப்பிரண்டிங் இஞ்சினீயர் (பொ.சு.இ.) அவர்களாலோ அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற வேறு அலுவலர்களாலோ அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை.—ரூ. 6,000.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.—ரூ. 10·40 (பத்து ரூபாய் நாற்பது காசுகள் மட்டும்—விற்பனைவரி உள்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, நிர்வாக இஞ்சினீயர், பொ.சு. இஞ்சினீயரிங் டிவிஷன் வாணியம்பாடி அவர்களிடமிருந்து பெறலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான கட்டணத்தை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ செலுத்தி ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கேட்டுக் கடிதம் எழுதி அவற்றைப் பெறலாம். 2–8–1971-லிருந்து அலுவல் நாட்களில் அவை கிடைக்கும்.

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குத் தரப்பட்ட தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

7. எத்தகைய காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க அல்லது ரத்து செய்ய சூப்பிரண்டிங் இஞ்சினீயர் (பொ.சு.இ.) சென்னை அவர்களுக்கு உரிமை உண்டு.

8. சப்ளை காண்ட்ராக்டுகளை ஒன்றுக்கு மேற்பட்ட டெண்டர்தாரர்களுக்கு வழங்க சூப்பிரண்டிங் இஞ்சினீயர் (பொ.சு.இ.), சென்னை அவர்களுக்கு உரிமை உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்**
(பொ.சு.இ) சர்க்கிள் அலுவலகம், எழும்பூர்,
சென்னை-8.

நாள்: 27–7–1971

---

## தொழில் வணிகத் துறை சென்னை.

### பயிற்சி விளம்பரம்.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பொது நோக்கு பொறியியல் தொழிற்சாலையில் 18 மாத காலப் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் (Denotified Tribes) சேர்ந்தவர்களிடமிருந்தும் அட்டவணையில் கண்ட வகுப்பைச் (Scheduled Castes) சேர்ந்தவர்களிடமிருந்தும் வரவேற்கப்படுகின்றன. அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 24 மாணவர்களும் அட்டவணையில் கண்ட வகுப்பைச் சேர்ந்த 6 மாணவர்களும் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வேண்டிய மாணவர்கள் டீ வகுப்பிலிருந்து முன்வரவில்லையென்றால் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆதலின் இப்பயிற்சியில் சேர விரும்பும் மேற்கண்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பங்களை 10—9—1971-ந் தேதிக்குள்ளாகக் கண்காணிப்பாளர், பொது நோக்குப் பொறியியல் தொழிற்சாலை, முதுகுளத்தூர் என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பதாரர்கள் குறைந்த அளவு எட்டாவது வகுப்பு அல்லது மூன்றும் படிவம் படித்திருப்பவர்களாகவும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 30 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 (ரூபாய் நாற்பத்தி ஐந்து) வீதம் உதவித் தொகை அளிக்கப்படும். நேர்முகத் தேர்வுக்கு வரும் மாணவர்களுக்குச் செலவுத் தொகை எதுவும் கொடுக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் சாதாரண வெள்ளைக் காகிதத்தில் விண்ணப்பதாரரின் பெயர், வயது, தகப்பனார் பெயர், வகுப்பு, கல்வித் தகுதி, சொந்த ஊர், தற்போதைய விலாசம் முதலியன தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பயிற்சிக் காலம் முழுவதும் தொடர்ந்து பயிற்சியில் இருப்பேன் என்ற பிணைமொழி (உறுதி) எழுதித் தரவேண்டும்.

**இயக்குநர்,**
தொழில் வணிகத் துறை,
சென்னை-5

---

## ஏல விற்பனை

**எண் 44677/டி 2/71**

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள் 1971-ம் வருடம், ஆகஸ்டு மாதம், 28-ம் தேதி, சனிக்கிழமை காலை 10-30 மணியளவில், என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலை 26-8-1971 வியாழக்கிழமை அன்றும், 27-8-1971 வெள்ளிக்கிழமை அன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**காவல் ஆணையாளர்**
காவல் ஆணையாளர் அலுவலகம்,
எழும்பூர், சென்னை-8.

நாள்: 6—8—1971.

# தமிழ்நாடு அரசு

## தொழில்—வணிகத்துறை

தமிழ்நாடு ஆளுநராலும் அவரது சார்பிலும், தொழில் துறை அல்லது பிற துறைகளின் நிர்மாணப் பகுதியின் உரிய பிரிவைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் தொழில்-வணிகத் துறையின் நிர்மாணப் பிரிவு மேற்பார்வைப் பொறியாளரால் கீழ்க்கண்ட வேலைகளுக்காக அடியில் குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| எண். | வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | டெண்டர் பத்திரத்தின் விலை. | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம். | பத்திரம் கிடைக்கும் தேதி. | டெண்டர் பெற கடைசி தேதி. |
|---|---|---|---|---|---|---|
| 1. | அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தளமுள்ள கிட்டங்கி (terraced godown) 3 கட்டுதல். | ரூ. 8,900 | ரூ. 10·40 | 8 மாதம் | 18-8-71 | 27-8-71 |
| 2. | அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ஏ. சி. சீட் கூரையுள்ள கிட்டங்கி 2 கட்டுதல். | ரூ. 2,600 | ரூ. 10·40 | [illegible] மாதம் | 18-8-71 | 25-8-71 |

(1) ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

(2) டெண்டர் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் (நிர்மாணப் பிரிவு) அலுவலகம், அம்பத்தூர் கோட்டம் 35/2, உட்ஸ்ரோடு, சென்னை-2 என்ற முகவரியில் மேற்குறிப்பிட்ட தேதிகளில் அலுவலக நேரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

(3) டெண்டர் பத்திரத்தின் விலையான ரூ. 10·40 இதற்கான விற்பனை வரி சேர்த்து (எந்தச் சூழ்நிலையிலும் இத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது) ரிசர்வ் பாங்க் கஜானாவில் நிர்வாகப்பொறியாளர் (நிர்மாணப் பிரிவு) [Executive Engineer (Construction)] அம்பத்தூர் கோட்டம், 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 கணக்கில் "XXIX Industries—Other Receipts" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

(4) கட்டுத் தொகை, செடியூல்ட் பாங்குகளின் செலான் வடிவிலும் கால் டெபாசிட், டிமாண்ட் டிராப்டாகவும் ஏற்றுக்கொள்ளப்படும். நிர்வாகப் பொறியாளர் (நிர்மாணப் பிரிவு) அம்பத்தூர் கோட்டம் 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 பெயரில் கட்டுத் தொகைக்காகப் பெறப்பட்ட டிமாண்ட் டிராப்ட்கள் மாத்திரம் ஒப்புக்கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டி பத்திரங்கள், தமிழ்நாடு மின் வாரியப்பத்திரங்கள் (பாண்ட்ஸ்) ஆகியவை மார்க்கெட் மதிப்பில் 5 சத விகிதம் குறைத்தே ஒப்புக்கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட தபாலாபீசின் பார்வையுடன் ஒப்புக்கொள்ளப்படும். எந்த தேசிய பாங்கின் காரண்டியும் ஒப்புக்கொள்ளப்படும். வேறு எந்த வகையில் பணம் செலுத்துவதும் ஒப்புக்கொள்ளப் படமாட்டாது.

(5) டெண்டர்தாரர்கள் பெரிய அளவுள்ள கட்டட நிர்மாணப் பணிகளில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

பி. கே. விஸ்வநாதன்,
மேற்பார்வைப் பொறியாளர் (பொறுப்பு)
நிர்மாணப் பிரிவு

சென்னை-2

---

## ஏல விற்பனை

'ஜீப்' முதலிய மோட்டார் வண்டிகளின் பழைய டயர்கள், டியூப்கள், பாட்ரிகள், மற்றும் உபயோகமிழந்த பொருள்கள் முதலியன தனித் தனியாகவும் மொத்தமாகவும் 26-8-1971 காலை 10 மணிக்கு, 50, மெயின் ரோடு, ராயபுரம், சென்னை-13ல் பொது ஏலத்தில் விற்கப்படும். ஏலம் பற்றிய நிபந்தனைகளும், விதிகளும், மண்டலப் போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் நேரிலேயோ, அல்லது தங்கள் முகவரி எழுதப்பட்டு, போதிய அஞ்சல் தலை உள்ள கவரை அஞ்சல் மூலமாக அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

கே. பி. சாரதி,
இயக்குநர், சுகாதாரப் பணிகள்
குடும்ப நலத் திட்டம்,
சென்னை-6.

---

# தமிழ்நாடு நீர்வழங்கு வடிகால் வாரியம்

## சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

எண் 11268—எஸ்டி 2/71,
நாள் 26—7—1971

தமிழ் நாடு நீர் வழங்கு வடிகால் வாரியத்தின் சார்பாகவும் அதற்காகவும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், தமிழ் நாடு நீர் வழங்கு வடிகால் வாரியம், கோயம்புத்தூரில் 25–1, 3-வது தெரு தாதாபாத், கோயம்புத்தூர்-12-ல் உள்ள அவரது அலுவலகத்தில் கீழ்க்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் 25—9—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாளில் மாலை 4 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் முன்னிலையிலாவது அல்லது அவரது அதிகாரம் பெற்ற அதிகாரி முன்னிலையிலாவது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :

1. பள்ளிப்பாளையம் நீர் வழங்கு திட்டம்—முதல் கட்டம்—மேல் நீர் மட்டம் 174—00 மீட்டர்கள் ; அடி நீர் மட்டம் 171–00 மீட்டர்கள் உள்ள 3–75 லட்சம் லிட்டர் தேக்கும் திறனுள்ள உயர்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர் 1-வது பிராந்தியத்திற்காக.

2. பள்ளிப்பாளையம் நீர் வழங்கு திட்டம் முதற் கட்டம் —மேல் நீர்மட்டம் 169–00 மீட்டர் அடி நீர் மட்டம் 165·50 மீட்டர் உள்ள 3 லட்சம் லிட்டர் தேக்கும் திறனுள்ள உயர்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர் 2-வது பிராந்தியத்திற்காக.

2. ஒப்பந்த முறை :மொத்தத் தொகை

3. கட்டுத் தொகை : 1-வது இனத்துக்கு ரூ. 2,825·00. (ரூபாய் இரண்டாயிரத்து எண்ணூற்றிருபத்தைந்து மட்டும்.)

2-வது இனத்துக்கு ரூ.2,250·00 (ரூபாய் இரண்டாயிரத்து இருநூற்றைம்பது மட்டும்.)

4. வேலை முடிக்க வேண்டிய காலம்: ஆறு மாதம் (ஒவ்வொரு வேலைக்கும்).

5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை. ஒவ்வொரு வேலைக்கும்—

ரூ 10·35 (விற்பனை வரியுள்பட.)

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் விற்பனைக்குரிய காலம் : 16-8-1971 முதல் 23-9-1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் பணி வட்டம், 18, சாமியப்பக் கவுண்டர் தெரு, திருநகர் குடியிருப்பு, ஈரோடு-3 அவர்களின் அலுவலகத்தில் உரிய தொகையை ரொக்கமாகவாவது மணியார்டர் மூலமாகவாவது செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத் தொகை

தேசிய உடைமையாக்கப்பட்ட பாங்குகளின், டிமாண்ட் டிராப்ட் மூலமோ அல்லது கருவூலங்களின் சலான் மூலமோ, நிருவாகப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் பணி வட்டம், ஈரோடு அவர்கள் பெயரால் வாங்கியனுப்ப வேண்டும். கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

பொது சுகாதாரப் பொறியியல் பணி வட்ட மேற்பார்வைப் பொறியாளருக்கு எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எந்தக் காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

எஸ். எம். சாகுல் ஹமீது,
மேற்பார்வைப் பொறியாளர்.

கோயமுத்தூர் 26—7—1971

## டெண்டர்

சேலம் மாவட்டத்து அரசினர் மருத்துவ நிலையங்களுக்கு 1-9-1971 முதல் 31-12-1971 வரைக்கும் வேண்டிய மருந்து வகைத் தேவைக்காக முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குரிய இறுதி நாள் 6-9-1971 மாலை 5 மணியாகும். மருந்துகளை சப்ளை செய்ய விரும்புகிறவர்கள் (விற்பனை வரி உட்பட ரூ. 5·15 மெடிகல் 'XXIII மெடிகல் I இயக்குநர், சுகாதாரப் பணிகள் குடும்ப நலத் திட்டங்கள் 'ஜே' மிசலேனியஸ்' என்ற தலைப்பில் தனிச் செலானில் செலுத்தி ஒரு வேண்டுகோளுடன் சூப்பிரண்டெண்டெண்ட்டு, அரசினர் தலைமை மருத்துவ நிலையம், சேலம் அவர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும், நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ளலாம். செலானில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 5.00 தனியாகவும், விற்பனை வரி 0.15 காசுகள் தனியாகவும் காட்டப்படல் வேண்டும். இது பற்றி ஏதேனும் மேலும் செய்திகளுக்கு சூப்பிரண்டெண்டென்டு, அரசினர் தலைமை மருத்துவ நிலையம் சேலம் அவர்களுடன் தொடர்பு கொள்க.

ஒப்பந்தப் புள்ளிகள் கொடுப்போர் ஒப்பந்தப் புள்ளிகள் கொடுத்த பின்பு அது பற்றி எந்தவிதத் தொடர்பும் கொள்ளல் ஆகாது.

வி. செல்வராஜு,
மாவட்ட மருத்துவ அலுவலர்,
சேலம், அண்டு சூப்பிரண்டெண்டெண்ட், அரசினர் தலைமை மருத்துவ நிலையம்,
சேலம்.

தமிழ்நாடு ஆளுநர் ஆணைப்படியும், சார்பிலும்.

---

# தமிழ் நாடு அரசு

## தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அகம்

நிர்மாணப் பகுதி.
கிண்டி, சென்னை-25.

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி ஒத்தி வைப்பு

வேலையின் பெயர்:—

துணைவேந்தர் இல்லம் 1, பேராசிரியர் இல்லம் 1, ரீடர்களுக்காக நான்கு தளமுள்ள கட்டிடம் 1, விரிவுரையாளர்களுக்காக நான்கு தளங்களுடைய கட்டிடம் 1—மதுரை பல்கலைக் கழகத்திற்காகக் கட்டுதல், —மதுரைப் பல்கலைக் கழகம், 8/2, மதுரை-தேனி ரோடு, மதுரை.

மேற்குறிப்பிட்ட வேலைக்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கு 9-8-1971 என இருந்த காலக்கெடு 23-8-1971 பிற்பகல் 3 மணி வரை ஒத்திவைக்கப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 21-8-1971 மாலை 5 மணி வரையிலும் அலுவலகத்தில் விற்கப்படும்.

ஏனைய நிபந்தனைகள் எதிலும் மாற்றமில்லை.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்
சென்னை.

# இன்பத் திருநாள்
# இனிய
# சுதந்திரப் பெருநாள்

உறுதியும் கம்பீரமும் பொருந்திய கட்டட நிர்மாணத்திற்கு

# சங்கர் சிமெண்ட்

SANKAR CEMENT I C

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

176/1, மவுண்ட் ரோட், சென்னை-2


## தமிழ்நாடு
## பொதுப்பணித் துறை
## சீட்டு ஒப்பந்தப் புள்ளி
## அறிக்கை

வேலையின் பெயர்: சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் ஜிம்னேசியம்கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மேற்குறித்த வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர் சென்னை-செங்கல்பட்டு வட்டம் சென்னை-5 அவர்களால் சேப்பாக்கத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் 24—8—71 மாலை 3·00 மணிவரையில் முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அவை, அதே நாளில் மாலை 3·15 மணிக்கு, மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கல்பட்டு வட்டம் சென்னை-5 அவர்களால் அந்த நேரத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்தவகை — மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை—ரூ. 3,600.

3. முடிக்கவேண்டிய காலம்— 3 மாதங்கள்.

4. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை—ரூ. 20 (இருபது மட்டும்) இத்தொகையை ரிசர்வ் பாங்கியிலோ அல்லது கருவூலத்திலோ "P. W. Remittances III O. R." என்று தலைப்பிட்டு நிர்வாகப் பொறியாளர் கட்டிடப் பகுதி வட்டம் II சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

5. விற்பனை வரி ரூ. 0·60 (அறுபது காசு மட்டும்) மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே கருவூலத்தில் அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ XII விற்பனை வரி 'பி' மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம் என்று தலைப்பிட்டுச் செலுத்த வேண்டும்.

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திர விற்பனை :

17-8-1971 லிருந்து 23-8-1971 வரை (அலுவலக நேரங்களில்).

7. ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய நாள் :

24—8—1971.

மேற்கொண்டு தகவல் வேண்டுவோர் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை, செங்கல்பட்டு வட்டம் சேப்பாக்கம், சென்னை—5 அவர்களின் அலுவலகத்தில் அலுவலக வேலை நேரத்தின் போது பெற்றுக் கொள்ளலாம். மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கல்பட்டு வட்டம் அவர்களுக்குக் காரணம் எதுவும் கூறாமலேயே எந்த ஓர் ஒப்பந்தப் புள்ளியையோ எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ நிராகரிக்க உரிமையுண்டு

**மேற்பார்வைப் பொறியாளர்**

சென்னை—செங்கல்பட்டு வட்டம்


## தமிழக அரசு சின்கோனாத் துறை, உதகமண்டலம்.

இத்துறையினரால் தயாரிக்கப்படும் மிக உயர்தரமான பொருட்கள் :

நீலகிரித் தைலம், சிட்ரியோடொராத் தைலம்,

விண்டர்கிரீன் தைலம், கற்பூரத் தைலமும் வில்லைகளும், ஜெரேனியம் தைலம், இஞ்சி எண்ணெய் சத்து முதலியன.

மேலும் விபரங்களுக்கும், விலைப்பட்டியலுக்கும் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்க:

விற்பனை மேலாளர், சின்கோனாத் துறை, உதகமண்டலம்.

(நீலகிரி)

# தமிழ்நாடு அரசு

## பொதுப் பணித்துறை

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

**வேலையின் பெயர்**; சென்னை-10, கீழ்ப்பாக்கம் அரசினர் மனநோய் மருத்துவ மனையில் 'சி' பிளாக் வார்டு கட்டுதல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காகப் பொதுப் பணித்துறையில் இதர அரசினர் துறைகளில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள், சேப்பாக்கம் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 26–8–1971 மாலை 3 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை, செங்கற்பட்டு சர்க்கிள் அவர்களால் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 4,500.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 40, 3 சதவிகித விற்பனை வரி.
4. வேலை முடிக்க வேண்டிய காலம்—ஆறு மாதங்கள்.
5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிளில் அலுவலக நேரத்தில் கிடைக்கக் கூடிய தேதிகள்—18–8–1971 லிருந்து 25–8–1971 வரை.
6. ஒப்பந்தப்புள்ளி தேதி—26–8–1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணத்தை (இத் தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது). கருவூலத்திலோ, இந்திய ரிசர்வ் பாங்கியிலோ "Public Works Department Remittances III Other remittances" என்ற தலைப்பில், நிர்வாக இஞ்சினீயர்/பில்டிங்ஸ் டிவிஷன், II சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தவேண்டும். விற்பனை வரியை அதே சலானில் கருவூலத்திலோ இந்திய ரிசர்வ் பாங்கியிலோ XII Sales Tax b. Receipt under State Sales tax act-general sales tax" என்ற தனிக் கணக்குத் தலைப்பில் செலுத்த வேண்டும். சலான் கட்டிய பிறகே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்டு விவரங்களை சென்னை– செங்கற்பட்டு சர்க்கிள், சூப்பிரண்டிங் இஞ்சினீயர் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
சென்னை செங்கற்பட்டு வட்டம்.

---

# தமிழ்நாடு நீர் வழங்கு வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர்—பட்டுக் கோட்டையில் நாள் அங்காடிக் கட்டிடம்—, மசாலைப் பொருள்கள்; மீன் இறைச்சிக் கடைகள் அங்காடி அலுவலகம்—கிட்டங்கி—தலைவாசலில் கடைகள் கட்டுதல்.

தமிழ்நாடு நீர்வழங்கு வடிகால் வாரியத்தின் சார்பாகவும், வாரியத்திற்காகவும், இவ் வாரியத்தின் முறையான வடிவத்தின் மூலம் இத் துறையில் உரிய பிரிவில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் இது போன்ற நிறுவனங்களில் இவ் வகையில் உள்ளவர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியாளர் வட்டம், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம் அவர்களால் 52, கெங்குரெட்டி ரோடு, எழும்பூர், சென்னை-8 முகவரியிலுள்ள அவரது அலுவலகத்தில் மேற்கண்ட வேலைகளுக்காக 3-9-1971 பிற்பகல் 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியாளர் வட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை, அவர்களால் அந்த நேரத்தில் வந்துள்ள ஒப்பந்தக் காரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 6,040 (ரூபாய் ஆறுயிரத்து நாற்பது மட்டும்). (கருவூல சலான் வடிவிலோ அல்லது ஒப்பந்தப் புள்ளி விதிகளில் கூறப்பட்ட ஏற்கத்தக்க வேறு வகை டிபாசிட் மூலமோ இத் தொகை செலுத்தப்பட வேண்டும்).
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 20.70 (ரூபாய் இருபதும் காசு எழுபது மட்டும்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் பகுதி, த.நீ.வ.வ. வாரியம், தஞ்சாவூர், பி.டபிள்யூ III. ஓ, ஆர் கணக்கிலும் விற்பனை வரியை XII விற்பனை—பல வகை 1—பொது விற்பனை வரி என்ற கணக்கில் தனிச் செலானிலும் செலுத்த வேண்டும்.

4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான கட்டணத்தை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமாகவோ, நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பணி வட்டம், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், 28, ராஜாஜி தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பி விண்ணப்பித்து ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறலாம்.
5. வேலை முடிக்க வேண்டிய காலம் : ஓராண்டு.
6. ஒப்பந்தப் புள்ளிகள் தர உத்தேசிப்பவர்கள் கட்டட வேலையில் குறைந்தது மூன்றாண்டு அனுபவமுடையவர்களாக இருக்க வேண்டும்.

**மேற்பார்வைப் பொறியாளர்**
பொது சுகாதாரப் பொறியியல் வட்டம்,
தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியம்,
சென்னை-8,
நாள் : 28—7—1971.

---

## பயிற்சி

# தமிழ்நாடு அரசு

## வேலை வாய்ப்பு, பயிற்சித்துறை

சென்னை-5.

### அறிவிப்பு.

**வேலைவாய்ப்புச் சட்டத்தின் கீழ் வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சி**

வேலை கற்பவர் சட்டம் 1961-ன் ஆதிக்க வரம்பின் கீழ் இன்சினீயரிங் கெமிக்கல், டெக்ஸ்டைல்ஸ், பிரிண்டிங், கேட்டரிங் ஆகிய 195 வகைத் தொழிற்சாலைகளும், 56 தொழில்களும் வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சிக்காக இதுவரை நியமிக்கப்பட்டுள்ளன. வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வசதியுள்ள நிறுவனங்கள், வேலை கற்பவர் சட்டம், பிரிவு 8 (3)-இன் படி வேலை கற்றுக் கொடுப்பது பற்றி மாநில ஆலோசகர் குறிப்பிடும் எண்ணிக்கையளவில் வேலை கற்பவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிக்க வேண்டும். பயிற்சி பெற வேண்டிய கால அளவு பெரும்பாலான தொழில்களில் மூன்று ஆண்டுகளாக உள்ளது. வேலை கற்றுக் கொள்ளும் பயிற்சிக் காலத்தில், வேலை கற்பவர்களுக்கு வேலை கற்றுக் கொடுக்கும் விதிகளில் குறிப்பிட்டுள்ள குறைந்த அளவுத் தொகைக்குக் குறையாமல் உதவித் தொகை வழங்கப்படும். தொழிற் பயிற்சி நிறுவனங்களிலிருந்து, தேசீயத் தொழில் சான்றிதழ்த் தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்களைப் பொறுத்த வரையில், வேலை கற்றுக்கொள்ளும் பயிற்சிக்காலத்தில் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற கால அளவை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படும். பெரும்பாலான தொழில்களைக் கற்றுக் கொள்வதற்குக் குறைந்த பட்சம் கல்வித் தகுதி மெட்ரிகுலேஷன் தேர்வுக்கு 2 வகுப்புகள் குறைவாக அல்லது அதற்குச் சமமாகத் தேர்வு பெற்றிருக்க வேண்டும்; குறைந்த அளவு வயது 14 ஆக இருக்க வேண்டும்; ஆனல் வயதிற்கு உயர்ந்த பட்ச வரம்பு இல்லை; வேலை கற்றுக் கொடுக்கும் விதி முறைகளில் குறிப்பிட்டுள்ள உடல் தரமும் பெற்றிருக்க வேண்டும்.

அடுத்த பயிற்சிக்கு ஆகஸ்ட்/செப்டம்பர் 1971-ல் சேர்த்துக் கொள்ளப்படும். தேசிய சான்றிதழ் தகுதி பெற்றுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களின் முன்னாள் பயிற்சியாளர்களும் தேவையான தகுதி பெற்றுள்ள மற்றவர்களும், தங்கள் வகைக்கேற்ப, மாவட்ட வேலை வாய்ப்பு தேடித் தரும் அலுவலர் அவர்களையோ அல்லது தொழிற் பயிற்சி நிறுவனங்களின் முதல்வரையோ அணுக வேண்டுமென்று இதன் மூலம் அறிவுரை கூறப்படுகிறது. இவ்வாறு செய்தால் அவர்கள் வேலை காலியுள்ள அல்லது வேலை காலியாகும் நிலையில் உள்ள நிறுவனங்களுக்கு வேலை கற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களை வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சிக்காக அனுப்பி வைக்க ஆவன செய்வார்கள்.

**வேலை வாய்ப்பு, பயிற்சி இயக்குநர்**
மற்றும் வேலை கற்றுக் கொடுப்பது பற்றிய மாநில ஆலோசகர், சென்னை.

---

## டெண்டர்

# தமிழ்நாடு அரசு

## பொதுப் பணித் துறை

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர்—

சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் கான்டீன் கட்டிடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொதுப் பணித்துறை சென்னை-செங்கல்பட்டு, சர்க்கிள் சென்னை-5 அவர்களால் சென்னை-5 சேப்பாக்கத்திலுள்ள அவர்கள் அலுவலகத்தில் 31—8—1971 பிற்பகல் 3 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் சூப்பிரண்டிங் இன்சினீயர், சென்னை-செங்கற்பட்டு சர்க்கிள், பொதுப்பணித்துறை, சென்னை-5 அவர்களால் அதே நாளில் பிற்பகல் 3·15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 3,000.
3. வேலை முடிக்க வேண்டிய காலம்—
   3 மாதங்கள்.
4. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—
   ரூபாய் 20 (ரூபாய் இருபது மட்டும்) கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கியிலோ ("Public Works Remittances III Other Remittances" என்ற தலைப்பில் நிர்வாக இஞ்சினீயர், வடக்கு மாநில டிவிஷன் சேப்பாக்கம்-சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.
5. விற்பனை வரி :
   ரூ. 0·60 (அறுபது காசுகள் மட்டும்) அதே செலானில் குறித்துக் கருவூலத்திலோ இந்திய ரிசர்வ் பாங்கிலோ " XII விற்பனை வரி 'B' மாநில விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் வரவினம் " என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.
6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் அலுவலக நேரத்தில் விற்பனையாகும் தேதி
   24—8—71 முதல்.
7. ஒப்பந்தப் புள்ளித் தேதி—31—8—71.

மேற்கொண்ட விவரங்களை சூப்பிரண்டெண்டிங் இஞ்சினீயர் அலுவலகம், பொதுப் பணித் துறை, சென்னை-செங்கல்பட்டு சர்க்கிள், சேப்பாக்கம், சென்னை-5-ல் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரித்து விட, சூப்பிரண்டிங் இஞ்சினீயர் பொதுப்பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு சர்க்கிள், சென்னை-5 அவர்களுக்கு உரிமை உண்டு.

**பி. கே. கந்தசாமி**
மேற்பார்வைப் பொறியாளர்
பொதுப்பணித் துறை
சென்னை செங்கற்பட்டு வட்டம்

## தமிழ்நாடு அரசு

## பொதுப்பணித் துறை

**சென்னை செங்கற்பட்டு வட்டம்**
**சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.**

வேலையின் பெயர்.—சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி அவுட்பேஷண்ட் பிரிவு இடவசதிக்காகக் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல்.

தமிழ் நாடு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப் பணித்துறை அல்லது அரசின் இதர துறைகளில் உரிய பிரிவுகளில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்கண்ட வேலைக்காக சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள், சென்னை-5 அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 10—9—1971 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள் அவர்களால் அதே நாளில் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

2. கட்டுத்தொகை ரூ. 5,000.

3. பிளான்களுடன், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.—ரூ. 20+3 சதவிகித விற்பனை வரி.

4. வேலையை முடிக்கவேண்டிய காலம்.—நான்கு மாதங்கள்.

5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கக்கூடிய தேதிகள். 6—9—1971 முதல் 9—9—1971 வரை.

6. ஒப்பந்தப் புள்ளி நாள்.—10—9—1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (இது எக்காரணம் கொண்டும் திரும்பத் தரப்பட மாட்டாது) கருவூலத்திலோ, அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ "Public Works Department Remittances III. Other Remittances. என்ற தலைப்பில், நிர்வாக இஞ்சினீயர், பொதுப்பணித்துறை, பில்டிங் டிவிஷன் II அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை அதே சலானில் கருவூலத்தில் அல்லது இந்திய ரிசர்வ் பாங்கில் "XII விற்பனை வரி 'பி' மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம்" என்று தனித் தலைப்பிட்டுச் செலுத்த வேண்டும். சலானைக் கொடுத்த பிறகே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்டு விவரங்களை சூப்பிரண்டிங் இஞ்சினீயர் அலுவலகம், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிளில் இருந்து பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்**
சென்னை—செங்கற்பட்டு வட்டம்.

---

## வேலைவாய்ப்பு

### கல்லூரிக் கல்வித்துறை

அரசினர் கலைக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள்—டியூட்டர்கள் — டெமான்ஸ்ட்ரேட்டர்கள்—பட்டம் பெற்ற நூலகர்கள் தற்காலிக நியமனத்திற்கு.

தமிழ் நாடு கல்வி சப் ஆர்டினேட் சர்வீஸில் கீழ்க்கண்ட பாட வகைகளில் தற்காலிக உதவிப் பேராசிரியர்கள், டியூட்டர்கள், டெமான்ஸ்ட்ரேட்டர்கள் ஆகியோர் தமிழ்நாடு ஜெனரல் சபார்டினேட் சர்வீஸில் பட்டதாரி நூலகர்களுக்கும் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. பௌதிகம். (மகளிர் கல்லூரிகளுக்கு)
2. வரலாறு.
3. வணிகம்.
4. அரசியல்.
5. நிலநூல்.
6. நூலகர்கள்.

பௌதிகத் துறையில் உதவிப் பேராசிரியர்கள், டியூட்டர்கள் வேலைக்குப் பெண்கள் மட்டுமே மனுச் செய்தல் வேண்டும். இந்த வேலைக்குரியவர்கள் ஒரு தனிக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதற்குரிய மனுக்கள் 25—8—1971 வரை கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6 அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். மனுதாரர்கள் தங்கள் பெயர், வயது, கல்வித்தகுதி, கிரேடு, அனுபவம் முகவரி, பாடம், விண்ணப்பிக்கும் வேலை ஆகியவை பற்றிச் சரியான தகவல்கள் கொடுக்க வேண்டும். நற்சான்றிதழ்களின் பிரதிகளே அனுப்பப்படல் வேண்டும்.

**இயக்குநர்,**
கல்லூரிக் கல்வித்துறை.

கல்லூரிக் கல்வித்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-6.

---

## விளம்பரம்

உரிமம் பெற்ற இயந்திர மின்சாரப் பொருள்கள் விற்பனையாளர்கள், பழுது பார்ப்பவர்களிடமிருந்து பின்கண்ட இயந்திர, மின்சார வேலைகளை ஒப்படைப்பதற்காக இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை-1 அவர்களால் பதிவு செய்துகொள்ள மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. இயந்திர வேலை— ஆர்க், கேஸ் வெல்டிங் பல்வேறு கலப்பு உலோகங்களுக்காக, கியர் பினியான் வீல், அச்சுப் பகுதிகளுக்குரிய அடுக்குகள் (Rack) உற்பத்தி செய்தல், சிறிய பழுது பார்க்கும் வேலைகள்.

2. மின்சார வேலை:— ஏ. சி., டி. சி. மோட்டார்கள், இம்பரஷன் மேக்னெட்டிக், பிரேக் மேக்னெட்டிக் காயில்கள், ஸ்டார்டர், காயில்கள் முதலியனவற்றை வைண்டிங் (ரீ வைண்டிங்) செய்தல், பிரிண்டிங், பைண்டிங், கம்போசிங் இயந்திரங்கள், இதர சார்பான கருவிகளில் ஏற்படும் பழுது பார்க்கும் பொது வேலைகளைச் செயல்படுத்துவதற்காக கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்படும்.

நிறுவனங்களிடமிருந்து மனுக்கள் 31—8—1971 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ வந்து சேர வேண்டும்.

**இயக்குநர்,**
எழுதுபொருள் அச்சுத் துறை,
சென்னை-1.



# டெண்டர்கள்

## தமிழ் நாடு நீர் வழங்கல் வடிகால் வாரியம்

**சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை**
**வேலையின் பெயர்·**

ஆலந்தூர் நீர் வழங்கும் திட்டம் — இரண்டாம் கட்டம்—முதல் கட்டம்—இரண்டாவது பாகம்—2ஏ, 2பி, 3ஏ, 3பி பிராந்தியங்களுக்கு விநியோக முறைகள். சி. ஐ., ஏ. சி. பைப்புகள் ஸ்பெஷல்கள் அமைத்தல், இணைத்தல்.

தமிழ் நாடு நீர் வழங்கல், வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் மேலே கண்ட வேலைக்கான துறைக்குரிய முறையான வடிவத்தில் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, இந்தத் துறையின் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனத்தின் உரிய பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீயரிங் சர்க்கிள், சென்னை-8 அவர்கள் தமது அலுவலகத்தில் 30—8—1971 பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்குமேல் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொது சுகாதாரத் துறை சர்க்கிள் அவர்களால் எண் 52, கெங்கு ரெட்டி சாலை, சென்னை—8-ல் அவ்வமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—கே. 2

கட்டுத்தொகை—ரூ. 4,540.

(ரூபாய் நாலாயிரத்து ஐந்நூற்றி நாற்பது மட்டும்).

(அரசு கருவூல சலான் வடிவில் அல்லது ஒப்பந்தப் புள்ளி சம்பந்தப்பட்ட விதிகளில் குறிக்கப்பட்டுள்ளபடி, ஏற்கத்தக்க வேறு வடிவில் கட்டுத் தொகை கட்டப் பெற வேண்டும்.)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை—ரூ. 10·35.

(பத்து ரூபாய் முப்பத்தி ஐந்து காசுகள் மட்டும்).

**ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணங்கள், நிர்வாக இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீயரிங் டிவிஷன் சென்னை—4—அவர்கள் கணக்கில் பி. டபிள்யூ III ஓ. ஆர். என்ற தலைப்பிலும், விற்பனை வரிக்கு XII விற்பனை டி. பல்வகை—I—பொது விற்பனை வரி என்ற தலைப்பிலும் தனித்தனி சலான்களில் சேர்க்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம்.

—நிர்வாக இஞ்சினீயர் (பொ.சு.) பொது சுகாதார இஞ்சினீயரிங் டிவிஷன், 1/14, எட்வேர்டு எலியட்ஸ் சாலை, சென்னை-4 அவர்களுக்கு மனுச் செய்து பெறலாம்.

(ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணம் ரொக்கமாகவோ, பண அஞ்சல் மூலமோ செலுத்தப்பட வேண்டும்.)

வேலை முடிக்கவேண்டிய காலம் :
8 மாதங்கள்.

**சூப்ரண்டிங் இன்சினீயர்**
பொது சுகாதார இன்சினீயரிங்
சர்க்கிள், சென்னை-8

---

## தமிழ் நாடு அரசு

## காவல் துறை

### ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

தமிழ் நாடு காவல் துறைக்குத் தேவையான உடை மற்றும் தளவாடங்களுக்குரிய பல்வகைப் பொருள்களை 1—7—1971 முதல் 31—3—1972 வரையுள்ள காலத்திற்கு வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்) கோரப்படுகின்றன.

(2) ஒப்பந்தப் புள்ளிகளை முத்திரையிட்ட கவர்களில் அனுப்ப வேண்டும். அந்தக் கவரின் மேலே சென்னைக் காவலர்களுக்குத் தேவையான உடை மற்றும் தளவாடங்களுக்குரிய பல்வகைப் பொருள்களை வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி என்று எழுதி, பெறுநர் முகவரியில் திரு கே. ஸ்ரீகுமார மேனன், ஐ.பி.எஸ். உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்-II என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்தக் கவர் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30-ஆம் தேதி மாலை 4-00 மணிக்குள் அவருக்குக் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட நேரமும், தேதியும் கடந்த பின் வந்து சேரும் ஒப்பந்தப் புள்ளி கவனிக்கப்படமாட்டா.

(3) ஒப்பந்தப் புள்ளி வடிவம், ஒப்பந்த நிபந்தனைகள், தேவைப்படும் பொருள்களின் அட்டவணை ஆகியவைகளை ரூபாய் 2.06 (ரூபாய் இரண்டு, பைசா ஆறு மட்டும்) செலுத்தி, சென்னை-4-ல் உள்ள இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அவர்களது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(4) மாதிரிப் பொருள்கள் அனுப்பப்பட்டதற்கான ரயில்வே ரசீதை, உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்-II அவர்களுக்குப் பதிவுத் தபாலில் தனியே அனுப்ப வேண்டும் ; பெறுநர் முகவரியில் அலுவலர் பெயர் மட்டுமே குறிப்பிட்டிருக்க வேண்டும். அனுப்பப்படும் மாதிரிப் பொருள்கள் இந்த அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிப் பொருட்களை ஒத்ததாக இருக்க வேண்டும்.

(5) ஒப்பந்தப் புள்ளிகளை 30—8—1971 அன்று மாலை 4-00 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

**கே. ஸ்ரீ குமார மேனன்**
ஐ.பி.எஸ்.

உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல்
ஆப் போலீஸ் II.

# டெண்டர்கள்

## தமிழ் நாடு அரசு

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்
### ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர் :—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்குத் தளவாடங்கள் வழங்கல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்காக, நிலநீர் இயக்குநர், சென்னை-4, அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 30—9—1971-அன்று மாலை 3-00 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் அதே நாள் மாலை 4-00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| எண். (1) | உள் வேலை. (2) | கட்டுத் தொகை. ரூபாய். (3) | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. (4) |
|---|---|---|---|
| 1 | பெர்கூசன் ரிக்குகளுக்கு (Rigs) சிறப்புக் கருவி வழங்கல். | 9,000 | ரூபாய் 10 விற்பனை வரி 40 காசு. |
| 2 | (1) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (துண்டுகள் மற்றும் துளை திறப்பான்கள்) வழங்கல். | 12,000 | ஷை |
| | (2) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (மட் பம்பு மற்றும் குழாய் வெட்டும் கருவி) வழங்கல். | 3,000 | ஷை |
| | (3) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (டவுன் திஹோல் ஹேமர்ஸ், பிட்டுகள்) வழங்கல். | 15,000 | ஷை |
| 3 | கேசிங் பைப்புகள், துணைப் பொருள்கள் வழங்கல். | 10,000 | ஷை |
| 4 | ஹைடிராலிக் ஜாக் பம்பு, ஜாக் வழங்கல். | 6,000 | ஷை |
| 5 | ஜியோ பிசிகல் தளவாடங்கள் வழங்கல். | 21,400 | ஷை |
| 6 | ஜியோ கெமிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 3,200 | ஷை |
| 7 | போட்டோ ஜியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 2,000 | ஷை |
| 8 | ஹைடிராலஜிக்கல் தளவாடங்கல் வழங்கல். | 6,000 | ஷை |
| 9 | ஹைட்டிரோ மீட்டிரியாலஜிக்கல் தளவாடங்கல் வழங்கல். | 2,000 | ஷை |
| 10 | ஹைடிரோ ஜியாலஜிக்கல் தளவாடங்கல் வழங்கல். | 15,200 | ஷை |
| 11 | வரை தளவாடங்களும் புகைப் படக்கருவியும் வழங்கல். | 400 | ஷை |

ஒப்பந்த வடிவம் : மெட்ரூஸ் பைனான்சியல் கோடு, வால்யூம் 1-ன் வடிவம் 9.

வேலையை முடிக்க வேண்டிய காலம் : 3 மாதங்கள்.

மேற்கூறிய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ஒப்பந்தப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய தேதி. } 1—8—1971 முதல் 25—9—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பி யளிக்க இயலாது) அரசாங்க கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works remittance III other Remittance" என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம் பொது விற்பனை வரி" எனத் தலைப்பிட்டுச் செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இயக்குநர்,
நிலநீர்.

---

# டெண்டர்கள்

## மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொ. ப. து. இராமநாதபுரம் வட்டம் மதுரை

ந. க. எண். 20856/71. 2/வ2
நாள் 20—7—71

### ஒப்பந்தப் புள்ளி

தமிழ் நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப்பணித் துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெருவட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள கண்மாய் பாசனத்தில் உள்ள நிலஉரிமை பெற்றோர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 3—9—71-ம் தேதி மாலை 4·00 மணி வரையில் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்—அருப்புக்கோட்டை தாலுகா குண்டாற்றின் குறுக்கே அணைகட்டும் வேலையும் வெள்ளத் தடுப்புக் கரையும் அமைத்து நாருயணக் காவேரி கால்வாய் மூலம் தண்ணீர் வழங்கும் திட்டம்.

ஒப்பந்தவகை—கே. 2

டேவணித் தொகை— ரூ. 13,100 (ரூபாய் பதிமூன்றுயிரத்து நூறு மட்டும்).

ஒப்பந்தப் புள்ளி விலை (வரி உட்பட) —ரூ. 20·70.

வேலை முடிக்க வேண்டிய காலம் —12 மாதங்கள்.

வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 3—9—1971 அன்று மாலை 4·30 மணிக்கு அலுவலகம் வந்த ஒப்பந்ததாரிகள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் ஷை யார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேற்கண்ட வேலைகளை எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தப் பத்திரத்திற்கான தொகை ரூ. 20·70-ஐ அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை), இராமநாதபுரம் பெருவட்டம், மதுரை-1 என்ற விலாசத்திற்கு மனுச் செய்தால் ஷை வேலைக்கான ஒப்பந்தப் பட்டியல் விதிகள் முதலியவைகள் ஒப்பந்தப் புள்ளியுடன் வழங்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளியின் விலையான ரூ. 20-ஐ "பி.டபிள்யூடி. III. ஒ.ஆர்." என்ற கணக்கு தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, சிவகங்கை கோட்டம், சிவகங்கை அவர்கள் கணக்கிலும், விற்பனை வரிக்காக ரூ. 0·70 பைசாவை "12.விற்பனை வரி" என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக்கருவூலத்தில் தனித்தனியாகச் செலுத்தி ரசீதுகளை அனுப்ப வேண்டும். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்கும் பொழுது உறையின் மேல், வேலையின் பெயரும் கருவூல ரசீது நம்பரும் எழுதப்பட்டிருக்க வேண்டும். உறை, மூடி அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அலுவலகத்தின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில் தான் தொகை குறிப்பிட்டுக் கொடுக்கவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப் பணித்துறை), இராமநாதபுரம் வட்டம், மதுரை அலுவலகத்தில் 25—8—1971 முதல் 1—9—1971 முடிய விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப் புள்ளி கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு, 1—9—1971 மாலை 5 மணிக்குள் வந்து சேரவேண்டும். இதற்குப் பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ இத்துறையினர் பொறுப்பாக மாட்டார்கள். இதுபோன்ற செயல் இத்துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும். இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து டேவணித் தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெடியூல்டு வங்கிகளின் மூலமாகவோ, ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டிகள், தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் பத்திரங்கள், அரசாங்க சேமிப்புப் பத்திரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு அல்லது தற்போதைய மதிப்பு, இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு விதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திற்கான வருமானவரி, விற்பனை வரி முதலியவைகளைச் செலுத்தியதற்கு அத்தாட்சியாகச் சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

ஆயக்கட்டுதாரர்கள் பங்கு எடுத்துக் கொண்டால் டிபுடி தாசில்தாருக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிடமிருந்து, சொத்து உரிமை சர்டிபிகேட்டும் அத்திட்டத்தில் பயன்பெறும் கண்மாயில் ஆயக்கட்டுதார் என்பதற்கும் அத்தாட்சி வாங்கி டெண்டருடன் இணைக்க வேண்டும். டேவணித் தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில் தொகை குறிப்பிட்டுக் கொடுக்காமலோ இருந்தால் இவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப் படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை பெற்றுள்ளார்.

ரெ. ராமசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்
பொ. ப. து.
13—7—71.


'தமிழரசு'

இதழில்

விளம்பரம் செய்து

பயன்பெறுங்கள்

# டெண்டர்கள்

**தமிழ் நாடு அரசு,**

**பொதுப் பணித் துறை.**

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண். டி 3/71-72.

நாள் 24—7—1971.

வேலையின் பெயர்.—கடலூர் வட கரை மீனவ கடற்கழி, படகு தளம் இவற்றில் கான்கிரீட், கற்கள் கொண்டு அடித்தள தாங்கு கட்டுமான வேலைகள்.

1. தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொதுப் பணித் துறை, டிசைன், மரைன் வொர்க்ஸ் சர்க்கிள், சேப்பாக்கம், சென்னை-5, அவர்களால் மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 26—8—1971 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

2. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

3. (அ) கட்டுத் தொகை—ரூ. 2,800.

(ஆ) கூடுதல் செக்யூரிட்டி தொகை ரூ. 2,800. அல்லது சூப்பிரண்டிங் இஞ்சினீயர் நிர்ணயிக்கிறபடி.

4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்).

5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை, விற்பனை வரி —60 காசுகள் (அறுபது காசுகள் மட்டும்).

6. வேலை முடிக்க வேண்டிய காலம்—ஆறு மாதங்கள்.

7. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், சூப்பிரண்டிங் இஞ்சினீயர், டிசைன், மரைன் வொர்க்ஸ் சர்க்கிள், சென்னை -5 அலுவலகத்திலிருந்து வழங்கப்பெறும் காலம் 9-8-1971 -லிருந்து 21-8-1971 வரை.

8. மேலே 4-ல் குறிப்பிடப்பட்டபடி உள்ள ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணம், கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ "P. W. Remittances III other Remittances" என்ற தலைப்பில், நிர்வாக இஞ்சினீயர், மரைன் வொர்க்ஸ் டிவிஷன், கடலூர் அவர்கள் கணக்கில் செலுத்தப் பெறவேண்டும். மேலே 5-ல் குறிப்பிடப்பட்ட விற்பனை வரி, அதே சலானில் மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், "III Sales Tax—B Receipt" என்ற தலைப்பில் செலுத்தப் பெற வேண்டும். மேற்கண்ட சலானைக் காட்டி ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களைப் பெறலாம். எக்காரணம் கொண்டும் இத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

9. விளக்கமான ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் மட்டுமே கட்டுத் தொகை ஏற்கப்படும்.

10. துறையினால் வழங்கப்படுகின்ற குறிப்பிடப்பட்ட வடிவங்களில் மட்டுமே, மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மேலே வேலையின் பெயருடன் 'டெண்டர்' என்று குறிப்பிட்டு, ஒப்பந்தப் புள்ளிகளைத் தர வேண்டும்.

11. எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க சூப்பிரண்டிங் இஞ்சினீயர் டிசைன்ஸ், மரைன் வொர்க்ஸ் சர்க்கிள் அவர்களுக்கு உரிமை உண்டு.

12. மேலே 9, 10 பிரிவுகளில் குறிப்பிட்டபடி இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

டி. ஐ. பால்,
சூப்பிரண்டிங் இஞ்சினீயர்.

---

பயிற்சி

**பொறியியல் கல்லூரி.**

**கிண்டி, சென்னை-25**

**அளிக்கும்**

**கம்ப்யூட்டர் மற்றும் மானேஜ்மெண்ட் பயிற்சி. 1971 செப்டம்பர் 2 முதல் அக்டோபர் 22 வரை.**

தொழில் புரியும் பொறியாளர்கள், மானேஜர்கள், அரசுத் துறைகள், பொதுத் துறைகள், தனியார் துறைகளிலுள்ள தொழிற் கூடங்களில் பணியாற்றும் நிருவாகிகள் கலந்து கொள்ளலாம்.

**தகுதிகள் :**

பொறியியல் பட்டம் (Degree in Engineering) விஞ்ஞானத்தில் பட்ட மேல் படிப்பு (Post graduate Degree in Science) அல்லது அதற்குச் சமமானது.

**மனுக்கள் பெறக் கடைசித் தேதி**

23—8—1971.

**சம்பளக் கட்டணம் :**

ரூ. 600.

மேல் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

டீன் (P. G. Studies),

பொறியியல் கல்லூரி,

கிண்டி, சென்னை-25.

**இயக்குநர்**

**தொழிற் கல்வி**

**சென்னை-25**

---

# டெண்டர்கள்

**நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை**

**தமிழ்நாடு.**

**ஒப்பந்த அறிவிப்பு.**

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரசுக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் டெண்டர்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திருச்சிராப்பள்ளி அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1, விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 26—8—1971 (வியாழக்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு கவர்னருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த டெண்டர்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | டேவணித் தொகை டெபாசிட். | டெண்டர் ஷெட்யூல் கிடைக்கும் விலாசம். |
| --- | --- | --- | --- |
| 3 | மதுரை(ஸ்)-திருச்சி திண்டுக்கல் சாலை மைல் 225/3-ல் (தேசிய நெடுஞ்சாலை 45) தற்பொழுது இருக்கும் தாம்போதி பாலத்திற்குப் பதிலாக ஒரு புதிய பாலம் கட்டுதல். | ரூ. 10,900 | கோட்டப் பொறியாளர், (நெ.கி.ப) புதுக்கோட்டை. |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), புதுக்கோட்டை விலாசத்திலிருந்து 12—8—1971 முதல் 25—8—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் டெண்டர் நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்று வடிவங்கள் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகை டிபாசிட்டை மேற்கண்ட (புதுக்கோட்டை) கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை டெண்டருடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அக்கவுண்டுகளும், 12 வருட தேசிய தற்காப்பு அக்கவுண்டுகளும், மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், டேவணித் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்க் காரண்டி சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் ஒப்புதல் பெற்று அனுப்பவேண்டும். இவையில்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத டெண்டர்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப) திருச்சிராப்பள்ளி-1.

---

**தமிழ் நாடு அரசு தொழில் வணிகத் துறை**

**டெண்டர் நோட்டீஸ் எண்.2468/பி3/69.**

சென்னை-56, திருமழிசையிலுள்ள அரசினர் இயந்திர செங்கல் தொழிற்சாலையில் இருப்பிலுள்ள உடைந்த செங்கற்களை ஜல்லியாக மாற்றுவதற்கு ஒப்பந்தமேற்று வேலையை முடித்துக் கொடுக்க விருப்பமுள்ளவர்களிடமிருந்து டெண்டர்கள் சென்னை-5, சேப்பாக்கம், தொழில் வணிக இயக்குநரால் 31—8—1971 மாலை 3-00 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. டெண்டர் நமூனாக்கள் மற்றும் ஷரத்துக்களைக் கீழ்க்கண்ட விவரப்படி ரூ. 2·06 ரிசர்வ் வங்கி அல்லது அரசினர் கருவூலத்தில் செலுத்தி தொகை செலுத்தியதற்கான அசல் செல்லுச் சீட்டுக்களைக் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

| தொகை செலுத்த வேண்டிய விவரம். | தொகை. | தொகை செலுத்த வேண்டிய கணக்குத் தலைப்பு. |
| --- | --- | --- |
| டெண்டர் நமூனா விலை | ரூ. 2·00 | "XXIX Industries (a) Industries II, Mechanised Brick plant" |
| விற்பனை வரி | ரூ. 0·06 | "XII Sales tax—Madras General Sales Tax" |

தொழில் வணிக இயக்குநர்,
சென்னை-5.

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, தமிழ்நாடு

### ஒப்பந்த அறிவிப்பு.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரை யிட்ட ஷெடியூல் டெண்டர்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திருச்சி ராப்பள்ளி அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 8—9—1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு கவர்னருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த டெண்டர்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப் படும்.

| எண், வேலையின் பெயர். | டேவணித் தொகை டெபாசிட். | டெண்டர் ஷெட்யூல் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| 1 கோடை மலைச்சாலையில் கி. மீ. 1/0 (மைல் 0/5) உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | ரூ. 6,300 | கோட்டப் பொறியாளர் (நெகிப), திண்டுக்கல். |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திண்டுக்கல் விலாசத்திலிருந்து 25-8-1971—7-9-1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் டெண்டர் நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்று வடிவங்கள் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள டேவணித்தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள, அரசினர் கருவூலங்கள் எதிலும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை டெண்டருடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ் நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அமைப்பு ரசீதுகளும் டேவணித் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்க் காரண்டி சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டும். இவையில்லாமல் வரும் ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத டெண்டர்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,

மேற்பார்வைப் பொறியாளர் (நெகிப),
திருச்சிராப்பள்ளி-I.

—வேலை வாய்ப்பு.—

## தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 3-வது நிலைப் பணியில் ரூ. 300—25—650 சம்பளத்தில் 400 ஜூனியர் இஞ்சினியர் (மின்சாரம்) பதவிகளுக்கு நேரடி நியமன முறையில் நியமனத்துக்காகக் குறிப்பிட்ட வடிவங்களில் மனுக்கள் தமிழ் நாடு மின்சார வாரியத் தலைவரால் 31—8—1971 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

திட்டப்பகுதிகளில் நியமிக்கப்படும் மனுதாரர்கள் அகவிலைப்படி தவிர்த்து, மலைவாசப்படி, திட்டவேலைப்படி, வாடகையில்லாமல் குடியிருப்பிடம், இலவச மின்சாரம், முதல் நிலைக்குரிய தனிச் சம்பளம், முதலியவைகளை, விதிகளின்படி எவை உரியவையோ அவை வழங்கப் பெறுவார்கள்.

தகுதி :

இந்திய யூனியனில் பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து மின்சார இஞ்சினீயரிங் பட்டம் அல்லது அதற்குச் சமமான பட்டம்.

துறையில் ஸ்டைபெண்டரி அப்ரண்டிஸ்களாக அல்லது ஒர்க் சார்ஜ்டு நிறுவனம், அல்லது தற்காலிக முறையில் அன்றுட நிலைத் தொழிலாளர்களாக வேலை செய்வோர் உரிய முறையில் கவனிக்கப்படுவார்கள்.

வயது :

ஷெடியூல் வகுப்பினர், ஷெடியூல் பழங்குடியினர், பின்னடைந்த வகுப்பினர் தவிர்த்து மற்ற மனுதாரர்கள் வயது 1971 ஜூலை 1-ல் 28 வயதுக்கு மேல் இருக்கலாகாது.

தகுதி, வயது சம்பந்தப்பட்ட முழு விவரங்களையும், குறிப்பிடப்பட்ட மனு வடிவங்களையும், மின்சாரத் துறை பிரதம இஞ்சினீயர், 157, மவுண்ட் ரோடு, சென்னை-2 அவர்களிடமிருந்து பெறலாம். சுய விலாச மிட்ட 23 செ.மீ.×10 செ.மீ. அளவுள்ள 20 காசுகள் அஞ்சல் தலையொட்டிய உறையை உள்ளே வைத்துக் கடிதம் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்
தமிழ்நாடு மின்சார வாரியம்.

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

(தெற்கு டிவிஷன்)

எண் S. 5/1349/71. — ஒப்பந்தப்புள்ளி அறிக்கை. — நாள் 31—7—71.

தென் சென்னை புறநகர்த் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் உறையின் மீது உரிய முறையில் குறிப்பிட்டு ஒவ்வொரு வேலைக்கும் எதிரில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் மாலை 3 மணிக்குள் கீழே கையொப்ப மிட்டுள்ளவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் குறிப்பிட்டுள்ள அதே நாட்களில் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் அல்லது அவர்கள் ஏஜெண்டுகள் முன்னிலையில் மாலை 3·05 மணிக்குத் திறக்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் விபரம். | வேலையின் சுமார் மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திர விலை. | கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | மூன்று படுக்கை அறைகள் கொண்ட அடுக்கு வீடுகள் 1-ல் 2 என்ற வகையில் 3 பிளாக்குகள் கட்டுதல் பெசண்ட் நகர்— | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | |
| | தொகுதி எண் 1 ... | 1,92,000 | 2,880 | 10·30 | 19—8—1971 |
| 2 | ,, தொகுதி எண் 2 ... | 1,92,000 | 2,880 | 10·30 | 19—8—1971 |
| 3 | ,, தொகுதி எண் 3 ... | 1,92,000 | 2,880 | 10·30 | 20—8—1971 |
| 4 | மூன்று படுக்கை அறைகள் கொண்ட 1-ல் 2 என்ற வகையில் அடுக்கு வீடுகள் கொண்ட 4 பிளாக்குகள் கட்டுதல் பெசண்ட் நகர்— தொகுதி எண் 4 ... | 2,56,000 | 3,840 | 15·45 | 20—8—1971 |
| 5 | T. D. No. 2-B/70-ன்படி சிறிய இரண்டு அறைகளையுடைய L. I. G. அடுக்கு வீடுகள் 1-ல் 4 என்ற வகையில் 6 பிளாக்குகள் கட்டுதல்— பெசண்ட் நகர்— | | | | |
| | தொகுதி எண் 1 ... | 2,16,000 | 3,240 | 15·45 | 25—8—1971 |
| 6 | ,, தொகுதி எண் 2 ... | 2,16,000 | 3,240 | 15·45 | 25—8—1971 |
| 7 | ,, தொகுதி எண் 3 ... | 2,16,000 | 3,240 | 15·45 | 26—8—1971 |
| 8 | ,, தொகுதி எண் 4 ... | 2,16,000 | 3,240 | 15·45 | 26—8—1971 |
| 9 | S. D. No. 124/70 படி இந்திரா நகர் தொகுதி எண் 1-ல் எம்.ஐ.ஜி. அடுக்கு வீடுகள் 1-ல் 4 என்ற வகையில் இரு படுக்கை அறைகள் கொண்ட அடுக்கு வீடுகள் 3 பிளாக்குகள் கட்டுதல் ... | 2,40,000 | 3,600 | 15·45 | 27—8—1971 |
| 10 | எஸ். டி. நம்பர் 124/70 படி இந்திரா நகரில் தொகுதி 2-ல், 1-ல், 4 என்ற வகையில் இரு படுக்கை அறைகளைக் கொண்ட எம். ஐ. ஜி. அடுக்கு வீடுகள் 2 பிளாக்குகள். | 1,60,000 | 2,400 | 10·30 | 27—8—1971 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களும் ஏனைய விபரங்களும் அவற்றின் விலையைச் செலுத்தி நிர்வாகப் பொறியாளர், தெற்கு டிவிஷன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை-35 அவர்களிடமிருந்து அலுவலக நாட்களில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். குமரேசன்,
நிர்வாகப் பொறியாளர்.

# குடிசைப் பகுதி மாற்று வாரியம்

## கோட்டம்-6

டெண்டர் அறிக்கை.

இடம்—ஸ்ரீநிவாசபுரம்—பட்டினப்பாக்கம், டீ. டி. 7/71

மாடிகள் உள்ள வீடுகள் கட்டும் வேலைக்கு முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் 26–8–1971 அன்று 11·00 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

| பிரதி எண். | வேலையின் பெயர், | கட்டிடம் எண். | குடியிருப்புகளின் எண்ணிக்கை. | வேலையின் குத்து மதிப்பீடு. | டெபாசிட் தொகை. | டெண்டர் விபரங்களின் விலை. |
|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ரூ. | ரூ. |
| 1. | மாடிகள் உள்ள வீடுகள் கட்டும் வேலை டீ.டி. எண் 7/71,24ல்1 | 12 | 48 | 2,50,000 | 3,750 | 15.00 விற்பனை வரி |
| 2. | | 324 | 48 | 2,50,000 | 3,750 | ஷை |

அதே நாளில் 26–8–1971, 11–05 மணிக்கு டெண்டர்கள் பிரிக்கப்படும். மேற்கொண்டு விபரங்களும் டெண்டர் நகல்களும் மேற்படி அலுவலகத்தில் 16–8–1971 தேதியிலிருந்து காலை 10 மணி முதல் 2 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் விலைக்குக் கிடைக்கும். நிர்வாகப் பொறியாளர் டெண்டர்கள் ஒத்துக்கொள்ளவோ, நிராகரிக்கவோ உரிமை உள்ளவர்.

ஜே. பிரேமானந்தராவ்,
நிர்வாகப் பொறியாளர்.

குடிசை மாற்றும் வாரியம், கோட்டம்–6,
பட்டினப்பாக்கம்,
சென்னை–28.



## டெண்டர்

### தமிழ்நாடு அரசு சிறு தொழில்கள் நிறுவனம் லிமிடெட்

(தமிழ் நாடு அரசுக்கு உரியது)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை
எண் 35366/ஜி.1/69,
நாள் 22—7—1971

விண்ணமங்கலம் டான்ஸி தோல் பதனிடும் தொழிற்சாலையில் கிடைக்கக்கூடிய 'எக்கோனல் பைண்டர் இம்' (Eukonal Binder Im) உள்ளது உள்ளபடியான நிலையில் டிஸ்போஸ் செய்வதற்கு ஆன மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 31—8—1971 காலை 11 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களும் இதர விவரங்களும் வேண்டுவோர் " டான்ஸி தோல் பதனிடும் நிலையம், விண்ணமங்கலம், மின்னூர் அஞ்சல், வட ஆற்காடு மாவட்டம் " என்னும் முகவரியில் உள்ள மேற்குறித்த நிலையத்தின் ஜெனரல் சூப்பரிண்டெண்டண்டிடம் ரூ. 5·25 ரொக்கமாகவோ மணியார்டர் மூலமோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

உறைகளின் மீது 31–8–1971-க்குரிய எக்கோனல் பைண்டர் இம் வாங்குவதற்கு என்று குறிப்பிட்டு, ஒப்பந்தப் புள்ளிகளை மூடி முத்திரையிட்டு, 31–8–1971 காலை 11 மணிக்குள் 'ஜெனரல் சூப்பரிண்டெண்டண்ட், டான்ஸி தோல் பதனிடும் நிலையம், விண்ணமங்கலம், மின்னூர் அஞ்சல், வட ஆற்காடு மாவட்டம் அவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். அதே நாளில் பகல் 12 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

நிருவாக இயக்குநர்.




கிளையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் மரங்கள், கவிஞர்களின் புலமைச் சமையலில் சுவையேற்றுக் கருத்து விருந்தாய்க் களிப்பையூட்டுகின்றன. மறத்தற்காகா மாண்புறு பாடங்களை மன்பதைக் களித்திட மரங்கள் கவிஞர்கட்குப் பெருமளவில் உதவியுள்ளன. அரசனுடைய படையே தங்குமளவுக்கு அகன்று பரந்த நிழலைத்தரும் ஆல், தேனையும் தோற்கடிக்கும் தித்திப்புப் பழம் தரும் மா, மஞ்சைத் தொட்டு விளையாடும் விண்ணளாவியதென்னை, சுவைக்குடம் தொங்கும் பலா எனப் பலதிறப்பட்ட மரங்கள் பாரோர்க்கு நீதி சொல்லப் பாவலர் வாய்ப் பைந்தமிழில் படிந்துள்ளன. காட்டு மரங்கள், நமது வாழ்க்




கைக்கு எடுத்துக்காட்டு மரங்களாய் விளங்கிச் சிறக்கின்றன. மீன் முட்டையினும் நுண்ணிய விதையையும், அதிலிருந்து வெளிப்பட்டுப் பரந்து படரும் ஆலமரத்தின் பெருமையையும் காணும் புலவர், " உருவு கண்டு எள்ளாமை வேண்டும் " என்ற ஒப்பற்ற அறிவுரையை உலகுக்கு ஈந்து மகிழ்கிறார். தென்னை தாளால் உண்ட நீரை, தலையில் இளநீராய்—இனிய நீராய்த் தரும் தன்மையைச் சுட்டி, " நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் ? என்றெண்ண வேண்டாம் ; ஒருவகையிற் செய்த உதவி, அதைப் பெற்றவரிடமிருந்து வேறொரு வகையில் வெளிப்பட்டே தீரும்" என்ற கருத்தை உரைக்கிறார் அருந்தமிழ் ஔவை. பொய்கை

ஒன்றைச் சுற்றிலும் வளமுடன் செழித்து நிற்கும் மரங்களில் பூக்கள் கொத்துக் கொத்தாய்ச் செறிந்துள்ளன. பொய்கையிலும் நீர் தெரியாவண்ணம் மலர்கள் நிறைந்து மிதக்கின்றன. கோட்டுப் பூக்களைக் காணும் புலவர் கயப்பூக்களையும் காண்கிறார். இரண்டின் தன்மைகளையும் ஒப்பிட்டுச் சிந்திக்கிறார். கொம்பிலே மலரும் பூ, மலர்ந்த பிறகு குவிவதே இல்லை ; முதிர்ந்து அழியுமே தவிர மூடிக் குவிவதில்லை. நீர்ப் பூக்களோ அவ்வாறில்லை. பகலில் மலர்வன இரவில் குவிகின்றன ; இரவில் மலர்வன பகலில் முகம் மூடி உறங்குகின்றன. இவை கொண்டு நாலடி ஓர் அறவுரையை நயமாக விளக்குகிறது. நட்பு, கோட்டுப் பூப்போல, மலர்ந்தால் மலர்ந்ததாகவே திகழவேண்டுமேயன்றி, செல்வக்காலை நட்போடிருப்பதும் அல்லற்காலை அகன்று விடுவதுமாக, விரிவதும் குவிவதுமாய்—நீர்ப்பூக்களைப்போல் இருக்கக்கூடாது. மரப் பூ இக்கருத்து மணத்தைக் கவிதை வெளியில் உலவச் செய்கிறது. வெயிலால் அவதியுறுவோர்க்கு நிழல் தரப் பாதையோரங்களில் மரங்களை நடுவதைப்போல் வாழ்க்கைப் பாதையில் தத்தளித்து நடந்து செல்வோர் தங்கி மகிழப் பாவாணர்கள், மரங்கள் தரும் கருத்து நிழலைப் படரவிடுகின்றனர். கைவல்ல தச்சரிடம் அகப்படும் மரங்கள் கவின்மிகு பொருள்களாக வடிவெடுக்கும். பாட்டுத் தச்சராம் வள்ளுவர்பால் கிடைத்த மரங்களோ கருத்துத் தேர்களாய்க் குறளாலயத்தில் பொலிவு பெற்றுக் காண்போரை மகிழச் செய்கின்றன.

அன்பை வள்ளுவர் உயிர்க்கு நிகரானதாகக்கொள்ளுகிறார். அகத்தில் அன்பு இல்லாதவனுடைய உடம்பை, உயிரோடு கூடியதாக ஒப்புக்கொள்ள அவர் மறுக்கிறார். அன்பு இல்லையாயின் உடம்பு வெறும் என்பு தோல் போர்த்த கூடே ! அகத்துறுப்பாகிய அன்பு இல்லாவழிப் புறத்துறுப்புக்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவியென்ற ஐம்பொறிகளாலும் எவ்விதப் பயனுமில்லை என்பது அவருடைய துணிவு. அன்பில்லாதவர் வாழ்க்கை வாழ்க்கையாகாது என்பதை ஓர் எடுத்துக் காட்டுக் கொண்டு அவர் விளக்குகிறார்.

" கொடிது கொடிது வறுமை கொடிது ; அதனினும் கொடிது இளமையில் வறுமை " ஒருவன் வறியவனானால்-வயிறார உண்ண உணவு பெறாதவனானால்—அவனுடைய உடல் சிறுத்துப்போகும். அதுவும் இளமையிலேயே வறுமைப்பட்டுவிட்டானானால் ' அவன் உறுப்புக்களில் உயிர்த் தன்மையையே காண முடியாது. " வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய் " என்று கலித்தொகை, உலர்ந்த மரத்திற்கு, ஒன்றுமற்றவன் இளமைக் காலத்தை உவமையாக்குகிறது. வறியவன் இளமைச் செவ்வியின்றி இருக்குமாறு போல, வற்றி உலர்ந்து, வேர் இற்றுவிட்ட, வற்றல் மரம் ஒன்று, பாலை நிலத்துப் பாறை மீது நின்றால் வேர்விட்டுத் தளிர்க்குமா ?

நிச்சயம் தளிர்க்காது. அதே போன்றுதான் அகத்தில் அன்பு இல்லாதவன் வாழ்க்கையும் செழிப்பாக இருக்க முடியாது.

" அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை
வன்பாற்கண்

வற்றல் மரந்தளிர்த் தற்று "

வற்றல் மரம் எப்படித் தளிர்க்காதோ அதுபோல அன்பில்லாதவன் வாழ்க்கையும் சிறக்காது. அன்பு செலுத்தி வாழ்வதே சீரிய வாழ்க்கை என்ற கருத்தை இக்குறள் மூலம் குறளாசிரியர் வலியுறுத்துகிறார்.

பண்புடையாரிடத்தில் பொருந்தியிருப்பதால்தான் உலகம் உள்ளதாய் இயங்குகிறது. அஃதின்றேல் மண்ணோடு மண்ணாகி அழிந்திருக்கும் என்கிறார் அறநூலாசிரியர் வள்ளுவர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராலேயே ' உண்டு இவ்வுலகம் ' என்பார் ' கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி ' என்ற சங்ககால அரசப்புலவர். அரம்போல் கூர்மையான அறிவு உடையவராயினும், மக்கட் பண்பு இல்லாதவர்கள் ஓரறிவுடைய மரத்தைப் போன்றவரேயாவர்.

ஆறறிவு படைத்த மக்களாக அவர்களைக் கொள்ள முடியாது. பண்பில்லாதவர்கள் பெற்றுள்ள அறிவுக் கூர்மை அரத்தைப் போலப் பிறரைத் தேய்க்கவே பயன்படும். அதுமட்டுமல்ல; அரம் பிறவற்றைத் தேய்க்கும்போது, அதுவும் கூர்மை குறைந்து மழுங்குதல் போலப் பண்பிலார் தம்மையடுப்பாரைக் கெடுப்பதோடு தம்முடைய அறிவையும் பயனற்றதாக ஆக்கிக் கொள்வர்.

அரம்போலும் கூர்மைய ரேனு
மரம்போல்வர்

மக்கட்பண் பில்லா தவர்.

அரம் (வாள்) மரத்தையறுக்கிறது. தன்னையறுக்கும் வாளுக்கு மரம் தானே கைப்பிடி





யாக இருக்கிறது. அதே போன்று பண்பில்லாதவர்களும் தம்மை அழிப்போர்க்கும் தாமே துணைநின்று அழிந்து போவர் என்பதை இக்குறளின் உட்பொருளாக்கி, நாயனார் நம்மைச் சிந்திக்க வைத்துள்ளார்.

பண்பில்லாதவனைப் போலவே ஊக்கமில்லாதவனும் மகன் என்று சொல்லத்தகுதியற்றவனாய் மரத்தோடு ஒப்பப் பேசப்படுகிறான். ஊக்கம் ஒருவற்கு உள்ள செல்வம். அவ்வூக்கம் இல்லாதார் மக்கள் ஆகார்; மரங்களேயாவர். ஊக்கமில்லாதவர்க்கும் மரத்துக்கும் உள்ள வேற்றுமை, வடிவம் மட்டுமேயாம்.

"உரம்ஒருவர்க் குள்ள வெறுக்கைஅஃ
தில்லார்

மரம்மக்கள் ஆதலே வேறு".

வினை முயற்சி இல்லாமையால் ஊக்கமில்லாதவன் மரம் எனப்படுகின்றான். மரம் ஓரிடத்தில் நிற்கிறது; அவன் அசைகின்றானே எனின், உள்ளத்தால் இயக்கமின்றிக் காலால் மட்டும் இயங்கும் அவனுடைய இயக்கம் இயக்கமாகக் கருதப்படமாட்டாது; அவன் நின்ற இடத்திலேயே நிற்கும் மரத்துக்கு ஒப்பானவனே, மரமாவது பழங்களைத் தந்தும், மருந்தாகப் பயன்பட்டும், விறகாக எரிந்தும் பிறர்க்கு உதவியாயிருக்கும். ஆனால் ஊக்கமில்லாதவனோ பிறர்க்கு எவ்வகையிலும் பயன்படமாட்டான். ஆக, அவன் மரத்தினும் இழிந்தவன் ஆகின்றான்.

பண்பில்லாதவன், ஊக்கமில்லாதவன் போன்றே, அருட்டன்மையாம் கண்ணோட்டமில்லாத மரமே என்கிறார் வள்ளுவர். கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் என்றவர், அடுத்த குறளில் அக்கண்ணோட்டம் இல்லாதவர் மண்ணோடு பொருந்திய





மரமே தவிர மனிதராகமாட்டார் எனக் குறிப்பிடுகிறார்.

"மண்ணோ டியைந்த மரத்தனையர்
கண்ணோ

டியைந்துகண் ணோடா தவர்".

மக்களுக்குக் கண்கள் உண்டு; மரங்களுக்கும் கண்கள் உண்டு; அவை கணுக்கள் எனப்படும். மக்களுடைய கண்களுக்கும் மரக்கண்களுக்கும் வேறுபாடு இருக்கவேண்டாமா? மரக்கண்களுக்கு எவ்வித உணர்ச்சியுமிருக்க முடியாது. உள்ளன உள்ளவாறே இருக்கும். மனிதக் கண்கள் எவ்வித உணர்ச்சியுமற்று இருக்கலாமா? அவை கனிவைத் தோற்றுவித்து, கருணையைப் பொழிந்து, அருளைச் செய்ய வேண்டுமல்லவா? அத்தகைய கண்ணோட்டமின்றேல் அவற்றை மரக்கண் என்று சொல்வதைத் தவிர வேறெப்படிச் சொல்லமுடியும்?

முதிர்ந்து வைரம் பற்றிய முள்மரம் ஒன்றை ஒருவர் வெட்டுவதை வள்ளுவர் காணுகிறார். கோடரியால் மரத்தை வெட்டும்போது வைரம் தாக்குண்டதால் கோடரி சிதறுகிறது. அவர் கையில் வலி தோன்றுகின்றதேயன்றி மரம் வீழ்ந்த பாடில்லை. கையை வருத்தி வருத்திச் சிறிது சிறிதாகச் சிதைக்க வேண்டியிருக்கிறது. களையவேண்டிய முள்மரத்தை இளையதாக இருந்தபோதே வெட்டியிருந்தால் இப்போது இவ்வளவு துன்பம் இல்லையல்லவா? வள்ளுவரின் சிந்தனை இவ்வாறு ஓடுகிறது. உடனே குறிப்பிடுகிறார் :

"இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்

கைகொல்லும் காழ்த்த இடத்து"

பகைவர்கள் வலிமையுறுதற்கு முன்னமேயே அவர்களை அழிக்கவேண்டும். அவர்கள் வலிமையடைந்து விட்டாலோ பின்னர் அழிப்பது எளிதன்று; அச்செயலில் நாம் பெரும்பாடு படவேண்டியிருக்கும்.

மரத்தின்மீது ஏறும் ஒருவரைக் கூர்ந்து நோக்குகிறார் வள்ளுவர். ஏறுபவர், மரக்கிளையில் எவ்வளவு தூரம் சென்றால் அது தாங்குமோ அதுவரை வள்ளுவர் வாளாவிருக்கிறார். அதற்கு மேலும் அவர் ஏறத் தொடங்கியதைக் கண்டதும் பதறுகிறார். மேலே ஏறினால் பளு தாங்காது கொம்பு முறிந்து கீழே வீழ்ந்து உயிருக்கே ஊறாய் விடுமே! அதனால் அளவுக்கு மேலே ஏறக் கூடாதென அறிவுரை கூறுகிறார்.

"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்
தூக்கின்

உயிர்க்கிறுதி யாகி விடும்"

ஒரு தொழிலை மேற்கொள்பவர் அத் தொழிலில் தம்மால் எவ்வளவு செல்லக்கூடுமோ அதுவரைதான் செல்ல வேண்டும். உற்சாக மிகுதியால் வரம்பு கடந்து செல்வராயின் அத்தொழிலையும் முடிக்காமல் தமக்கும் இறுதியைத் தேடிக்கொள்வர்.

மரங்களின் பயன்படு தன்மையை எடுத்துக் காட்ட விழையும் வள்ளுவர், ஊரினுள்ளேயுள்ள ஒரு பழ மரத்தைக் காட்டுகிறார். அதில் பழங்கள் பழுத்துக் குலுங்குகின்றன. புள்ளினமெல்லாம் அம்மரத்தைத் தம் சொந்த வீடெனக் கருதிக் குழுமிக் குதூகலிக்கின்றன. வழிச்செல்வோர் அனைவரும் அதன் இனிய கனிகளை உண்டு மகிழ்கின்றனர். அன்புடையவனாய், விருந்தோம்பி, இனியவை கூறி செய்ந்நன்றி அறிந்து, நடுவு நிலைமை தவறாது, அடக்கமுடையவனாய், ஒழுக்கத்தைப் பேணி, சான்றோர் கடியும் குற்றம் களைந்து, அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வாரையும் பொறுத்து, அழுக்காறகற்றி, பிறன்பொருள் வெஃகாது,



புறங்கூருமல், பயனில சொல்லாமல், தீவினை யஞ்சி வாழும் ஒப்புரவாளன் ஒருவனிடத்தே செல்வம் சேருமாயின் அஃது ஊருக்குள்ளேயே உள்ள பழமரம் பழுத்துக் குலுங்குவதற்கு ஒப்பாகும்.

''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்ருல் செல்வம்
நயனுடை யான்கண் படின்''

''ஊருணியில் நீர் நிறைவதையும், ஊரின் நடுவேயுள்ள பயன்மரம் பழுப்பதையும், மழை பொழிந்து ஆற்றில் நீர் பெருகுவதையும் வேண்டாமென்று தடுப்பவர்கள் உண்டோ?'' எனக் கேட்கிருர் கவிமன்னர் கம்பர். இவற்றை யாரும் ஒருபோதும் தடுக்கமாட்டார்கள்; மாருக வரவேற்கவே செய்வர். மரங்களில் நிறைந்துள்ள பழங்களை வேண்டியோர் வேண்டியாங்குப் பறித்து உண்பர். ஏறிப் பறித்து உண்ண முடியாதவர்களுக்கும் கனிந்த கனிகளைக் கனிவுடன் உதிர்த்துச் சுவையூட்டுகிறது பயன்மரம். அதேபோன்று, நேரிற் சென்று வேண்டியவர்க்கு மட்டுமின்றி, வந்து கேளாத பிறர் தேவையையுமறிந்து அவர்க்கும் உதவும் பண்பைப் பெற்றுள்ள நயனுடைய பேராளர்களிடம் சேரும் செல்வம் உலகுக்குப் பெரும்பயன் நல்கும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு மாருகப் பிறர்க்கு இம்மியளவும் கொடுக்க மனமில்லாதவனிடம் செல்வம் சேர்வது, ஊர் நடுவே ஒரு நச்சுமரம் பழுத்ததற் கொப்பாகும்.



''நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று''

நச்சு மரம் கிளைத்து, தழைத்து, பழுத்து நிற்பதால் யாருக்கு யாது பயன்? ஒருவர்க்கும் ஈயாத வன்னெஞ்சக் கயவரிடம் மக்கள் செல்வதேது? செல்வம் ஒருவரிடம் சேரும்போது அது மற்றவர்க்குப் பயன்தரத்தக்கதாய் இருக்கவேண்டும். ''செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்'' அல்லவா? நச்சு மரமனை யாரிடம் அப்பண்பு தோன்றப் போவதில்லை. நச்சு மரத்தில் அமுதம் பழுக்க முடியுமா ? நஞ்சுதானே தோன்ற முடியும் ! பழுத்து நின்ருலும் யாரும் நச்சுமரத்தை அணுகப் போவதில்லை. அம்மரத்தினுல் நன்மை எள்ளளவும் ஏற்படாது. நன்மையில்லாவிட்டாலும் தீமை நேராது என்ருவது கூற முடியுமா ? நச்சுப் பழங்கள் உதிர்ந்து கிடந்தால் அறியாதார் அவற்றை உண்டு மடிய நேரிடலாம். ஈத்துவக்கும் இன்பம் அறியாது வைத்திழக்கும் வன்கணுளர்களாய நச்சு மனிதர்களால் நன்மை இல்லாததோடு தீமையும் அல்லவா விளைந்து விடுகிறது! உள்ளூர்ப் பயன் மரமனைய உத்தமர்களிடையே, நச்சுமரமொத்த நாசகாலர்கள் காணப்படுவது ஏனே? இதுதான் உலகமோ!

யாருக்கும் பயன்படாத, நினைத்தாலே அச்சமூட்டும் நச்சுமரங்களிடையே, வேர், பூ, இலை, காய், கனி, என உறுப்புக்கள் அனைத்தாலும் பிணிபோக்கி நலம் விளைக்கும் மருந்து மரங்களும் இருக்கத்தான் செய்கின்றன. நச்சு மரம் ஊட்டும் நஞ்சினை மாற்றும் ஆற்றலும் அம்மருந்து மரத்துக்கு உண்டு. மருந்து மரமொப்பத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிறர் நலனுக்கெனவே ஈந்து வாழும் பெருந்தகையாளர்களிடம் உள்ள செல்வம் எல்லார்க்கும் நன்மை செய்யும்; ஏற்றம் தரும்.

''மருந்தாகித் தப்பா மரத்தற்ருற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்''

ஒப்புரவறிந்தொழுகும் தகைமையுடையானிடத்துச் சேரும் செல்வம், பிணிகள் தீர்க்கும் மருந்து மரம் போலப் பிறர்க்கு உதவவே பயன்படும். மருந்துக்காக ஒருவர் தழையைப் பறிக்க, மற்ருெருவர் காய்கனிகளைக் கொய்ய, இன்ெனுருவர் வேரை வெட்ட, இவ்விதம் அனைத்தையும் இழந்து அழிந்தாலும், அவற்றை எடுத்துச் செல்வோரின் பிணிபோக்கும் இயல்புடையது மருந்துமரம். அதுபோன்றே தாம் அழிய நேர்ந்தாலும், பிறர் துயர் துடைப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள பெருந்தகையாளர்கள் இருப்பதால்தான் உலகு இயங்குகிறது.

ஒரு மரத்தில் காய்களும் கனிகளும் கலந்து தொங்குகின்றன. கனியைப் பறித்து உண்போன் இனிப்பால் முகம் களிக்கின்ருன்; காயைக் கடிப்போனே புளிப்பால் முகம் சுளிக்கிருன். பழம் இருக்கும்போது அதை விடுத்துப் புளிப்புள்ள காயை உண்ணுதல் பைத்தியக்காரத்தனம் அல்லவா? இனிய சொற்கள் இருக்க, இன்னுத சொற்களைக் கூறுவது கனியிருக்கக் காய்கவர்தற் கொப்பாகும் என்று கூறி இனியவை கூற வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்துகிருர் இன்றமிழ்ப் புலவராகிய வள்ளுவனுர்.

''இனிய உளவாக இன்னுத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று''.
என்கிருர்.

உலக மரங்களைக் கொண்டே திருவள்ளுவர் அருங்கருத்தைச் சொல்லியிருக்கிருர்.






ஆடி மாதத்தில் விதைக்கப்படும் விதைகள் பொதுவாக நல்ல பலனைத் தரும் என்பது காலம் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ள பாடமாகும். எனவே தான் '' ஆடிப்பட்டம் தேடி விதை '' என்ற பழமொழியும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, நம் நல்வாழ்வுக்குத் தேவையான தாதுப் பொருள்களும் (minerals) வைட்டமின்களும் (Vitamins) மிகுதியாக அடங்கியுள்ள காய்கறிகளைப் பயிரிட ஆடி மாதம் மிகவும் ஏற்றது. அதிக மகசூல் அளிக்கக்கூடிய ரகங்களை ஆடி மாதத்தில் விதைத்தால் மிகுந்த மகசூல் பெற முடியும். ஆகவே, அதிக மகசூல் அளிக்கும் கீழ்க்கண்ட ரகங்களை ஆடி மாதத்தில் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்ருேம்.

(1) கோ.1. தக்காளி.

(2) எஸ்.எம். 62 கொத்து வெள்ளைக்கத்தரி.

(3) கே.1. மிளகாய்.

(4) பூசாசவாணி வெண்டை

(5) வெள்ளை முள்ளங்கி.

(6) ஆடுதுறை நீண்ட புடலங்காய்.

(7) கோ-6 அவரை.

(8) கோ—7 அவரை.

(9) நியூ இரா(இ.சி. 455) தட்டைப்பயறு

(10) கோ-1 பரங்கிக்காய்

(11) கோ-1 சாம்பல் பூசணி

(12) அதிநீள உயர்ரகப் பீர்க்கு.

(13) பூசா மௌஸ்மி கொத்தவரை.

14) ஆடுதுறை நீண்ட பச்சைப் பாகற்காய்.

15) கோ.1. தண்டுக்கீரை.

(16) கோ.1. அரைக்கீரை

(17) ஜாப்ஞ முருங்கை.

(18) கோ.1. வெங்காயம்.

மேற்கூறிய விதைகளை சென்னை நகர மக்கள் '' 5/13 எல்டாம்ஸ் ரோடு, தேனும்பேட்டை, சென்னை-18.'' என்ற முகவரியில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் (காய்கறி) அவர்களது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிற இடங்களில் உள்ளவர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாற்றும் துணை வேளாண்மை அலுவலர் (Deputy Agricultural Officer) அவர்களை அணுகிப் பெற்றுக்கொள்ளலாம்.

### புடலங்காய் சாகுபடி.

ஆடிப்பட்டத்திற்கு வெள்ளைக் கோடுகளுடன் கூடிய ஆடுதுறை நீண்ட பச்சை ரகமே மிகவும் சிறந்தது. இந்த ரகம் அதிக மகசூல் அளிப்பதுடன் தரத்தில் உயர்ந்தது. நீண்ட வெள்ளை ரகமும் தரத்தில் உயர்ந்திருந்தாலும், நடுத்தர மகசூலே கொடுக்கும் திறனுடையது. குழிக்குக் குழி 6 அடி இடைவெளி விட்டு $1\frac{1}{2} \times 1\frac{1}{2} \times 1\frac{1}{2}$ அடி அளவுள்ள குழிகள் தோண்டி, ஒவ்வொரு குழிக்கும் 25 கிலோ தொழு உரமும், 100 கிராம் 6-ஆம் எண் கலப்பு உரமும் இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 750 கிராம் விதை வேண்டும். ஒவ்வொரு குழியிலும், 5 அல்லது 6 விதைகளை ஊன்ற வேண்டும். 15 நாட்கள் கழித்து நன்கு வளர்ந்த 3 அல்லது 4 செடிகளை விட்டு விட்டு, மற்றவைகளை நீக்கி விட வேண்டும். விதை ஊன்றிய 30 நாட்கள் கழித்து குழிக்கு 500 கிராம் அமோனியம் சல்பேட் இட வேண்டும். 2 மீட்டர் உயரத்தில் பந்தல் அமைத்துக் கொடிகளைப் படர விட வேண்டும். புடலங்காய் நீண்டு வளரவும், சுருண்டு விடுவதைத் தடுக்கவும், சிறிய காய்களின் நுனியில் சிறு கற்களைக் கட்டித் தொங்கவிட வேண்டும். ஒரு ஏக்கரிலிருந்து 16,000 முதல் 18,000 காய்கள் (8,000 முதல் 9,000 கிலோ) மகசூல் கிடைக்கும்.

புடலங்காய்



### கோ. 1. பரங்கிக்காய்.

கோ. 1 பரங்கிக்காய் தமிழ் நாடு வேளாண்மைத் துறையால் வெளியிடப்பட்ட ரகமாகும். இது சாதாரண ரகத்தை விட வீரியமுள்ளதாகவும், முன்பாகவே பூ பூக்கக் கூடியதாகவும் உள்ளது. இந்த ரகத்தின் காய் கவர்ச்சிகரமாகவும், நல்ல சதைப் பிடிப்புடனும், சுவையாகவும், குறைந்த விதையுடனும் இருக்கும். இந்த ரகம் பெரிய பெரிய காய்களாகக் காய்க்கக் கூடியது. ஒவ்வொரு கொடியும் 7 முதல் 8 கிலோ எடையுள்ள, 7 முதல் 9 காய்களைக் கொடுக்கும். இது உள்ளூர் ரகங்களைக் காட்டிலும் பூச்சி, பூஞ்சாள நோய் தாக்குதலைத் தாங்கும் சக்தியுடையது. இது ஆடிப்பட்டத்தில் விதைப்பதற்கு ஏற்றது. காய் தோன்றிய 50 முதல் 55 நாட்களில், நன்கு முதிர்ந்து பழமாக ஆகிறது. விதை ஊன்றிய 115-வது நாளில் முதல் அறுவடை செய்யலாம். அதன் பின் தொடர்ந்து 120 நாட்கள் வரை அறுவடை செய்யக் கூடும். 8 மாத காலத்தில், 6 முதல் 8 தடவை அறுவடை செய்யக்கூடும். ஒரு ஏக்கரிலிருந்து 12,000 கிலோ மகசூல் அல்லது சுமார் 2,000 காய்கள் கிடைக்கக்கூடும்.

இந்த ரகத்தைப் பயிரிடக் குழிக்குக் குழி 3.5 மீட்டர் இடைவெளி விட்டு, $1\frac{1}{2}$ அடி நீளம், $1\frac{1}{2}$ அடி அகலம், $1\frac{1}{2}$ அடி ஆழம் உள்ள குழிகளைத் தோண்டவும். குழிக்கு 25 கிலோகிராம்

கோ. 1. பரங்கிக்காயை அறிஞர் அண்ணாவும், மறைந்த வேளாண்மை அமைச்சரும் பார்வையிடும் காட்சி



தொழு உரமும், 100 கிராம் 6-ஆம் எண் (6:12:12) கலப்பு உரமும் அடியுரமாக இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 500 கிராம் விதைகள் தேவைப்படும். ஒவ்வொரு குழியிலும் 5 அல்லது 6 விதைகளை ஊன்ற வேண்டும். 15 நாட்கள் கழித்துக் குழிக்கு 2 வீரியமுள்ள செடிகளை மட்டும் விட்டுவிட்டு, மற்ற செடிகளை அகற்றிவிடவும். விதை ஊன்றிய 45 நாள் கழித்து, குழிக்கு 500 கிராம் அமோனியம் சல்பேட் உரத்தை மேல் உரமாக இடவும். தவறாமல் வாரம் ஒரு முறை தண்ணீர் விட வேண்டும்.

### கோ. 1. 'சாம்பல் பூசணிக்காய்

கோ.1. சாம்பல் பூசணிக்காய் பெரியதாகவும், குறைந்த விதையுடனும் (0·8 சதம்), நல்ல சதைப்பிடிப்பாகவும் சுவையாகவும் இருக்கும். ஒவ்வொரு கொடியிலும் 5 முதல் 6 கிலோ எடையுள்ள 6 முதல் 8 காய்கள் காய்க்கக்கூடும். இந்த ரகத்தை நோய்களும், பூச்சிகளும் ஓரளவுக்குத் தாக்காது. இது, விதை ஊன்றிய 90 முதல் 100 நாட்களில் முதல் அறுவடை கொடுக்க ஆரம்பிக்கும். அதன் பின் தொடர்ந்து 140 முதல் 150 நாட்கள் வரை மகசூல் கிடைக்கும். காய் உருவாகியதிலிருந்து 45 முதல் 50 நாட்களில் இந்த ரகத்தின் காய்கள் நன்கு முதிர்ச்சியடையும். இந்த ரகத்தை ஆடிப் பட்டத்தில் சாகுபடி செய்தால், ஏக்கருக்கு 10,000 (சுமார் 2,000 காய்கள்) மகசூல் பெறலாம்.

கோ.1. சாம்பல் பூசணிக்காய் சாகுபடி செய்யக் குழிக்குக் குழி 3 மீட்டர் இடைவெளி விட்டால் போதுமானது. விதை அளவு, அடி உரம், மேல் உரம், தண்ணீர் விடுதல் ஆகியவைகளுக்கு கோ.1. பரங்கிக்காய் சாகுபடிக்குக் கூறப்பட்ட முறைகளையே மேற்கொள்ள வேண்டும்.

### அதி நீள உயர்ரகப் பீர்க்கு

ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்வதற்கு 'அதிநீள உயர் ரகப் பீர்க்கு' (Extra long Ribbed Gourd) மிகவும் ஏற்றது. இந்த ரகத்தை கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியில் உள்ள காய்கறி ஆராய்ச்சிப்



கோ. 1. சாம்பல் பூசணிக்காய்

பிரிவினர் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த ரகப் பீர்க்கு சுமார் 60 சென்டிமீட்டர் (2 அடி) முதல் 75 சென்டிமீட்டர் ($2\frac{1}{2}$ அடி) நீளமுள்ள காய்களைக் கொடுக்க வல்லது. இதன் காய்கள் பசுமை நிறத்துடனும், மிருதுவான தன்மையுடனும் இருப்பதுடன் நல்ல சுவையையும், மணத்தையும் கொண்டுள்ளது. இந்த ரகம் அதிக மகசூல் அளிக்கக் கூடியது. ஒவ்வொரு செடியும் விதை ஊன்றியதிலிருந்து 55 நாட்களில் காய்க்க ஆரம்பித்து, 10 காய்கள் வரை கொடுக்கிறது. பூப்பிடித்து 10 முதல் 1⁴ நாட்களில் காய்களை அறுவடை செய்யலாம். அவ்வாறு அறுவடை செய்தால், செடிக்கு நல்ல வளர்ச்சியும், அதிக மகசூலும் கிடைக்கிறது. ஒரு ஏக்கரில் 6,000 முதல் 7,200 கிலோ காய்கள் கிடைக்கும்.

ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய 1 கிலோ விதை தேவை. புடலைக்குக் கூறப்பட்ட இடைவெளி, உர அளவு, பந்தல் முறை ஆகியவைகளையே பீர்க்கு சாகுபடிக்கும் மேற்கொள்ள வேண்டும்.

பீர்க்கன் காயில் 0.9 சத புரதச்சத்தும் 0.5சதகொழுப்புச் சத்தும், 3.4 சத மாவுச்சத்தும், 2.78 சத தாதுப் பொருள்களும், 49 அளவு வைட்டமின் 'ஏ'



சத்தும், 18 அளவு வைட்டமின் 'டி' சத்தும் உள்ளன. எனவே அதி நீள உயர் ரகப் பீர்க்கு பயிரிட்டுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

### வெள்ளை முள்ளங்கி

வெள்ளை முள்ளங்கி விலை மலிவானதுதான்! ஆனால் ஒரு அவுன்சு முள்ளங்கிக் கிழங்கில் 17 அனைத்துலக அளவு (I.U.) வைட்டமின் 'பி', 4 மில்லி கிராம் வைட்டமின் 'சி' உள்ளது என்பதை உணர்ந்தால் முள்ளங்கியை வெறுப்பவரும் விரும்பி உண்ண முயல்வார்கள். இதை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். விதை விதைத்த 45 நாட்களுக்குப் பிறகும், 60 நாட்களுக்கு முன்பும் அறுவடை செய்துவிட வேண்டும்.

100 சதுர அடியில் முள்ளங்கி சாகுபடி செய்ய 8 கூடை தொழு எரு, 600 கிராம் சூப்பர் பாஸ்பேட், 200 கிராம் மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். அதில்

அதி நீள உயர் ரக பீர்க்கு



4 கிராம் விதையை, வரிசைக்கு வரிசை $1\frac{1}{2}$ அடி இடைவெளி விட்டும், வரிசையில் குழிக்குக் குழி $\frac{1}{2}$ அடி இடைவெளி விட்டும் விதைகளை ஊன்ற வேண்டும். 100 சதுர அடி பரப்பில் 10 முதல் 12 கிலோ மகசூல் பெற முடியும்.

### பூசாசவாணி வெண்டை

வெண்டைக்காயும், விளக்கெண்ணெயும் வழவழப்புக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுகின்றன. வழவழப்பாக இருக்கிறது என்பதனால் வெண்டைக்காயை விரும்பாதோர் பலர் உண்டு. மூளையின் வளர்ச்சிக்கும், இயக்கத்திற்கும், வெண்டைக்காய் சாப்பிடுவது மிகவும் நல்லது. ஒரு அவுன்சு (28·35 கிராம்) வெண்டைக்காயில் 0·6 கிராம் புரதச்சத்து, 0·1 கிராம் கொழுப்பு, 2·2 கிராம் மாவுப் பொருள், 25 மில்லி கிராம் சுண்ணாம்புச் சத்து (கால்சியம்), 23 மில்லி கிராம் பாஸ்பரஸ் சத்து, 0·4 மில்லி கிராம் இரும்புச் சத்து, 16 அளவு (I.U.) கரோட்டின் எனப்படும் வைட்டமின் 'ஏ' சத்து, 6 அளவு வைட்டமின் 'பி' சத்து, 4 மில்லி கிராம் வைட்டமின் 'சி' சத்து ஆகியவைகள் உள்ளன.

'பூசாசவாணி' என்ற வெண்டையை ஆண்டு முழுவதும் எப்பொழுது வேண்டுமானாலும் பயிரிடலாம். ஆனால் ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறலாம். நிலத்தை நன்கு உழுது, கடைசி உழவில் ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு, 40 கிலோ அமோனியம் சல்பேட், 120 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இட்டு 2 அடிக்கு ஒரு பார் வீதம் அமைக்கவும். ஏக்கருக்கு 2 கிலோ விதையை ஊன்ற வேண்டும். பாரின் ஒரு பக்கத்தில் 8 அங்குல இடைவெளியில் விதைகளை இரண்டு இரண்டாக ஊன்றவும். விதை ஊன்றிய 14 நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு குழியிலும் நன்கு வளர்ந்த ஒரு செடியை மட்டும் விட்டுவிட்டு, மற்றதை அகற்றி விடவும். விதை ஊன்றிய 4 வாரம் கழித்து 40 கிலோ



வெள்ளை முள்ளங்கி

அமோனியம் சல்பேட் உரத்தை மேலுரமாக இடவும். விதை ஊன்றிய 40 முதல் 45 நாட்களில் முதல் அறுவடை செய்யலாம். அதன்பின் தொடர்ந்து 45 முதல் 50 நாட்களுக்கு, ஒரு நாள் விட்டு, மறுநாள் வீதம் அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கரிலிருந்து 5,000 கிலோ மகசூல் பெறலாம்.

### பந்தல் தேவையில்லா அவரை

அவரைக் கொடியைப் பொதுவாகப் பந்தலிலே படரவிடுவது தான் பழக்கம். ஆனால் தமிழ் நாடு அரசின் வேளாண்மைத் துறையால் வெளியிடப்பட்டுள்ள கோ-7 ஆகிய அவரை ரகங்களுக்குப் பந்தல் தேவையில்லை! இந்த ரகங்களுக்கு மேலும் சில



விந்தையான குணங்களும் உண்டு; அவைகளின் விவரம் இதோ!

(1) அவரையின் இளங்காய்களைத்தான் பயன்படுத்துகிறோம். அவரையின் விதைகளைப் பச்சையாகவோ காய்ந்த பின்போ பயன்படுத்துவதில்லை. மொச்சைக்காய்களில் அதிக நார்த்தன்மையும், எண்ணெய் வாடையும் இருப்பதால், அவைகளை அவரைக்காயைப் போல் பயன் படுத்துவதில்லை. மொச்சையின் விதைகளை மட்டுமே பச்சையாகவோ, அல்லது காய்ந்த பின்போ பயன்படுத்துகிறோம். ஆனால் மேற்கூறிய ரகங்களின் இளங்காய்களை அவரைக்காயைப் போல் காய்கறியாகவும், முற்றிய விதைகளைக் காயவைத்து மொச்சையைப் போல் பயறு ஆகவும் பயன்படுத்தலாம். மொச்சை, அவரை ஆகியவற்றின் இரு வகைப் பயன்களையும் ஒருங்கே கொண்டுள்ளவை. மேற்படி ரகங்களென்றால் மிகையல்ல! எனவேதான் மொச்சை—அவரை என்றும் அழைக்கப்படுகிறது!

(2) அவரையும், மொச்சையும் பருவக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவைகள்; அதாவது குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே வளரக் கூடியவைகள்; பெரும்பாலும் ஆடி மாதத்தில் மட்டுமே விதைக்கப்படுகின்றன. ஆனால் மேற்கூறிய ரகங்களை ஆண்டு முழுவதும் எந்தப் பட்டத்தில் வேண்டுமானாலும் பயிரிடலாம்.

(3) மேற்கூறிய ரகங்களை [illegible]வையாகவும், மானாவாரியாகவும் பயிரிடலாம்.

(4) இப் புதிய ரகங்களின் செடி சிறியனவாகவும், படருந் தன்மையில்லாமலும் இருக்கும். இதனாலேயே பந்தல் தேவைப்படவில்லை.

(5) அவரையைப் போன்றோ அல்லது மொச்சையைப்போன்றோ இல்லாமல், மேற்கூறிய காலப் பயிர்களாகும். இவைகளின் வயது 120 நாட்களே.

(6) மேற்கூறிய ரகங்கள் விதைத்ததிலிருந்து 40 முதல் 45 நாட்களுக்குள் பூத்துக் காய்க்கத் துவங்கிவிடும். பூத்ததிலிருந்து 14 முதல் 16 நாட்களுக்குள் காய்கறியாகப் பயன் படுத்துவதற்கேற்ற காய்களைக் கொடுக்கும்.

(7) மொச்சைக் காய்களில் உள்ள நார்த்தன்மையும், எண்ணெய் வாடையும் இந்த ரகக் காய்களில் இல்லை.



அவரை

(8) இந்த ரகங்கள் பூத்ததிலிருந்து 16 முதல் 18 நாட்களுக்குப் பின் காய்கள் முற்ற ஆரம்பித்து விடுகின்றன.

(9) இப்புதிய ரகங்களின் காய்கள் அளவு, உருவம், சுவை ஆகியவற்றில் அவரைக்காய்களைப் போலவே உள்ளன.

(10) மேற்கூறிய ரகங்களின் காய்களிலும், விதைகளிலும் சாதாரண அவரைக்காய் அல்லது மொச்சை விதைகளில் உள்ளதை விட அதிகப் புரதச் சத்தும், கொழுப்புச் சத்தும் அடங்கியுள்ளன. எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டுமானால், மொச்சையின் இளங்காய்களில் 18·52 சதமும், அவரையில் 22·10 சதமும் புரதச்சத்து உள்ளது. ஆனால், 29·70 சத புரதச்சத்து உள்ளது. அதுபோலவே மொச்சைக் கொட்டையில் 22·90 சதமும், அவரையின் காய்ந்த விதைகளில் 24·40 சதமும், கோ-1 மொச்சை-அவரையின் காய்ந்த விதைகளில் 25·40 சதமும் புரதச்சத்து உள்ளது.

கோ-1, கோ-7 என்ற மொச்சை—அவரை ரகங்களைப் பயிரிட ஏக்கருக்கு 20 வண்டி தொழு எருவும், 10 கிலோ தழைச்சத்தும் (50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியா), 20 கிலோ மணிச்சத்தும் (125 கிலோ சூப்பர் பாஸ்பேட்) அடியுரமாக இடவேண்டும். ஏக்கருக்கு 10 கிலோ விதைகளை, வரிசைக்கு வரிசை 2 அடி இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 6 அங்குல இடைவெளியும் விட்டு ஊன்ற வேண்டும். அசுவணிப்பூச்சி தாக்கினால் மெட்டாசிஸ்டாக்ஸ் 0·05 சதம் தெளிக்க வேண்டும்.

மேற்கூறிய முறையில் சாகுபடி செய்தால், ஏக்கருக்கு 2,000 கிலோகிராம் அவரைக்காய் அல்லது 520 கிலோ மொச்சை விதை கிடைக்கும். எனவே பந்தல் தேவையில்லா அவரையைப் பயிரிட்டுப் பயன் மிகப் பெறுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

பந்தல் இல்லா அவரை





# 4

# திருவாளர் பொன்மொழியார்

இளவல்

ஓடும் ரயிலில்........
ஓயாத சிந்தனை..........
மனப் போராட்டம்....
உறக்கம் வருமா பொன்மொழியாருக்கு? .. ..

காலை நீட்டித் தூங்குமளவுக்கு ரயிலில் கூட்டமில்லை அன்று. எதிர் வரிசையிலே ஒருவர் தூங்கி வழிந்தார். அவருக்குப் பக்கத்திலே காவி உடுத்திய சாமியார் ஒருவர், உலகிலே நான் எதைத் துறந்தாலும் துறப்பேன், தூக்கத்தை மட்டும் துறக்க மறுப்பேன் என்ற உறுதி கொண்ட நெஞ்சினராய், ரயிலின் தாளத்துக்கு ஏற்பத் தலையசைத்துத் தூங்கினார்.

அவரைப் பார்த்தவுடன் பொன்மொழியாருக்கு 'ஞானோதயம்' பிறந்தது. அந்த ரயில் பெட்டி 'போதிமரமாக' மாறி விட்டது அவருக்கு.

'உன் உள்ளம் எப்படியோ, அப்படியே உலகம்'—என்ற யூகோஸ்லாவியாப் பழமொழி வழக்கம்போல் நினைவுக்கு வந்தது.

ஆகவே, எண்ணித் துணிந்தார் பொன்மொழியார்.

புத்தகங்களைப் பறிகொடுத்ததனால் இவ்வுலகில் தான் அனுபவித்து வந்த அனைத்தையும் துறக்க முடிவு செய்தார். ஆமாம், அவர் துறவியாக முடிவு செய்து விட்டார். எதிரே தூங்கிய காவி உடைச் சாமியார் பொன்மொழியாருக்குக் காட்டிய வழி.

அதே நேரத்தில் அவர் உள்ளத்தில் ஓர் ஐயம் எழுந்தது. நாம் இப்படி ஓடும் ரயிலில் துறவியானால், இது ஊருக்கு எப்படித் தெரியும்? உலகுக்கு எப்படித் தெரியும்? என்பதுதான் அந்த ஐயம்.....................

எண்ணித் துணிந்தபின் இப்படி எண்ணுவது இழுக்கு என்று அவரது தமிழறிவு சொல்லிற்று.........ஆனால்........

ஒரு சிறு துளி நீர், கொதிக்கும் பாலையை அமைதிப்படுத்துவது போல்—அந்த ஐயம் அவரது திட்டத்தையே மாற்றி விட்டது.

தான் துறவு பூண்டது கூட விளம்பரம் ஆகாவிட்டால் அந்தத் துறவுக்கு ஏது மவுசு, என்ற அவரது கடைசி ஆசையே வென்று விட்டது.

'ஆசையில்லாத மனிதன் ஆதம் மகனல்ல' என்ற பாரசீக மொழியை நினைத்துக் கொண்டார். அதன் தொடர்ச்சியாக அயர்லாந்து நாட்டுப் பழமொழி ஒன்றும் நினைவுக்கு வந்தது. "ஒரு விஷயத்தை நீ விளம்பரம் செய்ய வேண்டுமா? அதை இரகசியமாக ஒரு பெண்ணிடம் சொல்" என்ற அந்த மொழியை உடனே செயல் படுத்தினால் துறவு பூண்டு விடலாம் என்று முடிவு கட்டினார். ரயிலில் பெண்கள் யாராவது இருக்கிறார்களா என்பதை அறிய எழுந்து நின்றுபார்த்தார். அந்தப் பெட்டியில் எந்தப் பெண்ணும் இல்லை..........

பொன் மொழியார் மீண்டும் ஒரு திடமான முடிவுக்கு வந்தார், இப்பொழுது உடனடியாகத் 'துறவு' பூணுவதில்லை என்று.

நினைப்பது ஒன்றும் நடப்பது ஒன்றுமாக இருப்பதுதானே இந்த உலகம்!

பொன் மொழியாரின் நல்ல காலமோ, கெட்ட காலமோ எதிரே தூங்கி வழிந்தவர் விழித்துக் கொண்டார். பொன் மொழியாரைப் பார்த்தவுடன் பேசவும் தொடங்கினார்.

"ஐயா, ரொம்பத் தூரமோ?"

"சிவகாசிக்குப் போகிறேன்."

"நான் மதுரைக்குப் போகிறேன்........உங்களுக்குச் சிவகாசிதான் சொந்த ஊரோ?"

பேச ஆரம்பித்தவர் உடனே நிறுத்த மாட்டார் போல் தோன்றிற்று.

பொன்மொழியார் பொறுமையாகப் பதில் சொல்லத் தொடங்கினார். இருவருடைய பேச்சும் தூங்கிக் கொண்டிருந்த சாமியாரையும் எழுப்பிற்று. அதன் விளைவு மூவரும் உரையாடத் தொடங்கினார்கள்.

சாமியார் பேசினார், "இன்று ரயிலில் கூட்டமில்லை! நிம்மதியாகப் பயணம் செய்ய முடிகிறது."

"சாமி, அடிக்கடி ரயிலில் பயணம் செய்வது பழக்கமோ"—அருகில் அமர்ந்திருந்தவர் கேட்டார்.

"யாதும் ஊரே! யாவருங் கேளிரே என்று எண்ணுபவன் எங்கே ஓர் இடத்தில் இருக்க முடியும்?"—பதிலுரைத்தார் சாமியார்.

"அது எப்படி முடியும்? எல்லாச் சொந்தக் காரர்களையும் சந்திக்க வேணுமே? இல்லாவிட்டால் கோபித்துக் கொள்ள மாட்டார்களா? போக வேண்டியதுதானே?"—மதுரைக்காரர் குறும்பாகப் பேசுகிறாரா, அப்பாவித்தனமாகச் சொல்லுகிறாரா என்று புரிந்து கொள்ள முடியாமல் பொன்மொழியார் குழம்பினார்.

சாமியார் சாதாரணமாகப் பேசினார். ஆனால் மதுரைக்காரர் பேச்சுக்கு அதில் மறுமொழி அடங்கியிருந்தது. 'யார் யாருக்கு உறவில்லை? அனைவரும் ஆண்டவன் குழந்தைகள்' என்றார்.







"யாரும் இதுவரை கண்டு பிடிக்காத அருமையான கண்டு பிடிப்புங்க இது" —என்ற மதுரைக்காரரின் பேச்சு பொன் மொழியாருக்கு நாகரிகமாகத் தென் படவில்லை. இப்படி நேரடியாகவா முகத்தை முறிப்பது? ஆகவே அவரும் பேச்சைத் தொடங்கினார்.

" டென்மார்க் நாட்டிலே ஒரு பழமொழிங்க .......... 'ஒருவன் கடவுளை நோக்கிச் செல்கிறான் ...... ஒருவன் சைத்தானை நோக்கிக் குதித்தோடுகிறான்—' என்பது. அது மாதிரி மக்கள் பலவிதம்; பலர் பலமாதிரி இருக்கிறாங்க.... சிலர் கண்டுபிடிப்புகள் சிலருக்குக் கண்டு பிடிப்புகளாகத் தோன்றாமல் இருக்கலாம்."

மதுரைக்காரர் மௌனமாக இருந்தார்! அவரை வம்புக்கு இழுக்க வேண்டும் என்ற எண்ணம் பொன்மொழியாருக்குத் தோன்றிற்று.

அதற்குத் தூபம்போடும் வகையில் சாமியார், "ஆமாங்க, உண்மைக்கு அழிவேது? நீங்க சொல்வது ஆயிரத்தில் ஒரு வார்த்தை" என்றார்.

பிறகு பொன்மொழியார் சும்மா இருப்பாரா? மதுரைக் காரரைப் பார்த்துக் கேட்டார்: " நீங்க என்ன நினைக்கிறீங்க?"

'வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு' என்பது போல்

பதில் சொன்னர் அவர் : " நரி உபதேசம் பண்ணத் தொடங்கினுல் உன் கோழிகளைக் கவனி—என்ற அல்பேனிய நாட்டுப் பழமொழியை நினைச்சுக்கிட்டிருக்கிறேன் "...........

" என்ன அல்பேனியாப் பழமொழியா ?"

"அமெரிக்கப் பழமொழியைக் கூட நினைச்சுக்கிட்டு இருக்கேன்."

" அது என்ன பழமொழி ? "

"தலைக்கு மேல் பறவை பறப்பதை உன்னுல் தடுக்க முடியாது! ஆனல், அது உன் தலையில் கூடு கட்டுவதைத் தடுக்க முடியும் என்ற பழமொழி."

தனக்குச் சரியான ஜோடி கிடைத்து விட்டதால் சுவாரஸ்யமாகப் பேச நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார் பொன்மொழியார். இது வரை தான் ஆதரித்த சாமியார் பக்கம் அவர் திரும்பவில்லை.

சாமியார் தான் மட்டும் விலகியிருக்க விரும்பவில்லை. அவராக அவர்களுடைய பேச்சில் கலந்து கொண்டார். அவர்களுடைய பேச்சுக்களை ஆதரித்தார்; அனுபவ மொழிகளைப் பாராட்டினர். பொன்மொழியார் போன்று ஓர் அறிவாளி இந்த உலகத்தில் இருக்க முடியாது என்று சொன்னர்.

அவ்வளவு போதுமே பொன்மொழியார் மயங்க ! "ஞானம் ஞானத்தைத் தேடும். இனம் இனத்தைச் சேரும் ! எம்மை நீரே புரிந்து கொண்டீர்" என்ருர்.

பொன்மொழியார் தம் பெருமைகளை எடுத்துரைத்தார். சாதனைகளை விவரித்தார். இன்று அடைந்துள்ள வேதனைகளை விளக்கினர். ........

இவை அனைத்தையும் கேட்க தான் எதுவும் பாவம் செய்ய வில்லை என்பது போல மதுரைக்காரர் தூங்கி விட்டார்.

சாமியார் மட்டும் பொன்மொழியாரின் புகழ் மிக்க சரித்திரத்தைக் கேட்டுக் கேட்டு உருகினர்.

அந்த உருக்கமே, அவரைத் தன் குருவாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பொன்மொழியாரிடம் சொல்லிற்று.

பொன்மொழியார் மனம் திறந்து சொன்னர்: " நான் தங்களின் சீடனுக வேண்டும். செருப்பில்லை என்று நான் முணங்கிக் கொண்டிருந்தேன். காலில்லாதவனைக் காணும் வரை ' என்பது அரேபியப் பழமொழி—உங்களைக் காணும்வரை வேறு எதையோ தேடினேன்."

தன்னைத் திடீரென்று இப்படி உயர்ந்த நிலைக்குக் கொண்டு போய்ப் பேசிய பொன்மொழியாரைச் சாமியார் சித்த சுவாதீனமுள்ளவரா என்று சந்தேகித்தார்.

" ஒரு பெண்ணை அழகானவள் என்று சொல்; சைத்தான் அவளுக்குப் பத்துத்தடவை திருப்பிச் சொல்வான் " என்றுதான் சாமியார் அனுபவ பூர்வமான மொழியை அறிந்திருக்கிருர். ஆனல், ஓர் ஆண் மகனைப் புத்திசாலி என்று சொல்லி விட்டால் இப்படி மயங்குவான் என்று கேள்விப்பட்டதே இல்லை.

முதலில் பொன் மொழியாரைச் சீடனுக ஏற்க மறுத்தவர் பிறகு ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தார். ரயிலும் ஒரு ஸ்டேஷனில் நின்றது.

" இரண்டு நிமிடத்தில் வருகிறேன் " என்று பொன்மொழியாரின் திடீர் ' குரு ' கீழே இறங்கினர்.

ரயில் உடனே ஊதிக்கொண்டு கிளம்பத் தொடங்கியது. குருவைக் காணவில்லையே என்று ரயிலின் கதவைத் திறந்து கொண்டு பொன்மொழியார் எட்டிப் பார்த்தார்.

இரண்டு போலீஸ்காரர்கள் ஓடி வந்து அவரை இடிக்காத குறையாக ஏறினர்கள்.

(தொடரும்)


உறுதிக்கும்
உழைப்பிற்கும்

CHETTINAD BRAND

செட்டிநாடு
சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது

தயாரிப்பாளர்கள் :
செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி: 'BESTCEMENT' போன்: 27256.

பாக்டரி: புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்
தந்தி: 'CEMENT' போன்: 144.




# வழங்கியோர் பட்டியல்




| | | |
|---|---|---|
| துணை ஆணையர், விவசாய வருமான வரி அலுவலகம், திருநெல்வேலி (காசோலை). | 500 | 00 |
| பாலசுப்பிரமணியா டூரிங் டாக்கீஸ், புத்தியம்புதூர் (காசோலை). | 28 | 23 |
| நிர்வாக அலுவலர், நேலூர் நகர் ஊராட்சி. | 250 | 00 |
| நிர்வாக அலுவலர், ஜக்கனேரி ஊராட்சி. | 100 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பூவிருந்தவல்லி. | 83 | 50 |
| வட்டார இணை ஆட்சியாளர், வீரகேரளம் புதூர், திருநெல்வேலி. | 620 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், வாலாஜாபாத். | 152 | 50 |
| துணைப் பதிவாளர், கடம்பூர் | 45 | 00 |
| தலைமையாசிரியர், அரசினர் போர்டு உயர் நிலைப்பள்ளி, உப்பிடாமங்கலம், திருச்சி. | 25 | 00 |
| இந்தியா சிமெண்ட்ஸ், சென்னை | 2,500 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலகம், தூத்துக்குடி. | 1,585 | 00 |
| துணைப்பதிவாளர், ஒட்டப்பிடாரம் | 74 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம். | 600 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், உடன்குடி, நெல்லை மாவட்டம். | 556 | 50 |
| துணைப்பதிவாளர், நெல்லை | 150 | 00 |
| மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், பசவன் சத்திரம். | 40 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீபெரும்புதூர். | 830 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருத்தணி. | 100 | 00 |
| சென்னை ரிப்போர்ட்டர்ஸ் கில்டு | 101 | 00 |
| திரு டி. ஆர். சுப்ரமணியம், 92, ராசப்பச் செட்டித் தெரு, சென்னை | 301 | 00 |
| திரு ஏ. ஆர். கோபால், தலைவர், ஊராட்சி ஒன்றியம், லால்குடி, அன்பில். | 125 | 00 |
| திருமதி ஆல்டா எம். ப்ளவர், எம்.எல்.ஏ. அகில இந்திய ஆங்கிலோ இந்தியச் சங்கம், கோவை. | 500 | 00 |
| திரு எம். சின்னசாமி, மடுவட்டம், நீலகிரி | 101 | 00 |
| திரு காஞ்சி கல்யாணசுந்தரம், எம்.பி. | 100 | 00 |
| கொம்பர் நகர் தி.மு. கழகம் | 101 | 00 |
| திருமதி தமிழ்ச் செல்வி | 2 | 00 |
| திரு மதுரை எஸ். பி. ராமலிங்கம் | 51 | 00 |
| ஆவணிப்பேட்டை வள்ளியம்மாள் | 2 | 00 |
| திரு எஸ். ஏ. எம். உசேன், ஆயிரம் விளக்கு | 101 | 00 |
| திரு ஏ. ஆர். சுப்பையா, தி.மு.க. கடையநல்லூர் | 33 | 00 |
| திரு எம். எஸ். மணி, காமராஜ் மார்க்கட், விழுப்புரம். | 1 | 00 |
| செயலர், எம். ஜி. ஆர் மன்றம், வேலூர் (சேலம்). | 16 | 00 |
| தொழில் ஆய்வாளர், திருநெல்வேலி | 500 | 00 |
| திரு ஏ. சிவகுமார், கடைநிலை ஊழியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, கன்னியாகுமரி. | 5 | 30 |
| ஸ்ரீநிவாசா குடிசைத் தொழில், கோவை-6. | 25 | 00 |

| | | |
|---|---|---|
| சிக்கராயபுரம், கருங்கல் ஜல்லி தயாரிப்பாளர் (திரு. ராஜரத்தினம், எம்.எல்.ஏ. மூலம்) | 151 | 00 |
| திருமகன் ராஜதுரை | 101 | 00 |
| திரு இப்ராஹிம், வாயிற்காவலன், கென்வின் உயர் நிலை ஆரம்பப்பள்ளி, கோவை. | 10 | 00 |
| திரு ஆர்.எஸ். சுந்தரம், ஆனந்தா இண்டஸ்ட்ரீஸ், திருவொற்றியூர், சென்னை-19. | 12 | 00 |
| வாசன் அறக்கட்டளை | 10,000 | 00 |
| உதயம் புரொடக்ஷன்ஸ் | 1,001 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், தென்காசி. | 1,100 | 00 |
| வட்டார ஆட்சியாளர், தாராபுரம், கோவை. | 1000 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கடைய நல்லூர். | 85 | 00 |
| துணைப்பதிவாளர், நிலவள வங்கி, காஞ்சி புரம். | 404 | 64 |
| ஆணையர், குன்னத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை. | 830 | 00 |
| துணைப்பதிவாளர், தூத்துக்குடி | 137 | 50 |
| டிவிஷனல் என். இ. எம். பி. அலுவலர், தூத்துக்குடி. | 75 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பள்ளிப் பட்டு, செங்கற்பட்டு. | 625 | 00 |
| மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், சேந்தமரம். | 20 | 00 |
| உதவியாளர், திருநெல்வேலி | 119 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கோடைக் கானல். | 300 | 00 |
| திரு எம். பி. நாராயணன், உரிமையாளர், ஸ்ரீலேகா ஹோட்டல், சென்னை-2. | 5,000 | 00 |
| அஞ்செட்டி விவசாய சங்கம் | 5 | 00 |
| திரு வி. பெருமாள் | 5 | 00 |
| திரு சாந்தகுமார், சீரணிப்படை | 5 | 00 |
| திரு பி. வெங்கடாசலம், சாமல்பட்டி | 10 | 00 |
| திரு எ. டி. லட்சுமணன் | 5 | 00 |
| வனத்துப்பட்டி விவசாயச் சங்கம் | 5 | 00 |
| 16-வது வட்டம் தி. மு. க. .. .. | 15 | 00 |
| 2-வது வட்டம் தி. மு. க. .. .. | 10 | 00 |
| எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம் .. .. | 5 | 00 |
| மேல்மனூர் தி.மு.க. கிளை அலுவலகம் | 5 | 00 |

| | | |
|---|---|---|
| வேலூர் நகர் பொருளாளர் .. | 5 | 01 |
| சர்கரி ஆலை முன்னேற்ற தொழிலாளர் சங்கம். | 10 | 00 |
| வலையத்தூர் கிளை .. .. .. | 10 | 00 |
| நர்த்தம் பட்டு கிளை தி.மு.க. .. .. | 5 | 00 |
| தெரியாத நபர் .. .. .. | 5 | 00 |
| டிை .. .. .. .. | 1 | 00 |
| டிை .. .. .. .. | 5 | 00 |
| அண்ணு மன்றம் .. .. .. | 1 | 00 |
| வேலைபாடி தி.மு.க. .. .. .. | 1 | 00 |
| தெரியாத நபர் .. .. .. | 10 | 00 |
| பொதுச் செயலாளர், தமிழ் நாடு தாழ்த்தப்பட்ட சலவையாளர் சங்கம் சாமாநல்லூர், தென் ஆர்க்காடு மாவட்டம். | 10 | 00 |
| காவேரி மணியம், செயலாளர், (மதுரை (தெற்கு) மாவட்ட தி.மு.க. | 20 | 00 |
| ஆசிரியர்கள், கன்னிகா பரமேஸ்வரி தொடக்கப்பள்ளி, கோயம்புத்தூர். | 11 | 00 |
| கலைஞர் கருணாநிதி மன்றம் .. .. | 10 | 00 |
| முதல்வர் மூலமாக பொதுமக்களிட மிருந்து நிதி. | 68 | 00 |
| கூட்டுறவு ஆலைத் தொழிலாளர் சங்கம் தாராபுரம். | 48 | 00 |
| அண்ணு மன்றம், காரமடை .. .. | 25 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், சேலம் .. (காசோலை). | 9,777 | 00 |
| உணவு அமைச்சரிடமிருந்து .. .. | 7,310 | 25 |
| முதலமைச்சர் அலுவலகம் (காசோலை). | 10 | 00 |
| டிை | 25 | 00 |
| உணவு அமைச்சர் அலுவலகம் .. | 50 | 00 |
| டிை | 1,039 | 62 |
| சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் .. | 4,168 | 00 |
| தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர், (காசோலை). | 53,133 | 85 |
| பரங்கிமலை ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் | 21 | 00 |
| 12-வது பிளாக், பகுத்தறிவு மன்றம், நெய்வேலி. | 7 | 00 |
| முதலமைச்சர் அலுவலகம் .. .. | 9 | 00 |

| | ரூ. | பை. |
|---|---|---|
| மாவட்ட ஆட்சித்தலைவர், (காசோலை) சேலம். | 3,696 | 50 |
| டிை | 6,939 | 75 |
| டிை | 3,934 | 50 |
| டிை | 8,039 | 00 |
| ஊராட்சித் தலைவர், திருச்செந்தூர் ஊராட்சி மன்றம். | 501 | 00 |
| தலைவர், காயல்பட்டினம் பேரூராட்சி, திருநெல்வேலி மாவட்டம். | 340 | 00 |
| ஏ. கலுங்கு மொய்தீன், நிர்வாக அதிகாரி, ஆறுமுகநேரி, திருநெல்வேலி. | 288 | 00 |
| மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் (காசோலை). | 10,000 | 00 |
| டிை | 6,932 | 00 |
| கிருஷ்ணகிரி டிவிஷன் மல்லிபட்டி கிராமம் | 5 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் (காசோலை). | 36,960 | 13 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தென் ஆர்க்காடு (காசோலை). | 16,000 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி (காசோலை). | 482 | 00 |
| சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத் தலைவரும், ஊழியர்களும். | 501 | 00 |
| தி.மு.க. கட்டாலூர். .. .. | 50 | 00 |
| ஊராட்சி ஒன்றியத் தலைவர், கோட்டங் கால். | 15 | 00 |
| செல்வராஜ், ஊராட்சித் தலைவர், வெங்கிகல். .. .. .. | 10 | 00 |
| மாணிக்கக் கவுண்டர், தலைவர், நல்லம். | 11 | 00 |
| கணேசன், ஊராட்சித் தலைவர், ஆண்டில் | 11 | 00 |
| திரு சாமாராஜ், ஊராட்சித் தலைவர், எடபாளையம். | 11 | 00 |
| திரு துரைசாமி, ஊராட்சித் தலைவர், மேலப்பம்பாடி. | 11 | 00 |
| முத்து கவுண்டர், ஊராட்சித் தலைவர், கீழ் நாச்சிப்பட்டி. | 10 | 00 |
| கரூர் வியாச பாங்கு (காசோலை) .. | 500 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், (காசோலை) | 660 | 50 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், வட ஆர்க்காடு | 1,500 | 00 |

| | |
|---|---|
| மாட்ட ஆட்சித் தலைவர், தென் ஆர்க்காடு (காசோலை). | 4,000 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியா குமரி. | 3,166 |
| டிை | 12,72 |
| டிை | 2,166 |
| டிை | 10 |
| டிை | 4,756 |
| டிை | 1,275 |
| மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியா குமரி (அட்டை விற்பனை மூலம்). | 3,661 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் .. | 33,691 |
| டிை | 30,909 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி .. | 814 |
| டிை | 782 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் .. | 64,848 |
| டிை | 24,777 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், வட ஆர்க்காடு, வேலூர் (காசோலை). | 2,000 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், (காசோலை) தர்மபுரி. | 440 |
| டிை | 381 |
| டிை | 900 |
| டிை | 500 |
| டிை | 665 |
| டிை | 313 |
| டிை | 500 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியா குமரி. | 7,395 |
| டிை | 4,625 |
| டிை | 2,169 |
| டிை | 3,928 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தென் ஆர்க்காடு. | 13,995 |
| மாவட்ட ஆட்சித் தலைவர் நீலகிரி .. | 50 |
| டிை | 98 |
| டிை | 247 |
| வேளாண்மை அமைச்சர் அலுவலகம். | 816 |
| முதலமைச்சர் அலுவலம் .. .. | 1,393 |



(தொடரும்








# ஏன் இந்தக் காதல்?

## 3. வெண்ணிற ஆடை வேண்டாம்!

தேன்மொழியின் எடுப்பான மூக்கு இருக்கிறதே, அது உள் நாக்கு வெளியில் தெரியாத, சின்னஞ்சிறு வெண்கலப் பூசை மணியையே அப்போது பேரின்ப முத்துவுக்கு நினைவூட்டிற்று. அதன் அருகே தமது புறங்கையை வைத்து அவளுக்கு மூச்சு வந்து போகிறதா என்று முடிவு செய்வதற்குள், அவருடைய மூச்சே நின்றுவிடும்போல் நெஞ்சு கனத்துக் கொண்டு வந்தது.

ஆனல், அவர் அஞ்சியவாறு 'சொர்க்கம்' எனச் சொல்லப்படும் அந்த அற்புதமான கற்பனைக் களிப்பு மண்டலத்திற்கு அதற்குள்ளே பயணம் புறப்பட்டு விடவில்லை தேன்மொழி!

எப்படித்தான் புறப்படுவாள்? காதல் கரும்பின் எல்லாக் கணுக்களையுமே கடித்துச் சுவைத்து—இனிப்பு, துவர்ப்பு, உறைப்பு, கசப்பு முதலான எல்லா நிலைகளிலுமே இடறி விழுந்து—அவள் அலுக்கவோ களிக்கவோ, திளைக்கவோ தேம்பியழவோ வேண்டாமா!

எனவே அவளது உயிர்மூச்சு சீராகவேதான் ஓடிக்கொண்டிருந்தது! பேரின்பமுத்துவின் புறங்கையிலும் அது வெப்பத்தை விசிறி விட்டேதான் ஓடிக்கொண்டிருந்தது.

என்றாலும்கூட, மரத்துள் ஒட்டிக் கொண்டிருக்கும் பனித்துண்டம் போல வேர்வை முத்துக்கள் அரும்பிச் சில்லிட்டுக் குளிர்ந்திருந்தது தேன்மொழியின் நெற்றி; அதனால் அவரது அச்சம் முழுவதுமாக அவரை விட்டு அகலுவதாக இல்லை.

காரைவிட்டுத் தலையை வெளியே இழுத்துத் திரும்பிப் பார்த்த அவர்,

''மாதவா, உனக்கு டாக்டர் பூங்கொடியின் வீடு தெரியுமா?''—என்று கேட்டார்.

''ஓ, தெரியுமே!''—என்றான் அவன்.

''என் 'பிளைமவுத்' வண்டியை எடுத்துக்கொண்டு போய் உடனே அந்த டாக்டரை அழைத்துக் கொண்டு வா.''

''இந்நேரம் அவர் மருத்துவமனைக்குப் போயிருப்பாரோ என்று நினைக்கிறேன்.''

''போனால் என்ன! முதலில் வீட்டைப் போய்ப் பார்த்துவிட்டு இல்லையென்றால் அங்கேயே போய் அழைத்து வந்து விடு.''

''ஆனல் — —''

''என்ன ஆனல்?''

''தனக்காகக் காத்திருக்கும் நோயாளிகளையெல்லாம் பாதியிலேயே தவிக்க விட்டுவிட்டு அவரால் எப்படி உடனே இங்கே ஓடி வர முடியும் என்றுதான் யோசிக்கிறேன். அவருக்குத் தொல்லை இல்லாமல் இருப்பதற்கு இந்த மாதிரிச் செய்தால் என்ன? இப்படியே இந்த வண்டியிலேயே தேன்மொழியைக்கொண்டுபோய் அவரிடம் நான் காட்டிவிட்டு வந்து விடுகிறேனே! அவருக்கும் நேரம் மிச்சமாகும்; நமக்கும் —''—மாதவன் தன் வார்த்தைகளை முடிப்பதற்குள் பேரின்பமுத்து சிறிது சூடாகவே குறுக்கிட்டார்.

''என் மகள் டாக்டரைத் தேடிப்போக வேண்டுமா, டாக்டர் என் மகளைத் தேடி வர வேண்டுமா என்பது எனக்குத் தெரியும். முதலில் நான் என்ன சொன்னேனே அதை நீ செய்''—என்றவாறே தம் சட்டைப் பையிலிருந்து 'கோல்ட் பிளேக்' சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார் அவர்.

அவருடைய குரலில் வெடித்த அழுத்தம் மாதவனைத் திகைக்க வைத்தது.

அ. மறைமலையான்

''செல்ல மகளைப் பறி கொடுக்கவே நேரும்போதுகூடச் செல்வச் செருக்கைப் பறி கொடுக்க மாட்டேன்'—என்று அடம் பிடிக்கும் அந்த விந்தையான மனிதரின் வேடிக்கையான இயல்புகள் தன்னுடைய கணிப்புகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு விளங்குவதைக் கண்டான் அவன்.

மாதவன் ஓர் அப்பாவி! பேரின்பமுத்துவின் 'கௌரவம்' எவ்வளவு நீளமானது என்பது அவனுக்குத் தெரிய வேண்டாமோ? அந்தக்கால 'அனுமார் வாலை'யும் மிஞ்சக் கூடிய 'அது' தன் பண-நுனியைக் கொண்டே எத்துணை உயர்ந்த பீடத்தில் இருப்பவர்களையும் தன் பக்கம் இழுத்துவந்துவிடாதோ?

''சரிங்க; நீங்க சொல்கிறபடியே நான் அழைத்து வந்துவிடுகிறேன். ஆனால் ... ... .. தேன் மொழியை வீட்டுக்குள்ளே கொண்டுபோய்ப் படுக்க வைக்காமல் இப்படிக் காரிலேயே போட்டு வைப்பது நல்லது இல்லையே!''—என்றான் அவன்.

''ஓ! ஆமா; நானும் எனக்கு உண்டான பதற்றத்திலே அதை மறந்தே போய்விட்டேன். சரி, வா! நாம இரண்டு பேருமே தூக்கிப்போய்ப் படுக்க வைப்போம்.''

—என்ற பேரின்பமுத்து தமது கனமான உடலை வளைத்துக் காரினுள் குனிந்து சென்று மகளின் தலையை நிமிர்த்தினார்.

வெள்ளை விழிகள் மட்டும் சங்கு மோதிரத்தின் விளிம்பு போலச் சற்றே தெரியும் வண்ணம் முக்கால் அளவுக்கு மூடியிருந்த அவளது இமைக் கதவுகள் இப்போது நன்றாகத் திறந்து கொண்டுவிட்டன. மலங்க மலங்க மல்லாந்து விழித்த அவள்,

''நீங்கள் தானா, அப்பா?''—என்று மிக மெலிவாக முனகினாள்.

அவளது பார்வை, பின்னர் கீழே தணிந்து, காவர ஓட்டியே வெளியே நிற்கும் மாதவன் பால் சென்றது.

அவன் தன் தலையைத் தாழ்த்தி அவளைத் தூக்கிச் செல்ல ஆயத்தமாக அவளது பஞ்சப் பாதங்களைக் கைகளால் பற்றினான்.

திடுக்கிட்டுப்போன தேன்மொழி, ''என்னப்பா இது?''—என்றவாறே தனது கால்களை இழுத்து மடக்கிக் கொண்டாள்.

''உன்னை வீட்டுக்குள்ளே தூக்கிக் கொண்டு போகவேணுமா? அதற்குத்தான்''—என்றார் பேரின்பமுத்து.

''எனக்கு இப்போ என்ன வந்து விட்டது? சாதாரணக் கிறுகிறுப்பு; அதற்குப் போய் ஏன் இப்படியெல்லாம் ஆர்ப்பாட்டம் பண்ணுகிறீர்கள்? என்னை யாரும் தூக்கிக் கொண்டு போகத் தேவையில்லை; நானே நடந்து போய் விடுவேன்''—என்றவள் காரிலிருந்து விசையாகவே எழுந்து நின்றாள்.

நான்கு அடிகள் கூட நடந்திருக்க மாட்டாள். மறுபடியும் பழைய தள்ளாடல்; தடுமாற்றம்; கீழே விழப்போன அவளை மாதவன் ஓடிப் போய்ப் பிடித்துக்கொண்டு விட்டான்.

அவனது உதடுகளிலே குறும்புச் சிரிப்பொன்று மெள்ள நெளிந்தது.

''என்ன இருந்தாலும் இந்தப் பெண்களுக்கு வீறாப்பு மட்டும் போகவே போகாது!—என்று உள்ளூற அவனால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

சில மணித் துளிகளில், பேரின்பமுத்துவின் 'பிளைமவுத்' வண்டி டாக்டர் பூங்கொடியை அழைத்து வரும் பொருட்டு மருத்துவ மனையை நோக்கிப் பறக்கலாயிற்று.

• • •

தேன்மொழியை மயக்கம் வந்து மடக்கி அன்று மூன்றாவது நாள்.

டாக்டர் பூங்கொடியின் கட்டளைப்படி, அறையினுள்ளேயே சிறையிருந்த அவளுக்குப் பொழுதே போக மறுத்தது. புத்தகங்களையும் அவள் நீண்டநேரம் படிக்கக் கூடாதாம். என்னதான் நோயோ? அதற்கு ஏன்தான் இவ்வளவு கட்டுப்பாடோ!

சன்னல் வழியாகப் பார்வையைப் பறக்கவிட்டுப் பசுமை விருந்தைப் பரிமாறிக்கொண்டிருக்கும் தோட்டத்தை வேடிக்கை பார்ப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழியே இல்லை.

அவளுடைய அறைக்கு நேராகச் சற்றுத் தொலைவில் தரையோடு தரையாகப் பம்மிப் படர்ந்திருந்தது ஓர் ஒட்டு மாமரம். அதன் இலைகளுக் கிடையே சலசலப்பை எழுப்பி இரண்டு அணில் பிள்ளைகள் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன.

கட்டில் மெத்தையில் குப்புறப் படுத்துக் கிடந்த தேன்மொழி, அவைகளின் காதல் விளையாட்டையே கண்கொட்டாமல் பார்த்துக் களித்தாள்.

திடீரென்று வீசியது பலமான குளிர்காற்று. அதனுடைய அவசரத் தழுவலில்—ஆங்காரமான அணைப்பில்—மரங்களில் உள்ள இலைகள் மட்டுமல்ல, அறையினுள்ளே சுவரில் தொங்கிக்கொண்டிருந்த நாள் காட்டித் தாள்களும் படபடப்புடன் துடித்தன.

தேன்மொழியின் பார்வை இப்போது அறையினுள்ளேயே திரும்பிற்று.

நாள்காட்டியின் அன்றையத் தேதியை அந்தச் சமயம்தான் அவள் உன்னிப்பாகக் கவனித்தாள்.

பழைய நிகழ்ச்சிகள் அவளது நினைவுத் திரையிலே படமாக விரிந்தன.

சந்தேகமே இல்லை; சரியாக ஓராண்டுக்கு முன்னே இதே மாதத்தில் இதே தேதியில்தான் அவள் மாதவனைச் சந்தித்ததும்.

அதற்கு ஓராண்டுக்கு முன்பிருந்தே தங்களுடைய பெரிய நிறுவனத்திலேயே அவன் பணியாற்றிக்கொண்டிருந்த போதிலும், தங்கள் இல்லத்திலோ தங்களுக்குச் சொந்தமான வேறு இடங்களிலோ அவனைப் பார்த்ததாக அவளுக்கு நினைவே இல்லை.

அன்றும் இப்படியொரு மப்பும் மந்தாரமுமான பிற்பகல்தான். பி.ஏ., தேர்வில் கோட்டை விட்டுவிட்டோமே என்கிற குமுறலுடன் தனியாக மனம் நொந்து போயிருந்த வேளை; அவளைக் கண்டு ஆறுதல் சொல்ல வந்தாள் அவளுடைய ஆருயிர்த் தோழி துளசி.

அவள் மூலமாகத்தான் முதன் முதலில் மாதவனைப் பற்றிக் கேள்வியுற்றாள் தேன்மொழி.

''உங்களுடைய நிறுவனத்தில் மாதவன் என்கிற ஒருவர் வேலை பார்க்கிறாராமே, அவரைப் பற்றி உனக்குத் தெரியுமா?''—என்று கேட்டாள் துளசி.

''எத்தனையோ நூற்றுக்கணக்கானபேர் எங்கள் நிறுவனத்திலே வேலை பார்க்கிறார்கள். அவர்கள் எல்லாரையும் நான் தெரிந்து வைத்துக்கொள்ள முடியுமா? அதற்கு அவசியந்தான் ஏது?''—என்று அலட்சியமாகவே விடையிறுத்தாள் தேன்மொழி.

''என்னடி இப்படிச் சொல்லிவிட்டாய்? உங்கள் நிறுவனத்தின் பெயரைக் காசு வாங்காமலே பத்திரிகைகள் எல்லாம் விளம்பரம் பண்ணும்படியாகச் செய்து கொண்டிருக்கிறார் ஒரு மனிதர். அவரைப் போய்த் தெரியாது என்கிறாயே?''

''நீ! சொல்வது வேடிக்கையாக இருக்கிறதே! அவர் யாரடி, எங்கள் நிறுவனத்திற்காக அவ்வளவு பாடுபடுகிறவர்?



எனக்குத் தெரியாமல்....!

"ஆமா, நீ ஒவ்வொருநாளும் பத்திரிகைகளைப் பார்க்கிறயா, இல்லையா?"

"ஊம்; எனக்கு அதிலே அவ்வளவாக உற்சாகம் இருப்பதில்லே. எப்போதாவது புரட்டிப் பார்ப்பேன்"

"அதனுல்தான் இப்படி உலகந் தெரியாமல் பேசுகிறய். இனிமேல், ஆங்கிலப் பத்திரிகைகளை விடாமல் பார்; அதுவும் விளையாட்டுப் பகுதியைத் தவறமல் பார்; அதிலேதான் உங்கள் நிறுவனத்தின் பெயரும் அந்த மாதவனின் பெயரும் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன."

"அப்படியா? வியப்பாக இருக்கிறதே! ஆமா, அந்த மாதவன் எந்த விளையாட்டிலே வீரராக விளங்குகிறர்?"

"டேபிள் டென்னிஸ் இல்லே, அதிலேதான்! மிக அற்புதமான ஆட்டக்காரராம்; பத்திரிகைகள் எல்லாம் வரிந்து கட்டிக்கொண்டு அவரைப் புகழ்ந்து எழுதுகின்றன. இன்றைக்குக் கூடப் பக்கத்திலே அவர் ஓர் அகில இந்திய வீரரோடு மோதுகிறராம்; வருகிறயா போய்ப் பார்ப்போம்?"

துளசி இவ்வளவு விரிவாக எடுத்துரைத்து வற்புறுத்தி அழைக்கவே தேன்மொழிக்கும் அந்த ஆள் எப்படித்தான் ஆடுகிறர் என்று பார்ப்போமே என்கிற ஆர்வம் உண்டாகி விட்டது.

மேலும் தேர்வில் ஏற்பட்டு விட்ட தோல்விச் சுமையைத் தாங்க முடியாமல் வெதும்பிக் கொண்டிருக்கும் தன் உள்ளத்திற்கு அந்த விளையாட்டைப் பார்த்தாவது ஆறுதல் கிட்டட்டுமே என்றும் அவள் எண்ணினுள்.

* * *

தோழிகள் இருவரும் பந்தயம் நிகழ்கின்ற அந்த மாடிக் கட்டடத்தை ; அடைந்தபோது, அங்கே, நிற்கக்கூட இடம் இல்லாமல் நிரம்பிவழிந்தது கூட்டம்.

"இந்த ஆட்டத்தைப் பார்க்கவா இவ்வளவு பேர் வருகிறர்கள்?" என்று வியப்பில் ஆழ்ந்து போனுள் தேன்மொழி.

சாதாரணப் பார்வையாளர்கள் மட்டுமின்றிச் செய்தியாளர்களும், நிழற்படக்காரர்களும்கூட அங்கே நிறைந்த எண்ணிக்கையில் முற்றுகையிட்டிருந்தனர்.

அன்று மாதவன் ஆடிய ஆட்டம் இருக்கிறதே அதைப் போல அபாரமான ஒன்றை அதற்குமுன் அவள் கண்டு களித்ததே இல்லை. அந்த முட்டை போன்ற வெண்ணிறப் பந்து அவனது இச்சைப்படியெல்லாம் அப்படியும் இப்படியுமாக எம்பிக் குதித்து, வில்லாக வளைந்தோடி, வெடியில்லாத வாணவேடிக்கை மாதிரியே ஓயிலாட்டம் காட்டியது! அவன் 'சர்வீஸ்' போடுகின்ற நளினத்திலேயே ஒரு தனியான நயம்—கவர்ச்சி—சூட்டிகை— சூரத்தனம்—எல்லாமே மிளிர்ந்தன. பந்தை நிதானமாக எடுப்பதிலும் சரி, சமயம் பார்த்து ஒரே வெட்டாக அடிப்பதிலும் சரி தனக்கு நிகர் தானே என்பதை அவன் நன்றுக மெய்ப்பித்துக்காட்டினுன். என்னதான் அகில இந்திய வீரராக இருந்த போதிலும் கூட எதிர் ஆட்டக்காரரால், மாதவனின் பந்து வீச்சை—இல்லே—குண்டு வீச்சைத் தாங்கவே முடியவில்லை; மிகவும் திணறிப்போனுர். தம்மைத் தழுவப்போவது தோல்விதான் என்று தம் மனத்துக்குப் பட்டு விட்டதாலோ என்னவோ அவர் கடைசி நேரத்திலே முறைகேடாக வெல்லாம் பந்தை அடிக்க முற்பட்டு விட்டார். ஆனல் அந்த அடிகளையெல்லாம் மிகுந்த விழிப்போடு சமாளித்துப் பந்தைக் கீழே விடாமல் அவன் தன் உடம்பை ஒடித்துக் கொண்டு எடுத்த 'எடுப்பு' இருக்கிறதே -சுறுசுறுப்பு இருக்கிறதே- அது பலமுறை பார்வையாளர்



களிடமிருந்து கரமுழக்கங்களை அவனுக்கு வாங்கிக் கொடுத்தது.

அப்பொழுதெல்லாம் தேன்மொழியும் தன்னை மறந்து அவர்களோடு சேர்ந்து தானும் கைதட்டவே தட்டினுள். உவகைப்பெருக்கில் அவளது தளிருடல் அடிக்கடி புல்லரிந்துச் சிலிர்த்தது.

"இத்தனை நாள் இவருடைய ஆட்டத்தை எப்படி நான் பார்க்காமல் இருந்தேன்? அதுவும் எங்கள் நிறுவனத்திலேயே அலுவல் பார்ப்பவராக இருந்தும் இவரைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறேனே!....அப்பாவும் இவரைப் பற்றி என்னிடம் சொல்லவே இல்லையே! ஒருவேளை அவருக்கே இவருடைய திறமையைப் பற்றி—புகழைப் பற்றி—தெரியவே தெரியாதோ?" என்று வருந்தவும் வருந்தினுள் தன் மனத்திற்குள்ளே.

மறுநாள் காலை.

வழக்கம் போல் குளித்து முழுகிக் கூந்தலை உலர விட்டவாறே தோட்டத்தில் பூத்துச் சிரிக்கும் ரோஜாச் செடிகளின் அருகே சென்றுள் தேன்மொழி.

குடகுநாட்டுப் பேரழகிகளின் மாதுளங் கன்னம் போல அப்பொழுதுதான் மலர்ந்து அவிழ்ந்த சிவப்புரோஜாப்பூ ஒன்றைத் தன் தலையில் சூடிக்கொள்வதற்காக அவள் கிள்ளும் பொழுது அவளுடைய காலடியில் வழுவழுவென்று ஏதோ தட்டுப்பட்டது.

கீழே குனிந்து பார்த்தால், அது ஒரு கூழாங்கல் ; முந்தின நாள் பிற்பகலில் பார்த்தாளே 'முட்டைப் பந்து'—அதையே உரித்துக் கொண்டு வந்தது போன்ற கூழாங்கல்.

உடனே அவளுக்கு மாதவனின் ஆட்டமும் — அவனுடைய தோற்றமும்—அவனது ஆட்டத்தைக் கண்டு களிக்கக் கூடியிருந்த கூட்டமும்— அவள் நினைவைக் களவாடின.

அவசரம் அவசரமாக ரோஜாப் பூவைப் பறித்துத் தலையிலே சூடிக்கொண்ட அவள், பரபரப்போடு தன் அப்பாவின் அறையை நோக்கி ஓடினுள்.

பேரின்பமுத்து வெளியில் புறப்படுவதற்கு ஆயத்தமாக, கட்டுவிரியன் பாம்பின் தோலை நினைவுபடுத்தும் 'டை'யைத் தமது கழுத்தைச் சுற்றிலும் நிதானமாகக் கட்டிக்கொண்டிருந்தார்.

"என்னம்மா தேன்மொழி! ஏன் இப்படிப் படபடப்போடு ஓடி வருகிறய்?" —என்று கேட்டார்.

"ம்.. ஒண்ணும் இல்லே ; ஒரு முக்கியமான சேதி" —என்றவாறே அவள், தன் தந்தையின் மேசையை விழிகளால் துருவினுள்.

"என்னம்மா, இது! 'ஒண்ணும் இல்லே'ன்னும் சொல்றே! 'ஒரு முக்கியமான சேதி'ன்னும் சொல்றியே! என்ன வேடிக்கை? என்ன குழப்பம்?" —என்று சிரித்தார் பேரின்பமுத்து.

இதற்குள் அந்த ஆங்கில நாளிதழைக் கையில் எடுத்து விட்ட அவள் கடைசிப் பக்கத்தைத்திருப்பிப் பார்த்தாள். அவளுடைய தோழி துளசி சொல்லியிருந்தது சரிதான். மாதவனின் படமும், அவனுடைய விளையாட்டுத் திறனைப் பற்றிய அழகான விளக்கக் கட்டுரையும் அதிலே வெளியாகி இருந்தன.

உற்சாகந் தாங்க முடியவில்லை, தேன்மொழிக்கு. அந்த ஆங்கில நாளேட்டின் கடைசிப் பக்கத்தைத் தன் தந்தையின் கண்ணெதிரே நீட்டியவாறே, "இந்தப் படத்தைப் பார்த்தீர்களா, அப்பா?" —என்று கேட்டாள்.

"ஓ! பார்த்து விட்டேனே!" —குரலிலே எந்தவிதச் சலனமும் இல்லாமல் கூறினுர் அவர்.

"அப்படியானுல் அந்த மாதவனைப் பற்றி உங்களுக்கு நன்றுகத் தெரியுமா?"

"ஏன் தெரியாது? நம்முடைய நிறுவனத்தில் அவனை நான் சேர்த்துக் கொண்டதே அவனுடைய விளையாட்டுத் திறமைக்காகத்தானே?"

—உடனே முந்தின நாள் துளசி சொன்ன ஒரு சொற்றெடர் அவளுடைய நெஞ்சிலே மின்ன விட்டது.

"....அவருடைய விளையாட்டுத்திறமைக்காகவா? அல்லது அந்தத் திறமை மூலமாக நம் நிறுவனத்திற்குக் காசு இல்லாமலே விளம்பரம் ஆகட்டும் என்று?.."

—என்று கேட்டே விட்டாள் தேன்மொழி.

"நீ சொல்கிறபடியேதான் வைத்துக் கொள்ளேன்!"— என்று பெரிதாகச் சிரித்தார் பேரின்பமுத்து.

"போகட்டும், அப்பா, எனக்கோர் ஆசை"

"என்ன அது?"

"எனக்கும் 'டேபிள் டென்னிஸ்' கற்றுக் கொள்ள வேண்டும்போல் இருக்கிறது."

"உனக்கு எதற்கம்மா அந்த முட்டைப்பந்து—மட்டை அடி—எல்லாம்?"

"ஏம்பா, நானும் அவரைப் போல டேபிள் டென்னிசிலே 'சேம்பியன்' ஆகிவிட்டால், நம்முடைய நிறுவனத்துக்கு இன்னும் விளம்பரம் கிடைக்குமே!"

"பலே பலே! நம்முடைய நிறுவனத்தை விளம்பரப்படுத்துவதிலே நீ என்னைவிடப் புத்திசாலியா இருக்கிறியே!..ம்.. இருந்தாலும் அதைப்பற்றிக் கொஞ்சம் யோசனை பண்ணியே முடிவெடுப்போம்.நான் இப்போது அவசரமாக வெளியே போக வேண்டியிருக்கு ; வரட்டுமா?"

—பேரின்பமுத்து யோசனை செய்வதற்கு அதிகமான காலத்தவணையை அளிக்கத் தேன்மொழி உடன்படவில்லை.

ஆம்; அடுத்த ஏழாவது நாளிலேயே 'டேபிள் டென்னிஸ்' கற்றுக்கொள்வதற்கான எல்லா ஏற்பாடுகளும், அந்த மாளிகை வீட்டின் முதல் மெத்தையில் உள்ள நீண்ட கூடத்தில் உருவாகி விட்டன.

அவளுக்குப் பயிற்சியளிக்க மாதவனே வரவழைக்கப்பட்டான். அவனைத் தவிர வேறுயார் தான் அங்கே வர முடியும்? வேறு யாருக்குத்தான் அந்தத் தகுதி இருக்கிறது?

ஆனுல்,—

முதன் முதலில் பயிற்சி அளிக்க வந்த அன்று மாதவன் செய்த 'மூக்கறுப்பு' இருக்கிறதே அதை அவளால் மறக்கவே முடியாது! எனினும் அந்த 'மூக்கறுப்பு' அவளது உள்ளத்தை உறுத்தவில்லை ; முள்ளாகக் குத்தவும் இல்லை. மாறுக, அது அவளுக்குத்தேனுகவே இனித்தது; இன்றைக்கும் அது தெவிட்டாமலே சுவைக்கிறது.

அவன் செய்த அந்த 'மூக்கறுப்புத்தான்' என்ன?

புதிதாக விளையாட்டைக் கற்றுக் கொள்ளும் ஆர்வத்துடிப்பில் தன்னை அழகுத் தேவதையாகவே அலங்கரித்துக் கொண்டாள் தேன்மொழி. மல்லிகைப் பூக்களாலேயே சிலையாகச் சமைந்த மாதிரி, வெள்ளை வெளேரென்று நைலான் புடவையும் சோளியும் அணிந்திருந்த அவள் அசல் நடன நங்கையாகவே தன் வயிற்றுப் பரப்பும் தெரியுமாறு' தோற்றமளித்தாள்.

பச்சை விரிப்புப் போடப்பட்டிருந்த அந்த நீண்ட சதுரமான டென்னிஸ் மேடையை அவள் நெருங்கிய பொழுது, மாதவன் அவளை ஏற இறங்கப் பார்த்தான். அவனுடைய விழிகளில், சுற்றிநிற்கும் மற்றவர்களின் கண்களில் மிதக்கும், அழகைப் பருகுகின்ற 'துய்ப்போ' —இரசனையோ—இல்லை.

"வெள்ளைப் புடவைக்கும் இந்த விளையாட்டுக்கும் ஒத்து வராதே! அதைக் கட்டிக் கொண்டு ஆடினுல் ஒளியின் சாயல் (கிளேர்) அடிக்கும் ; பிறகு பந்து வருவது போவது சரியாகத் தெரியாது. ஆகையாலே வேறே நிறத்திலே புடவையைக் கட்டிக்கொண்டு வாருங்கள்."

—என்று அமைதியாகச் சொன்னுன் அவன்.

தேன்மொழிக்கோ ஒரே வெட்கமாகப் போய்விட்டது ; அசடுதான் வழிந்தது அவள் பூ முகத்தில்!

அந்த சமயம்,

'இந்த விதியையெல்லாம் முன்னலேயே சொல்லித் தொலேயக்கூடாதா? எல்லாருடைய முன்னிலேயிலும் இப்படித்தான் மூக்கறுப்பதா?''—என்று உள்ளூற அவளுக்கு எரிச்சலும் உண்டாயிற்று; ஆனல் அது வெறுப்பில் விளேந்தது அல்ல; விருப்பில் முகிழ்த்த செல்லமான எரிச்சல்!

* * *

இவ்வாறு பயிற்சி கொடுக்கத் தொடங்கும் பொழுதே தன் இதயத்திற்கு எரிச்சல் கலந்த இனிப்பையே தந்த மாதவன், அதே முறையிலாவது தான் ஏங்கிக் கொண்டிருக்கும் ஓர் அமைதியான

கேட்டு வாங்குங்கள்

**இந்த இதழுடன்**

**இலவச இணைப்பு**

**நமது குரல்**

வாழ்வைத் தேன்மொழிக்கு அளிக்கக் கூடாதா!

அவனே . . ? இன்பமே இல்லாததாக மட்டுமின்றி—ஒரே எரிச்சலாக, ஏன் எரிமலேயாகவே அவளுடைய வாழ்வைச் சிதற அடித்து விடுவான்போல் இருக்கிறதே?

தேன்மொழியால் விம்மலே அடக்கமுடியவில்லே; கண்ணீரையும் துடைக்க முடியவில்லே.

அவள் இப்படித் துயர வெள்ளத்திலே அமிழ்ந்து கொண்டிருக்கும் பொழுது யாரோ அறைக் கதவைத் தட்டுகின்ற ஓசை கேட்டது.

—(தொடரும்)



# பொதுப் பணித் துறை

## தமிழ்நாடு அரசு

### ஒப்பந்த விவர அறிக்கை.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும் தமிழகப் பொதுப் பணித்துறை, தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னரது அலுவலகத்தில் 26—8—1971 மாலே 3·00 மணிவரை கீழ்க் கண்ட வேலேக்கான '' மூடி முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் '' பெற்றுக் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | வேலேயின் பெயர் : | தஞ்சை ஜில்லா—நாகப்பட்டினம் தாலுக்கா வேளாங்கன்னி மாதா கோயில் சமீபத்தில் வெள்ளேயாற்றின் இடது கரை மைல் 99/4-260ல் தடுப்புச் சுவர் கட்டுதல். |
| 2. | ஒப்பந்தம் வகை .. | கே. 2. |
| 3. | வைப்புத் துகை ... (கருவூல செலான் உருவில்). | ரூ. 6,000. |
| 4. | ஒப்பந்தப் பத்திரங்களின் விலே அரசினர் கருவூலங்களில் பொதுப்பணித்துறை செலுத்துத் தொகை என்ற தலேப்பில் செயற்பொறியாளர் வெண்ணுறு கோட்டம், தஞ்சை அவர்களின் கணக்கில் கட்ட வேண்டும். | ரூ.25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்) |
| 5. | விற்பனே வரி (அரசினர் கருவூலங்களில் விற்பனே வரி (பி) பற்று சீட்டு XII நிலவிற்பனே வரி சட்டத்தின் கீழ் பொது விற்பனே வரி என்ற தலேப்பில்) செலுத்த வேண்டும். | 0·88 (பைசா எண்பத்தெட்டு மட்டும்) |
| | ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்க ஆரம்பிக்கும் நாள். | 7—8—1971. |

24—7—1971

ஆர். வேணுகோபால்.
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப் பணித்துறை,
தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர்.

369


**தமிழரசு** அளிக்கும்
**செய்தி விளம்பரத்துறை**



...ரலாற்றுப்
...பட்டகம்!
...லக்கியப்
...பழை!
...ண்ணக்
...ளஞ்சியம்
என்று
...எல்லாரும் போற்றும்
...ண்ணம், பல்வகைச்
...றப்புடன் தயாராகிறது!

# வெள்ளி விழா மலர்

பல்துறைஅறிஞர்கள்
வல்லுநர்கள்,
எழுத்தாளர்கள்,
அனைவரும்
எழுதுகிறார்கள்!
இதில்.....
இல்லாதது
எதுவுமே
இல்லை!

.. இப்பொழுதே
உங்கள் பிரதிக்கு
விற்பனையாளரிடம்
பதிவு செய்க

செப்டம்பர் திங்களில்
கிடைக்கும்

முன்னிலாப் புதுமுறையில்
தன்னந்தனிச் சிறப்போடு வெளிவரும்

**விலை ரூ. 2-50.**

# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரோஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.



**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தர வல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.

**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸல், ஸைலினால், பாலிவாலென்ட் ஃபினால் கலவை.

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி-1**

FDSNLC946TM

# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



**தி என்பீல்டு இந்தியா லிமிடெட்**
**சென்னை-19**

FDSEI-1573TM




# அரங்கேற்றம்



பூவுக்கே அரங்கேற்றம் வண்டு வந்தே
பொற்காதல் புரிகின்ற நன்னாள்! பெற்ற
நாவுக்கே அரங்கேற்றம் பேச்சைக் கேட்டுப்
பிறர்கைகள் ஒலிக்கின்ற பொன்னாள்! நல்ல
மாவுக்கே அரங்கேற்றத் திருநாள் மூன்று
வரிஅணிலும் கனிக்குலையும் கூடும் நன்னாள்!
பாவுக்கே அரங்கேற்றம் என்றால் தொட்டுப்
படித்தவுடன் நெஞ்சினிலே பதியும் நாளே!

பள்ளிஅரங் கேற்றத்தால் பார கதத்தின்
பக்கங்கள் கண்முன்னால் தெரிந்தி டாதா?
வெள்ளிஅரங் கேற்றத்தால் கீழை வானில்
வெளிச்சப்பூ பரிதிமலர் மலர்ந்தி டாதா?
கள்ளவிழிக் காதல்அரங் கேற்றத் தாலே
கனிமழலைக் குழலோசை ஒலித்தி டாதா?
கள்ளிகளின் அரங்கேற்றம் காவில ஏன்,ஏன்?
கருத்துமணம் கவியரங்கில் கமழ வேண்டும்.

கதிரவனின் அரங்கேற்றம் கண்ட பின்னால்
கடன்வாங்கும் நிலாவண்ணம் மங்கிப் போகும்!
பதரெல்லாம் காற்றரங்கில் ஏறும் போது
பளிங்குநெல்லில் ஒட்டாமல் விலகி ஓடும்!
உதிரிகளும் அறிவரங்கில் அடியை வைத்தால்
உண்மைஉரு வெளியாகும்; சாயம் போகும்!
புதியதொரு சிந்தனையாம் பொன்ன ரங்கில்
'புரட்சிப்பா' பாடுவதே இந்நாள தேவை!

வள்ளுவரின் அரங்கேற்றம் உலகத் திற்கே
மாச்சட்டம் தந்ததனால் நாமு யர்ந்தோம்!
தெள்ளுதமிழ் இளங்கோவின் அரங்கேற்றத்தால்
சிலம்போசை கேட்டதிங்கே; நாம்நி மிர்ந்தோம்!
நள்ளிரவில் அரங்கேறும் உடுக்கள் கோடி;
நம்நினைவில் ஏற்படுதோ திங்கள் தானே!
அள்ளிஅள்ளிக் காலமெலாம் சுவைப்ப தற்கே
அருங்கவிதை அரங்கேற்றம் மலர்ந்தி டட்டும்!

**கவிஞர். கா. வேழவேந்தன்**




## பரிசு பிறந்த கதை

ஏறக்குறைய நூற்றி இருபது ஆண்டுகளுக்கு முன்பு !

சுவீடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக்ஹோமில் ஒரு சிறுவன் தலைவலியால் துடித்துக்கொண்டிருந்தான். படுக்கையை விட்டுக்கூட அவனால் எழுந்திருக்க முடியவில்லை. அவனது அன்னை அவன் அருகிலேயே அமர்ந்து அவனுக்கு ஆறுதல் சொல்லி வந்தாள். ஆறுதல் மொழி கூறும்போதே, அருஞ்செயல் புரிந்து அழியாப் புகழ் பெற்ற மாவீரர்களின் வீர வரலாற்றையும் எடுத்துச் சொன்னாள் அந்தத் தாய். அவளது முயற்சி வீண்போகவில்லை. தலைவலியால் துடித்துக்கொண்டிருந்த சிறுவன் மனவலிமை அடைந்தான். தன்னம்பிக்கை அவனது இதயத்திலே தளிர்க்கத் தொடங்கியது. அந்தச் சிறுவன் யார் தெரியுமா ?

உலகமெல்லாம் புகழும் வண்ணம் நோபெல் பரிசு என்ற உன்னதமான பரிசை உருவாக்கிப் பெரும் வள்ளல் என்ற பெயரைத் தேடிக்கொண்ட ஆல்பிரட் நோபெல்தான் அந்தச் சிறுவன்.

*1833*-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21-ஆம் நாள் பிறந்தார் நோபெல். அவரது தொடக்கக் கல்வி ரஷ்ய நாட்டிலுள்ள லெனின் கிராடில் தொடங்கியது.

அவரது பதினேழாவது வயதில், கப்பல் கட்டும் தொழிலில் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. மகனின் மன இயல்பை அறிந்த தந்தை, அவரை அமெரிக்க நாட்டுக்கு அனுப்பி வைத்தார், கப்பல் சம்பந்தப்பட்ட பொறியியல் நுட்பங்களைக் கற்றுக் கொள்வதற்காக.

சில வருடங்கள் அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்த நோபெல், ஒரு சிறு நிகழ்ச்சியால் மனம் வருந்தினார். அவருக்குப் பொறியியல் கல்வி கற்றுத் தந்த ஆசிரியர் எரிக்ஸன், துவக்கத்தில் பொருளாதார வளத்துடன் வாழ்ந்தவர்—திடீரென்று வசதியற்றவராகிவிட்டார்; வறுமையில் வீழ்ந்துவிட்டார். அறிவுச் செல்வம் இருந்தும் பொருட்செல்வம் இல்லாததால் அந்த ஆசிரியர் அல்லல் உற்ற காட்சி நோபெலின் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது.

" எதிர்காலத்தில் நான் மிகப் பெரும் பணக்காரனாவேன்! அறிவியலுக்கு ஆக்கந்தரும் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள் விரிவடைவதற்கு அவர்களுக்கு வேண்டிய பொருள் வசதி செய்துகொடுப்பேன் " என்று தனக்குத் தானே உறுதி எடுத்துக்கொண்டார்.

சில ஆண்டுகளில் சொந்த ஊருக்குத் திரும்பிய நோபெல், தன் தந்தையின் தொழிற்சாலையிலும், சகோதரர்களின் தொழிற்சாலைகளிலும், தனது அறிவியல் ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். 'டைனமெட்' என்று சொல்லப்படும் வெடிமருந்தை அவர் *1865*-ஆம் ஆண்டு கண்டு பிடித்தார். அவரது கண்டுபிடிப்பு அவருக்கு மிகுந்த வருவாயைக் கொடுத்தது. பிரான்சு, சுவீடன், அமெரிக்கா, இத்தாலி, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து முதலிய நாடுகளில் எல்லாம் வெடிமருந்துத் தொழிற் கூடங்களை உருவாக்கினார் நோபெல். மிகக் குறுகிய காலத்திற்குள் அளவற்ற செல்வம் அவரை அண்டியது.

நோபெலின் கண்டுபிடிப்பை, அறிவியலார் புகழ்ந்தார்கள். ஆனால், பொதுமக்கள் கண்டனக் கணைகளை அள்ளி வீசினார்கள்.

" நோபெலின் படைப்பு அரக்கர்களின் கையில் ஆபத்து நிறைந்த ஆயுதத்தைக் கொடுத்து விட்டது " என்று புலம்பினார்கள்.

நோபெல் பிற்காலத்தில் இந்தக் கருத்தை ஒப்புக்கொண்டிருக்கலாம் என்பது, அவரது நடவடிக்கைகளிலிருந்து தெரியவருகிறது.



### பிழைபட எழுதேல்!

**ஞாயிறு தோறும்.**

பிரதி ஞாயிறுதோறும் விடுமுறை என்று பல்வேறு அலுவலகங்களிலும் நிறுவனங்களிலும் அறிவிப்புப் பலகைகள் காட்சியளிப்பதை நாம் நாள் தோறும் காண்கிறோம். பிரதி ஞாயிறு எனினும், ஞாயிறு தோறும் என்னும் பொருள் ஒன்றே. எனவே பிரதிஞாயிறு தோறும் என்று பயன்படுத்த வேண்டியதில்லை. பிரதி ஞாயிறு என்றோ, ஞாயிறு தோறும் என்றோ எழுதினால் போதும்—அது தான் சரி.

கலிங்கப் போரிலே ஏராளமான மக்கள் மாண்டு மடிந்ததைக் கண்டு, மனம் நொந்து, " உலகத்தில் இனிமேல் போரே கூடாது ! அன்பே ஆட்சி செய்ய வேண்டும் " என்று அசோக மன்னர் நினைத்தாரல்லவா ? அதுபோல, நோபெலும் புதிய சிந்தனைக்கு ஆளானார்.

" உலக அமைதியை எண்ணி நாம் உருவாக்கிய 'டைனமெட்' உலகுக்குக் கேடு தரும் பொருளாகிவிட்டதே " என்ற ஏக்கம் அவரை மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கியது. அதனால் தான் அவர் பிற்காலத்தில், உலகத்து மனிதர்களின் நன்மைக்காகப் பாடுபடும் ஆற்றலாளர்களுக்குப் பரிசு வழங்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். மேலும், ஏற்கனவே தனது அறிவியல் ஆசிரியர் ஒருவர் வறுமையில் வாடியதும், அப்போது தான் சூளுரை உரைத்ததும் அவரது நினைவை விட்டு அகலவே இல்லை. அதனால் *1895*-ஆம் ஆண்டு *90* லட்சம் டாலரை மூலதனமாக்கி "அந்த வருமானத்திலிருந்து வருகின்ற வட்டிப் பணத்தை ஆண்டுதோறும் பரிசாகக் கொடுக்க வேண்டும் " என்று ஓர் உயில் எழுதி வைத்தார். ஏறக்குறைய 40 ஆயிரம் டாலர் பரிசுத் தொகையாகக் கொடுக்கப்பட்டது.

இயல்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம், உலக சமாதானம் ஆகிய ஐந்து துறைகளில் உலக மக்களின் நலனுக்காகத் தொண்டாற்றுகின்றவர்களுக்கு ஆண்டு தோறும் பரிசு வழங்கச் செய்தார். சில சமயங்களில் ஒரு துறைக்கு இருவர் அல்லது மூவர் கூட அந்தப் பரிசைப் பெற்றதுண்டு.

*1901*–ஆம் ஆண்டு முதல் இந்தப் பரிசு கொடுக்கப்பட்டு வருகிறது.

இயல்பியல், வேதியல் ஆகிய துறைக்குரிய பரிசுக்குரியவர்களை ஸ்டாக்ஹோமில் உள்ள ராயல் விஞ்ஞானக் கழகம் தேர்ந்தெடுக்கிறது. மருத்துவத் துறையில் பரிசுபெறத் தகுந்தவர்களை ஸ்டாக்ஹோமில் உள்ள கரோலின் கல்வி நிலையம் தேர்ந்தெடுக்கிறது. இலக்கியப் பரிசுக்குரியவர்களை ஸ்வீடன் நாட்டு இலக்கியக் கழகம் தேர்ந்தெடுக்கிறது. உலக சமாதானப் பரிசுக்குரியவர்களை நார்வே நாட்டுப் பாராளுமன்றத்தைச் சேர்ந்த ஐந்துபேர் கொண்ட குழு தேர்ந்தெடுக்கிறது.

எவரும், நோபெல் பரிசு அடைவதற்குத் தாமே மனுச் செய்துகொள்ள முடியாது. தகுதி வாய்ந்த வேறு ஒருவர், பரிசுபெறத் தகுதியுள்ளவரின் பெயரைச் சிபாரிசு செய்ய வேண்டும்.

இலக்கியத் துறைக் குரிய பரிசு எப்படி நிர்ணயிக்கப்படுகிறது தெரியுமா ? அச்சிடப்பட்ட எழுத்தோவியங்களுக்குத் தான் பரிசு வழங்குகிறார்கள். ஓர் இலக்கிய ஆசிரியர் தாமே எழுதித் தமது வீட்டிலேயே வைத்துக்கொண்டிருக்கும் கையெழுத்துப் பிரதிகளுக்கல்ல.

நோபெல் பரிசுக்குரிய பதக்கம்



### பிழைபட எழுதேல்!

**காட்சி.**

நாள் தோறும் மூன்று காக்ஷிகள் நடைபெறும் என்னும் திரையரங்கு விளம்பரங்களை நாம் பல்வேறு திரைப்பட விளம்பரங்களில் காண்கிறோம். 'காக்ஷிகள்' என்று எழுதுவது தவறு. காண் என்னும் பகுதிச் சொல் 'சி' என்னும் தொழிற் பெயர் விகுதி சேர்த்துக் காட்சி என்றுதான் வருமே தவிரக் காக்ஷி என வராது. எனவே நாள்தோறும் மூன்று காட்சிகள் நடைபெறும் என்று எழுதுவதே சரி.

இதுவரை, சுமார் *350* பேர்களுக்குமேல் இந்த நோபெல் பரிசைப் பெற்றிருக்கிறார்கள். ஒரு சிலர் இந்தப் பரிசை ஏற்றுக் கொள்ள மறுத்தும் இருக்கிறார்கள்.

இயல்பியல், மருந்தியல், சமாதானம் ஆகிய துறைகளில் அமெரிக்க நாட்டினர்தாம் அதிகமாகப் பரிசு பெற்றிருக்கிறார்கள். வேதியல் துறையில் ஜெர்மன் நாட்டுக்காரர்களும், இலக்கியத் துறையில் பிரெஞ்சுக்காரர்களும் பெரும்பான்மைப் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

இலக்கியத்துறைக் குரிய பரிசை *1913* ஆம் ஆண்டு நமது நாட்டுக் கவிஞரான ரவீந்திரநாத் தாகூர் அடைந்தார்.

இயல்பியல் துறையில், நமது இந்திய நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி சர் சி. வி. ராமன் *1930*-ஆம் ஆண்டு பரிசு பெற்றிருக்கிறார். இவர்களுக்குப் பிறகு இந்திய நாட்டில் எவருக்கும் இந்தப்பரிசு கிடைக்கவில்லை.

இன்று குழந்தைகளாக இருப்பவர்கள்—எதிர் காலத்தில் இந்தப் பரிசைப் பெற்று நமது நாட்டுக்கும் பண்புக்கும் பெருமை தேடித்தர வேண்டும் !






# நமகு குரல்

முதல்வர்,
டாக்டர், கலைஞர்,
**மு.கருணாநிதி**

377



## நமது குரல்

நாலரைக்கோடி தமிழ் மக்களின் நல்வாழ்வினைப் பாதிக்குமளவுக்கு மைசூர் அரசு காவிரி நதி நீர் சம்பந்தமான 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மீறி, காவிரியின் மேற்பகுதியில் அணைகள் கட்டிவருவதைக் கண்டித்துத் தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒரு முகமான குரல் எழுப்பியுள்ளனர்.

சட்டமன்றத்திலும் பேரவையிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழக முதல்வர் இரு பேரவைகளிலும் ஆற்றிய உரைகளின் தொகுப்பே இந்நூலாகும்.

பிரச்சினை இப்போது இந்தியத் தலைமை நீதிமன்றம் வரை சென்றுள்ளது அனைவரும் அறிந்த ஒன்றே.

வணக்கம்.

சென்னை,
11-8-1971.

செய்தி விளம்பரத் துறை,
தமிழ் நாடு அரசு.

## முன்னுரை

வரலாற்றுச் சிறப்பும், இலக்கியப் பெருமையும் பெற்ற, 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி' தமிழகத்தின் வளத்திற்கு உயிர் நாடியாயுள்ளது. தமிழக வளமும் காவிரி நலமும் இரண்டறக் கலந்தது—காவிரி இன்றேல் தமிழகம் இன்று என்பது இயற்கை நிலை. வற்றாத காவிரியும் தமிழ்நாட்டில் வறண்டிடுமோ என்ற அச்சம் காவிரியின் தலைவாயிலில் அணைகளைக் கட்டி நீரைத் தடுத்திட நினைக்கும் மைசூர் மாநிலத்தின் அவசர நடவடிக்கைகளால் தோன்றியுள்ளது. 1924-ஆம் ஆண்டின் உடன்பாடு தமிழ்நாட்டுக்கும், மைசூருக்கும் வளம் சேர்த்து நலம் காக்கும் நல்லதோர் ஏற்பாடு. அவ்வுடன்பாட்டினை மீறிக் காவிரியின் துணை நதிகளான ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சொர்ணவதி ஆகிய நதிகளில் அணைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறது மைசூர் அரசு. மத்திய அரசின் அனுமதியின்றியே அணைகளைக் கட்டுவதில் மைசூர் காட்டுகின்ற வேகத்தைப் பார்த்தால் மத்திய அரசின் அதிகாரம் மைசூரில் செல்லுபடி ஆகவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

1892-ஆம் ஆண்டிலும், 1924-ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட உடன்பாட்டின்படி இரு மாநிலங்களும் தமது உரிமைகளை வழக்கப்படி அனுபவித்துக்கொள்ள முடியாதபடி, அவ்வுடன்பாடுகளை மீறி, மைசூர்அரசு தனது அணைத் திட்டங்களை நிறைவேற்றுமானால், தமிழ் நாட்டின் பசுமைப் புரட்சி எல்லாம் 'பொய்யாய்ப் பழங் கதையாய் போனதே' என்று ஏங்கி வருந்தும் நிலையும், தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சையும், அதை அடுத்த திருச்சியும், பஞ்சப் பகுதிகளாகிப் பாழடையும் நிலையும் ஏற்படும்.

வரப்போகிற இந்த ஆபத்தை ஆழ்ந்து உணர்ந்த காரணத்தால் தான், தமிழகத்தின் மக்கள் அனைவரும் ஓரணியாய்த் திரண்டெழுந்து நிற்கின்றனர்.

தமிழ் நாட்டின் வரலாற்றில் என்றும் காணாத வகையில் தமிழ் நாட்டின் வாழ்வையே அழிக்க வரும் இந்த ஆபத்தினின்றும் நாட்டைக் காப்பாற்றிடத் தமிழ் நாட்டின் அரசியல் கட்சியினர் அனைவரும் கருத்து வேறுபாடுகளை மறந்து, ஒன்றுபட்டுச் சூளுரைத்து நின்று முழக்கமிடுகின்றனர். தமிழகத்தின் ஒருமித்த உணர்வை, உரத்து முழக்கமிடும் ஆற்றல்மிகு தலைவராகத் தமிழ்நாட்டின் முதல்வர் டாக்டர்

கலைஞர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் விளங்குகிறார்கள். நினைவுக்கெட்டாத காலந்தொட்டு நாம் பெற்று வந்த காவிரி நீரை மட்டுமல்லாமல், இயற்கையன்னை தமக்களித்துவிட்ட ஏற்றமிகு உரிமைகளைக் காப்பதற்கு, எந்தத் தியாகமும் செய்யத் துணிந்துவிட்ட தமிழக மக்களின் இதய உறுதியினைக் கசப்பின்றியும், காழ்ப்பின்றியும், கனிவாகவும், கண்ணியமாகவும் முதல்வர் அவர்கள் எடுத்துரைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதையொட்டித் தமிழ்நாடு சட்டப் பேரவையிலும், மாமன்றத்திலும், நிறைவேற்றப்பட்ட தீர்மானமும், அத் தீர்மானத்தின் மீது டாக்டர் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பேருரையும் இங்கே தொகுத்துத் தரப்பெறுகின்றது.




உ

# நமது குரல்

## தீர்மானம்

தமிழ்நாடு, மைசூர் அரசுகளுக்கிடையே 1892—1924 ஆம் ஆண்டுகளில் கையெழுத்தான ஒப்பந்தத்தின் விதிகள் அனைத்தையும் மீறி, மைசூரில் ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சொர்ணவதி அணைத் திட்டங்களையும் வேறு சில முக்கிய அணைத் திட்டங்களையும் அவைகளுக்கான திட்ட விவரங்களைப் பற்றியும் தமிழ்நாடு அரசுக்கு மைசூர் அரசு முறைப்படி முன்னதாக அறிவித்து, தமிழ்நாடு அரசின் முன் ஒப்புதல் பெறுமலும், இந்திய அரசின் அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளாமலும், இதனால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேரிடுவது பற்றிப் பொருட்படுத்தாமலும் தன்போக்கில் நிறைவேற்றி வருவது குறித்து இப் பேரவை தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறது.

காவிரி ஆற்றின் கீழ்ப் பகுதிகளில் உள்ள உழவர் பெருமக்களின் பாசன உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தைக் கருதி 1956–ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான நீர்த் தேக்கங்கள் தகராறுகள் சட்டத்தின் கீழ் முறையாக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் ஒன்றிற்கு காவிரி நீர்த் தகராறைத் தீர்ப்புக்கு விடுமாறு தமிழ்நாடு அரசு 1970 பிப்ரவரித் திங்களிலேயே இந்திய அரசைக் கேட்டுக்கொண்டு இருந்தும்கூடத் தமிழ் நாட்டிற்குத் தொன்று தொட்டு ஏற்பட்டு வந்துள்ள பரம்பரைப் பாசன உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் இந்திய அரசு தமிழ் நாட்டின் வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத இப் பிரச்சினை குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்காமல் அளவு கடந்து காலதாமதம் செய்து வருவதைக் கண்டு இம் மன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இதில் இந்திய அரசு மேலும் காலம் தாழ்த்தினால் மைசூர் அரசு தனது திட்டங்களை விரைவுபடுத்தி அவற்றைக் கட்டி முடிக்கும் விரும்பத்தகாத விபரீத நிலை உருவாவதற்கே அது வழி கோலுமென்றும் அதனால் பன்னெடுங்காலமாகத் தமிழ்நாடு அனுபவித்து வந்த பாசன உரிமைகள் பறிபோய்விடும் என்றும் இப் பேரவை பெரிதும் அஞ்சுகிறது.

வேதனை மிக்க இத்தகைய சூழ்நிலையில் இந்திய அரசு 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நீர்த் தகராறுகள் சட்டத்தின் கீழ் நடுவர் மன்றம் ஒன்றை அமைத்து, இத் தகராறுகளுக்குத் தொடர்புள்ள தரப்பினர் அனைவருடைய நலன்களையும் கருதித் தமிழக அரசு ஏற்கனவே கேட்டுக்கொண்டுள்ளபடி காவிரி நீர்த் தகராறை இம் மன்றத்தின் தீர்ப்புக்கு விட்டு நியாயம் வழங்குமாறும் நடுவர் மன்றம் இத் தகராறு குறித்து ஆய்ந்து முடிவு செய்து தனது தீர்ப்பை அளிக்கும் வரையில் மைசூர் அரசு தன் போக்கில் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றக் கூடாதென அதற்குக் கட்டளையிடுமாறும் இந்திய அரசை இப் பேரவை வலியுறுத்துகிறது.

## தீர்மானத்தின் நோக்கம்.

தமிழகத்திற்கே உரிய பண்போடும், தமிழ்நாட்டு மக்கள் இந்திய ஒருமைப்பாட்டில் வைத்திருக்கும் சிறப்பான நம்பிக்கையின் அடிப்படையில் எள்ளளவும் பிற மாநில மக்களுக்கும் நமக்குமிடையே பகை உணர்வு தோன்றக் கூடாது என்கிற உணர்ச்சியோடும் தயாரிக்கப்பட்ட தீர்மானம் இது.

தமிழ்நாட்டிற்குப் பரம்பரை பரம்பரையாக இருந்துவருகிற பாத்தியதை உரிமைகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பதுதான் இந்தத் தீர்மானத்தின் முக்கிய நோக்கமாகும்.

## காவிரியின் வரலாறு.

காவிரி–இந்தியாவில் இருக்கிற மிகப் பெரிய நதிகளில் நான்காவது நதியாகும்.

804 கிலோ மீட்டர் நீளமுள்ள காவிரி ஆறு இந்தத் தமிழகத்தில் மாத்திரம் 321 கிலோ மீட்டர் அளவுக்கு ஓடிக்கொண்டிருக்கிறது.






இந்த ஆற்றில் மைசூரின் வடக்குப் பகுதிகளிலே துணை நதிகளாக ஹேமாவதி, லோக்பவானி, சிம்சா, ஹர்க்காவதி ஆகிய உப நதிகளும் தெற்கே லட்சுமண தீர்த்தம், கபினி, சொர்ணவதி ஆகிய துணை ஆறுகளும் காவிரியில் கலக்கின்றன.

காவிரியில் கலக்கின்ற வரை இந்த ஆறுகள் அந்தப் பெயரைப் பெறுகின்றன. பின்னர் காவிரி என்ற மொத்தப் பெயரினைப் பெற்று விளங்குகின்றது என்று வரலாறு கூறுகிறது.

## ஒப்பந்த விவரம்.

அந்தக் காவிரியில் தமிழகத்திற்கு உரிய பங்கு—உரிமைகள் பாதிக்கப்படாமலிருக்க வேண்டும் என்பதற்காகத் தமிழகம் உரிமைக் குரல் கொடுத்த நேரத்தில் எல்லாம்—அன்றையத்தினம் ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்கள் தலையிட்டு 1892-ஆம் ஆண்டில் ஒரு முறையும், 1924-ஆம் ஆண்டில் ஒருமுறையும் ஆக இரண்டு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டார்கள்.

இந்த ஒப்பந்தங்களில் மிகக் குறிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள்

(1) கிருஷ்ணராஜசாகர் நீர்த் தேக்கம் இயங்குவது—தமிழகத்தில் காவிரி டெல்டா பகுதி பாசனத்திற்குத் தேவையான தண்ணீர் (Limit flow) எந்த விதத்திலும் குறைந்துவிடக் கூடாது.

(2) தமிழக அரசு மேட்டூர் அணைப் பாசனத்தை மூன்று லட்சத்து ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாக்காது.

(3) காவிரியிலோ, ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள கிளை நதிகளிலோ தமிழக அரசின் முன் சம்மதம் இல்லாமல் மைசூர் அரசு எந்த வித அணைகளையும் கட்டக் கூடாது.

உத்தேசிக்கப்பட்டிருக்கிற அணைகளைப் பற்றிய முழு விவரங்களையும் மைசூர் அரசு, தமிழக அரசிற்குத் தர வேண்டும்.

அணைக்கட்டுகளில் வேலை தொடங்குவதற்கு முன் தமிழக அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும்; புது அணைக்கட்டுகள் காரணமாக தமிழக அரசு தனது பாசனத்திற்கென்று பெற்று வருகின்ற தண்ணீர் அளவு (Limit flow) பாதிக்கப்படக்கூடாது.

### ஒப்பந்தத்தை மைசூர் உதாசீனப்படுத்துகிறது.

இந்த ஷரத்துக்கள் அடங்கிய ஒப்பந்தம் மீறப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் தமிழகத்திற்கு அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சியாகும்.

மைசூரில் ஹேமாவதியிலே அணை கட்ட வேண்டும் என்ற திட்ட அறிக்கை 1964-ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.




அந்தத் திட்ட அறிக்கையை மைசூர் அரசு பெற்றுக் கொண்டு 1968-ல் ஹேமாவதி அணைக்கட்டிற்கான அடிக்கல் நாட்டு விழாவை மைசூர் மாநில முதலமைச்சர் அவர்கள் நடத்தி வைத்தார்கள்.

அந்தச் செய்தி கிடைத்ததும், தமிழக அரசு தனது மறுப்பைத் தெரிவித்தது மாத்திரமல்லாமல், மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு நல்ல தீர்வினைக் காண வேண்டும் என்று 1968-ஆம் ஆண்டு வற்புறுத்திக் கேட்டுக்கொண்டது; நாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மத்திய அரசும் 1968 டிசம்பர்த் திங்களில் தமிழக அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தது.

"தமிழகத்தோடு இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண்கிற வரை திட்டத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று மைசூருக்கு மத்திய அரசு தெரிவித்திருக்கிறது" என அந்தக் கடிதத்தில் மத்திய அரசினர் குறிப்பிட்டிருந்தார்கள்.

இதற்கிடையில் கபினி நதியில் இரண்டரைக் கோடி ரூபாயில் ஒரு சிறிய அணையைக் கட்டுவதற்கான திட்டத்தைத் தீட்டி ஒப்புதலைப் பெற்று, இப்போது அதே அணையை இருபத்தைந்து கோடி ரூபாய் அணைத் திட்டமாக மாற்றிக் கட்டுவதற்கான முயற்சியையும் அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள்.






கபினியில் மாத்திரமல்ல— சொர்ணவதியிலேயும் அணைக்கட்டுத் திட்டத்தை அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள். குடகுப்பகுதியிலேயுள்ள ஹேரங்கி நதியிலும் ஒரு அணைக்கட்டுத் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். ஹேமாவதி மாத்திரமல்ல—கபினி, சொர்ணவதி, ஹேரங்கி போன்ற கிளை நதிகளிலும் அணைக்கட்டுத் திட்டங்களை—பாசனத்திட்டங்களைத் தொடங்கி நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

### தடுப்புரிமை.

குடகுப் பகுதி மைசூரில் சேராமல் தனி மாநிலமாக இருந்தபோது அங்குக் காவிரியின் கிளை நதியான லட்சுமண தீர்த்தத்தில் ஒரு அணைக்கட்டுத் திட்டத்தைக் குடகு மாநிலத்தினர் நிறைவேற்ற முயன்றார்கள். அப்போது மைசூர் அரசு இந்த அணைக்கட்டினால் மைசூர் மாநிலம் பாதிக்கப்படும் என்றும் ஆட்சேபம் கிளப்பியது. அந்த ஆட்சேபத்தை முன்னிட்டு, அப்போதிருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு மைசூரின் பாசனத்தைப் பாதிக்கிற வகையிலே லட்சுமண தீர்த்தம் என்ற இடத்தில் அணை கட்டக் கூடாது என்று தடுத்துவிட்டார்கள்.

அந்தக் குடகு மாநிலத்தை மைசூரில் இப்போது இணைத்து விட்டார்கள். இப்போது அந்தக் குடகுப் பகுதியில் ஹேரங்கியிலே அணைக்கட்டைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

தங்களது மாநிலம் பாதிக்கப்படும் என்பதற்காக, தங்களது மாநிலத்திற்கு மேலேயிருந்த குடகில் அங்கே கட்டப்பட்ட லட்சுமண தீர்த்தம் அணைக் கட்டைத் தடுப்பதற்கு மைசூர் அரசுக்கு உரிமை இருந்தது.

### அணைக்கட்டுகளை மறுக்கவில்லை. ஆனால்....

அதே அடிப்படையில் நமது மாநிலம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக நமது பரம்பரை பாத்தியதைகள்—உரிமைகள்—பாசன வசதிகள்—ஒப்பந்தங்களின்படி நமது பாசனத்திற்குக் கிடைக்க வேண்டிய வரையறுக்கப்பட்ட தண்ணீர் (Limit flow) பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் ஹேமாவதி, கபினி, சொர்ணவதி, ஹேரங்கி அணைகள் கட்டப்படுவதை நாம் ஆட்சேபிக்கிறோம். இதனுக்

அணைக்கட்டுகளையே நாம் மறுக்கிறோம் என்பதல்ல பொருள்; அந்த அணைக்கட்டுகள் கட்டப்படுவதானால் அந்த விவரங்கள் நமக்குத் தரப்பட வேண்டும். அந்த அணைக்கட்டுகள் கட்டப்படுவதன் மூலம் தமிழ்நாட்டுக்குத் தரப்பட வேண்டிய தண்ணீரின் அளவு எந்த விதத்திலும் குறைக்கப்படக் கூடாது என்ற உத்தரவாதம் அன்று அளிக்கப்பட்டது.

## நடப்பு என்ன !

ஆனால் நடப்பது என்ன ! ஒப்பந்தத்தில் இருப்பதைப் போல நமக்கு விவரங்கள் கொடுக்கப்படவில்லை. நமக்கு விவரங்கள் அளிக்கப்படாதது மாத்திரமல்ல; மத்திய அரசினுடைய முன் அனுமதி பெறப்படவில்லை. இந்த இரண்டும் அல்லாமல்—நமது தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது போல் தன் போக்கில் அணைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஹேரங்கியைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் அவர்கள் குறிப்பிடுகிறார்கள், அந்த ஹேரங்கி ஆறு—ஒப்பந்தத்தின் பட்டியலில் சேர்க்கப்படாத ஆறு என்று.

இங்கேதான் நம்முடைய வாதம் வலுப்பெறுகிறது.

''ஒப்பந்தத்தில் வராத ஆறு—ஆகவே தாங்கள் விவரங்களை அளிக்க முடியாது'' என்கிறார்கள். ஒப்பந்தத்தில் வராத ஆறு என்பதால் விவரம் அளிக்க முடியாது என்றால் ஒப்பந்தத்தில் இருக்கிற ஆறுகளுக்கு விவரங்களை அளித்தாக வேண்டும் என்பதை அவர்களே தங்களையறியாமல் ஒப்புக்கொள்கிறார்கள். சரி, ஒப்பந்தத்தின் பட்டியலில் உள்ள ஆறுகளுக்காவது விவரங்களை அளித்தாக வேண்டும். அறிவித்தார்களா என்றால், அதுவுமில்லை. விவரங்களையும் அறிவிக்காமலும் பேச்சு வார்த்தையில் நாம் குறிப்பிட்ட கஷ்டங்களையும் சிந்தித்துப் பார்க்காமலும் மத்திய அரசின் முன் அனுமதி பெறாமலும் நடைபெறுகின்ற இந்தக் காரியத்தை 1968-ஆம் ஆண்டு மைசூர் முதல் அமைச்சர் என்றைக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தினாரோ—அதைத் தொடர்ந்து தமிழக அரசு அதை ஆட்சேபித்து வருகிறது. அவ்விதம் ஆட்சேபித்து வந்த நேரத்திலெல்லாம்—கட்சிச்சார்பற்ற முறையில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி—அவர்களிடம் நிலைமைகளை விளக்கி அவர்களுடைய அரிய ஆலோசனைகளைப் பெற்று வந்தோம். மைசூர் முதல்வரோடும் கேரள அமைச்சரோடும் திரு கே. எல். ராவோடும் பேச்சு வார்த்தைகளை நடத்துகிறபோதெல்லாம் அனைத்துக் கட்சித் தலைவர்களோடும் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் முடிவின் பேரிலேயே பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டிருக்கின்றன.



## அனைத்துக் கட்சிகளும், நாமும்.

அந்த வகையிலே இந்த அரசுக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும், தமிழ்நாட்டு மக்களின் நலனை உத்தேசித்து, தங்களுடைய அன்பான ஒத்துழைப்பை அளித்ததற்காக என்னுடைய இதய பூர்வமான பாராட்டுதல்களைத் தமிழக அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிலைமையில் கடைசியாக, அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினோம். அந்தக் கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு காட்டும் நிதானப் போக்கைக் கண்டித்துத் தமிழ்நாடெங்கும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டங்களை நடத்துவது.

(2) தமிழகத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் டில்லிப் பட்டணத்தில் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியைச் சந்தித்துத்தமிழ்நாட்டினுடைய எதிர்காலத்தைப் பற்றிய நிலைகளை எல்லாம் விவரமாக விளக்கி, மத்திய அரசின் ஒப்புதலையும் பெறாமல் மைசூர் அரசு அணைகளைக் கட்டுவதை நிறுத்தி வைக்குமாறு கோரும் முறையீடு ஒன்றைத் தருவது.

(3) இதையடுத்து, சட்டப் பேரவையிலும் மேலவையிலும் இந்தப் பிரச்சினை குறித்துத் தீர்மானம் நிறை வேற்றுவது

இவற்றில் முதலிரண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டன.




தமிழகம் முழுவதும அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்துகொண்ட கண்டனக் கூட்டங்கள் மிக எழுச்சி மிக்கதாக உணர்ச்சி நிறைந்ததாக உருக்கம் மிக்கதாக நடந்து முடிந்திருக்கின்றன. அதனைத் தொடர்ந்து—நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை அமைச்சரை டில்லியிலே சந்தித்து நமது நியாயமான உரிமைகளை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

### மூன்றுவது கட்டம்.

மூன்றுவது கட்டமாக இந்தத் தீர்மானத்தை இம்மாமன்றத்தில் நிறைவேற்ற நாம் கூடியிருக்கிறோம். இந்தப் பிரச்சினையில் நிச்சயமாகக் கட்சி மாச்சரியத்திற்கு இடமில்லை. இதிலே எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தமிழர்கள் என்று கூட அல்ல—தமிழ்நாட்டுக்காரர்கள் என்ற நிலைமையில்—தமிழ்நாட்டின் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடாது என்ற அளவில் அனைவரும் பங்கு பெற்றிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினையில் பங்கு பெற்று இதுவரை முழு ஒத்துழைப்புத் தந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் இனியும் இந்த அரசுக்கு இது போன்ற ஒத்துழைப்பைத் தருவார்கள் என்ற நிறைந்த நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### ஏன் இந்தப் பொறுமை?

நான் முன்மொழிந்த தீர்மானத்தை வழி மொழிந்து அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களும் தங்களுடைய மனப்பூர்வமான ஆதரவைத் தமிழ்நாட்டு மக்களின் சார்பாகத் தந்தமைக்கு அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் மிகுந்த பணிவன்போடு மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு ஆளும் கட்சித் தரப்பிலும், மற்றக் கட்சிகள் தரப்பிலும் பேசிய உறுப்பினர்கள், இந்தப் பிரச்சினையில் நாம் இன்னும் வேகம் காட்ட வேண்டும் என்று கூறியிருந்தாலும் வேகம் காட்டவில்லை என்று கூறியிருந்தாலும் இரண்டையும் மத்திய அரசை வலியுறுத்துவதற்கேற்ற நல்ல படைக்கலன்களாக எடுத்துக்கொண்டு, அவர்கள் பேசிய அந்த வார்த்தைகளையே மத்திய அரசோடு இந்த அரசு வாதிடுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைத்துக்கொண்டு நிச்சயமாக அரசு வாதிடும்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் நான் மிகப் பொறுமையாக இருந்தேன் என்றும், இனிமேலும் இந்தப் பொறுமை தேவையில்லை என்றும் அறிவுரை கூறுகின்ற அளவில் எதிர்க் கட்சித் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள்.

இதில் பொறுமை காட்டுவதற்கு மிக இன்றியமையாத காரணம் உண்டு ! இந்தப் பிரச்சினை மைசூர் மாநிலத்து மக்களுக்கும், தமிழகத்து மக்களுக்கும் பகைமையுணர்ச்சியை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதாலும், இந்திய ஒருமைப்பாட்டில் நாம் உண்மையிலேயே நம்பிக்கை வைத்திருக்கின்ற காரணத்தாலும் அந்த ஒருமைப்பாட்டிற்கு ஊனம் ஏற்பட்டு



விடக் கூடாது என்பதாலும்தான் நாம் இந்தப் பிரச்சினையை மிகுந்த அக்கறையோடு—நிதானத்தோடு—பொறுமையோடு பல மாத காலமாகப் பரிசிலனை செய்து வருகிறோம்.

இந்தப் பிரச்சினையின் தீர்வுக்குரிய அறிக்கை இன்னும் ஒரு மாதத்தில் வரும் வரும் என்று காத்துக் கிடந்தோம். மாதங்கள் 18 உருண்டோடினவே தவிர —உற்ற பயன் ஏதுமில்லை !

அந்த வேதனையான நிலையில்தான் நாம் இந்தப் பிரச்சினையை அணுகுகிறோம். வேதனை ஏற்படுகின்ற நேரத்தில் உணர்ச்சிகள் பொங்குவதும் அந்த உணர்ச்சிக் கொந்தளிப்பில் வார்த்தைகள் வெளிப்படுவதும் இயல்பு. எனினும் வெளிப்பட்ட வார்த்தைகள் மறுபடியும் எடுத்து உட்கொள்ளக்கூடியவை அல்ல என்று காரணத்தினல் அந்த வார்த்தைகளில் நாம் நிதானம் காட்டவேண்டும் அதிலும் பொறுப்பிலே உள்ளவர்கள்அதிக நிதானம் காட்ட வேண்டும் என்பதாலும் பொறுமை காட்டி வருகிறோம்.

அதிலும் குறிப்பாக—மைசூர் அரசுக்கும், தமிழக அரசுக்கும் ஏற்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினையில் தேவையில்லாமல் மைசூர் மாநிலத்து மக்களின் மனம் புண்பட்டுவிடக் கூடாதே என்பதால்தான் நாம் இதிலே அளவு கடந்த பொறுமையைக் காட்டி வருகின்றோம்.

### உறவுச் சங்கிலி.

கர்நாடகத்து மக்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நீண்ட காலமாக உறவு உண்டு! அந்த உறவினை வலுப்படுத்தும் வகையில் காவிரி ஆறு—இரண்டு உறவையும் இணைக்கின்ற நல்ல சங்கிலியாகவும் இருந்திருக்கிறது. அந்த உறவை இன்று துண்டித்து விடுகின்ற நிலைமையில் இந்தக் காவிரிப் பிரச்சினை ஆகிவிடக் கூடாது என்பதில் தமிழக அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது.




இந்த அவையிலே இருக்கிற—இந்த நாட்டிலே இருக்கின்ற பலருக்கு மைசூர் மாநிலத்திலே இருக்கின்ற மக்களோடு நல்ல தொடர்பு உண்டு! மைசூர் மாநிலத்து மக்கள்

பவர் தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்; தமிழ்நாட்டினர் பலர் மைசூரில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!

இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையில் நாம் ஒவ்வொரு கட்டத்திலும் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்துகொண்டு—அவர்கள் எவ்வழி செல்ல வேண்டும் என்று சுட்டிக் காட்டும் நிலைமையில் தமிழக அரசு செயல்பட்டிருக்கிறது.

இந்த நிலைமையிலேதான்—இந்தப் பிரச்சினையில் கசப்புகள் ஏற்பட்டு அதனால் விபரீத விளைவுகள் இந்திய ஒருமைப்பாட்டுக்கு உலைவைப்பதாகவும், இரண்டு மாநிலங்களுக்கிடையிலேதான் நாம் மிகுந்த பொறுமையைக் கடைப்பிடித்து வருகிறோம்.

ஆனால், நாம் காட்டி வருகிற அக்கறையும், போற்றி வளர்த்து வருகிற பண்பாடும் நாம் உருவாக்கியிருக்கிற நல்லெண்ண முயற்சிகளும் மைசூர் மாநில அரசின் சார்பிலே காட்டப்படவில்லையென்பதைச் சில பல ஆதாரங்களின் மூலமாக எடுத்துக் காட்டினார்கள். மேலும்.

### கொடும்பாவி.

தமிழக முதலமைச்சருடைய கொடும்பாவி மைசூர் மாநிலத்திலே கொளுத்தப்பட்டதையும்சுட்டிக்காட்டினார்கள்.

முதலமைச்சருடைய கொடும்பாவி மைசூர் மாநிலத்திலே கொளுத்தப்படுவதைப்பற்றிக்கூட நான் வருத்தப்படவில்லை. கவலைப்படவில்லை. ஆனால் அந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்து அதைச் சிலபேர் தம்முடைய தமிழ்நாட்டிலே மகிழ்ச்சிகரமாக விளம்பரப்படுத்துகிறார்களே என்பதை எண்ணித்தான் நான் வருத்தப்படுகிறேன். தமிழ்நாட்டில் சிலர், காவிரி நீர்ப்பிரச்சினையை நான் சீக்கிரம் தீர்க்கவில்லை என, எனக்கு எதிர்ப்பாக இன்னும் தீவிரமாகச் செயல்படவேண்டுமென்று எனக்குச் சுட்டிக் காட்ட-அதற்கு அடையாளமாக என்னுடைய கொடும்பாவியைத் தமிழ் மண்ணிலே ஒரு தமிழ் மகன் கொளுத்தினால் கூட நான் வருத்தப்படமாட்டேன். நாம் இன்னும் வேகமாகச் செயல்படவில்லை-இன்னும் வேகமாகச் செயல்படவேண்டுமென்று இப்படித் துரத்துகிறார்கள் என்று எண்ணி மகிழ்ச்சியடைவேன். ஆனால் இம்மாதிரிச் செய்திகளைப் போடுகின்ற நேரத்திலே செய்தியளவிலே போடாமல் மகிழ்ச்சியுடன் போடுவதுமாதிரி போடுகிறார்களே என்றுதான் வேதனைப்படுகிறேன்.

நான் ஒருமுறை, 'நமக்குள்ளே ஆயிரம் தகராறுகள் இருந்தாலும் வெளி மாநிலங்களுக்கு நம்முடைய மாநில உரிமைகளை விட்டுக் கொடுப்பதிலும் நம்முடைய மாநிலத்தின் மான உணர்ச்சியை விட்டுக் கொடுப்பதிலும் கிஞ்சிற்றும் கட்சி





மாச்சரியங்களுக்கு ஆட்பட்டுவிடக்கூடாது' என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறேன். அது, இங்குள்ள ஒவ்வொரு உறுப்பினருடைய உணர்வுகளைப் பொறுத்த விஷயமாகும். ஆனால் ஒரு பத்திரிகையில்—[பத்திரிகையின் பெயரை வெளியிட விரும்பவில்லை]— அந்தச் செய்தி எப்படி வெளியிடப்பட்டிருந்தது என்பதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். "பெங்களூரில் 500 கன்னடத்தவர் ஒருவருடைய தலைமையில்—[அவருடைய பெயரை விளம்பரப்படுத்த விரும்பவில்லை]—தமிழக முதல் மந்திரி கருணாநிதியின் மைசூர் எதிர்ப்புக்கொள்கையை எதிர்த்து அவருடைய கொடும்பாவியை ஊர்வலமாக எடுத்துச்சென்று எரித்தார்கள்". நான் மைசூர் எதிர்ப்புக் கொள்கையை உடையவனாக அவர்கள் கற்பனை செய்து ஊர்வலமாகச் சென்று எரித்தார்கள் என்ற செய்தியை வெளியிட்டிருந்தாலும் செய்தி அளவிலே தான் போட்டார்கள் என்று நான் அதைப்பற்றிக் கவலைப்பட்டிருக்க மாட்டேன். நான் மைசூர் எதிர்ப்புக்கொள்கையை உடையவனாக இருக்கிறேன் என்று அவர்கள் சுட்டிக் காட்டிய குற்றச்சாட்டை இங்குள்ள பத்திரிகைக்காரர்கள் ஏற்றுக் கொண்டு, கருணாநிதியின் மைசூர் எதிர்ப்புக் கொள்கையை எதிர்த்து அவனுடைய கொடும்பாவி அங்கே கொளுத்தப்பட்டது என்று போடும் போது தான் வருத்தப்படுகிறேன். இந்தப் பிரச்சினையில் கட்சிகளை மறந்துவிட்டு, எல்லாக் கட்சிகளும் இதிலே ஒருமித்த குரலினை எழுப்ப வேண்டுமென்றுதான் 1968-லே இருந்து பெருமுயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பு நல்ல முறையில் இருந்து வருகிறது. இப்பிரச்சினையில் ஒரு காலக்கெடு வைக்க வேண்டும். இப்படியே நாம் பேச்சு வார்த்தைகள் நடத்துவதும், பேச்சு வார்த்தைகள் முறிவதும், நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து 18 மாதங்கள் கழிவதும், பிறகு மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டுவதும், அதன்படி கண்டனக் கூட்டங்களை நடத்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊர்வலத்தை நடத்தி, இப்போது சட்ட மன்றத்தில் தீர்மானம் போட்டுவிட்டு அனுப்பி இதற்கும் மத்திய அரசு இறங்கி வந்து—தமிழகம் இருளடைவதைத் தடுக்கும் பாதுகாப்பு முயற்சிகளில் ஈடுபடாவிட்டால் என்ன செய்வது? அதற்கு ஒரு காலக் கெடு வேண்டாமா? என்றெல்லாம் இங்கு பேசிய தலைவர்களும் உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

### காலக்கெடு

இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தைப்பற்றி மேலவையிலும் பேரவையிலும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் பேசிய பேச்சுக்களின் சுருக்கங்கள், நான் ஆற்றிய உரையின் சுருக்கங்கள்

அனைத்தையும், இந்தத் தீர்மானத்தையும் மத்திய அரசுக்கு அனுப்பி வைப்போம். அவர்கள் இந்த மாதம் 15 நாளைக்குள்ளாக பதில் அனுப்பாவிட்டால் அதற்குப் பிறகு மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி நாம் எந்தவிதக் கிளர்ச்சியை நடத்துவதாக இருந்தாலும் அதற்கு ஒரு கெடுவினை மத்திய அரசுக்கு அறிவித்துவிட்டு நடத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

### கசப்புணர்ச்சியை வளர்க்க வேண்டாம்

மைசூர் மாநில மக்களுக்கும் நமக்கும் ஏற்படும் தகராறாக மாநிலத்திலே இருக்கின்ற மக்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்கிற வேண்டுகோளை என் சார்பாக மாத்திரமல்ல-இந்த மன்றத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் மைசூர் மாநிலத்திலேயிருக்கின்ற பெருங்குடிமக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனது உணர்வுகளை, நமது இரு மன்றங்களையும் சார்ந்த உறுப்பினர்களின் உணர்வுகளை மைசூர் மாநில மக்களிடம் யாரும் திரித்துக்கூறி, அவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு கசப்பு உணர்ச்சியை ஏற்படுத்தாமலிருக்கவேண்டுமென்றும்கேட்டுக்கொள்கிறேன்.

### நியாயமும் உரிமையும்

மகாஜன் கமிட்டித் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் மைசூர் அரசு காட்டும் ஆர்வத்தை இந்த ஒப்பந்தத்தில் ஏன் காட்டவில்லை? என்று கேட்டார்கள். நான் டெல்லிக்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு சென்றிருந்தபோது மைசூர் மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் என்னைச் சந்தித்தார்கள். அந்தச் சந்திப்பின் முக்கிய நோக்கம் மைசூர் அரசினுடைய நியாயமான வாதங்களுக்குப் பின்னால் நானும் நிற்க வேண்டும் என்பதாகும். அவர்கள் அப்போது என்னிடம் பேசும்போது மகாஜன் கமிட்டி நிறுவப்பட்டு அந்தக் கமிட்டி தீர்ப்பளித்த பிறகு அதற்குப் புறம்பாகவோ ஒப்பந்தத்திற்குப் புறம்பாகவோ நடக்கலாமா என்று கேட்டார்கள். ஆமாம், இந்தக் கமிட்டியின் தீர்ப்புக்குப் புறம்பாகவோ ஒப்பந்தத்துக்குப் புறம்பாகவோ யாரும் நடக்கக்கூடாதென்பது நியாயம்தான் என்று நான் சொன்னேன்.

மைசூர், ஒப்பந்தத்தை மீறுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன், என்பதைப் புரிந்துகொண்டு சிரித்தார்கள். அதற்குப் பிறகும் இன்னும் மகாஜன் கமிட்டியின் அறிக்கையை அங்கீகரிக்க வேண்டுமென்று எப்படி மத்திய அரசை நிர்ப்பந்திக்க மைசூர் அரசுக்கு உரிமை இருக்கிறதோ அதைப் போல, தமிழக அரசுக்கு நியாயமான கோரிக்கையில் இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டும் என்று வலியுறுத்துவதில் ஏராளமாக உரிமைகள் இருக்கின்றன.



### மைசூரின் போக்கு

கிட்டத்தட்ட 1943-லிருந்து இதுவரையில் மைசூரின் போக்கு முரண்பட்டிருக்கிறது என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. அப்போது குடகு மாநிலம் மைசூரில் இல்லாததால்-குடகில் லட்சுமண தீர்த்தம் அணைகட்டப்படும்போது அப்போது மைசூர் மாநிலம் பாதிக்கப்படும் என்று அந்த அணைக்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டது. அப்போது தமிழ்நாடும் உதவிக்கு அழைக்கப்பட்டது. இதனால் தமிழ்நாடும் பாதிக்கும்; நீங்களும் சேர்ந்து குடகிலே அமைக்கப்போகிற லட்சுமண தீர்த்தம் அணைக்கட்டுக்கு எதிராகக் குரல் எழுப்புங்கள்' என்று மைசூர்அரசாங்கம் நம்மைக் கேட்டது.

இப்போது மைசூரும் குடகும் ஒன்றாகப் போனதும் தமிழ்நாட்டைப் பாதிக்கும் வகையில் ஹேரங்கி அணைக்கட்டைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

### நடுவர் தீர்ப்புக்குவிட நடுங்குவதேன்?

ஹேமாவதி திட்டத்திற்கு 1964-ல் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டதென்று சொன்னேன். 1964-ல் மைசூர் அன்று தயாரித்த ஹேமாவதி பற்றிய அறிக்கையில் நமக்குச் சாதகமான பல விஷயங்கள் இருக்கின்றன.

நடுவர் தீர்ப்பு என்றால் ஏன் பயப்படுகிறார்கள் என்று இங்கு கேட்டார்கள். இதுதான் காரணம். அதிலே என்ன இருக்கிறது என்றால், அவர்கள் ஹேமாவதி அணையைக் கட்டினால்,

"It is not possible to utilise the entire quantity as the Hemavathi river is a scheduled river governed by the Cauvery agreement of 1924 between Madras and Mysore."

'' மைசூருக்கும் தமிழகத்திற்குமிடையே 1924-ஆம் ஆண்டு ஏற்பட்ட காவிரி ஒப்பந்தத்தின் கீழ் பட்டியலிட்ட நதியாக ஹேமாவதி இருப்பதால் அந்த ஹேமாவதி நதியின் முழுமை நீர் அளவையும் உபயோகப்படுத்துவது என்பது இயலாது''. என்று அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல; இன்னும் ஒரு முக்கியமான விஷயம்.

### மைசூருக்காகத் தயாரித்த புத்தகம் :

The project does not affect utilisation or interstate interests the project is designed keeping in view 1924 agreement of Madras and Mysore states. The project comes under the purview of 1924 agreement.

'இந்தத் திட்டம் நீர் உபயோகத்தையோ-மாநிலங்களுக்கிடையேயான நலன்களையோ பாதிக்காது. மைசூர்-தமிழக அரசுகளின் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் மீதான கண்ணோட்டத்தில் உருக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டம் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் வரம்புக்குக் கீழே வருகிறது' என்று இருக்கிறது. இவ்வளவும் ஹேமாவதி அணையைப் பற்றி 1964-ம் ஆண்டு ஹேமாவதி ரிசர்வாயர் பிராஜெக்ட் என்று தலைப்பிட்ட இந்தப் புத்தகம் மைசூர் அரசால் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட புத்தகம். இதிலே 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படிதான் ஹேமாவதி அணை கட்டப்படும். கட்டப்படவேண்டும், தமிழ்நாட்டுக்குத் தரப்பட்ட வேண்டிய (லிமிடேஷன் ப்ளோ ரூல்ஸ் ஆப் ரெகுலேஷன்) பாதிக்காமல் அணை கட்டப்படவேண்டும் ; கட்டப்படும் என்று உறுதி அளிக்கின்ற புத்தகம் தான் இது '

அடுத்து, 1967-ஆம் ஆண்டு இன்னொரு சம்பவம் நடைபெற்றது. தமிழ் நாட்டு நீர்ப்பாசனப் பொறியாளரும், மைசூர் நீர்ப் பாசனப் பொறியாளரும் மத்திய அரசின் நீர்ப்பாசனப் பொறியாளர் தலைமையில் கூடி ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தில் மத்திய அரசு சி. டபிள்யூ. பி. சி. நீர்ப்பாசனத்துறை பொறியாளர் டி.பி. ஆனந்த் கையெழுத்திட்டு இருக்கிறார். மைசூர் அரசின் சார்பாக மாக்டோம் கையெழுத்திட்டிருக்கிறார். தமிழகத்தின் சார்பாக ஜே. இ. வாஸ் கையெழுத்திட்டிருக்கிறார்.

' 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மதிப்பளிக்க மைசூர் அரசு முற்றிலும் தயாராக இருக்கிறது எனவும் அந்த ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட வரையறைக்குட்பட்ட தண்ணீர்ப் பெருக்கு எந்த வகையிலும் ஹேமாவதி திட்டத்தினால் பாதிக்கப்படமாட்டாது எனவும் மைசூரின் தலைமைப் பொறியாளர் விளக்கினார்.

அடுத்தபடியாக, 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் நிபந்தனைக்கு உட்பட்டு 1940-41 முதல் ஹேமாவதி ஆற்றின் மூலம் கிடைக்கும் நீர்ப் பெருக்கின் அளவுபற்றிய புள்ளி விவரத்தை வைத்து, தேக்கப்படும் தண்ணீர் பற்றி நீர்மற்றும் மின்துறை அமைச்சகம் ஆய்வு நடத்திடும். சரியான அளவைக்குறித்த நிர்ணயிப்புகளை மைசூரும் தமிழகமும் சேர்ந்து முடிவு செய்யும். இரு அரசுகளினாலும் நாளடைவில் இது சம்பந்தமான விதிமுறைகள் இயற்றப்படும்—என்று மத்திய அரசின் பொறியாளர் கூறினார்.



### ஒப்பந்தத்தை நாம் மதிக்கிறோம்.

இந்த அளவுக்கு நல்ல ஆதாரங்கள் நம்மிடம் இருக்கிற காரணங்களாலேதான், நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று நாம் சொல்லுகிற நேரத்தில் மைசூர் அரசு தன்னிடத்தில் நியாயங்கள் இல்லாத காரணத்தால், ''1967-ம் ஆண்டு வரையில் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை நாங்கள் மதிக்கிறோம். அதற்குப் பாதகம் இல்லாமல்தான் இந்த அணைகள் கட்டப்படும்'' என்று கூறிவிட்டு, 1968-ல் ஹேமாவதி அடிக்கல் நாட்டு விழாவைத் தமிழக அரசின் இசைவையும் முன் ஒப்புதலையும் பெறாமலும் மத்திய அரசின் முன் அனுமதியும் பெறாமலும் நடத்தினார்கள்.

### கட்சிக் கண்ணோட்டமில்லை.

அன்றைக்கு மைசூரில் முதலமைச்சராக இருந்தவர்—வீரேந்திர பட்டீல் ; அவர் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர். அங்கே காங்கிரஸ் ! இங்கே கழக அரசு என்ற அளவில் அப்போதும் அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டாம் என்ற அளவில்தான் தமிழக அரசு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி மிகுந்த நிதானத்தோடும் இரண்டு மாநிலங்களுக்கும் உள்ள உறவுகளுக்கு எந்தவிதமான ஊனமும் ஏற்படக்கூடாது என்ற முயற்சியோடும் பல்வேறு காரியங்களில் ஈடுபட்டது. பேச்சு வார்த்தை நடத்தியது. அதை உறுப்பினர்களும் நாட்டு மக்களும் மிக நன்றாக அறிவார்கள்.

### தட்டிக் கழிக்கப்பட்டபோது..

1968-ல் அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தியதற்குப்பிறகு, மைசூர் சட்டமன்றத்தில் பேசிய முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் அவர்கள் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மைசூர் அரசு மதிக்காது என்று சொன்னார். அணைக்கட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்ட நேரத்தில்-மதிக்கப்பட்ட 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம்-இந்த அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்டு விழா வரை மதிக்கப்பட்டு வந்த 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம், 1962-ல் மத்திய அரசின் பொறியாளர் முன்னிலையில் தமிழக அரசின் மாநிலங்களின் பொறியாளர்கள் கையெழுத்திடுகின்ற நேரத்தில் மதிக்கப்பட்ட 1924-ம் ஆண்டு ஒப்பந்தம், மைசூர் சட்டசபையில் பேசுகிற நேரத்தில் முதலமைச்சர் இனி மதிக்கப்படாது என்று தட்டிக் கழிக்க

னூர். இதைக் கேட்டுத் திடுக்கிட்ட, அதிர்ச்சியுற்ற தமிழக அரசு உடனடியாக மத்திய அரசிற்கு எழுதுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதால் அதன் உதவியை நாடியது. நம் முறையீடுகள் மத்திய அரசிற்குப் பறந்தன. அதற்குப் பிறகு மத்திய அரசு உடனே தலையிட்டு "இந்த அணைகளை நீங்கள் கட்டக் கூடாது. நிறுத்தி வையுங்கள், பேச்சு வார்த்தையில் முடிவு காணுகிற வரையில் நிறுத்தி வைக்கப்படவேண்டும்" என்று மைசூர் அரசுக்கு எழுதியிருப்பதாகத் தகவல் தந்தார்கள்.

அப்போதுகூட சென்னையில் உள்ள பத்திரிகைகள் மத்திய அரசு மைசூர் அரசிற்கு உத்தரவு போடுவது சரியல்ல என்ற அளவில் எழுதியதை மறந்து விடவில்லை. பெங்களூரில் அந்தப் பத்திரிகை விற்பனையாக வேண்டும் என்ற ஒரே ஒரு விற்பனை நோக்கத்தோடு எழுதியது. அதைப்பற்றி எல்லாம் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

### மத்திய அரசின் ஆணை தொடர்ந்து மீறப்பட்டது.

அப்போது மைசூர் அரசுக்கு மத்திய அரசு இட்ட ஆணை தொடர்ந்து மீறப்பட்டு வந்தது. ஒவ்வொரு முறையும் நானும் நம் அமைச்சர் பெருமக்களும் கேரளத்து முதல்வரும் மைசூர் முதல்வரும் மத்திய அமைச்சர் கே.எல். ராவ் அவர்களோடு கூடிப் பேசுகிற நேரத்தில் எல்லாம் எல்லாவற்றையும் பேசிவிட்டுக் கடைசியாக வீரேந்திர பட்டீல் அவர்கள் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்றுதான் கூறுவார்.

### மைசூர் ஆப்பிரிக்கா கண்டத்தில் இல்லை.

"இப்போது இருக்கிற ஒப்பந்தத்தின் படி-இன்றுள்ள சூழ்நிலைப்படி எங்களுக்கு வரையறுக்கப்பட்ட லிமிட் ஃப்ளோஸ் தந்தாக வேண்டும்" என்று கூறினேன். லிமிட் ஃப்ளோஸ் என்று சொல்லி விட்டு மழை இல்லை; தண்ணீர் இல்லை என்றால் என்ன செய்வீர்கள் என்று இங்கு கேட்டார்கள்.

மைசூர் ஒன்றும் ஆப்பிரிக்கா கண்டத்திலும் இல்லை. நாமும் வெகுதூரத்தில் இல்லை. இன்றைக்கு லிமிட் ஃப்ளோஸ் என்று வரையறுக்கப்பட்டால் கிருஷ்ணராஜசாகரில் உள்ளது போல் நம் பொறியாளரும் இருப்பார். அவர்கள் மாநிலத்தைச் சேர்ந்த பொறியாளரும் இருந்து கொண்டிருப்பார். ஆகவே யாரும் அதிலே பொய் கூறித் தப்பித்துக்கொள்ள முடியாது. தவறு செய்துவிட முடியாது.

அந்தக் காரணத்தாலே நமது லிமிட் ஃப்ளோஸ் அங்கீகரிக்கப்பட்டு அதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த லிமிட் ஃப்ளோ



397

ரைக்கு எந்த ஊனம் வந்தாலும் இந்த அணைக்கட்டுத் திட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று திட்டவட்டமாகக் கூறி இருக்கிறோம்.

### மத்திய அரசின் ஆணையை மைசூர் அரசு மதிக்கவில்லை.

1968-ம் ஆண்டு மத்திய அரசு தமிழக அரசுக்கு எழுதிய கடிதத்தில் "தமிழ்நாட்டோடு இந்தப் பிரச்சினையில் கலந்து பேசி ஒரு முடிவு ஏற்படுகிற வரையில் மைசூரிலே கட்டப்படுகின்ற அணைகளை நிறுத்திவைக்குமாறும் மத்திய அரசு மைசூருக்குத் தெரிவித்திருக்கிறது" என்று ஒரு குறிப்புத் தெரிவித்தது. ஆனால், மத்திய அரசின் அந்த உத்திரவை மைசூர் அரசு நிறைவேற்றியதா? இல்லை!—அதைப் பொருட்படுத்தியதா? இல்லை! அதற்குத் தரவேண்டிய மதிப்பையாவது தந்ததா? கிடையாது! அப்போது மைசூரிலே இருந்த அரசு—காங்கிரஸ் அரசு! காங்கிரஸ் அரசு என்று குறிப்பிடுவதற்குக் காரணம்—இந்தப் பிரச்சினையில் அரசியலைக் கலக்க வேண்டும் என்பதற்காக அல்ல!

டெல்லியிலே இருந்த காங்கிரசும், மைசூரிலே இருந்த காங்கிரசும் ஒரே காங்கிரசாக இருந்தபோதுதான் இந்தப் பிரச்சினை உருவாயிற்று. ஆனால் அந்த நேரத்திலேயே—கட்சி என்பதை மறந்துவிட்டுத் தங்களுடைய மாநில உணர்வுகள் என்கின்ற அடிப்படையில் மைசூர் முதல்வர் வீரேந்திர பட்டீல்—மத்திய அரசின் தாக்கீதைப் பொருட்படுத்தாமல் தன்னிச்சையாக "நீங்கள் அனுமதித்தாலும், அனுமதிக்காவிட்டாலும் அணையை நான் கட்டியே தீருவேன். அதற்குப் பணம் தந்தாலும் தராவிட்டாலும் நீங்கள் மாநிலத்திற்காகச் செலவழிக்க விருக்கின்ற பணத்தையெல்லாம் அணைகளைக் கட்டுவதற்காகத் திருப்பி விடுவேன்" என்கிற அளவிற்கு வீராவேசமாகப் பேசினார்.

மைசூர் அப்படி நடந்துகொள்வது தவறான காரியம்! தவறான போக்கு—என்று மத்திய அரசின் அமைச்சர், கே.எல் ராவ் அவர்கள் அதை அப்போதே உணர்ந்தார். உணர்ந்ததை எடுத்துரைத்தார். மத்திய அரசிலே வீற்றிருக்கின்ற தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் உணர்ந்தார்கள். மைசூரின் போக்கு சரியானதல்ல என்றெல்லாம் குறை கூறினார்கள்.

### தன் ஆணையைத் தானே மீறுகிறது.

ஒரு கட்சியினுடைய ஆட்சி இல்லை; இன்னும் சொல்லப்போனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இன்று ஆட்சிப் பொறுப்பிலே இல்லை. மைசூரை ஆண்டு கொண்டிருப்பது மத்திய அரசு. கவர்னர் வாயிலாக—

மத்திய அரசினுடைய ஆட்சி, குடியரசுத் தலைவரினுடைய ஆட்சி அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய உத்தரவை யார் மீறுகிறார்கள்? இதுதான் வேடிக்கை! முதலிலே மத்திய அரசினுடைய உத்தரவை மைசூர் அரசு மீறியது. இப்போது மத்திய அரசினுடைய உத்தரவை மத்திய அரசே மீறிக் கொண்டிருக்கிறது. நீ என்ன மீறுவது? நானே என்னுடைய உத்தரவை மீறிக் கொள்கிறேன் போ, என்று சொல்லுவதைப் போல இன்றைக்கு மத்திய அரசு நடந்து கொண்டிருக்கிறது.

### மாமியாராகும் மத்திய அரசு.




கதையொன்று சொல்வார்கள்—ஆற்றிலே குளித்துவிட்டு வீட்டுக்கு வருகின்ற மாமியார் தன்னுடைய வீட்டிலேயிருந்து வெறுங்கையோடு திரும்பிக் கொண்டிருக்கின்ற பிச்சைக்காரனைப் பார்த்து, "என்னப்பா, ஏன் வெறுங் கையோடு வருகின்றாய்?" என்று கேட்க "உன் மருமகள் பிச்சையில்லை என்று சொல்லிவிட்டாள்"—என்று சொன்னதும், "அப்படியா அவளுக்கு அவ்வளவு திமிரா? வா, வா" என்று மறுபடியும் அழைத்துக் கொண்டு போய்—இவள் உள்ளே போய் குடத்தை இறக்கி வைத்து விட்டு, வந்து, பிச்சைக்காரனைப்பார்த்து—"பிச்சையில்லை என்று சொல்ல மருமகளுக்கென்ன உரிமை? நான் சொல்லுகிறேன். இல்லையென்று—நீ போ" என்று பிச்சைக்காரனுக்கு ஆணையிட்டாளாம்.

அதைப்போல—பிச்சைக்காரனுக்கு ஆணையிட்ட அந்த மாமியாரைப் போல இன்றைக்கு மத்திய அரசு நாங்கள் தருகின்ற உத்தரவை மீறுவதற்கு மைசூர் அரசுக்கு என்ன அதிகாரம்? நாங்களேதான் நாங்கள் போட்ட உத்தரவை மீறுவோம் என்கிற அளவில் அவர்கள் போட்ட உத்தரவை அவர்களே மீறிக் கொண்டிருக்கிறார்கள்.



### தமிழகத்தை அழித்துவிட்டு இந்திய ஒருமைப்பாடா?

இந்திய ஒருமைப்பாட்டிற்காகத் தான் நாம் இந்த வேதனைகளைத் தாங்கிக் கொண்டிருக்கின்றோம். இங்கே பேசிய எதிர்க் கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் பேசுகிற நேரத்தில் கூடச் சொன்னார்கள். நானும்கூட, தொடக்கத்தில் குறிப்பிட்டேன் 'நாம் நடத்துகின்ற எந்தக்கிளர்ச்சியாக இருந்தாலும், நாம் மேற்கொள்ளுகின்ற எந்த நடவடிக்கையாக இருந்தாலும்—அந்த நடவடிக்கைகளனைத்தும் இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு உலைவைப்பதாக அமைந்துவிடக்கூடாது! என்று'. ஆனால் அதே நேரத்தில் நம்முடைய உள்ளத்திலே கேள்வி எழாமல் இல்லை; பாரதியாரினுடைய பாட்டு நம்முடைய நினைவுக்கு வராமலில்லை.

"கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவதோ?" என்று பாரதியார் கேட்டார். நான் கேட்கிறேன்—தமிழகத்தை அழித்துவிட்டு இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதா!

இதைக் கேட்பதால் இந்திய ஒருமைப்பாடு அழிக்கப்பட வேண்டும் என்கிற அந்த எண்ணத்திலே சொல்லவில்லை—மத்திய அரசிலே இருக்கிறவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழகம் அழிந்து, அதன் வாயிலாக இந்திய ஒருமைப்பாடு கட்டிக் காக்கப்படவேண்டுமென்றால், அதற்குப் பேர் ஒருமைப்பாடா? 'தேர்தல் காரணத்தால் இன்றைக்கு இந்தப் பிரச்சினை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது; நடுவர் தீர்ப்புக்கு விடுவதற்கு அஞ்சுகிறார்கள்' என்றெல்லாம் சொல்லப்பட்டது.

மிகவும் பயங்கரமான முடிவுகள் எதிர்பார்க்கப்பட்ட நேரம், பொதுத் தேர்தல் நாடாளும் மன்றத்திற்குப் பல மாநிலங்களிலே நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, அந்த நேரத்திலே பெங்களூரிலேயே பேசிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்—காவிரி நதி நீர்ப் பிரச்சினை நடுவர் தீர்ப்புக்கு விடப்படும் என்று பட்டவர்த்தனமாகச் சொன்னார்கள்.

அப்படிச் சொன்ன பிறகும், மைசூரிலே நாடாளுமன்றத் தேர்தலில் எல்லா இடங்களையும் அவர்கள் கட்சிதான் பெற்றிருக்கிறது.

### நியாயத்திற்கு வாக்கு.

இதிலிருந்து, நியாயத்தைப் பேசினால், மைசூர் மக்கள் வாக்களிப்பார்கள் என்று தெரிகிறது. ஆகவே, நியாயத்தைச் செய்தால் இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட்டால் மறுபடியும் அவர்களுடைய கட்சிக்கு மைசூர் மாநிலத்திலே

நல்ல வெற்றி கிடைக்கும் என்பதனை இந்த நேரத்திலே அவர்களுக்கு நான் சிபாரிசு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### எடுத்து விளக்கப்படவில்லை.

மைசூர் மக்களிடத்திலே யாரும் சரியான நியாயத்தை எடுத்துச் சொல்லவில்லை என்றுதான் கருதுகிறேன். இதனாலேதான் மைசூர் மக்களுக்கு இந்த விஷயம் சரியாகப் புரிய வைக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றது.

1892-ம் ஆண்டு ஒப்பந்தம் என்ன ?

1924-ம் ஆண்டு ஒப்பந்தம் என்ன ?

1964-ம் ஆண்டு ஒப்பந்தம் என்ன ?

அறிக்கையில் நாம் ஒப்புக் கொண்டிருக்கின்ற ஒப்பந்த ஷரத்துக்கள் என்ன ? 1967-ம் ஆண்டு இரண்டு மாநிலத்தினுடைய பொறியாளர்களும் மத்திய அரசின் பொறியாளர் தலைமையிலே கையெழுத்துப் போட்டார்களே ; அது எந்த அடிப்படையில் ?

இவைகள் எல்லாம் மைசூர் மக்களுக்கு எடுத்து விளக்கப்படவில்லை-எனவேதான், எங்களுடைய திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்த்து தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளும் மைசூர் மாநிலத்திற்கு எதிராக இன்றைய தினம் செயல்படுகின்றன. ஆகவே நாம் நம்முடைய மாநிலத்து உரிமைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று மைசூரிலும் இருக்கின்ற பழைய காங்கிரஸ் கட்சியானாலும், சுதந்திராக் கட்சியானாலும், கம்யூனிஸ்ட்டுக்கட்சியானாலும் கழகமானாலும் நாங்கள் மைசூர் பக்கம்தான் இருப்போம் என்று இன்றைய தினம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

### உடன்பாட்டை நாங்கள் மீறவில்லை.

நான் அங்கேயும் உள்ள அந்த அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்-அந்த ஒப்பந்தங்களையெல்லாம் மீண்டும் எடுத்துப் பாருங்கள்.

நாங்கள் ஒரு இம்மி அளவாவது—எள் முனை அளவாவது அந்த ஒப்பந்தங்களுக்கு மாறாக எங்களுடைய கோரிக்கைகளை முன் வைக்கிறோமா ?

ஹேமாவதியோ, கபினியோ, 'ஹேரங்கியோ' சொர்ணவதியோ இந்த நீர்ப்பாசனத்திட்டங்களெல்லாம் நிறைவேற்றப் படக்கூடாதென்று நாங்கள் சொல்கிறோமா ? அந்தப் பாசன



திட்டங்களை நிறைவேற்றுங்கள். அப்படி நிறைவேற்றுகிற நேரத்தில் எங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் ; எங்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடாது ; தஞ்சை மாவட்டமும் காவிரி டெல்டா பிரதேசமும் இந்த அணைக்கட்டின் மூலம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான விதிமுறைகளையெல்லாம் பின்பற்றுங்கள் என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்குத்தான் நடுவர் தீர்ப்புத் தேவையென்கிறோம். நடுவர்தீர்ப்புக்கு விட்டால் நமக்கு எந்தவிதமான அச்சமும் கிடையாது.

### அவர்கள் கல்மனக் காரர்களா?

அதை அவர்கள் மறுக்கிறார்களென்றால் அதிலேயே நியாயம் அவர்கள் பக்கத்திலே இல்லையென்பது புலனாகிறது. அதை எடுத்து மைசூர் மாநிலத்து மக்களிடத்திலே சொல்லட்டும்—ஏற்கனவே செய்து கொண்டிருக்கின்ற ஒப்பந்தம்—அந்த ஒப்பந்தத்தை நாம் எப்படி மீறலாம் ? என்று மைசூர் மக்களைக் கேட்டால், மைசூர் மக்களென்ன அவ்வளவு பேரும், அப்படிக் கல்மனம் படைத்தவர்களா ?—தமிழ்நாட்டு மக்களெல்லாம் வாட வேண்டும் ; அவர்கள் வயிறு காய்ந்து போக வேண்டும் ; அவர்களுடைய கண்ணீர்க் குளங்களைக் காண வேண்டும்என்கின்றவர்களா மைசூர் மாநிலத்திலே இருக்கின்ற கர்நாடகப் பெருமக்கள் ? அல்லவே அல்ல !

### இந்திரா காங்கிரசின் கடமை.

அங்கே இருக்கின்ற மக்களெல்லாம் இந்த ஒப்பந்தங்களைப் பற்றி அறியாதவர்களாக இருக்கலாம், அங்குள்ள கட்சிக்காரர்கள் தான் இதை எடுத்துச் சொல்லவேண்டும். ஆனால் அங்கேயிருக்கிற நிலைமை என்னவென்றால்— ஒவ்வொரு கட்சிக்காரரும் யார் நடுவர் தீர்ப்பு வேண்டாமென்று சொல்வது என்பதிலே போட்டிபோட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்தப் போட்டியை மைசூர் மாநிலத்திலே இருக்கிற எல்லாக் கட்சிக்காரர்களும் தவிர்த்துக் கொண்டு அந்த ஒப்பந்தத்திலே உள்ள எல்லா ஷரத்துக்களையும் மக்களிடத்திலே எடுத்துச் சொல்வார்களேயானால்—அதுவும் இன்றைக்கு இந்தியாவை ஆளும் கட்சியாக இருக்கிற இந்திரா காங்கிரஸ்காரர்கள் இந்தக் காரியத்தை முன்நின்று நடத்துவார்களேயானால் மற்றக் கட்சிக்காரர்களும் அவர்களுக்குப் பின்னால் வந்து மைசூர் மாநிலத்திலே ஒரு அமைதியான நிலையை ஏற்படுத்த முடியுமென்று நான் கருதுகிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்தால்தானே மறுபடியும் பேச முடியுமென்று அமைச்சர் சுப்பிரமணியம் பேசியதை இங்கே குறிப்பிட்டார்கள்.—அது சரியான வாதம் அல்ல. ஏனென்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்த நேரத்திலேதான் இங்கேயும் அங்கேயும்—நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்ற நம்முடைய கோரிக்கை வைக்கப்பட்டது.

### ஜனநாயகத்தின் கடமை.

அதிலே கூடப் பெரும்பான்மை பார்க்க வேண்டுமேயானால் தமிழக அரசு, கேரளஅரசு இரண்டுமே நடுவர் தீர்ப்பைக் கேட்டிருக்கிறது. நடுவர் தீர்ப்பு வேண்டாம் என்று சொல்வது ஒரு மாநிலம்; வேண்டும் என்று சொல்வது இரண்டு மாநிலம். அதிலும் கூட ஜனநாயகத்தின்படி இந்தப் பெரும்பான்மையைஎண்ணிப்பார்க்காமல் பதினெட்டு மாதக் காலம் அவர்கள் காலத்தைக் கடத்தியிருக்கிறார்--

### வேலைகளை நிறுத்தி வையுங்கள்.

இப்பொழுது மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பிறகுதான் பேச வேண்டும் என்று தர்மநியாயம் பேசப்படுமேயானால் நான் அதை வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அதுவரையில் எந்த அணைக்கட்டிலும் வேலைகள் நடைபெறாது என்கின்ற உத்தரவாதத்தை நீங்கள் தமிழ் நாட்டிற்கு அளியுங்கள். அது மாத்திரமல்ல— வேலைகள் நடத்த வொட்டாமல் நீங்கள் மைசூர் அரசுக்கு உத்தரவு போடுங்கள். உத்தரவு போட்டால், அதை ஏற்று நடத்தக்கூடியவர்கள் இன்றைக்கு மைசூரிலே இருக்கிறார்கள்.

உங்களால் அனுப்பப்பட்ட கவர்னர் மைசூரிலே இருக்கிறார். கவர்னரை எதிர்த்து இந்த உத்தரவு கூடாதென்பதற்கான அமைச்சரவை அங்கே கிடையாது.

மக்கள் பிரதிநிதிகள் வந்து முடிவெடுக்கப்படும் வரையில் இந்தப் பிரச்சினை ஒத்திவைக்கப்படுமென்றால் அதுவரையிலே அணைகள் கட்டுகின்ற வேலையும் ஒத்திவைக்கப்படுவது தானே நியாயம்? இந்தச் சாதாரண நியாயம் கூடவா மத்திய அரசுக்குத் தெரியவில்லை? தெரிந்தும் வேண்டுமென்றே தட்டிக் கழிக்கிறார்களென்றால், தமிழர்களை அவர்கள் ஏமாளிகள் என்று கருதுகிறார்களா? எனக்கு அதுவும் புரியவில்லை.



### பண்பை நாம் பெற்றிருக்கிறோம்.

ஆகவே, இவைகளுக்கெல்லாம் விடை காணத்தான் நாம் இரண்டு மன்றங்களிலும் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த தீர்மானத்தை உருவாக்கியிருக்கிறோம். அதேநேரத்தில் மத்திய அரசு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் வரையில் மத்திய அரசின் அதிகாரங்களுக்குக் கட்டுப்பட்டே நடக்க வேண்டும் என்ற பண்பை நாம் பெற்றிருக்கிறோம். இந்த அரசு பெற்றிருக்கிறது. வீராணம் திட்டத்திற்கு ஒன்றரை ஆண்டுக் காலம் 2 ஆண்டுக்காலம் மத்திய அரசின் அனுமதி கிடைக்கின்ற வரையில் காத்துக்கொண்டிருந்தது அதற்குச் சரியான எடுத்துக்காட்டாகும். "வீராணம் திட்டம் தானே! இது எந்த மாநிலத்தையும் பாதிக்கவில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தது, நாங்களே ஏற்படுத்திக் கொள்கிறோம்." என்பதாக அவசரப்பட்டு அந்தக் காரியத்தில் நாம் ஈடுபடவில்லை.

அதேபோல இந்த கோட்டையைச் சுற்றி புல்பூண்டுகள் செதுக்கப்படவேண்டும் என்று சொன்னதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற்றே செய்ய வேண்டும் என்று அதிகாரி சொன்னார். ஆகவே மத்திய அரசின் உதவி அமைச்சர் இங்கே வந்திருந்தபோது அவரை அழைத்துப்போய் அவர் கண்ணிலே அந்த புல்பூண்டுகளைக் காட்டி அதைச் செதுக்க அனுமதி தர வேண்டும் என்று கேட்டு, நான்கைந்து கடிதம் எழுதி, ஞாபகப்படுத்தி, "புல்பூண்டுகளைச் செதுக்க அனுமதி கொடுத்தேன் போ" என்று அவர்கள் அனுமதி அளித்த பிறகுதான் புல்பூண்டுகள் இப்போது செதுக்கப்பட்டுக் கண்களைக் கவரும் வண்ணம் மலர்கள் கொண்ட பூங்கா தோன்றிக் கொண்டிருக்கிறது.

அந்த அளவுக்கு மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டுப் பணிந்து நடக்கிறோம். ஆனால் 25 கோடி, 30 கோடி என்கிற அளவில்—ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சொர்ணவதி ஆகிய பல்வேறு அணைக்கட்டுத் திட்டங்களை தமிழ்நாட்டைப் பாலைவனம் ஆக்கக்கூடிய பயங்கர நிலையை எண்ணிப் பாராமலேயே, மத்திய அரசின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஆட்சி நடந்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில் செய்கிறார்கள் என்றால் நாட்டு நிலைமை என்ன?

### பாலாறு பாழாறான கதை!

பாலாறு, மைசூர் அணைக்கட்டால் 'பாழாறாக'ப்போய் விட்டதை மறந்து விடக் கூடாது. ராணிப்பேட்டைக்கருகில் பாலாறு படுகை ஓரத்தில் 9 லட்சத்துக்கு மேற்பட்ட மரங்கள் இருந்தன என்று கணக்கிட்டு, நடந்த மகாயுத்தத்

தின்போது 3 லட்சம் மரங்கள் வெட்டப்பட்டு விறகாகக் கொடுக்கப்பட்டன என்றெல்லாம் சரித்திரம் படித்தவர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாலாறு இன்றையத் தினம் பாழாறாக மாறியிருக்கிறது.



காவிரியில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறபோது பல பேருக்கு இது எவ்வளவு பயங்கரமான பிரச்சினை என்று புரியாமல் இருக்கலாம். அதன் உண்மைத் தத்துவம் தெரியாமல் இருக்கலாம். பாலாற்றை எண்ணிப் பாருங்கள். அதில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிய காலம் ஒன்றுண்டு. இன்றைக்கு வெறும் மணல் வெளியாகக் கிடப்பதைப் பார்க்கிறோம். அதைப்போல இன்றைக்கு மைசூர் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறபடி அணைக்கட்டுகளை எல்லாம் கட்டிவிட்டால் சகாரா பாலைவனத்தைப் போல் காவிரி நதியும் மணல் ஆறாகப் போய்விடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

### இளங்கோ காட்டிய காவிரியை நாம் காணமுடியுமா?

இலக்கியங்களில் எல்லாம் காவிரியைப் பற்றி வருணித்திருக்கிறார்கள். அது சம்பந்தப்பட்ட வரலாறுகளை எல்லாம் உறுப்பினர்கள் சொன்னார்கள். சிலப்பதிகாரத்தில் இளங்கோ வடிகள்—

“மருங்குவண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடையதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி”

—என்று அழகுறப் பாடிக் காட்டினார். மைசூர் அரசு அந்த அணைகளைக் கட்டி விட்டால் அங்கே மருங்குவண்டு சிறந்தார்ப்பதைப் பார்க்கமுடியாது. மணிப்பூவாடையை நுகரமுடியாது.



### உணர்ச்சியைப் புரிந்துகொள்ளுங்கள்

கிழக்கு பாகிஸ்தான் அகதிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று திருமதி இந்திராகாந்தி அம்மையார் உலக நாடுகளை எல்லாம் உதவி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாமோ நாளைக்கு இந்த அணைக்கட்டுகளால் அகதிகளாக மாறிவிடக்கூடிய தமிழ்நாட்டு மக்களை ஆபத்தில் இருந்து காக்க உங்கள் உதவியைத் தாருங்கள் என்று அந்த அம்மையாரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த உணர்ச்சியை அம்மையாரவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

### கவலையில் தோய்ந்த உள்ளங்களின் கவின் முத்துக்கள்!

ஆளும் கட்சியின் சார்பில் பேசியவர்கள் “ நாம் தற்கொலைப் படையாக இருப்பதற்கும் தயாராக இருக்கிறோம். எந்த யுத்தத்திற்கும் தயாராய் இருக்கிறோம்” என்றார்கள். அப்படி ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் இதுபோல் ஒரு தீர்மானம் போடவேண்டிய அவசியம் இல்லை. அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டிப் பேச வேண்டியதில்லை. அவை அவர்களுடைய உள் உணர்ச்சிக்கு அடையாளமான வார்த்தைகளே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன். எதிர்காலத் தமிழகத்தை எண்ணிப்பார்த்து, கவலையால் குமைந்த நல்ல முத்துக்கள் என்ற அளவில் அவைகளை நான் எண்ணுகின்றேனே அல்லாமல் அவைகளை இந்த உணர்ச்சிகளை மத்திய அரசின் மீது பகைமையோ, அண்டை மாநில அரசின் மீது பகைமையையோ ஆக்கத் திருப்பப்படும் என்று பொருள் இல்லை. பேசிய உறுப்பினர்களே அப்படி நினைத்துப் பேசியிருக்கவும் மாட்டார்கள்.

### ஒரு கருத்து வேறுபாடு

எனினும், இயற்கையில் இது பயங்கரமான உருவம் எடுத்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது! மறைக்க முடியாது!

இன்று மத்திய அரசு மாநில அரசின் சில கொள்கைகளை கொஞ்சம் கசப்போடுதான் அணுகுகிறார்கள் என்று கூறப்படுவதை நான் மறைக்க விரும்பவில்லை. அப்படிச் சில நடைமுறைகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அத்தனை பிரச்சினைகளையும் தேர்தல், தேர்தல் கால ஒப்பந்தங்கள் ஆகியவற்றோடு—ஒன்றோடொன்று இணைத்துப் பார்ப்பது சரியான வாதமாகாது.

இவை எல்லாம் ஒரு அரசுக்கும் இன்னொரு அரசுக்கும் இருக்கக்கூடிய கருத்து வேறுபாடு என்று பார்க்கவேண்டுமே தவிர ஒரு கட்சிக்கும், இன்னொரு கட்சிக்கும் ஒரு மாநில மக்களுக்கும் இன்னொரு மாநில மக்களுக்கும் இருக்கிற வேறுபாடாகப் பார்க்கக்கூடாது.

### மக்களுக்குள் ஏற்பட்ட தகராறல்ல

ஹேமாவதி திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய திரு வீரேந்திர பட்டீல்—அவர் பழைய காங்கிரசைச் சேர்ந்தவர்—ஆகவே அதற்காக இங்கே உள்ள பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களைக் குறை சொல்ல வேண்டுமென்று குறை சொன்னதில்லை. அது தமிழக அரசுக்கும், மைசூர் அரசுக்கும் இடையே ஏற்பட்டிருக்கின்ற தகராறு என்ற அளவில்தான் பார்த்தோம். உண்மையில் இது மைசூர் அரசுக்கும் தமிழக அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள தகராறே தவிர மைசூர் மாநில மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் ஏற்பட்டுள்ள தகராறு அல்ல. இந்த இரு அரசுக்கும் இடையே எழுந்துள்ள தகராறில் மத்திய அரசு தலையிட்டு உடனடியாக நியாயம் வழங்க வேண்டுமென்று நாம் கோருகிறோம். இந்தத் தகராறில் தலையிட மத்திய அரசு மறுக்கிறது. மாநில அரசின் கருத்துக்கள் அலட்சியப்படுத்தப்படுகின்றன. பிறகு பார்க்கலாம் என்பதாகப் பிரச்சினைகளை ஒத்தி வைக்கிறார்கள். நமது உணர்ச்சிகளைச் சரியான முறையில் புரிந்து கொள்ள முடியாத நிலைமை அங்கே இருக்கிறது.

### காலம் தாழ்த்தும் காரணம்.

அமைச்சர் மாதவன் அவர்களும், சாதிக் பாட்சா அவர்களும் டெல்லிக்குச் சென்று திரு கே. எல். ராவ் அவர்களைச் சந்தித்துப் பேசினார்களே, அங்கே என்ன பேசப்பட்டது, அதை முதல் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கோருகிறேன் என்பதாக உறுப்பினர் சொன்னார். அதை நான் அனைத்துக் கட்சித் தலைவர் கூட்டத்தில் விளக்கி இருக்கிறேன். அதைப்பற்றி வேறு விவரங்களை இங்கே சொல்ல விரும்பவில்லை.

திரு கே. எல். ராவ் அவர்கள் அப்போது சொன்ன கருத்துக்களையாவது மறுபடியும் இதுவரை எழுத்துமூலம் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்களா என்றால் இல்லை. அப்படி எதுவும் செய்யாது காலம் தாழ்த்தி வருகிறார்கள்! அதன் காரணம் நமக்குப் புரியவில்லை. ஆனால் இன்றைய தினம் வேறு ஒரு செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது.



மாநில அரசு தவறு செய்தது, முதல் அமைச்சர் தவறு செய்துவிட்டார். இந்திராகாந்தி அம்மையார் முதல் அமைச்சர்களையெல்லாம் கூட்டி மாநில சுயாட்சிபற்றி விவாதிப்பதாகச் சொல்லவில்லை—அவர்கள் கடிதம் எழுதியது நிர்வாகச் சீர்திருத்தக் குழுவைப் பற்றித் தான் என்பதாக ஒரு அதிகாரி சொல்லியிருக்கிறார். உண்மையைச் சொல்லிவிட்டு இன்றைக்கு அரசியல்வாதிகள் அதில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ள அதிகாரிகளை விட்டு மறுப்புவிடச் சொல்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

திருமதி இந்திரா காந்தி அம்மையார் எழுதிய கடிதத்தை வைத்துக் கொண்டுதான் நான் பேசுகின்றேன். அந்தக் கடிதத்தில் என்ன இருக்கிறது? சந்தேகம் இருந்தால் யார் வேண்டுமானாலும் இந்தக் கடிதத்தை வாங்கிப் பார்க்கலாம்.

These are important issues and we intend to consult all Chief Ministers

*(இவை முக்கியமான பிரச்சினைகளாக இருப்பதால் எல்லா முதல்வர்களோடும் கலந்து பேசிட நாங்கள் விரும்புகிறோம்)* என்று சொல்லும் போது எவை எல்லாம் முக்கியமான பிரச்சினைகள்? அவர்கள் கடிதம் எதற்காக எழுதினார்கள்?

I have received your letter on 15th June with which you have sent me a copy of the report of Centre-State Relations Enquiry Committee.

*(தங்களது ஜூன் 15-ஆம் தேதிய கடிதமும் அதனோடு மத்திய—மாநில உறவுகள் பற்றிய விசாரணைக்குழுவின் அறிக்கையும் கிடைக்கப்பெற்றேன்)* என்பதாக அவர்களே நாம் அனுப்பி வைத்த ராஜமன்னார் குழு அறிக்கைக்குப் பதில் எழுதினார்கள். அதில்

> Your Government will probably examine the recomendation of this report.

*(இந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை உங்கள் அரசு ஆராயக்கூடும்.)* என்று குறிப்பிட்டுவிட்டு

> As you know the Administrative Reforms Commission also went into this question.

*(இதே பொருள் குறித்து நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷனும் ஆராய்ந்தது என்பதைத் தாங்கள் அறிவீர்கள்)*—என்று சொல்லிவிட்டு,

It has already submitted a report and it is under consideration. If the views of your government are made available to us, they will also be taken into account.

(அது ஏற்கனவே ஒரு அறிக்கை கொடுத்துள்ளது. அது ஆய்வில் உள்ளது. உங்கள் அரசின் கருத்தும் எங்களுக்குத் தெரிவிக்கப்படுமானால் அதனையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம்)—என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்தவரியில் அவர்களே (These are important issues) (இவை முக்கியமான பிரச்சினைகள்) என்று குறிப்பிட்டிருப்பது, ராஜமன்னார் கமிட்டி அறிக்கையைப் பற்றியா, அட்மினிஸ்டேரேஷன் பார்ம் கமிட்டி அறிக்கை என்று பத்திரிகையில் வந்திருக்கிறதே, அதைப் பற்றியா ?

ஒரு வேளை நான் குறைந்த ஆங்கில அறிவு பெற்றவன் என்ற காரணத்தால் அந்த வகையில் குறைகூறுகிறார்களோ என்னவோ ? கடிதத்தை எழுதிவிட்டு டெல்லி வட்டாரத்து அதிகாரிகள் இப்படிச் சொல்கிறார்கள் என்றால், நம்முடைய பத்திரிகைகளுக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சி !

### விழாக் கொண்டாடியிருக்கின்றன !

முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டப்போவதில்லையாம் ! கருணாநிதிக்கு 'ஆப்பு' என்றெல்லாம் பத்திரிகைகள் போடக் கூடும். ஒரு பத்திரிகையை மட்டும் சொல்லவில்லை, பல பத்திரிகைகள் இதை ஒரு பெரிய விழாவாகவே கொண்டாடியிருக்கின்றன.

இந்திராகாந்தி அவர்களின் கடிதத்தைக்கூட அப்பத்திரிகைகள் போடுவதில்லை. இந்திரா காந்தி அம்மையார் 'முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டுகிறோம்' என்று சொல்லிவிட்டு பின்னர் அதிகாரிகள் அப்படியெல்லாம் இந்திரா காந்தி அம்மையார் முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டப் போவதில்லையாம் என்று சொல்வது நம்முடைய பத்திரிகைகளுக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சி !

### வருத்தப்பட மாட்டேன்.

முதலமைச்சர்களைக் கலந்து பேசுவதென்றால் தனித்தனியாகப் பேசுவது என்று அர்த்தம் அல்ல. எல்லோரையும் அழைத்துப் பேசுவதுதான்! இந்திரா அவர்களே மறுத்தால் கூட நான் கவலைப்படப் போவதில்லை. அப்படி இந்திரா காந்தி . அம்மையாரே மறுத்திருந்தாலும் என்னுடைய வாதம் இன்னும் வலுப்பெறுமே தவிர குறைவுப்படாது ! மாநிலங்களுக்குப் பிரதமர் கடிதம்



பற்றி மகிழ்ச்சியடையவும் உரிமை கொடுக்கவில்லை என்று அதைப் பயன்படுத்திக் கொள்வேனே தவிர, வருத்தப்படப்போவதில்லை.

சென்னை சுத்திகரிப்பாலை தொடக்கவிழா நடைபெற்ற நாட்களில் தமிழக முதல்வருக்கு உரிய மரியாதை காட்டப்படவில்லை என்ற குற்றச்சாட்டை மறுத்து பெட்ரோலிய அமைச்சர் திரு. சேத்தி கூறியிருக்கிறார்.

அப்போது பெட்ரோலிய அமைச்சராக இருந்தவர் திரு. திரிகுணசென் என்பவர். அக்டோபர் 2-ஆம் தேதியன்று, அதாவது மகாத்மா காந்தி பிறந்த நாளன்று 1969-ஆம் ஆண்டு அவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார், அதாவது,

October 2, 1969.

While I am looking into how misunderstanding arose which had given you reason to believe that those who organised the function had failed to inform you and other Ministers of your state. I am writing once again to convey my most sincere apologies for your having had occasion to feel that you were not invited whatever may be the reasons for this. I now try to assure you and your government of my highest consideration at all times.

With regards ;

(sd) Triguna Sen.

அக்டோபர் 2, 1969.

தங்களையும் தங்களது மாநிலத்தின் இதர அமைச்சர்களையும் விழா அமைப்பாளர்கள் அழைக்கத் தவறினர் என்று தாங்கள் நம்புவதற்கான காரணத்தை அளித்த அபிப்பிராய பேதம் எப்படி உண்டாயிற்று என்பது குறித்து நான் ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். தாங்கள் அழைக்கப்படவில்லை என்று தாங்கள் கருத நேர்ந்ததற்காக என் ஆழ்ந்த உள்ளார்ந்த மன்னிப்பைத் தெரிவிப்பதற்காகவே மீண்டும் ஒரு முறை இதனை எழுதுகிறேன். இதற்கான காரணம் எதுவாயினும் ஒன்றை உறுதியாகக் கூறுகிறேன். எல்லாக் காலத்தும் தங்களிடமும் தங்களது அரசிடமும் மிக உயர்வான மதிப்பைக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

டி. சென்.

—என்று கடிதம் எழுதியிருக்கிறார். இவைகளையெல்லாம் நான் கூறுவதற்குக் காரணம், மாநில அரசின் உணர்வுகளை, மத்திய அரசில் இருப்பவர்கள், தாங்கள் மத்திய அரசில்

இருப்பதால் அவற்றையெல்லாம் மறுத்துவிடுவது, மட்டப் படுத்திவிடுவது என்பதையெல்லாம் சரியான போக்கு அல்ல என்பதை எடுத்துக்காட்டத்தான்.

### நாம் நினைத்தால்.

அவர்களைப்போல நாம் நினைத்தாலும் செய்யலாம். இந்திய ஒருமைப் பாட்டுக்கு ஊறு நேருமே என்பதைப் பொருட்படுத்தாமல், மைசூரைப் போல் 25 கோடி ரூபாய் செலவிடாவிட்டாலும், சின்னஞ்சிறு விஷயங்களை மத்திய அரசைக் கேட்காமலேயே நாம் நினைத்தால் செய்துவிட முடியும். ஆனால் அப்படிச் செய்யவில்லை.

நாம் ஏன் பொறுமை காட்டுகிறோம்! இந்திய ஒருமைப் பாட்டுக்கு ஊறு விளைவிக்கக்கூடாதே, மைசூர் மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் வன்மையான போர் ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதால்தான் நாம் இவ்வளவு பொறுமை காட்டுகிறோம்!

### எடுத்துச் சொன்னால் . . .

மைசூர் மாநிலத்தில் மக்கள் ஏற்றுக் கொள்கிற வகையில் விஷயங்கள் விளக்கிச் சொல்லப்படாத காரணத்தால் சிலஉணர்வுகள் மைசூர் மாநில மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். மைசூரிலே ஒரு அரசு இன்றைக்கு இல்லாவிட்டாலும், இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள், மற்ற கட்சிகள் எல்லாம் ஒருங்குகூடி, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம், 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தம் இருக்கிறது, என்பதையும் எந்தெந்த அளவுக்கு நாம் கட்டுப்பட்டிருக்கிறோம் என்பதையும் 1964-ல் ஹேமாவதி அணைகட்டுவதற்காக உடனடியாகத் தயாரித்த அறிக்கை என்ன என்பதையும் மைசூர் மக்களிடத்தில் எடுத்துச் சொன்னால் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்களா?

மைசூர் மாநிலத்தில் உள்ளவர்களை, அரசியலுக்காக அரசியல் வாதிகள் பயன்படுத்துகிற காரணத்தால் அம் மக்களுக்குத் தமிழகத்தைப் பற்றியும், தமிழ்நாட்டுக் கட்சிகளைப் பற்றியும், தமிழக மக்களைப் பற்றியும் கசப்பான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. தயவு செய்து கர்நாடக மக்கள்—மைசூர் மாநில மக்கள்—தங்களுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று அனைவரையும் மிகுந்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



411

### பொறுமையைச் சோதிக்காதீர்கள்.

நம் முன்னால் வைத்திருக்கிற தீர்மானத்தை நாளை மறுநாள் டெல்லிக்கு அனுப்ப இருக்கிறோம். இதுவரையில் நம் எண்ணங்களை நம்முடைய வேண்டுகோளை அலட்சியப் படுத்தியது போல் அல்லாமல், காலங் கடத்தியது போல் அல்லாமல் மிகுந்த பரிவோடும், பெருமிதத்தோடும் உணர்ந்து இந்திய சர்க்கார் நீர்ப்பாசன அமைச்சர் திரு கே. எல். ராவ் அவர்களும், மத்திய அமைச்சர் அவர்களும் இன்று மைசூரிலிருந்து வந்து மத்திய அமைச்சர்களாக இருக்கிறவர்களும் நன்கு ஆராய்ந்தறிந்து, தமிழகத்திற்குப் பாதகம் ஏற்படாத அளவில் முடிவை எடுத்து அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். இன்னும் அவர்களிடமிருந்து நமக்குச் சாதகமான பதிலை—நடுவர் தீர்ப்புக்கு விடப்படும் என்ற பதிலை எதிர்பார்க்கின்றேன். அந்தக் காரணத்தினால்தான் நண்பர்கள் எல்லாம் பேசிய கோபத்தை—ஆத்திரத்தை—வெடிகுண்டு வைத்து தகர்த்தெறிவோம் என்பவைகளையெல்லாம் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அந்த முறை நமக்கு ஏற்றது அல்ல!

தமிழ்நாட்டு மக்களைக் காட்டுமிராண்டிகளாக ஆக்கிவிடக் கூடிய அளவுக்கு அவர்கள் போய்விடக்கூடாது. தமிழ்நாட்டு மக்கள் வேதனைப் புழுதியில் எறியப்பட்டு விடக்கூடாது என்பதற்காக இந்த நல்ல முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள்!

எங்கள் அடக்கத்தை அலட்சியப்படுத்தாதீர்கள்!!

எங்களுடைய பண்பைப் பரிகாசத்திற்கு உட்படுத்தாதீர்கள்!!!

மத்திய அரசிடமிருந்து நல்ல முடிவினை, நல்ல விதமான தீர்ப்பினை, தமிழ்நாடு எதிர்பார்க்கிறது.

தமிழரசு (16—8—71)

இலவச இணைப்பு

# தமிழரசு

திங்கள் இருமுறை செப் 1.1971-35 காசு



# அரசு சிமெண்ட்

## வலிவும் வனப்பும் வாய்ந்தது




நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்ப முறை ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது?

TIDCO

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)**
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி. தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்.
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

AC-11




# தமிழரசு

மலர் 2 1-9-1971 இதழ் 5


கோட்டை கொத்தளத்தில்......
தடையுடைத்து வா! வா! (கவிதை)
அண்ணா பண்ணை ஆற்றிடும் சேவை
அந்தக் குரல்
அகராதிச் செய்தி
தில்லையாடித் திருவிழா
திருவாளர் பொன்மொழியார்
பிறப்பு இறப்பு புள்ளி விவரங்கள்
கேளுங்கள் கொடுக்கப்படும்
வறட்சியைத் தாங்கும் புதிய வரகு
உலகப் பெருங்காடுகள்
ஏன் இந்தக் காதல்? (தொடர்கதை)
வெண்பாப் போட்டி

முதல்வரின்
விடுதலை நாள் விழா
வானொலிப் பேச்சு

அரசுத்துறை ஒப்பந்தங்கள் (டெண்டர்ஸ்).
வேலை வாய்ப்பு விளம்பரங்கள்
பக்கம் 29—52

417

# அறியாமை இருள் அகன்றிட உழைப்போம்!

ஆகஸ்ட் 15! ஆனந்த சுதந்திரம் அடைந்த இந்த நாளில் கொண்டிடும் மகிழ்ச்சியை, இந்த ஆண்டு, நான் இரண்டு நாட்களுக்கு முன்பே பெற்றுத் திளைத்திட்டேன்.

ஆம்; ஆகஸ்ட் 13-ஆம் நாள் தஞ்சைத் தரணியெங்கும் ஆரவாரம்! எழுச்சி முரசம்! உணர்ச்சிப் புதுவெள்ளம்! கரிகால் பெருவளத்தான் ஆண்டிருந்த கவின்மிகு சோழப் பேரரசின் ஒரு பெருந் தலைநகராம் காவிரிப்பூம்பட்டினத்தைச் சூழ்ந்துள்ள எழில்நிறை சிற்றூர்களில் ஒன்றுதான் தில்லையாடி! அந்தத் தில்லையாடி தியாகிகளின் திருத்தலம்.

தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகளின் காலடிகள் முதன் முதலாகப் பதிந்த வீரம் செறிந்த தமிழ் மறவர் கிராமம். அங்கேதான் நேற்று முன் தினம் நெஞ்சையள்ளும் திருவிழா.

தஞ்சைக்கேயுரிய கலைக் கோலத்துடன் நடைபெற்ற பெருவிழா. தரையினில் உதிர்ந்தனவோ வானத்துத் தாரகைகள் என வியப்புறும் வண்ணம் ஒளியுமிழ் மின்விளக்குப் பந்தல்! வீதியெல்லாம் தோரணங்கள்! செந்தேனை மிஞ்சிடும் சுவை படைத்த செந்தமிழ்ச் சொற்கோவைகள் தாங்கிய பதாகைகள்! தேர் காணவும் தெப்பம் காணவும் திரண்டிடும் மக்கள் கூட்டம் அன்றைக்குத் தில்லையாடி ஊர் காணப் பொங்கி வழிந்தது.

புத்தாடைச் சிறார்கள்-புன்னகை மாதர்கள்-புலி நிகர் தமிழர்கள்-அணிவகுத்த மாட்சி, கண்கொள்ளாக் காட்சி! இந்திய விடுதலைக்கு அறப்போர்க்கொடியேந்திய அண்ணல் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் நடத்திய நிறவெறி எதிர்ப்புப் போரில் அவருக்குத் தோள் கொடுத்துத் துணை நின்று, தேள் கொடுக்கெனும் அடக்குமுறையால் உயிர் நீத்த தியாகச் சுடர்களின் பிறப்பிடமே தில்லையாடியாகும்! பத்தினிப் பெண் கண்ணகி வழிவந்த பதினாறட்டைப் பிராயத்தினள் வள்ளியம்மையும்-நாகப்பன்-நாராயணசாமி எனும் தமிழ்க்குல மறவர்களும் உரிமைக்குக் குரல் கொடுத்து அதற்குத் தம் உயிரையே விலையாகக் கொடுத்த கதையை, வேதனை நெஞ்சைப் பிளக்கக் காந்தியடிகளே எழுதிக் காட்டியுள்ளார்.

அந்த வீரர்கட்கும், வீராங்கனைக்கும் நன்றிக் கடனாற்றிடத் தமிழக அரசு விரும்பியது. 1969-ஆம் ஆண்டு இறுதியில் அதற்காக அடிக்கல் நாட்டு விழா! இந்த ஆண்டு தில்லையாடி, வள்ளியம்மை நகர் என்னும் பெயர் பூண்டது.

ஐம்பத்தாறு ஆண்டுகட்கு முன்பு தில்லையாடிக்கு வந்த காந்தியடிகள் அங்கே எந்த அரிசன மக்களைக் கண்டு மனம் வருந்தினாரோ, அந்த அரிசன மக்களுக்கு 150-க்கு மேற்பட்ட வீடுகள், நாகப்பன் நகர் என்ற பெயரால் இன்று திறக்கப்பட்டுள்ளன. காந்தியடிகள் அமர்ந்து பேசிய இடத்தில் கமல மலர் குவிந்ததுபோல் கல்தூண் ஒன்று எழுந்து நிற்கும் கம்பீரந்தான் என்னே!

தென்னாப்பிரிக்காப் போராட்டத்தில் தமிழர்களின் பங்கு பற்றி விளக்கிடும் உயிர் ஓவியங்கள் கொண்ட வள்ளியம்மை மண்டபம்! அதன் வாயிற்புறத்தே அந்தக் கொழுந்துப் பெண்ணின் கோலமிகு சிலை! அவள் பெயரால் உயர்நிலைப் பள்ளி! தியாகச் சுடர்களின் திருநாமம் தாங்கிய மருத்துவ மனை! மாணவர் விடுதி! இன்னபிற எழுச்சி நிறை சின்னங்கள்! எனது மனத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி!

நெஞ்சில் பதிந்திருக்க வேண்டியவர்களின் நிரந்தரத் தியாக வரலாற்றின் நினைவுச் சுவடுகள் அழிந்து விடாமல் அரசின் சார்பில் அவற்றைக் காப்பாற்றி விட்டோமே என்கிற ஆறுதல்! இந்த ஆண்டு விடுதலை தினத்தில் எந்த ஆண்டுமில்லாத மன நிறைவு; தில்லையாடியின் புது வடிவத்தின் காரணமாகப் பெறுகிறோமெனினும் வந்து முட்டி மோதும் பிரச்சினைகள் பலவற்றை நாடு சந்திக்கவும் சமாளிக்கவும் வேண்டியிருக்கிறதே என்கிற பெருமூச்சு, நாட்டு நலனின்பால் அக்கறை கொண்ட அனைவர்க்கும் ஏற்பட்டே தீரும்!

கிழக்கு வங்கத்துப் பிரச்சினையில் இந்திய அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்குத் தமிழ் மக்களின் வலுவான ஆதரவு என்றைக்கும் உண்டு. அந்நியப் பகைவர்களால் ஏற்படும் இடையூறுகளைத் தகர்த்தெறியக் கிளர்ந்தெழும்போது, உள்ளுக்குள் கலாம் விளைத்து அமைதியை உருக்குலைத்துத் தடைக்கற்களாய் நிற்கின்றோர் எட்டப்பர், மீர்ஜாபர் வரிசையிலே இடம் பெறுவர். எந்த வகையில் வன்முறைக்கு அவர்கள் வித்திட்டாலும் அதனைத் தொடக்கத்தில் தூக்கி எறிவதே அரசியல் தூய்மை







# இல்லாமைக் கொடுமை தொலைந்திட உழைப்போம்!

யாளர்களின் பணியாக இருந்திடல் வேண்டும். தன்னைத் தானே அர்ப்பணிக்கும் உள்ளமின்றி, 'தலைகள் சில கொய்யப்படுவதால் தழைத்திடும் வளங்கள் தரித்திர நாராயணர்க்கு' என்று கூறுவோன் அமைதியின் பகைவன்! சமுதாயத்தின் புல்லுருவி! வன்முறையின் வார்ப்படம்! அவனைச் சட்டம் கண்காணித்துக் கண்டிக்கிறதெனினும் சமுதாயமும் அவன் விஷயத்தில் எச்சரிக்கையாயிருந்து, பெற்ற சுதந்திரத்தைப் போற்றி வளர்த்திட வேண்டும். வன்முறையாளர்களுக்கு வாயிற்கதவு எங்கே திறக்கப்படுகின்றது ? அதனையும் அறிந்திடல் நலமன்றோ ?

எங்கே இல்லாமை நெளிகிறதோ-எங்கே சிலர் வாழப் பலர் வதைப்படுகிற நிலை இருக்கிறதோ-எங்கே உழைப்பவன் உருக்குலைந்து, உயர்ந்தவன் மேலும் உயர்ந்து கொண்டே போகின்றானோ-எங்கே வறுமையின் ஆதிக்கம் கொடி கட்டிப் பறக்கிறதோ-அங்கெல்லாம் நெருப்புக்கேற்ற பஞ்சு மெத்தை போல், வன்முறையாளர்க்கேற்ற வாய்ப்புக்கள் உருவாகின்றன. அந்த வாய்ப்புக்களைத்தான் இல்லாது ஒழிக்க வேண்டும். அதற்குப் படிப்படியாக-பரவலான திட்டங்களைத் தீட்டிக் கொண்டு செயல்பட்டு வருகிறோம்.

இருண்டு கிடக்கும் கிராமங்கள் ஒளிபெறத் தீவிரத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

குடி தண்ணீர்த் தட்டுப்பாடு நீக்கக் குடிநீர் வாரியத்தின் முயற்சிகள்!

குடிசைப் பிரச்சினை தீரப், பலகோடி ரூபாயில் குடிசைமாற்று வாரியத்தின் அதிவேகப் பணிகள்!

செல்வம் சிலரிடத்திலே மட்டும் குவியக்கூடாது என்ற சமதர்ம அடிப்படையில் நிலத்திற்கு உச்ச வரம்பு-அந்த உச்ச வரம்பிற்கு அளிக்கப்பட்ட விதிவிலக்குகள் ரத்து.

பேருந்துகள் உச்ச வரம்பு-பெரிய பேருந்து நிறுவனங்கள் நாட்டுடைமையாக ஆக்கப்படும் திட்டம்!

## நிரந்தர தியாக வரலாற்றின் நினைவுச் சுவடுகள் நெஞ்சில் பதியட்டும்

நிலமற்ற-மனையற்ற எளியோர்க்குப் பட்டா வழங்கிடும் பாங்கு! விவசாயத் தொழிலாளர்கள் குடியிருப்புக்களை அவர்களுக்குச் சொந்தமாக்கும் புரட்சிச் சாதனை!

பின்தங்கியோர் அரிசனங்கள், நலங்காக்கப் புதிய புதிய ஏற்பாடுகள்!

பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கான ஆக்க வேலைகள்!

பட்டதாரி மாணவர்களுக்கான 'இளைஞர் அணி" வேலை வாய்ப்பு!

பள்ளி இறுதி வகுப்புத் தேறியோர்க்குக் காவல் துறையில் புதிய பதவி!

தொழில் நுணுக்கப் படிப்பில் தேர்வு பெற்றோர் சிறு தொழில் துவங்கிட அரசின் கடன் உதவி!

ஆசிரியர்கள், பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்பு!

கிராமப் பகுதிகளில் முப்பதாயிரம் பேருக்கு வேலைத் திட்டம்!

சமதர்ம சமுதாயம் காணுகின்ற இலட்சியத்தை நோக்கி நடைபோடுகிறோம் என்பதற்கு மேற்கூறிய சிறிய திட்டங்கள் ஏற்றமிகு சான்றுகளன்றோ?

புதிய வளங்கள் நாட்டில் அமைந்திடப் பாடுபடும் அதே, நேரத்தில் இருக்கின்ற வளங்கள் பறிபோய் விடாமல் பாதுகாப்பதும் நமது தலையாய கடனாகும். அதற்காகவே காவிரித் தண்ணீரில் நமக்குள்ள உரிமையைப் பெற நியாயம் கேட்டு நிற்கிறோம். கட்சிச் சார்பற்ற முறையில் தமிழர்கள் நல்ல காரியங்களுக்கு ஒன்று திரளுவார்கள் என்பதற்கு இஃதோர் இணையற்ற சான்றெனபேன்.

தேசிய உணர்ச்சியில், தேசிய விழாக்களில், தேசிய முயற்சிகளில்-கட்சி வேறுபாடுகள் தேவை இல்லை. அத்தகைய முறையில் இந்த ஒரு நாளில் நாம் தனித்து நிற்காமல் ஓரணியில் நின்றிட வேண்டும். அதற்கெனவே 1969 முதல் சென்னை கோட்டை கொத்தளத்துக் கொடி மரத்துக்கடியில் அனைத்துக் கட்சியினரும் கூடி விடுதலை நாள் கொண்டாடும் ஏற்பாடு தொடங்கிற்று.

இந்த ஆண்டு எவ்வளவோ மனவேதனைகளுக்கிடையே, தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுமைக்கும் இந்தக் கொள்கை, மத்திய அரசு அளவில் அதிகாரப் பூர்வமாக நிறைவேற்றப்பட்டாக வேண்டும். இல்லையேல், சுற்றிலுமுள்ள சூழலில் மதுவிலக்கை ஒத்திவைப்பதைத் தவிர வேறு வழியே நமக்கு இல்லாமற் போய்விட்டது. மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்ட போதிலும், மதுவினால் விளையும் தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லல் இன்றியமையாததாகும். மதுக்கடைகளையும் அனுமதித்துவிட்டு மதுவிலக்குப் பிரச்சாரமா எனக்

# வன்முறைக்கு வித்திடுவோரைத் தூக்கி எறிவோம்!

கேட்கத் தோன்றும். நூற்பாலைகளையும் நெசவாலைகளையும் அனுமதித்துவிட்டுத்தான்—கதர் கட்டுவதிலும், கைத்தறி கட்டுவதிலுமுள்ள சிறப்புக்களைப் போதித்து வருகிறோம்! புலால் உணவுக் கடைகளை அனுமதித்துள்ள நாட்டில் தான் புத்தர், வள்ளுவர் வழி நின்று 'புலால் மறுத்தல்'' நன்மையென்று கூறி வருகிறோம்.

ஆனால், அதனினும் ஒரு படி மேலே போய், இந்திய மாநிலங்கள் அனைத்திலும் மதுவிலக்கைச் சட்டம் செய்யும் பொறுப்பை மதிப்பு வாய்ந்த மத்திய அரசு ஏற்க வேண்டுமென வலியுறுத்துகிறோம். மதுவிலக்கு ஒத்திப் போடப்பட்டாலும், மதுவருந்துவோர் சேட்டைகளில் ஈடுபடின், ஒழுக்கம் குலையக் காரணமாக இருந்திடின், சட்டம் மீறப்படின், அவர்கள் கடுமையான நடவடிக்கைகளுக்கு ஆளாவர் என்பதையும் அறிவித்தல் என்னுடைய பொறுப்பாகும்.

மதுவிலக்கினால் மட்டுமல்ல, மக்கள் நலம் பாதுகாக்கப்படும் எல்லாத் துறைகளிலும் சட்டம் ஒழுங்கு அமைதியைப் பேண இந்த நல்ல நாளில் உறுதி பூணுவோம்.

பெற்ற சுதந்திரம் பேணிக் காப்போம்
பெற்ற மறவர்க்குப் பெருமைகள் சேர்ப்போம்.
உற்றார்-சுற்றம்; ஒருவர்-இருவர்
உயர்வுடன் வாழ்தல் சுதந்திரம் ஆகுமோ?
கற்றார்-கல்லார்-கழனியில் உழல்வோர்
சிற்றாள்-கொல்லர்-சிறு தொழில் செய்வோர்
மாதர் நல்லார் மாணவ மணிகள்
நீதறு வாழ்வில் திளைத்தலே....சுதந்திரம்—

இந்தக் கொள்கை இனிது விளங்க
மந்தக் கொள்கை மாய்ந்து விலக
சங்கத் தமிழில் ஒலிப்போம் இன்று !

அறியாமை இருள் அகன்றிட உழைப்போம் !
இல்லாமைக் கொடுமை தொலைந்திட உழைப்போம்!
பொறாமைச் சாத்தான் புதைந்திட உழைப்போம்!
புத்தொளி கண்டிட உழைப்போம்-
தாயின் மணிக் கொடி
பட்டொளி, பாரில் பரவிட உழைப்போம்.

வணக்கம்.'

(15-8-1971 அன்று, தமிழக முதல்வர் வானொலியில் ஆற்றிய விடுதலை நாள் உரை).

## வெண்பாப் போட்டி

17. ஈற்றடி: வன்முறையை வேரறுப்போம் வா !

முடிவுத் தேதி 15—9—1971

18. ஈற்றடி: நாட்டுக் கென்செய்தோம் நவில்.

முடிவுத் தேதி 20—9—1971

பரிசு: ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
" தமிழரசு " அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2

குறிப்பு :—

ஒவ்வொரு ஈற்றடிக்கும் உரிய வெண்பாவைத் தனித் தனியாக எழுதி அனுப்ப வேண்டும் ; இரண்டையும் ஒன்றாக எழுதி அனுப்பக் கூடாது ! அஞ்சலட்டையில் எழுதினால் போதுமானது.




24 ஆண்டுகளுக்கு முன்னே ஆகஸ்ட் 15-ம் தேதியன்று அனைத்திந்தியாவிற்கும் ஆங்கிலேயனுக்கும் இருந்த ''கணக்குத் தீர்க்கப்பட்டது''. ஆண்டுகள் 24 ஓடி விட்டன. ஆனால், இன்னல்கள் ஓடவில்லை. இடுக்கண்கள் . ஓடவில்லை. இல்லாமை ஓடவில்லை, கல்லாமை ஓடவில்லை, வறுமை ஓடவில்லை, வாட்டம் ஓடவில்லை. நாட்டு மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒழியவில்லை. மக்களைத் தரம் பிரித்துப் பேசுகின்ற சாதித்திமிர் ஒழியவில்லை. இதற்கெல்லாம் காரணம் ஆண்டு தோறும்வருகின்ற ஆகஸ்ட் 15-ம் நாளிலே நாட்டுமக்கள் 'கணக்குப் பார்க்கவில்லை'. அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு அந்தக் 'கணக்குப்பார்க்கும்' நற்பணியை நாட்டு மக்களுக்குக் கூறவில்லை. அந்தக் குறையை நீக்கத்தான் தமிழ்நாடு அரசு—டாக்டர் கலைஞர் கருணாநிதியின் தலைமையில் அமைந்த தி.மு.க. அரசு—'விடுதலை நாள்' விழாவினை அனைத்துக் கட்சிக்கும் சொந்தமாக்கி-உரிமையாக்கி—அவர்கள் அனைவரும் ஒன்றுகூடிக்''கணக்குப் பார்க்கும்'' வழக்கத்தையும், விட்ட கணக்கினை விரைந்து முடிக்கச் சபதம் எடுக்கச் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது-கொடுத்து வருகின்றது.

கணக்குப் பார்க்கும் மாபெரும் விழா—மக்கள் விழா—விடுதலை நாள் விழா இந்த ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள் தமிழக முதல்வரின் தலைமையில், கோட்டை கொத்தளத்தில் கொடிமரத்தடியில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

மாலைநேரம் ! மனம் குளிரும் இளந் தென்றல் வீச்சு ! எங்கும் மின்ஒளி—தமிழ்நாடுஅரசின் தலைமைச் செயலகம் ஒளி சிந்தும் நிலவெனக் காட்சி தந்தது. அதன் அருகே ஒப்பற்ற தாரகைகள் போல் 'தாயின் மணிக்கொடி'யை தாங்கி நிற்கும் கொடி மரத்தின் அடிவரை மின் விளக்குகள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. அழகு ஒழுகும் இந்தப் பின்னணியிலே அமைக்கப்பட்ட மேடையின் முன்னே—தமிழ்நாடு அரசின் தனிமுயற்சியால் உருவாக்கப்பட்ட பூஞ்சோலையொத்த புல் தரையிலே மக்கள் கூடியிருந்தனர். மேடையின் வடக்கே வழி எங்கும் ஒளி சிதற—வடகோடியிலே, மின் விளக்கால் எழில் பெருக்கிய, துறைமுக அலுவலகம் வரை, தெற்கே தேம்ஸ் நதியை விஞ்சும் வகையில் மாறி வரும் கூவம் நதி கடலோடு இணையும் இடம் வரை, 'ஒளி விளக்கே நீ பாய்கின்ற இடமெல்லாம் நாம் இருப்போம்' என்று போட்டியிட்டுக் கொண்டு மக்கள் குழுமி இருந்தனர்.

விழாவிற்கான நேரம் நெருங்கியது. பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் பெரும்பாடல்—தமிழ்நாடு அரசு வடித்துத் தந்த வண்டமிழ்'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடப்பட்டது. பாட்டின் இனிமையிலே மக்கள் செயல் மறந்து வீற்றிருந்தனர்.

டாக்டர் கலைஞரின் வானொலிப் பேச்சு ஒலிபரப்பப்பட்டது. செயல்மறந்து வீற்றிருந்த மக்கள் கூட்டம் கலைஞரின் செந்தமிழ் ஒலி கேட்டுப் புல்லரித்துப் போயினர்-புளகாங்கிதம் அடைந்தனர்.

வரையறுக்கப்பட்ட வானொலி உரை முடிந்தது ! கலைஞர் தித்திக்கும் தீந் தமிழிலே தலைமை உரையை ஆரம்பித்தார்!

''விடுதலைக்கென அனைத்துக் கட்சியினரும் அரும்பாடுபட்டனர் அன்று ! எனவே விடுதலை நாள் விழா அனைத்துக் கட்சிக்கும் சொந்தமுடையது. ஆகவேதான் அனைத்துக் கட்சியினரும் இவ்விழாவில் பங்கு பெறத் தமிழ்நாடு அரசு பெரு முயற்சி எடுத்துக் கொண்டது''—என்றார்.

அடுத்து அனைத்துக் கட்சியின் தலைவர்கள் பேசினர்.

முதலில் பேசிய பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியைச்சேர்ந்த திரு ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள், ''அண்மையில் அரசு நிறைவேற்றிய நிலச் சீர்திருத்தச் சட்டம்'' வரவேற்கத்தக்கது. பொருளாதார வளர்ச்சிக்கு இந்த அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன். அதே நேரத்தில் அமைதியான வழியில் இந்த அரசு பாடுபடும் என்றும் நம்புகிறேன்''—என்றார்.

அடுத்து, சுதந்திராக் கட்சியின் சார்பில் பேசிய திரு ஜி. சுவாமிநாதன், '' அடுத்த ஆண்டு நாம் சுதந்திர தினத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கிறோம். ஆனால் சுதந்திர தினத்தின் பெருமை தெரியாத இளைய சமுதாயம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு விடுதலை வீரர்களின் வீர சரித்திரம் சொல்லப்படவேண்டும். அப்போதுதான் சுதந்திரத்தின் பெருமை தெரியும்'' —என்றார்.

அடுத்துப்பேசிய திரு ராஜாராம் நாயுடு (சாதிக் அலி காங்கிரஸ்) ''அனைத்துக் கட்சித் தலைவர்களை ஒரே மேடையில் சந்திக்கவைத்து ஒருவரைஒருவர் புரிந்துகொள்ளச் செய்யும் தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகள் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ளன. சுதந்தரம் கிடைத்து 24 வருடங்கள் கழிந்து விட்டன. நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு அளவற்ற சாதனைகளைப் புரிந்த பின்னும் பிரச்சினைகள் தீரவில்லை.



வீடற்றோர், வேலையற்றோர் வளர்ந்து கொண்டிருக்கின்றனர். அதற்குக் காரணம் ஜனத்தொகை வளர்ச்சிதான். எனவே அரசாங்கம் மட்டுமே எல்லாக் காரியங்களையும் சாதிக்க முடியாது. நம்நாடு குடியரசுநாடு. ஒவ்வொருவருக்கும் பொறுப்புள்ளது;எனவே மக்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும்"—என்றார்.

அதன் பின், முஸ்லிம் லீக்கைச் சார்ந்த திரு திருப்பூர் முகைதீன், நான் சமயத்தால் முஸ்லிம், மொழியால் தமிழன், இனத்தால் திராவிடன், பிறப்பால் இந்தியன்; எனவே இரண்டாகப் பிரிந்த இந்தியாவில் வேலி போட்டு வேறு படுத்திய பிறகு வேலியைத் தாண்டி வருபவன் என் சகோதரனாக இருந்தாலும் அவன் மீது உங்கள் அடி விழு முன்னே என் அடி விழும்" என்று கூறினார்.

திருப்பூர் முகைதீனுக்குப் பின், தமிழரசுக் கழகத்தைச் சார்ந்த திரு தி.க.சண்முகம், நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட தேச பக்தர்களுக்கு ஆழ்ந்த நன்றி உணர்வோடு தன் கட்சிச்சார்பில் தலை வணங்குவதாகக் கூறியதுடன் அமைதி வழியில் தமிழ் மாநிலம் அமைந்த பெருமையையும், அமைதிவழியில் நற்செயல்களைப் புரிந்து வரும் தமிழ்நாடு அரசினைப் பாராட்டியும், குறிப்பாக, தமிழ் மொழியின் ஏற்றத்திற்கு ஆற்றும் பணிகளைப் பாராட்டியும் உரையை முடித்தார்.

பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு ஏ. ஆர். பெருமாள் அவர்கள் அடுத்துப்பேசினார்.

"ஆட்சியில் இருப்பவர்கள் மற்றவர்களது வரலாற்றை மறைப்பார்கள். ஆனால் தமிழகத்தில் அனைத்துக் கட்சிக்கும் மரியாதை அளிக்கும் அரசு இந்த அரசு! ஆகவே அதன் தலைவர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற நூலைவெளியிட்டு அதில் விடுதலைப்போரில் ஈடுபட்ட தமிழகத்துத் தியாகச் சிலர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து எழுத வேண்டும். ஏனெனில் மத்திய அரசுதயாரித்த நூலில் தமிழகத்து வீரர்களின் பெயர்கள் இடம் பெறவில்லை. மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்த வேண்டும்" என்று கூறி முடித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு மணலி கந்தசாமி அவர்கள்,

'தமிழ் நாடு இன்று உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றுள்ளது. எண்பத்தி ஏழு கோடிக்கு மேல் கல்விக்காகச் செலவழிக்கும் அளவிற்கு முன்னேற்றம் பெற்றுள்ளது. கலைஞர் ஆட்சியில்தான் இந்தச் சாதனைகள் ஏற்பட்டுள்ளன. கலைஞர் இன்று சமுதாயத் துறையில் பல சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார். அண்மையில் நிறைவேற்றிய நிலச் சீர்திருத்தச் சட்டம் 75சதவீதக் குடிமக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்காகக் கலைஞரைப் பாராட்ட வேண்டும்.

"பாரதியார் கண்ட கனவை, பாரதிதாசன் கண்ட கனவை, விடுதலை வீரர்கள் கண்ட கனவை இன்று கலைஞர் நிறைவேற்றி வருகிறார். எனவே கலைஞரின் கரத்தைப் பலப்படுத்த வேண்டும்"—என்றார்.

அடுத்துப் பேசிய தவத்திரு குன்றக்குடி அடிகளார், "ஒரு நாட்டில் விடுதலை பெற்ற திருநாள் ஒப்பற்ற திருநாள். அந்த விடுதலை நாள் அன்று அனைத்துக் கட்சியினர் தங்கள் மணிக்கொடியின் கீழ், நாட்டு ஒற்றுமைக்கு அணிவகுத்து நிற்க, இந்த அரசு—கலைஞர் அவர்களின் அரசு ஏற்பாடு செய்துள்ளது. அதற்காக நெஞ்சு நிறைந்த பாராட்டுகள்! நான்கு பேர் கூடினால் தலைமை பறி போகுமே என்ற அச்சம் அனைத்துக் கட்சியினரைக் கூட்ட மறுக்கும். அதற்கு அஞ்சாத கலைஞரைப் பாராட்ட வேண்டும்.

இசைக் கச்சேரியில் பக்க வாத்தியம் பங்கு கொண்டாலும், நாயனக் கச்சேரியில் ஒத்து ஊதினாலும், ராகமும் சுருதியும் மாறுவதில்லை. அதைப்போல் அனைத்துக் கட்சியினர் ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டும்"—என்றார்.













அடுத்து, தி.மு. கழகத்தின் சார்பில் கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், 'சமுதாயத்தில்கீழே உள்ள ஏழைகளிடம் வசதிகள் வந்து சேர வேண்டும். அல்லது ஏழைகளை அந்த இடத்திற்குத் தூக்கி விட வேண்டும். இரண்டில் ஒன்றைச் செய்ய வேண்டும். அதனை இந்த அரசு செய்கிறது. நாட்டில் அனைவருக்கும், ஒழுகாத வீடு, கிழியாத வேட்டி, சூடான சோறு கிடைக்க வேண்டுமென்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது. நிலக்கரியும் இரும்பும் இல்லாத ஜப்பான் அனைத்து நாடுகளுடன் போட்டியிட்டுச் சிறந்து விளங்குகிறது. நம் நாட்டில் எல்லாம் இருக்கிறது. நம் நாட்டில் முக்கடல் இருக்கிறது. அதிலே முத்து இருக்கிறது. நிலக்கரி இருக்கிறது, இரும்பு இருக்கிறது. அந்நியச் செலாவணி ஈட்டும் மிளகு, ஏலம் இருக்கிறது. மீன் இருக்கிறது. ஏற்றுமதிக்கு ஏற்ற 'எரா' இருக்கிறது. சுவை மிகுந்த மாம்பழம் இருக்கிறது. அத்துடன் தேனில் நனைத்த பலா இருக்கிறது. உரித்தவுடன் சாப்பிடக் கூடிய வாழையும் நம் நாட்டில் இருக்கிறது. இவ்வளவு இருந்தும் வறுமையில் வாடுகிறோம். இல்லாமை இருக்கிறது. இதற்குக் காரணம் அறியாமை—அறியாமைக்குக் காரணம் கல்லாமை. கல்லாமை விரைந்து நீங்க—எதிர்காலத்தில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட 'விடுதலை நாள் விழாவில்' சபதம் ஏற்க வேண்டும்.

"மக்கள்—வளம்—அறிவு மூன்றும் நம் நாட்டில் உள்ளன. இம்மூன்றும் இணைந்தால் முன்னேற்றம் காண முடியும். எனவே அரசு எடுக்கும் சீரிய முயற்சிகளுக்கு ஆதரவு தரவேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார்.

கடைசியாக டாக்டர் கலைஞர் அவர்கள் பேசியதின் ஒரு பகுதி:







"இங்கு பேசிய அனைவரும் ஒரே கருத்தில் தமிழ் உணர்வும், இன உணர்வும் கொண்டு இப்படிப்பட்ட தேசிய நிகழ்ச்சிகளில் அனைத்துக்கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒரு நிலையில் நின்று, ஒருமித்த கருத்தோடு இயங்க வேண்டுமெனத் தெளிவு படுத்தினார்கள்.

இவ்விழாவினை — இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒன்றினை நாம் உருவாக்கியுள்ளோம்.

சுதந்திர நாளைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள், வெள்ளையனை வெளியேற்றிக் கணக்குத் தீர்த்த நாள். அதன் பிறகு வரும் சுதந்திர தினமெல்லாம் கணக்குப் பார்க்கும் நாள்.

வெள்ளையனை வெளியேற்றி 1947-ல் கணக்குத் தீர்க்கப்பட்டது. பிறகுஒவ்வொருசுதந்திர தினவிழாவின்போதும்சுதந்திரத்தைக் காக்க என்னசெய்யப்போகிறோம், சுதந்திரத்திற்குப் பிறகு மக்களுக்கு என்னென்ன செய்யப் போகிறோம், என்று கூறி மக்களை ஒன்று சேர்த்தோம். இன்றைய தினம்சுதந்திரத்திற்காகத் தங்கள் ஆவியை இழந்தவர்கள்—சொத்து சுகத்தை இழந்தவர்கள்—எதை எதை எண்ணி அந்தத் தியாகத்தைச் செய்தார்களோ அவைகளை நிறைவேற்றி விட்டோமா, என்ற கேள்விகளை மக்கள் கேட்கிறார்கள்.

ஆட்சியில் உள்ளவர்கள் மக்களுக்கு என்ன செய்தார்கள், என்ற 'கணக்கினை'க் கேட்கிறார்கள். அந்தக் கணக்கினை மத்திய அரசும், இந்த அரசும் காட்ட வேண்டும். எனவேதான் இன்றைய தினம் நான் வானொலியில் பேசும் போது—தமிழக அரசில் நாங்கள் பொறுப்பேற்றபிறகு என்னென்ன செய்தோம் என்ற கணக்கினைப் பட்டியல் போட்டுக்காட்டினேன்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒரு நாளாவது ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளாமல் ஒரு மேடையில் சந்திப்போம் என்றுதான் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு ஏ. ஆர். பெருமாள் பேசும் போது சுதந்திர தின விழாவைக் கொண்டாட எல்லாக் கட்சிக்கும் உரிமை உள்ளது, அதனை நிலைநிறுத்திய தமிழக அரசுக்குப் பாராட்டு என்று கூறினார்.

ஒவ்வொரு கட்சிக்கும் தியாக வரலாறு இருக்கிறது. கட்சித் தலைவர்களுக்குத் தியாகமுத்திரை இருக்கிறது. ஒரு கட்சியையும் சாராத—ஆனால் ஆண்டவன் கட்சியைச் சார்ந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப் பட்டுத் தண்டனையைப் பெற்றவர்; போராட்ட வரலாறு பெற்றவர்!

தேசியக் கொடியைக் கையிலேந்திச் சிறைசென்ற மணலி கந்தசாமி, சுதந்திரம் அடைந்த பின் எவ்வளவு கொடுமைகளை அடைந்தார் என்பதை நானறிவேன்.

சுதந்திரம் பெற்ற பிறகு சென்னைக் கடற் கரையில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு கூட்டம். அப்போது மணலி கந்தசாமி தலைமறைவாக இருக்கிறார். காவல் துறையினர் அவரைக் கைது செய்யக் காத்திருக்கின்றனர்.

திடீரென்று இப்போது 'மணலி கந்தசாமி பேசுவார்' என்று அறிவித்தார்கள். மக்களும் காவல் துறையினரும் திகைத்தார்கள். மணலி கந்தசாமி பேசிவிட்டு மேடையை விட்டு இறங்கினார். சற்று நேரத்திற்கெல்லாம் காணவில்லை.

இப்படிப் பல கட்சிக்கும் வீர வரலாறு உண்டு. தி.மு.க.வுக்கும் வீர வரலாறு உண்டு.

வைக்கம் வீரராக—மகாத்மா காந்திக்கு உற்ற நண்பராக—தமிழகத்தின் விடுதலைப் போராட்டத்தின் தானைத் தலைவராக இருந்த தந்தை பெரியார் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டவர்.

ஆகவேதான் இந்த விழாவில் எல்லாக் கட்சிக்கும் பங்குண்டு.

அடிகளார் பேசும்போது, இந்த விழா வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி கொண்டாடப்பட வேண்டுமெனக் கூறினார். ஒரு கட்சிக்கே உரிய விழா என்ற நிலையை மாற்றிவிட்டால் இந்த நிலைமை உருவாகிவிடும்.

இத்தாலிக்கு நான் சென்றிருந்த போது ரோமாபுரியின் விடுதலை நாள் விழாவைக் கண்டு களிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அங்கே இரவெல்லாம் விடுதலையைக் கொண்டாடுகிறார்கள். ஆடம்பரமாக—விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். அவை எல்லாம் என் கண் எதிரே தோன்றுகின்றன.

அப்படிப்பட்ட பெரிய தேசிய விழாவாக இந்த விழா கொண்டாடப்படவேண்டும்.

இந்த விழாவில் பங்கு கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், மக்களுக்கும் நன்றி! வணக்கம்."

கலைஞரின் செந்தமிழ்ப் பேச்சு முடிவடைந்தது. நாட்டுப் பண் இசைத்தவுடன் விழா முடிவடைந்தது.

கணக்கைப் பார்த்த களிப்பில் மக்கள் கலைந்து சென்றனர்.

### ஒரு சொல் கேளீர் !

எண்ணற்ற அன்பர்கள் 'தமிழரசு' இதழுக்குக் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் அனுப்பி வருகிறார்கள். அவர்களுடைய ஆர்வத்தைப் போற்றும் அதே நேரத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

எழுத்தாளர்கள் தங்கள் ஊரைப் பற்றி, வட்டாரத்தைப் பற்றி, மற்றவர்களுக்குச் சாதாரணமாகத் தெரியாத சிறப்புகளை, பெருமைகளை செழுந் தமிழில், ஆதாரத்தோடு எழுதினால் அதிகம் பயன்படும்.

சொன்னதையே, வேறு சொற்களில் திரும்பச் சொல்லுவதைத் தமிழ்ப் பெருமக்கள் ரசிப்பதில்லை. மக்களின் அறிவுப் பசிக்கேற்ற அரிய எழுத்துரைகளை வேண்டுகிறோம்; வரவேற்கிறோம்.

ஆசிரியர்,
"தமிழரசு"





# தடையுடைத்து வாவா!

புன்செயை நன்செய் தன்னைப்
பொன்கொழித் திடவே செய்யும்
பொன்னியே! வான்பொய்த் தாலும்
பொய்யாமல் வளஞ்சு ரக்கும்
கன்னியே ! காவி ரிக்கும்
காவிரித் தாயே ! தூய
அன்பினால் எமைப்பு ரக்கும்
ஆருயிர் அன்னாய் வாழி !

கொழித்திடும் தேன்ம ணக்கும்
குடகினில் பிறந்தே அத்தேன்
அளித்திடும் சுவையை மிஞ்சும்
அருந்தமிழ் கொழிக்கும் மண்ணைச்
செழித்திடச் செய்தாய்! பச்சைப்
புரட்சியை அந்நாள் செய்தாய் !
வழுத்திடும் அன்பால் எங்கள்
மனத்தினைக் குளிர்வித் தாயே !

பொன்னியின் செல்வன் எங்கள்
புகழ்மிகு சோழன் உன்றன்
அன்பினில் திளைத்தான் ; நீயும்
அமுதினைப் பொழிந்தே காத்தாய் !
என்றுநீ பிறந்தாய் ? எம்மை
என்றுநீ அணைத்தாய் ? எவ்வண்
நன்றுறக் காத்தாய்? யாவும்
நவில்வதும் எளிய தாமோ ?

அன்னைதன் மகவை அள்ளி
அணைத்திடத் தடைவி திக்கும்
வன்மனக் காரர் போல,
வளந்தரும் தாயே உன்றன்
அன்பினை மாய்க்க உன்பால்
அணையெனும் தடைஎ ழுப்ப
முன்வரும் போக்கை எண்ணி
முடிவிலாத் துயரம் பெற்றோம்.

அன்னையே நீயின் றாகில்
அருந்தமிழ் நாட்டில் உன்றன்
அன்பினால் பசுமை யுற்ற
அனைத்துமே பாலை யாகும் !
அன்பினைச் சுரக்கும் நல்ல
அன்னைதன் மதலை வாட
என்றுமே விரும்பாள் ! ஆமாம் !
எப்படிப் பொறுப்பாள் அம்மா !

அமிழ்தினைச் சுரக்கும் பொன்னி
அன்னையே ! கறையு ளாக்குச்
சுமத்திட முனைவோர் தம்மின்
சூழ்ச்சியைத் தூள்தூ ளாக்கிக்
கமழ்புகழ் சேர்க்க இந்நாள்
கரிகாலன் இல்லை யேனும்
இமையென எம்மைக் காக்கும்
ஈடிலாக் கலைஞர் உள்ளார்.

தமிழர்தம் உயிர்கள் யாவும்
தங்குநல் உடல மாகித்
தமிழினம் துறைகள் தோறும்
தகுமுயர் வெய்த நாளும்
அமைவுறு செயலை ஆய்ந்தே
ஆற்றிடும் கலைஞர் எங்கள்
தமிழக முதல்வர் அன்னார்
தண்ணருள் மிக்க நல்லார் !

தண்ணளி யுடைய ரேனும்
தமிழர்க்குத் தீமை என்றால்
மண்சுடும் தணலாய் மாறும்
மாவலி யுடையார் ; அன்னார்
எண்ணிய முடிக்கும் வீரர் ;
ஏற்காத ஒன்றை என்றும்
எண்ணிடார்; எங்கள் வாழ்வின்
இதயமே இடமாக் கொண்டார் !

தலைமுறை பலவாய் நம்முன்
தழைத்துமிக் கோங்கி நின்று
நிலவிடும் உறவை நீக்க
நினைத்திடும் கொடுமை போக்கத்
தலைபறி போயிற் றேனும்
தவிசினை உதறித் தள்ளும்
நிலையுறு மேனும் ஏற்கும்
நெஞ்சுரம் யாமே கொண்டோம் !

அன்பினுக் கென்றும் உண்டோ
அடைக்குந்தாழ் ? ஆத லாலே
பொன்னியே ! உன்பால் அன்பு
பொதுளிய தமிழர் சீரை
நன்றிசைத் தோடி வா வா !
நல்லிசை பாடி வா வா !
துன்றிடு தடைகள் யாவும்
துகளுற நொறுக்கி வா ! வா !

கவிஞர் சாமிபழனியப்பன்








# அண்ணா பண்ணை ஆற்றிடும் சேவை!

பேரறிஞர் அண்ணாவின் நினைவாகவிளங்கும் '' அண்ணா பண்ணை' தரம் மிகுந்துள்ள பொறுக்கு விதைகளையும், வீரிய விதைகளையும் உற்பத்தி செய்து உழவர் பெரு மக்களுக்குக் கிடைக்கச் செய்வதுடன், புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருக்குவதற்கான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளது. தமிழ் நாடு அரசின் மிகப்பெரிய பண்ணையான அண்ணா பண்ணையில் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சிகளின் பயனாகப் புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருமளவில் பெருக்க முடியும் என்பது தெளிவாகியுள்ளது.

புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருக்குவதற்கான ஆராய்ச்சியைத் தீவிரப்படுத்துவதற்காக அண்ணா பண்ணையில் '' கலைஞர் கருணாநிதி அனுசரணை ஆராய்ச்சி நிலையம் '' (Kalaignar Karunanithi Adaptive Research Centre) அமைக்கப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்ணா பண்ணையில் நடத்தப்பட்டுள்ள ஆராய்ச்சிகள் பொதுவாகத் தமிழ் நாடெங்கும் உள்ள புன்செய் நில உழவர்களுக்குப் பயன் அளிப்பதாக உள்ளன என்பதை அண்ணா பண்ணையில் பணியாற்றும் மாவட்ட வேளாண்மை அலுவலர் திரு கே. பெருமாள் அவர்கள் அண்மையில் தனது வானொலி உரையில் தெளிவு படுத்தியுள்ளார். உழவர் பெரு மக்களின் நலன் கருதி அவரது உரையின் ஒரு பகுதியைக் கீழே கொடுத்துள்ளோம்.

## இலைகளின் மூலம் உரமளித்தல்

''பயிர்கள் வேரின் மூலம் தான் தமக்கு வேண்டிய தழைச்சத்தை எடுத்துக் கொள்வதில்லை. இலைகளின் மூலமாகவும் தழைச்சத்தை எடுத்துக் கொள்கின்றன. யூரியா போன்ற செயற்கை உரங்களைத் தண்ணீரில் கரைத்துப் பயிர்களுக்குத் தெளிக்கலாம். சமீபத்தில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் (ஐ.ஏ.ஆர்.ஐ), கோடா என்ற ஊரில் 5,000 ஏக்கரில் விமானம் மூலம் யூரியாவைத் தெளித்ததன் பயனாக 35 முதல் 40 சத அதிகப் பருத்தி மகசூல் கிடைத்திருக்கிறது. அங்கு மாத்திரமல்லாது, இந்த அனுபவம் அண்ணா பண்ணையிலும் பொதுவாக இம்மாதிரி இலைகளின் மூலம் பயிருணவைக் குறிப்பாக, தழைச்சத்தைக் கொடுப்பதனால் மிகச் சிறந்த பலன் கிடைத்திருக்கிறது. இது மானாவாரிப் பயிருக்கும் இறைவைப்பயிருக்கும்ஏற்றதாக இருக்கிறது. 1 முதல் 2 சதம் சத்துள்ள யூரியா நீர்க்கரைசல் விசைத் தெளிப்பானால் இலைகளின் மேல் தெளிக்கப்படுகிறது. இதற்கு 1 கிலோ யூரியாவை 100 லிட்டர் தண்ணீரில் சேர்ப்பதனால், 1 சத வீரியக் கரைசலும், 2 கிலோ யூரியாவை 100 லிட்டர் தண்ணீரில் சேர்ப்பதனால் 2 சத வீரியக் கரைசலும் கிடைக்கும். ஆகவே, ஏக்கருக்கு ஒருமுறை 2 கிலோ யூரியாவை இலைகளின் மூலம் தெளிப்பதன் மூலம் பயிர் நல்ல வளர்ச்சி பெறுகிறது என்பதும் மேலுரமாகப் போடும் அளவை விட மிகக் குறைந்த அளவு போதுமானது, என்பதும் தெளிவாகிறது. இவ்வாறு நாம் இருமுறை அல்லது மூன்று முறைமருந்தை இலைகளில் தெளிப்பதன் மூலம் பயிரின் வளர்ச்சியைச் செழுமைப்படுத்தி அதிகப்பலன் பெற முடியும். இது தவிர, பூச்சிக் கொல்லிகளையும், யூரியாக் கரைசலையும் பூச்சிகள் தோன்றும்போது சேர்த்துத் தெளிப்பதனால் செலவும் மிச்சமாவதோடு பூச்சியின் தொல்லை நீங்கி, வளரும் பயிர்களுக்கு வீரியம் ஊட்டும் 'டானிக்' போன்று அமையும். இம்மாதிரி யூரியாக் கரைசலை மழை பெய்து இளந்துளிர்கள் வரும்போது தெளிப்பதனால் இலைகள் விரிந்து பெரிதாக ஆவதுடன் செடிகள் வளர்ச்சியும் பெறும். இது வளரும் குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் கொடுக்கும் ஊட்ட உணவைப் போன்றது.



இது தவிர. அண்ணா பண்ணையில் மணிச்சத்தும், தழைச்சத்தும் உள்ள டை—அம்மோனியம் பாஸ்பேட் அல்லது அம்மோனியம் பாஸ்பேட் பொன்ற செயற்கை உரத்தையும் பாசிப் பயறுக்கு 1 சதம் வீரியத்தைத் தெளித்ததில் சுமார் 10 சதம் அதிக மகசூல் கண்டது. மேலும் இது பற்றிச் சோதனை செய்யப்படுகிறது. ஆகவே மானாவாரிப்பயிருக்குச் செயற்கை உரம் இடுவது நல்லது. அதிக மகசூல் கொடுக்கக் கூடியது. அது, சமயத்தையும், அனுசரிக்கும் முறையையும் பொறுத்தது.

## குறுகியகாலப் பயிர்கள் கொடுத்திடும் நல்ல மகசூல்

இனி, நிலத்திற்கேற்ற இலாபகரமான பயிர்களையும் பயிர் இனுசுகளையும் பார்க்கலாம். மானாவாரி நிலம் மழையை நம்பிய நிலம். ஆகவே குறுகிய வயதுடைய வறட்சியைத் தாங்கக்

கூடிய பயிர்த் தினுசுகளுக்குப் பதிலாக ஒன்றுக்கு மேற்பட்ட குறுகிய கால கலப்புப் பயிர்களைச் சாகுபடி செய்தல் அவசியம். இதில், பருத்தி, துவரை போன்ற ஆழமான வேர் கொண்ட பயிர்களுடன் குறுகிய காலப் பயறு வகைகளைப் பயிரிடலாம். வேளாண்மை ஆராய்ச்சிகளின் மூலமாகத் தற்பொழுது குறுகிய கால விதைகள் ஒவ்வொரு பயிருக்கும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இப் பகுதியில் 4 மாதமே வயதுள்ள கோ.1 துவரையைப் புஞ்சையில் பயிரிடலாம். மற்ற துவரைகளைவிட 1½—2 மாதம் வயது குறைவு. இத்துடன் 105 நாட்கள் வயதுள்ள டி. எம். வி. 7, பொள்ளாச்சி போன்ற கொத்துக் கடலை வகைகளை ஊடு பயிர் செய்வதன் மூலம் மண்ணின் பல்வேறு தட்டிலுள்ள சத்தைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெறுகிறது. இதனால் பயிர்கள் ஒன்றுக்கொன்று தங்களுக்கு வேண்டிய உணவினை எடுப்பதில் போட்டியில்லாது வளர்ந்து அதிக மகசூல் தருகிறது. வருமானம் பெருகும்; விதைப்பதற்கு முன் பயறு வகை விதைகளுடன் நுண்ணுயிரிகளைச் (பாக்டீரியா கல்சர்) சேர்த்துப் பின் நிழலில் உலர்த்தி விதைப்பது மிக்க நல்லது. ஏக்கருக்கு 20 கிலோ டை—அம்மோனியம் பாஸ்பேட்டுடன் 20 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஸ் கலந்து முன் சொன்னது போல் விதைகளுக்கு அடுத்த சாலிலோ, அதே சாலிலோ போடுவது நல்ல பலன் தரும். இந்நிலத்தைச் சுற்றி அருணா என்ற 3½ மாத ஆமணக்கு விதையை ஊன்றி விடுவதனால் 50–75 கிலோ ஆமணக்கு கிடைக்கும்.

கோ. 1. துவரையைவிட இன்னும் சற்றுக் குறுகிய காலத் துவரையும் 65 நாட்களில் அறுவடைக்கு வரும் குறுவை உளுந்தும் திருச்சி மாவட்டம் ஆலங்குடிப் பகுதியில் பயிரிடப்பட்டுவருகின்றன. துவரை ஏறத்தாழ 100 நாட்களில் பலன் தரக்கூடியது. துவரை சற்றுப் பருமனில் குறைவாக இருப்பினும், இக்குறுகிய கால வித்து, தனியாக ஒதுக்கி எடுக்கப்பட்டுப் பயிரிடப்படுமானால் கடலையும் துவரையும் கலப்புப் பயிராக மானாவாரி நிலத்தில் பயிரிடப்பட்டு ஒரே சமயத்தில் அறுவடைக்கு வரும். இப்பண்ணையில் இந்த



தமிழக முதல்வர் கலைஞரும் வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தருமலிங்கம் அவர்களும், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு சாதிக்பாட்சா அவர்களும் அண்ணா பண்ணையைப் பார்வையிடும் காட்சி.

அனுபவம் மேற்கொண்டும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதில் வெற்றி கிடைக்குமெனில் பயறு உற்பத்தியில் புதிய திருப்பம் ஏற்படும். மானாவாரி நிலங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

## காலம் தாழ்த்தி விதைத்தாலும் காணலாம் நல்ல மகசூல்!

'காலத்தே பயிர் செய்' 'ஆடி மாதம் தேடி விதை' என்பன பழமொழிகள். ஆடிப்பட்டத்தில் பருவமழைக் கோளாற்றினால் துவரையை விதைக்கா விட்டால் தக்க பலன் கிடைப்பதில்லை என்ற எண்ணம் விவசாயிகளிடையே இருந்து வருகிறது. இது உண்மையே. காலம் கடந்து விதைத்தாலும் நல்ல மகசூல் பெற வழியுண்டு. காலம் தாழ்த்தி விதைக்கும்போது ஏக்கருக்கு விதை அளவை அதிகப்படுத்திச் சற்று நெருக்கமாக விதைப்பின் காலத்தால் இழந்த மகசூலையும் பெறலாம். அதிகமான எண்ணிக்கை இருப்பதால் மகசூலை ஈடுசெய்ய முடியும். சென்ற ஆண்டு, புதுக்கோட்டைப் பகுதியில் மழை பிந்தி விட்டது. ஆகஸ்டு மத்தியில்தான் அண்ணா பண்ணையில் துவரை விதைக்க முடிந்தது. ஆனால் விதை அளவைச் சற்று அதிகரித்ததனால் ஏக்கருக்கு 175 கிலோ வரை மகசூல் கிடைத்தது.



கடலைக்குப் பதிலாகப் பாசிப் பயறு அல்லது தட்டைப்பயறு தினுசுகள் ஊடு பயிராக விதைக்கலாம். ''பைசாகி மூங்'' என்னும் பாசிப்பயறும், ''தோபசலி'' என்ற தட்டைப் பயறும 60—65 நாட்களில் 150 முதல் 175 கிலோ வரை மகசூல் தர வல்லது. தோபசலி என்னும் தட்டைப் பயற்றுக்கு5-லிருந்து 6 அங்குல மழை அளவு இருந்தாலே போதுமானது. இம்மாதிரிப் புதுவகைக் குறுகிய காலப் பயறு வகைகள் தென் மேற்குப் பருவக் காற்றினால் அனுகூல மடையும் மாவட்டங்களுக்குச் சிறந்தது. இவை தவிர " காப்பர்கான்" என்ற பாசிப் பயறு 45—50 நாட்களிலே அறுவடைக்கு வருவதுடன் 100—லிருந்து 150 கிலோ வரை மகசூலும். கொடுக்கிறது. இத்தகைய குறுகிய காலப்பயிரின் தன்மையை வைத்துத் தான் அண்ணா பண்ணையில் ஒரு புதிய முயற்சி செய்யப்பட்டது.




## புன்செய் நிலப் புரட்சி

புன்செய் நிலத்தில் இரு போகப் பயிர்கள் பயிரிடும் புதுமைப் புரட்சிதான், அது. தென்மேற்கு, வட கிழக்கு இவ்விரு பருவக் காற்றுகளினால் மழை கிடைக்கும் இடங்களில், இரு குறுகிய காலப் பயிர்களைச் சாகுபடி செய்ய முடியும் என்று முயற்சி செய்யப்பட்டது. அந்த முயற்சி நல்ல பலனைத் தந்துள்ளது. ஜூலை மாதத்தில் விதைக்கும் கம்பு அல்லது கொத்துக் கடலைப் பயிர் செப்டம்பர் மாதம் அல்லது அக்டோபர் மாத முதல் வாரத்தில் அறுவடைக்கு வருகிறது. கம்பு அறுவடைக்குப் பின் குறுகிய காலப் பாசிப் பயறு அல்லது தோபசலி என்னும் தட்டைப்பயற்றை இரண்டு மூன்று உழவுகளுக்குப் பின் விதைத்து விடலாம். கடலைப் பயிரைப் பொதுவாக ஈரத்தில் பிடுங்குவதுதான் வழக்கம். அவ்வாறு கடலைச் செடியைப் பிடுங்குவதற்கு முன்னால் 5 கிலோ தட்டைப்பயறு அல்லது பாசிப் பயறு தெளித்து விடவும். கடலைச் செடியைப் பிடுங்கி விடுவதனால் மண் புரளும் போது பயறு விதைகள் மூடிக் கொள்ளும். அதே ஈரத்தில் முளைத்து விடவும் செய்யும். இம்மாதிரிச் செய்வதன் மூலம் பயறு வகைகளுக்கு உழவு செய்வது கூட மிச்சமாகிறது. 20 நாட்களில் களை வெட்டும்பொழுது 20 கிலோ டை அம்மோனியம் பாஸ்பேட் உரத்தை இடுவதனால் பயிர் செழித்து வருவதோடு ஏக்கருக்கு 150—175 கிலோ பச்சைப் பயறு 55—60 நாட்களில் கிடைக்கும். இது அண்ணா பண்ணையில் அனுபவம்

வறட்சியைத் தாங்கி அதிக மகசூல் தரும் எச்.பி. 3 கம்பு 85 நாட்களில் மகசூலுக்கு வரும். ஆகவே இம்மாதிரிக் குறுகிய கால வறட்சியைத் தாங்கக் கூடிய புதிய தினுசுகளைப் பயன் படுத்துவதன் மூலம் புஞ்சைப் பயிர்ச் சாகுபடியில் ஒரு மகத்தான மாறுதலைச் செய்வதுடன் மானாவாரி நிலத்தை நம்பி வாழும் மக்களுக்கு ஒரு வளமான வாழ்க்கையை மலரச் செய்ய முடியும்.

வட கிழக்குப் பருவ மழை டிசம்பர் மாத காலம் வரை நீடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டால் தோபசலி என்ற தட்டைப் பயற்றுச் செடிகளை அறுவடை முடிந்தவுடன் மறுபடியும் செடிகளை அடி மட்டத்தில் அறுத்து விட்டு விட்டால், மறுமுறையும் துளிர்த்து மகசூல் 20—25 நாட்களில் கொடுக்கும். இந்நிலை ஏற்படும் காலங்களில் மானாவாரி நிலத்தில் மூன்று பயிர்கள்கூட எடுக்க ஏதுவாகும். பயிர் சாகுபடிக்கு ஏற்ற தினுசாகும்.

புஞ்சை நிலங்களில் காணும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு உற்பத்தியைப் பெருக்கி அங்குவாழும்மக்களின் பொருளாதாரத்தாழ்வை நீக்கி அவர்களின் வாழ்வு மலர எண்ணற்ற முயற்சிகளில் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது. அதன் முக்கிய அம்சமாகத் தற்போது அண்ணா பண்ணையில் கலைஞர் கருணாநிதி அனுசரணை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டு ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன''.



Shilpi BOB 10/71 Tam





# அந்தக் குரல்

அன்று முழுநிலவு.

'வேலன் கைப் பந்தென' நீல வானிலே கோல_முழுமதி தவழ்ந்தது.

சான்றோர் முகமென மலர்ந்த முல்லையும் மல்லிகையும் அந்தச் சோலையிலே வெள்ளிபூத்த நீலவானை நினைவூட்டின. மலர்களின் தளிருடலைத் தொட்டு நீவிக்கொண்டு மிதந்து வந்த இளந்தென்றல், மணத்தோடு நல்ல குளுமையும் வழங்கியது.

நில்வு புதிதன்று-சோலையும் புதிதன்று. சோலையில் தவழ்ந்து வரும் தென்றலும் அப்படித்தான். என்றாலும், அந்தப் பூங்கோதையின் உள்ளத்தில் மட்டும், நேற்றிருந்த பெருமகிழ்ச்சியோ நிறைவோ இன்றில்லை. ஆம். இன்று அவள் உள்ளம் எருமை உழக்கிய சேறுபோல ஆகிவிட்டது. ஆடிப்புயலிலே சிக்கிய துரும்புபோல அலைக்கழிந்து அவதியுறுகிறாள். நிலவு நெருப்பாகித் தென்றல் சீறும் புலியாகி அவளை வதைக்கின்றன. தண்ணென்றிருக்கும் அவள்மேனி தணலாகத் தவிக்கிறது.

இன்று அவள் தன்னந்தனிமையிலே யாருடைய வருகைக்காகவோ ஏங்கித் தவித்து நிற்பதை அவள் முகம் தெளிவாக உணர்த்திற்று. பெண் என்றால் பேயும் இறங்கும் என்பார்கள். அப்பப்பா! அந்த நிலவுக்குக் கொஞ்சம் கூட ஈவிரக்கமே இல்லை போலும். இல்லையானால் மேகத் திரையின் ஊடே ஒளிந்தும் வெளிப்பட்டும் இப்படிக் கண்ணாம்பூச்சி விளையாடி அவளைச் சித்திரவதைப் படுத்துமா ?



-இலக்கியப்பித்தன்-

அவன் வந்தான். ஆம். பூங்கோதை யாருக்காக இதுகாறும் எதிர்பார்த்து ஏங்கி நின்ருளோ அந்தப் பொன்முடிதான் வந்தான். அவள் உள்ளத்திலேதான் எத்துணை மகிழ்ச்சி! இன்பப் பூரிப்பு!

பூங்கோதை நின்ற நிலைகண்டு அவன் பூரிப்பெல்லாம் கற்றரையில் விழ்ந்த கண்ணுடிப் பாத்திரமாயிற்று. பதறினுன்-துடித்தான்-செய்வதறியாமல் திகைத்தான்.

''அன்பே! ஏனிப்படி ?''-பொன்முடி கேட்டான். பூங்கோதையோ, செங்கனி வாய் திறக்காமல் 'சினத்துப் பொம்மை' போல நின்ருள்.

'கண்ணே! கலங்காதே! எதுவாயினும் துணிந்து சொல்! அவள் தாடையை நிமிர்த்திப் பணிவோடும் பாசத்தோடும் கெஞ்சினுன் பொன்முடி.

'அத்தான்!...'

'அன்பே!...'

'நம் இருவரின்....!'

'திருமணம் தானே! நடத்திவிட்டால் போகிறது.'

'அதுவல்ல நான் சொல்ல வந்தது. நம் தொடர்பு என் பெற்ருேருக்குத் தெரிந்து விட்டது, அவர்கள்...!

'என்ன சொன்ஞர்கள்?'

'சொல்வதாவது! எனக்குத் திருமணம் பேச ஆரம்பித்து விட்டார்கள்'

'திருமணம் பேசுகிருர்களா!...' பரபரப்போடு கேட்டான்.

'ஆம். நான் எவ்வளவு மறுத்தும் அவர்கள் கேட்பதாயில்லை. இனி, நான் சாவது தவிர வேறு வழியில்லை'

'நீ சாவதா? கண்ணே! எனது உடலில் உயிர் உள்ளளவும் அதற்கு நான் ஒப்ப மாட்டேன். நமது காதலைப் பறிக்க யாராலும் முடியாது'

'முடியாதுதான். ஆனுல்···'

ஆனுல் என்ன?'

அவள் தனது மெல்லிய காலடிகளைப் பார்த்தாள். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

அவன் அவளைப் பார்த்தான்.

'அத்தான்! இதுதவிர வேறு வழியில்லை'

அவனும் புரிந்து கொண்டான். சோலையிலே கனியும் இல்லை; அந்தச் செல்வப் பிள்ளையும் இல்லை. வானை நிலவு தழுவிற்று. சோலை தனிமையில் தூங்கி வழிந்தது!

• • • •

பூங்கோதை வீட்டிலே ஒரே பரபரப்பு; அவள் தாய், கண்ணீரும் கம்பலையுமாகக் கிடந்தாள். தந்தையோ பித்துப் பிடித்தவர் போலாஞர்.

'ஊரிலே தெரிந்தால்...!' இப்படி நினைக்கும் போதே அவர்கள் உள்ளம் கரையிலே தூக்கிப் போட்ட மீன்போலத்துடித்தது!

பெற்றவளைக் காட்டிலும் பேரன்பும் ஆதரவும் காட்டி வளர்த்த பூங்கோதையின் வளர்ப்புத்தாய் (செவிலி)க்கும் உள்ளம் நிலை கொள்ளவில்லை. ஆம். அந்த முதியவளின் உள்ளம், மகளைப் பிரிந்த அதிர்ச்சியைச் சமாளிக்க முடியாமல் தள்ளாடியது. 'பிள்ளைப் பாசம்' அவளைப் பின்னிருந்து தள்ள, அவள் தளர்ந்து நடந்தாள். நடந்து கொண்டேயிருந்தாள். சோலைகள் தோறும் சென்று துழாவினுள். விழாக்கள் நடைபெறும் இடங்களிலே சென்று எங்கெங்கும் கூர்ந்து நோக்கினுள். ஆனுலும் என்ன? அவள்-அந்தச் செவிலித்தாய் யாருக்காகத் தேடி அலைந்தாளோ அவளைப் பார்க்க முடியவில்லை.

அவள் கால்கள் வலியெடுத்தன. இனி அவளால் ஓரடிகூட எடுத்து வைக்க முடியாது. கால்கள் தடுமாறின. கண்கள்தாம் என்ன? எங்கும் கூர்ந்து கூர்ந்து நோக்கியமையால் ஒளி மங்கின.

''வானத்திலே மின்னும் மீன்களைக் காட்டிலும் இங்கு பலர் வாழ்கின்றனரே'' என்ற வியப்பு! அடுத்த மணித்துளியில், ''இவ்வளவு பேர் இருந்தும் தன் மகள், இல்லையே!'' என்ற ஏக்கம் இரண்டையும் தொடர்ந்து ''எவ்வளவு பேர் இருந்தென்ன? அத்துணைபேரும் தனக்குத் தொடர்பில்லாத மற்றவர்கள் தாமே!'' என்னும் சலிப்பு. இவ்வாறு வியப்புக்கும் ஏக்கத்திற்கும் சலிப்புக்கும் இவற்றிற்கெல்லாம் மேலாக ஏமாற்றத்திற்கும் ஆட்பட்ட அவளது-அந்தத் தாயினது உள்ளம் பேசுவதை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தில் வாழ்ந்த வெள்ளி வீதியார் என்னும் பெண்பாற் புலவர் நான்கே வரிகளில் நயமாக-ஓர் உன்னதமான கவிதையோவியமாக ஆக்கித் தந்திருக்கிருர். இப்பொழுது நாம் அந்தப் பாடலைப் பாடினுலும், அந்தத் தாய்க் கிழவியின் உள்ளம்-அவள் பேசிய பேச்சு-அந்தக் குரல் இன்னும் நம் செவிகளில் நின்று ஒலிக்கிறது. அந்தக் காட்சி நம் மனத்தகத்தே நீங்காத ஓவியமாக நிலைபெற்றுவிடுகிறது. பாடல் இதோ:

'' காலே பரிதப் பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந்தனவே;
அகல்இரு விசும்பின் மீனினும்
பலரே மன்றயிவ் வுலகத்துப் பிறரே''

நான்கே வரிகள்! எனினும், தற்காலத் திரைப் படங்களில் கையாளப்படும் உத்திகளையெல்லாம் மிஞ்சத் தக்கவகையில் பாடல் அமைந்திருப்பதைக் காணுங்கள். பலமுறை பாடிப்பாடி, எண்ணி எண்ணி வியந்து மகிழத் தக்க நயங்கெழுமிய இனிய பாடல். இத்தகு பாடல்கள் சங்க இலக்கியங்களில் ஏராளம். ஆம். சங்க இலக்கியப் பெருங்கடலில் சிதறிய, ஒரு சிறு துளிதான் இந்தப் பாடல்!



433

# அகராதிச் செய்தி



வ. சம்பந்தம்

ஒரு மொழியிலுள்ள சொற்களை அகரவரிசையில் நிறுத்தி அவற்றுக்குப் பொருள் கூறும் நூல் அகராதி எனப்படும்.

சொற்களின் தோற்றம், அவற்றின் வகைகள், அவை தரும் பொருள்கள், அவற்றை ஆளும் முறைகள் முதலியன பற்றிக் கூறும் அமைப்பு பொதுவாகச் சொல்லிலக்கணம் (Etymology) எனப்படும். இத்தகையசொல்லிலக்கணத்தை, கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் 'சொல்லதிகாரம்' என்னும் பகுதியில் காணலாம்.

எனவே, தமிழில் அகராதிக் கலை கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தத் தொல்காப்பியக் காலத்திலேயே தோன்றியிருந்தது எனலாம்.

தமிழ் போலவே உலக மொழிகள் பலவற்றிலும் மிகப் பழங் காலத்திலேயே அகராதிகள் தோன்றின. ஆசியாவில் கி.மு. 669—626-ஆம் ஆண்டுக் காலத்தில் வாழ்ந்த அசூர்பானிபல் (Ashurbanipal) என்னும் மன்னனது ஆட்சியில் சொற்பொருள் விளக்கும் அசிரிய மொழியகராதி களிமண் பலகைகளில் அமைக்கப்பட்டிருந்தது. வட மொழியிலும் கி.மு. 5-ஆம் நூற்ருண்டில் அகராதி அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. கி.மு. 150-ல், 10,000 சொற்களுக்குப் பொருள் விளக்கும் அகராதி ஒன்று சீன மொழியில் தொகுக்கப் பெற்றிருந்ததாம். ஐரோப்பாவிலும் கிரேக்கம், லத்தீன் முதலிய பழம்பெரும் மொழிகளில் பழங்காலத்திலேயே அகராதிகள் தோன்றியிருந்தன.

தமிழ் மொழியைப் பற்றிய வரையில், சொல்லிலக்கணத்தின் ஓர் உறுப்பாக இருந்த அகராதித் துறை, நாளடைவில் அதிலிருந்து பிரிந்து ஒரு தனிக்கலையாகவே வளரத் தொடங்கியது.

இம்முறையில் தமிழில் பல நூற்கள் எழுந்தன. அவற்றுள் மறைந்தவை போக எஞ்சியிருப்பவை சிலவே; இருப்பனவற்றுள் காலத்தால் முற்பட்டவை 'சேந்தன் திவாகரம்', 'பிங்கலம்' என்னும் நூற்கள். இவை கி.பி. எட்டாம் நூற்ருண்டில் எழுதப்பட்டன என்று சொல்லப்படுகின்றது. இவற்றிற்கு அடுத்தபடியாகக் கிடைத்திருக்கும் நூற்களுள் 'சூடாமணி' முற்பட்டது. இது பதினுரும் நூற்ருண்டில் இயற்றப்பட்டதெனக் கருதப்படுகிறது.

சூடாமணி என்னும் நூல் 'நிகண்டு' என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. சூடாமணிக்குப் பின் செய்யுள் வடிவில் எழுந்த அகராதித்துறை நூற்கள் அனைத்தினுக்கும் நிகண்டு என்னும் பொதுப் பெயரே வழங்கப்பட்டது. இப்பழக்கத்தால், சூடாமணிக்கு முன் தோன்றிய நூற்களும் நாளடைவில் நிகண்டு என்றே அழைக்கப்படலாயின.

நிகண்டு என்ருல் தொகுதி அல்லது கூட்டம், நீளம் என்று பொருளாம். சொற்கள் தொகுதியாக நீளமான வரிசையாகக் கொடுக்கப்பட்டிருப்பதால், அகராதித்துறை நூற்களுக்கு நிகண்டு என்ற பெயர் அளிக்கப்பட்டது.

உலக மொழிகள் பலவற்றிலும் சொற்பொருள் விளக்கும் அகராதித்துறை நூற்கள் பல தோன்றினவேனும், பதினுரும் நூற்ருண்டு வரையிலும் எந்த மொழியிலும் சொற்கள் அகர வரிசையில் நிறுத்திப் பொருள் கூறப்படவில்லை. இக்காரணத்தால் குறிப்பிட்ட ஒரு சொல்லை உடனே கண்டுபிடிக்க முடியாமல் முதலிலிருந்து இறுதிவரை சொற்களைப் படித்துப் பார்த்துத் தேடி, இடர்ப்பட வேண்டியிருந்தது.

இதனுல் திவாகரம், பிங்கலம் போன்ற நூல்கள் ஆதியில் அகர வரிசையில் அமைக்கப்படாமல் இருந்தும், பின் வந்தவர்கள் அவற்றின் சொற்களைத் தாமாக அகரமுதலாக வரிசைப் படுத்தினர். இந்த வசதியைக் கருத்திற் கொண்டு, 16-ஆம் நூற்ருண்டின் முற்பகுதியில் சூடாமணி நிகண்டை இயற்றிய மண்டல புருடர், சொற்களைக் 'ககர எதுகை' முதல் 'னகர எதுகை' ஈருக வரிசைப் படுத்திப் பொருள் கூறியுள்ளார்.

மண்டல புருடருக்குப் பின்னர் அகராதிக் கலையில் மேலும் ஒரு வளர்ச்சி காணப்பட்டது. கி.பி. 1594-ல் சிதம்பர இரேவண சித்தர் என்னும் தமிழ்ப் புலவர் ஒருவர், சொற்களை முதலெழுத்து வாரியாக அகர வரிசையில் அடுக்கி, 'அகராதி நிகண்டு' என்ற பெயரில் தமிழில் ஓர் அகராதி நூல் இயற்றினுர். உலகத்திலேயே சொற்களின் முதலெழுத்துக்களை அகர வரிசையில் அடுக்கி அமைக்கப்பட்ட முதல் அகராதி நூல் 'அகராதி நிகண்டு' தான். அடுத்து, இரண்டாவதாக கி.பி. 1612-ஆம் ஆண்டில் இத்தாலி மொழியில் அகர வரிசையில் அமைந்த ஓர் அகராதி தோன்றியது. பின்னர் நாளடைவில் உலக மொழிகள் பலவற்றிலும் இத்தகைய அகராதிகள் தோன்றலாயின.

அகராதித் துறை நூற்கட்கு வேற்று மொழிகளில் பல பொருவில் பல பெயர்கள் வழங்கப்படினும், தமிழில் உரிச்சொல், நிகண்டு என்னும் பெயர்கள் மறைந்தொழிய, அகராதி என்

றும் பொருத்தமான பெயர் நிலைத்துவிட்டது. இதுபோலவே ஆங்கில மொழியிலும் பல பெயர் தோன்றி மறைந்த பின்னர், சர் தாமஸ் எலியட் (Sir Thomas Elyot) தொகுத்த அகராதியின் 'டிக்ஷனரி' (Dictionary) என்ற பெயர் நிலைத்துவிட்டது.

தமிழைப்பற்றிய வரையில் அகராதிக் கலை வளர்ச்சியில் பதினேழாம் நூற்றாண்டிலிருந்து முன்னேற்றங்கள் தோன்றின. அவை : 1. சொற்களை அகர வரிசையில் அடுக்கிப் பொருள் கூறியது ; 2. சொற்பொருள் விளக்கம், நிகண்டுகளில் உள்ளதைப் போலச் செய்யுள் வடிவில் அளிக்கப் பெறுமல், இக்கால அகராதிகளில் உள்ளபடி சொற்களைத் தனித்தனியாக ஒன்றன்பின் ஒன்ருக வரிசைப்படுத்திப் பொருள் கூறியது ; 3. அரிய சொற்களுக்குப் பொருள் கூறுவதுடன் வேறு பல துறைகளிலும் கலையகராதிகள் தோன்றினமை.

இந்த மறுமலர்ச்சியில் ஐரோப்பாவிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த பெஸ்கி (Beschi), போப் (G. U. Pope) முதலிய கிறித்தவப் பாதிரிமார்கள் ஏற்ற பங்கு மிகப் பெரியது. அகராதி நூற்கள் செய்யுள் வடிவில் இருந்த நிலையை மாற்றி, அகர வரிசையில் தொகுத்துத் தமிழகராதிகள் செய்தவர்கள் அவர்கள்தாம். அரிய சொற்களுடன் எளிய சொற்களையும், கிளைமொழிச் (Dialects) சொற்களையும் சேர்த்து அகராதியை விரிவுபடுத்தினர். வீரமாமுனிவர் என அழைக்கப்படும் பெஸ்கி யவர்கள் தொகுத்த 'சதுர் அகராதி' என்ற நூல் இங்கே குறிப்பிடத் தக்கது.

'தமிழுக்குத் தமிழ்' என ஒரு மொழியகராதியேயன்றி, தமிழ்-போர்ச்சுகேசிய அகராதி, தமிழ்-லத்தீன் அகராதி, லத்தீன்-தமிழ் அகராதி, தமிழ்-பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு-தமிழ் அகராதி, போர்ச்சுகேசிய லத்தீன்-தமிழ்

தமிழரசு
இதழுக்கு
அனுப்பப்படும்
கவிதை-கதைகள்
முதலியன
எக்காரணம்
கொண்டும்
திரும்பி
அனுப்பப்படமாட்டா.
அவை வெளியிடுதல்
பற்றிய
கடிதத் தொடர்பு
வைத்துக் கொள்ள
இயலாது!
அஞ்சல் தலைகளோ
அஞ்சல்அட்டைகளோ
அனுப்ப வேண்டாம்
என்றும்
தெரிவித்துக்
கொள்கிறோம்.
—ஆசிரியர்



அகராதி, லத்தீன், பிரெஞ்சு தமிழ் அகராதி முதலிய இருமொழி மும்மொழி யகராதிகளும் அவர்கள் படைத்தனர். இவற்றை முன் மாதிரியாகக் கொண்டு, சமஸ்கிருதம், கிரந்தம், தெலுங்கு, இந்தி, மராத்தி, மலாய், ரஷ்யன் முதலிய மொழிகளோடு தமிழ் இணைந்த அகராதிகள் பிற்காலத்தில் தோன்றின.

இவ்விதமாக 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் பல மொழியகராதிகள் தோன்றின. இவையேயன்றி, இருபதாம் நூற்றாண்டில் மேற்கோள்களும் படங்களும் கூடிய அருஞ்சொல் விளக்க அகராதிகள் (Glossaries), மருத்துவம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய தனித் துறைகளில் ஆக்கப்பட்ட அகராதிகள், ஒரு நூலில் அடங்கியுள்ள சொற்களையும் செய்திகளையும் சுட்டிக் காட்டும் சொல் தொகுதி (concordance) அகராதிகள், பதவியல் அகராதிகள் (Etymological) ஒப்பியல் மொழி (comparative) அகராதிகள், தொகையகராதி, தொடையகராதி பலவகைக் கலைச்சொல் (Technical Terms) அகராதிகள், கலைக் களஞ்சியம் (Encyclopedia) பழமொழியகராதி, புலவர் அகராதி, இலக்கிய அகராதி முதலிய பலவகை அகராதிகள் தோன்றின.

இதுவரை தமிழில் ஏறக்குறைய ஐம்பது நிகண்டுகளும் நூற்றைம்பது அகராதிகளும் வெளிவந்துள்ளன.

இன்றைய உலகில், ஆங்கில அகராதிகளில் மிகச் சிறந்தது எனக் கருதப்படுவது 'வெப்ஸ்டர் அனைத்து நாட்டு அகராதி' (Webster's International Dictionary) யாகும். இது அளவில் மிகப் பெரியது. 2728 பக்கங்கள் உள்ளன. நாலரை இலட்சம் சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இந்த அகராதியைத் தயாரிக்க ஆன செலவு மூன்றரை மிலியன் டாலர்கள்.



# ஏன் இந்தக் காதலே?



கண்ணீர்த் துளிகளை வழித்தெறிந்து விட்டுப் புடைவைத் தலைப்பால் அவசரம் அவசரமாக முகத்தைத் துடைத்துக் கொண்ட தேன்மொழி, கதவைத் திறந்து பார்த்த பொழுது அங்கே புன்னகையைச் சிந்தி நின்றவள் டாக்டர் பூங்கொடி தான்.

"வணக்கம், டாக்டர்; வாங்க"

"வணக்கம், வணக்கம் ; உங்கள் உடம்பு இப்போது எப்படி இருக்கிறது ?"

"உடம்புக்கு என்ன கேடு ? நன்றாகத்தான் இருக்கிறது."

—வறட்டுச் சிரிப்புடன் அழுத்

## 4. மனச்சுமை இறங்குமா?

துக் கொண்ட தேன்மொழி, அறையினுள்ளே திரும்பிச் சுவர் ஓரமாகக் கிடந்த ஒரு நாற்காலியைத் தன் கட்டிலை ஒட்டியே இழுத்துப் போட்டாள்.

அதிலே வந்து அமர்ந்தவாறே, "நான் நினைத்தது சரிதான் போல் இருக்கிறது"

—என்று நகைத்தாள் பூங்கொடி.

"என்ன டாக்டர் நினைச்சீங்க ?"

"உங்களுக்குத் தேவையானது உடல் சிகிச்சை இல்லை; உள்ளச் சிகிச்சையே என்றுதான் நினைத்தேன். அதை உறுதிப் படுத்துகிற மாதிரிதான் உங்கள் பேச்சு இருக்கிறது. ஆமாம்; உங்கள் அப்பா இப்போது வீட்டில் இல்லையா ?"

"இந்த நேரத்திலே அப்பா எங்கே இங்கே இருக்கப் போகிறார் ? எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலகம் எதிலாவது வேலை வாங்கிக் கொண்டிருப்பார் ; அல்லது தம் நண்பர்களோடு 'கிளப்' எதிலாவது 'சதுரங்கமோ' 'பில்லியர்ட்சோ' ஆடிக்கொண்டிருப்பார்."

—என்றவாறே கட்டிலின்மீது தானும் வந்து அமர்ந்து கொண்டாள் தேன்மொழி.

"உங்கள் அப்பாவை நான் உடனே சந்தித்துப் பேச வேண்டுமே !"

"அப்போ, தொலைபேசி மூலம் அவர் எங்கேதான் இருக்கிறார் என்று துப்பறிந்து வரவழைப்போமா ?"

"வேண்டாம், வேண்டாம்! அப்படியெல்லாம் அவரை இப்போது பரபரப்பில் ஆழ்த்த வேண்டியதில்லை. நாளைக் காலையிலோ மறுநாளோ நானே நேரில் வந்து கூறிக்கொள்கிறேன்."

"எதைப் பற்றிப் பேச விரும்புகிறீர்கள் என்று தெரிவித்தால் நான் வேண்டுமானால் முன் கூட்டியே அவருக்குச் சொல்லி வைக்கிறேன்."

"உங்களைப் பற்றித்தான் பேச நினைக்கிறேன். அதை உங்கள் வாயாலே உங்கள் அப்பாவிடம் நீங்களே சொல்ல முடியாதே என்றுதான் யோசிக்கிறேன்."

—தன் கொவ்வை இதழ்களிலே குறும்பு நெளிந்திடக் கூறினாள் பூங்கொடி.

"என்னைப் பற்றி அவரிடம் அப்படி என்னதான் பேசப் போகிறீர்கள் என்று நானும் தெரிந்து கொள்ளலாமா, டாக்டர் ?"

"ஓ! கண்டிப்பாக உங்களுக்கும் அது தெரிந்திருக்க வேண்டியதுதானே ! வேறொன்றும் இல்லை ; உங்கள் மன நோய்க்கான மருந்தைப் பற்றித்தான் பேசப் போகிறேன். அது என்ன மருந்து தெரியுமா ?"

"என்ன மருந்து டாக்டர்? "

"உடனடியாக உங்கள் மனத்துக்கு இனியவரை நீங்கள் மணந்து கொண்டு விட வேண்டும் ; அதுதான் நான் உங்கள் அப்பாவிடம் சொல்லப்போகிற மனநோய் மருந்து."

—தான் இப்படிச் சொன்னதும் தேன்மொழி—நாணத்தால் தலை கவிழ்வாள்; நகத்தைச் சுவைப்பாள்; தேனூற்றில் நீந்துகின்ற திளைப்பில் முகம் மலர்வாள் என்றெல்லாம் எதிர் பார்த்தாள் பூங்கொடி.

ஆனால் அவளோ........ ?

அ. மறைமலையான்





அகங்குளிர்ந்தால் அல்லவா முகம் விரியும் பூவாக? மனமே நெருப்பாகும் போது முகம் அதன் புகையாக இருளாதா?

சிறிது நேரத்திற்கு முன்னர் தன்னந்தனியாகக் கண்ணீரை வழிய விட்டதால் களைத்துப் போன அவளது கரு விழிகள் சன்னல் வழியே தோட்டத்துப் பக்கம் சென்றன. அங்கோ, கடுமையாக வீசுகின்ற காற்றுச் சுழிப்பிலே, சருகுகள் சில 'தட்டித்தாண்டல்' ஆடித் தடுமாறிப் பறந்தன; தரையில் போய் விழுந்தன. அவற்றோடு ஒரு பச்சை இலையுமா படாத பாடு பட்டுப் பறந்து விழவேண்டும்?

'புறக்கணிக்கப்பட்டு விட்ட எதுவுமே முதுமை வருகிறவரை எதற்குத்தான் காத்திருக்க வேண்டும்?'

'பழுப்பாகிச் சருகாகிப் பலருடைய நையாண்டிக்கும் இலக்காகி-அழுகையிலேயே அழுகிச் சிதைவதை விட, அதோ அந்த இலையைப் போல இளமை மெருகின் பொலிவு இருக்கும் பொழுதே 'இறப்பு' என்னும் அழகிய பேழைக்குள்ளே ஒளி முத்தாக உறக்கம் கொண்டால் தான் என்ன? அதற்கும் ஒரு தனிச்சுவை-தனிப்புகழ் இல்லையா?........'

—அதற்கு மேல் தேன்மொழியின் பொருளற்ற கற்பனைகளுக்குச் சிறகு முளைக்காத வண்ணம் பூங்கொடியின் குரல் எழுந்து குறுக்கிட்டது:

''என்ன தேன்மொழி, திருமணத்தைப் பற்றிய பேச்சை எடுத்ததும், ஒன்றுமே வாயைத் திறக்காமல் மவுனமாக இருக்கிறீர்கள்? வெட்கத்தினாலா?''

''வெட்கப் படும்போது மட்டுந்தானா? துக்கப் படும் போதுங்கூடத்தான் வாயைத் திறக்க முடிவதில்லை.''

''அப்படி என்னதான் பெரிய துக்கம் உங்கள் இதயத்தை இப்போது அரிக்கிறது? அதை நான் தெரிந்து கொள்ளலாமா?''

''ஓ! அதெல்லாம் ஒன்றும் இல்லை, டாக்டர்! நான் ஏதோ ஒரு பேச்சுக்குத்தான் சொன்னேன்.''

சமாளிக்கப் பார்த்தாள் தேன்மொழி.

ஆனால், மருத்துவக் கலையோடு இணைப்பாக மனோதத்துவமும் பயின்றுள்ள பூங்கொடிக்கு அவளுடைய உள்ளத்தினுள்ளே சுழன்று கொண்டிருக்கும் புகைச் சலை-பொருமலை-புரிந்து கொள்ள முடியாதா?

''இதோ பாருங்கள், தேன்மொழி! என்னிடம் நீங்கள் எதையுமே ஒளிக்கத் தேவையில்லை; கூடவும் கூடாது. சிறிது நேரமாவது நான் உங்கள் குடும்ப டாக்டர் என்பதையும் நீங்கள் என்னிடம் சிகிச்சை பெறுகின்ற நோயாளி என்பதையும் மறந்துவிடுங்கள். உண்மையில்.. நான் சொன்னால் நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள். உங்களைக் காண நேர்கின்ற ஒவ்வொரு கணமும் என் நெஞ்சினுள்ளே எவ்வளவு வேகமாகப் பாச ஊற்றுப் பொங்கிப் பெருக்கெடுக்கின்றது தெரியுமா? நம்முடைய வாழ்க்கைப் பயணத்திலே நாமும் எத்தனையோ பேர்களைச் சந்திக்கத்தான் சந்திக்கிறோம்; எல்லாரிடமுமா நாம் நம் இதயத்தைப் பறிகொடுக்கிறோம்? எல்லாரையுமா நாம் நிழல் மரங்களாகக் கருதி நெருங்குகிறோம்? சிலர் கருவேல மரங்களாகவே நம்மைக் குத்துவதும் இல்லையா? அதே சமயம் ஒரு சிலரோ நிழலை மட்டுமின்றிப் பழமும் தருகிற மாமரமாகவே நமக்குப் பயன்தருவதில்லையா? என்னைப் பொறுத்த வரை எனக்குத் தங்கையோ தமக்கையோ யாரும் இல்லை; உடன் பிறப்பு யாரும் இல்லாத அந்த 'வெறுமை'யினாலோ என்னவோ, உங்களை முதன்முதலில் மூன்றாண்டுக்கு முன்னே சந்தித்தவுடனேயே என் அருமைத் தங்கையாகவே நான் என் மனத்திற்குள்ளே வரித்துக் கொண்டு விட்டேன். இல்லையென்றால் என்னைத் தேடி எத்தனையோ நோயாளிகள் வந்து ஏமாந்து திரும்புவார்கள் என்பது தெரிந்தும்கூட உங்களுக்காக இவ்வளவு அமைதியாக இப்படி நேரத்தைக் கழிப்பேனா? ஆகையாலே உங்கள் நெஞ்சக் குமுறலை என்னிடம் கொஞ்சமாவது ஏன் நீங்கள் திறந்து காட்டக்கூடாது? ஒருவேளை, உங்களுடைய ஆசைகளையும், அவை தந்த அதிர்ச்சிகளையும் தெரிந்துகொண்டு விட்டால், நான் எங்கே பிறகு உங்களைத் தாழ்வாக—தரக் குறைவாக-

கேலி செய்வேனோ, அல்லது மற்றவர்களிடமும் உங்களை ஒரு கேலிக்குரிய பொருளாக்கி விடுவேனோ என்று அஞ்சுகிறீர்களா?"

"அய்யய்யோ, அப்படியெல்லாம் உங்களைப் பற்றி நான் குறைவாக நினைக்கவில்லை, டாக்டர். நீங்கள் என் மீது வைத்திருக்கும் அளவுகடந்த பாசத்தை -பற்றுதலை-நானும் அறிய மாட்டேனா? மேலும், என்னைப் போன்ற ஒரு சாதாரணப் பிறவியைப் பற்றியெல்லாம் 'புழுங்கல் குத்திக்' கொண்டிருக்க உங்களைப்போல் சுறுசுறுப்பாக இயங்குகின்ற டாக்டர்களுக்கு -பெரியவர்களுக்கு-நேரம், காலந்தான் ஏது?......"

"பிறகு என்ன? உங்கள் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருக்கும் அந்த முள்ளை என்னிடம் காட்டிவிட வேண்டியது தானே! அப்படிக் காட்டினீர்களானால் அதைக் களைந்து எறிவதற்கு என்னாலான முயற்சிகளையும் நான் ஓர் உயர்ந்த கடமையாகக் கருதிச் செய்வேன் இல்லையா?"

—பூங்கொடியின் இந்த உருக்கமான வேண்டுகோள் தேன்மொழியின் தயக்கத்தையெல்லாம் சுருட்டி மடக்கித் தூர வீசியெறிந்தது.

நெஞ்சை அழுத்தும் கனமான சுமை இருக்கிறதே அதை எங்காவது, யாரிடமாவது இறக்கி வைக்கத்தான் வேண்டும்—தோன்றும்; இல்லையென்றால் இரண்டு கொடுமைகளுக்கு இரையாக வேண்டுமே! ஒன்று மூளை குழம்பி மண்டை வெடித்துப் பைத்தியமே பிடித்துவிடும்; அல்லது இருதயம் வெடித்துச் சாவே வந்துவிடும். அந்த ஆண்மை குன்றிய நிலைமைகளுக்குக்கெல்லாம் எதற்கு இடந்தரவேண்டும்? தன்னுடைய மனப் பளுவை இறக்கி வைக்கக் கூடிய சுமை தாங்கியாக இந்த டாக்டர்தான் இருந்துவிட்டுப் போகட்டுமே!

"சரி, டாக்டர்; நீங்கள் இவ்வளவு தூரம் எடுத்துச் சொன்ன பிறகு நானும் எதையும் ஒளிக்கவோ மறைக்கவோ விரும்பவில்லை; எல்லாவற்றையுமே சொல்லி விடுகிறேன். மற்றப் பெண்களைப் போல நானும் ஒருவரை முட்டாள்தனமாகக் காதலித்து விட்டேன். அதுதான் என் மன உளைச்சலுக்கே காரணம்......"

"அதனால் என்ன, தேன்மொழி? அவரையே நீங்கள் அறிவுக்கூர்மையோடு காதலித்தால் போகிறது!"

—என்று மெல்ல நகைத்தாள் பூங்கொடி.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் டாக்டர்?"

—விளங்காமல்தான் வினவினாள் தேன்மொழி.

"நீங்கள் என்னவோ காதலித்ததையே முட்டாள்தனம் என்பதாக உணர்ச்சி வயப்பட்டுச் சொன்னீர்களே அதைத்தான் நான் கொஞ்சம் திருத்திக் கூறினேன். காதலிப்பது எப்படி முட்டாள்தனம் ஆகும்? காதல் புரிவது முட்டாள்தனம் என்றால், பிறகு அழகுள்ள பெண்ணும் வலுவுள்ள ஆணும் படைக்கப்பட்டதே கூட முட்டாள்தனந்தான்! நம்மால் வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை என்பதற்காகவே நம் நெஞ்சத்தில் அரும்புகின்ற நியாயமான உணர்வுகள் கூடக் கேவலமானவை ஆகிவிடுமா? எதற்காகச் சொல்கிறேன் என்றால், காதலித்ததையே பாவச் செயலாக எண்ணிப் புழுங்குகின்ற ஒரு கழிவிரக்கம்—தவறான கண்ணோட்டம்—உள்ளத்தொய்வு—உங்களுக்கு உண்டாகி விடக் கூடாதே என்பதற்காகத்தான்! போகட்டும்; அந்த ஆள் இப்போது உங்களை ஏமாற்றி விட்டாரா?"



—இந்தக் கேள்விக்கு எப்படி விடையளிப்பது என்றே தெரியாமல் திணறினாள் தேன்மொழி.

மாதவன் அவளை ஏமாற்றினான் என்று எப்படிச் சொல்ல முடியும்? எந்த ஒரு வாக்குறுதியையும் அவன் அவளுக்கு அளிக்கவில்லையே! பிறகு, அதிலிருந்து அவன் வழுக்கியும் செல்லவில்லையே!

"அந்த மாதிரியெல்லாம் அவர் என்னை ஏமாற்றினார் என்று பழி சொல்வதற்கு இடம் இல்லை, டாக்டர்."

"பின்னே? .... உங்களுடைய தகுதிக்கும் திறமைக்கும், கொள்கைக்கும், குணத்துக்கும் ஒத்துவரக்கூடியவராக இருக்கமாட்டார் என்கிற புதிய அறிவுத் தெளிவினாலே நீங்களாகவே ஒதுங்கிக் கொள்வதைப் பார்த்து அவர் ஏதாவது அவமானப் படுத்தி விடுவாரோ என்று அஞ்சுகிறீர்களா?"

"அய்யோ, அந்த அளவுக்கெல்லாம் என்னுடைய காதல் முற்றிக் கனியவோ பிறகு மோதலைச் சந்திக்கவோ இல்லை டாக்டர்!"

"வேறே என்னதான் சிக்கல்? அதைக் கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்!"

"என்னுடைய காதல் இருக்கிறதே அது கொஞ்சம் வேடிக்கையானது! நான் நெஞ்சார நேசிக்கிறேனே அந்த மனிதர் இன்னும் தன்னுடைய வாயைத் திறந்து 'உன்னை நான் காதலிக்கிறேன்'—என்று கூறவே இல்லை!"

"அய்யய்யோ! அவ்வளவு அழுத்தக்கார மனிதரிடம் நீங்கள் ஏன் உங்கள் மனத்தைப் பறிகொடுத்து விட்டு இப்படி அவதிப்பட வேண்டும்?"

"அதுதானே டாக்டர், எனக்கும் புரியவில்லை!"

—தேன்மொழி இவ்வாறு கூறும் பொழுதே, வானொலி வழங்கிய திரைப்படப் பாடல் ஒன்று அவளைக் கேலி செய்வது போலக் காற்றிலே மிதந்து வந்தது.

நினைக்கத் தெரிந்த மனமே—
உனக்கு
மறக்கத் தெரியாதா?
பழகத் தெரிந்த உயிரே—
உனக்கு
விலகத் தெரியாதா?

—இந்த இனிமையான ஏக்கம் நுளும்பும் வரிகளைக் கேட்டதும், "ஏதேது? உங்களுக்காகவே இந்த நேரம் பார்த்து இந்தப் பாட்டைப் போட்டிருக்கிறார்கள் போல் இருக்கிறதே!

—என்று சிரித்தாள், பூங்கொடி.

தேன்மொழியும் மவுனமாகச் சிரித்துக்கொண்டாள்.

"ஆமாம்; தொடக்கத்திலே அந்த ஆளும் உங்களைக் காதலிக்க முடியும் என்று உங்களுக்கு எப்படித்தான் தோன்றியது? எப்படித்தான் நம்பிக்கை வைத்தீர்கள்?"

"அவருடைய பார்வை, பச்சு, சிரிப்பு—இவற்றைக் காண்டுதான் நான் நம்பிக்கை வத்தேன். இதிலே இன்னொரு வேடிக்கை என்ன தெரியுமா டாக்டர்? நான் த்தனை பெண்களுக்கு இடைலே இருந்தாலும் சரி; அவர் ன்னைமட்டுமேதான் பார்ப்பார்; ன்னோடு மட்டுமேதான் பேசுார்; சிரிப்பார்; வேறு எவளைமே ஏறெடுத்தும் பார்க்க ாட்டார்."

அப்படிப்பட்டவர், தன்னுடைய உள்ளக் கிடக்கையைத் ானகை ஏன் வெளிப்படுத்தவில்லை? அதுவும் இந்த மாதிரி வகாரங்களிலே ஆண்கள்தானே ந்திக் கொள்வார்கள்—முந்திக் காள்ளவும் வேண்டும்! ஆனால் வர்தான் வாயை இறுக்கி டிக்கொண்டு இருந்தார் ன்றால் . நீங்களாவது அவரது நத்தை வெளிப்படையாகத் தரிந்துகொள்ள ஏதாவது றிப்புக் காட்டியிருக்கலாமே?"

"அப்படிக் குறிப்புக் காட்டுதற்காக நான் எடுத்துக் காண்ட முயற்சிதான் டாக்டர் னக்கு, இப்போது அதிர்ச்சியயே கொடுத்திருக்கிறது!"

"ஏன்? அவர் உங்களைக் தலிக்கவே இல்லை என்று ப்பட்டமாகச் சொல்லிட்டாரா?"

"அப்படியும் அவர் சொல்லவில்லையே?"



"பின்னே?"

"நான் மயக்கமடைந்து விழுந்தேனே அன்று காரிலே போய்க் கொண்டிருக்கும் பொழுதே, என் கையிலே இரத்தக் கறை இருந்ததால்அவரைஎன் தலைக்குப் பூச்சூட்டுமாறு கேட்டுக் கொண்டேன். அவர் அதற்கு என்ன சொன்னார் தெரியுமா?...... 'நானாவது இனிமேல் இன்னொரு பெண்ணுக்குப் பூச்சூட்டுவதாவது?'—என்று ஒரேயடியாகக் கூறிவிட்டார். இதிலிருந்து என்ன தெரிகிறது டாக்டர்?"

"முன்பே ஒரு பெண்ணுக்குப் பூச்சூட்டி இருக்கிறார் என்று தெரிகிறது."

"அப்படியானால் எனக்கு முன்பே எவளோ ஒருத்தியை அவர் காதலித்திருக்க வேண்டும்; அல்லது திருமணமே செய்து கொண்டிருக்க வேண்டும் என்று தெளிவாகவில்லையா?"

"அந்த மாதிரியும் எடுத்துக் கொள்ளலாம்."

"அப்படிப்பட்டவர், என்னையும் ஏன் ஆசைபொங்கப் பார்க்க வேண்டும்? கேலி பேசிச் சிரிக்க வேண்டும்? 'டேபிள் டென்னிஸ்' கற்றுக் கொடுக்கிற சாக்கிலே என் கைகளைத் தொட்டு எதற்காகப் பழக வேண்டும்? .. நான் எப்படியெல்லாம் கனவுகள் கண்டேன் தெரியுமா, டாக்டர்?......"

—'கோ' வென்று குமுறிக் கதறத் தொடங்கிவிட்டாள் தேன்மொழி.

அவளை எவ்வாறு தேற்றுவது என்றே தெரியாமல் பூங்கொடி திண்டாடிக் கொண்டிருக்கும் பொழுது—

சமையல்காரி சண்பகம் பரபரப்போடு அந்த அறையினுள் ஓடிவந்தாள்.

"டாக்டரம்மா! உங்க ஆஸ்பத்திரியிலே யாருக்கோ ரொம்ப ஆபத்தாம்! உடனே வரச் சொல்லி 'போன்' வந்திருக்கு"—என்றாள்.

உடனே தேன்மொழியிடம் விடை பெற்றுக்கொண்டு பூங்கொடி புறப்பட்டுவிட்டாள்.

• • •

மறுநாள் காலை பத்து மணி இருக்கும்.

வழக்கம்போலப் படுக்கையில் கிடந்தவாறு சன்னல் வழியாகத் தன் பார்வையைப் பறக்க விட்டுத் தோட்டத்தின் பசுமையான எழிலையும் சிட்டுக் குருவிகளின் சிரிப்பையும், அணில் பிள்ளைகளின் விளையாட்டையும், வண்ணத்துப் பூச்சிகளின் சிறகடிப்பையும், பருகித் திளைக்கவில்லை தேன்மொழி.

அவளுடைய கண்ணும் கருத்தும், மராட்டிய மொழியின் மாபெரும் காவிய எழுத்தாளரான வி. ச. காண்டேகர் தீட்டிய 'எரிநட்சத்திரம்' என்னும் புதினக் கடலிலேயே புதைந்து அமிழ்ந்தன.

அதிலே வரும் 'உல்கா' என்னும் ஓவியப் பாவையின் வாழ்வைப் படிக்கப் படிக்கத் தேன்மொழியால் அழுகையை அடக்க முடியவில்லை. அவளது கன்னக் கதுப்புகளில் கண்ணீர் வழிந்தது தாரை தாரையாக!

சிறிது நேரத்தில்,

"உள்ளே வரலாமா?"

—என்கிற 'கணீர்'க் குரல்.

தேன்மொழி திரும்பிப் பார்த்தாள்.

மாதவன் புன்சிரிப்பை இழைய விட்டுக் கொண்டு அவளை நோக்கி வந்தான். அந்தக் குறுஞ் சிரிப்பிலேதான் எவ்வளவு குறும்பு!

(தொடரும்)




அண்ணல் காந்தியடிகள் நூற்றாண்டு விழாவை ஒட்டி, தியாகிகள் கோட்டமான தில்லையாடியை, வள்ளியம்மை நகராக உருவாக்க நமது அரசு முன் வந்தது.

தில்லையாடி—

தஞ்சை மாவட்டம் செம்பனார் கோவில் அருகிலுள்ள சிற்றூர்.

அண்ணல் காந்தியடிகளுடன் தென்னாப்பிரிக்க நாட்டில் அறப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களான வள்ளியம்மை, நாராயணசாமி, நாகப்பன் ஆகியோர் பிறந்த மண்.

அந்த ஊரில், காந்தியடிகள் நூற்றாண்டு விழாவை ஒட்டி 1969-ஆம் ஆண்டில் அமைக்கத் தொடங்கிய நினைவுச் சின்னங்களாக வள்ளியம்மை நகர், வள்ளியம்மை மண்டபம், வள்ளியம்மை உயர்நிலைப் பள்ளி, நாராயணசாமி மாணவர் இல்லம், நாகப்பன் நகர் முதலியவற்றைக் கல்வி, உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த 13—8—1971 அன்று திறந்து வைத்தார்கள்.

அன்று தில்லையாடியே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. அன்று முதல்வர் ஆற்றிய உரை தமிழ் மறவர்களின் தியாக வரலாற்றை விளக்கும் பேருரையாக அமைந்தது. அந்தப் பேருரையின் ஒரு பகுதி :—

" இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் கொண்டாடவில்லை என்று பாராட்டத் தக்க அளவுக்குத் தமிழகத்தில் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவினை நாம் கொண்டாடிக் காட்டினோம். அப்படிக் கொண்டாடப்பட்ட போதுதான், காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்டு உயிரைப் பணயமாக வைத்து, அவருக்கு உற்ற தோழர்களாக இருந்து கொண்டு, சிறைச்சாலைக்குச் சென்றால் அவர்கூடச் சென்று, நாடு கடத்தப்பட்டால் அவரோடு நாடு கடத்தப்பட்டு நலிந்து, வாழ்வை நாசமாக்கிக் கொண்ட தமிழ் மறவர்களுக்கு தமிழ் மறத்திக்கு நாம் ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டோம்.

தில்லையாடியிலேதான் வள்ளியம்மையின் பெற்றோர்கள் பிறந்தார்கள். 16 வயதுடைய வள்ளியம்மை தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் உத்தமர் காந்தியுடன் பணிபுரிந்து சிறைச்சாலைக்குச் சென்று, சிறைச்சாலையிலே கடுமையான நோய்வாய்ப்பட்டு—சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்ற பிறகும் மரணப் படுக்கையில் அந்த 16 வயது இளமங்கை கடைசி மூச்சு இழுத்துக் கொண்டிருக்கிற நேரத்திலும் — காந்தியடிகள் வள்ளியம்மையைப் பார்த்து, 'என்னால் அல்லவா உனக்குஇந்தக் கஷ்டம்' என்று கேட்ட நேரத்தில், "இன்னும் இது போன்ற பல கஷ்டங்களை நாட்டுக்காக நியாயத்துக்காக அனுபவிக்கநான் தயாராக இருக்கிறேன்" என்று கூறினாள். "மீண்டுமொருமுறை சிறை செல்ல உனக்குத் துணிவிருக்கிறதா" என்று காந்தியார் கேட்க, "ஒருமுறையல்ல, பலமுறை சிறை செல்லத் தயாராக இருக்கிறேன்" என்று கூறித் தனது இறுதி மூச்சை 16 வயது நிரம்பிய வள்ளியம்மை விட்டாள் என்று காந்தியடிகளே கண்கலங்க எழுதிக் காட்டியிருக்கின்றார்.

## அட்டை சொல்லும் நிகழ்ச்சி

காந்தியடிகளோடு இருந்த நாகப்பன், நாடு கடத்தப்பட்டு மாண்டான். நாகப்பன் மாண்டபிறகு நாகப்பனுடைய மனைவி, தன் குழந்தைகளோடு தில்லையாடிக்கு வந்து சேர்ந்தாள். உத்தமர் காந்தி அவர்கள் தென்னாப்பிரிக்காவிலிருந்து புறப்பட்டு இந்தியா வந்து சேர்ந்து, சென்னைக்கு வந்து முதன் முதலாகக் கிராமங்களிலே அடியெடுத்து வைத்தார் என்றால், அது தில்லையாடி கிராமம் தான் ; அந்தத் தில்லையாடிக் கிராமத்தில் அடியெடுத்து உள்ளே வருகிற நேரத்திலே தான் அரிசனங்களைப் பார்த்தார்; " இவர்கள் எல்லாம் யார் —இவ்வளவு அவல நிலைகளுடன் வாழ்கிறார்களே — ஓட்டைக் குடிசையில் வாழ்கிறார்கள்— ஓட்டுத் துணி உடுத்துகிறார்கள் —இவர்கள் எல்லாம் யார் ?" என்று உருக்கத்தோடு கேட்டார்.

அவருக்கு அளிக்கப்பட்ட பதில்—இவர்களெல்லாம் உங்களோடு தென்னாப்பிரிக்கப் போராட்டத்திலே ஈடுபட்ட நாராயணசாமி, நாகப்பன், வள்ளியம்மை போன்றோரது சாதியைச் சேர்ந்தவர்கள் —அரிசன மக்கள் என்று அவருக்கு எடுத்துச்சொல்லப்பட்டது.

## தேக்கு மரத் தேகத்தை தீயின் நாக்குக்கு இரையாக்கியோரை மறவோம்!

அந்த அரிசன மக்களுக்காக உழைக்க வேண்டுமென்ற வீரசபதத்தைக் காந்தியடிகள் எடுத்துக் கொண்ட இடமே தில்லையாடி கிராமம்தான்.

அந்தச் சபதம் இன்று படிப்படியாக, ஆனால் உறுதியாக நிறைவேற்றப் பட்ட காட்சியினை இங்குக் காண்கிறீர்கள்.

நாகப்பனின் மனைவியைச் சந்தித்து, நாகப்பனின் மறைவுக்காகக் காந்தியார் வருந்திய போது தன் கணவனைப் பறிகொடுத்த துக்கத்தில் நாகப்பனின் மனைவி காந்தியடிகளைப் பார்த்து, "உங்களால்தான் என் கணவர் மாண்டார்" என்று அழுது புலம்பியதும், அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் காந்தியடிகள் "அம்மையே நீயும் உன் குழந்தைகளும் என்னோடு வந்து சபர்மதி ஆசிரமத்தில் இருந்து விடுங்கள்" என்று அவர் அழைத்தார்—அந்த அம்மையார் உடன்படாத காரணத்தினால் பிறகு ஊரெல்லாம் கூடிப் பேசி—நாகப்பனின் இரு குழந்தைகளில் ஒரு குழந்தையைத், தானே வளர்ப்பதாக அழைத்துச் சென்று, தானே வளர்த்து, காந்தியடிகள் கொல்லப்படுவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் அவன் சபர்மதி ஆசிரமத்தில் மாண்டான் என்கிற சரித்திரக் குறிப்புகளையும் நாம் பார்க்கிறோம்.

இந்தத் தில்லையாடியிலேதான் வீர மறவன் நாராயணசாமியின் பெற்றோர்களும் பிறந்தார்கள். தமிழில் அருமையான கவிதைகளை இயற்றிய அருணாசலக் கவிராயர் 1812-ஆம் ஆண்டிலே பிறந்தார் என்ற புகழும் இந்தத் தில்லையாடிக்கு உண்டு.

இந்தத் தில்லையாடியிலேயிருந்த வேதியப் பிள்ளை என்பவர் தென்னாப்பிரிக்காவிலே காந்தியடிகளோடு நட்புக்கொண்டவர். அவரைப் பற்றி ஒன்று சொல்வார்கள். ப. உ. சிதம்பரனாரின் நிலையை உணர்ந்து வேதியப் பிள்ளை அவர்கள் அடிக்கடி அவருக்குப் பண உதவி செய்து வந்தார் என்று சொல்வார்கள். சிதம்பரனார் வேதியப் பிள்ளையிடத்திலே சொன்னாராம், 'எனக்குப் பிறக்கின்ற முதல் குழந்தை ஆண் பிள்ளையாக இருந்தால் உங்களது பெயரைத்தான் வைப்பேன்' என்றாராம். ஆனால் சிதம்பரனாருக்குப் பிறந்த முதற் குழந்தை பெண் குழந்தையாகப் போய்விட்டது. ஆனாலும் சிதம்பரனார் அவரது நினைவால் வேதவல்லி என்று பெயரிட்டாராம். அந்த வேதியப் பிள்ளை பிறந்த இடமும் இந்தத் தில்லையாடிதான். இப்படிப் பல்வேறு புகழ்கள் இவ்வூருக்கு . . . .

காந்தியடிகளுக்குத் தென்னாப்பிரிக்காவிலே தமிழைக் கற்றுக் கொடுத்த கன்னியப்பச் செட்டியார் என்பவரும் இந்தத் தில்லையாடியிலேதான் பிறந்தார்.

வீர மணமும்—விவேகமும் தமிழார்வமும்— கொந்தளித்துக் கொதித்து இந்த மண்ணை 1812-ஆம் ஆண்டிலிருந்து அலங்கரித்தது' என்று சொல்லலாம்.

வள்ளியம்மாளுக்கு இன்றைக்குச் சிலையெடுத்திருக்கிறோம்; ஒரு மண்டபத்தைக் கட்டியிருக்கிறோம். அந்த 16 வயதுப் பாவையின் பெயரால் பள்ளிக்கூடங்கள்— மருத்துவ மனைகள்—நாகப்பன் பெயரால், வள்ளியம்மை பெயரால் அரிசன மக்கள் வாழ் இடங்கள் இவைகளெல்லாம் அமைத்திருக்கிறோம்.

இன்னும் தியாகிகளுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் முடிந்து விடவில்லை.

மொழிக்காகத் தமிழகத்தில் போராடியவர்கள் ஏராளம் உண்டு. மொழிக்காகப் போராடிச் சிறை சென்றவர்கள் மாத்திரம் அல்ல; அடக்கு முறைகளைத் தழுவியவர்கள் மாத்திரமல்ல; தமிழ் வாழ—மொழி செழிக்க—மொழிக்கு ஆபத்து வராது தடுக்க —தன் உடலிலே தியை வைத்துக் கொண்டு தீப்பிடித்துச் செத்த வீர மறவர்கள் இந்திய பூபாகத்திலே தமிழ் மாநிலம் தவிர வேறெந்த மாநிலத்திலும் கிடையாது.

அப்படிப்பட்ட வீர மறவர்களுக்கெல்லாம் நாம் விழா எடுத்தாக வேண்டும். அப்படிப்பட்ட வீர மறவர்கள் பிறந்த கிராமங்களிலெல்லாம் இதைப் போன்ற நினைவுச் சின்னங்களை எழுப்பியாக வேண்டும்.

## மொழிப் போர்த் தியாகிகள் பிறந்த மண்ணில் நினைவுச் சின்னங்கள் அமைப்போம்

வள்ளியம்மை பெயரால் அமைந்துள்ள இந்த வள்ளியம்மை மாநகரிலே நின்று தமிழக அரசின் சார்பாகச் சொல்லுகிறேன். தமிழ் மொழிக்காக—தணலில் விழுந்து தன் தேக்கு மரத் தேகங்களை எல்லாம் தீ நாக்குகளுக்கு இரையாக்கிய தீந்தமிழ்ச் செல்வங்களுக்குத் தமிழக அரசின் சார்பாக—தமிழ்ப் பெருங்குடி மக்களின் பெருந்துணையோடு அவர் பிறந்த ஊர்களிலெல்லாம் நினைவுச் சின்னங்கள் எழுப்பப்படும்"




**அட்டைப்பட விளக்கம்**

கடந்த இதழ் அட்டைப் படத்தில் உள்ளவர்கள் (சட்ட மன்ற உறுப்பினர்கள்) யார் என்று விளக்கம் போட்டிருக்கக் கூடாதா? எங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று விட்டுவிட்டீர்களா?

எம். கைலாசம், பத்தூர்.

உங்களுக்குத் தெரிந்திருந்தால் மகிழ்ச்சியே! தெரியாதவர்களுக்கு விவரம் இதோ:—

மேலே முதல் வளையத்திலிருப்பவர் பிறபட்டோர் நல அமைச்சர் திரு க. இராசாராம். இரண்டாவது வளையத்தில் இருப்பவர் இவ்வாண்டின் வெற்றி வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு தர்மலிங்கம்; மூன்றாவது வளையத்தில் உள்ளவர் வை. பாலசுந்தரம்.

கீழே"முதல் வளையத்தில் உள்ளவர்கள் கல்வியமைச்சர் திரு நாவலர், உணவு அமைச்சர் திரு ப. உ. ச.; இரண்டாவது வளையத்தில் உள்ளவர்கள் வேளாண்மை அமைச்சர் திரு அன்பிலும் அவரது அணியினரும்.

மாறுவேடத்தில் இருப்பவர்கள்: பாதுஷா—திரு. சி. வீ. ராஜகோபால், குறத்தி—திரு ஆர். ஆர். முனுசாமி, பாம்பாட்டி திரு. பழனிவேலன்.

—(ஆ-ர்)

**வழக்கமானவை எங்கே?**

'தமிழரசி'ல் அறிவிக்கப்படும் தொடர்பகுதிகள் குறிப்பாக மகளிர்பகுதி, மாணவர் அரங்கம் முதலியன துவளாமல் தொடர்ந்து வரச் செய்யுங்கள்.

பி. கிருஷ்ண குமார், குடந்தை.

வெள்ளிவிழா மலரில் கொஞ்சம் கவனம்; அக்டோபர் முதல் பாருங்களேன் . . . .

—(ஆ-ர்)


# நெய்வேலியும்...நமது நாடும்

நெய்வேலி யூரியா:
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் கூட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிகத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலயம்தான் முதலாவது.

கட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ
வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திரம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.



நெகோலின்:
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.

தார்ப்பொருள்கள்:
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினல், பாலிவாலெண்ட் உபிளுல் கலவை.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி—1

DSNLC946T16


# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம்

**சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு.**

வேலையின் பெயர்—காஞ்சிபுரம் வடிகால் திட்டம்—2-வது கட்டம் கிழக்குப் பிராந்தியத்தில் புதை சாக்கடை, கட்டுமானங்கள் அமைப்பு.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்துக்காகவும் அதன் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக, இத்துறையின் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள அல்லது இதுபோன்ற அரசு நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் சர்க்கிள், சென்னை-8 அவர்களால் அவரது அலுவலகத்தில் 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 20-ஆம் தேதி மாலை 3 மணி வரை, துறைக்குரிய வடிவங்களில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் 3-30 மணிக்கு மேல், மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் சர்க்கிள், 52, கெங்கு ரெட்டி சாலை, சென்னை-8-ல் அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 15,160 (ரூபாய் பதினைந்தாயிரத்து நூற்று அறுபது மட்டும்).

(கருவூல சலான் வடிவில் அல்லது ஒப்பந்தப் புள்ளி விதிகளில் சொல்லப்பட்டுள்ளபடி, இதர ஏற்கத்தக்க வடிவங்களில் செலுத்த வேண்டும்.)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 31.05 (ரூபாய் முப்பத்து ஒன்று காசுகள் ஐந்து மட்டும்)

**ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணம், நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் டிவிஷன், செங்கற்பட்டு P.W.III-O.R. அவர்கள் கணக்கிலும், விற்பனை வரி XIII Sales D. Misc. I General Sales-tax என்றும் தனித் தனி சலான்களில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம்—நிர்வாகப் பொறியாளர் (பொ. சு. பொ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், 24, பெரிய மணியகார தெரு, செங்கற்பட்டு. (ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்குரிய கட்டணம் ரொக்கமாக அல்லது மணியார்டர் மூலம் அனுப்பலாம்.)

வேலையை முடிக்க வேண்டிய காலம்—இருபத்தி நான்கு மாதங்கள்.

மேற்பார்வைப் பொறியாளர்
பொதுச் சுகாதார பொறியியல் சர்க்கிள்,
தமிழ்நாடு குடிநீர்— வடிகால் வாரியம்
எழும்பூர், சென்னை-8.

---

**சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் பொதுச் சுகாதாரப் பொறியாளர் துறை, பொதுப் பணித்துறை நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறை அல்லது அவை போன்ற அரசுத் துறைகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளரால் (பொ.சு.பொ.) எண். 17, சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் அவரது அலுவலகத்தில் 14-9-1971 பிற்பகல் 3 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன. அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்: கோவில்பட்டி குடிநீர் வழங்கு திட்டம் II-வது கட்டம் வழங்கும்முறை—ஸி.ஐ.எ.ஸி. அல்லது பி.வி.ஸி. பைப்புகள் ஸ்பெஷல்கள் இடுதலும் இணைத்தலும். தாழ்ந்த மட்ட பிராந்தியம் மாவட்டம் II—பகுதி II அடங்கல் மெயின் II மெயின் 2 ஓ.எஸ்.எல்.எஸ் 3415 அடி வரையிலுமுள்ள எஸ். எம். 2, (1040 எம்) அவற்றின் தொடர்புடைய கிளைகள்.

ஒப்பந்த வடிவம்: கே: 2.

கட்டுத் தொகை: ரூ. 680 (ரூபாய் அறுநூற்று எண்பது மட்டும்).

இந்தத் தொகை ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூல செலானாக அல்லது டிமாண்ட் டிராப்டாக அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு பாங்கின் பாங்க் காரண்டியாக நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் டிவிஷன் கோவில்பட்டி என்ற கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

வேலை முடிக்கப்பட வேண்டிய காலம்: ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை: ரூ. 5.18 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் டிவிஷன் 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் 10-9-1971 பிற்பகல் 5 மணி வரையிலும் பெறலாம்.

கே. கோவிந்தமேனன்
மேற்பார்வைப் பொறியாளர்
(பொ.சு.பொ.) மதுரை-2

தேதி: 11-8-1971

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு, நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, ஒப்பந்த விவர அறிக்கை

தமிழ் நாடு அரசு ஆளுநர் சார்பிலும் அன்னாரது ஆணைப் படியும், திருநெல்வேலி வட்டம், நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடிமுத்திரை யிடப்பட்ட ஒப்பந்தங்கள் 3—9—1971 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி வரையில் (அன்னாரது அலுவலகக் கடிகாரப் படி) இலக்கம் 18, திருச்செந்தூர் சாலை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி—2-ல் உள்ள அன்னாருடைய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3—15 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | முன் வைப்புத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1. தொண்டி சுந்தரபாண்டியன் பட்டிணம் சாலை கி. மீ. 14.8-ல் பாலம் கட்டுதல். | 9,400 |
| 2. தொண்டி சுந்தரபாண்டியன் பட்டிணம் சாலை கி. மீ. 3.2-ல் பாலம் கட்டுதல். | 9,095 |

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள், பத்திரங்கள், வடிவங்கள் முதலியன கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, சிவகங்கை அலுவலகத்தில் வேலை ஒன்றுக்கு ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும் விற்பனை வரி நீங்கலாக) விண்ணப்பத்துடன் செலுத்தி 19—8—1971-ஆம் தேதியிலிருந்து 1—9—1971-ஆம் தேதி முடிய (இரு தினங்கள் உட்பட) அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

ஒப்பந்தங்களுக்கான முன்வைப்புத் தொகை சிவகங்கை கோட்டப் பொறியாளரின் பெயரில் '' ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பின்கீழ் அன்னாரது அதிகார எல்லைக்கு உட்பட்ட ஏதாவதொரு அரசினர் கருவூலத்தில் கட்டி அதற்கான செல்லுச் சீட்டுடன் ஒப்பந்தத்தை அனுப்ப வேண்டும்.

18, திருச்செந்தூர் ரோடு,
பாளையங்கோட்டை.

பூ. சு. சதாசிவசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை,
திருநெல்வேலி மாவட்டம்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

பரம்பிக்குளம்-ஆழியாறு
நீர் மின் திட்டம்,

மின்பாறை அஞ்சல்,

கோயம்புத்தூர் மாவட்டம்.

### ஒப்பந்த விவரம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் பரம்பிக்குளம்-ஆழியாறு நீர்மின் திட்டம் மத்திய பண்டகசாலையில் உள்ள நிராகரிக்கப்பட்ட லோகோ (Loco), கழிவு இரும்புத் துண்டுகள், பழைய டயர்கள், செம்புத் துகள்கள், மற்றும் இதர வழக்கொழிந்த பலவகை கழிவுப் பொருள்களையும் வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 24—9—1971 அன்று 15 மணி 30 நிமிடம் வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் 24—9—1971 அன்றே 16·00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்த சம்பந்தப்பட்ட முழு விவரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள் அனைத்தும் கோயம்புத்தூர் மாவட்டம், மின்பாறை அஞ்சல் மத்திய அலுவலகத்தில் 6—9—1971 முதல் எந்த வேலைநாட்களிலும் பணமாகவோ அல்லது பணவிடைத்தாள் மூலமாகவோ ரூபாய் ஐந்து மட்டும் (ரூ. 5) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி விலையான ரூ. 5 திருப்பித்தரத்தக்கதல்ல.

நிராகரிக்கப்பட்ட கழிவுப் பொருள்களுக்கு என்ன விலை குறிக்கப்படுகிறதோ அதில் பத்து சதவீதம் (10%) பிணைத் தொகையாகக் கீழ் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி அதற்கான இரசீதையோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பொள்ளாச்சி கிளையின் கேட்பு உண்டியலாகவோ (Demand Draft) ஒப்பந்த சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளோடு இணைத்து அனுப்ப வேண்டும். பிணைத் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தங்கள் காரணம் காட்டாது நிராகரிக்கப்படும்.

ஒப்பந்த நகல் விண்ணப்பதாரர்களுக்கு சாதாரண அஞ்சலில்தான் அனுப்பப்படும். அஞ்சல் பிரயாணத்தின் பொழுது ஒப்பந்த நகல் தவறினுல் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்த நகல் மற்றவர் பெயருக்கு மாற்றத்தக்கதல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
பரம்பிக்குளம்-ஆழியாறு
நீர் மின் திட்டம்.

தந்தி : PARAMBY DEL/
POLLACHI.

தொலைபேசி : 39,
மலையாண்டி பட்டணம்.

## ஒப்பந்தம்

### ஒப்பந்தப் புள்ளி விவர அறிவிப்பு

மருந்துகள், டிரஸ்ஸிங்க்ஸ், அறுவைக் கருவிச் சாதனங்கள் ஆகியவை சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனைக்கும், சைதாப்பேட்டை அரசினர் மருத்துவ நிலையத்திற்கும்சென்னைபட்டினப்பாக்கம் டிஸ்பென்ஸரிக்கும் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி தொடங்கி 1972-ம் வருடம் மார்ச் 31-ஆம் தேதி முடிய வழங்குதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 10-ஆம் தேதி பிற்பகல் 2 மணி வரையில் அரசினர் ராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை -14 அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைப் பத்திரங்களும் ஒப்பந்தப் புள்ளி வடிவங்களும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) மூன்றரைச் சதவீத வணிக வரியும் 5 சதவீத சர்சார்ஜு வணிக வரியும் செலுத்தி, மேற்பார்வையாளர் அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை சென்னை, அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். எந்த விதச் சூழ்நிலையிலும் இத்தொகைகள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா. இக்கட்டணம் இந்திய ரிசர்வ் வங்கியிலோ அல்லது ஏதாவது அரசுக் கருவூலத்திலோ 'XXII எம்டிஎல். மிஸலேனியஸ்' என்ற கணக்கிலும் XII விற்பனை வரி வரவினம் பொது விற்பனை வரி என்ற தலைப்பிலும் முறையே செலுத்தப்படல் வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்டு, மருந்துகள் டிரஸ்ஸிங்ஸ், அறுவைச் சாதனக் கருவிகள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் தேதி 10-9-1971 எனக் குறிப்பிட்டு சூப்பிரண்டண்டு, அரசினர் இராயப்பேட்டை மருத்துவ மனை, சென்னை-14 என்ற முகவரியிட்டு அனுப்ப வேண்டும்.

டாக்டர் எம். நாராயணன்,
எம்.எஸ்.

மேற்பார்வையாளர்,
அரசினர் இராயப்பேட்டை
மருத்துவமனை, சென்னை-14.
(தமிழ்நாடு ஆளுநருக்காகவும்
அவர் சார்பிலும்)

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு மின்வாரியம்

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

மின்வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், கீழ்க்கண்டவைகளை சப்ளை செய்யத் தனிக் குறிப்பு எண். இ. 1494 உடன் (Specification No. E 1494) மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அடியில் கையெழுத்திட்டுள்ளவரால் வரவேற்கப்படுகின்றன.

| எண். | விவரம். | தனிக் குறிப்பு எண். | தனிக் குறிப்பின் விலை. | கட்டுத் தொகை. | சேர வேண்டிய நாளும் நேரமும். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | ரூ. | ரூ. | |
| 1 | எண்ணூர் அனல் மின் நிலையத்திலுள்ள சாண்ட்பார் ஒர்க்சுக்கான (Sand bar works) மின் விளக்கு அமைப்புகளை (lighting installations) சப்ளை செய்வதும் நிர்மாணிப்பதும். | E. 1494 | 20 | 1,000 | 6—10—1971 நண்பகல் 12 மணி. |

சேர வேண்டிய நாளன்று மாலை 3 மணியளவில் எந்தெந்த ஒப்பந்ததாரர்கள் வந்திருக்கிறார்களோ அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் பிரிக்கப்படும். சேர வேண்டிய நாளுக்குப்பின் வரும் ஒப்பந்தங்கள் கவனிக்கப்படமாட்டாது. தனிக் குறிப்பின் நகல் (Copy of specification) மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை ரொக்கமாகவோ அன்றி மணியார்டர் மூலமாகவோ, கணக்கு அலுவலர், (Accounts Officer), சென்னை மின்சாரத் திட்டம் (விநியோகம்), 157, அண்ணாசாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு அனுப்பி பின் தனிக் குறிப்பு எண்ணைக் குறிப்பிட்டு ரொக்கப் பணம் அனுப்பினதற்கான ரசீதோ, அன்றி மணியார்டர் ரசீதோ இணைத்து முழு முகவரியும் குறிப்பிட்டு அடியில் கையெழுத்திட்டவருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். குறைந்த ஒப்பந்தத்தையோ அல்லது எந்த ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்ளாமலிருக்கும் உரிமை வாரியத்திற்கு உண்டு. இந்த ஒப்பந்தங்களைப் பிரித்து அளவினைத் திருத்தி அதன்படி வழங்கும்படியும், நிர்ணயிக்கும்படியும் என்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களைக் கேட்டுக் கொள்ளவும் வாரியத்திற்கு உரிமை உண்டு.

சேரவேண்டிய காலத்திற்குப் பின்னுல் வரும் ஒப்பந்தங்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

157, அண்ணா சாலை,
சென்னை.

மேற்பார்வை பொறியாளர்,
தொழில் நுணுக்கம் (மின்சாரப் பிரிவு).

## ஒப்பந்தப்புள்ளி

**தமிழ்நாடு அரசு.**

**நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, சென்னை வட்டம்.**

**சென்னை 25.**

### ஒப்பந்த விளம்பரம்.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 22–9–1971 அன்று மாலை 3·00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்:—

| எண். | வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 13/6 முதல் 15/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 4,040 |
| 2 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 15/0 முதல் 16/8 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 5,190 |
| 3 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 18/4 முதல் 20/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 4,620 |
| 4 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 20/0 முதல் 21/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 2,910 |

ஒப்பந்தங்கள் 22–9–1971 அன்றே மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரை படங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர், வாலாஜா தனிக்கோட்டம் அவர்கள் அலுவலகத்தில் விற்பனை வரி வுட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 25·88 கட்டி 6–9–1971 முதல் 21–9–1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), வாலாஜா தனிக்கோட்டம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை), வாலாஜாபாத்-தனிக் கோட்டம் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

முன்வைப்புத்தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப்பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை)

16–8–1971. சென்னை வட்டம், சென்னை-25.

## ஒப்பந்தப்புள்ளி

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.**

**ஈட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் சார்பிலும் அத்துறைக்கான முறையான வடிவத்தில் பொதுசுகாதாரப் பொறியியல் துறை, பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை அல்லது இதுபோன்ற அரசு நிறுவனங்களில் உரிய பிரிவுகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) அவர்களால் அவர்கள் அலுவலகம், 17, சர்.பி.டி. இராசன் சாலை, மதுரை-2-இல் 14—9—1971 மாலை 3 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3-30 மணிக்கு அவை திறக்கப்படும்.

வேலையின் பெயர் : கோவில் பட்டி நீர் வழங்கு திட்டம் — இரண்டாவது கட்டம்— வழங்கு முறை. சி.ஐ.எ.ஸி. அல்லது பி.வி.ஸி. குழாய்கள், ஸ்பெஷல்கள், கீழ் மட்டப் பிராந்தியத் திறகாக டிஸ்டிரிக்கு 1-இல் அமைத்தல், இணைத்தல்.

ஒப்பந்த வடிவம் : கே. 2.
கட்டுத் தொகை : ரூ. 1,020.

ஒப்பந்தப் புள்ளியுடன் இத்தொகை கருவூலச் செலான் வடிவிலோ, டிமாண்டு டிராப்டு வடிவிலோ, தேச உடைமையாக்கப்பட்ட வங்கியின் வங்கி கியாரண்டி வடிவிலோ, நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் டிவிஷன், கோவில்பட்டி, அவர்கள் கணக்கில் கட்டப்படவேண்டும்.

வேலை முடிக்க வேண்டிய காலம் : ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 5.10 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் டிவிஷன் 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி அவர்களிடமிருந்து 10-9-1971 மாலை 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கே. கோவிந்தமேனன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு.பொ.) மதுரை-2.

நாள் : 11-8-1971.

## ஒ ப் ப ந் த ப் பு ள் ளி

**தமிழ்நாடு மின்சார வாரியம்**

**செங்கற்பட்டு மின் பெருவட்டம், காஞ்சிபுரம்.**

### ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

கீழ்க்காணும் பொருள்கள் வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி ஒப்பந்தங்கள் அடியிற் கையொப்பமிட்டவரால் செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் ரயில்வே சாலையில் உள்ள அவரது அலுவலகத்தில் 7—9—1971 அன்று (முடிவுத் தேதி) பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். சாற்றுக்குறிப்பு 6—9—1971 வரை விற்கப்படும்.

| வரிசை எண். | சாற்றுக்குறிப்பு எண். | பொருட்களின் விபரம். |
|---|---|---|
| 1 | எஸ்.இ.சி./ஓ.டி. 1/71-72 | ஸ்டே செட். |
| 2 | எஸ்.இ.சி./ஓ.டி. 2/71-72 | ஆர்.சி.சி. கம்ப பேக் கிளாம்ப் சாதாரண வகை. |
| 3 | எஸ்.இ.சி./ஓ.டி. 3/71-72 | ஆர்.சி.சி. கம்ப ஸ்டே கிளாம்ப் சாதாரண வகை. |
| 4 | எஸ்.இ.சி./ஓ.டி. 4/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 65 ×16 மி.மீ. |
| 5 | எஸ்.இ.சி./ஓ.டி. 5/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 75 ×16 மி.மீ. |
| 6 | எஸ்.இ.சி./ஓ.டி. 6/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 90 ×16 மி.மீ. |
| 7 | எஸ்.இ.சி./ஓ.டி. 7/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 100 ×16 மி.மீ. |
| 8 | எஸ்.இ.சி./ஓ.டி. 8/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 115 ×16 மி.மீ. |
| 9 | எஸ்.இ.சி./ஓ.டி. 9/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 125 ×16 மி.மீ. |
| 10 | எஸ்.இ.சி./ஓ.டி. 10/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 115 ×12 மி.மீ. |
| 11 | எஸ்.இ.சி./ஓ.டி. 11/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 125 ×12 மி.மீ. |
| 12 | எஸ்.இ.சி./ஓ.டி. 12/71-72 | பி.ஜி. மெட்டல் 12 மி.மீ. —20 மி.மீ. |

ஒப்பந்தப் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) ஆகும். மேற்படி ஒப்பந்தச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் (Tender Specification Copies) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 வீதம் தலைமைக் கணக்கர் (செலவுப்பிரிவு), செங்கற்பட்டு மின் பெருவட்டம் (Chief Accountant/Expenditure, Chingleput Electricity System, Kanchipuram) இரயில்வே சாலை, காஞ்சிபுரம்-2 என்ற முகவரிக்குப் பண அஞ்சல் (Money Order) அல்லது டிமாண்ட் டிராப்ட் (Demand Draft) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. இத் தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும், தேவையான பிரதிக்குரிய சாற்றுக் குறிப்பு எண்ணையும் (Specification No:) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்களுக்குச் சேர்ப்பிக்கப்படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல.

உரிய தாள்களில் சேர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் குறித்த காலம் தவறி வருபவையும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஒப்பந்தங்கள் அதே நாளில் 7—9—1971 அன்று பிற்பகல் 2 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கிடையே ஆணையைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
**செங்கற்பட்டு மின் பெருவட்டம்,**
**காஞ்சிபுரம்.**

## ஒப்பந்தப் புள்ளி.

### தமிழ்நாடு மின்சார வாரியம்,

கே. 2 ஒப்பந்தம்.

[குறிப்பு எண் SCE. 407.]

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தங்கள் அதன் உறையின் மேல் "குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்த தாரரின் பெயரும்" எழுதப்பட்டு கீழ் கையொப்பமிட்டவரால் குறித்த முடிவு தேதி அன்று மாலை 3·30 மணி வரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலையே 4·00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப் படும்.

| குறிப்பு எண். | வேலையின் பெயர். | முன் வைப்புப் பணம். | ஒப்பந்தப் பிரதி விலே. | முடிவுத் தேதி. |
| --- | --- | --- | --- | --- |
| | | ரூ. | ரூ. | |
| SCE. 407 | எண்ணூர் அனல் மின் திட்டம்—கட்ட டங்களுக்கு மின்னல் இடிதாங்கிகள் பொருத்து தல். | 1,000 | 10 | 23—9—1971. |

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 10 செலுத்தி கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்..

3. வேலைக்கான முன்வைப்புத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு உண்டியல் (Demand Draft) மூலம் செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும், குறித்த தேதி, காலத்திற்குள் சமர்ப்பிக்கப் படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது ஒப்பந்தங்களையோ எவ்வித காரணம் காட்டாமல் நிராகரிக்கவும் அவ்வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவர்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுக் காணுமல் போனல் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந் தப் பிரதிகள் மாற்றத்தக்கவை அல்ல.

தொலைபேசி எண் : 59556 (5 லைன்ஸ்).

தந்தி : "ENTERMAL"

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

## ஏல விற்பனை

### மர ஏல விற்பனை அறிவிப்பு

கீழ்க்கண்ட தோராயமான அளவுற்ற மரங்கள் கீழ்க்கண்ட மரக் கிடங்குகளில் அவைகளுக்கு எதிரில் குறிக்கப்பட்ட தேதிகளில் நீலகிரி மாவட்ட வன அலுவலர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் நடத்தப்படும். ஏலம் காலை 9 மணிக்குத் தொடங்கப்படும்.

ஏலம் நடக்குமிடம்—

மத்திய மரக்கிடங்கு, கார்குடி சாலை ஓரக்கிடங்கு, தொரப் பள்ளி.

ஏலத் தேதி—
9—9—1971

| இனங்கள். | தோராயமான அளவு. |
| --- | --- |
| 1. ஈட்டி | 10 கன மீட்டர் |
| 2. தேக்கு | 140 ,, |
| 3. சிரிலியா | 100 ,, |
| 4. மத்தி | 175 ,, |
| 5. ஹொன்னே | 50 ,, |
| 6. வெண்தேக்கு | 75 ,, |
| | 550 ,, |

ஏலம் நடக்குமிடம்—
மத்திய மரக் கிடங்கு, சேரம்பாடி.

ஏலத் தேதி—
14—9—1971

| இனங்கள். | தோராயமான அளவு. |
| --- | --- |
| 1. ஈட்டி | 20 கன மீட்டர். |
| 2. அயினி | 230 ,, |
| 3. வெண்தேக்கு | 55 ,, |
| 4. பலவகை | 79 ,, |
| | 384 ,, |

ஏனைய பிற விவரங்கள் நீலகிரி மாவட்ட வன அலுவலகத்திலோ அல்லது முதுமலை, சேரம்பாடி வனச்சரக அலுவலகத்திலோ பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வனஅலுவலர்.

உதகமண்டலம்,
11—8—1971.

# வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்கு 23—9—1971 மாலை 5·00 மணி வரை மனுக்கள் வரவேற்கப் படுகின்றன :

1· நீலகிரி மாவட்ட சிறு அளவில் தேயிலை பயிரிடுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கத்நுக்குத் தமிழ் நாடு தொழில்கள் சபார்டினேட் சர்வீசில் டெக்னிகல் அசிஸ்டண்ட்—ஒரு நியமனம்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 400—15—475—20—575—25—650

வயது : 1—7—1971-ல் 45 வயதுக்குக் கீழ்.

தகுதிகள் : (1) பி.எஸ்ஸி. (வேளாண்மை) பட்டப்படிப்பு; (2) தேயிலை பயிர் செய்வதில் அனுபவம்.

தேயிலைத்தோட்டங்களுக்கு இரசாயன உரங்கள், எரு வகைகள் பயன் படுத்துவதிலும் தேயிலைத் தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக, சிறு அளவில் தேயிலை பயிரிடுவோரின் தேயிலைத்தோட்டங்களில் பல்வேறு பருவங்களில் பூச்சி, பூஞ்சாள மருந்துகள், கலவை முறைகள் தேர்விலும் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

2· தமிழ்நாடு மெடிகல் சபார்டினேட் சர்வீசில் ஸ்டடஸ்டிஷியன்—ஒரு நியமனம்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 350—15—500—20—600

வயது : 1—7—1971-ல் 30 வயதுக்குக் கீழ்.

தகுதி : ஸ்டடிஸ்டிக்கை முக்கியப் பாடமாகக் கொண்ட பட்டப் படிப்பு.

3: தமிழ் நாடு கல்வி சபார்டினேட் சர்வீஸ்களில் அரசினர் இஞ்சினியரிங் பாடங்களுக்கு (6 சிவில் இஞ்சினியரிங் 3 மெக்கானிகல் இஞ்சினியரிங் 2 எலெக்ட்ரிகல் இஞ்சினியரிங் 1 மெட்டலர்ஜி 4 எலெக்ட்ரானிக்ஸ் செய்திப் போக்குவரத்து இஞ்சினியரிங்) அசோசியேட் லெக்சரர்கள்–பதினைறு நியமனங்கள்·

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 475—25—650—30—800

வயது : 1—7—1971-ல் 27 வயதுக்குக் கீழ்.

தகுதி : (1) சம்பந்தப்பட்ட இஞ்சினியரிங் பிரிவுகளில் மாஸ்டர்ஸ் டிகிரி அல்லது முதல் வகுப்பு பாச்சிலர் டிகிரி ; அத்துடன் (2) பல்கலைக் கழகப் பட்டப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்யும் நிறுவனத்தில் இந்தப் பதவி சம்பந்தப்பட்ட இஞ்சினியரிங் பிரிவில் ஒரு ஆண்டுக்குக் குறையாமல் போதனை அனுபவம்.

4. அரசினர் பொறியியல் கல்லூரிகளில் தமிழ்நாடு கல்வி சபார்டினேட் சர்விசில் பொறியியல் அல்லாத பாடங்களில் அசோசியேட் லெக்சரர்கள்—15 நியமனங்கள் (கணக்கு 6, கெமிஸ்ட்ரி 4, ஜியாலஜி 2, ஆங்கிலம் 3).

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 475—25—650—30—800.

வயது : 1—7—1971-ல் 27 வயதுக்குக் கீழ்.

தகுதிகள் : (1) சம்பந்தப்பட்ட பாடத்தில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பு மாஸ்டர்ஸ் டிகிரி (தேர்வு மூலம் அல்லது ஆராய்ச்சி மூலம்) : (2) பல்கலைக் கழகப் பட்டப் படிப்புத் தேர்வுக்கு மாணவர்களைத் தயார்செய்யும் நிறுவனம் ஒன்றில் சம்பந்தப்பட்ட பாடத்தில் ஒரு ஆண்டுக்குக் குறையாமல் போதனை அனுபவம்.

ஷெடியூல் வகுப்பினர், ஷெடியூல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. அங்கவீனமுற்றவர்கள் விஷயத்தில் ஸ்டடஸ்டிஷியன், பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத பாடங்களில் அசோசியேட் லெக்சரர்களாக நியமனமாவதற்கு 10 ஆண்டுகள் வரை வயது மேல் வரம்பு தளர்த்தப் படும். தங்கக்கட்டுப்பாடு உத்தரவினல் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்களுடைய மகன்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் முன்னள் தேசிய மாணவர் படையில் 1—1—1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர், இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜன்ட் மேஜர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்னள் தேசிய மாணவர் படை காடெட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவைகளிலிருந்து, கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—7—1971-ல் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்களானலும், கிழக்கு வங்கத்திலிருந்து குடி பெயர்ந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை, பர்மா, ஆகிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உள்படத் தகுதிகள் தளர்த்தப்படும். மனுவடிவங்களையும் இதர விவரங்களையும் "செயலாளர், தமிழ் நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2" என்ற முகவரிக்கு, பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக்கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ள சுய விலாசமிட்ட 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி, நூல் அஞ்சல் என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப், பெற்றுக் கொள்ளலாம்.

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு அரசு

## பொதுப்பணித் துறை

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

ஆர்.ஸி. எண். 19091/71, டி-5. நாள்: 28-7-1971.

வேலையின் பெயர்—நாமக்கல் அரசினர் மாதர் கலைக் கல்லூரிக்குக் கூடுதல் தளம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, சேலம், தர்மபுரி சர்க்கிள், சேலம்-4 அவர்களால் 6-9-1971 பிற்பகல் 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப் படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| 1 ஒப்பந்த வடிவம் .. .. | மொத்தத் தொகை. |
| 2 கட்டுத் தொகைப்பணம் (செலான் வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெப்பாசிட்டு வகையிலோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப் டாகவோ மாநில அரசின் கடன் பத்திரங்களாகவோ—அல்லது தமிழ் நாடு மின் வாரியப் பத்திரங்களாகவோ ஏற்றுக் கொள்ளப்படும்.) | ரூ. 10,000 |
| 3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ) "P. W. Remittance - III Other remittance" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பில்டிங்க் டிவிஷன்ஸ், சேலம்-5, அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். | ரூ. 20. |
| 4 விற்பனைவரி [விற்பனைவரி XII Sales-tax (d)] பல்வகை என்ற தலைப்புக் கணக்கில் செலுத்தப் படல் வேண்டும். | ரூ. 0·60 |
| 5 வேலை முடிப்பதற்குரிய காலம் .. | 9 மாதங்கள் (ஒன்பது மாதங்கள்.) |
| மேற்பார்வைப் பொறியாளர் சேலம்—தர்மபுரி சர்க்கிள், சேலம் 4 அவர்தம் அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்கள் கிடைக்கக் கூடிய தேதி. | 16-8-1971 முதல் 3-9-1971 வரை. |

மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின் வாரியப் பத்திரங்களும் மதிப்பில் 25 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும்.

கால் ரசீது டெப்பாசிட்டுகளும், பிக்சட் டெபாசிட் ரசீதுகளும் தொகை வசூல் நிபந்தனைக்குட்பட்டுக் கட்டுத் தொகைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆர். ராதாகிருஷ்ணன்
28—7—1971

## ஏலம்

### தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெண்தேக்கு மற்றும் பல ஜாதிகள்

இடம் : அரசாங்க தடி மண்டி, பேட்டை.

தேதியும், நேரமும் : 6—9—1971 முற்பகல் 9-00.

அளவு : ஏறத்தாழ 300 கன மீட்டர்.

மேற்கொண்டு விபரங்களுக்குப் பேட்டை மண்டிச்சிரஸ அலுவலருக்கு எழுதவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென் பிரிவு.

## இடமாற்ற அறிவிப்பு

தமிழ் நாடு அரசு சிறு சேமிப்புத் துறை, சென்னை-9, கோட்டையிலிருந்து கீழ்க்கண்ட இடத்திற்கு 26—7—1971 முதல் மாற்றப்பட்டிருக்கிறது.

34, அண்ணாசாலை (மவுண்ட் ரோடு)
(கலைக் கல்லூரி எதிர்ப்புறம்)
சென்னை-2.

புதிய தொலைபேசி எண் : 8 1 2 2 2 3

ரா. குழந்தைவேலு, ஐ. ஏ. எஸ்.
இயக்குநர்.

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

எண் 11268—எஸ்டி 2/71.

நாள் 26—7—1971.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாகவும் அதற்காகவும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் — வடிகால் வாரியம், கோயம்புத்தூரில் 25-1, 3-வது தெரு, டாட்டாபாத், கோயம்புத்தூர்-12-ல் உள்ள அவரது அலுவலகத்தில் கீழ்க் கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் 25—9—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாளில் மாலை 4 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் முன்னிலையிலாவது அல்லது அவரது அதிகாரம்பெற்ற அதிகாரி முன்னிலையிலாவது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. வேலையின் பெயர் :

1. பள்ளிப்பாளையம் நீர் வழங்கு திட்டம்—முதல் கட்டம்—மேல் நீர் மட்டம் 174·00 மீட்டர்கள் : அடி நீர் மட்டம் 171·00 மீட்டர்கள் உள்ள 3·75 லட்சம் லிட்டர் தேக்கும் திறனுள்ள உயர்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர் 1-வது பிராந்தியத்திற்காக.

2. பள்ளிப்பாளையம் நீர் வழங்கு திட்டம் முதற் கட்டம்—மேல் நீர்மட்டம் 169·00 மீட்டர், அடி நீர்மட்டம் 165.50 மீட்டர் உள்ள 3 லட்சம் லிட்டர் தேக்கும் திறனுள்ள உயர்மட்ட ஆர்.சி.சி.ரிசர்வாயர் 2-வது பிராந்தியத்திற்காக.

2. ஒப்பந்த முறை : மொத்தத் தொகை.

3. கட்டுத் தொகை : 1-வது இனத்துக்கு ரூ. 2,825 .00 (ரூபாய் இரண்டாயிரத்து எண்ணூற்றிருபத்தைந்து மட்டும்.) 2-வது இனத்துக்கு ரூ.2,250.00 (ரூபாய் இரண்டாயிரத்து இருநூற்றைம்பது மட்டும்).

4. வேலை முடிக்க வேண்டிய காலம் : ஆறு மாதம் (ஒவ்வொரு வேலைக்கும்).

5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை. ஒவ்வொரு வேலைக்கும்—

ரூ. 10.35 (விற்பனைவரியுள்பட.)

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் விற்பனைக்குரிய காலம் :

16—8—1971 முதல்

23—9—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் பொது சுகாதார பொறியியல் பணி வட்டம், 18, சாமியப்பக் கவுண்டர் தெரு, திருநகர் குடியிருப்பு, ஈரோடு-3 அவர்களின் அலுவலகத்தில் உரிய தொகையை ரொக்கமாகவாவது மணியார்டர் மூலமாகவாவது செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

### கட்டுத் தொகை

தேசிய உடைமையாக்கப்பட்ட பாங்குகளின், டிமாண்ட் டிராப்ட் மூலமோ அல்லது கருவூலங்களின் சலான் மூலமோ, நிருவாகப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் பணி வட்டம், ஈரோடு அவர்கள் பெயரால் வாங்கியனுப்ப வேண்டும். கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

பொது சுகாதாரப் பொறியியல் பணி வட்ட மேற்பார்வைப் பொறியாளருக்கு எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எந்தக் காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

எஸ். எம். சாகுல் ஹமீது
மேற்பார்வைப் பொறியாளர்,
கோயமுத்தூர்
26—7—1971

## ஒப்பந்தப் புள்ளி

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

சேலம் மாவட்டத்து அரசினர் மருத்துவ நிலையங்களுக்கு 1-9-1971 முதல் 31-12-1971 வரைக்கும் வேண்டிய மருந்து வகைத் தேவைக்காக முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குரிய இறுதி நாள் 6-9-1971 மாலை 5 மணியாகும். மருந்துகளை சப்ளை செய்ய விரும்புகிறவர்கள் விற்பனை வரி உட்பட ரூ. 5·15 மெடிகல் "XXIII மெடிகல் I இயக்குநர், சுகாதாரப் பணிகள் குடும்ப நலத் திட்டங்கள் 'ஜே' மிசலேனியஸ்" என்ற தலைப்பில் தனிச் செலானில் செலுத்தி ஒரு வேண்டுகோளுடன் சூப்பிரண்டெண்டெண்ட்டு, அரசினர் தலைமை மருத்துவ நிலையம், சேலம் அவர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும், நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ளலாம். செலானில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 5·00 தனியாகவும், விற்பனை வரி 15 காசுகள் தனியாகவும் காட்டப்படல் வேண்டும். இது பற்றி ஏதேனும் மேலும் செய்திகளுக்கு சூப்பிரண்டெண்டெண்ட்டு, அரசினர் தலைமை மருத்துவ நிலையம் சேலம் அவர்களுடன் தொடர்பு கொள்க.

ஒப்பந்தப் புள்ளிகள் கொடுப்போர் ஒப்பந்தப் புள்ளிகள் கொடுத்த பின்பு அது பற்றி எந்தவிதத் தொடர்பும் கொள்ளல் ஆகாது.

வி. செல்வராஜ்,

மாவட்ட மருத்துவ அலுவலர்,
சேலம், மற்றும் மேற்பார்வையாளர் அரசினர் தலைமை மருத்துவ நிலையம்,
சேலம்.

தமிழ்நாடு ஆளுநர் ஆணைப்படியும் சார்பிலும்.

## தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

### ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், பார்வதி கக்கன் காலனியில் (புளியந்தோப்பு) பல அடுக்குக்கட்டடங்கள் (தரை மட்டத்திற்குமேல்) கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 17—9—1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரரின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. ரூ. | கட்டுத் தொகை. L.S. ரூ. | தஸ்தாவேஜுகளின் விலை. |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் A1, A2 மற்றும் 12 குடியிருப்புகள் கொண்ட கட்டடம் C2. | 2,00,000 | 3,000 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு வகைக்கும்.) |
| 2 | 2 | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் A3, A4. | 1,60,000 | 2,400 | |
| 3 | 3 | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் A5, A6. | 1,60,000 | 2,400 | |
| 4 | 4 | 18 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் B1, B2, B3. | 1,80,000 | 2,700 | |
| 5 | 5 | 18 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் B4, B5, B6. | 1,80,000 | 2,700 | |
| 6 | 6 | 18 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் B7, B8, மற்றும் 12 குடியிருப்புகள் கொண்ட கட்டடம் C1. | 1,60,000 | 2,400 | |
| 7 | 7 | 6 மீட்டர் விட்டம் கொண்ட கிணறு ஒன்று கட்டி இறக்குதல். | 25,000 | 375 | |

வரைபடங்களையும், ஒப்பந்த தஸ்தாவேஜுகளையும், கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 6—9—71 முதல் 16—9—71 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 17—9—71 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்த தாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும், காரணமின்றி நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ, நிர்வாகப் பொறியாளர் அவர்களுக்கு உரிமை உண்டு.

தாண்டவராயன் சத்திரம்
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3.



# ஒப்பந்தப்புள்ளி

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை

தமிழ்நாடு.

### ஒப்பந்த அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஷெடியூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, திருச்சிராப்பள்ளி) அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 8—9—1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்றுபிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|
| 1 | கோடை மலைச்சாலையில் கி.மீ. 110 (மைல் 0/15) உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 6,300 | கோட்டப் பொறியாளர் (நெகிப), திண்டுக்கல். |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திண்டுக்கல் விலாசத்திலிருந்து 25—8—1971 முதல் 7—9—1971 வரை வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

வேறு வடிவங்களில் உள்ள ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை டெண்டருடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு கட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அமைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்க் காரண்டி சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டும். இவையில்லாமல் வரும் ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்
மேற்பார்வைப் பொறியாளர் (நெகிப,)
திருச்சிராப்பள்ளி-1.

# பயிற்சி

## தொழில் வணிகத் துறை

சென்னை

பயிற்சி விளம்பரம்.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பொது நோக்குப் பொறியியல் தொழிற்சாலையில் 18 மாத காலப் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் (Denotified Tribes) சேர்ந்தவர்களிடமிருந்தும் அட்டவணையில் கண்ட வகுப்பைச் (Sheduled castes) சேர்ந்தவர்களிடமிருந்தும் வரவேற்கப்படுகின்றன. அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 24 மாணவர்களும் அட்டவணையில் கண்ட வகுப்பைச் சேர்ந்த 6 மாணவர்களும் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வேண்டிய மாணவர்கள் ஷை வகுப்பிலிருந்து முன் வரவில்லையென்றால் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆதலின் இப்பயிற்சியில் சேர விரும்பும் மேற்கண்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பங்களை 10—9—1971-க்குள்ளாகக் கண்காணிப்பாளர், பொது நோக்குப் பொறியியல் தொழிற்சாலை, முதுகுளத்தூர் என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பதாரர்கள் குறைந்த அளவு எட்டாவது வகுப்பு அல்லது மூன்றும் படிவம் படித்திருப்பவர்களாகவும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 30 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 (ரூபாய் நாற்பத்தி ஐந்து) வீதம் உதவித் தொகை அளிக்கப்படும். நேரடித் தேர்வுக்கு வரும் மாணவர்களுக்குச் செலவுத் தொகை எதுவும் கொடுக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் சாதாரண வெள்ளைக் காகிதத்தில் விண்ணப்பதாரரின் பெயர், வயது, தகப்பனர் பெயர், வகுப்பு, கல்வித் தகுதி, சொந்த ஊர், தற்போதைய விலாசம் முதலியன தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பயிற்சிக் காலம் முழுவதும் தொடர்ந்து பயிற்சியில் இருப்பேன் என்று பிணைமொழி (உறுதி) எழுதித் தரவேண்டும்.

இயக்குநர்.
தொழில் வணிகத் துறை
சென்னை-5.

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை தமிழ்நாடு.

### ஒப்பந்த அறிவிப்பு.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித் துறை) திருச்சிராப்பள்ளி, அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1, விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 8—9—1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | கட்டுத் தொகை டெபாசிட். | ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| 1 முத்துப்பேட்டை-மீமிசல் சாலையில் மைல் 41/7 (கி.மீ. 67/0)ல் ஒரு பாலம் கட்டுதல். | ரூ. 5,950 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) தஞ்சாவூர் |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 1—9—1971 முதல் 7—9—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர, 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். —

மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பாங்க் காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பேங்கு ஒப்புதலைப் பெற்று, ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.),
திருச்சிராப்பள்ளி-1.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

வரைக் குறிப்பு எண் SEG.B. 37.

தமிழ்நாடு மின்சார வாரியத்துக்காகவும், அதன் சார்பிலும், சென்னை—12 பேசின் பிரிட்ஜ் மின்சார நிலையத்தில் டர்பைன்கள், பாய்லர்கள் ஆகியவைகளுக்காக மின்சாரக் கருவிகள், துணை உறுப்புகள் வாங்க, வரைக்குறிப்பு எண், கெடுநாள், ஒப்பந்தப் புள்ளிதாரரின் பெயர் ஆகியவைகளை உறையில் குறிப்பிட்டு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 15—9—1971, பிற்பகல் 1·00 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாகச் செலுத்தியோ அல்லது துணைத் தலைமை அக்கவுண்டன்ட் (உற்பத்தி), தமிழ்நாடு மின்சார வாரியம், பேசின்பிரிட்ஜ் மின்சார நிலையம், சென்னை—12 அவர்களுக்கு வரைக் குறிப்பைத் தெளிவாகத் தெரிவித்து மணி ஆர்டர் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் சாதாரண தபாலில் அஞ்சல் சான்றுடன் மட்டுமே அனுப்பப்படும். போக்குவரத்தில் இப்பத்திரங்கள் காணாமல் போனாலும், கிடைக்காவிட்டாலும், தாமதமானாலும் அதற்கு வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மாற்றப்படுவதற்கு உரியவை அல்ல. எவ்விதக் காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்கக் கீழே கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

ஒப்பந்தப் புள்ளிதாரர், கட்டுத்தொகையாக ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்) ரொக்கமாக, கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி, அந்த ரசீதை, ஒப்பந்தப் புள்ளியுடன் வைத்து அனுப்ப வேண்டும். துறைக்குரிய வடிவத்திலும், கட்டுத் தொகை, செலுத்தியதற்கு ரசீதும் இல்லாத ஒப்பந்தப் பத்திரங்களும், உரிய நாள் உரிய நேரத்திற்குள் வராதவைகளும் நிராகரிக்கப்படும். 15—9—1971 மாலை 4 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
M.E.S.
பேசின் பிரிட்ஜ் மின்சக்தி நிலையம்,
சென்னை—12.

## ஒப்பந்தப் புள்ளி

### பால் பண்ணை வளர்ச்சித்துறை

தமிழ்நாடு ஆளுநர்க்காகவும் அவர் சார்பிலும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்காணும் பொருள்களின் விற்பனைக்கு வரவேற்கப்படுகின்றன.

(1) அகன்ற வாயுடைய டிரான்ஸ்போர்ட் பிளாஸ்குகள்.

(2) பிளாஸ்குகளுக்குரிய டிரான்ஸ்போர்ட் பெட்டிகள்.

(3) செயற்கைக் கருத்தரிப்புகள் (Kit) (கிற்றுகள்),

ஒப்பந்தப் புள்ளிகளும் விளக்கமான ஒப்பந்த நிபந்தனைகளும், ஆணையர், பால் உற்பத்தி கால்நடை வளர்ச்சி அலுவலகம், சென்னை-51 என்ற இடத்தில் அலுவலக நாட்களில் ரூபாய் 10-ம் 3½ சதவீதம் வணிக வரியும் 5 சதவீதம் சர்சார்ஜு வணிக வரியும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் 15—9—1971 முற்பகல் 11 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்றையத் தினமே முற்பகல் 11–15 மணிக்கு வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர் அல்லது அவர்களது அத்தாட்சி பெற்ற ஏஜெண்டுகள் முன்னிலையில் திறக்கப்படும்.

எம். கே. கோமேதகவேலு,
ஆணையர்.

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு-

### தமிழ்நாடு மின்சாரவாரியம்,

குறிப்பு எண். சி. 1102.

எண்ணூர் அனல் மின் திட்டம்—இரண்டாம் நிலை ஐந்தாவது கொதிகலனுக்கான புகைப் போக்கி வரை வடிவம் கணக்கிடலும், அமைத்தலும் (Design and Construction of an R.C.C. Chimney).

மேலே கூறிய வேலைக்குரிய ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும் கடைசி நாள் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ஆம் தேதி வியாழக்கிழமை (16—9—71) நண்பகல் 12-00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்பார்வைப் பொறியாளர்
தொழில் நுட்பம்
(பொதுவியல்).
157, அண்ணா சாலை,
சென்னை-2.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### பொதுப் பணித் துறை

ஒப்பந்த அறிவிப்பு விளம்பரம்.

18 (பதினெட்டு) லிட்டர் கொள்ளளவுள்ள உலோகப் பாத்திரங்கள் (Metal containers) வழங்குவது சம்பந்தமாக, முத்திரையிட்ட ஒப்பந்த அறிவிப்புகள் நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, மண்தன்மை ஆராய்ச்சிக் கோட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் 13—9—71 பிற்பகல் மூன்று மணிக்குள் அல்லது அதற்கு முன்போ ஏற்கப்படும். ஒப்ப அறிவிப்புச் செய்ய விரும்புவோர்கள் எழுத்து மூலமாகக் கேட்டுக் கொண்டால், சாமான்கள் வழங்க வேண்டிய அளவு, நிலை பற்றிய குறிப்புகள் கொடுக்கப்படும். P. W. III other Remittances, Executive Engineer, P. W. D. Soil Mechanics and Research Division, Chepauk, Madras-5. என்ற கணக்குத் தலைப்பில் ஒப்பந்த அறிவிப்பு பத்திரத்துக்கான கட்டணம் ரூபாய் ஒன்றும், XII Sales Tax under State Sales Tax Act. என்ற கணக்கின் கீழ் விற்பனை வரி பைசா மூன்றும் செலுத்தியதற்கான வங்கி கருவூலம் சலான் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும்.

ஒப்பந்த அறிவிப்புப் பத்திரங்களின் தேவைக்கான விண்ணப்பங்கள் 10—9—1971 பிற்பகலுக்குப் பிறகு ஏற்கப்படமாட்டா.

வெ. வெங்கடநரசிம்மன்,
நிர்வாகப் பொறியாளர், மண்தன்மை ஆராய்ச்சிக் கோட்டம், சேப்பாக்கம்,
சென்னை-5.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### ஸ்டேன்லி மருத்துவ மனை சென்னை-

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

1—10—1971 முதல் 31—3—1972 வரையிலான 6 மாத காலத்திற்கு மருந்துகள், டிரஸ்ஸிங்குகள், கருவிகள் மற்றும் சாதனங்கள் ஆகியவைகளை வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட படிவங்களில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் அவர் ஆணைப்படியும் அவர் உத்தரவுப்படியும், டீன், அரசினர் ஸ்டேன்லி மருத்துவ மனை, சென்னை அவர்களால் 10—9—1971 பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. குறிப்பிட்ட படிவங்கள் வேண்டுவோர் அதற்குரிய கட்டணம் ரூ. 2-ஐ (ரூபாய் இரண்டு மட்டும்) "XXIII Medical K. Miscellaneous Receipts" என்ற கணக்குத் தலைப்பிலும் மற்றும் விற்பனை வரி ரூ. 0·07-ஐ (ஏழு பைசா மட்டும்) "XII Sales Tax Receipts General Sales Ta" என்ற கணக்குத் தலைப்பிலும் செலுத்திக் கோரிக்கை மனுவுடன் மேற்சொன்னபடி செலுத்தி, பெற்ற இரண்டு செலான்களையும் இணைத்து அரசினர் ஸ்டேன்லி மருத்துவ மனையின் மெடிகல் ஸ்டோர்ஸ், சென்னை-1 அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எம். சி. பிரபு,
டீன் (கண்காணிப்பாளர்)
அரசினர் ஸ்டேன்லி மருத்துவ மனை, சென்னை-1.

## ஏல விற்பனை

பெட்ரோலினால் ஓட்டப்படும் வில்லீஸ் ஸ்டேஷன் வாகன் 1956 மாடல் போர் வீல் டிரைவ்—104½ வீல் பேஸ் பதிவு எண்: எம். டி. எச். 2018 உடையதாய் இவ்விலாகாவைச் சேர்ந்த வண்டி, மாவட்டச் சுகாதார அலுவலர், ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை அலுவலகத்தில் இருக்குமிடத்தில் இருக்கும் நிலையில் 8—9—1971 முற்பகல் 10–30 மணிக்குப் பொது ஏலம் விடப்படும்.

ஏலம் கேட்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் வாகனைப் பார்வையிடலாம். ஏலம் பற்றிய நிபந்தனைகளை நேரிலோ அல்லது தனது முகவரியிட்ட கவரோடு வேண்டுகோள் ஒன்று எழுதி அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

இயக்குநர்,
சுகாதாரப் பணிகள்,
குடும்பநலத் திட்டம்,
சென்னை.

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு மின்சார வாரியம்

## எண்ணூர் அனல் மின் திட்டம்

### ஒப்பந்தப் புள்ளி விளம்பரம்.

குறிப்பு எண் AEP 68 to 76

1. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அதன் உறையில் '' தமிழ் நாடு மின்சார வாரியம்-எண்ணூர் அனல் மின் திட்டம் குறிப்பு எண் AEP............ Supply of............'' எனவும் மற்றும் ஒப்பந்த புள்ளி தாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் 17—9—1971 மாலை 3-30 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்

2. தேவையான பொருள்கள் அவற்றின் அளவு குறிப்பு எண், விவரம், முன் பணம் முதலியன கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் எண். | விவரம் | எண் விவரம் | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை | கட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. |
| 1 | M. S. Black tubular scaffolding pipes 1·29"/32mm O.D.×8 g Plain ends | AEP 68 | 5 | 1000 |
| 2 | 50mm Standard 90° & Swivel clips for scaffolding pipes | AEP 69 | 5 | 600 |
| 3 | G. I. Barbed wire | AEP 70 | 5 | 500 |
| 4 | Air Filter for P & H 955 A Crane | AEP 71 | 5 | 100 |
| 5 | Frock Chain for 'Unicop 1001' mobile Crane | AEP 72 | 5 | 300 |
| 6 | G. I. Hexagonal Wire netting ⅜"×24 G. & G,I. Binding Wire 24 SWG | AEP 73 | 5 | 500 |
| 7 | Chain Link Fencing of size 1371·6 m x 1.8288 m | AEP 74 | 5 | 1300 |
| 8 | Self tapping screw GKW make Pan Head ⅜" long No. 8. | AEP 75 | 5 | 500 |
| 9 | Steel Locker Cup boards (Single and Double units) | AEP 76 | 5 | 700 |

3. துறையினரைச் சார்ந்த வடிவங்களில்லாத ஒப்பந்தப் புள்ளிகளும் இறுதித் தேதிக்கும் நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டவைகளும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும் பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

4. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணாமல் போகும் ஒப்பந்தப்புள்ளிகள் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப்புள்ளிகள் பத்திரங்களும் மாற்றத் தக்கவையல்ல.

தொலை பேசி எண் : 59556.
தந்தி : ENTERMAL

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

## ஏலம்

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை

### ஏல விளம்பரம்

கண்டனம் செய்யப்பட்ட தீயணைப்பு இழுக்கும் மோட்டார் வண்டி ஸ்டுடிபேக்கர், 1957-ம் வருட மாடல், எம்.எஸ். ஒய். 8853, கோயம்புத்தூர் ஸ்டேட் பாங்க் சாலையிலுள்ள கோயம்புத்தூர் தீயணைப்புத் துறை காம்பவுண்டில், 1971-ம் வருடம் செப்டம்பர் மாதம் 27-ம் தேதி திங்கட்கிழமை, காலை 11·00 மணிக்கு, பகிரங்கமாக ஏலம் விடப்படும். மேற்கண்ட ஊர்தியை கோயம்புத்தூர் தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம். ஏல நிபந்தனைகள் கீழே கையொப்பப்பமிட்டவருடைய அலுவலகத்தில் பெறலாம்.

ஏ. கே. இராமனுதன்,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
கோயம்புத்தூர் கோட்டம்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

### ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு.

குறிப்பு எண்: சி. 1103

எண்ணூர் அனல் மின் திட்டம் —12 வகை நிலையான 3 மாடி வீடு ஒரு எண்ணம் —மனல்.தேரி இடத்தில் கட்டுதல்.

மேலே குறிப்பிட்டுள்ள வேலையின் ஒப்பந்த குறிப்பு எண் சி. 1103 பெறுவதற்கான நாள் 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதிபுதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்பார்வைப் பொறியாளர், தொழில் நுட்பம். (பொதுவியல்).

157, அண்ணா சாலை,
சென்னை-2.



# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

## ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காக வும் அதன் சார்பிலும், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை போன்ற அரசுத் துறைகளில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, கீழ்க்கண்ட பணிகளுக்காக, தனியாக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மதுரை வட்ட மக்கள் நல்வாழ்வுத் துறை மேற்பார்வைப் பொறியாளரால், 13, சர் பி. டி. ராஜன் சாலை, மதுரை, என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் 20—9—1971 பிற்பகல் 3 மணிவரை பெறப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்தப் பாரம். | விலை | கட்டுத்தொகை |
|---|---|---|---|---|
| | | | ரூ.பை. | |
| 1 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களை வினியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி I. | K2 | 5·18 | ரூ. 960 (ரூபாய் தொள்ளாயிரத்து அறுபது மட்டும்). |
| 2 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களை வினியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி II. | K2 | 5·18 | ரூ. 1,140 (ரூபாய் ஆயிரத்து நூற்று நாற்பது மட்டும்). |
| 3 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களை வினியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி III. | K2 | 5318 | ரூ. 1,250 (ரூபாய் ஆயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்). |
| 4 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களை வினியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி IV. | K2 | 5·18 | ரூ. 1,180 (ரூபாய் ஆயிரத்து நூற்றி எண்பது மட்டும்). |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் பிரிவு, 25, வக்கீல் தெரு, கோயில்பட்டி அலுவலகத்திலிருந்து 18—9—1971 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின் உறைமீது வேலையின் பெயர் குறிப்பிடப் படவேண்டும்.

20-9-1971 மாலை 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளரால் (P.H.E.) அல்லது அவரால் நியமிக்கப்படும் அலுவலரால் அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

முடிவுத் தேதிக்குப் பின் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்படமாட்டாது.

கே. கோவிந்த மேனன்,
மேற்பார்வைப் பொறியாளர் (P.H.E.)
மதுரை-2.

தேதி : 18—8—1971.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு
### நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை
### அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்தரவுப் படியும், கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் செப்டம்பர் திங்கள் 15-ம் நாள் புதன்கிழமை மாலை 3-00 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம், வெங்கடரமணா சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3-15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | கோட்டம். | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| 1 சேலம்-திருப்பத்தூர் சாலையில் கல் 29/1 (கி. மீ. 46·6) உள்ள குறுகிய மற்றும் மோசமான பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல். .. | கிருஷ்ணகிரி. | ரூ. 2,640 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளரிடமிருந்து மேற்படி வேலைக்கு ரூ. இருபதும் உடன் விற்பனை வரியும் செலுத்தி, 1–9–1971 முதல் 14–9–1971 வரை பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகையை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்க கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமேயானால், மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும். தவிர, ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

ரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2,
18–8–1971.

பா. சேக் உமர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ.கி.ப.), கோவை-2.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

எண்ணூர் அனல் மின் திட்டம்.

ஒப்பந்த விளம்பரம்.

குறிப்பு எண் SE/ETS 2/71–72

(1) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் ''தமிழ்நாடு மின்சார வாரியம்—எண்ணூர் அனல்மின்திட்டம்—உபயோகப்படுத்தப்பட்ட பழுதான சாமான்களை வாங்குவதற்கான ஒப்பந்தக் குறிப்பு எண் SE/ETS 2/71–72" எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் 7–9–1971 மாலை 3–30 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

(2) விற்பனைக்குள்ள பொருள்கள் (பழுதானவை—உபயோகப்படுத்தப்பட்டவை)

ஏர்கம்ப்ரசர், காங்கிரீட் மிக்சர், பம்பு செட்டுகள் மோட்டாருடன் இணைக்கப்பட்டது அல்லது இணைக்கப்படாதது, வேகன் டிரில், டீசல் எஞ்சின்கள், டிரெய்லர்கள், ஓர்க்ஷாப் எந்திரங்கள் பார்கோடிப்பர் முதலியன.

(3) ஒப்பந்தத்தின் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 5·00 (ரூபாய் ஐந்து மட்டும்) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தொகை யாதொரு காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

(4) இந்த வேலைக்கான முன் பணம் ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்) ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்த வேண்டும்.

(5) மின்சார வாரியத்தைச் சேர்ந்த நமூனக்களில் இல்லாத ஒப்பந்தங்களும் இறுதித் தேதிக்கும் நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது, தள்ளுபடி செய்வதற்கும் ஒப்பந்தங்களிடையே பிரித்துக் கொடுக்கவும் கீழ் கையொப்பமிட்டவருக்கு உரிமையுண்டு.

(6) அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணுமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கும் தாமதமாக வந்து சேரும் ஒப்பந்தப் பிரதிகளுக்கும் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தக்கவை அல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்**

எண்ணூர் அனல்மின்திட்டம்.
எண்ணூர், சென்னை—57.

தொலைபேசி எண் : 59389
தந்தி : ENTERMAL

H61

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 7–10–1971 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன :—

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு சபார்டினேட் சர்வீசில் சென்னையிலுள்ள விலங்கு மருத்துவக் கல்லூரிக்கு பயாலஜி டெமான்ஸ்ட்ரேட்டர்—ஒரு நியமனம்: கெமிஸ்ட்ரி டெமான்ஸ்ட்ரேட்டர்கள் மூன்று நியமனங்கள். ; பிசிக்ஸ் டெமான்ஸ்ட்ரேட்டர்கள்—மூன்று நியமனங்கள்.

சம்பளம் :—மாதம் ஒன்றுக்கு ரூ. 325—15—550.

வயது : 1—7—1971–ல் 27 வயதுக்குக் கீழ்.

தகுதி : (1) டெமான்ஸ்ட்ரேட்டர் (பயாலஜி), ஜுவாலஜியைப் பிரதான பாடமாகவும் பாட்டனியைத் துணைப் பாடமாகவும் கொண்டு, பல்கலைக் கழக மானிய கமிஷன் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றின் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி.எஸ்ஸி. டிகிரி.

(2) டெமான்ஸ்ட்ரேட்டர் (கெமிஸ்ட்ரி), கெமிஸ்ட்ரியை முக்கியப்பாடமாகவும் பிசிக்ஸைத் துணைப்பாடமாகவும் கொண்டு, பல்கலைக் கழக மானிய கமிஷன் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி.எஸ்ஸி. டிகிரி.

(3) டெமான்ஸ்ட்ரேட்டர் (பிசிக்ஸ்) பிசிக்ஸை முக்கியப் பாடமாகவும் கெமிஸ்ட்ரி, கணிதம் ஆகியவைகளைத் துணைப் பாடங்களாகவும் கொண்டு பல்கலைக் கழக மானிய கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றின் முதல்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி.எஸ்ஸி. டிகிரி.

ஷெடியூல் வகுப்பினர் ஷெடியூல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்களுடைய புதல்வர்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் தேசீய மாணவர் படையில் 1–1–1963ல் அல்லது அதற்குப் பின்னர் முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசீய மாணவர் படை காடெட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவைகளிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1–7–1971–ல் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்களானாலும் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 1–1–1964-ல் அல்லது அதற்குப்பின்னர் குடிபெயர்ந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை பர்மா, ஆகியவைகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உள்பட தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும் இதர விவரங்களையும்'' செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்கழகம், சென்னை-2'' என்ற முகவரிக்கு, பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. உள்ள சுய விலாசமிட்ட 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி நூல் அஞ்சல் என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு
### பொதுப் பணித் துறை

சென்னை—செங்கல்பட்டு வட்டம்

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு.

எண். D3/19006/71-4
தேதி 19—8—71

வேலையின் பெயர் : சென்னை, கீழ்ப்பாக்கம் அரசினர் மனநோய் மருத்துவமனையின் செவிலியர்களுக்கு (Nursing staff) குடியிருப்புகள் கட்டுதல்.

தமிழ்நாட்டு அரசுக்காகவும் அதன் சார்பிலும், பொதுப் பணித் துறை மற்றும் அரசின் பிறதுறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற் குறிப்பிடப்பட்ட பணிக்காக சென்னை—செங்கற்பட்டு வட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 13—9—1971 மாலை 3 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 3·15 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் சென்னை-செங்கற்பட்டு மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

1 ஒப்பந்த முறை— முழுத் தொகை.
2 கட்டுத் தொகை—ரூ. 4,700.
3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைப்படத்துடன்—ரூ. 20+ 3½ சத விகிதம் விற்பனை வரி.
4 முடிக்க வேண்டிய காலம்—4 மாதங்கள்.
5 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் சென்னை—செங்கற்பட்டு வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.—6—9—71 முதல் 10—9—1971 வரை.
6 ஒப்பந்தப் புள்ளி நாள்—13—9—1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது) கஜானு அல்லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் '' PWD Remittances'' என்ற தலைப்பின் கீழ் '' நிர்வாகப்பொறியாளர், கட்டடப் பிரிவு II, சேப்பாக்கம், சென்னை-5 '' என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியும் அதே செலானில் கஜானு அல்லது ரிசர்வ் பாங்கில் '' XII Sales Tax (b) recipts under State Sales Tax Act—General Sales Tax ''

என்ற தலைப்பின் கீழ் செலுத்தப் படவேண்டும். செலான் கொண்டுவந்தால்தான் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

பிற விவரங்கள் சென்னை-செங்கற்பட்டு வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும்.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்.
தேதி : 18—8—71

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, தமிழ்நாடு.

### ஒப்பந்த அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை கோட்டப்பொறியாளர் (நெ.கி.ப.து.) புதுக்கோட்டை அவர்கள் தெற்கு 4-ம் வீதி விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 8—9—1971 (புதன் கிழமை) அன்று பிற்பகல் 3·00 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3·05 மணிக்குத் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | டெண்டர் ஷெட்யூல் கிடைக்கும் விலாசம். |
|---|---|
| 1 மதராஸ்—திருச்சி திண்டுக்கல் சாலை கி. மீ. 363·4 (மைல் 222/4)-ல் உள்ள சிறு பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | கோட்டப் பொறியாளர் (நெ. கி. ப. து.), புதுக்கோட்டை. |

கட்டுத் தொகை டெபாசிட்—ரூ. 2,950.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூபாய் 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெ. கி. ப. து.), புதுக்கோட்டை விலாசத்திலிருந்து 2—9—1971 to 7—9—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணயப் பத்திரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியனவற்றைப் பெறலாம். இத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்று வடிவங்கள் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை புதுக்கோட்டை கோட்டப் பொறியாளரின் (நெ.கி.ப.து.) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசீய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் கியாரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு இரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு காரண்டி சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டும். இவை யில்லாமல் வரும் ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான இரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

எஸ். தனபாலன்,
கோட்டப் பொறியாளர் (நெ.), புதுக்கோட்டை.



## தமிழ்நாடு மின்வாரியம்

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு
வரைக் குறிப்பு எண் SEG-BB 39.

தமிழ்நாடு மின் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், அதன் ஆணையின்படி, சென்னை-12, பேசின்பிரிட்ஜ் மின்சக்தி நிலையத்தின் ' B ' நிலையத்திலுள்ள B & W பாயிலர்களுக்கு ' ரிஃப்பிராக்டரிஸ் ' சப்ளை செய்ய, முழு தொழில் நுணுக்க விவரங்கள், மற்றும் பிற தகவல்களும் அடங்கிய, வரைக்குறிப்பு எண், முடிவு தேதி, ஒப்பந்த புள்ளிதாரரது பெயர் ஆகியவை உறையின் மீது குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்கள்) 3 நகல்களுடன் 25-9-71 மாலை 1 மணிக்குள் வந்து சேர நான் வரவேற்கிறேன்.

வரைக் குறிப்பு எண்ணைத் தெளிவாகக் குறிப்பிட்டு ரூ.20ஐ (ரூபாய் இருபது மட்டும்) (திருப்பித் தரப்படமாட்டாது) ரொக்கமாக அடியில் கையெழுத்திட்டவர் அலுவலகத்தில் காட்டியோ அல்லது தலைமை அக்கவுண்டன்ட், உற்பத்தி, தமிழ்நாடு மின் வாரியம், பேசின்பிரிட்ஜ் மின்சக்தி நிலையம், சென்னை-12 என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பியோ ஒப்பந்தப் புள்ளியின் நகல்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளி சாதாரண அஞ்சலில் அஞ்சல் சான்றிதழுடன்தான் அனுப்பப்படும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் அனுப்புகையில் தொலைந்துவிட்டாலோ தாமதமாகிக் கிடைத்தாலோ, அன்றி பட்டுவாடா செய்யப்படாவிட்டாலோ, மின் வாரியம் எந்தவிதப் பொறுப்பும் ஏற்காது. எந்தவிதக் காரணங்களும் குறிப்பிடாமல் ஏதாவது அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் தள்ளிவிடும் உரிமை அடியில் கையெழுத்திட்டவருக்கு உண்டு.

ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) கட்டுத்தொகையாக அடியில் கையெழுத்திட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாகக் கட்டப்பட்டு அதன் ரொக்க ரசீது ஒப்பந்தப் புள்ளியுடன் அனுப்பப்படவேண்டும். ரொக்க ரசீது இணைக்கப்படாமலோ, அரசுத் துறையின் படிவத்தில் அனுப்பப்படாமலோ, அன்றி முடிவுத் தேதிக்குள்ளாக வராவிட்டாலோ ஒப்பந்தப் புள்ளி நிராகரிக்கப்படும். 25—9—1971 மாலை 4 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரரின் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
எம்.இ.எஸ். (உற்பத்தி)
பேசின்பிரிட்ஜ் மின்சக்தி நிலையம்,
சென்னை-12.



## தமிழ்நாடு மின்சார வாரியம்

### விளம்பர அறிக்கை.

கீழ்க்காணும் பொருள்களை வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பந்தங்கள் (Seperate Sealed Tenders) அடியிற் கையொப்பம் இட்டவரால் வரவேற்கப்படுகின்றன. விலை ஒப்பந்தங்கள் கீழே குறிப்பிட்டுள்ள முடிவுத் தேதிகளில் பிற்பகல் 1 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண். | சாற்றுக் குறிப்பு எண். | பொருட்களின் விபரம். | வழங்க வேண்டிய இடம். | சுமாராகத் தேவைப் படும் அளவு. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | டி.ஆர்.பி. 1/71-72 .. | போர்த்டு ஜி.ஐ.எல்.டி. பின்கள் மட்டும். | திருச்சி | 4,000 டஜன்கள். | 6—9—71 |
| 2 | டி.ஆர்.பி. 2/71-72 .. | எம். எஸ். போல்டும் நட்டும் 63 ×10 எம். எம். | திருச்சி | 10 டன்கள். | .. |
| 3 | டி.ஆர்.பி. 3/71-72 .. | எம். எஸ். போல்டும் நட்டும் 50 ×10 எம். எம். | திருச்சி | 10 டன்கள். | .. |
| 4 | டி.ஆர்.பி. 4/72-72 .. | எம். எஸ். போல்டும் நட்டும் 38 ×10 எம். எம். | திருச்சி | 10 டன்கள். | .. |
| 5 | டி.ஆர்.பி. 5/71-72 .. | திருகு கேப் பல்புகள் 40 வாட்ஸ் 250 வோல்ட்டு. | திருச்சி | 25,000 நம்பர்கள். | .. |
| 6 | டி.ஆர்.பி. 6/71-72 .. | .. | அரியலூர் | 10,000 நம்பர்கள். | .. |
| 7 | டி.ஆர்.பி. 7/71-72 .. | பி. சி. பல்புகள் 40 வாட்ஸ் 250 வோல்ட்டு. | திருச்சி | 25,000 நம்பர்கள் | .. |
| 8 | டி.ஆர்.பி. 8/71-72 .. | எம்.எஸ். கப். (சாதாரண) கிளாம்பு 24' ஆர்.சி.சி. கம்பங்களுக்கு. | திருச்சி | 10,000 ஜோடிகள். | 9—9—71 |
| 9 | டி.ஆர்.பி. 9/71-72 .. | எம்.எஸ்.கப். (விசேஷ) 27' ஆர்.சி.சி. கம்பங்களுக்கு. | திருச்சி | 10,000 ஜோடிகள். | .. |
| 10 | டி.ஆர்.பி. 10/71-72.. | எம்.எஸ்.கப். கிளாம்புகள் (சாதாரண) 27' ஆர்.சி.சி. கம்பங்களுக்கு. | திருச்சி | 5,000 ஜோடிகள். | .. |
| 11 | டி.ஆர்.பி. 11/71-72 | எம்.எஸ்.கப். கிளாம்புகள் (விசேஷ) 27' ஆர்.சி.சி. கம்பங்களுக்கு. | திருச்சி | 5,000 ஜோடிகள். | .. |
| 12 | டி.ஆர்.பி. 12/71-72.. | மின்கான் ப்யூஸ் யூனிட்டுகள் செப்பு உபகரணங்களுடன் 100 அ. 500 வோல்ட்டு | திருச்சி | 4,000 நம்பர்கள். | .. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | டி.ஆர்பி. 13/71-72.. | பீங்கான் ப்யூஸ் யூனிட்டுகள் செப்பு உபகரணங்களுடன் 100 அ. 500 வோல்ட். | திருச்சி | 2,500 நம்பர்கள். | 9—9—71 |
| 14 | டி.ஆர்பி. 14/71-72.. | இரும்பு மூடி கொண்ட ப்யூஸ் பெட்டிகள் (பீங்கான் ப்யூஸ் யூனிட்டுகளுடன்) 30 அ. 500 வோல்ட். | திருச்சி | 5,000 நம்பர்கள். | .. |
| 15 | டி.ஆர்பி. 15/71-72.. | இரும்பு மூடி கொண்ட ப்யூஸ் பெட்டிகள் (பீங்கான் ப்யூஸ் யூனிட்டுகளுடன்) 15 அ. 500 வோல்ட். | திருச்சி | 5,000 நம்பர்கள். | .. |
| 16 | டி.ஆர்பி. 16/71-72.. | எம்.எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும் 63 × 16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள். | 13—9—71 |
| 17 | டி.ஆர்பி. 17/71-72.. | எம். எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும் 75 × 16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள். | .. |
| 18 | டி.ஆர்பி. 18/71-72.. | எம். எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும் 90 × 16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள். | .. |
| 19 | டி.ஆர்பி. 19/71-72.. | எம். எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும், 100 × 16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள். | .. |
| 20 | டி.ஆர்பி. 20/71-72.. | எம். எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும் 113 × 16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள் | .. |
| 21 | டி.ஆர்பி. 21/71-72.. | எம். எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும் 150 × 16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள். | .. |
| 22 | டி.ஆர்பி. 22/71-72.. | 20 எம்.எம். ஜி. ஐ. பைப்பினாலான வீட்டு சர்வீஸ் கனெக்ஷன் குழாய்கள். | திருச்சி | 4,000 நம்பர்கள். | 15—9—71 |
| 23 | டி.ஆர்பி. 23/71-72.. | "ஏ" டைப் பெட்டிகள். | திருச்சி | 400 நம்பர்கள். | .. |
| 24 | டி.ஆர்பி. 24/71-72.. | தெருவிளக்கு பிக்ஸர்கள். | திருச்சி | 1,000 நம்பர்கள். | .. |
| 25 | டி.ஆர்பி. 25/71-72.. | எம். எஸ். வாஷர்கள் 16 எம். எம். | திருச்சி | 5 டன்கள். | .. |
| 26 | டி.ஆர்பி. 26/71-72.. | மரத்தாலான மீட்டர் போர்டுகள் 450 × 300 × 15 எம்.எம். | திருச்சி | 10,000 நம்பர்கள். | 18—9—71 |
| 27 | டி.ஆர்பி. 27/71-72.. | மரத்தாலான மீட்டர் போர்டுகள் 500 × 350 × 15 எம். எம். | திருச்சி | 5,000 நம்பர்கள். | .. |
| 28 | டி.ஆர்பி. 28/71-72.. | அலுமினியம் பெயின்ட். | திருச்சி | 5,000 லிட்டர்கள். | .. |
| 29 | டி.ஆர்பி. 29/71-72.. | எல். டி. ஷேக்கில்களுக்கான உலோக சாதனங்கள். | திருச்சி | 2,500 டஜன்கள். | .. |

மேற்படி பொருட்களைப் பற்றிய குறிப்புகள் ஏனைய நிபந்தனைகள் அடங்கிய பிரதிகள் (Tender Specification Forms) பிரதி ஒன்றுக்கு ரூ. 5·00 (ரூபாய் ஐந்து வீதம்) (திருப்பித் தரத்தக்கதல்ல) தலைமை கணக்காயர், செலவுப் பிரிவு, திருச்சி மின் திட்டம், திருச்சி அவர்களிடம் ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ (கூப்பனில் சாற்றுக் குறிப்பு எண்ணை) குறிப்பிட்டுச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கூப்பனில் தேவையான சாற்றுக் குறிப்பு எண் தெளிவாகக் குறிப்பிடாமல் இருந்தால் மணியார்டர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தபாலில் வரும்பொழுது பிரதிகள் தவறிவிட்டால் அதற்கு இந்தக்குழு பொறுப்பேற்காது. மேற்படிப் பொருட்களைப் பற்றிய குறிப்புகள் முடிவு தேதிக்குக் குறைந்தது நான்கு நாட்கள் முன்னதாக வரவேண்டும். விலை ஒப்பந்தங்கள் குறிப்பிட்டுள்ள முடிவு தேதியன்று பிற்பகல் 4 மணிக்கு அவ்வமயம் வந்திருக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மேற்கண்ட பொருட்களை வழங்குவதற்கான உத்திரவை ஒருவருக்கோ அல்லது பலருக்கோ கொடுக்கவும் எந்த ஒருவருடைய விலை ஒப்பந்தத்தையோ அல்லது அத்தனை பேர்களுடைய விலை ஒப்பந்தங்களையோ நிராகரிக்கவும் அடியில் கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்,

திருச்சி மின் திட்டம்,
திருச்சிராப்பள்ளி

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு
### குடிநீர், வடிகால் வாரிய சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், சென்னை சார்பிலும் அதற்காகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்காகக் கீழே குறிப்பிட்டுள்ள முறையில், துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 20–9–1971 மாலை 3–00 மணிவரை, இத்துறையில் மேற்பார்வைப் பொறியாளரால் (பொது சுகாதார பொறியியல் சர்க்கிள்) ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3–30 மணிக்கு சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.பொ. சர்க்கிள்) அவர்களால் அல்லது அவரால் அமர்த்தப்படுபவரால் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| வேலையின் விவரம். | கட்டுத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1 ராமநாதபுரம் நீர் வழங்கு திட்டம், ஒருமித்த கிணறு கட்டுமானம். | 6,000 |
| (Collection well) (Cap. 6.00 Mld ) | |
| 2 சிவகங்கா நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு. (Cap. 5.0 Mld.) | 5,000 |
| | ரூ. |
| 3 திருச்சி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு (Cap. 50 Mld.) | 45,000 |
| 4 கோயில்பட்டி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 15 Mld.) | 15,000 |

இந்த நான்கு வேலைகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் பொ.சு. பொறியியல் சர்க்கிள், மதுரை அவர்களால் பெறப்பட்டு அவரால் திறக்கப்படும்.

| | |
|---|---|
| | ரூ. |
| 5 ஆம்பூர் நீர்வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 9 Mld.) | 10,000 |
| 6 வாணியம்பாடி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 9 Mld.) | 10,000 |
| 7 திருப்பத்தூர் நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 10 Mld.) | 12,000 |

5, 6, 7 வேலைகளுக்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொ.சு. பொறியியல் சர்க்கிள், சென்னை அவர்களால் பெறப்பட்டு, அவரால் திறக்கப்படும்.

1 முதல் 7 முடிய ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்த வடிவம் —மொத்தத் தொகை.

இந்த வேலைகள் ஒவ்வொன்றும் முடிக்கப்பட வேண்டிய கால அளவு : 6 மாதங்கள்.

1 முதல் 7 முடிய ஒவ்வொரு வேலைக்கும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 10.00 (ரூபாய் பத்து மட்டும். இத்துடன் விற்பனை வரி.)

ஒப்பந்தப் பத்திரங்களுக்குரிய தொகையை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ செலுத்தி நிர்வாகப் பொறியாளர் 1/14, எட்வேர்டு எல்லியட்ஸ் சாலை, பொது சுகாதாரம் பொறியியல் டிவிஷன், சென்னை–4 அவர்களிடமிருந்து 25–8–1971 முதல் பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணம், எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிகளை வழங்க, கால நீட்டிப்பு தரப்படமாட்டாது.

எவ்விதக் காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் பகுதியாகவோ, முழுதுமாகவோ நிராகரித்துவிட ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்கும் அதிகாரமுள்ள அதிகாரிக்கு உரிமை உண்டு.

தலைமைப் பொறியாளர்,
பொது சுகாதாரப் பொறியியல்
மற்றும் எம்.பி.எஸ். ஒர்க்ஸ்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்

ஒப்பந்த அறிவிப்பு—எண் 5.

**வேலையின் பெயர்:—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்குத் தளவாடங்கள் வழங்கல்.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்காக, நிலநீர் இயக்குநர், சென்னை-4, அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 16—10—1971 அன்று மாலை 3·00 மணி வரை ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் அதே நாள் மாலை 4·00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| எண். | உள்வேலை. | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | டர்பைன் பம்புகள் வழங்கல் .. | 8,000 |
| 2 | டவுன் தி ஹோல் டுல் உடன் சேர்ந்த ரோட்ரிக்கு ஒன்று வழங்கல். | 10,000 |
| 3 | நடமாடும் டீசலால் இயங்கும் வெல்டிங் செட்டுகள் வழங்கல். | 1,500 |
| 4 | தண்ணீர் தொட்டி டிரெய்லர், டிரெய்லர் மற்றும் டிராக்டர் வழங்கல். | 2,400 |
| 5 | ஜியோபிசிக்கல், ஜியோகெமிக்கல், ஜியலாஜிக்கல்—தளவாடங்கள், மற்றும் ஹைடிரோ மீட்டிரியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 2,000 |
| 6 | பணிமனைக் கருவிகள் வழங்கல் .. | 1,500 |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை—ரூ. 10
விற்பனை வரி 40 காசு.

ஒப்பந்த வடிவம்:-மெட்ராஸ் டைஜென்சியல் கோடு, வால்யூம் 1-ன் வடிவம்-9.

மேற்கூறிய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ஒப்பந்தப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய தேதி 6—9—1971 முதல் 6—10—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittance III Other Remittance" என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், வரவினம், பொது விற்பனை வரி" எனத் தலைப்பிட்டுச் செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இயக்குநர்,
நிலநீர்.




## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழே கையொப்பமிடப்பட்டுள்ளவரால் பின்கண்டவைகளை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட தனி ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அடங்கிய உறையின்மேலே ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்ணும், வந்து சேர வேண்டிய தேதியும் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

| விவரிப்பு. | குறிப்பிடு எண். | தேவைப் படும் அளவு. | கட்டுத் தொகை. ரூபாய். | வந்து சேர வேண்டிய காலம். |
|---|---|---|---|---|
| 1964-ன் ஐ.எஸ். 1021, அமெண்ட்மெண்ட் நெ. 1—1966க்கு ஒத்திருக்கும்படியான காஸ்டிக் சோடா பிளேக்ஸ் (ரேயான் கிரேடு) வழங்குதல். | இ. 1498 .. | 300 மெட்ரிக் டன்கள் | 1,000 | 5-10-1971 காலை 12 மணி. |

விலைகள் எப். ஓ. ஆர். எண்ணூருக்கு வழங்குவதாக இருக்கவேண்டும். அதில் கொண்டு வருவதற்குரிய இன்ஷூரன்ஸ் தொகையும், ஆயத்தீர்வையும் ( Excise duty ) அடங்கியிருக்க வேண்டும். ஆனால் விற்பனை வரியும், இதரத் தீர்வைகளும் சேர்க்கப்படக் கூடாது.

ஆயத்தீர்வை ஏதேனும் விலையில் சேர்க்கப்பட்டிருந்தால் அதன் சரியான தொகை குறிப்பிடப்பட வேண்டும்.

**பட்டுவாடா செய்வதற்குரிய விதிகள்.**

(அ) பொருள்களை நல்ல நிலைமையில் சேர வேண்டிய இடத்தில் சேர்த்தவுடன் 90 சதம் வழங்கப்படும்.

(ஆ) மீதம் 10 சதத்தை, பொருள்களை நல்ல நிலைமையில் சேரவேண்டிய இடத்தில் சேர்த்த 3 மாதங்களுக்குள்ளாகவும், சோதனைச் சான்றிதழ் வழங்கப்பட்ட பிறகும் ஆனால் எது பிற்பட்டதோ அதன்படி வழங்கப்படும்.

**வழங்குதல் :**

இருப்பில் உள்ளதிலிருந்தோ அல்லது உடன் வழங்கும் அடிப்படையிலோ கெமிக்கல்களை வழங்க வேண்டும்.

**அபராதம் :**

பொருள்களை வழங்குவதில் தாமதமானால் தாமதமாகும் பகுதிக்கு வாரத்திற்கு $\frac{1}{2}$ சதவீதமும், உச்ச அளவாக 10 சதம் வரைக்கும் அபராதம் விதிக்கலாம் என்ற காரண்டி கொடுக்கப்பட வேண்டும்.

**சட்டப்படி செல்லத் தகுந்தவை :**

ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குச் சட்டப்படி செல்லத் தகுந்தவைகளாகும்.

தனியாக ஒப்பந்தப் படிவங்களோ அல்லது விவரமான குறிப்பிடுகைகளோ வேறு எதுவும் இல்லை.

ஒப்பந்தப் புள்ளிகளை மின்சார தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், 157. அண்ணாசாலை சென்னை-2 அவர்களுக்குஎன்று முகவரியிட்டு, முத்திரையிட்ட கவரில் வைத்து, கவரின் மேலே மேற்பார்வைப் பொறியாளர், தொழில் நுணுக்கம் (மின்சாரம்) 157 அண்ணாசாலை, சென்னை-2 என்று எழுதி மேலே குறிப்பிட்டுள்ள தேதி, காலத்திற்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 3·00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்பட மாட்டா. குறைந்த ஒப்பந்தத்தையும் ஏற்றுக் கொள்ளாதிருக்க வாரியத்திற்கு உரிமையுண்டு. ஒப்பந்தப் புள்ளிகளைப் பிரித்து, குறிப்பிட்ட விவரப்படி பொருள்களை வழங்க ஒன்று அல்லது பல ஒப்பந்தக்காரர்களுக்கு அனுமதி வழங்கவும் வாரியத்திற்கு உரிமை உண்டு.

**கட்டுத் தொகை.**

குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத்தொகைக்கு, கணக்கு அலுவலர், சென்னை மின்சாரத் திட்டம் (வழங்குதல்), எண் 157, அண்ணா சாலை, சென்னை-2 அவர்கள் கணக்கில் டிமாண்ட் ட்ராப்டாக வாங்கி ஒப்பந்தப் புள்ளியுடன் அனுப்ப வேண்டும்; இல்லாவிட்டால் ஒப்பந்தப் புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்; செக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேற்கூறிய அலுவலரிடம் ரொக்கமாகக் கட்டுத்தொகையைக் கட்டி, அதற்குரிய ரசீதை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்தும் அனுப்பலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
தொழில் நுணுக்கம் (மின்சாரம்.)
157, அண்ணாசாலை,
சென்னை-2

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

எமெர்ஜென்சி கமிஷன்ட் ஆபீசர்கள்/ குறுகிய காலப் பணி ரெகுலர் கமிஷன்ட் ஆபீசர்கள் ஆகியவர்களிடமிருந்து டிப்டி கலெக்டர்கள் முதலிய வேலைகளுக்குத் தேர்ந்தெடுத்தல் :

கீழ்க்கண்ட வேலைகளுக்கான நேரடித் தேர்வுகளுக்காக சென்னையில் 1971 நவம்பர் திங்களில் நடைபெறவிருக்கும் முதுநிலைப்பட்டத்தின் தரத்திலுள்ள (Master"s Degree Standard) எழுதும் தேர்வுக்கும், வாய்மொழித் தேர்வுக்கும் அனுமதிக்க ஏற்கனவே வெளிவந்துள்ள அல்லது 1971–72ல் வெளிவரவிருக்கும் எமெர்ஜன்சி கமிஷன்ட் ஆபீசர்கள்/குறுகிய கால பணி ரெகுலர் கமிஷன்ட் ஆபீசர்களிடமிருந்து விண்ணப்ப மனுக்கள் 1971 செப்டம்பர் 25–ஆம் நாள் மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

(1) 2 டிப்டி கலெக்டர் பதவிகள்—சம்பளம் மாதம் ரூ. 575—25—600—40—1,000.

(2) 2 ஜாயிண்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் பதவிகள் சம்பளம் மாதம் ரூ. 550—25—600—35—950.

(3) ஒரு டிப்டி ரிஜிஸ்ட்ரார் ஆப் கோவாப்பரேடிவ் சொசைட்டீஸ் பதவி—சம்பளம் மாதம் ரூ. 550—25—600—35—950.

(4) ஒரு டிப்டி சூப்பிரின்டெண்ட் டெண்ட் ஆப் போலீஸ் பதவி சம்பளம் ரூ. 575—25—600—40—1,000.

**தகுதிகள் :**

(1) பல்கலைக் கழக நிதி உதவிக் கழகத் திட்டம் நிதி பெற ஒப்புதல் பெறப்பட்ட ஏதாவது பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிறுவனத்திடம் பெற்ற பட்டம்.

(2) 1—7—1971 அன்று 24 வயது முடிவடைந்திருக்கக் கூடாது. டிப்டி கலெக்டர், டிப்டி ரிஜிஸ்ட்ரார் ஆப் கோவாப்பரேடிவ் சொசைட்டீஸ் ஆகியவற்றிற்கும் மனு செய்யும் செடியூல்ட் வகுப்பினர், மலைசாதியினர், பிற்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பில் விதிவிலக்கு உண்டு. ஜாயின்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர், டிபுடி சூப்பிரிண்டென்டெண்ட் ஆப் போலீஸ் பதவிகளுக்கு அவர்கள் 30 வயதுக்குட்பட்டவர்களாகயிருத்தல் வேண்டும்.

வயதைக் கணக்கிடும்போது. எமெர்ஜன்சி கமிஷன்ட் ஆபீசர்/ குறுகிய காலப்பணி ரெகுலர் கமிஷன்ட் ஆபீசர் ஆகியோர் கமிஷன் காலத்திற்கு முன் பெற்ற பயிற்சிக் காலமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

இத்துடன் கீழ்க்கண்ட வயதுச் சலுகைகளும் அனுமதிக்கப்படும் :

(அ) செடியூல்ட் வகுப்பினர், மலைசாதியினர், பிற்பட்ட வகுப்பினரல்லாதவர்களாகவிருந்து 1—7—1971 அன்று 40 வயதிற்கு மேற்படாதவர்களாகயிருந்தால் 5 ஆண்டுகள் வரை சலுகை தரப்படும்.

(ஆ) செடியூல்ட் வகுப்பினர், மலைச்சாதியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு ஜாயின்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர், டிப்டி சூப்பிரின்டென்டெண்ட் ஆகிய பதவிகள் சம்பந்தப்பட்டவரை அவர்கள் 1971 ஜூலை திங்கள் 1-ஆம் நாள் 45 வயதுக்கு அதிகப்படாதவர்களாகயிருப்பின் 10 ஆண்டுகள் சலுகை தரப்படும்.

(இ) டிப்டி சூப்ரின்டென்டெண்டாகத்தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் மனுதாரர் உயரத்தில் 165 செ.மீ.ருக்குக் குறையாமலும், மார்பளவு (மூச்சை உள்ளிழுக்கும்போது)86 செ.மீ.க்குக் குறையாமலும், முழு மூச்சு உள்ளிழுக்கும்போது மார்பு 5 செ.மீ. குறையாமல் விரிவடைவதாகவுமிருக்க வேண்டும்.

மேற்கூறிய எல்லா வேலைகளுக்கும் ஒரே விண்ணப்ப மனுதான்.

விரிவான தகவல்களும், விண்ணப்ப மனுவும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை–2 என்ற முகவரிக்கு வேலையைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி அத்துடன் 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட 23 செ.மீ. நீளமுள்ள உறையினை இணைத்து அனுப்பிப் பெறலாம். அவ்வாறு உறை அனுப்பப்படாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டாது.

## ஓவியப் போட்டி

### ஓவியர்களுக்கு ஒரு நல்வாய்ப்பு

தமிழக அரசின் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனத்துக்கு இலச்சினையும்—ஆங்கிலத்தில் குறிப்புரையும் வரவேற்கப்படுகின்றன.

இவற்றை அனுப்புவோர், இலச்சினைக்கும்—குறிப்புரைக்கும் தனித்தனியே, சாதாரண அல்லது வண்ண ஓவியம் வரைந்து அனுப்ப வேண்டும்.

இலச்சினை எளிமையாகவும், தமிழ்ப் பண்பாட்டினை விளக்குவதாகவும் இருத்தல் வேண்டும். ஒருவர் எத்தனை இலச்சினைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட இலச்சினை—குறிப்புரை ஒவ்வொன்றுக்கும் தகுந்த பரிசு வழங்கப்படும்.

இவற்றை நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம், 34, அண்ணா சாலை, சென்னை–2 என்ற முகவரிக்கு 10–9–1971-ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பு வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

இந்த நாளுக்குப் பின்னர் இதுபற்றிய கடிதங்களை இந் நிறுவனம் ஏற்றுக்கொள்ளாது.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின் வாரியம்

**ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு E. 1497.**

**எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு டன் கன்டெயினர்சில் குளோரின் திரவம் வழங்குதல்.**

மின்சார வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் கீழ்க்கண்ட பொருள்களை வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (மூன்று நகல்கள்) முழு தொழில் நுணுக்க விவரங்களுடனும் பிற தகவல்களுடனும், ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண், முடிவு தேதி ஆகியவற்றை உறையின்மீது குறிப்பிட்டும் 22—9—1971 அன்று நண்பகல் 12 மணிக்குள் பெறப்படும் :—

| எண். | விவரம். | அளவு. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|
| 1 | ஸ்டாண்டர்டு டன் கன்டெயினர்களில் IS–646, 1956 தரத்திலுள்ள குளோரின் திரவம் (liquid chlorine) வழங்குதல். | 50 மெட்ரிக் டன்கள் | ரூ. 500 |

ஒப்பந்தப் புள்ளியில்கீழ்க்கண்ட விவரங்கள் தரப்படவேண்டும் ; இல்லாவிடில் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்பட ஏதுவாகும்.

1. டன் கன்டெயினரின் அளவுகள்.
2. டன் கன்டெயினரின் எடை—குளோரினுடனும், குளோரின் இல்லாமலும்.
3. முழுவதும் இயக்கும்போது கன்டெயினரின் பிரஷர்.
4. கன்டெயினருக்கு வாடகை ஏதாவது.
5. பணிமனையிலிருந்து எண்ணூர் பகுதிக்கு எதில் எடுத்துச் செல்லப்படும்.
6. டன் கன்டெயினர்களை ஸ்டோரில் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் விரிவான அறிவுரைகள்.
7. குளோரின் திரவத்திற்கு DGS. மற்றும் D rate ஒப்பந்தம் ஏதாவது இருந்தால் அது பற்றிய தகவல்கள்.

எண்ணூரில் கொண்டுவந்துசேர்க்க, இன்சூரன்ஸ் சார்ஜ், ஏற்ற இறக்க ஆகும் கூலி சார்ஜ் சேர்க்கப்பட்டதும், எக்சைஸ் வரி, விற்பனை வரி, மற்றும் பிற நிலையான வரிகள் (Statutory levies) சேர்க்கப்படாததுமான தொழிற்சாலை விலை குறிப்பிட வேண்டும்.

பணிமனை ( ex-works ) விலையும் குறிப்பிடப்படவேண்டும். குளோரின் 1971 அக்டோபர் முதல் வழங்கப்படவேண்டும். தற்போதைய தேவை அளவு தற்காலிகமானது ; உண்மையான தேவைக்குத் தக்கபடி கூடவோ, குறையவோ செய்யலாம்.

முதல் ஒன்பது மாதங்களுக்கு மாதம் 5 முதல் 6 M.T. வீதம் குளோரின் விநியோகம் ஆரம்பத்தில் தேவைப்படும். தேவைக்குத் தக்கபடி இதனை மேலும் சில காலம் தொடரவோ, அன்றி அளவைக் கூட்டவோ படலாம்.

எனவே ஒப்பந்தப் புள்ளிதாரர் மேற்குறிப்பிட்டதைக் கவனத்தில் கொண்டு மேற்குறிப்பிடப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு குறைந்த தொகையைக் குறிப்பிடும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

குறிப்பிடப்பட்ட விலை ஒப்பந்த காலம் முழுவதற்கும் உறுதியாகக் கடைப் பிடிக்கப்படும். வரவிரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் 22–9–1971 அன்று மாலை 3 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

கட்டுத் தொகை ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்), கணக்கு அலுவலர், சென்னை மின்சாரத் திட்டம் (விநியோகம்), 157, அண்ணா சாலை, சென்னை-2 பெயரில் கிராஸ்ட் டிமாண்ட் டிராப்டாக வாங்கி ஒப்பந்தப் புள்ளியுடன் அனுப்பப்படவேண்டும் ; இல்லாவிடின் ஒப்பந்தப் புள்ளி நிராகரிக்கப்படும். செக் அல்லது பாங்க் காரண்டி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முடிவுத் தேதிக்குப் பின் வரும் ஒப்பந்தப் புள்ளி கவனிக்கப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியாகும்.

பணம் பட்டுவாடா, பொது மற்றும் தொழில் நுணுக்க நிபந்தனைகள் பற்றி வாரியத்தில் நடைமுறையிலுள்ள நிபந்தனைகள் யாவும் இந்த வரைக் குறிப்பிற்கும் பொருந்தும்.

குறைந்த விலை குறிப்பிடும் ஒப்பந்தப் புள்ளியை அல்லது ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியை ஏற்றுக்கொள்ளவோ, அல்லது அளவினை மாற்றவோ, அல்லது பிரித்து ஒன்றுஅல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தப் புள்ளிதாரர்களுக்கு வழங்கவோ வாரியத்திற்கு முழு உரிமை உண்டு.

இது தவிர வேறு தனியான ஒப்பந்தப் புள்ளிப் படிவங்களோ அன்றி விரிவான வரைக் குறிப்புகளோ கிடையாது.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
**தொழில் நுணுக்கம் (மின்சாரம்).**

157, அண்ணாசாலை,
சென்னை-2,

## தமிழ்நாடு அரசு

### நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை.

### அறிவிப்பு.

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும் கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க் கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1971-ம் வருடம் அக்டோபர் திங்கள் 20-ம் நாள் புதன்கிழமை மாலை 3·00 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தின சபாபதிபுரம் வெட்கட்ரமணு சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3·15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண்: | | வேலையின் பெயர்: | கோட்டம்: | முன்வைப்புத் தொகை. |
|---|---|---|---|---|
| 1 | | தேசிய நெடுஞ்சாலை எண் 7ஐ மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியை மேம்பாடு செய்தல்— | | ரூபாய்: |
| | | பிரிவு 1 கி.மீ. 33·015 முதல் 55·00 வரை .. | கிருஷ்ணகிரி | 1,37,500, |
| 2 | டி | பிரிவு 2—கி.மீ. 55·00 முதல் 80· வரை .. | டி .. | 1,54,800 |
| 3 | டி | பிரிவு 3—கி.மீ. 80·00 முதல் 94·00 வரை .. | டி .. | 96,200 |
| 4 | டி | பிரிவு 4—கி.மீ. 94·00 முதல் 119·00 வரை .. | டி .. | ,1,15,900 |
| 5 | டி | பிரிவு 5—கி.மீ. 119·00 முதல் 139·00 வரை .. | டி .. | 85,700 |
| 6 | டி | பிரிவு 6—கி.மீ. 139·00 முதல் 160·00 வரை .. | டி .. | 94,900 |
| 7 | டி | பிரிவு 7—கி.மீ. 160·00 முதல் 174·00 வரை .. | சேலம் | 91,200 |
| 8 | டி | பிரிவு 8—கி.மீ. 174·00 முதல் 194·00 வரை .. | டி .. | 1,01,200 |
| 9 | டி | பிரிவு 9—கி.மீ. 194·00 முதல் 199·00 வரை (மற்றும் சேலம் மாற்று வழிப்பாதை). | டி | 1,07,800 |
| 10 | | தேசிய நெடுஞ்சாலை எண் 47ல் பவானி மற்றும் குமார பாளையத்தை இணைக்கும் மாற்று வழிப்பாதை அமைத்தல். | ஈரோடு .. | 54,700 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்தக் கோட்டப் பொறியாளர்களிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 250 உடன் விற்பனை வரியும் செலுத்தி 20—9—1971 முதல் 19—10—1971 வரை பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையை அந்தந்தக் கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ '' டெபாசிட் என்ற தலைப்பின்கீழ் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். பாங்கு காரண்டி முன்வைப்புத்தொகையாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமேயானல் மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்கவேண்டும். தவிர ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்கவேண்டும்.

பா. சேக் உமர்,
மேற்பார்வைப் பொறியாளர்
(நெ.கி.ப.),
கோவை-2.

ரத்தினசபாபதி புரம்,
கோயம்புத்தூர்,
21—8—71.

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி

### அறிவிப்பு

**எண் 4/95 டி4/நாள் 15–8–1971.**

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்தின் சார்பிலும் அதற்காகவும் கீழ்க் கண்ட வேலைகளுக்காக, மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம், கோயம்புத்தூர்-2 அவர்களால் 25/1 மூன்றுவது தெரு, டாட்டாபாத், கோயம்புத்தூர்-12-ல் அவர்களுடைய அலுவலகத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே குறிப்பிட்ட தேதிகளில் மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 4-00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளரால் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலை விவரம்—(1) பொள்ளாச்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—2-வது கட்டம்—லோலிப்ட் கச்சா நீர் டர்பைன் பம்பு செட்டுகள், துணை பைப்புகள் இணைப்புகளுடன் சப்ளை, டெலிவரி, அமைப்பு முதலியன.

கட்டுத் தொகை—ரூ. 2,305 (ரூபாய் இரண்டாயிரத்து முன்னூற்று ஐந்து மட்டும்).

வேலையை முடிக்க வேண்டிய காலம்—மூன்று மாதங்கள்.

வேலை விவரம்—(2) பொள்ளாச்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—2-வது கட்டம்—ஹைலிப்ட் தூய நீர் (செண்ட்ரிபியூகல் பம்பு செட்டுகள், துணை சாதனங்கள், பைப்புகள், இணைப்புகளுடன் சப்ளை, டெலிவரி, அமைப்பு.

கட்டுத் தொகை—ரூ. 6,135 (ரூபாய் ஆறு ஆயிரத்து நூற்று முப்பத்தி ஐந்து மட்டும்).

வேலையை முடிக்க வேண்டிய காலம்—5 மாதங்கள்.

இந்த இரு வேலைகள் விஷயத்திலும் ஒப்பந்தவடிவம்—மொத்தத் தொகையாகும்.

இந்த இரு வேலைகளில் ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 10.35 (ரூபாய் பத்து, காசுகள் முப்பத்தி ஐந்து மட்டும்— விற்பனை வரி உள்பட—இத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது)

இந்த இரண்டு வேலைகளுக்கும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனை செய்யப்படும் காலம் 25-8-1971 முதல் 23-9-1971 மாலை 5 மணி வரை.

இவ்விரு வேலைகள் விஷயத்திலும் ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கும் ஒப்பந்தப் புள்ளிகளைத் திறப்பதற்கும் உரிய நாள் 25-9-1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், பொது சுகாதார பொறியியல் டிவிஷன், 11/8 பாஷ்யகாரலு சாலை, கிழக்கு ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர்-2ல் உரிய தொகையை ரொக்கமாகவோ மணியார்டரிலோ செலுத்திப் பெறலாம்.

கட்டுத்தொகையை, நிர்வாகப் பொறியாளர் (பொ. சு. பொ.) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோயம்புத்தூர்-2 அவர்கள் கணக்கில் டிமாண்ட் டிராப்ட் வடிவிலோ, கருவூல சலான் வடிவிலோ கட்டவேண்டும். தேச உடமை ஆக்கப்பட்ட பாங்கியின் ரிசர்வ் பாங்க் அங்கீகரித்த பாங்கு காரண்டியும் கட்டுத் தொகைக்காக ஏற்கப்படும்.

வேலையின் பெயர், உறையின் மீது தெளிவாக எழுதப்படவேண்டும். எவ்விதக் காரணமும் கூறுமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) கோயம்புத்தூர் அவர்களுக்கு உரிமை உண்டு.

எஸ். எஸ். சாகுல் அமீத்,
மேற்பார்வைப் பொறியாளர்.
(பொ.சு.பொ.) கோயம்புத்தூர்-12.

நாள் 15-8-1971.

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு உணவுப் பொருள் வழங்கு துறை

உணவுப் பொருள் மற்றும் உணவுப் பொருள் வழங்கு துறையினால் கவனிக்கப்படும் பிற பொருள்களைச் சென்னை ரெயில் நிலையங்கள், துறைமுகம் ஆகியவற்றிலிருந்து நகரக் கிடங்குகளுக்கு (Godowns) எடுத்துச் செல்லவும், ஆவடி, குரோம்பேட்டை ஆகியவைகளிலுள்ள கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லவும் அல்லது இங்கிருந்து அங்கு எடுத்துச் செல்லவும், உணவுப் பொருள்களை சென்னை, ஆவடி, குரோம்பேட்டை ஆகிய பகுதிகளிலுள்ள கிடங்குகளிலும், ரெயில் நிலையங்கள், துறைமுகம் ஆகியவற்றிலும் ஏற்ற இறக்க கூலியாட்களை, சப்ளை செய்யவும், ஒப்பந்த ஒப்புதலிலிருந்து ஓராண்டுக் காலம் செயல்படக் கூடிய காண்டிராக்டர்களை நியமிக்க, குறிப்பிட்ட படிவத்தில் ஒப்பந்தங்களை தமிழ்நாடு அரசின் சார்பில், உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 வரவேற்கிருர்.

ஒப்பந்தங்கள், உணவுப் பொருள் வழங்கு துறை துணை ஆணையாளர் (விநியோகம்) அவர்களால் 20-9-1971 மாலை 3 மணி வரை சென்னை-5, சேப்பாக்கத்திலுள்ள எழிலகத்தில் பெறப்படும்.

ஒப்பந்தப் படிவங்களும் நிபந்தனைகளும், சென்னை ரிசர்வ் வங்கியில் XXII. Miscellaneous Department Receipts—e. Civil Supplies Department 3 (ii) Miscellaneous Receipt என்ற தலைப்பில் ரூ. 10ம் (ரூபாய் பத்து மட்டும்)(திருப்பித் தரப்படமாட்டாது), விற்பனை வரிக்காக XII. Sales-tax (d) Miscellaneous-MadrasGeneral Sales Tax Act 1959 என்ற தலைப்பில் 30 காசும் (திருப்பித் தரப்பட மாட்டாது) கட்டியதற்கான செலான்களைத் தந்து பெற்றுக் கொள்ளலாம்.

துணை ஆணையாளர்,
(விநியோகம்).

உணவுப் பொருள் வழங்கு துறை,
சென்னை-5.

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்.

வேலூர் மின் திட்டம்.

கீழ்க்கண்ட பணிகளைச் செய்வதற்கான முத்திரையிடப் பெற்ற தனித் தனி விலையொப்பங்கள் அடியிற் கையொப்ப மிட்டவரால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் அழைக்கப்படுகின்றன.

| வரிசை எண். | ஓ.டி.எஸ். எண். | பணியின் விபரம். |
|---|---|---|
| 1 | ஓ.டி.எஸ். 1/71–72. | காட்பாடி நகர் விரிவிலுள்ள மத்திய பண்டக சாலையிலும், வேலூர் முள்ளிபாளையம் யார்டிலும் உள்ள பொருள்களை ஏற்றுதல் இறக்குதல் போன்ற வேலைகள் ; வேலையின் மதிப்பு (சுமாராக) ரூ. 30,000. |
| 2 | ,, 2/71–72. | 165'' வீல்பேஸ் உள்ள இரண்டு 5 டன் பார்கோ சேசிஸ் மேல் லாரி பாடி பில்டிங் கட்டுதல். |
| 3 | ,, 3/71–72. | 165'' வீல்பேஸ் உள்ள மூன்று 5 டன் டாட்டா சேசிஸ் மேல் லாரி பாடி பில்டிங் கட்டுதல். |
| 4 | ,, 4/71–72. | 179'' வீல்பேஸ் உள்ள இரண்டு 5 டன் இந்துஸ்தான் பெட் போர்ட் சேசிஸ் மேல் லாரி பாடி பில்டிங் கட்டுதல். |
| 5 | ,, 5/71–72. | 133'' வீல்பேஸ் உள்ள ஆறு பார்கோ மாடல் பி 6—டி 300 சேசிஸ் மேல் பிக்கப் வான் பாடி பில்டிங் கட்டுதல். |

கடைசித் தேதி, கட்ட வேண்டிய முன் தொகை ஆகிய விவரங்களுடன் கூடிய குறிப்புப் பிரதிகளைப் பிரதியொன்றிற்கு ரூ. 5 விதம் 25–9–1971 தேதி வரை தலைமைக் கணக்காயர் (செலவு), வேலூர் மின் திட்டம், எண் 10, கிழக்கு நெடுஞ்சாலை, காட்பாடி நகர் விரிவு (அஞ்சல்), வட ஆர்க்காடு மாவட்டம் என்னும் முகவரியில் நேரில் பணம் கொடுத்தோ, பண அஞ்சல் மூலமாகவோ, பெற்றுக் கொள்ளலாம்.

காட்பாடி நகர் விரிவு,
வட ஆர்க்காடு,
நாள் : 30–7–1971.

மேற்பார்வைப் பொறியாளர்,
வேலூர் மின் திட்டம்.

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு அரசு சின்கோனு துறை

ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

அரசினர் சின்கோனு தோட்டங்கள் அனைத்திலும், நடுவட்டம் டிவிஷன், ஹூக்கர் டிவிஷன், வுட் டிவிஷன், மோயார் டிவிஷன், தொட்டபெட்டா டிவிஷன், தேவசோலா டிவிஷன், ஓலக்காடு டிவிஷன், பனிசோலா டிவிஷன் மற்றும் நடுவட்டம் மருத்துவ, சத்தெண்ணெய்த் தொழிற்சாலை இவைகளில் சுமார் ரூ. 3.50 லட்சம் செலவு மதிப்பில் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுவதற்காகத் தமிழ்நாடு ஆளுநர் சார்பில் கீழ்க்கண்டவரால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித்தேதி 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி மாலை 3-00 மணி. இவை அதே நாளில் கீழ்க்கண்டவரால் அல்லது அவரது அரசிதழ் பதிவு உதவியாளரால் மாலை 3-30 மணிக்கு பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி விவரங்களடங்கிய தாள்களை, கீழ்க்கண்ட அலுவலர்களிடமிருந்து அலுவல் நாட்களில் ரூ. 2.07 (விற்பனை வரி உள்பட) ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கண்காணிப்பாளர், அரசினர் சின்கோனு தோட்டம், நடுவட்டம் (அஞ்சல்), நீலகிரி—நடுவட்டம்,

—ஹூக்கர், வுட், தேவசோலா, மோயார் டிவிஷன்களுக்கு.

2. வளர்ச்சி கண்காணிப்பாளர், மருத்துவ சத்தெண்ணெய்த் தொழிற்சாலை, நடுவட்டம் (அஞ்சல்), நீலகிரி

—பனிசோலா, ஓலக்காடு டிவிஷன்களுக்கு.

3. உற்பத்தி ரசாயன வல்லுநர், மருத்துவ சத்தெண்ணெய்த் தொழிற்சாலை, நடுவட்டம் (அஞ்சல்), நீலகிரி

—நடுவட்டம், மருத்துவ சத்தெண்ணெய்த் தொழிற்சாலைக்காக.

4. தாவர இயல் வல்லுநர்—அரசினர் சின்கோனு தோட்டம் தொட்டபெட்டா (அஞ்சல்), உதகமண்டலம்.

—தொட்டபெட்டா டிவிஷனுக்காக.

எம். மோகன் ராவ்,
இயக்குநர், சின்கோனு துறை.
அ. பெ. எண் 6, உதகமண்டலம்,

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

தமிழ் நாடு பொது நிருவாகப் பணியின் கீழ் மகளிர் நலத்துறையில் தற்காலிகமாக ஒரு தனி அலுவலர் பதவிக்காக (பெண்கள்-குழந்தைகள் நலம்) நேரடியாகத் தேர்ந்து எடுப்பதற்காகப் பெண்களிடமிருந்து விண்ணப்ப மனுக்கள் 1971 அக்டோபர் 7-ஆம்நாள் மாலை 5 மணி வரை வரவேற்கப் படுகின்றன.

சம்பளம்—மாதம் ரூ. 550-25-600-35-950.

கல்வித் தகுதி—பல்கலைக்கழக நிதிக் குழுவினால் அதன் நிதிக்காக ஒப்புதல் பெறப்பட்ட ஏதாவது பல்கலைக் கழகத்தில் அல்லது நிறுவனத்தில் பெற்ற பட்டம்.

வயது—1-7-1971 அன்று 21 வயது அடைந்திருக்க வேண்டும். ஆனால், 27வயது அடைந்திருக்கக் கூடாது. செட்யூல்ட் வகுப்பினர், செட்யூல்ட் டிரைப்ஸ், பிற்பட்டவகுப்பினர் ஆகியவர்களுக்கு அதிக பட்ச வயதிலிருந்து விதி விலக்கு அளிக்கப்படும். தங்கக் கட்டுப்பாடு ஆணையினால் பாதிக்கப் பட்ட பொற்கொல்லர்கள், அவர்களது திருமணமாகாத மகள்கள், மற்றும் 1-1-1963 அன்று அல்லது அதற்குப் பின்னர் முழுநேர 'அண்டர் ஆபீசர்' பயிற்சியாளர்களாக அல்லது சார்ஜன்ட் மேஜர் பயிற்சியாளர்களாக வேலைசெய்த முன்னாள் என்.சி.சியினர், ஆகியோருக்கும் வயது வரம்பில் சலுகை அனுமதிக்கப்படும். ராணுவம், கப்பல்படை, விமானப்படையிலிருந்து அனுப்பப்பட்ட நபர்கள் 1-7-1971-ல் 40 வயதுக்குக் குறைவாகவுள்ளவர்களாக யிருப்பின் அவர்களுக்கும், 1-1-1964 அன்று அல்லது அதற்குப் பின் கிழக்குப் பாகிஸ்தானத்திலிருந்து இந்தியாவிற்கு வந்து குடியேறியவர்களுக்கும், இலங்கை, பர்மா அகதிகளுக்கும் கல்வித் தகுதி, வயதுவரம்பு ஆகியவை தளர்த்தப்படும்.

இதற்கான தகவல்களும் விண்ணப்ப மனுக்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குக் கடிதம் எழுதி அத்துடன் 30 காசு அஞ்சல்வில்லை ஒட்டப்பட்ட 23 செ.மீ. நீளமுள்ள உறையின் மீது நூல் அஞ்சல் எனக் குறிப்பிட்டு அதனைக் கடிதத்துடன் இணைத்து அனுப்பிப் பெறலாம்.

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில், வணிக இயக்குநர், தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

வேலையின் பெயர் : சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் உத்தேசிக்கப்பட்டுள்ள புற்று நோய் பிரிவில் ( pile ) அஸ்திவாரம் இடுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்தம் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, சென்னை—செங்கற்பட்டு வட்டம் அவர்களால் அவரது சேப்பாக்க அலுவலகம் சென்னை-5-ல் 17-9-1971-ல் பிற்பகல் 3 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை :
ரூ. 5,250.

3. வேலை முடிக்க வேண்டிய கால அளவு : ஆறு மாதங்கள்.

4. ஒப்பந்தப் பத்திர விலை : ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்).

இத் தொகை கருவூலத்திலோ சென்னை இந்திய ரிசர்வ் வங்கியிலோ. '' P. W. Remittances III Other Remittance '' என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பில்டிங்ஸ் டிவிஷன் 1, சேப்பாக்கம், சென்னை-5, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

5. விற்பனை வரி 0.90 காசு (தொண்ணூறு காசு மட்டும் ) அந்தச் செலானிலேயே கருவூலத்திலோ, சென்னை இந்திய ரிசர்வ் வங்கியிலோ ''XII Sales Tax'' விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொதுவிற்பனை வரி என்ற கணக்கில் கட்டப் பெற வேண்டும்.

6. ஒப்பந்தப் பத்திர விற்பனை: 8-9-1971 முதல் 15-9-1971 வரை (அலுவலக நேரத்தில்).

7. ஒப்பந்தப் புள்ளித் தேதி 17-9-1971.

ஏனைய விபரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப் பணித்துறை, சென்னை, செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை அவர்களிடமிருந்து அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-5, செங்கற்பட்டு வட்டம் அவர்களுக்கு எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் தள்ளும் உரிமையுண்டு.

பி. கே. கந்தசுவாமி
மேற்பார்வைப் பொறியாளர்.
சென்னை—செங்கற்பட்டு வட்டம்.
13—8—1971.

## பயிற்சி

### தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்புப் பயிற்சித் துறை, சென்னை-5

வேலைபழகு பயிற்சிச் சட்டம் 1961

1961-ஆம் ஆண்டின் வேலைபழகு பயிற்சி (அப்ரண்டிஸ்) சட்டத்தின் கீழ் விடுத்த அகில இந்திய தொழில் திறன் தேர்வு, தமிழ் நாட்டில் கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்களில் 20-9-1971 முதல் 25-9-1971 வரை (21-9-1971 தவிர) நடத்தப்படும்.

அரசினர் தொழில் பயிற்சி நிலையம் (வடக்கு) சென்னை, சென்னை-21, கிண்டி, சென்னை 32, அம்பத்தூர், சென்னை—53, திருச்சிராப்பள்ளி-14, மதுரை-7, பேட்டை, திருநெல்வேலி-4, கோயம்புத்தூர்-11, சேலம்-7.

முழுக்கால வேலை பழகுப் பயிற்சியாளர்கள் தகுதியுடையவராயும், மேலே குறிப்பிட்ட தொழில் தேர்வில் சேர ஆர்வமுள்ளவராயும் உள்ளவர்கள், தாங்கள் மேலும் விபரங்கள் தெரிய விரும்பினால் தங்களுக்குத் தொடர்பான தொழில் பயிற்சி நிலைய முதல்வருடன் 5-9-1971-க்குள் தொடர்புகொள்ளவும்,

இயக்குநர்,
வேலைவாய்ப்புப் பயிற்சி,
மாநில வேலைபழகுத் திட்ட ஆலோசகர், சென்னை-5.

## ஒப்பந்தம்

### தமிழ்நாடு மின்சார வாரியம்

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், (இயக்குதல்) எண்ணூர் அனல் மின்திட்டம்
Stationery 1/71-72

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் தமிழ்நாடு மின்சார வாரியம். எண்ணூர் அனல் மின் திட்டம் Stationery 1, 1971-72, எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு, கீழ்க் கையொப்பம் இட்டவவரால் அவரது அலுவலகத்தில் 6-9-1971-ஆம் தேதி பிற்பகல் (மாலை) வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 3 மணிக்கு அங்கு வந்து இருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.
Desoription 71 items of Books and forms.
Quantity as furnished in the Tender set.

3. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 5·00(ரூபாய் ஐந்து மட்டும்) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

4. இந்த வேலைக்கான பிணைத் தொகை ரூ. 1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளபடி முன்னதாகச் செலுத்தப்பட வேண்டும்.

5. துறையினரைச் சார்ந்த நமூனக்களில்லாத ஒப்பந்தங்களும் இறுதித் தேதிக்குப்பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஏதாவது ஒன்றையோ, அன்றி, எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமை உடையவர்.

6. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு, வழியில் தவறிப் போகும் ஒப்பந்தப் பத்திரங்களுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்களும் மாற்றத் தக்கவையல்ல.

மேற்பார்வைப் பொறியாளர் இயக்குதல்,

எண்ணூர் அனல் மின் திட்டம்
எண்ணூர், சென்னை-57.

தொலைபேசி எண் 59556 (5 கிளைகள்),

தந்தி ENTERMAL

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்கழகம்.

தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுப் பணியில் அரசினர் அச்சகத்திற்கு 9 உதவி அலுவலர் நிர்வாகிகள் (Assistant Works Managers ) நியமனத்திற்காக மனுக்கள் 1971 செப்டம்பர் 24-ஆம் நாள் மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.
தகுதிகள் :—

(1) அச்சுத் தொழில் தகுதி —அச்சு வேலைகளில் செயல்முறை அனுபவம்.

(2) ' காஸ்டிங் முறைக் (Costing System) கணக்கில் ' அறிவு.

சம்பளம் : மாதமொன்றுக்கு ரூபாய் 550—25—600—35—950.

வயது : 1-7-1971-ல் 30 வயதுக்குக் கீழ். குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதிக்கு மேல் பொதுக் கல்வித் தகுதியுள்ள ஷெடியூல்டு வகுப்பினர், ஷெடியூல்டு பழங்குடியினர், பின்னடைந்த வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை. மற்ற ஷெடியூல்டு வகுப்பினர், ஷெடியூல்டு பழங்குடியினருக்கு, மேல் வயது வரம்பு 5 ஆண்டுகளும் அங்கவீனமுற்றவர்களுக்குப்பத்து ஆண்டுகள் வரையிலும் தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்திரவினுல் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் அவர்தம் புதல்வர்கள், திருமணமாகாத பெண்கள், மற்றும் 1-1-1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்டரக்டர் அல்லது சார்ஜண்டு மேஜர் இன்ஸ்ட்ரக்டர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்ளுள் தேசிய மாணவர் படை கேடட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற் படை, விமானப் படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப் பட்டதால் வந்தவர்கள் 1-7-1971-ல் 40 வயதிற்குட்பட்டவர்களாக இருப்பவர்களாயினும் 1-1-1964-ல் அல்லது அதற்குப் பின்னர் கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் விஷயத்திலும், இலங்கை, பர்மா, ஆகியவற்றிலிருந்து திருப்பி அனுப்பப் பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்புட்படத் தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விபரங்களையும் " செயலாளர், தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம்-சென்னை-2 " என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ நீளமுள்ள சுய விலாசமிட்ட 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி, நூல் அஞ்சல் என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிழக்கு டிவிஷன்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

வியாசர்பாடி அருகே வட சென்னை புதூர்த் திட்டத்தில் 2 லட்சம் காலன் திறனுள்ள மேல்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர் கட்டுவது சம்பந்தப் பட்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசி நாள் 8—9—1971 வரை நீடிக்கப் பட்டிருக்கிறது.

டி. ஜகதீசன்,

நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு)
19—8—1971,
சென்னை—35.



## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை

சிட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

வேலையின் பெயர் :

மதுரை மாவட்டம், தோப்பூர் அரசினர் க்ஷயரோக சானடோரியத்தில் கீழ்த்தளத்தில் 30 படுக்கைகளுக்கும், முதல் தளத்தில் 30 படுக்கைகளுக்குமான ஒரு இரண்டு தளக் கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும், மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால் மேற்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 15—9—1971 மாலை 3-00 மணிவரையில் பெற்றுக்கொள்ளப்பட்டு மாலை 4-00 மணிக்கு திறக்கப்படும். 6—9—1971 முதல் 13—9—1971 வரை ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை : மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை : ரூ. 5,200 (ரூபாய் ஐயாயிரத்து இரு நூறு மட்டும்).

வேலை முடிக்க வேண்டிய காலம்: ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையான ரூ. 20 (ரூபாய் இருபது) தொகையை அரசினர் கருவூலம் ஒன்றிலோ அல்லது ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ " P. W. Remittances III O. R. " என்ற தலைப்பில் மதுரைக் கோட்ட நிர்வாகப் பொறியாளர், பொ.ப.து., மதுரை, அவர்கள் கணக்கில் வரவு செய்யும்படியாகவும், ரூ. 0·70 விற்பனை வரியை " XII. Sales-tax (d) Miscellaneous " என்ற தலைப்பிலுமாக ஒரே சலானில் செலுத்தப் பெற்ற சலானைத் தாக்கல் செய்த பிறகே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப் கப்படும்.

சலான்கள் அல்லது ஷெட்யூல் பாங்கின் 'டெபாசிட் அட் கால்' ரசீது அல்லது டிமாண்ட் டிராப்டுகள் அல்லது அரசாங்க செக்யூரிடிகள் அல்லது தேசீய மயமாக்கப்பட்ட 14 பாங்குகளில் உத்திரவாதம் ஆகிய உருவிலேயே முன் வைப்புத் தொகை ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்கள், மற்றும் தேசீய சேமிப்பு சர்ட்டிபிகேட்டுகளும் கூட, மார்க்கெட் மதிப்பில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்த வகையில் செலுத்தினுலும் ஏற்கப்படமாட்டாது.

சி. தேசிகசங்கர்,

மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து.
மதுரை வட்டம்,
மதுரை.

## ஏல விற்பனை அறிவிப்பு

ஒரு ஜி.எம்.ஸீ. பெட்ரோல் லாரி (ஓடும் நிலையிலில்லாதது) அது நிற்கும் இடத்தில், இருக்கும் நிலையில் பொதுப் பணித் துறை அலுவலர் ஒருவரால் 17—9—1971 முற்பகல் 11 மணிக்கு எல்.பி.பி. காலனி ஈரோடு-2-ல் பொது மக்கள் முன்னிலையில் ஏலம் விடப்படும்.

அலுவலக நேரத்தில் மேலே குறிப்பிட்ட அலுவலகத்தில் லாரியைப் பார்க்கலாம்.

விற்பனை பற்றிய நிபந்தனைகள் ரூ. 2·06 (ரூபாய் இரண்டும் காசு ஆறு மட்டும்) செலுத்திப் பொதுப் பணித் துறை, ஈரோடுப் பகுதி நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். எல். சுந்தரம்,

நிர்வாகப் பொறியாளர்,
ஈரோடுப் பகுதி,
ஈரோடு.2.

## ஒப்பந்தம்

### தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை

ஒப்பந்தத் தேதி நீடிப்பு

வேலையின் பெயர் :

1. கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில் பௌதிகத் துறை பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

2. கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில் இரசாயன பட்ட மேற்படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

3. கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில் கலைத்துறை பட்ட மேற்படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

4. தோல் சம்பந்தமான வியாதிகட்குச் சிகிச்சையளிக்க தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவ மனையில் இரு பகுதிகட்குக் கட்டடம் கட்டுதல்.

பார்வை :' இந்தியன் எக்ஸ்பிரஸ் ' தேதி 30—6—1971, 2—7—1971 ' தி மெயில் ' தேதி 28—6—1971-ல் வெளியிட்ட சீட்டு ஒப்பந்த அறிக்கை.

மேற்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 8—9—1971 அன்று மாலை 3-00 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 7—9—1971 அன்று மாலை 5-00 வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாறுதல் ஏதும் இல்லை.

ஆர். வேணுகோபால்,

மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

பொதுப்பணித் துறை.

சென்னை செங்கற்பட்டு வட்டம் கட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர்.—சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி அவுட்பேஷண்ட் பிரிவு இடவசதிக்காகக் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப் பணித்துறை அல்லது அரசின் இதர துறைகளில் உரிய பிரிவுகளில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து, மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள், சென்னை-5 அவர்களால் மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 10-9-1971 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள் அவர்களால் அதே நாளில் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.
2. கட்டுத்தொகை-ரூ. 5,000.
3. பிளான்களுடன், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.—ரூ. 20+3 சதவிகித விற்பனை வரி.
4. வேலையை முடிக்கவேண்டிய காலம்.—நான்கு மாதங்கள்.
5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கக்கூடிய தேதிகள்: 6-9-1971 முதல் 9-9-1971 வரை.
6. ஒப்பந்தப் புள்ளி நாள்.—10-9-1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (இது எக்காரணம் கொண்டும் திரும்பத் தரப்பட மாட்டாது) கருவூலத்திலோ, அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ "Public Works Department Remittances III Other Remittances" என்ற தலைப்பில், நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, பில்டிங் டிவிஷன் II அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை அதே சலானில் கருவூலத்தில் அல்லது இந்திய ரிசர்வ் பாங்கில் "XII விற்பனை வரி 'பி' மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம்" என்று தனித் தலைப்பிட்டுச் செலுத்த வேண்டும். சலானைக் கொடுத்த பிறகே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்டு விவரங்களை மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிளில் இருந்து பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கற்பட்டு
வட்டம்.

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசு

தமிழ்நாடு கொதிகலன் பணியாளர் தேர்வு.

1971-ஆம் ஆண்டு செப்டம்பரில் சென்னையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கொதிகலன் பணியாளர் (பாய்லர் அட்டண்டன்ட்) தேர்வுக்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. தேர்வு நடக்கும் இடம், தேர்வு நாள் பற்றிய விவரம் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்பெறும்.

இதற்குரிய மனு வடிவங்களையும் இதர விவரக் குறிப்புகளையும் பெற 9"×4½" அளவுள்ள 35 காசு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரை உள்ளே வைத்துக் கடிதம் எழுதிப் பெறலாம். பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள் 15-9-1971-க்குள் கிடைக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காத மனுக்களும், குறிப்பிட்ட முறையில் இல்லாத மனுக்களும் நிராகரிக்கப்படும். கொதிகலன் தொழிலில் கோரப்படும் செயல் முறை அனுபவமுடையவர்கள் மட்டுமே மனுச் செய்க.

என். பி. ராமரெட்டி.

நீராவிக் கொதிகலன் தலைமை ஆய்வாளர், தமிழ்நாடு கொதிகலன் பணியாளர் தேர்வு நடத்தும் குழுத் தலைவர், ஜம்மி பில்டிங்ஸ், மயிலாப்பூர், சென்னை-4.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு.

அரசினர் கஸ்தூர்பா காந்தி தாய்—சேய் மருத்துவமனை, சென்னை-5.

ஒப்பந்தப்புள்ளி வேண்டுதல்.

அரசினர் கஸ்தூர்பா காந்தி தாய்-சேய் மருத்துவமனை சென்னை-5க்கு 1—10—1971 முதல் 31—3—1972 வரை தேவையான மருந்து வகைகள் ஒப்பந்த முறையில் வாங்குவதற்கான விலைப்பட்டியல், மூடி முத்திரையிடப்பட்ட நிலையில் மருத்துவமனைக் கண்காணிப்பாளர் அவர்களால் 10—9—71 மாலை 3-00 மணி வரையில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், கொடுக்கப்பட வேண்டிய மருந்துப் பட்டியல் ஆகியவற்றை மேற்படி மருத்துவ மனையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அதற்கான விலை ரூ. 5. 'XXIII Medical (g) Miscellaneous-other Receipts' என்ற தலைப்பிலும் மற்றும் விற்பனை வரி 18 பைசா 'XII Sales Tax—Receipts under State Sales Tax Act —General Sales Tax' என்ற தலைப்பிலுமாக ரிசர்வ் பாங்கிலோ அல்லது ஸ்டேட் பாங்கிலோ செலுத்திச் சலான்களைப் பெற்றுக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து ஒப்பந்த வடிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்த வடிவங்களைக் கோரும் விண்ணப்பத்துடன், சுய முகவரியுடன் கூடிய ரூ. 1·50 மதிப்புள்ள அஞ்சல் தலை ஒட்டப்பட்ட நீண்ட சதுர உறையும் அனுப்பப்பட வேண்டும்.

கண்காணிப்பாளர்.

9—8—1971

## ஏல விற்பனை

### தமிழ்நாடு அரசு

தீ அணைப்புத் துறை.

ஏல அறிக்கை.

திருச்சிராப்பள்ளி கோட்டத்தைச் சேர்ந்த கண்டனம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட இழுக்கும் மோட்டார் வண்டி, திருச்சிராப்பள்ளி தீயணைப்பு நிலையத்தில் 8—9—1971 புதன் கிழமை காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். இந்த ஊர்தியைத் திருச்சிராப்பள்ளி தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம்.

ஊர்தியின் விபரங்கள்.

| பதிவு எண். | ஊர்தியின் வகுப்பு. | மேக். | வருட மாடல். |
|---|---|---|---|
| எம்.எஸ்.ஒய். 7190 | இழுக்கும் மோட்டார் வண்டி. | ஆஸ்டின். | 1953 |

விற்பனை நிபந்தனைகள் திருச்சிராப்பள்ளி கோட்டத் தீயணைப்பு அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. ரெத்தினசாமி,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

நடுவட்டம்—நீர் திருப்புத் திட்டம், நீலகிரி மாவட்டம்

டெண்டர் அறிக்கை K-2 ஒப்பந்தம்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அதன் உறையின்மேல் குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழே கையொப்பமிட்டவரால் 22—9—1971 அன்று மாலை 3-30 மணி வரை அட்டகட்டி மின் பாறை முகாம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு, அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையிலோ திறக்கப்படும்.

| குறிப்பு எண். | வேலையின் பெயர். | முன்வைப்புப் பணம். | ஒப்பந்தப் பத்திரப் பிரதி விலை. |
|---|---|---|---|
| NDS 25 | கிளென் மார்க்கன் புதிய போர்பே அணை (Forebay Dam ) கட்டுமான வேலை, பகுதி 6 C.H. 134·2 மீ. முதல் C.H.157மீ. வரை (அஸ்திவாரம் முதல்+1947 வரை). | ரூ. 20,300 | ரூ. 15 |

## கடன் பத்திரங்கள்

### மறந்துவிடாதீர்கள் !

தமிழ்நாடு மின்சார வாரிய கிராமப்புற மின் இணைப்புக் கடன் பத்திரங்கள்

ரூ. 375 லட்சத்துக்கு 7½ சதவிகிதம்.

வெளியிடும் விலை; ரூ. 99·50 சதவிகிதம்.

திறக்கும் நாள்: 2—8—1971

1978 அக்டோபர் 30-ஆம் தேதி மீட்கக் கூடியவை.

முடிப்பு நாள்: 30—10—1971

7½ சதவிகித 1978 தமிழ்நாடு மின்சார வாரிய கிராமப்புற மின் இணைப்புக் கடன் பத்திரங்களுக்காகத் தொகைகள் ரொக்கமாக அல்லது காசோலையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

பட்டியல் சுமார் ரூ. 375 லட்சத்தை அடைந்தவுடன் முன் அறிவிப்பு இன்றி மூடப்படும். எப்படியும் 1971 அக்டோபர் 30-ஆம் நாள் அலுவல் நேர முடிவுக்குள்ளாக மூடப்படும். இந்தப் பத்திரங்கள் சிறந்த முதலீடு ஆகும்.

இந்தியா ஸ்டேட் பாங்கின் சென்னை தலைமை அலுவலகத்திலும், தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஸ்டேட் பாங்க் கிளைகளிலும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கடன் பத்திரங்கள் நிபந்தனைகள் சம்பந்தப்பட்ட அறிவிப்பின் நகல்களும் விண்ணப்ப வடிவங்களும் மேலே குறிப்பிட்ட அலுவலகங்களிலும் தமிழ் நாட்டில் உள்ள எல்லாக் கருவூலங்கள் துணைக் கருவூலங்கள் ஆகியவைகளிலும், தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகங்களிலும் கிடைக்கும்.

நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்காக அள்ளி வழங்குங்கள்.

சி. ஜி. ரங்கபாஷ்யம்,
தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் - வடிகால் வாரியம்

சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

எண் 1087/71 எஸ்டி 1

நாள் 4—8—1971.

கீழ்க்கண்ட வேலைக்காகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள் அவர்களால் 25—1, மூன்ருவது தெரு, டாட்டா பாத், கோயம்புத்தூர்-12-ல் அவருடைய அலுவலகத்தில் 22—9—1971 பிற்பகல் 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டு, அதே நாளில் பிற்பகல் 4—00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் : புஞ்சைப் புளியம்பட்டி நீர் வழங்கு திட்டம் 3-வது கட்டம்—7.00 லட்சம் லிட்டர் (1.5 லட்சம் காலன்) திறனுள்ள மேல்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர், அவசியமான சூழாய் இணைப்புகளுடன் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை : ரூ. 3,500 (ரூபாய் மூவாயிரத்து ஐநூறு மட்டும்).

வேலையை முடிக்க வேண்டிய காலம் : 6 மாதங்கள் (ஆறு மாதங்கள் மட்டும்).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 10.35 (ரூபாய் பத்து காசுகள் முப்பத்தைந்து மட்டும் விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக் காலம் : 9—8—1971 முதல் 20—9—1971 வரை நிர்வாகப் பொறியியல் பொறியாளர், பொ. சு. பொறியியல் டிவிஷன், எண். 11/8. பாஷ்யகாருலு சாலை, ஆர்.எஸ்.புரம் கிழக்கு, கோயம்புத்தூர்-2 அவர்களிடம், பத்திரங்கள் விலையை ரொக்கமாகக் கொடுத்தோ பண அஞ்சலில் அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

கட்டுத் தொகை, தேச உடமை ஆக்கப்பட்ட பாங்க் ஒன்றின் டிமாண்ட் டிராப்ட் வடிவிலோ அல்லது நிர்வாகப் பொறியாளர் (பொ.சு.பொ.) கோயம்புத்தூர் —2 அவர்கள் பெயரில் கருவூல சலான் வடிவிலோ கட்ட வேண்டும். தேச உடைமை ஆக்கப்பட்ட பாங்க் ஒன்றின் பாங்க் காரண்டியும் ஏற்கப்படும்.

காரணம் எதுவும் கூருமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளருக்கு (பொ.சு.பொ.) உரிமை உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்.**

## ஒப்பந்தப் புள்ளி

### ஒப்பந்த அறிக்கை

காவல் துறை ஸ்டேசன் வேகன் எம். டி. எச். 1781 ஒப்பந்த அறிக்கை மூலம் விற்கப்படும். முத்திரையிட்ட ஒப்பந்தம் 13—9—1971, முற்பகல் 10·30 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் பெற்றுக் கொள்ளப்படும். விற்கப்பட்ட தொகையின் பேரில் பதினைந்து சதவிகிதம் விற்பனை வரி வசூலிக்கப்படும். சேலம் டவுன், கொமாரசாமிப் பட்டி ஆயுதப்படை ஆய்வாளரிடம் விவரங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தத்தை காவல்துறை கண்காணிப்பாளர் பெயருக்கு முத்திரையிட்ட கவரில் அனுப்ப வேண்டியது.

வண்டியின் விவரம்

வண்டி பதிவு எண் : எம்.டி.எச். 1781

மாதிரி : 1955

வண்டியின் பெயர் : ஸ்டுடிபேக்கர், ஸ்டேசன் வேகன்.

**கே. கே. ராஜசேகரன் நாயர்,**
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
சேலம்.

## ஏல விற்பனை

### தமிழ்நாடு அரசு

### வேளாண்மைத்துறை

ஏல விற்பனை அறிவிப்பு.

வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான ஒரு ஜீப் (எம்.டி.சி. 8350), 6—9—1971 காலை 10 மணிக்கு மண் பரிசோதனை ஆய்வுக் கூடம், உதவி மண்-ரசாயன வல்லுநரால் 49, வைஸ் சேர்மன் பரமசிவ முதலியார் தெரு, காஞ்சீபுரம்-2-ல் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

அலுவல் நாட்களில் அலுவல் நேரத்தில் வண்டியைப் பார்வையிடலாம்.

அரசினர் நலன் கருதி ஏலத்தை ரத்துச் செய்யவோ, ஒத்தி வைக்கவோ வேளாண்மைத் துறைக்கு உரிமை உண்டு.

ஏல நிபந்தனைகள் மற்றும் மேல் விவரங்களை மேற்கண்ட அலுவலரிடமிருந்து பெறலாம்.

**வேளாண்மைத்துறை இயக்குநர்,**
சென்னை.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### பொதுப்பணி ஒர்க் ஷாப்ஸ் & ஸ்டோர்ஸ்

### பொதுப்பணித்துறை

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண் 33.

குத்தகை அடிப்படையில், பொதுப்பணி ஒர்க் ஷாப்ஸ் & ஸ்டோர்ஸ், சென்னை-1-ல் ஒரு 'காண்டீன்' நடத்துவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்டவரால் 15—9—1971 பிற்பகல் 1 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் இதர விவரங்களைக் கீழ்க்கண்ட அலுவலரின் நேர்முக உதவியாளருக்கு மனுச் செய்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**பொதுக் கண்காணிப்பாளர்,**
பொதுப்பணி ஒர்க்ஷாப்ஸ் &
ஸ்டோர்ஸ், சென்னை-1.



## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

### ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

### K 2 ஒப்பந்தம்

குறிப்பு எண் SCE 406

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தங்கள் அதன் உறையின் மேல் குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்த தாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழே கையொப்பமிட்டவரால் குறித்த முடிவு தேதி மாலை 3-30 மணி வரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலையே 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப்படும்.

| குறிப்பு எண். | வேலையின் பெயர். | முன்வைப்புப் பணம். | ஒப்பந்தப் பிரதி விலை. |
|---|---|---|---|
| S.C.E. 406 | கொதிகலன் 4 (370 டன்) சாமான்கள் உயர் அழுத்த முள்ளவை, அழுத்த மில்லாத்வை (High Pressure Parts and Low Pressure Parts) எடுத்துச்சென்று நிர்மாணித்தல்). | ரூ. 2,500 (ஒவ்வொரு ஷெட்யூலுக்கும்) | ரூ. 5 |

முடிவுத் தேதி 16—9—71

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 5 செலுத்தி, கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலைக்கான முன்வைப்புத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு உண்டியல் ( Demand Draft ) மூலம் செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும் குறித்த தேதி காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது ஒப்பந்தங்களையோ எவ்விதக் காரணம் காட்டாமல் நிராகரிக்கவும் அவ் வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவார்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு காணுமல் போனுல் மின்சார வாரியம் பொறுப்பல்ல, ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கவையல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்**
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

தந்தி : ENTERMAL
தொலைபேசி எண் : 59556 (5 Lines)

## இட வசதி

### பால் பெருக்குத்துறை

### விளம்பரம்

சென்னை-51, மாதவரத்தில் அமைந்து காணும் அரசாங்கப் பால் பண்ணையில் சுமார் 1,000 கால்நடைகள் தங்கள் கன்றுகளுடன் இருக்க, வேண்டிய வசதி உள்ளது. தனிப்பட்டவர்களிடமிருந்தும், மற்றும் நிறுவனங்களிடமிருந்தும், மேற்கண்ட பால் பண்ணைக்குப் பால் தர வேண்டும் என்ற நிபந்தனையின்றி மேற்கண்ட இடத்தில் கால்நடைகளை வைத்திருக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் சென்னை-51 பாலுற்பத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி ஆணையாளர் அவர்களிடம் ரூ. 2 (ரூபாய் இரண்டு மட்டும்) செலுத்தி வரையறுக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பத்துடன் ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்) முன் வைப்புத் தொகையாகச் செலுத்தப்படவேண்டும். இத்தொகை விண்ணப்பதாரரின் காப்புத் தொகையில் வரவு வைத்துக் கொண்டு கணக்குச் சரி செய்யப்படும்.

3. விண்ணப்பதாரர்கள் பெரிய கால்நடைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 7·50-ம் சிறிய கால்நடைக்கு ரூ. 2·50-ம் செலுத்த வேண்டும். கன்றீனும் சமயத்தில் பெரிய கால்நடைக்கு மாதத்திற்கு ரூ. 7·50 கன்றீனும் பகுதிக்காக வசூலிக்கப்படும்.

4. மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்கள் உபயோகிக்கப்பட்ட அளவைப் பொறுத்துத் தனியாக வசூலிக்கப்படும். சென்னை நகர மக்களும் பிறரும் இவ்வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆணையாளர்,**
பால் மற்றும் கால்நடை வளர்ச்சி
சென்னை-51

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு அரசு

### பொதுப் பணித்துறை.

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 22—9—1971 மாலை 3·00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்—L. 8.
   மன்னார்குடியில் சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் கட்டடங்கள் கட்டுதல்.
2. ஒப்பந்த வகை—
3. பிணைப்புப்பணம்—ரூ. 2,750. (செலுத்துச் சீட்டுமூலம் பெற்றுக்கொள்ளப்படும்).
4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 30.
   அரசினர் கருவூலத்தில் பொ. ப. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் செயற் பொறியாளர் கல்லணைக் கால்வாய், தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.
5. விற்பனை வரி; ரூ. 1·05. அரசினர் கருவூலத்தில் XII விற்பனைவரி 'பி' பற்றுச் சீட்டு மாநில விற்பனைவரி சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி எனும் தலைப்பில் செலுத்துதல்வேண்டும்.
6. கட்டடங்கள் கட்டுவதற்கான கால அளவு.
   8 மாதங்கள்.
7. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள் :—
   16—8—1971.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்
(பொ. ப. து.)
தஞ்சாவூர் வட்டம்,
9—7—71, தஞ்சாவூர்.

## தேவை

நிர்வாக அலுவலகத்தில் தேவைக்காக 10,000 முதல் 15,000 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடம் வாடகைக்கு அமிஞ்சிக்கரை, சேத்துப்பட்டு அல்லது நுங்கம்பாக்கம் பகுதியில் தேவைப்படுகிறது. சொந்தக்காரர்கள் இந்திய மருத்துவ இயக்குநர் அவர்களைக் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி நிர்வாக அலுவலகக் கட்டடத்தில் அணுகவும்.

இந்திய மருத்துவ இயக்குநர்,
சென்னை-10.

## இடமாற்ற அறிவிப்பு

### தமிழ்நாடு மின்சார வாரியம்

இதுகாறும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தஞ்சை மின் திட்ட அலுவலகம் முறையே 24, சிவாஜி நகர், 7, கணபதி நகர் இரு இடங்களிலும் செயல்பட்டு வந்ததை, 16–8–1971 முதல் 15, வ.உ.சி. நகருக்கு மாற்றப்பட்டு இருக்கிறது என்பதைப் பொது மக்களுக்கும், தஞ்சை மாவட்டத்தில் மின்சாரம் உபயோகிப்போர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். தஞ்சாவூர் மாவட்டத்தில் மின்சாரம் வழங்கப்படுவோரும் புது இணைப்புகள் வேண்டுவோரும், மின்சாரத்தடங்கல்கள், இணைப்புகள் முதலியவற்றிற்கு "மேற்பார்வைப் பொறியாளர், தஞ்சாவூர், மின் திட்டம், 15 வ.உ.சி. நகர், தஞ்சாவூர்", என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பி. கே. இலட்சுமிநரசிம்மன்,
மேற்பார்வைப் பொறியாளர்
தஞ்சாவூர் மின்சாரத் திட்டம்,
வ. உ. சி. நகர்,
தஞ்சாவூர்.

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

### டெண்டர் விளம்பரத் திருத்தம்

குறிப்பு எண் : சி 1101

எண்ணூர் அனல் மின் திட்டம்—இரண்டாம் நிலை—ஐந்தாவது யூனிட்டுக்கான மின் நிலைய நீடிப்பு—சுமார் 2000 டன் அளவுள்ள கட்டுமான இரும்புக்கான வரை வடிவம் கணக்கிடுதல், உண்டு பண்ணுதல், வழங்குதல், நிர்மாணித்தல் (Design fabrication supply and erection of about 2,000 tonnes of structural steel work.)

குறிப்பு எண் சி. 1101-க்கான ஒப்பந்தங்கள் திறக்கப்படும் நாள் அக்டோபர் மாதம் 13-ஆம் தேதி புதன் கிழமை நண்பகல் 12·00 மணிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

மேற்பார்வைப் பொறியாளர்,
தொழில் நுட்பம், (பொதுவியல்)
157, அண்ணா சாலை, சென்னை-2.

## ஏல அறிக்கை.

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை

கண்டனம் செய்யப்பட்ட தொடர் ஊர்தி பம்ப் எம். எஸ். ஒய். 2367 (பெரிய கவன்ட்ரி க்ளைமாக்ஸ் 1955-ஆம் வருட மாடல் கடலூர் பீச் ரோடிலுள்ள கடலூர் தீயணைப்பு நிலயத்தில் 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி திங்கள் கிழமை காலை 10மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இந்த ஊர்தியை மேற்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வி. ஜெயபெருமாள்,
கோட்ட தீயணைப்பு அலுவலர்,
ஆனைக் குப்பம்,
கடலூர்-1.



## வேலைவாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

தமிழ்நாடு இன்டஸ்ட்ரீஸ் சர்வீசில் விருத்தாச்சலத்தில் கலை மட்பாண்டப்பகுதிக்கு ஒரு உதவி மேற்பார்வையாளரும், சென்னை கொசவப்பேட்டை களிமண் பொம்மைகள், பாவைகள், சிலைகள் செய்வதற்குரிய பயிற்சி உற்பத்தி நிலயத்திற்கு அலுவல் மேல்பார்வையாளரும் தேவைப்படுவதால் அவற்றிற்குரிய விண்ணப்பங்கள் 16-9-1971 பிற்பகல் 5 மணிவரையிலும் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்—மாதம் ஒன்றுக்கு ரூ. 550-25-600-35-950.

கல்வித் தகுதிகள்—

1. பீங்கான் அல்லது சிலிகேட் தொழில்நுட்பக்கலையில் பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலயத்தின் மூலம் அல்லது இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் பட்டம் அல்லது டிப்ளமா அல்லது விருத்தாசலத்துப் பயிற்சிப் பள்ளியினால் பீங்கான் தொழிலில் வழங்கப்பட்ட நற்சான்றிதழ் உள்ளவர்கள் மனுச் செய்யலாம்.

அதோடு,

2. பீங்கான் தொழில் பட்டதாரிகளாயிருந்து இரண்டு ஆண்டுகளுக்குக்குறையாமல் செய்முறை அனுபவம் பெற்றவர்கள், டிப்ளமா நற்சான்றிதழ் பெற்றவர்கள் விஷயத்தில் நான்காண்டுகளுக்குக் குறையாமல் செய்முறை அனுபவம் பெற்றுள்ளவர்கள்.

வயது.—1-7-1971-ல் 30 வயதுக்குள் இருக்க வேண்டும்.

குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதியினும் மேம்பட்ட பொதுக் கல்வித் தகுதியுடைய ஷெட்யூல் வகுப்பினர், ஷெட்யூல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. ஏனைய ஷெட்யூல் வகுப்பினர், ஷெட்யூல் பழங்குடியினர் ஆகியோருக்கு உயர்ந்த வயது 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்கள் புதல்வர்கள், திருமணமாகாத அவர்களின் புதல்விகள் மற்றும் தேசிய மாணவர் படையில் 1-1-1963-ல் அல்லது அதற்குப்பின்னர் முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்டு மேஜராக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசிய மாணவர்படை காடெட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில்சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1-7-1971-ல் 40 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பார்களேயானாலும், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 1-1-1964-ல் அல்லது அதற்குப் பின்னர் குடிபெயர்ந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை, பர்மா ஆகியவற்றிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் "செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2" என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23, செ.மீ. நீளமுள்ள சுய விலாசமிட்ட 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி "நூல் அஞ்சல்" என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

### முதுநிலை பட்ட தரத்திலுள்ள போட்டித்தேர்வு

கீழ்க்கண்ட வேலைகளுக்கான நேரடித்தேர்வுகளுக்காக சென்னையில் 1971 நவம்பர்-டிசம்பர் திங்களில் நடைபெறவிருக்கும் முதுநிலை பட்டத்தின் தரத்திலுள்ள (Masters Degree Standard) எழுதுகின்ற பரீட்சை, வாய்மொழிப் பரீட்சை ஆகியவை அடங்கிய போட்டித் தேர்வுக்கு 1971 செப்டம்பர் 25-ஆம் நாள் மாலை 5 மணிவரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. தமிழ்நாடு சிவில் சர்வீசில் (நிர்வாகப்பிரிவு)—9 டிப்டி கலெக்டர் பதவிகள்—சம்பள விகிதம் மாதம் ரூ. 575-25-600-40-1,000.

2. தமிழ்நாடு வணிக வரிப்பணிகளில்—6 ஜாயன்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்கள் பதவிகள் சம்பளவிகிதம் மாதம் ரூ. 550-25-600-35-950

3. தமிழ்நாடு கூட்டுறவுப் பணிகளில்—2 டிப்டி ரிஜிஸ்ட்ரார் ஆஃப் கோவாபரேடிவ் சொஸைடீஸ் பதவிகள்—சம்பள விகிதம் மாதம் ரூ. 550-25-600-35-950.

4. தமிழ்நாடு காவல் துறைப் பணிகளில்--2டிப்டி சூபரின்டென்டெண்ட் ஆஃப் போலீஸ் பதவிகள்—சம்பள விகிதம் மாதம் ரூ. 575-25-600-40-1,000.

5. தமிழ் நாடு பதிவுப் பணிகளில்—ஒரு மாவட்ட ரிஜிஸ்ட்ரார் பதவி—சம்பள விகிதம் மாதம் ரூ. 550-25-600-35-950.

போலீஸ் டிப்டி சூப்பிரன்டெண்டெண்ட் வேலைக்குத்தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் விண்ணப்பதாரர்கள் உயரம் 165 சென்டிமீட்டருக்குக் குறையாமலும் மூச்சை உள்ளிழுக்கும்போது மார்பளவு 86 செ. மீட்டருக்குக் குறையாமலும் முழுமூச்சை உள்ளிழுக்கும் போது மார்பு 5 செ. மீட்டர் குறையாமல் விரிவடைவதாகவும் இருக்க வேண்டும்.

எல்லா வேலைகளுக்கும் ஒரே விதமான மனு தான்.

இதுபற்றிய முழு விவரங்களையும், விண்ணப்ப மனுவையும், செயலாளர், தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன், சென்னை-2 என்ற முகவரிக்கு வேலையின் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம்எழுதி, 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட தங்களது முகவரியுள்ள, 23 சென்டிமீட்டர் நீளமுள்ள உறையில் "நூல் அஞ்சல்" என எழுதிக் கடிதத்துடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

## ஓப்பந்தம்

### தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம்.
### சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்துக்காகவும் அதன் சார்பிலும், கீழ்க்கண்ட வேலைக்காக, பொது சுகாதாரப் பொறியியல் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் கிராமப் பொறியியல் பணித்துறை மற்றும் இவை போன்ற பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளரால் (பொ.சு.பொ.) அவரது அலுவலகம் 17, சர் பி. டி. ராஜன் சாலை, மதுரை-2-ல் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15—9—1971 மாலை 3-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாளில் மாலை 3-30 மணிக்கு அவை பிரிக்கப் படும்.

வேலையின் பெயர் : மேலூர் நீர்வழங்கு திட்டம்—ஆர்.சி.சி. பைப்புகள் மற்றும் காலர்கள் பி.2, பி. 3 பிரிவுகளின் சப்ளை டெலிவரி.

ஒப்பந்தப் படிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை : ரூ. 10,000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்).

ஒப்பந்தப்புள்ளியோடு இத் தொகை, கருவூல சலான் வடிவிலோ, டிமாண்டு டிராப்ட் வடிவிலோ, தேசஉடமை ஆக்கப்பட்ட பாங்கு ஒன்றின் பாங்க் காரண்டி வடிவிலோ, நிர்வாகப் பொறியாளர், பொ.சு. பொறியியல் டிவிஷன், மதுரை அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம் : ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 15.50 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களை, நிர்வாகப் பொறியாளர், பொ. சு. பொறியியல் டிவிஷன் 14, ராமமூர்த்தி தெரு, சொக்கி குளம், மதுரை-2—ல் 12—9—1971 மாலை 5 மணி வரை பெறலாம்.

கே. கோவிந்தமேனன்.
மேற்பார்வைப் பொறியாளர்.
(பொ.சு.பொ.).
மதுரை-2.

8—8—1971.

## பயிற்சி

### தமிழ்நாடு அரசு
### தொழில் வணிகத் துறை

அரசினர் விஞ்ஞான, கண்ணாடி தொழில் பயிற்சி நிலையம், தொழில்பேட்டை, சென்னை-32ல் விஞ்ஞான கண்ணாடிக் கருவிகள் இணைப்பில் பயிற்சி பெறுவதற்காக, தமிழ் நாட்டிலுள்ள ஆண் மனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதில் பயிற்சி பெற, குறைந்த பட்சத் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு—கல்லூரியில் சேரும் அளவில்—தேர்வு பெற்றிருக்கவேண்டும். வயது 1-10-1971-ல் 16க்கு மேல் 20-க்குள் இருத்தல் வேண்டும்.

பயிற்சிக் காலம் : இரண்டு ஆண்டுகள். பயிற்சிக்காக 20 பேர்தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் முதல் ஆண்டில் பயிற்சிக் கால உதவிப் பணமாக மாதம் ரூ. 40-ம் இரண்டாம் ஆண்டில் மாதம் ரூ. 50-ம் தரப்படும்.

மனு வடிவங்களை, மேற்பார்வையாளர், அரசினர் விஞ்ஞான கண்ணாடித் தொழில் பயிற்சி நிலையம், தொழில்பேட்டை, சென்னை -32-க்கு, 20 காசு அஞ்சல் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையை வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்டமனு வடிவங்களை மேற்பார்வையாளர் பெற்றுக் கொள்வதற்குரிய கடைசி நாள் 15—9—1971 ஆகும்.

## ஒப்பந்தம்—கால நீட்டிப்பு

### தமிழ்நாடு அரசு
### பொதுப்பணித் துறை
### திருத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கால நீட்டிப்பு அறிவிப்பு.

வேலையின் பெயர் : (1) மேல் சோழன் குப்பம் கிராமத்தின் அருகில் எல்.எஸ். 2970 அடியிலிருந்து 3,300 அடிக்குப்புதிய டாங்க் அமைப்பு 3,300 அடி மட்டத்தில் ஸ்லூயிஸ் கட்டுமானம்.

(2) மேல் சோழன் குப்பம் கிராமத்தின் அருகில் எல். எஸ். 2,400 அடியிலிருந்து 2,970 அடிக்குப் புதிய டாங்க் அமைப்பு. 2,970 அடிமட்டத்தின் ஸ்லூயிஸ் கட்டுமானம்.

பார்வை : (1) இந்த அலுவலகத்தின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 7531/71/டி10/நாள் 1—6—1971.

(2) இந்த அலுவலகத்தின் ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு 7531/71/டி 10/நாள் 12—7—1971.

மேற்கண்ட இரண்டு வேலைகளுக்காகவும் ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி மேற்கொண்டு 8—9—1971 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. 8—9—1971 மாலை 3-00 வரை ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3—15-க்கு அவை திறக்கப் படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 7—9—1971 வரை அலுவல் நேரத்தில் விற்கப்படும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ. ப.து.) செங்கற்பட்டு,
வட ஆர்க்காடு சர்க்கிள்,



## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்
### ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களை வாங்குவதற்குக்கீழே கையொப்பமிட்டவரால், தனித்தனியாக முத்திரையிட்ட " ஒப்பந்தங்கள் " அழைக்கப்படுகின்றன. ஒப்பந்தம் அனுப்பும் உறையின்மீது ஸ்பெசிபிகேஷன் எண்ணையும் முடிவு தேதியையும் தவறாமல் குறிப்பிட வேண்டும். ஸ்பெசிபிகேஷன், ஒப்பந்த பாரத்தின் நகல்கள் ஆகியவை ஒவ்வொரு ஒப்பந்த பாரத்திற்கும் ரூ. 5 (ரூபாய் ஐந்து) வீதம், ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ, தலைமை கணக்காயர், வேலூர் மின்சார அமைப்பு, எண் 10, கிழக்கு நெடுஞ்சாலை, காட்பாடி நகர் விரிவு, வட ஆர்க்காடு மாவட்டம் அவர்களுக்குச் செலுத்தி, 17—9—1971 தேதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

| வரிசை எண்ணும், பொருளும். | ஓ.டி.எஸ். எண். | | பொருள் தரவேண்டிய இடம். |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 1 குறைந்த மின்னழுத்த ஜி. ஐ. பின்கள் — — | 6/71—72 | — | காட்பாடி ரயில் நிலையம். |
| 2 குறைந்த மின்னழுத்த ஷேக்கில் இன்சுலேட்டருக்குத் தேவையான உலோகப் பகுதிகள். | 7/71—72 | — | ,, |
| 3 குறைந்த மின் அழுத்த டி.ஐ. பிட்டிங்ஸ் — | 8/71—72 | — | ,, |
| 4 எம்.எஸ். ஸ்டே ஸெட் முழுவதும் — — | 9/71—72 | — | ,, |
| 5 டிரான்ஸ்பார்மர் ஸ்டிரக்சரல் கிளாம்புகள் — | 10/71—72 | — | ,, |
| 6 எம். எஸ். பின் பக்க கிளாம்ப் சாதாரண வகை. 7·32 மீ. ஆர்.சி.சி. கம்பத்திற்கு. | 11/71—72 | — | ,, |
| 7 எம்.எஸ். பின் பக்க கிளாம்பு சிறப்பு வகை 7·32 மீ. ஆர்.சி.சி. கம்பத்திற்கு | 12/71—72 | — | ,, |
| 8 எம். எஸ். ஸ்டே கிளாம்ப் சாதாரண வகை 7·32 மீ. ஆர்.சி.சி. கம்பத்திற்கு. | 13/71—72 | — | ,, |
| 9 எம்.எஸ். ஸ்டே கிளாம்ப் சிறப்பு வகை 7·32 மீ. ஆர்.சி.சி. கம்பத்திற்கு. | 14/71—72 | — | ,, |
| 10 11000 ஓல்ட் எச்.ஜி. பியூஸ் செட்டுகள் — — | 15/71—72 | — | ,, |
| 11 அலுமினியம் நாப்ஸ் — — — — | 16/71—72 | — | ,, |
| 12 ஜி. ஐ. ஒயர் 7/20 — — — — | 17/71—72 | — | ,, |
| 13 சாதாரண தெரு விளக்குக்குத் தேவையான குழாய் பொருத்தும் கிளாம்புகள். | 18/71—72 | — | ,, |
| 14 விவசாய மின்னிணைப்புக்குத் தேவையான ஜி.ஐ. சர்வீஸ் இணைப்புக் குழாய் பொருத்தும் கிளாம்புகள். | 19/71—72 | — | ,, |
| 15 தேக்கு மரப் பலகை (0·483 மீ. × 0·381 மீ. × 15·09 மி.மீ.). | 20/71—72 | — | ,, |
| 16 தேக்கு மரப் பலகை (0·457 மீ. × 0·305 மீ. × 15·9 மி.மீ.). | 21/71—72 | — | ,, |
| 17 ஏரியல் தேக்கு மரப் பலகை (0·254 மீ. × 0·102 மீ.× 15·9 மி.மீ.). | 22/71—72 | — | ,, |
| 18 200 ஆம்பியர் 500 வோல்ட் பியூஸ் யூனிட்டுகள் — | 23/71—72 | — | ,, |
| 19 சாதாரண தெருவிற்குத் தேவையான ஜி.ஐ. குழாய் வளைவுகள் ( Brackets ). | 24/71—72 | — | ,, |
| 20 குழாய் விளக்குக்குத் தேவையான ஜி.ஐ. குழாய் வளைவுகள் ( Brackets ). | 25/71—72 | — | ,, |
| 21 ஜி.ஐ குழாய் ( Earth pipe ) 40 MM — | 26/71—72 | — | ,, |

## தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

**ஒப்பந்த அறிக்கை**

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் புது ஆவடி சாலையில் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 9-9-1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின்மீது, ஒப்பந்ததாரரின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிடவேண்டும்.

| எண். | வரிசை எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு ரூ. | கட்டுத் தொகை ரூ. | தஸ்தாவேஜி களின் விலை. |
|---|---|---|---|---|---|
| | | மூன்று மாடி கொண்ட குடியிருப்புகள் (32 × 1) | | | ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு தொகைக்கும்) |
| 1 | 1 | கட்டடங்கள் பிரிவு எ3, எ4 | 2,47,000 | L.S. 3700 | |
| 2 | 2 | கட்டடங்கள் பிரிவு எ5, எ6 | 2,47,000 | L.S. 3700 | |
| 3 | 3 | கட்டடங்கள் பிரிவு எ7, எ8 | 2,47,000 | L.S. 3700 | |
| 4 | 4 | கட்டடங்கள் பிரிவு எ13, எ14 | 2,47,000 | L.S. 3700 | |
| 5 | 5 | கட்டடங்கள் பிரிவு பி1, பி2 (24 × 1) | 1,86,000 | L.S. 2800 | |
| 6 | 6 | கட்டடங்கள் பிரிவு பி3, பி4 | 1,86,000 | L.S. 2800 | |
| 7 | 7 | 6 மீட்டர் விட்டம், 8 மீட்டர் ஆழம் கொண்ட, கான்கிரீட் வட்டமும், பக்கச் சுவர்களும் கூடிய கிணறு கட்டுதல். | 25,000 | L.S. 375 | |
| 8 | 8 | 1,50,000 லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கம் ஒன்று 21 மீட்டர் உயரத்தில் கட்டுதல். | 60,000 | L.S. 900 | |

வரை படங்களையும், ஒப்பந்தத் தஸ்தாவேஜிகளையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 30—8—71 முதல் 8—9—71 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 9—9—71 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு, வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

தாண்டவராயச்சத்திரம்
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3.

# திருவாளர் பொன்மொழியார்

**5**

‘வளைகிற முன் நுழையாது’ என்பார்கள். பொன்மொழியார் நின்று கொண்டிருந்த ரயில் பெட்டியின் கதவுக்குப் பக்கத்திலுள்ள இடைவெளியில் போலீஸ்காரர்கள் நுழைந்தார்கள்.

பொன்மொழியாரின் மூளை திடீரென மிக வேகமாக வேலை செய்தது.

இது-அணையப் போகும் விளக்கு ஒளியிடுவது போன்றது என்று உவமை சொல்ல முடியாது—பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சிப் பூவைப் போன்றதாகும்.

சில சினிமாக் கதைகள், பல நாவல்களில் வரும் சம்பவங்கள் அவரது நினைவுக்கு வந்தன.

தன் ‘இன்ஸ்டண்ட் குரு’ ஒரு போலிச் சாமியார்; அவரைத் தேடியே போலீசார் வந்துள்ளனர்; அதனாலேயே சாமியார் காணாமல் போய்விட்டார் என்ற முடிவுக்கு வந்தார் பொன்மொழியார்.

சாமியாரைப் பற்றி நம்மிடம் விசாரிப்பார்களோ என்று உள்ளத்தில் அச்சம் எழுந்தது. பேனாவில் மை இருந்தால்தானே இரவல் கொடுக்க முடியும்? நமக்கு எதுவும் தெரிந்திருந்தால்தானே அவர்களுக்குச் சொல்ல முடியும், என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டார்.

சமய சந்தர்ப்பம் தெரியாமல் சுவீடன் நாட்டுப் பழமொழி ஒன்று நினைவுக்கு வேறு வந்தது. ‘‘பொய் சொல்லிப் பரிசு பெறுவதை விட, உண்மையைச் சொல்லித் துன்பப்படுவது உயர்வானது’’ என்ற அந்தப் பழமொழிப்படியே நடப்பது என்று உறுதி பூண்டார்.

பொன்மொழியார் உறுதி பூண்டதன் விளைவோ என்னவோ மெதுவாக நகரத் தொடங்கிய ரயில் நின்றது.

பக்கத்துப் பெட்டியில் யாரோ இரைந்து கொண்டிருந்தார்கள். ‘‘இஞ்சின் கோளாறாம்; ரயில் கிளம்பக் கொஞ்சம் நேரமாகுமாம்.”

ரயில் கிளம்ப நேரமாகும் என்ற வார்த்தைகள் காதில் கேட்டவுடன் நாமே சென்று அந்தப் போலி குருவைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைப்போம், என்று ‘துப்பறியும் சாம்புவின்’ துணிவுடன் ரயிலை விட்டு இறங்கி நடந்தார்.

பின்னாலேயே போலீசாரும் நடந்து வந்தார்கள். தன்னைத் தொடர்ந்துதான் நடந்து வருகிறார்களோ என்ற சந்தேகம் பொன்மொழியாருக்கு ஏற்பட்டது.

ஐஸ்லாந்து நாட்டிலே சொல்லுவார்களாம், ‘‘கட்டுப்பாடில்லாமல் வாழ்கிறவன் கௌரவமில்லாமல் சாவான்’’ என்று! அதுபோல அருந்ததியின் கட்டுப்பாட்டை மீறி வந்ததால் இந்த நிலை வந்ததோ என்று நெஞ்சம் நொந்தார்.

ரயிலிலே உள்ளவர்கள் போலீசார் பின் தொடர, தான் வருவதைக் கவனித்துவிடுவார்களோ என்று எண்ணி ரயில்வே ஸ்டேஷனிலுள்ள ஸ்டால் ஒன்றை நோக்கி வேகமாக நடந்தார்.

ஸ்டாலில் போய் நின்ற பிறகே பொன்மொழியார் திரும்பிப் பார்த்தார். போலீசார் இவரைத் தேடவில்லை. அவர்கள் தங்கள் வழியே போய்க் கொண்டிருந்தார்கள். பொன்மொழியார் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்.

ஆனால், ரயிலில் உட்கார்ந்திருந்த அருந்ததியின் தோழி, அருந்ததியின் கணவர் இப்படிப் போலீஸ்காரர்களுடன் போவதைக் கவனித்தாள். ‘‘ஐயோ பாவம், தூக்கியெறியும் குதிரையைவிடச் சுமந்து செல்லும் கழுதை மேலானது’’ என்ற முடிவுடன் வீட்டை விட்டுவிட்டுப் போலீஸ்காரர்களுடன் போகிறார் என்று முடிவு கட்டிவிட்டாள். போலீஸ்காரர்கள் நேராகப் போனதையோ பொன்மொழியார் ஸ்டால் பக்கம் போனதையோ அவள் பார்க்கவில்லை;

**இளவல்**

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்' — தொலை பேசி எண் : 20167

தபால் பெட்டி எண் : 226

| | (வருடத்திற்கு சதவிதம்) |
|---|---|
| கரண்ட் அக்கௌண்ட் | 0·50 |
| சேவிங்ஸ் பாங் அக்கௌண்ட் | 4·00 |
| சேவ் டெபாஸிட்டுகள்—ரூ. 1000ம் அதற்கு மேலும். | |
| 15 நாட்கள் | 2·00 |
| 46 நாட்கள் | 3·00 |
| பிக்ஸெட் டெபாஸிட்டுகள் ரூ. 100ம் அதற்கு மேலும். | |
| 91 நாட்கள் | 4·75 |
| 6 மாதங்கள் | 5·25 |
| 12 மாதங்கள் | 6·25 |
| 2 வருடங்கள் | 6·75 |
| 3 வருடங்கள் | 7·25 |
| 5 வருடங்கள் | 7·50 |

குறைந்த பட்ச கால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஸிட்டுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களில் டெபாஸிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டி விகிதத்தை விட ½ சதவீதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டெபாஸிட்டுகள் : தவணைகளுக்கும் பெறும் மொத்தப்பணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும். ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

ஆர். கனகசபை
தலைவர்.

பி. என். டி. சாரி,
செயலாளர்.



## நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ் பிரைவேட் லிமிடெட்

1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தனிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண். 52870 - 52871
52872 - 52673

தந்தி: MONARCH



ARASU CEMENT
TIDCO

அருண் ஏஜன்சீஸ்
பஜார் தெருவு
பொதட்டூர்பேட்டை,
திருத்தணி தாலுகா,
செங்கை மாவட்டம்.

எங்களிடம் பயிர்களுக்கு வேண்டிய எல்லா விதமான கலவை உரங்களும், யூரியா, அமோனியம் சல்பேட், சூபர் பாஸ்பேட், பொட்டாஷ் மற்றும் பூச்சி மருந்துகளும் மலிவான விலையில் கிடைக்கும். நாங்கள் அரசு சிமெண்ட்டும் மிக மலிவான விலையில் விற்கிறோம். உங்கள் தேவைகளை எங்களிடம் வாங்கிக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

அருண் ஏஜன்சீஸ்
பாலாஜி பெர்டிலைஸர்ஸ் உரங்கள்,
அரசு சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்ஸ்.




...டால் பக்கம் வந்த பொன்மொழியார் இப்பொழுதுதான் பக்கத்தில் நின்ற மனிதரைப் பார்த்தார். பார்த்தவுடன் திடுக்கிட்டார். கூச்சல் போட்டு எல்லாரையும் அழைக்கலாமா என்று கூட யோசித்தார். ஆனால், இப்படி ஒரு சில நிமிடங்களில் 'குருத் துரோகி'யாக மாறுவதா என்ற எண்ணம் வந்தது. இன்னா செய்தார்க்கும் இனியது அல்லவா செய்ய வேண்டும், என்ற முடிவுக்கு வந்தவராய் குருவை நோக்கிக் கனைத்தார்.

'இன்ஸ்டன்ட்' குருவோ இப்பொழுதுதான் திரும்பிப் பார்த்தார். அரை டஜன் வாழைப் பழங்களை உள்ளே தள்ளிவிட்டுக் கையில் அரை டஜன் பழங்களை வைத்துக் கொண்டு மிகப் பொறுமையாக உரித்துக் கொண்டிருந்தவர் தமது திடீர் சீடகோடியைக் கண்டு மகிழ்ந்தார்.

குருவைக் கண்டவுடன் மயங்கி நின்ற பொன்மொழியாருக்கு வழக்கம் போல ஸ்காட்லாந்துப் பொன்மொழி நினைவுக்கு வந்தது. நொண்டியுடன் நீ ஒரு வருடம் நடந்தால் வருட இறுதியில் நீயும் நொண்டியாவாய், என்ற அந்தப் பழமொழிபோல, துறவு மனப்பான்மையும் வந்தது. குருவைப் போலப் பசியும் வந்தது.

கடையில் வாழைப்பழம் வாங்கப்போன பொன்மொழியாரைத் தடுத்து, "எட்டுப்பழம்தான் என்னால் தின்ன முடிந்தது" என்று சொல்லிவிட்டு நான்கு பழங்களைச் "சாப்பிடுங்கள்" என்று கூறினார் குரு.

குரு கொடுத்த பழங்களை வாங்க மறுப்பது அழகல்ல என்ற நினைப்புடன் பொன்மொழியார் பெற்றுக் கொண்டார்.

அருந்ததி ஒருநாள் கூட இவ்வளவு அன்புடன் எதுவும் நமக்குக் கொடுத்ததில்லை. ஆனால், எவ்வளவு அன்புடன் குரு நம்மிடம் நடந்து கொள்கிறார்? இவரைப் போய்த் தவறாக நினைத்து விட்டோமே! "நரி நம்புகிறது. எல்லாரும் தன்னைப் போலவே கோழிகளைப் பிடித்துத் தின்கிறார்கள்" என்ற பிரெஞ்சுப் பழமொழியைப்போல நாமும் எண்ணி விட்டோமே! எல்லாச் சாமியார்



களும் இப்படிப்பட்டவர்களா! இல்லவே, இல்லை! இப்படிச் சிந்தனை ஓடியது.

குரு, இப்பொழுது பேசத் தொடங்கினர்.

"குருடாகப் பிறந்தவன், ஒரு போதும்வெளிச்சத்தை நம்பமாட்டான்; பணக்காரனுகப்பிறந்தவன் பசியை அறிய மாட்டான்; தானையும் துறந்தவன்தான் நல்லது கெட்டதை அறிவான். பசியை அறிந்ததனுல்தான் இப்படிக் கொஞ்சம் பழத்தை உண்டு பசியாறலாம் என்று வந்தேன்".

"சுவாமி! அரேபிய நாட்டிலே ஒரு பழமொழி சொல்லுவார்களாம், 'நோயாளியைப் பார்க்க ஒரு மைல் தூரம் செல்; இரண்டு பேர்களுக்கிடையில் சமாதானம் செய்ய இரண்டு மைல் தூரம் செல்; ஒரு நண்பனைக் காண மூன்று மைல் தூரம் செல்!" என்று; அது போலத் தங்களைக் காண ஆயிரம் கிலோ மீட்டர் வரை செல்லலாம். தங்களைக் காணுததனுல் இப்படி வந்தேன்.

"பொன்மொழியார் அவர்களே! 'அன்பினுல் சிங்கத்தின் மீசையைப் பிடிக்க முடியும்' என்ற அரேபியப் பழமொழியை நான் கேட்டு இருக்கிறேன். ஆனுல் தங்கள் அன்பினுல் எரிகின்ற பல்லையும் பிஸாக்கிவிடலாம்; எரிமலையை அணைத்து விடலாம்" என்ருர் சாமியார்.

பொன்மொழியாருக்கு உச்சி குளிர்ந்தது. அதே நேரத்தில் சந்தர்ப்ப, சூழ்நிலையை உணராது அடிக்கடி பழமொழிகள் ஞாபகம் வருமே, அப்படி ஒரு பழமொழி ஞாபகத்துக்கு வந்தது. 'உன்னை ஒருவன் அளவுக்கு ஒரு முறை புகழ்கின்ருன் என்ருல் உன்னை ஏமாற்றத் தொடங்கி விட்டான்; நீ ஏமாற ஆரம்பித்து விட்டாய்" என்ற அந்தப் பழமொழியை இப்போது நினைப்பது தவறு என்று தோன்றியது. எப்படிப்பட்ட குருவை இப்படி நினைக்கலாமா? சேச்சே என்று தனது பழமொழியறிவை நொந்தார்.

"அறியும் சக்தியைப் போன்றதொரு கண்ணில்லை; அறியாமையைப் போன்றதொரு குருடு இல்லை; நோயைப் போன்றதொரு பகைவன் இல்லை; மரணத்தைப் போன்றதொரு பயம் இல்லை"—என்ற பழமொழி எவ்வளவு உண்மையானது! ஓர் உண்மையான துறவியை எவ்வளவு தவருக நினைக்கின்ருேம்? உண்மை அறியும் சக்தியில்லாமல் தடுமாறுகிருேமே! என்று எண்ணத் தொடங்கிவிட்டார்.

சீடரின் சிந்தனையைப் பார்த்த குரு, நான் வண்டியில் போய் அமருகிறேன், வாருங்கள் என்று சொல்லிவிட்டுக் கிளம்பினுர். அந்தச் சமயத்தில் எதிர்ப் பக்கத்திலிருந்து இரண்டு போலீஸ்காரர்களும் வரவே, மறுபடியும் பொன்மொழியாரிடம் அச்சம் தலைதூக்கியது. ஆகவே, குருவை அழைத்துக் கொண்டு, "என் நண்பர் ஒருவர் அங்கே அமர்ந்திருக்கிருர். அவரைப் பார்த்து விட்டு வரலாம். கல்வி, கேள்வி ஞானம் மிகுந்த அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்துவது நல்லது" என்று சொன்னுர் பொன்மொழியார். சீடரின் மொழி கேட்டு, மறுப்பு எதுவும் மொழியாது முன்னுலே நடந்தார் குருநாதர்.

இந்த நேரத்தில் ரயில், திடீர் குரு, திடீர் சீடரைப் போல், திடீர் முடிவு எடுத்து ஊதிக்கொண்டு கிளம்பியது.

உடனே குருவும் சீடரும் ஓடிப்போய் ரயிலில் ஏதோ ஒரு பெட்டியில் ஏறினுர்கள்.

அங்கே.... (தொடரும்)


## காலக் கண்ணாடி



சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,



## பகல் முழுதும் கடினமான வேலைக்குப் பிறகு...



## புத்துயிரளிக்கும் நெஸ்கா:பே ஒரு கப் அருந்துங்கள் –5 செகண்டில் தயார்!



5 செகண்டில் தயார்




NCE 6369

# நெஸ்கா:பே

முற்றிலும் சுத்தமான காப்பி–
தென்னிந்திய காப்பி
விதைகளிலிருந்து
தயாரிக்கப்பட்டது

**உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே**
**ஊக்கமளிக்கிறது நெஸ்கா:பே!**

# பிறப்பு இறப்புப் பதிவுகள்

**என்.வி.கே.கே. நம்பியார்**

நாட்டு மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்களுக்கு நான்கு நிகழ்ச்சிகள் காரணமாகின்றன. அவை : (1) பிறப்புக்கள், (2) இறப்புக்கள், (3) புதிய குடியேற்றங்கள், (4) வெளியேற்றங்கள் ஆகும். நம் நாட்டில் குடியேற்றங்களினல் மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பெருக்கம் ஏற்படுவதில்லை; மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு இங்கு முக்கியக் காரணமாய் இருப்பது இறப்புக்களை விட பிறப்புக்கள் மிகுதியாக இருப்பதே ஆகும்.

கடந்த சில ஆண்டுகளாக இறப்பு வீதத்தில் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி இருக்கிறது ; ஆனல் பிறப்புக்களிலோ அல்லது பிறப்பு வீதங்களிலோ ஏதும் குறிப்பிடத்தக்க குறைவு தெரியவில்லை.

மக்கள் தொகைப் பெருக்க வீதத்தின் உத்தேச அளவை அறிவதற்காக, அவ்வப்போது பிறப்பு வீதத்திலும், இறப்பு வீதத்திலும் ஏற்படும் மாற்றங்களை ஆராய வேண்டியது அவசியமாகிறது. இதற்கு, மிகச் சிறந்த பதிவு முறையை—எல்லாப் பிறப்புக்களையும் இறப்புக்களையும் தவருமல் பதிவு செய்யத்தக்க ஒரு முறையை— நாம் வகுக்க வேண்டியுள்ளது. எல்லாப் பிறப்புக்களும், இறப்புக்களும் பதிவு செய்யப்படுமானல், அவை பல்வேறு பொதுச் சுகாதாரப் பிரச்சினைகளையும் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பிரச்சினைகளையும் ஆராய்வதற்கு மிக்க துணை செய்யும். பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து நிறைவேற்றும் பொறுப்பிலுள்ள ஆட்சியாளர்கள், தேசிய உற்பத்தி, தேசிய வருவாய், உணவு உற்பத்தி, உணவுத் தேவை ஆகியவற்றின் தனியொருவரின் சராசரி அளவை முடிவு செய்வதற்கு மக்கள் தொகைப் பெருக்கத்தைப்பற்றி அறியவேண்டியுள்ளது. பல்வேறு ஆட்சி நிறுவனங்களும் தத்தம் வேலைத் திட்டங்களின் சாதனைகளையும், வெற்றியையும் மதிப்பிட்டறிய மக்கள் தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றம் பற்றிச் சரியாக அறிய வேண்டியுள்ளது. மேலும், மக்கள் தொகைப் பெருக்கத்தின் பொருளாதார நிலை குறித்து ஆராய்ந்தறியவும், திறம் மிக்க பிறப்பு இறப்புப் பதிவு முறை, மிகவும் இன்றியமையாததாகிறது. மற்றும் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின் திறனையும், வெற்றி தோல்விகளையும் மதிப்பிட்டறிவதற்கும் முழுமையான, சரியான பிறப்பு-இறப்புப் பதிவு தேவையாகும்.

நம்பத்தக்க பிறப்பு-இறப்புப் புள்ளி விவரம் இல்லாதபோது, சென்ஸஸ் கணக்கெடுப்பின் அடிப்படையில் பிறப்பு-இறப்பு வீதங்களைக் கணக்கிட வேண்டியுள்ளது. ஆனல் சரியான பிறப்பு இறப்புப் பதிவு முறை நடைமுறையில் இருக்குமானல், எளிதில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அளந்தறிய முடியும். பிறப்பு-இறப்புப் பதிவின் இன்றைய நிலை திருப்திகரமாக இல்லை. இன்றைய முறை திருத்தி அமைக்கப்பட்டாலொழிய மக்களின் பொருளாதார அபிவிருத்தி, தவருன புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே கணக்கிடப்படும்.

இன்று எல்லா வேலைத் திட்டங்களின் பலனும் மதிப்பிடப் படுகின்றன. இந்தப் பயன் மதிப்பீடு, திட்டத்தைப் பற்றிய சரியான புள்ளி விவரங்களின் உதவியுடன் மட்டுமே செய்ய முடியும். நம்முடைய திட்ட வேலைகள் அனைத்துக்கும், மக்கள் தொகைப் பெருக்கத்தைப் பற்றியும், பிறப்பு இறப்பு வீதங்களைப்பற்றியுமான உண்மை நிலையை அறிய வேண்டியுள்ளது. திறம் மிக்க பிறப்பு—இறப்புப் பதிவு முறையைக் கடைப்பிடிப்பதன் மூலமே இவ்வுண்மைகளை அறியமுடியும்.

குடிமை, வாக்குரிமை, தனி மனிதனின் உரிமைகள் ஆகியவற்றை நிலைநிறுத்தப் பிறப்புப் பதிவேடுகள் மிகவும் பயன்படுகின்றன.

பள்ளியில் சேர, வேலையில் சேர, ஆயுள் ஈட்டுறுதிப் பலன்களைப்பெற முதலியவைகளுக்கு பிறப்புப் பதிவிலுள்ள '' பிறந்த தேதி '' உதவுகிறது; தேவைப்படுகிறது. அதே போல் சட்டபூர்வமான குடும்பச் சார்பை நிரூபிக்க தாய்-தந்தை யாவர் என்பதை நிரூபிக்கப் பிறப்புப் பதிவு உதவுகிறது.

அதேபோன்று, இறப்புப் பதிவேடுகளும் மருத்துவ-சுகாதாரப் பணிகளுக்கு இறப்புப் புள்ளி விவரங்கள் அளிக்கும் ஆதாரங்களாக விளங்கி மிகுந்த பலனளிக்கின்றன. மேலும் அவை, (1) இறந்தவரின் ஆயுள் ஈட்டுறுதித் தொகையைக் கேட்டுப் பெற, (2) ஓய்வூதியங்களைக் கேட்டுப்பெற, (3) இறந்தவரைப் பற்றிய பல உண்மைகளை (அதாவது இறந்த சூழ்நிலை, இறப்புக்காரணம், வயது ஆண்/பெண், சமூகம்) அறியப் பயன்படுகின்றன.

மக்கள் தொகைப் புள்ளி விவர இயல் வல்லுநர்க்கும் பிறப்பு-இறப்புப் புள்ளி விவரம் மிகவும் பயன்படுகின்றன. பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்களைக் கொண்டு மக்கள் தொகைப்புள்ளி விவர இயல் வல்லுநர்கள், மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்களுக்கான பல்வேறு காரணங்களை ஆராய முடியும்.

மக்கள் தொகை மாற்றங்களை ஐந்து வகையாகக் கூறலாம். அவையாவன :—

1. உயர்ந்த அளவு பிறப்பு வீதமும் உயர்ந்த அளவு இறப்பு வீதமும்.

2. உயர்ந்த அளவு பிறப்பு வீதமும் குறைந்து வரும், எனினும் சுமாராகக் குறைந்த அளவு இறப்பு வீதமும்



3. உயர்ந்த பிறப்பு வீதமும் சுமாராகக் குறைந்த இறப்பு வீதமும்.

4. குறைந்துவரும் பிறப்பு வீதமும் மிகக் குறைந்த இறப்பு வீதமும்.

5. உயர்ந்தும், குறைந்தும் மாறி மாறிவரும் பிறப்பு-இறப்பு வீதங்கள்.

இந்தியாவில் இப்பொழுது, மக்கள் தொகையில் மேலே 3-வது ஆகக் கூறப்பட்ட வகை மாற்றம் நிகழ்ந்து வருகிறது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் தீவிரமாக எடுக்கப்படும் முயற்சிகளின் விளைவாக, இந்திய மக்கள் தொகையில், மேலே 4-வது ஆகக் கூறப்பட்ட வகை மாற்றம் நிகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிறப்பு-இறப்பு வீதங்களின் போக்கை ஆராய்வதற்கு ஒரு சிறந்த பிறப்பு-இறப்புப் பதிவு முறை மிகவும் அவசியமாகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில், திருமண வயதையும், பிள்ளைப்பேற்று வயதையும் முதல் இரண்டாவது பேறுகளின் அடிப்படையில் பிள்ளைப்பேற்றுத் திறன் வீதத்தையும் கணக்கிடுவதற்குப் பிறப்பு-இறப்புப் பதிவேடுகள், கருத்தடைக்குத் தகுதியுடைய தம்பதிகளின் பட்டியல் பதிவேடுகள் ஆகியன பெரிதும் துணை செய்கின்றன.

மக்கள் தொகையின் பிள்ளைப் பேற்றுத்திறன், இறப்பு, நோய் அளவுகளில் மாற்றம் ஏற்படுத்துவதே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கொள்கை ஆகும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பலனை நாம் அவ்வப்போது (காலமுறைப்படி) மதிப்பிட்டறிய வேண்டியுள்ளது. இந்த மதிப்பீடு, பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்களைப் பகுத்தாராய்வதன் மூலமே செய்ய முடியும். திறம் மிக்க மக்கள் தொகைப் பெருக்கக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்குப் பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்கள் சரியாக வைத்திருக்க வேண்டியது முதற் தேவையாகும்.

உலகிலுள்ள நாகரிக நாடுகள் ஒவ்வொன்றிலும் பிறப்பு-இறப்புப் புள்ளி விவரச் சேகரிப்புக்குச் சரியான முறை பின்பற்றப்படுகிறது.. சரியான பிறப்பு-இறப்புப் புள்ளி விவரம் தனி மனிதனுக்கு—சமுதாயத்துக்கு—நாட்டுக்குப் பல்வேறு வழிகளில் பயன்தருகிறது. மேலும் எல்லாப் பொதுச் சுகாதாரத் திட்டங்கள் பல்வேறு திட்ட வேலைகள் ஆகியவற்றின் தன்மையையும், திறனையும் ஆராய்வதற்கும் இப்புள்ளி விவரங்கள் பெரிதும் உதவுகின்றன.

## வேலையில்லாத் திண்டாட்டம்- இரண்டு விதம்

மாநிலத்தில் எல்லா வகுப்பினர்களிடையேயும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிக அளவில் இருக்கிறது என்ற போதிலும், முற்பட்ட வகுப்பினர்களிடையே இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், பிற்பட்ட வகுப்பினர்களிடையே இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் ஒரு முக்கிய வேறுபாடு இருக்கிறது. முற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் கூட வேலை கிடைப்பதற்காகப் பெரும் பாடுபடுகிருர்கள் என்பது உண்மைதான். ஆனல் அவர்கள் வேண்டுவதெல்லாம் மதிப்புள்ள, நல்ல ஊதியம் கிடைக்கக்கூடிய வேலைகளே. பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் கேட்பது தங்களுக்கு ஏதாவது ஒரு வேலை வேண்டும் என்பதாகும். முற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் கேட்பது தங்களுக்கு ஒரு 'நல்ல வேலை' வேண்டும் என்பது.

பிற்பட்ட வகுப்பினர்களிடையே படிப்பு இல்லாதவர்களும், தொழில் நுட்பம் தெரியாதவர்களும் இலட்சக் கணக்கில் இருக்கிருர்கள். அவர்கள் எந்த வேலை கிடைத்தாலும்—உடல் உழைப்பு வேலையாகவோ தரக் குறைவான வேலையாகவோ அல்லது அருவருக்கத்தக்க வேலையாகவோ இருந்தாலும் சரி—மனமுவந்து எடுத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிருர்கள்.”

—தமிழ்நாடு பிற்பட்டோர் நலக்குழு அறிக்கைப் பகுதி




# நாட்டை முன்னேற வைத்திடும் நற்பணியிலே

எரிபொருள் நிரப்புவதிலே நிபுணத்துவம் கண்ட இண்டியனுயில் பணியினை, உலகப் புகழ்படைத்த 20 விமான நிறுவனங்கள் பயன்படுத்திவருகின்றன. பாரத நாட்டின் போக்குவரத்து, தொடர்புத் துறைகளின் வளர்ச்சியிலே தனியிடம் வகிக்கிறது இண்டியனுயில் பணி. நாட்டின் விவசாய, தொழில் துறைகளுக்குச் செலுத்திவரும் பங்கோ அதற்குச் சற்றும் குறைந்ததல்ல.

பத்தே ஆண்டுகளுக்குள், எண்ணெய்ச் சுத்திகரிப்பிலும் விற்பனையிலும் இந்தியாவிலேயே மிகப் பெரிய நிறுவனமாக ஓங்கிநிற்கிறது இண்டியனுயில் — — நாட்டின் முழுமொத்தப் பெட்ரோலியத் தேவைகளிலே பாதிக்கு மேல் ஈடுசெய்கிறது.

உள்நாட்டு க்ரூட் ஆயிலை விளைப்படுத்தப் பற்பல சுத்திகரிப்பு ஆலைகள், மாணப்பெரிய குழாய்வழிப் போக்குவரத்து மண்டலம், நாடுநெடுக விழுது பரவிக் கிளைத்த சேமிப்பு, வினியோக அமைப்புகள் — — யாவுமிணைந்த இண்டியனுயில், நாட்டின் பாதுகாப்புக்கும் அபிவிருத்திக்கும் உரிய ஆயிலை வற்றாத ஊற்றாய் வழங்கிவருகிறது.

நாட்டின் திட்டமிட்ட முன்னேற்றத்திற்கான ஒரு பங்காக, பெட்ரோலியம் பெற்றடைவதிலே, தன் காலூன்றித் தன்னிறைவு காணும் இலக்கை நோக்கித் தாயகத்தை இட்டுச்செல்ல இடையறாது உழைத்துவருகிறது இண்டியனுயில்.

INDIANOIL

பொருளாதார வளமைக்கான தேசிய ஸ்தாபனம்

இண்டியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிமிடெட்


195

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

## வேளாண்மை பற்றிய வினுக்களே கேட்கப்படவேண்டும்

வினு : தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சிக்காகக் குழாய்க் கிணறுகள் அமைக்க எந்த அளவு உதவி செய்ய முடியும் என்பதனை ஆய்வு செய்ய உலக பாங்கு ஒரு குழுவினைத் தமிழகத்திற்கு அனுப்பியது எனத் 'தமிழரசு' (அக். 16, 1970) இதழில் வெளி வந்தது. அந்தக் குழுவின் முடிவுப்படி உலக பாங்கு தமிழ்நாடு அரசுக்கு உதவி செய்ததா?

—கே. எஸ். கலியபெருமாள்,
கட்டமுத்துப்பாளையம்.

விடை : ''நாம் அனுப்பியிருந்த திட்டம், உலக வங்கியின் கீழ் நடைபெறும் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தால் (International Development Association) ஏற்கப்பட்டிருப்பதை இப்பேரவைக்குப் பெரும் மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன். மாநில நிலவள வங்கியின் தலைவரும், அரசு அதிகாரிகளும் 1971 ஏப்ரல், மே திங்களில் வாஷிங்டனில் நடைபெற்ற உரையாடல்களில் கலந்துகொண்டு, சென்ற பணியினை வெற்றிகரமாக முடித்து அதன் விளைவாக நமக்கு ரூபாய் 40 கோடி அளவுக்குக் கூடுதல் கடன் வசதி கிட்டிட ஏற்பாடுகள் செய்து முடித்துள்ளனர்'' என்று தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சட்டமன்றப் பேரவை முன் ஆற்றிய வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளதைத் தங்களுக்கு நினைவுப்படுத்துகிறோம்.

வினு : ஜூலை 16, 1971 'தமிழரசு' இதழில் வெளியாகி உள்ள 'செக்கச் சிவந்த தக்காளி' என்ற பகுதியைப் படித்து மகிழ்ச்சி அடைந்தேன். நான் கோ. 1 தக்காளி பயிர் செய்ய விரும்புகின்றேன். அதற்குரிய விதையை எங்குப் பெறலாம்? பெறும் முகவரியையும், அது கிலோ என்ன விலை என்பதையும் தெரிவிக்கும்படி மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

—பெரியசாமி,
காஞ்சிகோயில்.



வேளாண்மை அமைச்சர், மானிய விலையில் தெளிப்பானை வழங்குகிறார்

விடை : கோ. 1 தக்காளி விதை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் கிடைக்கலாம். அங்குக் கிடைக்காவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) [Deputy Agricultural Officer (Extension)] அவர்களிடம் கூறி வரவழைத்துக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்ளலாம். அல்லது கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

''நுண்ணறிஞர் (காய்கறி),
வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.''

• • •

வினு : 'செக்கச் சிவந்த தக்காளி' கதையில் பலவகைத் தக்காளியை அறிமுகப் படுத்தியுள்ளீர்கள். அதன் விதைகள் எங்குக் கிடைக்கும் என்ற விவரத்தை அடுத்த இதழில் அறிமுகப்படுத்தும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

—எஸ். இராமச்சந்திரன்,
விக்ரமம்.

விடை : மேற்கூறிய விடையே தங்கள் கேள்விக்கும் பொருந்தும். ஆனால், 'ஆர்.இ.டி.சி.1' (R. E. T. C. 1.) என்ற தக்காளி விதை பெறவேண்டு

மாஞல் பின்கண்ட முக வரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

''முதல்வர்,
கிராமிய வளர்ச்சி பயிற்சி நிலையம்,
கிருஷ்ணகிரி (அஞ்சல்),
தருமபுரி மாவட்டம்.

* * *

**விஞ:** நான் பொட்டல்புதூர் கிளை நூலகத்தின் வாயிலாக 'தமிழரசு' இதழ் படித்து வருகின்றேன். அதில் வெளியாகும் விவசாய விளக்கங்கள் விரிவான முறையில் இருக்கின்றன. ஆகவே, ஒரு ஏக்கர் நிலத்தில் வேர்க்கடலைச் சாகுபடி செய்ய வேண்டிய முறைகளைப்பற்றி ஆரம்பம் முதல் கடைசி வரை தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

—ச. பிரான்சிஸ்,
பொட்டல்புதூர்.

**விடை:** தற்பொழுது மாஞவாரியாகப் பயிர் செய்ய 'டி.எம். வி. 10' என்ற நிலக்கடலை ரகத்தைப் பயன்படுத்துதல் மிகுந்த இலாபம் அளிக்கும். இந்த ரகத்தின் சாகுபடிக் குறிப்புகளின் முழு விவரமும் அறியத் தயவுசெய்து ஆகஸ்ட் 1-ஆம் தேதி 'தமிழரசு' இதழில் பக்கம் 15-ஐப் படியுங்கள்.

* * *

**விஞ:** கடலை போட எந்த அளவு, என்ன உரம் இட வேண்டும்? விதைபோட்ட எத்தனை நாட்கள் கழித்து யூரியாவை மேல் உரமாக 'ஸ்ப்ரே' செய்ய வேண்டும்?

வரிச்சிக்குடி கிராம வாஞெலி மன்றம், புதுவை மாநிலம்.

**விடை:** இறைவை நிலக்கடலைக்கு ஏக்கருக்கு 7 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச் சத்து, 21 கிலோ சாம்பல் சத்து அளிக்க வேண்டும். இந்த அளவு சத்துக்களை அளிக்க ஏக்கருக்கு 175 கிலோ 7-ஆம் எண் கலப்பு உரத்தை (Mixture fertiliser) கடைசி உழவில் அடியுரமாக இட வேண்டும்.

மாஞவாரி நிலக்கடலைக்கு ஏக்கருக்கு 4 கிலோ தழைச் சத்தும், 8 கிலோ மணிச் சத்தும், 12 கிலோ சாம்பல் சத்தும் போட வேண்டும்.



நிலக்கடலை மகசூல் பெருக இரசாயன உரமிடுங்கள்.

இச்சத்துக்களைப் பெற ஏக்கருக்கு 100 கிலோ 7-ஆம் எண் கலப்பு உரத்தைக் கடைசி உழவில் அடியுரமாக இட வேண்டும். அதன் பின் 15 நாட்கள் கழித்துச் சுண்ணும்புச் சத்து (Calcium) நிலக்கடலைக்கு இடுவது இன்றியமையாதது. தரமான காய்கள் தோன்றவும், பருப்புகள் நன்கு முதிர்ச்சி பெறவும் சுண்ணும்புச் சத்து தேவை. எனவே, நிலக்கடலைக்கு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சமும் அளித்தல் வேண்டும். அத்துடன் 'போராக்ஸ்' (Borax) போடுவதால் நிலக்கடலையின் காய்கள் பருமஞக ஆவதுடன், சுமார் 15 சத அதிக மகசூலும் கிடைக்கிறது. எனவே, நிலக்கடலை சாகுபடியாகும் நிலத்திற்கு 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏக்கருக்கு 5 முதல் 7 கிலோ வரை 'போராக்ஸ்' இட வேண்டும்.



மாஞவாரிக்கு ஏற்றது கே. ஆர். ஆர் 1 அல்லது கே. ஆர். ஆர். 2 என்

* * *

**விஞ:** தற்பொழுது மாஞவாரியாக எள் விதைக்க எந்த ரகத்தை விதைக்கலாம்? என்ன இரசாயன உரம் இட வேண்டும்? ஏக்கருக்கு எவ்வளவு விதை விதைக்க வேண்டும்?

—தங்கராசு, பெரம்பலூர்.

**விடை:** ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் மாஞவாரியாக எள் சாகுபடி செய்ய வேண்டுமாஞல், 'கே.ஆர்.ஆர். 1' (கரூர்-1) அல்லது 'கே.ஆர். ஆர். 2' (கரூர்-2) ஆகிய ரகங்களைப் பயன்படுத்துவதே நல்லது. நிலத்தை 4 முதல் 6 தடவை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது, கடைசி உழவில் ஏக்கருக்கு 5 வண்டி தொழு எரு, 45 கிலோ அமோனியம் சல்பேட், 28 கிலோ சூப்பர் பாஸ்பேட், 8 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ், 2 கிலோ மாங்கனீஸ்சல்பேட் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். ஏக்கருக்கு 2½ கிலோ விதையை விதைக்க வேண்டும். விதைத்த 10-வது நாளும், 20 முதல் 25 நாட்களிலும் இரு முறை செடிகளைக் கலைத்து விடலாம். செடிக்குச் செடி 12×12 அங்குலம் விட்டு அதிகமாக இருக்கும் செடிகளை அகற்றுதல் நல்லது. 2-வது முறையாகப் பயிர்கலைப்புச் செய்யும் போது, முதற்களை எடுக்கலாம். தேவையாஞல் விதைத்த 35 நாட்களுக்குள் 2-வது களை எடுக்கலாம்.

**விஞ:** பெல்லாரி பெரியவெங்காயம் நாற்றுவிட சிறந்த பட்டம் எது? வரும் ஆவணி மாதவாக்கில் நாற்றுவிட பட்டம் உள்ளதா? விதை எங்கு கிடைக்கும்? ஒரு ஏக்கர் நடவு செய்ய எவ்வளவு விதை தேவை?

—எம். தியாஞமூர்த்தி,
கோபி.

**விடை:** பெல்லாரி வெங்காயத்தை ஆடி (ஜூன்+ஜூலை) மாதத்தில் நாற்றுவிட்டிருக்க வேண்டும். ஆடி மாதத்தில் எவரேனும் நாற்று விட்டு வைத்திருந்தால் 30 நாட்கள் வயதுடைய நாற்றுகளை வாங்கி ஆவணி மாதத்தில் நடவு செய்யலாம். அவ்வாறு நாற்று கிடைக்காவிட்டால், டிசம்பர்-ஜனவரி மாதங்களில் நாற்று விடலாம். ஒரு ஏக்கர் நடவு செய்ய 2·25 கிலோ விதையை 5 சென்ட் நாற்றங்காலில் நாற்று விட வேண்டும். தேவையான விதைகளைப் பெற முன்கூட்டியே உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களுக்குத் தெரிவித்து விடுங்கள். பெல்லாரி வெங்காயச் சாகுபடி முறைகளை அறிய டிசம்பர் 16, 1970 'தமிழரசு' இதழில் வெளியாகி உள்ள ''வெங்காய மகிமை'' என்ற கட்டுரையைப் படியுங்கள்.

**விஞ:** நான் ஒரு சிறு விவசாயி. நெற்பயிருக்கு மருந்து தெளிப்பதற்காக நானே ஒரு ஸ்ப்ரேயரை வாங்கி வைத்துக் கொள்ள விரும்புகின்றேன். இதற்கு அரசாங்கம் ஏதேனும் உதவி செய்யுமா?

—செல்ல பெருமாள், பழனி.

**விடை:** தனிப்பட்ட உழவர்கள் நெற்பயிருக்கு மருந்து தெளிக்க சொந்தத்தில் கையால் இயங்கும் தெளிப்பான்களை (Hand operated Sprayers) வாங்கிக் கொள்ள அரசாங்கம் மானியம் (Subsidy) கொடுக்கிறது. வேளாண்மைத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட தெளிப்பான்களில் மிகவும் குறைந்த விலையில் பாதியை மானியமாகக் கொடுக்கப்படுகிறது. மானியம் போக மீதித் தொகையை விற்பனை வரியுடன் கட்டிஞல் தெளிப்பான்களைப் பெற்றுக்கொள்ளலாம். தெளிப்பான்களை மானிய விலையில் பெற, உங்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு, உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் மூலமாக மனு அனுப்புங்கள்.

## வட ஆர்க்காடு மாவட்டத்தில்
### வளர்ச்சிப் பணிகள்

பசுமைப் புரட்சியிலும், திருந்திய முறைச் சாகுபடி வேலைகளிலும், இலக்கிடப்பட்ட அளவுக்கும் மேலாகச் சாதனைகள் செய்வதிலும் வட ஆர்க்காடு மாவட்டம் குறிப்பிடத்தக்க அளவில் பணியாற்றிவருகின்றது.

மாவட்டத்தில் மொத்தம் உள்ள 36 ஊராட்சி ஒன்றியங்களுள் 32 ஊராட்சி ஒன்றியங்களில் டிராக்டர்கள் வாங்கிப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 35 ஊராட்சி ஒன்றியங்களில் சொந்தமாக விவசாயக் கிடங்குகள் கட்டப்பட்டுப், பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 12 ஊராட்சி ஒன்றியங்களில் துணை விவசாயக் கிடங்குக் கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன. 13 ஊராட்சி ஒன்றியங்களில் பாறை உடைக்கும் கருவிகள் வாங்கப்பட்டு, அவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

விளைச்சலைப் பெருக்கும் திட்டத்தின் கீழ், இம் மாவட்டத்தில், 1,25,000 ஏக்கரில் ஐ.ஆர். 8 பயிரிட வேண்டும் என்று அளவு வரையறுக்கப்பட்டதில் சாதனை அளவு 1,35,589 ஏக்கர் என்ற அளவுக்கு உயர்ந்தது. மற்றைய நெல் விதை ஏ.டி.டி. 27, கோ. 29 ஆகியவை 95,000 ஏக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டது. ஆஞல், நடை முறையில் 99,408 ஏக்கரில் இவை பயிரிடப்பட்டன. ராபி பருவத்தில் இவ்வகை நெல் விதைகள் மொத்தம் 1,50,000 ஏக்கரில் பயிரிடத் திட்டமிட்டிருந்ததில், நடைமுறையில் அந்த அளவைப் பெருமளவுக்கும் மீறி மொத்தம் 3,22,614 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் 1971 ஜூன் மாதம் முடிய 567 ஏக்கரில் மேம்பாட்டு பணிகள் செய்யப்பட்டுள்ளன. வனப் பாதுகாப்புப் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் 1,400 ஏக்கரில் பணிகள் நடந்துள்ளன.

மாவட்டத்தில் புதுக் கிணறுகள் எடுத்து, பம்பு செட்டுகள் அமைப்பதற்காக, வேளாண்மை மறுநிதி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட, திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை ஒப்புதல் பெற அனுப்பப் பட்டுள்ளன. இத் திட்டத்தின்படி எடுக்கப்பட இருக்கும் மொத்தக் கிணறுகள் எண்ணிக்கை 8,350; மொத்த பம்பு செட்டுகள் 11,850 ஆகும்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் சிரணித் தொண்டர்கள் எண்ணிக்கை 5,040 ஆகும். 36 ஊராட்சி ஒன்றியங்களிலும் 11 நகராட்சிகளிலும் சிரணிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1970–71-ஆம் ஆண்டில் மாவட்டத்தில் சிரணிப் படையினர் 18 பள்ளிக் கட்டடங்கள் கட்டினர்; இரண்டு இணைப்புச் சாலைகள் அமைத்தனர். பேரறிஞர் அண்ணு நினைவுப்பள்ளிக் கட்டடங்கள் 30, திறந்த வெளி அரங்கப் பணிகள் 5 ஆகியனவும் முடிக்கப்பட்டுள்ளன. இப் பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ. 2,67,588. இதில் அரசினர் செலவு ரூ 1,23,577 ஆகும். மேலும் 13 பணிகள் நடைபெற்று வருகின்றன.

1971–72 ஆம்-ஆண்டில் சிரணித் திட்டத்துக்கு ரூ. 90,000 ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 43 சிரணி அறிவகங்கள் இயங்கி வருகின்றன.




# தொடர்ந்து வளர்கின்றன தொழில்கள்!

தமிழ்நாடு குறுகிய காலத்திற்குள் பொருளாதார நடவடிக்கைகளைப் பல திறப்பட்ட வழிகளில் பிரித்து, அரிய சாதனையை எய்தியிருப்பதைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி போற்றற்குரியதாகும். பொருளாதார வளர்ச்சி வீதத்தை இயன்ற மட்டில் விரைந்து, பெருமளவுக்கு உயர்த்த வேண்டும் என்கிற நோக்கத்துடன் அரசு, திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது.

எடுத்துக் காட்டாகத் தொழில் துறையில் பயன்படுத்திய மின்சாரத்தின் அளவு 1956-57-ல் 560 மில்லியன் யூனிட்டுகளாக இருந்ததற்கு மாறாக, 1969-70-ல் 2484 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது. விற்பனையான மொத்த மின்சாரம் 4574 மில்லியன் யூனிட்டுகளில் தொழில் துறையில் பயன்படுத்திய மின்சாரத்தின் அளவு 54:46 என்ற விகிதத்தில் உள்ளது.

1970-ஆம் ஆண்டில் மாநிலத்தில் 13 பொது லிமிடெட் கம்பெனிகளும் 136 தனியார் கம்பெனிகளும் பதிவாகியுள்ளன. இவற்றின் அனுமதி பெற்ற மொத்த மூலதனம் ரூ. 30·55 லட்சம். இவற்றின் செலுத்திய பங்கு மூலதனம் ரூ. 54 லட்சம் ஆகும்.

'பி' காம்ப்ளெக்ஸ் உற்பத்தி—

மாநிலத்தில் 1970-ஆம் ஆண்டில் 371 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 10,758 தொழிலாளர்கள் அவற்றில் பணியில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

மாநிலத்தில் புதிதாக 7,500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடியவையும் 20·78 கோடி ரூபாய் மூலதன முதலீடு தேவைப்படுபவையுமான 36 உரிமங்களுக்கு இந்திய அரசு 1970-ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியுள்ளது. இது தவிர, 30·69 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுவதும் 6,700 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடியதுமான தொழில்கள் தொடங்க 25 அனுமதிக் கடிதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்ட தொழிற்சாலை உரிமங்களுள் 6 உரிமங்கள் துணிகள் உற்பத்தி, வெளுத்தல், தொழிற்சாலை உருளைச் சங்கிலிகள், பிஸ்கோத்துகள் முதலிய பொருட்கள் குறித்தவையாகும்,

சிகரெட்டுகள், மோட்டார் டயர்கள், டியூப்புகள், வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ், ரப்பர், இரசாயனங்கள், பிஸ்டன், பிஸ்டன் வளையங்கள், ஸ்கூட்டர்கள் முதலியவைகளைத் தயாரிப்பதற்கு 25 அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முன்னேற்ற நாடுகளுடன் தொழில் உறவு

இயந்திரங்கள், மின்சாரப் பொருட்கள், இரசாயனம், தோல் முதலிய தொழில்களில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

1970-ஆம் ஆண்டில் புதுடில்லி தொழில் நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ள இம்மாநில நடுத்தரத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 13 ஆகும். இதுவரை பதிவு செய்துள்ளவைகளின் மொத்தம் 63. பல்வேறு உற்பத்தித் தொழில்களில் ஈடுபட இம்மாநிலத்தின் தொழில் முனைவர்கள் அமெரிக்கா, செக்கோஸ்லோவேகியா, பிரிட்டன், கிழக்கு ஜெர்மனி, கிரீஸ், ஜப்பான் முதலிய நாடுகளுடன் தொழில் நுட்பத் தொடர்பு, உடனுழைப்பு உறவு கொள்வதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மாநிலத்தின் தொழில் பொருளாதாரத்தில் 23 பெரிய தொழிலியல் உற்பத்திப் பொருட்கள் குறித்து 1960-ஆம் அடிப்படை ஆண்டில் உற்பத்தி 100 என்று வைத்துத் தொழில் உற்பத்திப் புள்ளி விவரங்களைப் பார்ப்போமானால் தமிழ்நாட்டில் அடுத்தடுத்த ஐந்தாண்டுகளில் தொழிலியல் வேகம் உயர்ந்து கொண்டே போவது தெரிய வரும்.

பெருகி வரும் தொழில்கள் மூலம் வருவாயும் பெருகி வருகின்றது. 1960-61-ல் தொழில் துறையிலிருந்து மாநில அரசுக்கு 16·03 சதவீதம் வருவாய் கிடைத்தது. 1969-70-ல் இது 21·14 சத விகிதமாக உயர்ந்துள்ளது.

தொழில் வளர்ச்சியில் வட்டாரத்திற்கு வட்டாரம் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை நீக்கும் பொருட்டு, மாநிலத்தின் பின் தங்கிய பகுதிகளில் தொழில்களை முனைந்து வளர்க்க வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. இவ்வகையில், தொழில் வளர்ச்சி அடையாத பகுதிகளில் அமைக்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்குரிய கட்டண வீதங்களில் 15 சதவீதச் சலுகை அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. இச்சலுகைக்காகத், தொழில் வளர்ச்சி அடையாத பகுதிகள் எவை என்பதையும் அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசு நிதியிலிருந்து ஒரு மொத்த மானியம் அல்லது உதவித் தொகை வழங்கத் தமிழ்நாடு அரசு, இந்திய அரசுக்குக் குறிப்பிட்ட சில பகுதிகளைப் பரிந்துரைத்துள்ளது. புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்குக் கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்து சலுகை நிதி உதவி பெற வேறு சில பகுதிகளையும் பரிந்துரைத்துள்ளது.

உப்புச் சார்ந்த தொழில்கள்

மணலியிலுள்ள எண்ணெய் தூய்மைப் படுத்தும் ஆலையில் தொழில் பெருக்கத்துக்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன. பெட்ரோலியத் துணைப் பொருட்களின் அடிப்படையில் தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் பல தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான வாய்ப்புகளை மதிப்பிடுவதற்கு ஏற்கனவே அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி கூட்டு நிறுவனம், மணலியிலுள்ள

பெட்ரோலியம் சார்ந்த இரசாயனத் தொழிற்சாலை ஆகியவற்றின் துணைப் பொருட்களைப் பயன்படுத்துவது குறித்து இந்திய இஞ்சினியர்ஸ் நிறுவனம் அளித்துள்ள ஆய்வு அறிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

புதிய மாநிலத் தொழில் வளர்ச்சிக் குழுவின் பரிந்துரைகளையொட்டி, பெட்ரோலியம் சார்ந்த இரசாயனத் தொழில் குறித்து ஒரு துணைக் குழுவையும் உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் குறித்து ஒரு துணைக்குழுவையும், தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் வழங்குவதில் உள்ள இடர்ப்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய ஒரு துணைக்குழுவையும் அரசு அமைத்துள்ளது. முதல் இரு குழுக்களின் அறிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. மூன்றுவது குழுவின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தை அரசு நன்கு உணர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை ஆராயும் வகையில், அயல் நாட்டு வாணிபம் பற்றிய இந்திய நிறுவனத்தின் அறிக்கையைத் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது.

தமிழ் நாட்டில் பரந்த அடிப்படையில் தொழில்கள் அமைந்திருப்பதால், இந்தியத் தொழில் வளர்ச்சியில் முக்கியமான இடத்தைத் தமிழ்நாடு தற்போது பெற்றிருக்கிறது. மின்விசை, போக்குவரத்து, தொழில் நிதி உதவி, தொழில் நுட்ப நபர்களை உருவாக்கப் பயிற்சி வசதிகள் முதலியவை குறித்து அரசின் கொள்கைகள் காரணமாக மாநிலம் முழுவதிலும் தொழில் வளரவும், தொழில்கள் பரவவும் ஏற்ற சூழ்நிலைகள் அமைந்துள்ளன. மாநில, மத்திய அரசுகள் வழங்கியுள்ள பல்வேறு வசதிகளைச் சாதகமாகக் கொண்டு தனியார் துறை, மாநிலத்தைத் தொழில்மயமாக்கும் பணியில் முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. உற்பத்தியின் பல்வேறு துறைகளிலும் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

## தீர்வுகாண வழி!

" ஒவ்வொரு சாதியும் ஒவ்வொரு பிரிவும் அந்தச் சாதியினரின் தொழில் திறன், கிராமியப் பொருளாதாரத்தில் அவர்களுடைய தொழிலின் முக்கியத்துவம் ஆகியவைகளுக்கு ஏற்பத் தனிப் பிரச்சினைகளை எதிர் நோக்கி நிற்கின்றன. இவர்களுடைய வருங்காலச் செழுமைக்குரிய தோது மிகக்குறைவாகவே இருந்தாலும் அது விவசாயச் செழிப்புடன் பின்னிப் பிணைந்ததாக உள்ளது. தொழில் வினைஞர்கள், மற்றும் ஊழியம் செய்யும் சமூகங்களை எடுத்துக் கொண்டால் போதிய ஊதியமில்லை என்பது அவர்களுடைய முறையீடாக இருந்து வருகிறது. இந்தச் சாதியினர் விவசாயத்திலோ தொழிலிலோ, ஊழியத்திலோ, கைவேலைத் தொழில்களிலோ எதில் ஈடுபட்டிருந்தாலும், இவர்களின் வறுமை நிலை நீங்கவேண்டுமானால் விவசாயத்தையும் பரம்பரைத் தொழில்களையும் நம்பி யிருக்கும் நிலை மாறிப் பெரும் அளவில் இவர்கள் வேறு தொழில்களை மேற்கொள்ள வேண்டும். கிடைத்துள்ள புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, தொழில் மாறிச் செல்கின்ற இந்தப் பெயர்ச்சி மிக மெதுவானதாகவே இருக்கின்றது. நமது பொருளாதாரமே மாறுதல் கட்டத்தில் இருப்பதுதான் இதற்குக் காரணம். இந்த மாற்றத்தை விரைவுபடுத்த முடியுமா என்பதுதான் நம் முன் உள்ள கேள்வி."

" பெருந் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் எந்த அளவு வளர்ச்சியடைந்திருந்த போதிலும், வேலையில்லாத் திண்டாட்டம், அரைகுறை வேலை வசதி நிலைமை ஆகிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவை கணிசமான அளவில் உதவ இயலவில்லை. புதிய தொழில்களின்விளைவாக பிரச்சினைகள் தீர்ந்துவிடும்என்று எண்ணியது நடக்கவில்லை. புதியதாகத் தொடங்கப்பட்ட தொழில்கள், இயந்திரங்களால் இயக்கப்படுபவை, அல்லது பெரும் அளவு மூலதனம் தேவைப்படுபவை என்ற நிலைமையே அற்குக்காரணம். இவை ஏராளமான அளவில் தொழிலாளர்களை ஈடுபடுத்திக்கொள்ளும் தன்மை வாய்ந்தவை அல்ல. பெரும்பாலான புதிய தொழில்கள் அயல்நாடுகளின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டவை. எனவே அவற்றில் பெருமளவில் ஆள் பலத்தை ஈடுபடுத்துவதற்கு வசதிகளோ தேவைகளோ இல்லை. எனவே வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முறையில் அதே நேரத்தில் சமுதாயக் கட்டுக்கோப்புச் சிதைவுறுத வகையில் நமது தொழில்களும் வாழ்வியல் வழிகளும் பரவலாக அமைதல் வேண்டும். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை வளர்த்து, கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவைகளையும் பரவலாக அமைத்தால்தான், இந்த வகையில் நல்ல பலன் காணமுடியும். நகரச் சார்பு மிகுந்து விடாதமுறையில், தொழில்கள் பரவலாக வளர வழி காண்பது முக்கியம். கச்சாப் பொருள் கிடைக்கும் இடங்களில் அல்லது உற்பத்திப் பொருட்களுக்குத் தேவை அதிகம் இருக்கும் இடங்களில், சிறு தொழில்களைப் பெருக்குவதும், உள்ளூர் மட்டத்தில் தொழில்மயமாக்குவதும் தான் இதற்குரிய வழி. கிராமப் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு, இந்த வகைத் தொழில்களே தீர்வு காணமுடியும்."

தமிழ் நாடு பிற்பட்டோர் நலக் குழு அறிக்கைப் பகுதி



பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்

# வழங்கியோர் பட்டியல்

| | | |
|---|---|---|
| மாவட்ட ஆட்சியாளர், கன்னியாகுமரி. | 5,849 | 12 |
| ஷை | 767 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், நீலகிரி .. | 174 | 50 |
| மாவட்ட ஆட்சியாளர், தென் ஆர்க்காடு | 13,075 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், வட ஆர்க்காடு. | 997 | 89 |
| மாவட்ட ஆட்சியாளர், சேலம் .. | 5,076 | 61 |
| மாவட்ட ஆட்சியாளர், நீலகிரி .. | 100 | 00 |
| ஷை | 400 | 00 |
| ஷை | 100 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர் .. | 226 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், தென் ஆர்க்காடு | 16,627 | 85 |
| மாவட்ட ஆட்சியாளர், மதுரை .. | 7,291 | 06 |
| பிற்பட்ட வகுப்பினர், நல அமைச்சர் அலுவலகம். | 93 | 00 |
| முதலமைச்சர் அலுவலகம் .. .. | 4,958 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கடையநல்லூர் (காசோலை). | 700 | 00 |
| துணை மாவட்ட ஆட்சித் தலைவர், தலைவர், செங்கல்பட்டு (காசோலை). | 200 | 00 |
| தாசில்தார், தென்காசி (காசோலை). | 656 | 18 |
| நிர்வாக அலுவலர், பேரூராட்சி, திருமங்கலம் (காசோலை). | 500 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், உப்பிலியாபுரம், திருச்சி (காசோலை) | 200 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கடையநல்லூர், திருநெல்வேலி. | 200 | 00 |
| துணைத் தாசில்தார், பாளையங்கோட்டை (காசோலை). | 300 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், துறையூர், திருச்சி. (காசோலை). | 100 | 00 |
| திரு என். வி. சண்முகம், கலைவாணர் தெரு, நெய்வேலி. | 8 | 00 |
| ,, ராமசாமி, தர்மபுரி மாவட்டம். | 5 | 00 |
| ,, என். கண்ணன், கள்ளக்குறிச்சி, தென்ஆர்க்காடு மாவட்டம். | 51 | 00 |
| நிர்வாக அதிகாரி, பேரூராட்சி, பெண்ணாகரம், தர்மபுரி மாவட்டம். (காசோலை). | 50 | 00 |
| தென்சென்னை மின் விநியோகக் கழகம், (காசோலை). 1 பரிசுச் சீட்டு. | 1,000 | 00 |
| திரு வி. கார்த்திசன், எம்.எல்.ஏ., திருச்செந்தூர். | 100 | 00 |
| மாண்புமிகு சி. சுப்ரமணியம், திட்ட அமைச்சர், மத்திய அரசு. | 59 | 00 |
| திருமதி மீனாக்ஷி சுந்தராம்பாள், நகரவை உறுப்பினர். | 10 | 00 |
| திரு ஜெயசிலன், வித்யாலயா ரோடு, சேலம். | 50 | 00 |
| ,, கலியமூர்த்தி முதலியார், லால்குடி. | 10 | 00 |
| தமிழ் வளர்ச்சி மன்றச் செயலாளர், சென்னை-1. | 10 | 00 |

| | | |
|---|---|---|
| ஆரியக்கௌண்டம்பட்டி தி.மு.க. கிளை. | 11 | 00 |
| நாமகிரிப்பேட்டை பாலசுப்ரமணியம். | 10 | 00 |
| நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம். | 25 | 00 |
| நிர்வாக அதிகாரி, பேரூராட்சி, பெண்ணாகரம் தர்மபுரி,(காசோலை). | 50 | 00 |
| துணைப் பதிவாளர், திருநெல்வேலி (காசோலை). | 250 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம், திருநெல்வேலி, (காசோலை). | 600 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீழப்பாவூர் (காசோலை). | 250 | 00 |
| துணைப் பதிவாளர், கோவில்பட்டி (காசோலை). | 130 | 75 |
| துணைப் பதிவாளர், கோவில்பட்டி (காசோலை). | 100 | 00 |
| துணைப் பதிவாளர், தூத்துக்குடி (காசோலை). | 87 | 25 |
| நிர்வாக அதிகாரி, பேரூராட்சி, சரவணம்பட்டி (காசோலை). | 300 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம் (காசோலை). | 2,050 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம் (காசோலை). | 1,400 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம் (காசோலை). | 100 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம் (காசோலை). | 600 | 00 |
| நிர்வாக அதிகாரி, பெரியகுடுவை பேரூராட்சி (காசோலை). | 300 | 00 |
| நிர்வாக அதிகாரி, புஞ்சை புளியம் பட்டிப் பேரூராட்சி (காசோலை). | 1,200 | 00 |
| சென்ட்ரல் டாக்கீஸ், திருநெல்வேலி (காசோலை). | 76 | 04 |
| நிர்வாகப் பொறியாளர், தூத்துக்குடி, (காசோலை). | 515 | 00 |
| தாசில்தார், செங்கோட்டை(காசோலை). | 503 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம் ஆலங்குளம் (காசோலை). | 250 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம் (காசோலை). | 700 | 00 |
| அடிஷனல் தாசில்தார், வீரகேரளம்புதூர், திருநெல்வேலி (காசோலை). | 250 | 00 |
| நகராட்சி ஆணையர், திருநெல்வேலி (காசோலை). | 1,653 | 00 |
| நியூ ராயல் டாக்கீஸ், திருநெல்வேலி (காசோலை). | 54 | 43 |
| நிர்வாக அதிகாரி, நெரிஞ்சிப்பேட்டை பவானி வட்டம் (காசோலை). | 200 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பூந்தமல்லி (காசோலை). | 597 | 00 |
| நிர்வாக அதிகாரி, பேரூராட்சி,ஆதனி. | 250 | 00 |
| தொழில் நுணுக்க அலுவலர்கள் சங்கம் (தொழில் அமைச்சர் மூல மாக). | 501 | 00 |
| நிர்வாக அதிகாரி, மேட்டுப்பாளையம், ஈரோடு. | 400 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீழப்பாவூர், பாவூர்சத்திரம். | 250 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், அலங்காநல்லூர். | 50 | 00 |
| நிர்வாக அலுவலர், பெரியநெகமம் பேரூராட்சி, பொள்ளாச்சி. | 1,000 | 00 |
| பாபுலர் டாக்கீஸ், திருநெல்வேலி. | 131 | 09 |
| ஆட்சி அலுவலர், தொழிற் பேட்டை, கிண்டி-16 (காசோலை). | 1,875 | 00 |
| கால்நடை வளர்ச்சித் துறை இயக்குநர். | 40 | 00 |
| துணைப்பதிவாளர், கோவில்பட்டி (காசோலை). | 100 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலர், பாளையங்கோட்டை (காசோலை). | 250 | 00 |
| தாசில்தார், தென்காசி (காசோலை). | 45 | 86 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், செங்கோட்டை (காசோலை). | 250 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பூந்தமல்லி (காசோலை). | 199 | 50 |
| ராசிபுரம் வட்ட ஊழியர், தாலுக்கா ஆபீஸ். | 25 | 00 |

(தொடரும்)

# வறட்சியைத் தாங்கும் புதிய வரகு



வரகாசிச் சோறும்

வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த
மோரும்—திறமுடனே
புள்வேளூர்ப் பூதன்
புரிந்துவிருந் திட்டான் ஈது
எல்லா உலகும் பெறும்.

என்று வரகரிசிச் சோற்றின் சுவையை ஒளவையார் பாராட்டிப் பாடியுள்ளார்.

பண்டைப் புலவரின் பாராட்டைப்பெற்ற வரகரிசிச் சோறு, இன்றைய மருத்துவ வல்லுநர்களின் பாராட்டையும் பெற்றுள்ளது. நீரிழிவு நோயினால் (Diabetes) பாதிக்கப்பட்டவர்களுக்கு வரகரிசிச்சோற்றைச் சிறந்த உணவாக மருத்துவ வல்லுநர்கள் பரிந்துரைக்கின்றனர்கள். இவ்வாறு புலவராலும், மருத்துவ வல்லுநர்களாலும் புகழப்படும் வரகரிசியில் பின் கண்ட சத்துக்கள் உள்ளன.

வரகரிசியில் உள்ள சத்துக்கள்.

| பெயர். | சதவீதம். |
|---|---|
| புரதச் சத்து | 8·31 |
| கொழுப்புச் சத்து | 3·70 |
| மாவுச் சத்து | 65·66 |
| நார்ப் பொருள்கள் | 8·97 |
| இரும்புச் சத்து | 5·00 |
| சுண்ணாம்புச் சத்து | 0·04 |

வரகு ஒரு திடமான பயிர். வேறு எந்தப் பயிர்களையும் லாபகரமாகப் பயிரிட முடியாத சத்தற்ற எளிய செவ்வல் மண்ணிலும், கரிசல் மண்ணிலும் கூட வரகு நன்கு வளர்ந்து மகசூல் அளிக்க வல்லது. களர்த் தன்மையையும், மற்றப் பயிர்களைவிட அதிக அளவுக்குத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது வரகு. பருவநிலை பாதிக்கப்பட்டு வறட்சி வாட்டுகின்ற நிலையிலும் வரகு உழவர்களுக்கு வருமானம் அளிக்கும் சக்தி வாய்ந்ததாக உள்ளது.

வரகு தானியங்களைப் பூச்சிகள் தாக்குவதில்லையாதலின் அவைகளை நீண்ட நாட்களுக்குச் சேத மில்லாமலும், தரங்கெடாமலும், சேமித்து வைக்க முடியும். எனவே, வறட்சிக் காலத்தில் வரகு தானியத்தை நீண்ட நாட்களுக்கு உணவுக்காகச் சேமித்து வைத்துப் பயன்படுத்திக்கொள்ளலாம். வரகு வைக்கோல், கால்நடைகளுக்குத் தீவனமாகவும், களர் நிலத்தை மாற்றி நல்ல நிலமாக ஆக்குவதற்குத் தேவையான பொருளாகவும் பயன்படுகிறது.

எண்ணற்ற ஏழை எளியவர்களுக்கு உணவாக இருந்து வரும் வரகு, தமிழ் நாட்டில் ஏறத்தாழ 2,60,000 ஹெக்டேர்களில் பயிராகி வருகிறது. வரகு பெரும்பாலும் மானாவாரிப் பயிராகவே சாகுபடியாகி வருகிறது. ஆனால் திருச்சி மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் மட்டும் வரகு இறைவையில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டிலேயே, திருச்சி மாவட்டத்தில்தான் வரகு அதிகப் பரப்பளவில் சாகுபடியாகிறது. தென்னார்க்காடு, இராமநாதபுரம், சேலம் மாவட்டங்கள் வரகு சாகுபடியில் முறையே, 2-வது, 3-வது, 4-வது இடங்களைப் பெற்றுள்ளன. வரகு சாகுபடியின் மூலம், தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 2·5 இலட்சம் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதிலிருந்து ஏழை எளிய உழவர்களுக்கு உணவு அளிக்கும் வரகின் முக்கியத்துவம் புலனாகின்றதல்லவா?

வரகு உற்பத்தியைப் பெருக்கவும், புன்செய் நில உழவர்களின் வருவாயை அதிகப்படுத்தவும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை நெடுங்காலமாக ஆராய்ச்சி செய்து வந்தது. அதன் பயனாய் 'கோ-2 வரகு' என்னும் ஒரு புதிய ரகம் கிடைத்தது. பல்வேறு பரிசோதனைகளுக்குப் பின் கோ-2 வரகே, மற்ற வரகு ரகங்களைவிடச் சிறந்தது என்று முடிவு செய்து, உழவர்களுக்கு வழங்கப்படுகிறது.

புன்செய் நில உழவர்களின் வாழ்வை வளமாக்குவதில் தமிழ் நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது என்பதற்கோர் எடுத்துக்காட்டாய் கோ-2 விளங்குகிறது என்றால் மிகையல்ல.

## கோ-2 வரகு ரகத்தின் சிறப்புகள்.

1. கோ-2 வரகு குறுகிய கால வயதுடையது. நாட்டு ரகங்களின் வயது 180 நாட்கள். கோ-1 வரகு 140 நாட்கள் வயதுடையது. பி.எல்.ஆர். 1 வரகின் வயது 130 முதல் 135 நாட்களாகும். ஆனால் கோ-2 வரகின் வயது 125 முதல் 130 நாட்களேயாகும். எனவே தற்பொழுது உள்ள வரகு ரகங்களில் கோ-1 வரகு தான் மிகவும் குறுகிய கால வயதுடையதாக உள்ளது.

2. கோ-2 வரகு நன்கு தூர் கிளைக்கக் கூடியது. ஒவ்வொரு பயிரிலும் 20 முதல் 25 தூர்கள் கிளைத்து, 20 முதல் 25 கதிர்கள் தோன்றக்கூடும்.

3. கோ-2 வரகு மற்ற வரகு ரகங்களைவிடப் பெருமளவில் வறட்சியைத் தாங்கிக் கொண்டு, மகசூல் அளிக்கும் ஆற்றல் கொண்டது.

4. கோ-2 வரகு, கோ-1




வரகைவிட 42·8 சதம் அதிக தானிய மகசூல் அளிக்கவல்லது.

5. கோ-2 வரகு, பாதகமான பருவநிலையிலும் ஹெக்டேருக்கு 1,000 கிலோகிராம் தானிய மகசூல் கொடுக்கிறது. சிறிது மழையும், காலத்தில் பெய்து விட்டால் கோ-2 வரகு ஹெக்டேருக்கு 1,800 கிலோ வரை மகசூல் அளிக்கும் ஆற்றல் வாய்ந்தது.

இத்தகைய சிறப்புக் குணங்களை, கோ-2 வரகு பெற்றுள்ளதால், அதைப் பயன்படுத்தித் தமிழ் நாட்டின் வரகு உற்பத்தியைக் குறிப்பிடத் தகுந்த அளவில் உயர்த்த முடியும் என்பது உறுதியாகிறது. கோ-2 வரகின் மூலம் ஏக்கர் மகசூல் அதிகமாக ஆவதால், ஏழை எளிய புன்செய் நில உழவர்களுக்கு அதிக வருவாயும் கிட்டும் என்பது திண்ணம். எனவே வரகு சாகுபடி செய்யும் உழவர்கள் அனைவரையும் கோ-2 வரகு சாகுபடி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

## கோ-2 வரகு சாகுபடிக் குறிப்புகள்.

பருவம்.—கோ-2 வரகு ரகத்தை ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் விதைக்கலாம். இராமநாதபுரம் மாவட்டத்தில் அக்டோபர் மாதம் வரையும் விதைக்கலாம்.

நிலம் தயாரித்தல்.—நிலத்தை 2 அல்லது 3 தடவை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு இடவேண்டும். போதிய மழை கிடைக்கும் இடங்களில் ஏக்கருக்கு 40 கிலோ அமோனியம் சல்பேட் உரத்தை அடி உரமாக இடவேண்டும்.

விதையளவு.—ஏக்கருக்கு 10 கிலோ கோ-2 வரகு விதை தேவைப்படும்.

விதைத்தல்.—ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான் அல்லது செரசான் மருந்து வீதம் கலந்து வரிசைகளுக்கு இடையே 18 அங்குலமும், பயிருக்கும் பயிர் 6 அங்குலமும் இடைவெளி இருக்குமாறு விட்டு விதைக்க வேண்டும்.

கோ-2 வரகுடன் துவரையைச் சால்பயிராகச் சாகுபடி செய்யலாம். ஆறு அல்லது எட்டு அடிக்கு ஒரு சால் வீதம் துவரையை விதைக்கவேண்டும். வரிசையில் செடிக்குச் செடி 1 அடி இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும். இவ்வாறு சால்பயிராகத் துவரையை விதைக்க எஸ். ஏ. 1 துவரையையோ கோ-1 துவரையையோ பயன்படுத்தலாம்.

பின்செய் நேர்த்தி.—விதைத்த 3 வாரங்களுக்குப் பிறகு பயிர் கலைத்தல், களையெடுத்தல் ஆகியவைகளைச் செய்ய வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு.—பொதுவாக கோ-2 வரகு, பூச்சி, நோய்களினால் தாக்கப்படுவதில்லை. அப்படி ஏதேனும் பூச்சியோ, நோயோ தாக்கினால் உங்கள் ஊர்நல ஊழியரையோ, துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களையோ கலந்தாலோசித்து மருந்து தூவுதல் அல்லது தெளித்தல் வேண்டும்.

அறுவடை.—விதைத்த 125 முதல் 130 நாட்களில் அறுவடைக்கு வரும். கதிரில் உள்ள தானியங்கள் நன்கு முற்றிய பின், தாளுடன் அறுத்துப் போரடிக்க வேண்டும். நன்கு முற்றாத தானியத்திலும், உமியிலும், தாளிலும் ஒருவகை நஞ்சு ( Poison ) உள்ளது. எனவே தான் வரகு தானியம் நன்கு முற்றிய பின்பே அறுவடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

## வரகு தானியத்தைப் பயன்படுத்தும் முறை.

பொதுவாக அறுவடை செய்த உடனேயே வரகு தானியத்தை உணவுக்குப் பயன்படுத்தக் கூடாது. அதுவும் குறிப்பாக ஈரம் அதிகம் இருந்த பகுதிகளிலிருந்து அறுவடை செய்த வரகை உடனே உணவாக்கி உட்கொள்ளுதல் கூடாது. நன்கு முதிர்ந்த தானியங்களை நன்றாக வெய்யிலில் காய வைத்துக், கொஞ்ச நாட்கள் இருப்பு வைத்திருந்த பின்னரே உபயோகிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் வரகு தானியத்தில் உள்ள நஞ்சு நீங்கிவிடும்.

வரகு தானியத்தின் உமி, அரிசியுடன் பிடிப்பு உள்ளதாய் இருக்கும் ; செம்மண் குழம்பில் கலந்து காயவைத்து உரலில் இட்டுக் குத்தி, அல்லது திருகைக் கல்லில் செம்மண்கட்டி அரைத்து உமியைப் போக்க வேண்டும். அவ்வாறு செய்தால் வெள்ளையான அரிசி கிடைக்கும்.

வரகு அரிசியைச் சோறு சமைக்கலாம் ; களி செய்வதற்கும் (கேழ்வரகுக் களி போல்) பயன்படுத்தலாம் ; உப்புமா, முறுக்கு போன்ற சுவையான உணவுப் பொருள்கள் தயாரிப்பதற்கும் உபயோகிக்கலாம்.

## ஒரே கல்லில் இரண்டு மாங்காய் !

கோ-2 வரகு சாகுபடி, வளங்குன்றிய வயல்களிலிருந்தும் வருவாய் அதிகம் கிடைக்க வகை செய்கிறது. கோ-2 வரகுடன், துவரையைச் சால் பயிராகச் சாகுபடி செய்தால் துவரம் பருப்பு உற்பத்தியையும் பெருக்க முடிவதுடன், அதன் மூலமும் அதிக வருமானம் பெற முடியும்.

பருவநிலை சாதகமாக அமைந்து விட்டால் ஒரு ஏக்கரிலிருந்து 720 கிலோ வரகு தானியமும், 300 கிலோ துவரையும் கிடைக்கும்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல் ஒரே சாகுபடியில் வரகு தானியத்தையும், துவரையையும் உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது.

எனவே, கோ-2 வரகுடன், துவரையையும் சாகுபடி செய்து உற்பத்தியைப் பெருக்கி, வருவாயையும் பெருக்கிக் கொண்டு வளமாக வாழுங்கள் என்று புன்செய் நில உழவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

# தமிழ்நாடு தொழில் வாணிகத் துறை,

சென்னை - 5

## கைவினைப் பொருட்கள்

நேர்த்தியான கவர்ச்சி மிக்க கைவினைப் பொருட்களுக்குத் தமிழ்நாடு தொழில், வாணிகத் துறையினரால் கீழ்க்கண்ட இடங்களில் நடத்தப்படும் விற்பனை நிலையங்களுக்கு வருகை தருக.

1. மவுண்டு ரோடு, சென்னை
2. மகாபலிபுரம், செங்கல்பட்டு மாவட்டம்
3. நெய்வேலி, தென்னாற்காடு மாவட்டம்
4. திருச்சிராப்பள்ளி
5. தஞ்சாவூர்
6. திருநெல்வேலி
7. கோயம்புத்தூர்
8. திண்டுக்கல், மதுரை மாவட்டம்
9. சேலம்

விற்பனை செய்யப்படும் சில முக்கிய பொருள்கள்

வெண்கலச் சாமான்கள், பித்தளைச் சாமான்கள், வேலைப்பாடமைந்த உலோகப் பொருள்கள், சிலைகள், சிற்பங்கள், தந்தப் பொருள்கள், நவீன பனையோலைப் பொருள்கள், பீங்கான் சாமான்கள், இசைக் கருவிகள், நெட்டி உருவகங்கள், தரை விரிப்புகள், பத்தமடைப் பாய்கள், தஞ்சாவூர் வேலைப்பாடமைந்த தட்டுகள் முதலியன.

இயக்குநர்,
தொழில் வாணிகத் துறை,
சென்னை-5




## 15. இறையும் தமிழ் கேட்கும் இங்கு

● கொஞ்சுமொழிக் குஞ்சரியே ! கோகிலமே ! அஞ்சுகமே !
மஞ்சில் மறைநிலவே ! வஞ்சியே ! என்—நெஞ்சில்
உறையும் திருமகளே ! உன்மறுப்பால், உள்ளம்
இறையும் ; தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் கே. வி. தங்கவேலு, பொருளூர்.

கொள்ளைச் சிரிப்பால் குழல்நாணப் பேச்சுதிர்க்கும்
வெள்ளைமனப் பிஞ்சின் விழிகண்டே—வெள்ளிப்
பிறையும் ஒளிகேட்கும் ; பேச்சினிமை கண்டே
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—சி. சௌ. கருப்பன் செட்டி, திருச்சி-15.

சாதிப் பிரிவகற்றித் தண்டமிழில் அர்ச்சனைகள்
ஓதுவிக்கக் கற்றவல்லார் உற்றுரைக்கும்—கோதில்
மறைமொழியைத் தேனாய் மகிழ்ந்துசெவி நீட்டி
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—மஹபூப் ஜான், எருமைப்பட்டி.

கண்மூடிக் கொள்கைகளைக் காலமெனும் வெள்ளத்தால்
மண்மூடிப் போகவிட்டு வன்றொண்டர்—பண்ணார்
மறைதிரு வாசகத்தின் மந்திரத்தை ஓதின்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—திருமதி கோரி, இராசிபுரம்.

ஆலயத்தில் அன்னைதமிழ் அர்ச்சனைக்கும் ஆணையிட்டார்
காலம் கனிந்துவந்த காரணத்தால்—சிலம்
நிறைமிளிர, தெக்குருக நன்று யினிமேல்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி

எங்கும் தமிழ்மணக்க ஈங்கிருக்கும் நல்லாட்சி
தங்கள் குறிக்கோளாய்த் தாம்கொண்டார்—'' எங்கும்
இறைவாழும் கோயிலெல்லாம் இன்றமிழே '' என்றார்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—வ. இராமநாதன், திருவேகம்பத்து.

தேவர் குறளும் திருவா சகநூலும்
மூவர் தமிழிசையும் முன்கேட்டால்—யாவர்
மறையும் மகிழிசையும் மற்றெங்கே கேட்பார்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் பொன்மாரி, ஆத்தூர்.

கல்லூரி மாணவர் கன்னித் தமிழ்கேட்க
மெல்ல நழுவுவதோர் வேடிக்கை !—எல்லாம்
அறிந்தவன் என்றே அனைவரும் போற்றும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—மலை. மா. ஆறுமுகம், மணிமங்கலம்.

நாளும் தமிழ்கற்கும் நம்மரசின் மாண்புமிகும்
ஆளுநர் கே. கே. ஷா ஆர்வங்காண் ;—ஆளும்
கறையிலா நம்முதல்வர் கட்டளையால் மீண்டும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—குழ. அண்ணாமலை, கோவை.

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்.
திரு புலவர் கே. வி. தங்கவேலு,
(பொருளூர் அஞ்சல்),
பழனி (வட்டம்), மதுரை மாவட்டம்.

507

அன்னைத் தமிழ்மொழியில் ஆள்பவரின் சொற்பொழிவோ
என்னை மயங்கவைக்கும், ஏழிசையே !—இன்னும்
பிறையும் சடைமுடியும் பேரரவும் கொண்ட
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—ஆர். இராசு, வல்லக்குண்டாபுரம்.

நாயன்மார் ஆழ்வார்கள் நற்றமிழிற் பாட்டிசைத்துத்
தூய கடவுள் தொழுதநாள்—போய
குறையு மொழிந்தோடக் கொண்டாடி நன்றே
இறையும் தமிழ்கேட்கும் இங்கு

—நா. இளங்கோ, சென்னை-14.

தெய்வத் தமிழ்என்று திக்கெட்டும் போற்றுகையில்
தெய்வம் மறுக்குமோ தேன்தமிழைப்—பொய்யர்
குறைப்பட்டுக் கொண்டாலும் கோயில்களில் எல்லாம்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

செங்கரும்புச் சாறெடுத்துச் செந்தேனை யுங்கலந்து
தங்கக் கலயத்தில் தந்ததுபோல்-எங்கும்
குறளில் சுவைகூட்டும் கொள்கை அரசில்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—து. நடராசன், மெய்ஞ்ஞானபுரம்.

அன்று தமிழ்வேந்தர் ஆக்கிவைத்த கோவில்களில்
இன்று தமிழுக் கிடமில்லை—என்ற
கறைநீங்கும் நம்மரசின் கட்டளையால் ; மீண்டும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—லலிதா அண்ணாமலை, கோயம்புத்தூர்-1.

அண்ணா மறைமலையார் ஆரூரார் பாரதியார்
பண்ணும் உரையாடும் பைந்தமிழால்—விண்ணூர்
உறையும் பதிகழிந்(து) உள்ளாசை ஊக்க
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் நா. கோபாலகிருட்டிணன், திருச்சி-4.

மூவேந்தர் கேட்டதமிழ் ! முக்காலம் வென்றதமிழ் !
நாவேந்தர் அண்ணாவின் நல்லதமிழ்-பாவாய்
குறைவின்றிச் சொன்ன ' குறள் ' இருக்கும் மட்டும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—வெ. நடராசன், சுந்தராபுரம்.

செவிமணக்கும் ; எண்ணிய சிந்தை மணக்கும் !
புவிமணக்கும் ; நம்கலைஞர் பொற்புக்—கவியில்
மறைமணக்கும் ; நாமணக்கும் ; மாத்தமிழால் என்றும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—மங்களம் கோபால், பொள்ளாச்சி.

மண்ணைத் தனக்கும்உன் மாத்தமிழ் மூத்தவள்
பண்ணைத்தி பாவத்தி பட்டத்தி ;-பெண்ணே !
மறைவாழ் தனிமொழி வேறிலைநீ பாட
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—திருச்சி குகன், ஆண்டிமடம்.

தக்க விடையதனைத் தட்டாமல் பேரவையில்
சிக்கல் அவிழ்க்கின்ற சீருடனே-மிக்க
விரைந்தளிக்கும் நம்கலைஞர் வீற்றிருக்கும் போது
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—அ. காந்தி, பி.எஸ்ஸி., பி.டி., தேவத்தூர்.

கோவிலிலே செந்தமிழ்தான் கோலோச்சும் என்றேநூம்
காவினிலே வானொலியில் காதுற்றேன்—கோவில்
மறையோதும் ஆன்றோர் மகிழ்வர் நயப்பர்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—வெ. கலைக்கூத்தன், பம்பாய்-19.

அருள்சுரக்கும் நோக்கும் அழகுதவும் வாக்கும்
மருளகற்றும் போக்கும் ; வலிவும்—பெருமை
நிறைதமிழாற் கண்டன்றோ நெஞ்சுவந்து நித்தம்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

தேவாரப் பாகும் திருவா சகத்தேனும்,
பாவார்ந்த ஆழ்வார்தம் பாசுரமும்—காவாக்
குறைவந்து சேருமெனும் குற்றம் உணர்ந்தால்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—அரிமதி தென்னகன், புதுச்சேரி.1.

வள்ளுவர் தேன்குறளை வானோங்கச் செய்வதெல்லாம்
தெள்ளு தமிழ்க்' கலைஞர் ' திறமன்றோ—வெள்ளைத்
துறையும் தமிழ்கற்கும் தாயிம் மண்ணில்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—செ. பெரியசாமி, குடகிப்பட்டி.

கல்லூரி, நன்மன்றம், காணும் அலுவலகம்
எல்லா விடத்தும் இருந்தமிழே—ஒல்லென்(று)
உறையும் படிச்செய்த ஒட்பம் மகிழ்ந்தே
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—ச. தமிழ்வேலன், கோட்டூர்.

சொக்கச் சுவையூட்டுஞ் சொல்லார் கலைஞரது
தக்க தமிழாற்றல் தானுணர்ந்து—மிக்க
அறையும் வடமொழியை ஆவலுடன் விட்டு
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—அ. ஆறுமுகம், எம்.ஏ., பி.டி., இலப்பைக்குடிக்காடு.

ஈரான் டகவை இலங்கும் தமிழரசு
பாராளும் எங்கள் தமிழ்ப்பாவை—பேரால்
அறைகின்ற வெண்பா அமுதுண்ண வேண்டி
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் சோ. பா. வேதாரண்யம்.

மூத்தமிழை முப்பாலைப் புத்தமுதை இப்பாரில்
வித்தகர்தம் வண்டமிழின் வேட்கையில்—சித்தம்
சிறைகொண்டு தேனுண்ணும் வண்டாக மாறி
இறையும் தமிழ்கேட்கும் இங்கு

—மானூர் ஆ. புகழேந்தி, கோவை.

உள்ளம் உருக்கும்! உணர்ந்திடிலோ மெய்சிலிர்க்கும்!
வெள்ளம் எதிர்த்தே விளையாடும்—அள்ளக்
குறையா இலக்கியங்கள் கொண்டிருக்கும் பாங்கால்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—வித்துவான் நெல்லை ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

தெய்வத் தமிழ்வழங்காச் சின்னதொரு கோயிலையும்
எய்தாதெம் கால்கள் எனத்தமிழர்—மெய்யாய்
உறையும் மனத்தில் உறுதிமிகக் கொண்டால்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு '

—உலகன், ஈரோடு.

நிறைபொருளும் நற்சுவையும் நீள்பயனும் நேரே
குறைவின்றிக் கொட்டிக் கொழிக்கும்—இறைமை
உறையும் உயர்மொழி ஒன்றேகாண் அன்பே
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் பூமாலை நடராசன், சேத்துப்பட்டு.

என்னால் எழுத்தால் எடுத்தாளும் நன்முறையால்
பண்ணால் புகழ்கொண்டோம் பாரிடையே—எண்ணி
மறையோர் மனந்திருந்தி மாத்தமிழில் ஓதின்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—முத்து. ரெங்கராசன், கோம்பை.

செந்தீயில் வேகாமல் தெண்ணீர் எதிரேறி
வந்தமொழி எந்தமொழி வம்பரே—சிந்தை
குறைவால் மொழிக்கிழிவு கூறேல் ! எமையாள்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—இரா. பூமா. அருப்புக்கோட்டை.

தெள்ளு தமிழ்மொழியின் தேவார வாசகத்தை
உள்ளம் கசிந்துருக ஓதிடுவீர்—எள்ளா(து)
இறைபாடும் அர்ச்சகரே என்றதனால் கோவில்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—இளங்கோ, ஆலங்குளம்.

ஆண்டவனைச் செந்தமிழால் அர்ச்சிக்க வேண்டுமென
ஈண்டு முதல்வர் இயம்பியதால்—வேண்டி
முறையாய்த் தமிழ்ப்பாவால் முன்னின்று போற்ற
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டம்பாக்கம்.

இனியதமிழ்ப் பாசுரத்தால் எங்கெங்கும் பாடிக்
கனியாய்ச் சுவைத்திடவே காண்போம்—பணியாய்
மறையும் அறியாமை, மாயுந்தீன் டாமை
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—இரா. கூத்தரசன், காவேரிநகர்.

ஆளுநர் கற்கும் அமுதத் தமிழ்மொழியை
நாளும் பயிலுவம் நாமென்னும்—சூளால்
மறைநான்கும் பாம்பும் மறந்தோடி வந்தே
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—வெ. ஆ. உத்தமபுத்திரன், வடுகபட்டி.

வண்டமிழில் நல்ல வழிபாடு செய்வதற்குக்
கொண்டுவந்த நம்மரசின் கொள்கையினால்—உண்டாம்
குறையிரந்து உள்ளுருகக் கூறிடுவார் வாயில்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

இன்பத் தமிழா லிறைவழி பாட்டினைத்
துன்பந் துடைக்குந் தமிழரசு—அன்பின்
முறையா லனைத்தே மொழியெனச் சாற்ற
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—தா. உ. சுப்பையன், பெரியபுத்தூர்.

கண்ணில் பொலிந்து கருத்தில் கலந்திருந்து
மண்ணில் தவழும் மணிநிலவாய்—அண்ணு
'துரை' வழித் தோன்றலாம் நற்கலைஞர் பேசின்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் அரசு, வெண்ணத்தூர்.

கடல்நீரும் காற்றும்நல் காருண்ட வானும்
உடலெரிக்கும் தீயும் உவக்கும்—உடன்போய்
மறைந்த பேரறிஞன் மாமன்றில் பேசின்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—முத்துராமலிங்கம், ஒடையகுளம்.

கோவில் அருச்சனைக்குக் கொண்டுவந்தார் தீந்தமிழை
நாவில் இனிக்குதடா நண்பா !—பாவில்
நிறைஞான அர்ச்சகர்கள் நேயமுடன் பாட
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—ஆ. வேலு, சூராணம்.

சங்கத் தமிழ்நூலும், சான்றோரின் காப்பியமும்,
பொங்கும் திருக்குறளும் போதிக்கும்—தங்க,
மறைப்பொருளை மாந்துதற்கே மன்றமதி லாடும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—பாலதண்டபாணி, ரெட்டியாருர்.

இறைவன் தமைப்படைத்தான் இன்தமிழைத் தந்தான்
மறையின் வழிநடக்க வைத்தான்—முறையாய்
நிறைபுலவர் நாவசைத்தால் நீலகண்ட னுன
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—மா. கணபதி, சங்கமங்கலம்.

இல்லில் இயக்கத்தில் இங்குப் பிறந்தோர்வாய்ச்
சொல்லில் இதயத்தில் சொந்தமாய்—நல்ல
'மறை' தந்த செந்தமிழே மாண்பார் செயலால்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—அ. வை. முத்துச்சாமி, அந்தியூர்.

நாயன்மார் ஆழ்வார் தனிமிக நைந்துருகி
நாயகனைப் பாடியதும் நற்றமிழால்—நேயம்
உறையும் திருமுறைகள் உள்ளம் நிறைய
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் து. அ. சீனிவாசன், சேலம்-6.

சொல்லும் பொருளும் துலங்கும் தமிழ்கேட்டுக்
கல்லும் உருகிக் கவிசொல்லும்—வல்லீ
செறியும் அமிழ்தன்ன தீஞ்சுவையும் சேர்ந்தால்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—அ. கருளியாண்டிப் பாவலர், கோம்பை.

மன்னர்கள் கேட்டு மகிழ்ந்திருந்தார்; பைந்தமிழைச்
சொன்னவர் எல்லாம் சுகித்திருந்தார்—என்ன
குறைகண்டீர் ? ஓதுதற்குக் கொள்வீர் தமிழை
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—ஆர். கே. பி. இராசரத்தினம், புதுடெல்லி.

நாடுபுகழ் பேரறிஞர் நற்கலைஞர் நாவலரால்
பீடுமிகப் பெற்றதமிழ்ப் பேருலகில்—சுடில்
அறநிலையத்(து) ஆள்வினையால் ஆலயங்கள் தோறும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—க. இரத்தினம், ஆயக்காரன்புலம்.-2.

கோவில் மணியோசை கொஞ்சும் இசையினிலும்
கூவி அழைக்கும் குளிர்தமிழைக்—கோவில்
மறைமொழியாய் ஆக்கினர் மாக்கலைஞர் ஆகா !
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—இரா. வைரமுத்து, சென்னை-30.

நானாயதலைமுறை

# உலகப் பெருங் காடுகள்

'புவனு'





உலகப் பெருங்காடுகள் எத்தனை என்று உங்களுக்குத் தெரியுமா? 'National Parks' என்று அழைக்கப்படும் இந்தக் காடுகள் வானுயர்ந்த மரங்களை உடையன வாகவும் உள்ளன. பொட்டல் வெளியாகவும், பாறைப் பகுதி யாகவும் இருக்கின்றன.

கொடிய விலங்குகளும், வேறு எங்கும் காணப்படாத விலங்கினங்களும் இக்காட்டுப் பகுதிகளில் உள்ளன.

முதலில் உலகிலுள்ள குறிப்பிடத் தகுந்த பெருங்காடுகளின் பெயர்களைத் தெரிந்து கொள்வோம் :—

வட அமெரிக்காவில் உள்ள காடுகள் விவரம் வருமாறு :—

ஐக்கிய நாடுகள்

1 எல்லோ ஸ்டோன் காடு. மான்டானு.

2 இராண்ட் டெட்டன். வையோ

3 யோசிமிட், கலிபோர்னியா
4 செக்வோயாரே கிங்ஸ் கன்யான், கலிபோர்னியா.
5 ராக்கி மவுண்டென், கொலராடோ.
6 கிராண்ட் கன்யான், அரிஸோனு.
7 பிக் பெண்ட், டெக்ஸாஸ்.
8 எவர் கிளெட்ஸ், ப்ளோரிடா
9 மவுண்ட் மக்கின்லே, அலஸ்கா
10. ஹவாய் வல்கனேஸ், ஹலேகலா, ஹவாய்.
11 க்ளேசியர், மாண்டானு

கனடா

12 வாட்டர்டன் லேக்ஸ், ஆல்பெர்டா.
13 பான், ஆல்பெர்டா.

மெக்ஸிகோ

14 தி நேஷனல் பார்க்ஸ் ஆப் மெக்ஸிகோ.

ஆப்ரிக்கா

15 க்ருகர், ட்ரான்ஸ்வால்
16 உம்பலோஸிகேம் ரிசர்வ் ஹ்லுஹ்லுவே கேம் ரிசர்வ் நாடல்.

ரொடிஷியா

17 வாங்கி, மடாபெலலாண்ட்

ஸாம்பியா

18 காபூ - ஹூங்க்வா வாலி கேம் ரிசர்வ்

டான்ஸானியா

19 செரங்கெடி.
20 ருகா.
21 மிகூமி.

கென்யா

22 நைரோபி.
23 சாவோ.
24 அம்போசலி.

உகாண்டா

25 மர்ஷிசன் பால்ஸ்.
26 க்வின் எலிஸபெத்.
27 கிடபோ வாலி
28 தி காக்கோ க் வாண்டா.

ஐரோப்பா.

29 கெய்ரன்கார்ம்ஸ், பிரிட்டன்.
30 ஸ்விஸ், ஸ்விட்சர்லாந்து.
31 காமர்க், பிரான்ஸ்.
32 மான்டானு-டி-கவடென்கா, ஸ்பெயின்.
33 காடோ டொனுனு, ஸ்பெயின்
34 பாலஸ் ஆனஸ்தந்துரி, பின்லாண்ட்.
35 சரேக், பாஜைலாண்டா & ஸ்டோராராபாலெட், ஸ்வீடன்
36 பயலோவீஸா, போலண்டு.
37 டாட்ரா, செக்கோஸ்லவேக்கியா.
38 கிஸ்பால்டன், ஹங்கேரி.
39 க்ரான் பாரடைசோ, இத்தாலி.

தென் அமெரிக்கா.

40 ராங்கோ கிராண்டே, வெனிசுலா.
41 நாஹூல் ஹூபி, அர்ஜென்டைனு.
42 கலபோகஸ் தீவுகள், ஈக்வேடர்.

ஆசியா.

43 கார்பெட், இந்தியா.
44 காஜிரெங்கா, இந்தியா.
45 ரஹூனு, இலங்கை.
46 க்ரோநோட்ஸ், ரஷ்யா.
47 சிகோட்-அலென், ரஷ்யா.
48 பூஜி-ஹகோன்-ஜப்பான்.
49 செடோனே-கை, ஜப்பான்.
50 காஹோ-யை, தாய்லாந்து.

டெக்ஸாஸில் உள்ள காட்டில் தான் உலகிலேயே உயரமான மரங்கள் உள்ளன என்று கண்டுபிடித்திருக்கிருர்கள்.

வடஅமெரிக்காவிலுள்ள ராக்கி மவுண்டன் காட்டில்தான் உலகிலேயே மிகப் பெரிய பூக்கள் உள்ளன. இக்காடுகளில் செக்குயொயாஸில் என்ற மரங்கள் உள்ளன. இவை மிக உயரமானவை.

நைரோபி, தாங்கனிகா முதலிய இடங்களில் உள்ள காடுகளில் கொடிய விலங்குகள் கூட்டம் ஏராளம்! ஏராளம்!

ஆப்பிரிக்க நாட்டிலுள்ள பெருங்காடுகளில்தான் அதிகமான அளவுகளில் விலங்குகளைக் காணலாம்.

உலகிலே மிகப் பெரிய விலங்காகக் காட்சி அளிக்கும் ஆப்பிரிக்க யானைகளை கென்யாவிலுள்ள அம்போஸிலி காடுகளில் காணலாம். இங்கே உள்ள யானைகளின் கூட்டம் போன்று வேறு எங்கும் காண முடியாது. மாலை நேரங்களில் ஆற்ருேரம் தண்ணீர் குடிப்பதற்காக இவை வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி என்று கூறப்படுகிறது.

இயற்கை அன்னையின் இணையற்ற செல்வமாக விளங்கும் இந்தக் காடுகளில் நாம் கேட்டறியாத, பார்த்தறியாத பல்வேறு வகையான விலங்குகள் உள்ளன.

'நேஷனல் பார்க்ஸ்' என்று அழைக்கப்படும் இந்தக் காடுகளில் பாறைப் பகுதிகளாக உள்ளவை வட அமெரிக்க நாடுகளிலும், மிகப் பயங்கரமான காடுகளாக உள்ளவை ஆப்பிரிக்க நாட்டிலும் உள்ளன.

அறிவியல் ஆராய்ச்சிக்கும், நில நூல் ஆய்வுக்கும் இக்காடுகள் பெருந்துணையாக அமைந்துள்ளன.

உலகம் தோன்றியது முதல் இக்காடுகளின் தன்மைகள் பெருமளவில் மாறுதல் அடைந்து வளர்ந்துள்ளன என்பதைப் பெரும்பாலான ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்ளவில்லை.

விலங்கியல் ஆராய்ச்சியாளர்களுக்கே ஒரு காலத்தில் புதிராக இருந்த விலங்குகளும் இக்காடுகளில் உண்டு.

உலகப் பெருங்காடுகள் பற்றிய முழுமையான விவரங்களை அறிய மிகப் பெரிய புத்தகம் ஒன்றை 'ரிச்சர்ட் காரிங்டன்' என்பவர் 'கிரேட் நேஷனல் பார்க்ஸ்' என்ற பெயரில் எழுதியுள்ளார்.

இந் நூலில் உலகப் பெருங்காடுகளின் பரப்பளவு, தன்மை, அங்குள்ள விலங்குகள், பறவையினங்கள் முதலியவற்றை விவரமாகக் குறிப்பிட்டுள்ளார்.



# அன்பு உள்ளம்

பி. வி. கிரி



துள்ளி ஓடுது—கன்று
துவண்டு ஆடுது
அள்ளி அணைக்குது—பசுவும்
அன்பால் இணைக்குது!

குஞ்சு கூட்டிலே—காக்கை
கொஞ்சி ஊட்டுது
கொஞ்சிப் பேசுது—வெண் புரு
கூடி மகிழுது!

பட்டுக் குட்டிக்கு—பூனை
பாலைப் பொழியுது
குட்டிக் குரங்கிடம்—தாயும்
கூடிக் குலவுது!

அன்பு உள்ளத்தால்—உயிர்கள்
அனைத்தும் வாழுது
இன்ப வாழ்விற்கு—அன்பு
என்றும் வேண்டுமே!


# வெள்ளி விழா மலர்

முன்னிலாப் புது முறையில்
தன்னந்தனிச் சிறப்போடு
எண்ணிலாப் படங்கள்
எழுத்தோவியங்களுடன்
தயாராகிறது.

விலை ரூ. 2-50.


அண்ணன் காட்டிய வழி ⑤
எல்லாரும் சொல்றபடி அண்ணாவின் முன்னாலேயே முடிவு செய்யலாம்
அண்ணாவைக் கேட்டுக் கொண்டு கூட்டம் நடத்தலாம்
நாங்கள் வருகிறோம்
யார் அந்த அண்ணா?
என்ன வேலா நீயும் அண்ணாவைக் கேட்டு முடிவு செய்யலாம்னு சொல்லிட்டே
எங்கள் பள்ளிக்கூடத் தமிழாசிரியர்
அண்ணான்னு சொல்றீங்களே
நாங்கள் எல்லாரும் அப்படித்தான் அழைப்போம்!
அவருக்கும் திருவள்ளுவர்மன்ற ஆண்டு விழாவுக்கும் என்ன சம்பந்தம்
இப்படி ஒரு மன்றம் நடக்கிறதே அவருடைய முயற்சியால் தான்
அதற்காக நம் உரிமைகளைப் பறிகொடுத்து விட வேண்டுமா?
என்ன வேலா யோசிக்கிறே?
அண்ணாவை எதிர்த்து....
ஏன் தயங்குறே வேலா? என்ன பயம்?
அண்ணாவுக்கு முத்து வைத்தான் பிடிக்கும், அவன் சொல்றதுதான் சரி என்பார்
அதை நாம் முறியடிக்கணும் அதுக்கு ஏதாவது திட்டம் வகுக்கணும்
நமக்கு எதிரா உள்ளவுங்களுக்கு ஆதரவு காட்டும் உங்கள் தமிழாசிரியரை முதலில் பழி வாங்கணும்
அவரை என்ன செய்ய முடியும்?
அவர் மேலேயே பொய் சொல்லி கெட்ட பெயர் ஏற்படுத்தினால்
?!
அபாரம்! அபாரம்! ஏன் வேலா பேசாமே இருக்கே? எதிரிகளைப் பழி தீர்ப்போம்
வெற்றி! வெற்றி நமக்கு
வெற்றி நமக்கு இல்லாமல் வேறு யாருக்கு?
வாங்க அண்ணா! வாங்க!
இவர்தான் அண்ணாவா?
(தொடரும்
கதை: நம்பியின்தம்பி • படம்: குமார்


தமிழரசு
திங்களிருமுறை
செப் 16-1971-35 காசு






# தமிழரசு


மலர் 2 16-9-1971 இதழ் 6


## இந்த இதழில்


ஏனோ? (கவிதை)
அண்ணலும் அண்ணாவும்
அண்ணாவின் வாழ்விலே...
மரச் சிற்பம் காப்போம்
உலகம் சுற்றும் வாலிபர்கள்
தமிழ்ச் சுரங்கம் திரு. வி. க.
நியூஜிலாந்தைக் கண்டு பிடித்தவர்கள் தமிழர்களே
தேரையும் சேயிழையும்
ஒரு பாய் விலை ஆயிரம் ரூபாய்
நமது மொழி
நாங்கு நேரிப் பகுதியில்...
வெண்பாப் போட்டி
ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)
தொழில் பல தொடங்குவோம்
— தொழிலமைச்சரின் கட்டுரை


முதல்வரின்

யாம் பெற்ற துன்பம்
பிறர் பெற வேண்டாம்


அரசுத்துறை ஒப்பந்தப் புள்ளி, வேலை வாய்ப்பு விளம்பரங்கள்
பக்கம் 29—68





அலைகடல்நீர் உப்பான காரணத்தை
அழகான கற்பனையால் சொல்லி, நாட்டின்
நிலையதனைத் தெளிவாக்கித் தமிழகத்தின்
நிலையுயரப் புகழோங்கத் தன்னை யீந்த
தலைமகனார் - தமிழர்களை வாழ வைத்த
தன்னேரில் பெருமகன்நம் அறிஞர் அண்ணா
நிலையான புகழ்கொண்டார் தமிழர் நெஞ்சில்;
நீடுதுயில் கொள்கின்றார் கடலோ ரத்தே!

கத்துகிற கடலோரம் துயில்கொள் கின்ற
காவியத்து நாயகனை - எவரும் நத்தும்
வித்தகனை - எவரிடத்தும் பகைகொள் ளாத
மேலான திருத்தகையை அவர்க்கு வாய்த்த
சத்தான பொன்னுடலை - அவர்நாள் தன்னைத்
தணியாத ஆவலொடு தழுவி இன்ப
முத்தமிடக் கடற்பெண்ணாள் துடிக்கின் றாளே
முத்தமிழின் சுவைகாணத் துடிக்கின் றானோ








தன்னிகரில் பெருந்தலைவர் அறிஞர் அண்ணா
சந்தனத்துப் பெட்டியிலே துயில்கொள் கின்றார்;
'என்றுமுள தென்தமிழை இயம்பி மிக்க
இசைகொண்ட' தமிழ்க்கம்பன் அருகே நின்று
தன்கரத்தே எழுத்தாணி ஏடு தாங்கிச்
சலியாமல் நாளெல்லாம் எழுது கின்றான்!
மன்பதைக்கு நம்அண்ணா வழங்கும் செய்தி
மகிழ்வுடனே கேட்டெழுதி நிற்கின் றானோ?

சில நாளில் சருக்கத்தின் மறுபு றத்தே
சிலைவடிவு கொளவிருக்கும் சிலம்பு தந்த
உலகமகா நாடகநூல் ஆசா னை
ஒப்பற்ற தமிழ்த்துறவி வந்து நின்று
நலமாக எழுதற்குத் துவக்கம் செய்வான்;
நாடாளும் நல்லதம்பி கலைஞர் கண்ட
பலமான அரசியலின் பாங்கு பாடும்
பகுத்தறிவுப் பெரியார்போல் எழுது வாரோ?

வெல்திறல்கள் பலபடைத்த அறிஞர் அண்ணா
விழிமூடித் துயில்கொள்ள எதிரில் ஆங்கே
பல்கலைகள் பயிற்றுகிற கழகம் நாளும்
பணிவுடனே நிற்பதுமேன்? அண்ணா கற்ற
பல்கலையும் பாங்குடனே முயன்று கற்றுப்
பைந்தமிழர் அனைவர்க்கும் பயிற்று கின்ற
நல்லதொரு பெருநோக்கம் கொண்டோ? அன்றி
நாமெங்கே இவர்முன்னே எனநி னைந்தோ?



# யாம் பெற்ற துன்பம் பிறர் பெற வேண்டாம்!

—டாக்டர் கலைஞர்

குடும்ப நலத் திட்டத்தைப் பற்றி அடிக்கடி பேசி வருகிறோம். குறிப்பாக, பேராசிரியர் அவர்கள் குடும்ப நலத் துறையினுக்கு அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு சிவப்பு முக்கோணம் காணாத இடமில்லை என்ற அளவுக்கு மதில் சுவர்களிலும்—மரங்களிலும்—மரக்கிளைகளிலும் நானும் பார்க்கிறேன்—நீங்களும் பார்க்கிறீர்கள்.

இப்படிச் சொல்கிறார்களே, இவர்கள் எத்தனை பெற்றிருக்கிறார்கள் என்று கூட மனத்துக்குள் கேட்கத் தோன்றும்.

எங்களில் சிலர் அளவு மீறி விட்டிருக்கலாம். அதனால் தான்-அப்படி அனுபவித்ததால் தான் இதையெல்லாம் எடுத்துச்சொல்கிறோம்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பார்கள்.

யாம் பெற்ற துன்பம் நீங்கள் பெறாமல் இருக்க வேண்டும் என்ற அனுபவத்தால் தான் இந்தப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறோம்.

இந்தத் துறையில் பயிற்சி பெறுகிறவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஏதோ அரசாங்கம் ஏழு-எட்டு லட்ச ரூபாய் செலவிடுகிறது; கட்டடம் எழுப்புகிறது; இத்தனை பேருக்குப் பயிற்சி தந்து—நகர்ப்புறங்களுக்கும் கிராமப்புறப் பகுதிகளுக்கும் அனுப்புகிறது என்று ஏட்டுக் கணக்கில் எண்ணிக்கையைக் காட்டினால் மட்டும் போதாது.

பயிற்சி பெறுபவர்களும் சரி—குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையைச் செயல்படுத்துகிறவர்களானாலும் சரி உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

பயிற்சி பெறுகிறவர்கள் தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படுகிற விதத்தில் மாதாந்திர ஊதியம் கிடைக்கிறது—வேலை கிடைக்கிறது என்று எண்ணாமல் சமுதாயக் கடமையைச் செய்கிறோம், அதற்காக நாம் பணிக்கப்பட்டு இருக்கிறோம்—ஆணையிடப் பட்டிருக்கிறோம்—அந்தக் கடமையைச் சரிவர நிறைவேற்ற வேண்டும் என்ற உள்ளத்தோடு இங்கிருந்து வெளிக் கிளம்புகிறவர்கள் பாடுபட வேண்டும்.

அப்போது தான் எடுத்த காரியத்தை இனிது நடத்த முடியும். எத்தனையோ திட்டங்கள் தீட்டப்பட்டாலும் ஒருபக்கம் திட்டங்கள் உருவாகிக் கொண்டேயிருக்கும் போது, மறுபக்கம் அதை அனுபவிப்பவர்களின்தொகையும் உயர்ந்து கொண்டே போனால் திட்டத்தின் பலன்களைப் பார்த்திடும் போது குறைகள் ஏற்படுகின்றன.

நம் மாநிலத்தில் குடும்ப நலத் திட்டம் நல்ல முறையில் வெற்றிகரமாக நடை பெற்று வருகிறது. நற்சான்றும் கிடைத்திருக்கிறது.

நமது மாநிலத்தில் மக்கள் தொகை குறைவதால் நாடாளுமன்றத்தில் நமது மாநிலப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 41 ஆகயிருந்து 39 ஆக இப்போது குறைந்திருக்கிறது. மேலும் குறைந்து விடுமோ என்ற கவலையும் ஏற்பட்டிருக்கிறது.

இருக்கிற பிரதிநிதிகளின் எண்ணிக்கை உயரவேண்டும், குறைக்கப்படக் கூடாது என்று பொறுப்புள்ள நமது உறுப்பினர்கள் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

சமூக முன்னேற்றத்தையும் இந்தியப் பொருளாதார வளர்ச்சியையும் கருத்தில் கொண்டால் தான் செம்மையான வாழ்வு—செழுமையான வாழ்வு—நிலைக்க முடியும்.

ஒரு காலத்தில் எல்லாமே பாபமாகத் தான் கருதப்பட்டது. அந்த நிலையிலிருந்தெல்லாம் நம்மை நாமே விடுவித்துக் கொண்டிருக்கிறோம்.

1936, 37-ல் என்னுடைய குடும்பத்தைப் புகைப் படமெடுக்க வேண்டும் என்று ஒரு கிராமத்தில் புகைப் படக்காரர் வந்தார்.

என் தகப்பனார் புகைப்படக்காரரின் முன்பு உட்காரவே மறுத்து விட்டார். ஏனென்றால் ஆயுளில் பாதி குறைந்து விடும் என்று அவர் கருதினார். எவ்வளவு பாடு பட்டு அவரை உட்காரவைத்துப் பக்கத்தில் எனது தாயாரும் நானும் நிற்க படமெடுத்தார்கள்! படமெடுத்த பிறகும் அவர் 25 ஆண்டுக் காலம் இருந்துதான் மறைந்தார்.

புகைப்படம் எடுப்பதே பாப காரியம் என்று கருதப்பட்டு நம் ஆயுளில் பாதியைப் புகைப்படம் போக்கி விடும் என்று கருதினார்கள்.

அதைப்போலத்தான் குழந்தை பிறப்பதைத் தடுப்பதும்—அதிகக் குழந்தைகள் பெறக் கூடாது என்று கூறுவதும் பாபமாகக் கருதப்பட்டது.

அன்று நாங்கள் எதிர்க் கட்சியாகக் கூட இல்லாது சமுதாய சீர்திருத்த இயக்கமாக இருந்த போதே எங்கள் இயக்கத்தின் சார்பாகப்பிள்ளைகளைக்குறைக்கவேண்டும், மனிதன் மன மகிழ்ச்சியோடு இருக்கக் குடும்பக்கட்டுப்பாடு அவசியம் என்ற அளவுக்குக் கூறி வந்தோம்.

பகுத்தறிவுக் கருத்துக்களைக் கவிதை மூலம் பரப்பி வந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம்; இதிலென்ன குற்றம்' என்று பாடினார்.

இந்தத் திட்டம்வெற்றிகரமாக நடக்க— பேசினாலோ— விளம்பரம் செய்தாலோ—தொகையை வழங்கினாலோ—பயிற்சி அளித்து வந்தாலோ மட்டும் போதாது. பயிற்சி பெறுகிறவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து, பொறுப்போடு செயல்பட வேண்டும்.

# இளைஞர் அணி

## எதிர் கால வாழ்வுக்கு வழிகாட்டும்

முதல்வர் கலைஞர் அவாகள், சட்டப் பேரவையில் 1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை அளித்து உரையாற்றுகையில் இளைஞர் அணித்திட்டம் பற்றி அறிவித்தார்கள்.

அந்த இளைஞர் அணி செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாளிலிருந்து தொடங்கப்படுகிறது.

வேளாண்மை, கல்வி, மருத்துவவியல், பொறியியல், கால்நடையியல், உடற் பயிற்சிக் கல்வி, கலை, அறிவியல், வாணிகவியல், பத்திரிகைத் தொழில், சமுதாயப் பணி, செவிலிப் பணி, நுண்கலை, மற்றுமுள்ள கலைக் கல்வி படிப்புகள் ஆகியவற்றில் பட்டம் பெற்றவர்கள் அல்லது தகுதிச் சான்றிதழ் பெற்றவர்கள் தொழில் நுட்பக் கல்விக் கூடங்களில் படித்துத் தேறிய ஆண், பெண் இருபாலரும் இளைஞர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்பொழுது இளைஞர் அணியில் இரண்டாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இளைஞர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறவர்களுக்குச் சத்திய விஜய நகரம் (வட ஆர்க்காடு மாவட்டம்), கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்), பவானி சாகர் (கோவை மாவட்டம்), பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்), தி. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்) முதலிய இடங்களில் நான்கு வாரம் பயிற்சி அளிக்கப்படும்.




பயிற்சியளிக்கப் பெற்றவர்கள் தமிழ் நாட்டிற்குள் எந்தக் கிராமத்தை அரசு குறிப்பிடுகின்றதோ அந்தக் கிராமத்தில் தான் வசிக்க வேண்டும் • பணியாற்ற வேண்டும். மக்கள் நல்வாழ்வு வசதிகளைப் பெருக்குவது, கிராமங்களில் நற்பணி மன்றங்களை அமைப்பது, கல்வியின்மையை ஒழிப்பது போன்ற செயல்களில், இளைஞர் அணியினர் ஈடுபடுத்தப் படுவார்கள். சமுதாயச் சீர் கேடுகளைப் போக்கிப் "புதியதோர் உலகு" செய்ய இவர்கள் பாடுபடவேண்டும்.

இளைஞர் அணியில் தொண்டர்களாகப் பணியாற்றுவோர் பின்னர் அரசுப் பணியில் சேரச் சிறப்புச் சலுகை காட்டப்படும்.

# தொழில் பல தொடங்குவோம்

குமரு

இங்கிலாந்து அரசு, ஹங்கேரிய அரசு ஆகியவற்றின் அழைப்பின் பேரில் உலக நாடுகளின் தொழில் வளங்களைக் கண்டறியவும் அந் நாடுகளின் உதவியோடும் ஒத்துழைப்போடும் தமிழகத்தில் மேலும் பல புதிய தொழில்களைத் தொடங்கவும் தமிழக அரசின் சார்பில் நானும் தொழில் துறைச் செயலர் திரு கார்த்திகேயன், தொழில் நுணுக்க நிபுணர்கள் திரு அனந்தசாமி, திரு நல்ல பெருமாள் ஆகியோரும் 'உலகச் சுற்றுப் பயணம்' மேற்கொண்டோம்.

ஏற்கெனவே நமது மாநிலத்தில் கூட்டுறவுத் துறையில் தொடங்குவதற்குப் பூர்வாங்க அனுமதி பெறப்பட்டுள்ள மோட்டார் டயர் தொழிற்சாலை, சோடியம் ஹைட்ரோ சல்பேட் தொழிற்சாலை, பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை, சோடா ஆஷ் அமோனியம் குளோரைட் தொழிற்சாலை, குரோமிக் சல்பேட் தொழிற்சாலை ஆகியவற்றைத் தொடங்க அந்தந்த நாட்டினர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இனிமேல் இதுபற்றி மத்திய அரசின் ஒப்புதல்தான் பெற வேண்டும். சோடியம் ஹைட்ரோ சல்பேட், டயர் தொழிற்சாலைகளுக்கு எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன.

டயர் தொழிற்சாலை ஏற்படுவதுபற்றி ஜப்பான், அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளிலும் தொழில் அதிபர்களைச் சந்தித்துப் பேசினோம்.

நைலான் பிலமெண்ட், பாலிஸ்டர் பிலமெண்ட், பாலிஸ்டர் பிலிம், அலுமினியம் குளோரைடு, போரிக் அமிலம், அலுமினியம், பவுடர் பசை, சோடியம் சிலமெடு, ஆக்ஸாலிக் அமிலம், பார்மிக் அமிலம், மெத்தனல் கால்சியம் கார்பைடு போன்ற ரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது பற்றியும் எந்தெந்த முறையில் உற்பத்தி செய்வது என்பது பற்றியும் பேசினோம். நமது நாட்டில் இந்தத் தொழிற்சாலைகளைத் தொடங்கினால் இதில் பங்கு சேருவதற்கும், வெளிநாட்டுக் கம்பெனிகள் சம்மதம் தெரிவித்துள்ளன. இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் கூட்டுத் துறையில் வர இருப்பவை. இவைகளைப் பற்றியும் மத்திய அரசு ஒப்புதல் பெறவேண்டியிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் உருபொருள்களைப் பயன்படுத்தக் கூடியவை. இவை தவிர மேலும் 3 புதிய தொழில்கள் தொடங்குவது பற்றி வெளி நாடுகளில் பேச்சு நடத்த வாய்ப்புக் கிடைத்தது.

தமிழ் நாட்டில் படகு இயந்திரம் கட்டும் தொழிற்சாலை அமைக்க ஜப்பானில் உள்ள "யான்மார்" தொழிற்சாலை பங்கு எடுத்துக் கொள்ளச் சம்மதித்திருக்கிறது.

ஜப்பானிலுள்ள டோயா என்ற காகிதத் தொழிற்சாலையில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் முறையைக் கண்டு பிடித்துள்ளார்கள். அது பற்றி ஒரு நிபுணர் தமிழகம் வந்து ஆராய்ந்து யோசனை தெரிவிக்கவும் முன்வந்திருக்கிறார்.

புதிய முறையில் கார்பன் பேப்பர் இல்லாமலேயே பிரதி எடுக்கக்கூடிய காகிதத்தை ஜப்பான் கம்பெனி ஒன்று கண்டு பிடித்துள்ளது. அத்தகைய தொரு தொழிற்சாலையைத் தமிழகத்தில் தொடங்கவும் அந்த நிறுவனத்தினர் இசைவு தெரிவித்துள்ளனர்.

மோட்டார் பிஸ்டன் வளையம் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க "ராயல் என்பீல்டு" கம்பெனிக்கு அனுமதி கிடைத்துள்ளது. அதுபற்றியும் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

எவர்சில்வர் பிளேட் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவது பற்றியும் நாங்கள் பேச்சு வார்த்தை நடத்தினோம்.

ஜப்பானில் டெலிவிஷனுக்கு வேண்டிய கருவிகளைச் செய்யும் மிகப்பெரிய "தோஷிபா" கம்பெனியிலும் பேச்சு வார்த்தை நடத்தினோம். "தோஷிபா" தொழிற்சாலையை நாங்கள் சுற்றிப் பார்த்துவிட்டு வெளியே வந்ததும் அதன் தலைமை நிருவாகி என்னைப் பார்த்து "எந்தவித மேற்பார்வையாளரும் கண்காணிப்பாளரும் இல்லாமலேயே இந்தத் தொழிலாளர்கள் எப்படிக் கடமை உணர்ச்சியோடு வேலை பார்க்கிறார்கள், பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

டெலிவிஷன் கருவிகள் பற்றி மிக்குயி கம்பெனியாரிடம் ஜப்பானில் உள்ள இந்தியத் தூதுவர் அறிக்கை கொடுத்திருக்கிறார். அந்த அறிக்கையில், "பொதுவாகச் சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் தொழில் நுணுக்கத் திறன் படைத்த தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு டெலிவிஷன் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த வாய்ப்பிருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கும் அந்தக் கம்பெனியார் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் டெலிவிஷன் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது பற்றி மத்திய அரசிடம் ஏற்கெனவே மனு கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட இருக்கும் நுணுக்கமான எலக்ட்ரானிக் கருவிகளைத் தயாரிப்பதற்கு உதவ ஜப்பான் கம்பெனி "தோஷிபா" சம்மதம் தெரிவித்திருக்கிறது.

கடல்நீரைக் குடிநீராக்கும் தொழிற்சாலை ஒன்றை நாங்கள் சுற்றிப் பார்த்தோம். அங்கு ஒரு காலன் தண்ணீரைச் சுத்தம் செய்ய 8 ரூபாய் செலவாகிறது. இந்தச் செலவைக் குறைத்துத் தொழிற்சாலைக்குப் பயன்படும் தண்ணீராகத் தயாரிப்பதற்குத் தொழில் நுணுக்க உதவி கொடுக்க முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர்களும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள்.

திருவண்ணாமலையில் உள்ள இரும்பைச் சேலம் இரும்புத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்த உத்தேசித்துள்ளோம். இது பற்றி மாரா பென்னியிடா என்ற ஜப்பான் கம்பெனியாரிடம் பேச்சு வார்த்தை நடத்தினோம். திருவண்ணாமலை கனி வளம் பற்றிப் பூர்வாங்க ஆராய்ச்சி நடத்த அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

ஜப்பானில் உள்ள நிக்ஸான் டோயாடோ மோட்டார்கார் தொழிற்சாலை அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினோம்.

காஸ் சிலிண்டர் தயாரிப்பது பற்றி இத்தாலியில் பேச்சு வார்த்தை நடத்தினோம்.

தமிழகத்தில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு என்னென்ன மருந்துகளைத் தயாரிக்கலாம், எந்த வகையான மூலிகைகள் கிடைக்கின்றன, என்பனவற்றையெல்லாம் ஆராய ஹங்கேரி நிபுணர்கள் தமிழகம் வர ஒப்புக் கொண்டுள்ளனர். தமிழ் நாட்டில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு மருந்து உற்பத்தித் தொழிற்சாலை தொடங்க முடியுமா என்பதை மேற்கு ஜெர்மனி நிறுவனம் ஒன்றும் ஆராய ஒப்புக்கொண்டுள்ளது.

மலேயாவில், நமது தமிழ் நாட்டைச்சேர்ந்தவர்கள் அங்குக் கூட்டாக 17 தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளனர்; அதேபோல் பல தொழிற்சாலைகளைத் தொடங்க ஏற்பாடு செய்யுமாறு மலேசிய அதிகாரிகள் என்னிடம் கேட்டுக்கொண்டார்கள்.

பொதுவாக, வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வந்து கூட்டாகத் தொழில் தொடங்க நிறையப்பேர் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் தொழிற்சாலைகள் தொடங்க உரிமம் வாங்குவதில் உள்ள சிரமங்களையும் கூட்டாகத் தொழில் நடத்துவதற்கான ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதிலும் இந்தியாவில் இருந்து தங்களுக்குள்ள இலாபத்தைத் தங்கள் நாட்டிற்குக் கொண்டு போவதில் உள்ள சிரமங்களையும் கண்டுதான் அவர்கள் தயங்குகிறார்கள்.

நாங்கள் பார்த்த நாடுகளில் எல்லாம், தொழில் துறையில் அவர்கள் முன்னேறியதற்குக் காரணம், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் புதியன கண்டு பிடிப்பதற்காகத் தனித்தனி ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்தி இருப்பது ஒரு தனிச் சிறப்பு. அதன் காரணமாகத்தான் தொழில் நுணுக்கத்தில் அவர்கள் முன்னேறி இருக்கிறார்கள். அதே போன்று, தமிழ் நாட்டிலும் அரசாங்கச் சார்பில் பல தொழில் ஆராய்ச்சிக் கூடங்களை ஏற்படுத்துவது பற்றி யோசித்து வருகிறோம்.

சிங்கப்பூரில் குடிசைகளை அப்புறப்படுத்திய உடனேயே அவர்களுக்கு மாற்று வீடுகள் கட்டிக் கொடுத்துவிடுவதால் பிரச்சினை எதுவும் இல்லை. அப்படிப்பட்ட பல மாடிக் கட்டடங்களில் இருப்பவர்கள் தங்களுடைய குப்பை, கூளங்களை ஜன்னல் வழியே தெருவில் எறிந்து விடாமல் அதற்கு உரிய குழாயில் போட்டுவிடுவதால் எல்லா வீட்டுக் குப்பைகளும் ஒழுங்காக அந்தக் குழாய் வழியே கீழே வந்துவிடுகிறது.

இதனால்தான் அவ்வளவு நெருக்கமான சிங்கப்பூர்ப் பகுதியில் எல்லா இடங்களுமே சுத்தமாக இருக்கின்றன.

தொழிலாளர்களுடைய ஒழுக்கம், கட்டுப்பாடு, கடமை உணர்ச்சி ஆகியனவே ஒரு நாடு முன்னேறுவதற்கு வழி என்பதை ஜப்பானைப் பார்த்ததும் புரிந்து கொண்டேன்.



மாண்புமிகு தொழிலமைச்சர் செ. மாதவன்

பொதுவாக எங்களுடைய சுற்றுப்பயணம் மிகவும் பயனுள்ளதாகவும் நல்ல பல அனுபவத்தைக் கொடுப்பதாகவும் அமைந்தது பெருமகிழ்ச்சிக் குரியதாகும்.







மாதவனின் திடீர் வருகை, தேன்மொழியைச் சற்றுத் திகைப்பிலே ஆழ்த்தாமல் இல்லை.

அதனால் அவளது முகமலரிலே மிக நுண்மையான சலனத்தின் நெளிவுகள்—அசைவுகள்.

எனினும் அவளுடைய உள்ளத்திலோ 'வாங்க, வாங்க!'—என்று வரவேற்கும் வகையில் மகிழ்ச்சியும் பொங்கவில்லை; 'இங்கே ஏன் வந்தீர்கள்?' என்று விரட்டியடிக்கும் வகையில் எரிச்சலும் சீற வில்லை.

அவனுடைய வருகையால் களிப்பு என்றும் கொள்ள முடியாத—கசப்பு என்றும் தள்ள முடியாத இறுக்கமான மனநிலையே அவளுக்கு.

அந்த 'இரண்டுங் கெட்டான்' எண்ண ஓட்டத்திலும், தன்னையும் மீறிய மரியாதை உணர்வின் உந்தலால் படுக்கையை விட்டு எழுந்து நின்று விட்டாள் அவள்.

மாதவனும், 'உள்ளே வரலாமா?'—என்று கேட்டானே யொழிய, அவளுடைய மறுமொழியையோ அழைப்பையோ எதிர்பார்த்து, வெளியிலேயே காத்துக் கொண்டா நின்றிருந்தான்? அறையினுள் நுழைந்து அவளை நோக்கி விடுவிடுவென்று வந்த அவன், கட்டிலை ஒட்டிக் கிடந்த நாற்காலியிலே கூச்சமோ குழைவோ இன்றி நன்றாக உட்கார்ந்து கொண்டான் உரிமையுள்ளவனைப் போல.

முகத்தை முந்தானையால் துடைத்துக் கொண்டிருந்த தேன்மொழியைக் கனிவோடு நோக்கிய அவன்,

''கதை மிகவும் உருக்கமானதோ?''—என்று மெல்லக் கேட்டான் ஓர் இளஞ்சிரிப்போடு; அந்தச் சிரிப்பிலே ஒரு வகை எள்ளலும் துள்ளியது!

'நான் படிக்கும் பொழுதே அழுது விட்டதை இவரும் பார்த்துவிட்டார்போல் தெரிகிறதே!'--என்று புரிந்துகொண்ட அவள், 'ஆம்'—என்றோ, 'இல்லை' என்றோ விடையேதும் கூற வில்லை.

அவனை நேருக்கு நேர் நோக்கினாள்.

ஆனால் அவளுடைய பளிங்குப் பார்வையில் வெறுப்பும் இல்லை; வேட்கையும் இல்லை; வெறுமைதான் (சூனியந்தான்) படர்ந்து கிடந்தது.

ஆனால் நான் ஒன்று சொன்னால் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களே?''

—என்று கேட்டான் அவன்.

தேன்மொழியோ பழைய வெறுமை கலந்த பார்வையையே அவனை நோக்கி வீசினாள்.

அவன், தானாகவே மேலே தொடர்ந்தான்.

'' ஒன்றும் இல்லை ; நோயாளியாக இருப்பவர்கள் இப்படிப் பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பான கதைகளைப் படிப்பது அவ்வளவு உகந்தது இல்லை என்பது என் தாழ்மையான கருத்து''

—மாதவனின் அந்தக் கூற்றுக்காவது அவள் ஒட்டியோ வெட்டியோ கருத்து எதையும் கூறக் கூடாதா?

கூறவில்லை.

அவளுடைய நீள விழிகள்,

## 5. நெருங்கத் துணிந்த நெஞ்சம்

''அது என்ன புத்தகம் அப்படி?''—

மாதவனின் இந்தக் கேள்வித் தூரட்டியினாலும் தேன்மொழியின் வாயிலிருந்து விடைக் கனியைக் கொய்ய முடியவில்லை.

அவள் தன் கரத்திலிருந்த புத்தகத்தை மவுனமாகவே அவனிடம் நீட்டினாள்.

அதனை வாங்கியவாறே,

''ஓ! காண்டேகரின் 'எரி நட்சத்திரமா?' மிக அருமையான புத்தகம் ஆயிற்றே ?

அறைச் சன்னலுக்கு அப்பால், தோட்டத்திலே நெடுநெடுவென்று வளர்ந்திருக்கும் நெட்டிலிங்க மரங்களையெல்லாம் தாண்டி நீல வானத்தை நோக்கியே பறந்து சென்றன.

அங்கோ, வெண்முகிலின் பிஞ்சுகளைப் போல, இரண்டு வெள்ளைப் புறாக்கள் ஒன்றையொன்று துரத்திப் பிடித்து விளையாடிச் சிறகடித்தன. அவற்றில் ஒன்று ஆணாகவும் இன்னொன்று பெண்ணாகவும் கூட இருக்கலாமோ ?

அவற்றைக் காணக் காண-

தேன்மொழியின் நெஞ்சு விம்மிற்று; அவளால் பெருமூச்செறியாமல் இருக்க முடியவில்லை.

அதே சமயம் மாதவனோ....?

தோல்வியையே தூண்டுகோலாகவும் வீழ்ச்சியையே எழுச்சிக்குரிய எருவாக—எச்சரிக்கையாகவும்—எடுத்துக் கொண்டு தன்னைத் தானே பக்குவப்படுத்தி வளர நினைப்பவனே அவன்.

அவனே இப்போது தேன்மொழியின் போக்கைக் கண்டு—தன் உதடுகளைத் திறந்து ஒரேயொரு சொல் முத்தைக் கூட உதிர்க்காத அவளுடைய அழுத்தத்தைக் கண்டு—அப்படியே அயர்ந்து போனான்.

அவனுடைய பக்குவம் உண்மையில் இப்போது திக்குமுக்காடிற்று.

அதற்காகத் தன் உள்ளத்தை உடைய விடவும் அவன் ஆயத்தமாக இல்லை. அவளுடைய அமைதிக் குளத்திலே என்னென்ன கேள்விக் கற்களையெல்லாம் எறிந்து எப்படியெப்படியெல்லாம் அலைகளை எழுப்பலாம் என்பதிலேயே குறியாக இருந்தது அவனது குறுகுறுப்பான மனம்.

''உடம்பு இப்போது எப்படி இருக்கிறது?''—என்று பரிவோடு கேட்டான் அவன்.

''தேவலாம்''

—பல்லிடுக்கிலிருந்து மெல்ல இழைந்து வந்தது இந்த ஒரேயொரு வார்த்தை.

''மறுபடி மயக்கம் வந்ததா?''

''ஊ...கூம்''.

''டாக்டர் என்னதான் சொல்கிறார்?''

பதில் இல்லை.

''நான் கேட்பது காதில் விழவில்லையா?''

''ம்''

''டாக்டர் உங்கள் உடல்நிலை தேறுவது பற்றி என்னதான் சொல்கிறார் என்று கேட்டேன்.''

''ஒன்றும் சொல்லவில்லையே!''

''ஏன், 'சமையற்காரி சண்பகத்திடம் வேண்டுமானாலும் சளசளவென்று பேசிக்கொண்டு இருங்கள்; ஆனால், மாதவன் வந்தால் மட்டும் முகத்தைத் திருப்பிக் கொண்டு எங்காவது மரத்தையோ வானத்தையோ ஆராய்ச்சி செய்யுங்கள்'—என்று கூட அந்த டாக்டரம்மா சொல்லவில்லையா?''

—மாதவன் இப்படி வேடிக்கையாகக் கேட்டதும் தேன்மொழியின் சிவந்த இதழ்களிலே மெலிவாக நெளிந்தது ஒரு முறுவல்; எனினும் பார்வை என்னவோ தோட்டத்துப் பக்கமே பதிந்து கிடந்தது.

''..ம்..போகட்டும்; எனக்கு இப்போது ஒரே பசியாக இருக்கிறது.''

—என்று நீட்டி முழக்கிப் பெருமூச்செறிந்தான் அவன்.

வெளியிலே அலைந்து கொண்டிருந்த தேன்மொழியின் விழிகள் சட்டென்று உள்ளே திரும்பின; மாதவனையே ஏற இறங்கப் பரிவோடு பார்த்தன.

''பத்தரை—பதினோரு மணி வரை இப்படிப் பட்டினி கிடந்தால் உடம்பு என்னத்திற்கு ஆகும்?''

உரிமையோடு கடிந்து கொண்ட அவள், அறையை விட்டு வேகமாக வெளியேற முற்பட்டாள்.

''ஆமாம், எங்கே இப்போது அவசரமாகப் போகிறீர்கள்?''

—பின்னாலிருந்து கத்தினான் மாதவன்.

''சமையற்கட்டுப் பக்கம் போய் உங்களுக்கு ஏதாவது கொண்டு வர வேண்டாமா?''

''அய்யய்யோ! அதையெல்லாம் இப்போது யார் தின்பார்கள்?''

''ஏன்?''

''எனக்குப் பசி அடங்கிவிட்டது.''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''உண்மைதான், தேன்மொழி! நீங்கள் இரண்டு வார்த்தை முகங்கொடுத்து உரிமையோடு பேசினீர்களே அதிலேயே என் மனப்பசி அடங்கிவிட்டது.''

''இந்த விளையாட்டுப் பேச்செல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாம். இப்போது நான் போய் இட்டிலியோ, தோசையோ உங்களுக்குக் கொண்டுவரட்டுமா, வேண்டாமா?''

''அதுதான் வேண்டாம், என்கிறேனே! கொஞ்ச நேரத்துக்கு முந்திதான், நண்பர்களோட வேர்க்க விறுவிறுக்க 'டேபிள் டென்னிஸ்' ஆடிவிட்டு, ஓட்டலுக்குப் போய், ஆறு பூரியும் அரை டசன் இட்டிலியும் அடித்துவிட்டு வந்தேன். இனிமேலும் போட்டு அடைத்தால் வயிறு வெடித்து விடாதா?''

—மாதவன் சிரித்தான்.

''பிறகு ஏன் பசிக்கிறது என்று பொய் சொல்லணுமாம்?''

—சிணுங்கினாள் தேன்மொழி.

''நான் எங்கே பொய் சொன்னேன்? 'பசிக்கிறது'—என்று தான் சொன்னேனே யொழிய, 'வயிற்றைப் பசிக்கிறது'—என்று சொல்லவில்லையே?''

''ஆங்..ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகப் பேசி விட்டதாக நினைப்புப் போல இருக்கு! ஆனாலும் இப்படியா திகைக்க வைக்கிறது?''

''அப்படி உங்களை நான் திகைக்க வைக்கலேன்னா இப்போ இவ்வளவு கலகலப்பாகப் பேசுவீர்களா? ஆமா; என்மேலே உங்களுக்கு அடங்காத ஆத்திரந்தானே?''

''நான் ஏன் உங்கள் மேலே ஆத்திரப்படுகிறேன்? அப்படி ஆத்திரப்பட எனக்கு என்ன உரிமை இருக்கிறது?''

''அப்படி உரிமை இல்லாதவங்க, எனக்குப் பசி என்றதும், சிற்றுண்டி கொண்டு வரமட்டும் ஓடலாமா?''

—மாதவனின் இந்தச் சுருக்குப்பிடிக் கேள்விக்கு எவ்வாறு நறுக்குத் தெறித்த மாதிரி விடை கூறுவது என்று தேன்மொழி சிந்திக்கும் பொழுதே—

வேலைக்கார வீரமுத்து மேலே ஓடிவந்தான்.

''அய்யா வந்திட்டாங்க; மாதவன் சாரை அழைச்சுக்கிட்டு வரச் சொல்றாங்க.'' —என்றான்.

''சரி, போ; இதோ வருகிறேன்'' —என்று அவனை அனுப்பிவிட்ட மாதவன், தேன்மொழியைத் திரும்பிப் பார்த்தான்.

என்றும் இல்லாத புதுமையாக, அவளை விழுங்கிவிடுவதைப் போல வெறிக்கவே பார்த்தான்.

அவனது முகத்திலே அச்சம், நாணம், ஆண்மை, ஆசை எல்லாங் கலந்த விந்தைச் சிரிப்பின் ஒளிச்சாயல் விழுந்தது.

தன் சட்டைப் பையிலிருந்து கடித உறை ஒன்றை எடுத்து அவளது கையிலே திணித்தான் பரபரப்போடு.

அந்த ஒரு கணத்திலேயே இருவர் கரங்களும் வெடவெடத்தன; வெப்பத்தைப் பரிமாறிக் கொண்டன.

* * *

மாதவன் அங்கிருந்து அகன்ற பின்னர், அறையினுள்ளே தன்னைத் தானே சிறைப்படுத்திக் கொண்டாள் தேன்மொழி.

கட்டில் மெத்தையில் அமர்ந்தவாறே, அவன் அவசர அவசரமாகத் தன் கையில் திணித்துவிட்டுச் சென்ற கடிதத்தைப் பிரித்துப் படிக்க முற்பட்டாள்.

'அன்புக்கினிய தேன்மொழி,

என் இதயக் கேணியில் பீரிட்டுப் பொங்கும் இனிய உணர்வுகளை—அமுத நினைவுகளை—எவ்வாறு எழில் சொட்டும் சொல்லோவியமாக்கி எழுதுவதென்றே எனக்குத் தெரியவில்லை.



உறுதிக்கும்
உழைப்பிற்கும்

CHETTINAD BRAND

# செட்டிநாடு சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது

தயாரிப்பாளர்கள் :

செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்

6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி : 'BESTCEMENT' போன் : 27256.
பாக்டரி : புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி : 'CEMENT' போன் : 144.



## நீலகிரி கூட்டுறவு மைய வங்கி லிமிடெட்
நெ. ஜே. 90. "கூட்டுறவு மத்திய வங்கி கட்டிடம்" உதகமண்டலம்

தந்தி : நில்போபாங்க் தொலைபேசி எண் : 2420

| கிளைகள் : | கோத்தகிரி | குன்னூர் | கூடலூர் |
|---|---|---|---|
| தொலைபேசி எண் : | 332 | 2684 | 24 |

(லட்சம்)
அனுமதிக்கப்பட்ட மூலதனம் .. 40·00
வழங்கப்பட்ட பங்கு மூலதனம் .. 29·87

வட்டி விகிதம்
(1) சேவிங்ஸ் பாங்கு கணக்கு .. 4%
(2) பிராவிடண்ட் பண்டு டெபாசிட்டு.. 5%

நிரந்தர டெபாசிட்டுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 1 மாதம் முதல் | 3 மாதங்களுக்குள்ளாக | | | $3\frac{1}{2}$% |
| (2) | 3 | ,, | 6 | ,, | $4\frac{3}{4}$% |
| (3) | 6 | ,, | 12 | ,, | $5\frac{1}{4}$% |
| (4) | 12 | ,, | 24 | ,, | $6\frac{1}{4}$% |
| (5) | 24 | ,, | 36 | ,, | $6\frac{3}{4}$% |
| (6) | 36 | ,, | 60 | ,, | $7\frac{1}{4}$% |
| (7) | 60 | ,, | 84 | ,, | $7\frac{1}{2}$% |
| (8) | 84 மாதங்களுக்குமேல் | | | | $7\frac{3}{4}$% |

36 மாதங்களுக்கும் அதற்கும் மேற்பட்ட காலத்திற்கும் போடப்படும் டெபாசிட்டுகளுக்கு (அசலுக்கும், வட்டிக்கும்) தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.
ஜே.மாதா கவுடர்,எம்.பி., இரா.சு.வேலாயுதம்,பி.ஏ.
பெருந்தலைவர். துணைப்பதிவாளர்-செயலாளர்.







அதுவும் நேற்றிரவு நான் கொண்ட இன்பத் தினவு இருக்கிறதே, அதனை எப்படி நான் விரித்துரைப்பேன்?

ஒட்டுக் கேட்பதையோ—ஒட்டுக் கேட்பவர்களையோ—எனக்கு அறவே பிடிப்பதில்லை; மிகவும் அருவருப்பாகவே கருதுவேன். ஆனால் அதே இழிந்த செயலை நானே மேற்கொள்ள நேருமென்றோ அதனால் இனிமைக் கனவுகளில் மிதக்க முடியுமென்றோ நான் கண்டேனா?

ஆம்; நேற்றுமாலை நீங்களும் டாக்டரும் உரையாடிக் கொண்டிருந்ததை நான் ஒட்டுக் கேட்டதைத்தான் குறிப்பிடுகிறேன்.

என்மீது உங்களுக்கு இவ்வளவு தாக வெள்ளமா? இவ்வளவு ஈடுபாடா? இவ்வளவு இதயப் பிணைப்பா?

நினைக்க நினைக்க என் நெஞ்சமெல்லாம் எப்படி இனிக்கிறது தெரியுமா? எப்படிப் புல்லரிக்கிறது தெரியுமா?

நான் மட்டும் ஓர் உமர்கயாமாக—கலீல் கிப்ரானாக—எமிலி சோலாவாக—கீட்சாக—பைரனாகப் பிறந்திருக்கக் கூடாதா?

உங்கள் இதயக் கொடியிலே பூத்துச் சிரிக்கும் காதல் மலரையே கருவாக வைத்து இந்நேரம் ஓர் இலக்கிய மாளிகையையே எழுப்பியிருக்க மாட்டேனா?

ஏன், உங்களையே என் காவிய விழிகளாக்கி அந்த ஒளி முத்துக்களின் மூலமாகவே இந்த உலகத்தைப் பார்த்திருக்க மாட்டேனா? இறைந்து சிதறிக் கிடக்கும் இயற்கை எழிலின் ஒவ்வோர் அணுவையும் தொட்டுத் துழாவிச் சுவைத்திருக்க மாட்டேனா?

ஆனால் நான் ஒன்றும் எழுத்தாளன் அல்லன்; சாதாரண மனிதப் பிறவி; உள்ளத்தின் ஆழ அகலங்களைப்பற்றி அக்கறை கொள்ளாத உடலை மட்டுமே வலிமையாக வைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு விளையாட்டு வீரன்.

அப்படித்தானே கூறாமல் கூறி நேற்று டாக்டரம்மாவிடம் என்னைப் பற்றிச் சாடாமல் சாடினீர்கள்?



உங்களைக் குறைசொல்ல முனைந்து விட்டதாகக் கருதிவிட வேண்டாம். உங்களுடைய துயரத்தின் படுபாதாளத்தை நான் உணராமல் இல்லை. உங்கள் ஆத்திரத் தணலை விசிறி விடுவதற்குப் போதுமான காரணங்கள் இருப்பதையும் நான் புரிந்து கொள்ளாமல் இல்லை. என்மீது ஓர் அவநம்பிக்கையும் எழும்படியான ஒரு சூழ்நிலைக்கு நான் இலக்காகியிருக்கிறேனே அதை நினைத்துத்தான் நான் இப்போது இரத்தக் கண்ணீர் வடிக்கிறேன்.

தேன்மொழி, இந்த உலகத்திலே—இன்றைய நடைமுறை வாழ்க்கையிலே—ஒருவன் ஒருத்தியைக் காதலிப்பதற்கே சில தகுதிகள், வசதிகள் தேவையாக இல்லையா?

நானோ....? எந்தத் தகுதியும் எந்த வசதியும் இல்லாதவன். வறுமையையே வற்றாத பிணியாகவும், கொடிய பிணியையே குறையாத செல்வமாகவும் கொண்ட குடும்பத்திலே பிறந்தவன்.

குருடன், கோமேதக வைரத்திற்கு ஆசைப்படலாமா? உயர்ந்த வீட்டிலோ, பதவியிலோ இருக்கின்றவளை ஏழை ஒருவன் காதலிப்பதும் அப்படித்தான் பொருளோ பயனோ இல்லாமல் புகைந்தேதான் போய்விடும்.

அத்தகைய ஓர் அடைப்புச் சுவரை என் இதயத்தினுள் எழுப்பிக் கொண்டுதான் எத்தனையோ பெண்களை நான் சந்திக்க நேர்ந்தாலும் அவர்களைப்பற்றியெல்லாம் மறுபடியும் நான் சிந்திப்பதேயில்லை; அவர்கள் பின்னாலேயே நான் திரிவதும் இல்லை.

'ஏன் இந்தக் காதல்—கத்தரிக்காய் எல்லாம் நமக்கு?'—என்றுதான் என்னை நானே கட்டுப்படுத்திக் கொண்டு இதுகாறும் காலத்தைக் கடத்தி வந்தேன்.

ஆனால், உங்களைச் சந்தித்த பிறகு........?

தேன்மொழி, சின்ன வயது முதலே என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர்கள் யார் தெரியுமா?

ஏக்கத்திற்கும் ஏமாற்றத்திற்கும் ஆசைக்கும் ஆத்திரத்திற்கும் எளிதிலே ஆட்படுகின்ற மனிதர்களா?

அல்ல;

அதோ அந்த வானத்திலே வலம் வரும் நிலவும், இந்த வையத்தை ஏந்திக்கொண்டிருக்கும் கடலும்தான்!

முழுநிலவையும் அலைகடலையும் ஒரே நேரத்தில் பார்த்துத் திளைப்பதென்றால் எப்போதுமே எனக்குக் கொள்ளை ஆசை. அப்படிப் பார்க்கச் சென்று நான் கடலுக்கே இரையாக விருந்த காலமும் உண்டு.

தேன்மொழி, ......உங்கள் உணர்ச்சிகளிலே நான் அந்தக் கடலைக் காண்கிறேன்; உங்கள் அழகிலோ அந்த நிலவைக் காண்கிறேன்.

ஆனாலும்....

'அலுமினியச் செம்பு ஆலயக் கலசம் ஆக முடியுமா?'

—என்கிற நடைமுறைத் தெளிவு அல்லது தாழ்வு மனப்பான்மை தான் உங்களை நெருங்கவிடாமல் நெட்டித் தள்ள முயன்றது.

எனினும், நீங்களும் டாக்டரும் உரையாடியதைக் கேட்ட பிறகோ எனக்கும் ஒரு துணிச்சல் வந்துவிட்டது.

இதே நேரத்தில் நான் முன்பே ஒருத்திக்கு மணமாலை சூட்டியிருப்பேனோ என்கிற உங்கள் ஐயப்பாட்டையும் நான் அகற்றிவிட வேண்டாமா?

தேன்மொழி, நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி. என் நெஞ்சங் கவர்ந்த அந்த நிலவு மீதும் கடலின் மீதுமே கூட ஆணையிட்டுச் சொல்கிறேன்.

நான் எந்தப் பெண்ணின் கழுத்திலேயும் மணமாலை சூட்டியதே இல்லை.

'அப்படியானால்' "நானாவது, இனிமேலும் இன்னொரு பெண்ணுக்குப் பூச்சூட்டுவதாவது?"—என்று கூறினீர்களே! அந்த அதிர்ச்சியினால்தானே எனக்கு மயக்கமே வந்தது!—என்று என்னை நீங்கள் மடக்கிக் கேட்கலாம்.

நான் அவ்வாறு கூந்தலுக்குப் பூச்சூட்டமாட்டேன் என்று மறுத்ததற்கு ஓர் அடிப்படையான—என் நெஞ்சை விட்டு அழிக்கவே முடியாத—ஒரு காரணம் உண்டு.

அதை நினைத்தாலே இப்போதும் என் இதயம் நடு நடுங்குகிறது. அதனை இந்தக் கடிதத்திலேயே வெளிப்படுத்தி, உடல்நலம் குன்றியுள்ள உங்களையும் என்னோடு சேர்ந்து அழவைக்க விரும்பவில்லை நான்.

இப்போது இந்தக் கடிதத்தை நான் எழுதத் துணிந்ததற்குக் காரணம் என்ன தெரியுமா? இந்த எளியவன் மீது உங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற காதல் செடி இனிமேல் கருகிவிடக் கூடாதே என்கிற கவலைதான்.

உங்களுக்கு விருப்பந்தான் என்றால், என்னோடு ஒரு முறை எங்கள் சிற்றூருக்கு வாருங்கள். என்னைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்வீர்கள்; நான் ஏன் பூச்சூட்ட மறுத்தேன் என்கிற புதிருக்குரிய விளக்கத்தையும் நீங்கள் பெறுவீர்கள்.

இன்னும் என்னென்னவோ எழுதத் துடிக்கிறது என் கை. ஆனாலும் உங்களுக்கு அலுப்புத் தட்டுமே—'போர்' அடிக்குமே—என்று இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

உங்கள் நிலா முகத்தையே நினைத்துத் தவித்துக் கொண்டிருக்கும்—

உங்கள் மாதவன்.

* * * * *

அந்தக் கடிதத்தை ஒரு முறையல்ல, இருமுறையல்ல, பலமுறை படித்துத் திளைத்தாள் தேன்மொழி.

மூட்டம் போட்டிருந்த வானம் சட்டென்று வெளிவாங்கியதைப் போல அவளுடைய நெஞ்சம் முழுவதும் பளிச்சென்று ஒரு விதக் கலகலப்பு! களிப்பின் அலைப்பு!

உடனே ஓடிப்போய் தன் மனத்துக்கு இனியவனின் முகத்தினைத் தன் விழிகளால் விழுங்கிக்கிறங்க—அவன் மார்பிலே தன் முகத்தைப் புதைத்துக் கொள்ள—அவளுக்கு எங்கிருந்து வந்ததோ அந்த வேட்கைத் துடிப்பு!

அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த அவள், தன் தந்தையின் அறையை நோக்கி நடந்தாள். மாதவன் இருக்கிறானா என்று எட்டிப் பார்த்தாள்;

அங்கோ......?

(தொடரும்)

## சோதித்த முறை

"ஒரு குறிப்பிட்ட சாதியைப் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கலாமா வேண்டாமா என்பதற்கான அடிப்படை; சமூகத் துறையிலும் கல்வித் துறையிலும் அச்சாதி பிற்பட்ட நிலையில் இருக்கிறதா, அச்சாதி மக்கள் பெரும்பாலானோர் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து ஈடுபட்டுவரும் தொழில் எத்தகையது, என்பதாகும். ஒரு சாதியைப் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கலாம் என்று கருதிய காலத்தில் சாதாரணமாக அச்சாதியைப்பற்றிக் கல்வித் துறைஇயக்குநரிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்தோ அல்லது இதர அலுவலர்களிடமிருந்தோ பரிந்துரைகள் அரசுக்கு வந்தன. இவ்வாறாகப் பிற்பட்ட வகுப்பினர் பட்டியல் அவ்வப்போது திருத்தப் பெற்றும் கூடிய வரையில் புதுப்பிக்கப் பெற்றும் வந்தன"

"நம்முடைய பட்டியலில் உள்ள வகுப்பினர்கள் பின் தங்கிய நிலையில் உள்ளவர்களா என்பதைக் கண்டறிய மற்றொரு சோதனையையும் கையாண்டோம்; பிற்பட்ட இச்சாதியினரின் பெண்கள் அன்றாடக் கூலி வேலைக்கு, தாழ்வான வேலைக்குப் போகிறார்களா, பிறர் வீட்டில் சமையல் வேலை, பணியாள் வேலை இவற்றை மேற்கொள்ளுகிறார்களா, கூலிக்காக உடலுழைப்பு வேலைக்குச் செல்கிறார்களா, மருத்துவச்சி போன்ற வேலையைச் செய்கிறார்களா, என்பவை அச்சோதனைகள்"

—தமிழ்நாடு பிற்பட்டோர் நலக் குழு அறிக்கைப் பகுதி.





# அண்ணலும் அண்ணாவும்

புலவர் தமிழ்ப்பித்தன்

அண்ணல் காந்தியடிகளுக்கும் அறிஞர் அண்ணா அவர்களுக்கும் ஏராளமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அரசியல் தொண்டு, அறப்போர், தாய் மொழிக் கல்வி, பெண்கள் முன்னேற்றம், தீண்டாமை ஒழிப்பு, இன்னும் இதுபோன்ற எத்தனையோ துறைகளில் அண்ணலின் கொள்கையும் அண்ணாவின் கொள்கையும் ஒன்றாகக் காணப்படுவது மட்டுமல்ல—இருவரின் வாழ்க்கை வரலாற்றிலும் பலப் பல நிகழ்ச்சிகள் ஒன்றாகவே தென்படுகின்றன.

ஆங்கிலக் கல்வி கற்று வழக்கறிஞர் ஆன காந்தியடிகள், தமக்கு அந்தத் தொழில் தகுந்ததல்ல என்றுணர்ந்து, அதனைத் துறந்துவிட்டு, அரசியல் கடலிலே குதித்தார்.

சின்னஞ்சிறு வயது முதல், அவர், கல்வியில் பற்றுக் கொண்டிருந்திருக்கிறார். மேலை நாட்டுக்கும் சென்று கல்வி பயின்றிருக்கிறார்.

அரசியல் களத்திலே குதித்த பின், ஓய்வு ஒழிவு இன்றி நாட்டுப் பணி செய்திருக்கிறார்.

இவ்வாறு, கணமேனும் ஓய்வே இல்லாத அண்ணல் 'கர்நாடக சங்கீதத்தைப்' பற்றி நிறையத் தெரிந்து வைத்திருக்கிறார் என்ற செய்தியை அறியும்போது நமக்கு வியப்பு மேலிடுகிறது. அந்த வியப்பூட்டும் நிகழ்ச்சியைப் பார்ப்போம்.

வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் சாந்தி நிகேதனுக்கு ஒருமுறை அண்ணல் சென்றிருந்தார். சாந்தி நிகேதனத்தின் மாணவ மாணவியர், எல்லையற்ற மகிழ்ச்சியுடன் அண்ணலை வரவேற்றனர். அவரது இனிய உரையைக் கேட்கப் போகிறோம் என்பதில் அவர்கள் மிக மிகப் பெருமிதம் அடைந்தார்கள்.

இரு மாணவியர் கடவுள் வாழ்த்துப் பாடினார்கள். அவர்களின் பாடல்களைக் காந்தியடிகள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். வாழ்த்துப் பாடலுக்குப் பின், கூட்டத்தின் வழக்கமான நடைமுறைகள் நடைபெற்றன. அதன் பின்னர், அண்ணல் பேச வேண்டிய சூழ்நிலை வந்தது. அண்ணல் தமது பேச்சைத் தொடங்கினார்.

"இங்கே கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது. பாடியவர்கள் மால்கோஷ் ராகத்துடன் பீம்ப்ளாஸ் ராகத்தைக் கலந்து விட்டார்கள். எப்போதும் கடவுள் வாழ்த்துக்காகப் பாடப்படும் மால்கோஷ் ராகம் சுத்தமாகப் பாடப்பட வேண்டும்; அதிலே, மற்றொரு ராகம் வந்து கலக்க விடக் கூடாது; இவ்வாறு கலப்பதனால் அபூர்வ ராகமான மால்கோஷ் பங்கப்பட்டு விட்டது" என்று, ராகங்களைப் பற்றிய ஆராய்ச்சி உரையுடன் தமது சொற்பொழிவைத் தொடங்கினார் அண்ணல்.

அல்லும் பகலும் அரசியலுக்கும் நாட்டுக்கும் தன்னைத் தியாகம் செய்துகொண்ட காந்தியடிகள் இன்னிசைக்கும் தமது இதயத்தில் இடம் கொடுத்திருக்கிறார் என்பது மட்டுமல்ல—அந்த இசையைத் தவறான முறையிலே இசைப்பவர்களைத் திருத்துகின்ற அளவுக்கு இசைப் புலமை பெற்றிருந்தார் என்பதையும் இந்த நிகழ்ச்சி எடுத்துரைக்கிறது.

அறிஞர் அண்ணாவும், அண்ணலைப் போன்றே ஆங்கிலக் கல்வி கற்றவர். வகுப்பில் முன்னணியில் திகழ்ந்தவர். கல்வியை முடித்தபின், பள்ளி ஆசிரியராகப் பணி புரிந்தவர். தமக்கு அந்தத் தொழில் தகுந்ததில்லை என்று முடிவு செய்து, தொழிலாளர் இயக்கத்தில் பங்கு கொண்டு, அரசியல் உலகத்திற்கு வந்தவர். கல்லூரி வாழ்க்கையின் போதும் சரி, சமுதாய வாழ்வில் ஈடுபட்ட போதும் சரி, ஓய்வே இல்லாது பணி புரிந்தவர். சமுதாய மாற்றத்திற்குக் கலை ஒரு பயனுள்ள கருவி என்பதை அறிந்து, நாடகங்களை உருவாக்கி, அவற்றின் வாயிலாகப் பிரச்சாரம் புரிந்து, சமுதாயப் புரட்சியை உருவாக்கியவர். என்றாலும், அவர், கர்நாடக சங்கீதத்தைப் பற்றி நிறையத் தெரிந்து வைத்திருந்தார்—பாடுவோரைத் திருத்தும் அளவுக்கு இசைப்புலமை கொண்டிருந்த காந்தியடிகளைப்போலவே அண்ணாவும், இசைப் புலவர்களும் வியக்கும் அளவுக்கு இசைப் புலமை பெற்றிருந்தார் என்பது வியப்புக்குரிய செய்திதான்.

பல வருடங்களுக்கு முன்!

கோவைக்குச் சுற்றுப்பயணம் சென்றிருந்த அண்ணா அவர்கள், காஞ்சியிலுள்ள தனது 'திராவிட நாடு' வார ஏட்டுக்குக் கட்டுரை ஒன்றினை எழுதி அனுப்பினார். 'மோகன முகாரி' என்பது கட்டுரையின் தலைப்பு, அண்ணா தலைப்புக் கொடுத்துவிட்டாரே தவிர, மோகன முகாரி எப்படி இருக்கும் என்ற சந்தேகம் அவருக்கே ஏற்பட்டுவிட்டது. மறுநாள், தற்செயலாக அங்கு வந்திருந்த இசைச் சித்தர் சி. எஸ்.

ஜெயராமன் அவர்களிடம் தனது சந்தேகத்தைத் தெரிவித்தார்.

''மோகன முகாரி என்று தலைப்புக் கொடுத்துவிட்டேன். அந்த ராகம் உள்ளதா? அதன் ஆரோகணம், அவரோகணம் என்ன?''—அண்ணா கேட்டார்.

திடீரென்று அண்ணா அவ்வாறு கேட்டதும் சி. எஸ். ஜெயினால் பதில் சொல்ல இயலவில்லை. சில வினாடிகள் அவர் சிந்திக்கத் தொடங்கினார்.

உடனே, அண்ணா,

''உனக்குத் தெரியாவிட்டால் நானே வழி சொல்கிறேன்; அப்படிச் செயல்படுத்த முடியுமா பார்! ஆரோகணத்திற்கு மோகனத்தின் சுரங்களையும், அவரோகணத்திற்கு முகாரியின் சுரங்களையும் செயலாற்றிக் காட்டு'' என்றார்.

அண்ணாவின் கட்டளைப்படியே சி. எஸ். ஜே. பாடிக் காட்டினார். அந்த ராகம், மோகன முகாரியாகவே முகிழ்த்தது. மறுவினாடி, ஜெயராமன் அவர்களே வியப்படைந்துவிட்டார்.

இந்த நிகழ்ச்சி பற்றியும், அண்ணாவின் இசைப் புலமை பற்றியும் இசைச் சித்தரே வியந்து பாராட்டி எழுதியிருக்கிறார்.

''அண்ணா அவர்கள் இசைத் துறைக்குச் செயலாற்ற வந்திருந்தால் அநேக இசை அமைப்பாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள்''—என்று கூறியுள்ள சி. எஸ். ஜே. யின் கருத்து, இங்கே குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு அரசியலிலும் தமிழ் இலக்கியங்களிலும், சமுதாயப் பணியிலும், பத்திரிகை அரங்கிலும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அண்ணா அவர்கள் எந்தக் கர்நாடக இசைக் கல்லூரியில் ''ராகம், தானம், பல்லவி'' கற்றார், ஆரோகணம், அவரோகணம் செய்தார் என்பது வியப்பாகவே இருக்கிறது.

கவிஞர்களிடம் மாறாத அன்பு கொண்டவர் காந்தியடிகள். கவிஞர்களும், காந்தியடிகளிடம் ஆழ்ந்த பற்று வைத்திருந்தார்கள். விடுதலைப் போராட்டத்தில், எண்ணற்ற கவிஞர்கள் காந்தியடிகளின் தலைமையில் தொண்டாற்றியிருக்கின்றார்கள்; அவரது தலைமையைப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள்; அவரது அணியில் தாங்கள் அங்கம் பெற்றதை எண்ணி எண்ணி இதயம் பூரித்திருக்கிறார்கள்.

சுப்பிரமணிய பாரதியார், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை போன்ற கவிஞர்கள், அண்ணலை அன்னைத் தமிழால் அகங் குளிரப் பாடிப் பாராட்டியிருக்கிறார்கள். தமிழ்க் கவிஞர்கள் மட்டுமல்ல. இந்தியாவின் அனைத்து மொழிக் கவிஞர்களும் காந்தியடிகளைப் பாராட்டித் தீஞ்சுவைப் பனுவல்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர், அண்ணலைப் பாராட்டியது மட்டுமல்ல, அவருக்கு மகாத்மா என்ற சிறப்புப் பட்டத்தையே சூட்டிச் சித்தம் மகிழ்ந்திருக்கிறார். அரசியலிலும், சமுதாயத் தொண்டிலும் வன்முறையை ஒழித்து, அறப்போர் நாயகனாக விளங்கியதனால், அவரை மகாத்மா என்று மனங் குளிர அழைத்திருக்கிறார் வங்கக் கவிஞர். காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தின் பதினான்காவது தொகுப்பான ''தலைவர்களுக்குக் காந்திஜியின் கடிதங்கள்'' என்ற நூலில் உள்ள ஒரு குறிப்பு—இந்த உண்மையை நமக்குத் தெரிவிக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்களும், அண்ணலைப் போலவே கவிஞர்களிடம் மாறாத பற்றுக் கொண்டவர் என்பதை உலகறியும். நூற்றுக் கணக்கான தமிழ்க் கவிஞர்கள் அண்ணாவின் அணியிலே அங்கம் பெற்றிருந்ததை வரலாறு தொகுத்துக் கூறுகிறது. அன்னைத் தமிழுக்குத் தொண்டு செய்யும் அண்ணாவின் தலைமையில் பணி புரியும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி எண்ணிப் பெருமைப் பட்டு வந்தது தமிழ்க் கவிஞர் பெருங் கூட்டம். 'அண்ணாவின் புகழ் பாடாத நாவென்ன நாவே' என்று எண்ணிவந்த அருந்தமிழ்க் கவிஞர்கள், அண்ணாவைப் பல வகைப் பாக்களாலும் பாடிப் பரவசமடைந்தார்கள். அவர்களில் எல்லாம் தலைமைப் பொறுப்பேற்றிருந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்தான்.

அண்ணாவின் ஆற்றலையும் பெருஞ் சிறப்பையும் உள்ளம் உருக உருகக் கவிதையாக்கி, மகிழ்ச்சி வெள்ளத்திலே நீந்தியிருக்கிறார் பாவேந்தர். அது மட்டுமல்ல, அண்ணாவின் பெயருக்கு முன்னால் அறிஞர் என்ற அடைமொழியை இணைத்து அளவற்ற பெருமைப்பட்டிருக்கிறார் அவர்.

பல வருடங்களுக்கு முன்பு, சென்னையில் நடைபெற்ற சிந்தனையாளர் கூட்டத்தில் சொற்பொழிவாற்ற அண்ணா சென்ற போது, சிந்தனையாளர் கழகத்தார் அண்ணாவுக்கு வரவேற்பு மடல் வாசித்தளிக்க நினைத்தார்கள். அண்ணாவுக்கு வரவேற்பு மடல் தருவதென்றால், அதனைப் பாவேந்தர் தான் எழுதவேண்டும் என்று அவர்களே முடிவெடுத்துப் பாவேந்தரை அணுகி, வாழ்த்துப் பா பெற்றனர். அந்த வாழ்த்துப் பாவிலேதான் அண்ணாவை அறிஞர் எனக் குறிப்பிட்டுள்ளார் பாரதிதாசன்.

எனவே, அண்ணலுக்கு மகாத்மா என்ற பட்டத்தை ஒரு கவிஞர்தான் கொடுத்திருக்கிறார்; அண்ணாவுக்கு அறிஞர் என்ற பட்டத்தையும் ஒரு கவிஞர்தான் கொடுத்திருக்கிறார்.

இவ்வாறு எத்தனையோ நிகழ்ச்சிகள்! அண்ணலின் வாழ்விலும், அண்ணாவின் வாழ்விலும் ஒன்றுபட்டு நிற்கின்றன; நமக்கு உவகையைத் தந்து வருகின்றன.



# மரச்சிற்பம் காப்போம்

பழைய கற்காலத்திலிருந்தே மரம் பலவிதங்களில் மனிதனுக்குப் பயன்பட்டு வருகிறது. அவன் மரத்தைக் கொண்டு தனக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும் செய்து வந்துள்ளான். மரத்தால் தீ மூட்டினான்; வீடு கட்டினான், பாத்திரங்கள் படைத்தான், கருவிகள் வடித்தான்; ஆயுதங்கள் அமைத்தான்; கப்பல், பாலம், வண்டி ஆகியவற்றையும் செய்தான். இசைக்கருவிகளையும் கலைப்பொருள்களையும் கூட மரத்தால் செய்தான்.

இன்றைக்கும் நம் கோவில் தேர்களிலும் மணிக் கதவங்களிலும் அழகிய சிற்பங்களை நாம் கண்டுகளிக்கலாம். நம் நாட்டிலிருக்கும் மிகப் பழம்பெரும் மரச்சிற்பங்கள் 300, 400 ஆண்டுக் காலம் பழமை கொண்டவை. இத்தகு மரச் சிற்பங்கள் சிலவற்றை மதுரை திருமலை நாயக்கர் மகாலிலும், மலையாள நாட்டுக் கோவில்களிலும் காணலாம்.

மனிதன் தோன்றுதொட்டு மரத்தைப் பலவகைகளில் பயன்படுத்தி வந்துள்ளதால், பொருட்காட்சிச்சாலையின் சேகரிப்பிலும் கலைக்கூடங்களின் சேகரிப்பிலும் அவன் செய்த மரப்பொருள்கள் பெருமளவில்இடம்பெறுகின்றன. இவைகளைப் பூச்சிகள், பூஞ்சைகள், உப்புக் கறைகள் முதலியன அழித்து விடாமல் பாதுகாக்க வேண்டும். மரச்சிற்பங்களைப் பாதுகாக்கப் பல புதிய சிறந்த முறைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

நமது நாட்டின் மிகச் சிறந்த மரச்சிற்பங்கள் சென்னையில் உள்ள அரசினர் பொருட்காட்சிச் சாலையில் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பொருட்காட்சிச்சாலையில் பெருமளவில் மரச்சிற்பங்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்து கொண்டுவரப் பட்டுச் சேகரிக்கப்படுகின்றன. இவ்விதமாகப் பொருட்காட்சிச் சாலையில் சேகரிக்கப்படும் மரச்சிற்பங்கள் பெரும்பாலும் தாரினால் பூசப்பட்டு இருக்கின்றன. பூச்சிகளாலும் பூஞ்சைகளாலும் மரச் சிற்பங்கள் அழியாமல் இருக்கக் கிராம மக்கள் அதன் மீது தாரைப் பூசி இருக்கிறார்கள். இப்படிச்செய்திருப்பதால் சிற்பங்களின் மேற்பரப்பு கருமையடைந்தும் நுண்ணிய வேலைப்பாடுகள்



நச்சுப் புகையூட்டும் அறை.

மறைந்தும் காணப்படுகின்றன. தாரைச் சிற்பத்திலிருந்து நீக்குவதற்கு அதை முதலில் இளக வைக்கவேண்டும், இதற்குச் சிற்பத்தின்மேல் 5 சதவீதம் சூடான வாஷிங் சோடாக் கரைசலை ஊற்றவேண்டும்; அல்லது சிற்பத்தைக் கரைசலில் ஒரு மணி நேரத்திற்கு மூழ்க வைக்க வேண்டும். தார் இளகியவுடன் அதை மிகுந்த கவனத்துடன் சிற்பத்தின் வேலைப்பாடுகளைப் பாதிக்காது சுரண்டி எடுக்கவேண்டும். பிறகு சிற்பங்கள் உலர்த்தப்பட்டு அதன் மீது உருகிய பாரபின் மெழுகு அல்லது 2 சதவீதம் அஸ்கு கரைசலைப் பாதுகாப்புப் பூச்சாகப் பூசவேண்டும். இப்படிச் செய்வதால் சிற்பங்கள் வெகு நாட்களுக்குப் பாதிக்காமல் இருக்கின்றன.

எஸ். தங்கவேலு

பூஞ்சைகளால் பாதிக்கப்பட்ட சிற்பங்கள் நாளடைவில் மிருதுவாகின்றன. அப்போது விரலழுத்தங்கள் கூட சிற்பத்தின் உருவைச் சிலவேளைகளில் அழித்து விடக்கூடும். சில மரங்களில் பிளவுகள் குறுக்கும் நெடுக்குமாக இருந்தால், அவைகள் சுருங்குவதற்கு ஏதுவாகின்றன. இவை, ஒருவித பூஞ்சைகள் சிற்பங்களை உளுக்கச் செய்வதால் உண்டாகின்றன. பூஞ்சைகளினால் உண்டாகும் அழிவைத்தடுக்க ஒரு காலன் தண்ணீரில் 3 முதல் 6 அவுன்ஸ் வரை வியாபார சோடியம் புளுரைட் (Commercial Sodium Fluoride) அல்லது மக்னீசியம் சிலிகோ புளுரைடைக் (Magnesium Silico-fluoride) கலந்து பூஞ்சைக் கொல்லியாகப் பயன்படுத்தலாம்.

மரத்தில் துளைகளும் இடுக்குகளும் இருந்து அவைகளின் வழியாக மரத்தூள் வெளிப்படுமாயின், புழுக்களும், பூச்சிகளும் வண்டுகளும் அழிவை உண்டாக்குகின்றன என்பதை அறியலாம். சிற்பத்திலுள்ள புழு, பூச்சி, வண்டு ஆகியவற்றை ஒழிப்பதற்கு வெப்பமுறை(130°F வெப்பத்தில், 6 மணி நேரம்) வெற்றிடமுறை, நச்சுப் புகையூட்டு முறை, பூச்சிக் கொல்லி தெளித்தல் முறை ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்.

நச்சுப் புகையூட்டும் முறையில் நன்கு மூடப்பட்டுக் காற்றுப் புகாத அறைக்குள் சிற்பத்தை

வைத்துப் பூச்சிக் கொல்லிகளாக ஹைட்ரோசயனிக் அமிலம் ( Hydrocyanic acid ), மெதில் புரோமைடு (Methyl bromide), எதிலின் ஆக்ஸைடு (Ethylene Oxide), கார்பன் டை சல்பைடு (Carbon di sulphide) மட்டும் அல்லது கார்பன் டெட்ராகுளோரைடும் (Carbon tetrachloride), எதிலின் டை குளோரைடும் (Ethylene di chloride) கலந்து பல நாட்களுக்கு நச்சுப் புகை யூட்டிச் சிற்பங்களில் உள்ள பூச்சிகளைக் கொல்லலாம்.

சிற்பத்தின் மேல் பரப்பில் பொருக்குகளும் படிகங்களும் (Incrustations and crystalline depo. sits) தூள்களாகும்படி இருந்தால் அவை கரையக்கூடிய உப்புகளால் ஏற்பட்டவை என்பதை அறியலாம். அந்த உப்புகள் சோடியம், கால்சியம், மக்னீசியம் ஆகியவற்றின் குளோரைடுகளும் சல்பேட்டுகளும் (Chlorides & Sulphates) ஆகும். இவ்வுப்புகளை நீக்க ஈரக் காகிதக் கூழைச் சிற்பத்தின் மேல் பரப்பு முழுவதும் மறையும் படித் தடவ வேண்டும். காகிதக் கூழிலுள்ள நீரை மரம் ஈர்த்துக்கொள்ளும்போது மரத்திலுள்ள உப்புகள் கரைகின்றன. காகிதக்கூழ் உலரும்போது கரைந்த உப்புகள் அதில் படிகின்றன. மூன்று வாரங்களுக்குப் பிறகு உலர்ந்த காகிதக்கூழை நீக்கி அதிலுள்ள உப்புகளைக் கழுவிய பிறகு தேவைப்பட்டால் மறுபடியும் காகிதக்கூழைப் பயன்படுத்தலாம். சிற்பத்தில் படிந்திருக்கும் உப்புகளின் அளவைப் பொறுத்துத்தேவையான காகிதக் கூழைப்பயன்படுத்த வேண்டும். இவ்வாறு உப்புகள் நீக்கப்பட்ட பிறகு, மரத்தை மெதுவாக உலர்த்த வேண்டும். முதலில் ஆல்ககாலிலும் பிறகு இரு உறிஞ்சு தாள்களுக்கிடையே வைத்தும் உலர்த்த வேண்டும்.

பூச்சிகளாலும் பூஞ்சைகளாலும் மரவேலைப்பாடுகள் மெலிவு அடைந்திருந்தால், அவைகளை வலிவூட்ட 5 சதவீதம்பாலிவினைல் அசிடேட் (Polyvinyl acetate) அல்லது 0·5 சதவீதம் மெதில் மெதாகிரிலேட் (Metyl Metha-crylate) கரைசல் உபயோகிக்கலாம்.

மரத்திலுள்ள சந்துகளை லிகியூடெக்ஸ் ( Liquitex ) உபயோகித்தும், பொந்துகளைப் பூச்சிக்கொல்லி கலந்த மரப்பட்டியால் அடைத்தும் சீர்செய்யலாம். சீர் செய்யும்போது மரச்சிற்பங்களின் நிறங்களுக்கேற்ப வண்ணங்களைக் கலந்து அவற்றை உபயோகிக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசினர் பொருட்காட்சிச் சாலையிலுள்ள பாதுகாப்பு ஆய்வுக்கூடம், பொருட்காட்சிச் சாலையின் பெருங்கலைச் செல்வங்களைச் செப்பனிட்டுப் பாதுகாப்பதற்கென 1930-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நாட்டிலுள்ள பொருட்காட்சிச் சாலைப் பாதுகாப்பு ஆய்வுக்கூடங்களில், இதுவே முன்னோடியாக விளங்குகிறது. இது தனது மற்றப்பணிகளோடு மரச் சிற்பங்களைச்செப்பனிட்டுப் பாதுகாக்கும் பணியையும் செய்து வருகிறது.●



மரச் சிற்பம்—புதுப்பிக்கு முன்!

மரச் சிற்பம்—புதுப்பித்த பின்!





# 1970-71ஆம் ஆண்டில் தமிழகத்தில் மின் வளர்ச்சி

**1970–71-ஆம் ஆண்டு, மின்வாரியத்தைப் பொறுத்த வரையில், குறிப்பிடத்தக்க சாதனைகள் பல புரிந்துள்ள ஆண்டாகும்.**

தமிழகத்தில் மின்வளர்ச்சி, இவ்வாண்டில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. மின் உற்பத்தி, மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல், கிராமப் புறங்களுக்கு மின்வசதி அளித்தல் ஆகிய மூன்று துறைகளிலும், இவ்வாண்டிற்கான திட்ட இலக்குகளை நாம் அடைந்து விட்டோம்.

புதிய மின் உற்பத்தி நிலையங்கள் இவ்வாண்டில் தொடங்கப்பட்டுள்ளன :—

இவ்வாண்டில் வேலை முடிக்கப்பட்டுப் புதிதாகச் செயல்படத் தொடங்கியுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் :—

* கோதையாறு மின் உற்பத்தி நிலையம்-I, ஒரே யூனிட் கொண்ட 60 மெகவாட் மின் உற்பத்தித் திறன் கொண்டது.
* சோலையாறு மின் உற்பத்தி நிலையம்-II. ஒரே யூனிட் கொண்ட 25 மெகவாட் மின் உற்பத்தித் திறன் கொண்டது.
* எண்ணூர் அனல் மின் திட்டத்தின் கீழ், 60 மெகவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட 2-வது பிரிவு.
* மத்திய அரசின் ஆளுகையில் உள்ள நெய்வேலி அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் இவ்வாண்டில் 500 மெகவாட்டிலிருந்து 600 மெகவாட்டுக்கு உயர்த்தப்பட்டது.

மொத்தத்தில், இவ்வாண்டில், தமிழகத்தின் மின் உற்பத்தித் திறனில் 145 மெகவாட் உற்பத்தித் திறன் கூடுதலாக்கப்பட்டது.

அதாவது, தமிழ்நாட்டில் தமிழ்நாடு மின் இணைப்புத் தொடரின் உற்பத்தித் திறன் 1220 மெகவாட்டிலிருந்து 1365 மெகவாட்டாக இவ்வாண்டில் உயர்ந்தது. கடந்த ஆண்டைவிட, அதாவது 1969–70-ஐ விட, 12 சதவிகிதம் இந்த உயர்வு அதிகம்.

தமிழகத்தில் முழுமைக்கும், நெய்வேலி, மைசூர், கேரளா ஆகிய இடங்களிலிருந்தும் வாங்கப்பட்ட மின் சக்தியையும் சேர்த்து, இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மின் அளவு 6189 மிலியன் யூனிட்டுகளாகும்.

தனி நபர் மின்சாரம் பயன்படுத்தும் சராசரி அளவு 1969–70-ல் 120 யூனிட்டுகளாக இருந்தது. 1970–71-ல் 133 யூனிட்டுகளாக உயர்ந்தது.

இவ்வாண்டில் மட்டும் புதிதாக 1·6 இலட்சம் பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. 1970–71 இறுதியில், வாரியத்தின் பிரதேசத்தில் உள்ள மொத்த மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை 18 இலட்சமாகும். இது தவிர, உரிமதாரர் பகுதிகளில் உள்ள மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை 1969–70 இறுதியில் 3·4 இலட்சமாகும்.

தமிழ்நாடு மின் இணைப்புத் தொடர் (Tamil Nadu Power Grid) எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ் வாண்டில், ஈரோடு மின் அமைப்பு (Erode Eletricity System ) புதிதாக அமைக்கப்பட்டது. 1970–71-ஆம் ஆண்டு இறுதியில் தமிழகத்தில் மொத்தம் 13 மின் பகிர்வு அமைப்புகள் (Distribution Systems) உள்ளன.

1970–71-ல் ஐந்து மின் துணை நிலையங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுச் செயல்படத் துவங்கியுள்ளன. தீவிர உயர் அழுத்த மின் துணை நிலையங்கள், உயர் அழுத்த மின் துணை நிலையங்கள் மொத்தம் 240 தமிழகத்தில் உள்ளன.

1970–71-ல் மட்டும், தமிழகத்தில் தெரு விளக்குகள் போடுவதன் மூலம் மொத்தம் 10,016 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின் வசதி நீட்டிக்கப்பட்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டு இறுதியில் தமிழகத்தில் மின் வசதி பெற்றுள்ள கிராமங்கள், சிற்றூர்களின் மொத்த எண்ணிக்கை 42,229.

இவ்வாண்டில் மட்டும் (1970–71), மொத்தம் 57,641 விவசாய விசையேற்றங்களுக்கு மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டு இறுதி நிலவரப்படி, தமிழகத்தில் மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ள விவசாய விசையேற்றங்களின் மொத்த எண்ணிக்கை 5,30,044.

31–3–1971-ஆம் தேதி நிலவரப்படி, தமிழ்நாடு மின் இணைப்புத் தொடரில், 15 நீர் மின் உற்பத்தி நிலையங்களும், 4 அனல் மின் உற்பத்தி நிலையங்களும் உள்ளன. எல்லா மின் உற்பத்தி நிலையங்களும், தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் சொந்தமானவை. நெய்வேலி அனல் மின் நிலையம் மட்டும் நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனுக்குச் சொந்தமானது; அந்த நிறுவனத்தினால் இயக்கப்படுவது.




கிராமங்களிலுள்ள மக்கள் வேலை தேடி நகரங்களுக்குச் சென்று நெரிசலை அதிகப் படுத்துவதைத் தவிர்க்கவும், கிராமங்களில் உள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கிராமங்களிலேயே தொழில்களைப் பெருக்கவும் வசதியாக, கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டம் 1962-ல் இந்திய அரசாங்கத்தால் துவக்கப்பட்டது. இந்திய நாட்டில் மொத்தம் 49 இடங்களில் இத் திட்டம் துவக்கப்பட்டது.

இப்பொருட்களை ஆதாரமாகக் கொண்டு சிறு தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, கீழ்க் கண்ட திட்டங்கள் நிறை வேற்றப்பட்டன.

(1) பயிற்சித் திட்டம், (2) பொது வசதிப் பணி நிலையங்கள் அமைப்பு, (3) அரசினர் உற்பத்தி நிலையங்கள் அமைப்பு (4) தனிப்பட்ட சிறு தொழில்களுக்குக் கடன் உதவி (5) மற்ற துறைகளின் வளர்ச்சிப் பணிகள்.

# நாங்குநேரிப் பகுதியில் புதிதாக உருவான 3881 வேலை வாய்ப்புகள்

கே. எம். ராசு

நாங்குநேரி வட்டம் பல துறைகளிலும் பிற்போக்கான பகுதி என்ற காரணத்தினால் நாங்குநேரியிலும் இத்திட்டம் துவக்கப்பட்டது. தொழில்கள் தொடங்குவதற்கு உள்ள வசதிகள் குறித்து முதலில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டப் பகுதியில் நாங்குநேரி, களக்காடு, வள்ளியூர், இராதாபுரம் ஆகிய நான்கு வட்டாரங்கள் உள்ளன. நீளமான கடற்கரை உள்ள பகுதி இது. இப்பகுதியில் சுண்ணாம்புக்கல், கார்னெட் மண், இலுமினேட் போன்ற தாதுப் பொருட்கள் கிடைக்கின்றன. பனைச் செல்வம் நிரம்ப உள்ளது.

குடிசைத் தொழில், சிறு தொழில் பொருட்கள், பழங்காலக் கருவிகளைக் கொண்டு, பழமையான முறையில் செய்யப்பட்டு வந்ததால் பொருள் உற்பத்தி குறைவாக இருந்ததுடன், பொருட்கள் நல்ல பொலிவுடனும் அமையவில்லை. அதன் காரணமாக அவைகளுக்கு நல்ல விலையும் கிடைக்கவில்லை. எனவே, தொழில் திறனை வளர்க்கவும், விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களையும் கைத்தொழில்களில் ஈடுபடுத்தவும் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பனை ஓலைப் பொருட்கள், பனைநார்ப் பொருட்கள், கோரைப்பாய் நெய்தல், வெண்கல வார்ப்பு, பனைநார் பிரஷ், சாக்கட்டி செய்தல், அச்சு பைண்டிங் செய்தல், தோல் கையுறைகள் செய்தல், பொறியியல் பயிற்சி, வானொலிப் பழுது பார்த்தல், தச்சு, கருமான் வேலைப் பயிற்சி, கொண்டை வலைகள் தயாரித்தல் ஆகிய 12 வகைகளில் மொத்தம் 603 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டது.

நேர்த்தியான பத்தமடைப் பாய்கள் தயார் செய்வதில் பயிற்சி பெற்ற 19 பேர்கள் ஏர்வாடி கோரைப்பாய் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து இப்போது நாள் ஒன்றுக்கு ரூ. 5 வரையில் சம்பாதிக்கிறார்கள்.

வெண்கல வார்ப்பட நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் நலனுக்காக ஒரு கூட்டுறவுத் தொழிற்சங்கம் வள்ளியூரில் அமைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் சங்கம் செயல்படும்.

## வானொலிப் பெட்டி

வானொலி பழுது செய்வதில் பயிற்சி பெற்ற 16 பேர்களில் இருவர் சிறு தொழில்களுக்குக் கடன் உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் கடன் பெற்றுச் சொந்த முறையில் தொழில் செய்து வருகின்றனர்.

மற்ற தொழில்களில் பயிற்சி பெற்றவர்கள் பெரும்பாலோர் தனிப்பட்ட நிறுவனங்களில் வேலை செய்கின்றனர். மேற்குறிப்பிட்ட பயிற்சித் திட்டங்களினால் 336 நபர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

கொல்லர், தச்சர் ஆகியோர் இக்காலத்துக்கு ஏற்ற வகையில் தொழில் திறனை மேம்படுத்தி, உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதியாகப் பொதுப்பணி நிலையங்கள் தொடங்கப்பட்டன. திசையன் விளை, இட்டமொழி, மூலக்கரைப்பட்டி, கண்ணநல்லூர், மீனவன்குளம், பருத்திப்பாடு, கோயிலம்மாள்புரம்,

களக்காடு, தளபதி சமுத்திரம், தேவநல்லூர் ஆகிய நிலையங்களில் மின்சாரத்தில் இயங்கும் கடைசல் இயந்திரம், மரம் இழைக்கும் இயந்திரம், துளையிடும் இயந்திரம், மரம் அறுக்கும் இயந்திரம், இரும்பு அறுக்கும் இயந்திரம், சாணை பிடிக்கும் இயந்திரம் முதலியன பொருத்தப்பட்டுள்ளன.

### பசுமைப் புரட்சியில் பங்கு

கிராமத் தொழிலாளர்களுக்கு இந்நிலையங்களில் பணி வேலைகள் குறைந்த செலவில் செய்யப்படுகின்றன. தற்சமயம், தீவிரமாக அமல் படுத்தும் ''பசுமைப்புரட்சி''யில் இந்நிலையங்கள் பெரிதும் பங்கு கொள்கின்றன.

பம்பு செட் நிறுவுதல், பைப் மரை போடுதல், பைப்புகள் பொருத்துதல், பம்ப் செட் வயரிங் செய்தல், பழைய வயர்கள் மாற்றுதல், சுவிட்ச் பெட்டிகள் பழுதுபார்த்தல், பம்பு ஷாப்டுகள் மாற்றுதல், விவசாயக் கருவிகள் பழுது பார்த்தல், வெல்டிங் வேலைகள், கருவிகள் சாணை பிடித்தல், கட்டடங்களுக்குத் தேவையான இரும்பு கேட்டுகள், ஜன்னல்கள் முதலியன இந்நிலையங்களில் செய்யப்படுகின்றன.

### பொறியியல் தொழில் நிலையம்

வள்ளியூரில் பொது நோக்குப் பொறியியல் தொழில் நிலையம் 1966 முதல் இயங்குகிறது. இரும்பு வேலைகள், வெல்டிங் கடைசல் வேலைகள், மருத்துவ மனைகளுக்குத் தேவையான கட்டில்கள் முதலியன செய்யப்படுகின்றன. இதில் 45 பேர்கள் வேலை செய்கிறார்கள்.

சாக்கட்டி பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற 19 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு அப்பயிற்சி நிலையம் 1967 முதல் உற்பத்தி நிலையமாகச் செயல்பட்டு வருகின்றது. 1970—71-ல் இந்த சாக்கட்டிகள் உத்தரப் பிரதேசத்துக்கும் ஏற்றுமதி ஆயின. இந்த நிலையம் லாபத்தில் இயங்குகின்றது.

சிறு தொழில்கள் வளர்ச்சிக்காகத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து 3 சத விகித வட்டியில் சொத்துக்கள் மற்றும் நபர் ஜாமீன் பேரில் கடன் வழங்கப்படுகிறது. மொத்தம் 186 பேர்கள் புதுத் தொழில்கள் தொடங்கி, பயனடைந்திருக்கிறார்கள்.

சிறு தொழில்களுக்குக் கடன் வழங்கும் விதிகளைத் தளர்த்திக் கடன் வழங்க மாநில வங்கி முன் வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் திட்ட அலுவலர்க்கு மனுச் செய்தல் வேண்டும். திட்ட அலுவலரின் சிபாரிசின் பேரில் மாநில வங்கி ரூ. 5,000 வரையில் கடன் வழங்குகிறது. கடன் தொகையை மாதந்தோறும் சம தவணைகளாக 24 மாதங்களில் திருப்பிச் செலுத்தல் வேண்டும்.

ஒழுங்காகச் சிறு தொழில்கள் செய்வதற்கு சொத்து ஜாமீன் கொடுக்க இயலாத நிலையிலிருப்பவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் 1971 மே முடிய 83 சிறு தொழில்களுக்கு ரூ. 1,43,015 கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### மற்ற துறைகளில் வளர்ச்சி

விவசாயிகள் முசுக்கட்டைச் செடி வளர்த்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வசதி செய்யும் முறையில் பனகுடியில் பட்டுப்பூச்சி மாதிரிப் பண்ணை தொடங்கப்பட்டது.

அம்பர் சர்க்கா நூற்கும் பெண்களுக்குப் போதிய இடவசதி அளிக்கும் பொருட்டுப் பரப்பாடி, கூட்டப்புளி ஆகிய இடங்களில் பொது வேலைக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

கருப்பட்டி செய்வோருக்குக் குறைந்த விலையில் பதனீர்த் தொட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ. 20,000 விலை மதிப்புள்ள பதனீர்த் தொட்டிகள் பாதி விலைக்கு வழங்கப்பட்டன. 600 பனைத் தொழிலாளர்கள் இதனால் பயனடைந்னர்.

### கற்கண்டு-மருந்து

திட்டப்பகுதியில் ஏராளமான பனை மரங்கள் இருக்கின்றன. பனங்கற்கண்டு, மருந்து வகைக்கு அதிகம் பயன்படுவதால் அதற்கு நல்ல கிராக்கி உள்ளது. எனவே, திட்டப்பகுதியில் திருநெல்வேலி மாவட்ட பனைப் பொருட்கள் உற்பத்தி சம்மேளனம் பரிவிரிசூரியன் என்ற இடத்தில் பனங்கற்கண்டு தயாரிக்கும் நிலையம் ஆரம்பித்துள்ளது. இதற்குத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து 1967-ல் ரூ. 63,000 கடன் வழங்கப்பட்டது. இந்நிலையத்தில் 27 பனைத்தொழில் செய்யும் குடும்பத்தினர் பணி புரிகின்றனர்.

இவ்வாறு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதன் விளைவாகத் திட்டப்பகுதியில் 3,881 புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாயின. திட்ட அலுவலக ஊழியர்கள் திட்டப்பகுதியில் உள்ள சிறு தொழில் நிலையங்களுக்கு அடிக்கடி சென்று அங்காடி நிலவரம், மூலப் பொருட்கள் மலிவாகக் கிடைக்கும் இடங்கள் பற்றித் தகவல் கூறுகிறார்கள். தொழில் வளர்ச்சிக்கு அரசினர் வழங்கும் கடன் உதவிகள், சலுகைகள் பற்றி எடுத்துரைக்கிறார்கள். புதிய தொழில் நிலையங்களுக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கச் செய்யவும், சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கிறார்கள். இதன் மூலம் திட்டப்பகுதியில் பல்வேறு சிறு தொழில்கள் உருப்பெற்று வருகின்றன. பின்னடைந்த ஒரு பகுதியில், மக்கள் வேலையும் தொழிலும் பெற்று மேம்பாடு கண்டு வருகிறார்கள்.



# நியூசிலாந்தைக் கண்டுபிடித்தவர்கள் தமிழர்களே!

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றியவன் தமிழன்! உலகின் பிற பகுதியில் வாழ்ந்தவர்களில் பெரும்பாலோர் காட்டு மிராண்டிகளாக வாழ்ந்தபோதே, நயக்கத்தக்க நாகரிகத்தை நானிலத்திற்கும் கற்றுக் கொடுத்தவன் தமிழன். பிற நாட்டினர் கட்டு மரம் கட்ட அறியாதிருந்த காலத்திலேயே. கப்பல் கட்டி, கடல் கடந்து பிற நாடுகளை வென்றவன் தமிழன். யவனத்தோடும், கிரேக்கத்தோடும், சீனத்தோடும், சாவகத்தோடும், இலங்கையோடும், கடாரத்தோடும் வாணிகம் செய்தவன் தமிழன். ரோமாபுரிக்குத் தூதுவனை அனுப்பியவன் தமிழன். உலகப் பேரழகி 'கிளியோபாட்ரா'வுக்கு முத்துக்களை வழங்கியவன் தமிழன். தமிழனின் புகழுக்கும், திறமைக்கும் சான்றாக இப்படி எத்தனையோ கூறலாம். நினைத்தாலேநெஞ்சம் பூரிக்கிறது!

தமிழனின் சாதனைகளுக்கு எத்தனையோ ஆதாரங்கள் பழந் தமிழ்ப் பாடல்களில் பின்னிக் கிடக்கின்றன! பிற நாட்டினரும் அவைகளை ஒப்புக் கொண்டுள்ளனர்! தமிழார்வம் உள்ள தமிழறிஞர்கள் அந்த ஆதாரங்களை எல்லாம் எடுத்துக் காட்டித் தமிழ் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முயன்றபோதெல்லாம், தமிழனின் புகழை வெளியிட விரும்பாத ஆராய்ச்சியாளர்கள் என்போர், அந்த ஆதாரங்களை மறுத்தும், மறைத்தும் வந்துள்ளனர்; பழம் பெருமைகளைக் கேட்டுத் தமிழன் உணர்வு பெற்று, உயர்வுற்று முன்னுக்கு வந்து விடுவானோ என்று அச்சப்பட்டு அந்த ஆராய்ச்சியாளர்கள் பல ஆதாரங்களை அழித்துவிட்டிருக்கின்றனர். தீயின் கோரப் பசிக்குப் பல ஆதாரங்களை இரையாக்கி யிருக்கின்றனர்.

ஆனால் 'உண்மை அழிவதில்லை! ஒருநாள் உலகுக்குத் தெரிந்தே தீரும்!' என்பது உலக நியதி!

அதற்கோர் எடுத்துக்காட்டு இதோ!

''நியூசிலாந்து நாட்டை டச்சுக்காரரான தாஸ்மன் என்பவர் 1642-ஆம் ஆண்டில் கண்டு பிடித்தார் என்று கூறப்படுகிறது. ஆனால் அதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் நியூசிலாந்து நாட்டிற்குச் சென்றுள்ளார்கள். கடல் பயணத்தில் நீண்ட காலத்திற்கு முன்பே, தமிழர்கள் பெரும் சாதனை புரிந்து இருக்கிறார்கள்'' என்ற செய்தியை 'ஜ்ஞானிஸிலா' (Znaniesila) என்ற ரஷ்ய நாட்டுப் பத்திரிகை வெளியிட்டுள்ளது.



அண்மையில் கிடைத்த இச்செய்தி தமிழனின் திறமையை உலகம் உணர்வதற்கு உதவுவதாகவும், பழந் தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள வரலாறுகள் உண்மையானவைகள் என்பதை உறுதிப் படுத்துவதாகவும் உள்ளது.

'ஜ்ஞானிஸிலா' பத்திரிகை தொடர்ந்து எழுதுகையில்,

'' நியூசிலாந்து நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள 'கரியோரா' கிராமம் அருகே, ஒரு கப்பலின் உடைந்த பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன ; அவை தற்பொழுது வெலிங்டன் நகரில் உள்ள நியூசிலாந்துப் பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன; அந்த உடைந்த பகுதிகளுக்கு இடையில் செம்பினால் செய்யப்பட்ட ஒரு மணி கிடைத்துள்ளது ; அந்த மணியில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன ; எனவே அந்தக் கப்பல் தமிழ் நாட்டைச் சேர்ந்ததே என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நியூசிலாந்து நாட்டைக் கடல் வழிச் சென்று முதன் முதலில் அடைந்தவர்கள் தமிழர்களாகத்தான் இருக்க முடியும் என்று கருதப் படுகிறது.

''தேக்கு மரத்தினால் உருவாக்கப்பட்ட அந்தக் கப்பல் 15-ஆம் நூற்றாண்டில் கடலில் மூழ்கியிருக்கவேண்டும்'' என்று நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர் !

''நியூசிலாந்து நாட்டிற்கு மட்டுமல்ல, பசிபிக் பெருங் கடலில் உள்ள மற்ற பல தீவுகளுக்கும், அமெரிக்காவுக்கும் கூட தமிழர்கள் கப்பலில் போக முயன்று இருக்கலாம். 15-ஆம் நூற்றாண்டிலேயே நீண்ட தூரக் கடல் பிரயாணத்தில் தமிழர்கள் வல்லவர்களாக விளங்கினார்கள் என்பது தற்போது கிடைத்துள்ள ஆதாரங்களிலிருந்து தெளிவாகிறது'' என்று குறிப்பிட்டுள்ளது.

திரு 'பிரெட் கில்டெர்' (Bret Gilder) என்பவர் பசிபிக் பெருங் கடலில் பழங்காலத்தில் நடந்த கப்பல் போக்குவரத்துக் குறித்து ஆராய்ச்சி செய்து வருகிறார்.

நியூசிலாந்து நாட்டிற்குத் தொடக்கத்தில் சென்ற தமிழர்களின் பயணம் பற்றிய முழு விவரங்களையும் 'பிரெட் கில்டர்' சேகரித்து வருகிறார். அவரது ஆராய்ச்சி முடிவுகள் தமிழனின் பெருமையைத் தரணிக்கெல்லாம் பறை சாற்றுவதாக அமையும் என்பது திண்ணம்!

நியூசிலாந்தைக் கண்டுபிடித்தவர்கள் தமிழர்களே என்பதற்கு ஆதாரங்களைக் கண்டு பிடித்துத் தெரிவித்த திரு 'பிரெட் கில்டர்' அவர்களுக்குத் தமிழினத்தின் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் 'தமிழரசு' தெரிவித்துக் கொள்கிறது.



# நமது மொழி

## டாக்டர் கி. கருணாகரன் எம்.ஏ.பிஎச்.டி.

மொழி இல்லாவிட்டால் மனித நாகரிகம் இல்லை. மனிதன் வாழ்ந்ததும், வாழ்வதும், வாழப் போவதும் மொழியாலேதான். மனிதனின் பழங்காலச் சிந்தனைகளும், படைப்புக்களும் இன்று நின்று நிலவி வளங்கொழிக்கும் கருத்துக்களை வாழச்செய்வதற்கு உதவுவதும் மொழியேதான். மனித இனம், மொழியின் அடிப்படையில்தான் தனித்தனிச் சமுதாயங்களாகப் பிரிந்து இயங்குகிறது. மொழி, தன்னுடைய பேச்சுமுறையிலும் எழுத்துவடிவிலும் மனிதவாழ்வோடு இணைந்துள்ளது. மொழியின் வளர்ச்சி மனிதனின் வாழ்வோடும் நாகரிகத்தோடும் இரண்டறப் பிணைந்துள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக மொழி, மனிதனின் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த செய்திப் பரிமாற்றச் சாதனமாக அமைந்துள்ளது. ஆகவே செய்திப் பரிமாற்றமே ஒரு மொழியின் முதல் வேலையும் முக்கியமான வேலையும் ஆகும்.

மொழி ஒரு சங்கிலித் தொடர்புக் கிரியை போன்றதாகும். இச் சங்கிலித் தொடர்பில் நடுநாயகமானது பேச்சு. அந்தப் பேச்சு ஒலி வடிவமானது. ஒலிகள் இல்லையெனில் அவற்றிற்கான குறியீடுகள் இல்லை. எனவே ஒரு மொழிக்கு ஒலிகள் மிகவும் தேவை.

ஒரு மொழிக்குப் பெருமை அளிப்பது அம்மொழியின் சிறந்த இலக்கண, இலக்கியப் படைப்புக்களே. உலகத்தில் தெளிவாக—மொழியைப் பற்றிச் சிறப்பான முறையில் ஆராய்ந்த பெருமை நம் தமிழகத்திற்கு நிறைய உண்டு. நம் தமிழுக்கு இலக்கணம் முதன் முதல் தொல்காப்பியரால் எழுதப்பட்டது. இந்த இலக்கண நூல் இன்றைக்கு மிகவும் உயர்ந்த நிலையில் வைத்துப் பலநாட்டு மொழி அறிஞர்கள் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது. இலக்கணச் செல்வமே ( Grammatical Treasure ) இந் நூலில் அடங்கியுள்ளது என்று அனைவரும் போற்றுகிறார்கள்.

### மொழி இலக்கணம்

ஒருமொழியின் இலக்கணத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து அன்று மொழியை ஆராய்ந்தனர். அவையாவன, (1) எழுத்து, (2) சொல், (3) பொருள் என்பனவாகும். இதையே இன்றைய மொழியியல் வல்லுநர்கள்(Linguists) முறையே (1) ஒலியியல், (Phonetics), (2) ஒலியனியல் (Phonemics), (3) சொல்லியல் (Morphology), (4) சொற்றொடரியல் (Syntax), (5) பொருளியல் (Semantics) என்ற ஐந்து பிரிவுகளில் ஆராய்கிறார்கள். இலக்கணமே ஒரு மொழியைக் கற்றுத் தருவதற்கு ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுகிறது எனலாம்.

### செய்திப் பரிமாற்றம்

செய்திப் பரிமாற்றம் (Communication) என்பது ஒரு செய்தியை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அல்லது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அனுப்பும் முறையேயாகும். மொழி, சில ஒலிகள், அவற்றின் கூறுகள், சொற்கள், சொற்றொடர்கள், ஆகியவற்றின் மூலம் செய்திகளைப் பரிமாறுகிறது. செய்திப் பரிமாற்றத்திற்கெனத் தனியான—நிலையான ஒரு கொள்கையை 1941-ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டு விஞ்ஞானி C. E. ஷானன் என்பவர் வெளியிட்டார். அவர் தோற்றுவித்த செய்திப் பரிமாற்றக் கொள்கை மிக விரைவாகவும் வெற்றிகரமாகவும் வளர்ந்துள்ளது—வளர்ந்தும் வருகிறது. மனிதர்கள் தங்களுக்குள் கருத்துக்களை மொழியின் மூலம் பகிர்ந்து கொள்கிறார்கள். இதனை மொழிப் பரிமாற்றம் (Language Communication) என்று சொல்கிறோம். இந்த அமைப்பில் செய்தி அனுப்பும் பொறியின் செயலுக்குக் 'குறியீடுகளை அனுப்பும் முறை' (Encoding) என்றும் செய்தி பெறும் பொறியின் செயலுக்குக் 'குறியீடுகளை மாற்றிப் பெறும் முறை' (Decoding) என்றும் பெயர்.

### உலக மொழிகள்

உலகத்தின் பல மொழிகளில் எழுத்து மொழியின் மூலமும் (written or Literary Language) பேச்சு மொழியின் மூலமும் (Spoken Language) செய்திகள் பரிமாறப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஆங்கிலம், தமிழ் மற்றும் சில திராவிட மொழிகள் போன்றவைகளாகும். ஆனால் இன்னும் பல மொழிகளில் பேச்சு மொழியின் மூலமே, செய்திகளைப் பரிமாற முடியும். அவை பேச்சு மொழிகளாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக திராவிட மொழிகளான துளு, தோடா, கோடா, கோண்டி, குருக், மால்டோ, பார்ஜி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இன்னும் சில மொழிகளில் எழுத்து மொழியின் மூலமே இன்று செய்திகளைப் பரிமாற முடியும். இதற்கு எடுத்துக்காட்டாக சமஸ்கிருதம், கிரீக், லத்தீன் போன்ற மொழிகளைச் சொல்லலாம். இன்னும் ஒரு மொழி பல காலம் வழக்கிழந்து இருந்து சில காலமாக மீண்டும் புத்துயிர் பெற்றுப் பேசப்பட்டு வருகிறது. அம்மொழி 'ஹிப்ரு' (Hebrew) மொழியாகும். ஆகவே, இவ்வாறு உலகத்தின் பல மொழிகள் அவைகளின் பேச்சு வழக்காலும், எழுத்து முறையாலும் மக்களிடையே செய்திப் பரிமாற்றம் செய்து கொண்டுள்ளன என்பதை நாம் அனைவரும் அறிவோம். இதிலிருந்து நாம் அறிவது ஒரு மொழியில் இரு பெரும் பிரிவுகள் உள்ளன என்பதேயாகும்.


## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, சென்னை வட்டம், சென்னை 25.

### ஒப்பந்த விளம்பரம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 22—9—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| எண் : | வேலை விவரம். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 13/6 முதல் 15/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 4,040 |
| 2 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 15/0 முதல் 16/8 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 5,190 |
| 3 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 18/4 முதல் 20/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 4,620 |
| 4 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 20/0 முதல் 21/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 2,910 |

ஒப்பந்தங்கள் 22—9—1971 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரை படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர், வாலாஜா தனிக் கோட்டம், அவர்கள் அலுவலகத்தில் விற்பனை வரிவுட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 25·88 கட்டி 6—9—1971 முதல் 21—9—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), வாலாஜா தனிக் கோட்டம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறை), வாலாஜா தனிக் கோட்டம் பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை)

நாள் 16-8-1971 சென்னை வட்டம், சென்னை 25.

(த. 2)

## ஏல அறிக்கை

### தமிழ்நாடு தீயணைப்புத்துறை

கண்டனம் செய்யப்பட்ட தொடர் ஊர்தி பம்ப் எம்.எஸ். ஒய். 2367 பெரிய கவன்ட்ரி க்ளைமாக்ஸ் 1955-ஆம் வருட மாடல் கடலூர் பீச் ரோடிலுள்ள கடலூர் தீயணைப்பு நிலையத்தில் 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி திங்கள் கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இந்த ஊர்தியை மேற்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வி. ஜெயபெருமாள்,
கோட்ட தீயணைப்பு அலுவலர்,
ஆணைக்குப்பம்,
கடலூர்-1.

(த. 16)

கண்டனம் செய்யப்பட்ட இழுக்கும் மோட்டார் வண்டி எம்.எஸ்.ஒய். 6707 ஸ்டுடிபேக்கர்—1953 மாடல், பாளையங்கோட்டைத் தீயணைப்பு நிலையத்தில் 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் சனிக்கிழமை 25-ஆம் தேதியன்று காலை 11-00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்படி வண்டியை, பாளையங்கோட்டைத் தீயணைப்பு நிலையத்தில், அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விற்பனைக்குரிய நிபந்தனைகள் கீழே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எம். எஸ். சுப்பிரமணியம்,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்
பாளையங்கோட்டை.

(த. 14)

## பேச்சு வேற்றுமைகள்

பேச்சு வேற்றுமைகளை ஆங்கிலத்தில் (Dialect Variations) என்று சொல்வார்கள். ஒரு மொழியில் பேச்சு வேற்றுமைகள் தோன்றப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. 'தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு' என்ற கருத்தை நாம் அனைவரும் அறிவோம். அதன்படி இன்றும் ஒரு மாவட்டக்காரர் மற்றொரு மாவட்டக்காரருடன் பேசும் போதும்; ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் மற்றொரு சமூகத்தைச் சேர்ந்தவரிடம் பேசும் போதும்; படித்தவர்கள் படிக்காதவர்களிடம் பேசும் போதும்; நகரத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டுப்புறத்தைச் சேர்ந்தவர்களிடம் பேசும் போதும் அவர்களிடையே பேச்சு வேற்றுமைகள் ஏற்படுவதைக் காணமுடிகிறது. ஆகவே மொழிகளில் பேச்சுவேற்றுமைகள் பல நிலைகளில், பல இடங்களில், பல முறைகளில் நிறைந்து ஏற்படுகின்றன — ஏற்பட்டும் வருகின்றன என்பதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இப்பேச்சு வேற்றுமைகள் உலக மொழிகள் அனைத்திலுமே காணப்படுகின்றன.

பேச்சிலே மொழி வேறுபாடுகளை இன்று பல்வேறு மொழியியல் அறிஞர்கள் மிகவும் உறுதியோடும் உற்சாகத்தோடும் ஆராய்ந்து வருகிறார்கள். ஏன் எனில் பேச்சு வேற்றுமைகள் மனிதனின் உள்ளக்கிடக்கை, சமுதாயத்தில் அவன் நிலை, அவனுடைய ஆசைகள், செயல்கள், எண்ணங்கள், மற்றும் சிந்தனைகள் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுவதுடன் அவன் சார்ந்திருக்கும் சமுதாயம், குழு போன்றவைகளையும் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன என்று உறுதியாகக் கூற முடியும்.

## தமிழ் மொழி

நம்முடைய தமிழ் மொழி தமிழ் நாட்டில் மட்டுமன்றி ஈழத்திலும் ஆப்பிரிக்கா நாடுகளிலும், கீழ்த்திசை நாடுகளிலும் பேசப்பட்டு வருவதை நாம் இன்று காண்கிறோம். தமிழ் மக்கள் எல்லா விதமான பிரிவுகளுக்கும் உள்ளடங்கி வருகிறார்கள். தமிழ் மக்களின் தனித்தனிப் பேச்சு வழக்குகளை நாம் அறிந்து கொண்டால், நாம் தமிழ் மொழியின் வளர்ச்சியையும் வாழ்க்கையையும் எளிதில் நன்கு அறிந்து கொள்ள முடியும். தமிழ் மொழியில் பேச்சு வேற்றுமைகள், இடத்திற்கு இடம், சமூகத்திற்குச் சமூகம் மிகுந்து காணப்படுவதற்கு முக்கியமான இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவையானவை: (1) தமிழ் மிகவும் தொன்மையான மொழி (2) தமிழின் இலக்கண, இலக்கிய மரபுகள் மிகவும் செல்வாக்குப் பெற்றவை—அதாவது தமிழ் மிகவும் வளம் நிறைந்த ஒரு மொழி. (Tamil is a rich language).

தொன்றுதொட்டுப் பேசப்பட்டு வருவதாலும், நாளுக்கு நாள் ஏற்படும் மாற்றங்கள், புதிய கண்டுபிடிப்புகள், படைப்புகள், விஞ்ஞான உலகின் அதிசயங்கள், சாதனைகள் போன்ற பல வகையான சூழ்நிலைகளாலும் பேச்சு வேற்றுமைகள் ஒரு மொழியில் ஏற்படுவது இயற்கையே. ஆனால் இவ்வாறு காலப்போக்கில் தமிழில் பேச்சு வேற்றுமைகள் நிறைந்து காணப்படினும் மேற்சொன்ன இரண்டு காரணங்களினால் தமிழ் மொழி தனித்தன்மையும், செம்மையும் பெற்று மிகுந்த வலிவோடும் நல்ல பொலிவோடும் செல்வாக்கு நிறைந்த ஒரு தனி மொழியாக நின்று நிலவி வருகிறது எனலாம். காலப்போக்கில் தமிழ் தன் இலக்கண இலக்கிய வளத்தை இவ்வளவு மாறுதல்களுக்கு இடையேயும் பெருக்கிக் கொண்டே வந்துள்ளது. சங்க காலம், இடைக்காலம் போன்றவைகளைக் கடந்து தற்காலத்திலும் அதன் சொல்வளம், சொற்றொடர் வளம், பொருள் வளம், சொல்லாக்கத் திறன், இலக்கண இலக்கிய மரபுகள் போன்றவைகள் செம்மையான படி நன்முறையில் காப்பாற்றப் பட்டும் இன்னும் வளர்ந்தும் வருவதை நாம் கண்கூடாகக் காணலாம். இடைக்காலத்தில் புதிய படைப்புகள் குறைந்தே தோன்றியுள்ளன. தற்காலத்திலும் இலக்கிய ஆய்வு, மொழிபற்றிய ஆராய்ச்சி ஆகியன சில ஆண்டுகளாகத்தான் தழைத்தோங்கி நிற்பதைக் காண முடிகிறது. இவ்வளர்ச்சி மேலும் நன்கு சிறக்க நாம் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம்! ஏராளம்!






## நமது பணி

இங்கு நாம் நமது மொழிக்கும் நமது மொழியிலும்செய்ய வேண்டிய சில ஆக்கப்பணிகளை மட்டுமே சொல்ல விழைகிறேன்.

(1) புதிய சிந்தனைகளின் வாயிலாக நாம் நமது மொழியில் படைக்கவேண்டிய புதிய படைப்புகள் (New Creations).

(2) மற்ற மொழிகளில் இருந்து புதிய கருத்துக்கள், அறிவியல் உலகின் சாதனைகள், கண்டுபிடிப்புகள் போன்றவற்றை நம் மொழியில் மொழி பெயர்த்தல் (Translations).

(3) இதற்காகப் புதிய கலைச் சொல்லகராதிகள் (Dictionary of Technical Terms)— சொற்களஞ்சியங்கள் (Lexicon) போன்றவைகள் காலத்திற்கேற்றவாறு அமைக்கப்பெற வேண்டும்.

(4) தமிழ் மொழியையும், தமிழ் மொழியிலும் கற்பிக்க வலிவான, தெளிவான ஆனால் எளிமையான வழி முறைகளைச் சீராக, செம்மையாக வகுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு நாம் சில கொள்கைகளைக் கடைப்பிடித்துச் செயல்பட்டால் நாமும் உயர்வோம்— நமது தமிழ் மொழியும் உயரும். மொழி வழி நாமும், நம்வழி மொழியும் வளர, உயர சிறந்த வழிமுறைகள் பெருகும். நமக்கும் நம் தமிழுக்கும் உள்ள உறவு, முக்கியத்துவம் உறுதிப்படும். ஆகவே இனி நாம் ஒவ்வொருவரும் 'நாம் நம் மொழிக்காக—அதன் இலக்கண, இலக்கியப்படைப்புகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக என்ன செய்துள்ளோம்—என்ன செய்யவேண்டும் என்ற கேள்விகளைக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

அப்படிக் கேட்டுக் கொண்டு விரைவில் ஆக்கப் பணிகளில் நாம் அனைவரும் ஈடுபட்டால் தான் 'தமிழாலும் முடியும்' என்ற சூழ்நிலை முற்றிலும் மாறி 'தமிழ்மொழியால் முடியும்' என்ற நன்னிலையும், நம்பிக்கையும் பெருகும். அப்பொழுது தான் 'நமது மொழி' என்ற சொற்றொடரும் 'நாம்' என்ற சொல்லும் அவற்றிற்கான உரிய பொருளை—இடத்தைப் பெறும். அப்பொழுதுதான் நாமும் வாழ்வோம்—நம் தமிழும் என்றென்றும் சீரோடும் சிறப்போடும் வாழும்—வாழ முடியும்.

54

### முன்னேறிய வகுப்பினர் அஞ்சவேண்டாம் !

அரசுப் பணிகளில் இனி ஏற்பட இருக்கும் காலி இடங்களில் ஒரு பகுதி இதர பின்னடைந்த வகுப்பினருக்கு என்று ஒதுக்கப்பட வேண்டுமென்று பிற்பட்ட வகுப்பினர் கேட்கிறார்கள். மேல் வகுப்பினர் பெரும் எண்ணிக்கையில் ஏற்கெனவே வகித்து வரும் வேலைகளை வைத்து ஒப்பிடும் போது இனி அவ்வப்போது ஏற்படக்கூடிய காலி இடங்கள் மிக மிகக் குறைவாகவே இருக்கும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்தக் குறைந்த இடங்களில் கூட ஒரு குறிப்பிட்ட சதவீத இடங்களுக்கு நேரிடைப் போட்டிகள் மூலம் நபர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். ஏற்கெனவே பணியில் உள்ளவர்கள் ஓய்வு பெறும் காலம் வரும் வரை பதவியில் நீடிப்பார்கள். ஆகவே பரவலடைந்து வரும் பணித் துறைகளில் எல்லோரும் போட்டியிடுவதற்காக உள்ள இடங்களில் முன்னேற்றமடைந்த சாதியினர் உள்பட எல்லோருமே வாய்ப்புகளைப் பெறுகின்றனர். எனவே, முன்னேற்றமடைந்த சாதியினர் வகித்துவரும் மொத்த இடங்கள் அடுத்து வரும் ஆண்டுகளில் கணிசமான அளவில் குறைந்து விடும் என்று கவலைப்படக் காரணமே கிடையாது.

—தமிழ் நாடு பிற்பட்டோர் நலக் குழு அறிக்கைப் பகுதி.




# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## தமிழ்நாடு மின்சார வாரியம்

எண்ணூர் அனல் மின் திட்டம்
ஒப்பந்த விளம்பரம்.

குறிப்பு எண் SE/ETS-3/71 -72.

(1) தமிழக மின்சாரவாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் ' தமிழக மின்சார வாரியம் எண்ணூர் அனல் மின் திட்டம்—துண்டு சாமான்களை வாங்குவதற்கான ஒப்பந்தக் குறிப்பு எண் SE/ETS-3/71 -72 எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு எண்ணூர் அனல் மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 17—9—1971 மாலை 3-30 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4—00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

(2) விற்பனைக்குள்ள பொருள்கள்—

துருப்பிடித்த இரும்பு ஸ்கிராப், அஸ்பெஸ்டாஸ் ஆட்டோ பி. வி. சி. கேபிள் ஸ்கிராப், துருப்பிடித்த இரும்புக் கம்பித் துண்டுகள், காலி டீல் உட் கேபிள் டிரம் முதலியன.

(3) ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 5·00 (ரூபாய் ஐந்து மட்டும்) எண்ணூர் அனல் மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தொகை யாதொரு காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டுமானால் அதிகமாக ஒரு ரூபாய் (மேற்கூறிய ஒப்பந்தப் பிரதிகள் தொகையைத் தவிர) செலுத்த வேண்டும்.

(4) இந்த வேலைக்கான முன் பணம் ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்த வேண்டும்.

(5) மின்சார வாரியத்தைச் சேர்ந்த நமூனுக்களில் இல்லாத ஒப்பந்தங்களும் இறுதித் தேதிக்குப் பின்னரும் நேரத்திற்குப் பின்னரும் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது தள்ளுபடி செய்வதற்கும் ஒப்பந்தங்களிடையே பிரித்துக்கொடுக்கவும் எண்ணூர் அனல்மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

(6) அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணுமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கும் தாமதமாக வந்து சேரும் ஒப்பந்தங்களுக்கும் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தக்கவை அல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்**

எண்ணூர் அனல் மின் திட்டம், எண்ணூர், சென்னை-57.

தொலை பேசி எண் 59389.

தந்தி : 'ENTERMAL"

(த-89)

---

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

பார்வை எண் 4693-டிபிசி-71.

கீழ்க்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் குறிப்பிடப்பட்டு 20-9-1971 மாலை 3-00 மணிக்குள் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் 3-05 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : கலைஞர் கருணுநிதி நகரில் 150 இணைப்பு குடியிருப்புகளைக் கட்டும் வேலைக்காக கட்டடப்பொருள்கள் செங்கல், ஜல்லி, கல் ஜல்லி, மணல் வழங்குதல்.

வேலையின் சுமார் மதிப்பு : ரூ. 42,225·00.

கட்டுத் தொகை : ரூ. 640.

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 5 இத்துடன் விற்பனைவரி (இது திருப்பித் தரப் படமாட்டாது).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மற்றும் இதர விவரங்களை நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் மத்திய கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை-35-ல் 6-9-1971லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை ரொக்கம் கொடுத்துப் பெறலாம்.

**மே. ஜார்ஜ்,**
நிர்வாகப் பொறியாளர்
(மத்தியம்).

3, அண்ணு சாலை, நந்தனம்,
அஞ்சல், சென்னை-35,
3-9-1971.
(த-71)

---

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்தப் புள்ளி தேதி நீடிப்பு அறிவிப்பு.

வேலையின் பெயர் : ஆலந்தூர் குடிநீர்த் திட்டம்—2-வது இடம்—1-வது நிலை—2-வது பிரிவு—2எ, 2-பி, 3எ, 3பி ஆகிய மண்டலங்களுக்கு வினியோகிக்கும் திட்டம்—சி. ஐ. & ஏ. சி. குழாய்கள் போடுவது, இணைப்பது மற்றும் தனிப்பணிகள்.

மேற்படிப் பணிகளுக்கான கடைசி நாள் இதன் மூலம் 24—9—1971 வழங்கப்பட்டுள்ளது. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குப் பெறப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் பற்றிய பிற நிபந்தனைகள் மாற்றப்படமாட்டாது.

**மேற்பார்வைப் பொறியாளர்**

மக்கள்நல, வெளி இயக்குநர் வட்டம், 52,கெங்கு ரெட்டி தெரு, சென்னை-8.

நாள் : 3 -9 -1971.
(த-91)

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

எண். 4/351டி4, நாள் 1—9—1971.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்துக்காகவும் அதன்பொருட்டும், கீழ்க்கண்ட வேலைகளுக்காக, மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.பொ.) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோயம்புத்தூர்-12 அவர்களால் அவரது அலுவலகம் 25-1, மூன்றுவது தெரு டாட்டாபாத், கோயம்புத்தூர்-12ல் கீழே குறிப்பிட்ட தேதிகளில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மாலை 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு, அவை அதே நாளில் மாலை 4-00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளரால், அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| தொடர் எண். | ஒப்பந்த வடிவம். | வேலை விவரம். | கட்டுத் தொகை. | வேலையை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை. | ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்கப்படும் காலம். | ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கும் திறப்பதற்கும் ஆன நாள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | மொத்தத் தொகை. | பெருந்துறை, கே.சி. பாளையம் மற்றும் இதர ஊராட்சிகளுக்கு ஒருங்கிணைந்த நீர் வழங்கும் திட்டம் நான்காவது கட்டம். பூஸ்டர் ஸ்டேஷன் 1-க்காக உயர்ஏற்ற தூயநீர் செண்ட்ரிபியூகல் பம்பு செட்டுகள், துணை உறுப்புகள் முழுதும் வழங்குதல், டெலிவரி, நிர்மாணம். | ரூ. 3 300 (ரூபாய் மூவாயிரத்து முந்நூறு மட்டும்.) | 5 மாதங்கள். | ரூ. 10·35 (ரூபாய் பத்தும் காசுகள் முப்பத்தி ஐந்து மட்டும்—விற்பனை வரி உள்பட) திருப்பித் தரப்பட மாட்டாது. | 15—9—1971 லிருந்து 4—10—1971 மாலை 5 மணி வரை. | 6—10—1971 |
| 2 | மொத்தத் தொகை. | பெருந்துறை, கே.சி. பாளையம் இதர ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒருங்கிணைந்த நீர்வழங்கும் திட்டம்—நான்காவது கட்டம். பூஸ்டர் ஸ்டேஷன் 2-க்காக உயர் ஏற்ற தூயநீர்செண்ட்ரிபியூகல் பம்புசெட்டுகள், துணை உறுப்புகள் முழுவதும் வழங்குதல், டெலிவரி, நிர்மாணம். | ரூ. 3 330 (ரூபாய் மூவாயிரத்து முந்நூற்று முப்பது மட்டும்). | 5 மாதங்கள். | ரூ. 10·35 (ரூபாய் பத்து, காசுகள் முப்பத்தி ஐந்து மட்டும்) விற்பனைவரி உள்பட. இது திருப்பித் தரப்பட மாட்டாது. | 15—9—1971 லிருந்து 4—10—1971 மாலை 5 மணி வரை. | 6—10—1971 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (பொ.சு.பொ.) கோட்டம், 18, சாமியப்பக் கவுண்டர் தெரு, திருநகர் காலனி, ஈரோடு 3-லிருந்து, இப்பத்திரங்களுக்குரிய தொகையை ரொக்கமாகவோ மணியார்டர் மூலமோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத்தொகை, ஷெடியூல் பாங்கி ஒன்றின் டிமாண்டு ட்ராப்ட் வடிவிலோ, அல்லது நிர்வாகப்பொறியாளர் (பொ.சு.பொ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஈரோடு-3 அவர்கள் கணக்கில் கருவூல சலான் வடிவிலோ இருக்க வேண்டும். தேச உடைமை ஆக்கப்பட்ட பாங்கி ஒன்றில் பாங்கி காரண்டியும், இந்திய ரிசர்வ் பாங்கின் ஒப்புதலோடு, கட்டுத் தொகைக்காக ஏற்கப்படும்.

உறையின்மீது, வேலையின் பெயர் தெளிவாக எழுதப்பட வேண்டும். எவ்வித காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.பொ.) அவர்களுக்கு உரிமை உண்டு.

எஸ். எம். சாஹுல் ஹமீத்
மேற்பார்வைப் பொறியாளர்.

நாள் : 1—9—1971.
(த. 84)

## ஒப்பந்தப் புள்ளி

### தென்னார்க்காடு மாவட்ட விளையாட்டுக்குழு, கடலூர்.

ஒப்பந்த அறிக்கை.

பொதுச் செயலாளர், தென்னார்க்காடு மாவட்ட விளையாட்டுக்குழு, கடலூர்-1 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அவருடைய அலுவலகத்தில் 5—10—1971 மாலை 3 மணிவரையில் மூடிய உறையில் அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் பதிவு செய்யப்பட்ட (பொதுப்பணித்துறை அல்லது நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் இவ்வலுவலகத்தில் வழங்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் உறையின் மேல் வேலையின் பெயர் குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

"தென்னார்க்காடு மாவட்டம், கடலூர் புதுநகரில் விளையாட்டு அரங்கிற்கான முக்கிய கட்டடம் கட்டுதல்":

1 ஒப்பந்தவகை .. .. மொத்தத் தொகை ஒப்பந்தம்,

2 கட்டுத்தொகை .. ரூ. 15,000.

3 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்).

4 விற்பனை வரி .. .. 0·60 (அறுபது காசு).

5 ஒப்பந்தப்பத்திரங்கள் 20—9—1971 தேதி முதல் 3—10—1971வரை அலுவலக நேரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

6 ஒப்பந்தங்கள் 5—10—1971 அன்று மாலை 4 மணிக்கு இவ்வலுவலகத்தில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 20·60-ஐ (ரூபாய் இருபது பைசா அறுபதும்) டிமாண்டு டிராப்டு மூலம் பொதுச் செயலாளர் பெயருக்குச் செலுத்த வேண்டும். இத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.
ஒப்பந்தப் பத்திரங்கள் கோரி வரும் மனுக்கள் அதன் விலைக்கான டிமாண்டு டிராப்டுடன் அனுப்பப்பட வேண்டும்.

க. கந்தசாமி, பி.ஏ., எல்.டி.,
பொதுச்செயலாளர்,
மாவட்ட விளையாட்டுக் குழு,
கடலூர்-1.

(த. 83)

547

# மிக வலிமையான டயர்

**பயர்ஸ்டோன்**

படைத்திடும்
தனிப்பட்ட 23°
கோணமுள்ள
டிராக்ஷன்
பார்களை
உடைய
டிராக்டர்
டயர்கள்.

ஆழமாக இறகப் பற்றி அதிக இழுதிறனை அளிக்கும்படி ரப்பர் பரப்பை முற்றிலும் பயன்படுத்தும் திறனுள்ள வளைவும் கூம்பு முனையும் அமைந்தவை. பயர்ஸ்டோன் டயர்கள், உறுதியான நீடித்தகால உழைப்புக்கான வலிமை படைத்திருக்கக் காரணம் மும்மடங்கு வலுவுள்ள சட்டமைப்பு — டயருடன் ஒட்டிய ... பிணைக்கவும், பக்கவாடுகளை பலப்படுத்தவும், கார்டுகளை இன்சலேட் செய்வதற்குமான முறை அது.






**பயர்ஸ்டோன்**




### ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு அரசு

## நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை

### அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும் கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1971-ஆம் வருடம் அக்டோபர் திங்கள் 20-ஆம் நாள் புதன்கிழமை மாலை 3·00 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தின சபாபதிபுரம் வெங்கட்ரமணா சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3·15 மணி அளவில் (அலுவலகக் கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | கோட்டம். | | முன்வைப்புத் தொகை. |
|---|---|---|---|---|
| | | | | ரூபாய். |
| 1 | தேசிய நெடுஞ்சாலை எண் 7ஐ மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி-சேலம் பகுதியை மேம்பாடு செய்தல்— | | | |
| | பிரிவு 1 கி.மீ. 33·015 முதல் 55·00 வரை | கிருஷ்ணகிரி | — | 1,37,500 |
| 2 | ஷை பிரிவு 2—கி.மீ. 55·00 முதல் 80·00 வரை | ஷை | — | 1,54,800 |
| 3 | ஷை பிரிவு 3—கி.மீ. 80·00 முதல் 94·00 வரை | ஷை | — | 96,200 |
| 4 | ஷை பிரிவு 4—கி.மீ. 94·00 முதல் 119·00 வரை | ஷை | — | 1,15,900 |
| 5 | ஷை பிரிவு 5—கி.மீ. 119·00 முதல் 139·00 வரை | ஷை | — | 85,700 |
| 6 | ஷை பிரிவு 6—கி.மீ. 139·00 முதல் 160·00 வரை | ஷை | — | 94,900 |
| 7 | ஷை பிரிவு 7—கி.மீ. 160·00 முதல் 174·00 வரை | சேலம் | — | 91,200 |
| 8 | ஷை பிரிவு 8—கி.மீ. 174·00 முதல் 194·00 வரை | ஷை | — | 1,01,200 |
| 9 | ஷை பிரிவு 9—கி.மீ. 194·00 முதல் 199·00 வரை (மற்றும் சேலம் மாற்று வழிப் பாதை) | ஷை | — | 1,07,800 |
| 10 | தேசிய நெடுஞ்சாலை எண் 47-ல் பவானி மற்றும் குமாரபாளையத்தை இணைக்கும் மாற்று வழிப் பாதை அமைத்தல். | ஈரோடு | — | 54,700 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்தக் கோட்டப் பொறியாளர்களிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 250 உடன் விற்பனை வரியும் செலுத்தி 20—9—1971 முதல் 19—10—1971 வரை பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையை அந்தந்தக் கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ '' டெபாசிட் என்ற தலைப்பின்கீழ் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன்வைப்புத் தொகையாகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமேயானால், மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும். தவிர ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி 'பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

பா. சேக் உமர்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ இ.ப.),
கோவை-2.

ரத்தினசபாபதிபுரம், கோயம்புத்தூர்,
21—8—1971.

(த.10)

## தமிழ்நாடு அரசு

## நிலநீர் இயக்குநர் அலுவலகம்

ஒப்பந்த அறிவிப்பு எண்–5.

வேலையின் பெயர் :—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்குத் தளவாடங்கள் வழங்கல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்காக, நிலநீர் இயக்குநர், சென்னை-4 அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 16—10—1971 அன்று மாலை 3·00 மணி வரை ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் அதே நாள் மாலை 4·00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| எண். | உள்வேலை. | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1 | டர்பைன் பம்புகள் வழங்கல் .. | 8,000 |
| 2 | டவுன் தி ஹோல் டூல் உடன் சேர்ந்த ரோட்ரிக்கு ஒன்று வழங்கல். | 10,000 |
| 3 | நடமாடும் டீசலால் இயங்கும் வெல்டிங் செட்டுகள் வழங்கல். | 1,500 |
| 4 | தண்ணீர்த் தொட்டி டிரெய்லர், டிரெய்லர் மற்றும் டிராக்டர், வழங்கல். | 3,400 |
| 5 | ஜியோபிசிக்கல், ஜியோகெமிக்கல், ஜியலாஜிக்கல் — தளவாடங்கள், மற்றும் ஹைடிரே மீட்டிரியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 2,000 |
| 6 | பணிமனைக் கருவிகள் வழங்கல் .. | 1,500 |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை—ரூ. 10
விற்பனை வரி—40 காசு.

ஒப்பந்த வடிவம் :—மெட்ராஸ் பைனான்சியல் கோடு, வால்யூம் 1-ன் வடிவம்-9.

மேற்கூறிய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ஒப்பந்தப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய தேதி 6—9—1971 முதல் 6—10—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittance III Other Remittance" என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் " விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், வரவினம், பொது விற்பனை வரி " எனத் தலைப்பிட்டுச் செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இயக்குநர்,
நிலநீர்.

(த. 9)



## தமிழ்நாடு மின்சார வாரியம்

பரம்பிக்குளம்-ஆழியாறு
நீர் மின் திட்டம்,
மின்பாறை அஞ்சல்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

### ஒப்பந்த விவரம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் பரம்பிக்குளம்-ஆழியாறு நீர்மின் திட்டம் மத்திய பண்டகசாலையில் உள்ள நிராகரிக்கப்பட்ட லோகோ (Loco), கழிவு இரும்புத் துண்டுகள், பழைய டயர்கள், செம்புத் துகள்கள், மற்றும் இதர வழக்கொழிந்த பலவகைக் கழிவுப் பொருள்களையும் வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 24-9-1971 அன்று 15 மணி 30 நிமிடம் வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் 24-9-1971 அன்றே 16·00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்த சம்பந்தப்பட்ட முழு விவரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள் அனைத்தும் கோயம்புத்தூர் மாவட்டம், மின்பாறை அஞ்சல் மத்திய அலுவலகத்தில் 6-9-1971 முதல் எந்த வேலைநாட்களிலும் பணமாகவோ அல்லது பணவிடைத்தாள் மூலமாகவோ ரூபாய் ஐந்து மட்டும் (ரூ. 5) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி விலையான ரூ. 5 திருப்பித்தரத் தக்கதல்ல.

நிராகரிக்கப்பட்ட கழிவுப் பொருள்களுக்கு என்ன விலை குறிக்கப்படுகிறதோ அதில் பத்து சதவீதம் (10·/·) பிணைத் தொகையாகக் கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி, அதற்கான இரசீதையோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பொள்ளாச்சி கிளையின் கேட்பு உண்டியலாகவோ (Demand Draft) ஒப்பந்த சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளோடு இணைத்து அனுப்ப வேண்டும். பிணைத் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தங்கள் காரணம் காட்டாது நிராகரிக்கப்படும்.

ஒப்பந்த நகல் விண்ணப்பதாரர்களுக்குச் சாதாரண அஞ்சலில்தான் அனுப்பப்படும். அஞ்சல் பிரயாணத்தின் பொழுது ஒப்பந்த நகல் தவறினால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்த நகல் மற்றவர் பெயருக்கு மாற்றத்தக்கதல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
பரம்பிக்குளம்-ஆழியாறு
நீர் மின் திட்டம்.

தந்தி : PARAMBY DEL/
POLLACHI,

தொலைபேசி : 39,
மலையாண்டி பட்டணம்.

(த. 1)



## தமிழ்நாடு மின்சார வாரியம்,

கே. 2 ஒப்பந்தம்.

(குறிப்பு எண். SCE. 407.)

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட தனித் தனி ஒப்பந்தங்கள் அதன் உறையின் மேல் " குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயரும் " எழுதப்பட்டுக் கீழ்க் கையொப்பமிட்டவரால் குறித்த முடிவுத் தேதி அன்று மாலை 3·30 மணி வரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலையே 4·00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப்படும்.

| குறிப்பு எண். | வேலையின் பெயர். | முன் வைப்புப் பணம். | ஒப்பந்தப் பிரதி விலை. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|
| SCE 407 | எண்ணூர் அனல் மின் திட்டம்—கட்டடங்களுக்கு மின்னல் இடி தாங்கிகள் பொருத்துதல். | ரூ. 1,000 | ரூ. 10 | 23—9—1971 |

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 10 செலுத்திக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

3. வேலைக்கான முன்வைப்புத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு உண்டியல் (Demand Draft) மூலம் செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும், குறித்த தேதி, காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது ஒப்பந்தங்களையோ எவ்வித காரணம் காட்டாமல் நிராகரிக்கவும் அவ் வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவார்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுக் காணுமல் போனால் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

தொலைபேசி எண் : 59556 (5 கிளைகள்).

தந்தி : "ENTERMAL".

(த. 4)



## தமிழ்நாடு அரசு உணவுப் பொருள் வழங்கு துறை

உணவுப் பொருள் மற்றும் உணவுப் பொருள் வழங்கு துறையினுல் கவனிக்கப்படும் பிற பொருள்களைச் சென்னை ரெயில் நிலையங்கள், துறைமுகம் ஆகியவற்றிலிருந்து நகரக் கிடங்குகளுக்கு (godowns) எடுத்துச் செல்லவும், ஆவடி, குரோம்பேட்டை ஆகியவைகளிலுள்ள கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லவும் அல்லது இங்கிருந்து அங்கு எடுத்துச் செல்லவும் உணவுப் பொருள்களை சென்னை, ஆவடி, குரோம்பேட்டை ஆகிய பகுதிகளிலுள்ள கிடங்குகளிலும், ரெயில் நிலையங்கள், துறைமுகம் ஆகியவற்றிலும் ஏற்ற—இறக்க கூலியாட்களை, சப்ளை செய்யவும், ஒப்பந்த ஒப்புதலிலிருந்து ஓராண்டுக் காலம் செயல்படக் கூடிய காண்டிராக்டர்களை நியமிக்க, குறிப்பிட்ட படிவத்தில் ஒப்பந்தங்களைத் தமிழ்நாடு அரசின் சார்பில், உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 வரவேற்கிறார்.

ஒப்பந்தங்கள், உணவுப் பொருள் வழங்கு துறை துணை ஆணையாளர் (விநியோகம்) அவர்களால் 20-9-1971 மாலை 3 மணி வரை சென்னை-5, சேப்பாக்கத்திலுள்ள எழிலகத்தில் பெறப்படும்.

ஒப்பந்தப் படிவங்களும் நிபந்தனைகளும், சென்னை ரிசர்வ் வங்கியில் XXII.—Miscellaneous Department Receipts—e. Civil Supplies Department 3 (II) Miscellaneous Receipt என்ற தலைப்பில் ரூ. 10-ம் (ரூபாய் பத்து மட்டும்) (திருப்பித் தரப்படமாட்டாது), விற்பனை வரிக்காக XII Sales-tax (d) Miscellaneous-Madras General Sales Tax Act, 1959 என்ற தலைப்பில் 30 காசும் (திருப்பித் தரப்படமாட்டாது) கட்டியதற்கான செலான்களைத் தந்து பெற்றுக் கொள்ளலாம்.

துணை ஆணையாளர்,
(விநியோகம்)
உணவுப் பொருள் வழங்கு துறை,
சென்னை-5.

(த-11)

## தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

ஒப்பந்த அறிக்கை.

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் புரசவாக்கத்தில் உள்ள பங்கஜம் தெருவில் பல அடுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 28—9—71 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின்மீது, ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. ரூ. | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பிறதுகளின் விலை. |
|---|---|---|---|---|---|
| 1 | I | 82 குடியிருப்புகள் கொண்ட கட்டடம் A, 24 குடியிருப்புகள் கொண்ட B4. | 2,16,500 | 5,250 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு [illegible]). |
| 2 | II | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் B1, B2, B3. | 2,79,000 | 4,200— | |
| 3 | III | 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நீர் நிலைத் தேக்கம் 21 மீட்டர் உயரத்தில் கட்டுதல். | 18,750 | 251 | |
| 4 | IV | 6.1 மீட்டர் விட்டம் கொண்ட கிணறு ஒன்று கட்டி இறக்குதல். | 25,000 | 5/5 | |

வரைபடங்களையும், ஒப்பந்தப் பிரதிகளையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 17—9—71 முதல் 27—9—71 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 28—9—71 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் காரணமின்றி நிராகரிக்கவோ ஏற்றுக்கொள்ளவோ, நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

தாண்டவராயச் சத்திரம், கீழ்ப்பாக்கம், சென்னை-10.

நிர்வாகப் பொறியாளர், கோட்டம் எண்-8.

(த. 72)

---

திருத்தம்

| தமிழரசு 1-9-71 இதழின் 51-ஆம் பக்கத்தில் வெளியிட்டிருந்தபடி. | ஓ.டி.எஸ். | செய்யப்பெறும் திருத்தம். |
|---|---|---|
| இனம் (10) 11000 ஓல்ட் எச்.ஜி. பியூஸ் செட்டுகள். | 15/71-72 | 9.15 மீ. (30.) நீளமுள்ள சிமெண்ட் கம்பங்கள் செய்வதற்கான பார்மர் பெட்டிகள் |

(த. 77)

---



## தமிழ்நாடு அரசு

### நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை.

### ஒப்பந்த அறிவிப்பு.

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சார்பாகவும், உத்திரவுப்படியும் கோயம்புத்தூர் வட்டம், நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்களை அக்டோபர் திங்கள் 6-ஆம் நாள் புதன்கிழமை மாலை 3-00 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம் வெங்கட்ரமணா சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3-15 மணி அளவில் (அலுவலகக் கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | கோட்டம். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 தேசிய நெடுஞ்சாலை எண் 46, கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை சாலையை 1971–72-ஆம் வருடத்திய வருடாந்திரத் திட்டத்தில் அகலப்படுத்தலும், உறுதிப்படுத்தலும்— கி.மீ. 1·6 முதல் 10·0 வரை. | கிருஷ்ணகிரி. | 26,200 |
| 2 ஷை கி.மீ. 10·0 முதல் 15·0 வரை. | ,, | 17,800 |
| 3 ஷை கி.மீ. 15·0 முதல் 23·0 வரை. | ,, | 24,100 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளரிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 50 (ஐம்பது) உடன் விற்பனை வரியும் செலுத்தி, 17—9—1971 முதல் 5—10—1971 வரை பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகையை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பின் கீழ் செலுத்தி, செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமேயானால், ஷை பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்கவேண்டும். தவிர, ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

பா. சேக்உமர்,

மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.) கோவை-2.

ரத்தினசபாபதிபுரம், கோயம்புத்தூர்-2
30—8—1971.

(த-32)



## தேவை

### தச்சு, கருமார் வேலையில் பயிற்சி.

இடம்.—கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையத் தொழிற்கூடங்கள், தே. கல்லுப்பட்டி, பவானிசாகர், பட்டுக்கோட்டை, சத்திய விஜய நகரம், கிருஷ்ணகிரி,

பயிற்சிக் காலம்.—ஓராண்டு.

தகுதிகள்.—

(அ) தமிழ் பேச, படிக்க, எழுதத் தெரியவேண்டும்.

(ஆ) தச்சு அல்லது கருமார் வேலையில் குறைந்த அளவு மூன்று ஆண்டுகள் அனுபவம் இருக்கவேண்டும்.

உதவித் தொகை.—மாதம் ரூ. 45 (நாற்பத்தைந்து) மட்டும்.

விண்ணப்பித்தல்.— விண்ணப்பதாரரின் பெயர், தகப்பனார் பெயர், முழு முகவரி, பிறந்த தேதி, படிப்புத் தகுதி, தச்சு அல்லது கருமார் வேலையில் உள்ள அனுபவம் ஆகியவைகளைக் குறித்து " கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், குறளகம் சென்னை-1 " என்ற முகவரிக்கு செப்டம்பர் மாதம் 25-ஆம் தேதிக்குள் வந்து சேர்வது போல் அனுப்ப வேண்டும். இத்தேதிக்குப் பின்னர்வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பயிற்சி முடிந்ததும் பயிற்சியாளர்கள் தங்களுடைய கிராமத்தில் தொழிற்பட்டறை அமைத்துக் கொள்ளவேண்டும். இதற்கு உரிய உதவிகள்செய்யப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 45 உதவித் தொகையும் சீருடையும் வழங்கப்படும்.

இயக்குநர்.

(த-21)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ் நாடு அரசு

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளி, அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1, விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 6—10—1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் புள்ளி கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| தஞ்சாவூர் மாவட்டம். | | |
| தஞ்சாவூர் கோட்டம். | | |
| 1 முத்துப்பேட்டை-மீமிசல் சாலையில் கி.மீ. 49/8 (மைல் 31/1)-ல் ஒரு பாலம் கட்டுதல். | ரூ. 2,800 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) தஞ்சாவூர். |

1. ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 22—9—1971 முதல் 5—10—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், வரைபடங்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

2. மேலே குறிப்பிடப்பட்ட கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப்பொறியாளரின் (நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானைஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர, 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

3. மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் ஒப்புதலைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

5. முன்பண. வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**ஆ. தேவப்பிரியம்,**
மேற்பார்வைப் பொறியாளர், (நெ.கி.ப.)
திருச்சிராப்பள்ளி

(த. 17)

## நீதித்துறை.

### மூன்றுவது ஸ்மால்காஸ் கோர்ட்டு, சென்னை.

S.C. No. 2137 of 1971.

விசாலம் சிட் பண்டு—வாதி.

அகமத் கபீரும் மற்றொருவரும்—பிரதிவாதிகள்.

To S. K. M. சையத் அப்பாஸ்
116—பி, பீட்டர்ஸ் ரோட்
சென்னை-14.

சீட்டு பாக்கி ரூ. 1767, வசூலுக்கான மேற்படி தாவா மேற்படி கோர்ட்டில் 20—9—1971 காலை 11 மணிக்கு மேற்படி பிரதிவாதி ஆஜராக வாய்தா போடப்பட்டிருக்கிறது. மேற்படி பிரதிவாதி ஆஜராகத் தவறினல் எக்ஸ்பார்ட்டியாகத் தீர்ப்பு செய்யப்படும்.

**ஆர். ரகுநாதன்,**
வாதி வக்கீல்.

(த.18)

## ஏல விற்பனை

### பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம்.

### மறு ஏல விளம்பரம்.

பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான நல்லமுறையில் உள்ள மரம்அறுக்கும் சுழல் ரம்பத்தை 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ஆம் தேதி மாலை 3-00 மணிக்கு, பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆணையாளர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களாலோ பகிரங்கமாக மறு ஏலத்தில் விடப்படும். ஏலம் கோர விரும்புகிறவர்கள் கட்டுத் தொகை ரூ. 100 கட்ட வேண்டும். மற்ற ஏல நிபந்தனைகளையும், இதர தகவல்களையும் வேலை நாளில் அலுவலக நேரத்தில் பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

**எம். குமரேசன்,**
ஆணையாளர்.

(த. 19)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

வேலையின் பெயர்: ஆம்பூர் நீர் வழங்கு திட்டம்—நான்காவது இறுதிக் கட்டம்—மேல் மட்ட ஆர். சி. சி. சர்வீஸ் ரிஸர்வ் வாயர் 18 லட்சம் லிட்டர் திறனுள்ள அல்லது ஒவ்வொன்றும் 9 லட்சம் லிட்டர் திறனுள்ள இரட்டை ரிசர்வாயர்கள் கட்டுமானம், அவசியமான குழாய் இணைப்புகள், வால்வு பிட்டுகள், பம்ப் முதலியன உள்பட முழுமையாக.

தமிழ் நாடு தண்ணீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், மேலே கண்ட வேலைக்காக துறைக்குரிய முறையான வடிவத்தில் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, இந்தத் துறையின் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனத்தின் உரிய பிரிவிலுள்ளபதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள், சென்னை-8 அவர்கள் தமது அலுவலகத்தில் (52, கெங்கு ரெட்டி சாலை, எழும்பூர், சென்னை-8-ல்) 16-10-1971 பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாளில் பிற்பகல் 3-30 மணிக்கு மேல் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள், சென்னை அவர்களால் ஒப்பந்தப் புள்ளி திறப்பின்போது ஆஜராக இருக்க விரும்புகின்ற ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்— மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 7,125 (ரூபாய் ஏழாயிரத்து நூற்று இருபத்தைந்து மட்டும்.)

(அரசு கருவூல சலான் வடிவில் அல்லது ஒப்பந்தப் புள்ளி சம்பந்தப்பட்ட விதிகளில் குறிக்கப்பட்டுள்ளபடி, ஏற்கத்தக்க வேறு வடிவில் கட்டுத் தொகை கட்டப் பெறவேண்டும்.)

3. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10.35 (பத்துரூபாய் முப்பத்தைந்து காசுகள் மட்டும்):

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணங்கள், நிர்வாகப் பொறியாளர் பொது சுகாதார பொறியியல் டிவிஷன் வாணியம்பாடி, பி. டபிள்யூ. III, ஓ. ஆர். அவர்கள் கணக்கிலும் விற்பனை வரிக்கு XII விற்பனை டி. பல்வகை I பொது விற்பனைவரியிலும் தனி சலான்களில்சேர்க்கப்படவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் பெற—நிர்வாகப் பொறியாளர் (பொ. சு. பொ.) பொ.சு. பொறியியல் டிவிஷன் 301, ஜமாத் சாலை, வாணியம்பாடி (வ. ஆ.) அவர்களுக்கு மனுச் செய்து பெறலாம். (ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணம் ரொக்கமாகவோ, பணமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும்.)

வேலையை முடிக்க வேண்டிய கால வரை—9 மாதங்கள்.

**எம். துரைராஜன்**
மேற்பார்வைப் பொறியாளர்
(பொ. சு. பொ.)

(த. 24)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு, வனத்துறை, நீலகிரிக் கோட்டம்

### ஒப்பந்த அறிவிப்பு.

நீலகிரிக் கோட்டம் முதுமலை மற்றும் சேரம்பாடி வனச்சரக மரக்கிடங்குகளிலிருந்து கார்குடி, சேரம்பாடி மத்திய மரக் கிடங்கிற்கும் மேட்டுப்பாளையம் அரசினர் மரக்கிடங்கிற்கும் சுமார் 5,000 கன மீட்டர் மரங்களை ஏற்றிச் செல்வதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (Tenders) குறிப்பிட்ட படிவத்தில் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் படிவத்திற்காக (Tender form) ரூ. 1·04 (விற்பனை வரி உட்பட) செலுத்தி உதகமண்டலம் நீலகிரிக் கோட்ட மாவட்ட வன அலுவலரிடமோ அல்லது முதுமலை வனச்சரக அலுவலரிடமோ விண்ணப்பத்தின் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்த அறிவிப்புகள் மாவட்ட வன அலுவலர் அவர்களுக்கு 1—10—1971 மாலை 3-30 மணிக்கு முன்பு வந்து சேர வேண்டும். ஒப்பந்த அறிவிப்புகள் அதே தினம் 4-00 மணிக்கு மாவட்ட வன அதிகாரியாலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராலோ திறக்கப்படும்.

**எஸ். சுப்பராயலு நாயுடு,**
மாவட்ட வன அலுவலர்,
நீலகிரிக் கோட்டம்,
உதகமண்டலம்.

(த. 33)

## ஒப்பந்தப் புள்ளி

### தூத்துக்குடி துறைமுக வாரியம்

தூத்துக்குடி துறைமுகத்திலிருக்கும் இரும்புப் பாலத்தின் மேலுள்ள கட்டைகளைப் புதுப்பிப்பதற்கான வேலைக்கு (காண்டிராக்ட் மதிப்பு ரூ. 13,500) அனுபவம் வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1, அக்டோபர் 1971, அன்று பிற்பகல் 4-00 மணி வரை தலைவர், தூத்துக்குடி துறைமுக வாரியம் அவர்களால் வரவேற்கப்படுகின்றன. தூத்துக்குடி துறைமுக வாரியத்தில் பதிவாகியுள்ள ஒப்பந்ததாரர்களது ஒப்பந்தங்களைத் தவிர இதர எந்த நபர் ஒப்பந்தமாவது ஏற்கப்பட்டால், அவர் தற்காலிக உத்திரவு கிடைத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், துறைமுக சகல விதி முறைகளையும் அனுசரித்துத் தமது பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். இல்லையேல் வேலைக்கான உத்தரவு ரத்து செய்யப்படும். மற்றும் அவர், செலுத்திய முன் பிணை வைப்புத் தொகையும், பறிமுதல் செய்யப்படும். ஒப்பந்தப் பத்திரங்களை கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரிடமிருந்து 27, செப்டம்பர், 1971 தேதி வரை பிரதி ஒன்றுக்கு ரூ. 10 செலுத்திப் பெறலாம். இத் தொகை திருப்பித் தரபட மாட்டாது.

**D. T. ராமச்சந்திரன்,**
துறைமுக அதிகாரி &
செயலாளர்.

துறைமுக வாரிய
அலுவலகம்,
தூத்துக்குடி-1.

(த. 34)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### பொதுப்பணித் துறை

**சீட்டு ஒப்பந்தப் புள்ளி.**

அறிக்கை எண் 12056/T-D2/71
நாள் 25—8—71

தென் ஆர்க்காடு மாவட்டம் சேத்தியா தோப்பில் வீராணம் திட்ட முகப்புப் பணிகளில் கச்சா நீர் பம்பு நிலையம் சம்பந்தப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக, தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும், உரிய வடிவங்களில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், உரிய பணிகளுக்காகப்பதிவு செய்துகொண்டுள்ள பொதுப் பணித்துறை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து. வீராணம் திட்ட சர்க்கிள், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—மொத்தத்தொகை.

கட்டுத்தொகை—ரூ. 4,500
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.—ரூ. 20·77 (விற்பனை வரி உள்பட).

வேலையை முடிக்க வேண்டிய காலம்—3 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்.—
15—9—1971 முதல்
25—9—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளித் தேதி—30—9—1971 மாலை 3 மணி வரை.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் மற்றும் நிபந்தனைகளின் இதர விவரங்களைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
**TWS. & DB.**
வீராணம் திட்ட சர்க்கிள்,
சென்னை-5.

(த. 22)

## ஏல விற்பனை

### தமிழ்நாடு தீயணைப்புத்துறை ஏல விளம்பரம்.

கண்டனம் செய்யப்பட்ட தீயணைப்பு இழுக்கும் மோட்டார் வண்டி ஸ்டுடிபேக்கர், 1957-ஆம் வருட மாடல், எம்.எஸ்.ஒய். 8853, கோயம்புத்தூர் ஸ்டேட் பாங்க் சாலையிலுள்ள கோயம்புத்தூர் தீயணைப்புத் துறை காம்பவுண்டில், 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு, பகிரங்கமாக ஏலம் விடப்படும். மேற்கண்ட ஊர்தியைக் கோயம்புத்தூர் தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம். ஏல நிபந்தனைகள் கீழே கையொப்பமிட்டவருடைய அலுவலகத்தில் பெறலாம்.

**ஏ. கே. இராமனுதன்.**
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
கோயம்புத்தூர் கோட்டம்.
(த.5·)

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

"சேலத்தில் உள்ள அரசினர் பிராந்திய அச்சகத்தில் 1971-72-ஆம் ஆண்டுக்குக் கழிவுக் காகிதங்களை வாங்கவும் அப்புறப்படுத்திக் கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளிகள்" என்று குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், இயக்குநர், எழுதுபொருள் அச்சகம், சென்னை-1, அவர்களால் 6-10-1971-ல் அல்லது அதற்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில், பதிவு அஞ்சல் ஒப்பந்தத்துடன், இயக்குநர், எழுதுபொருள் அச்சகம், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 என்ற முகவரிக்கு இயக்குநர் பெயரில் அனுப்ப வேண்டுமே தவிர, வேறு முறையில் அனுப்பலாகாது. மேற்கொண்டு விவரங்களுக்கு 8-9-1971 தேதியிட்ட தமிழ்நாடு அரசினர் அரசிதழைப் பார்க்க.

**ஆர். நாகராஜன்**
கூட்டு இயக்குநர்.
எழுதுபொருள் அச்சக இயக்குநர் அலுவலகம், சென்னை-1,
26—8—1971.
(த. 28)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

**ஒப்பந்த அறிக்கை எண் 3/71**

31 வகையான புத்தகங்களையும் பாரங்களையும், பிரிண்ட் செய்து சப்ளை செய்வதற்கு இதன் அடியில் ஒப்பமிட்டுள்ளவரால் மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் செய்தித்தாளில் விளம்பரம் செய்த பதினைந்தாவது நாள் மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றது.

ஒப்பந்தங்கள் அடங்கிய ஒவ்வொரு பிரதிக்கும் ஐந்து ரூபாய் வீதம் ரொக்கமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ தலைமைக் கணக்காளர்/செலவினம்—திருநெல்வேலி மின் அமைப்பு, திருநெல்வேலி-3 அவர்களுக்கு அனுப்பியும் ஸ்பெசிபிக்கேஷன் எண்ணைக்குறிப்பிட்டும், ஒப்பந்தப் படிவப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை, எந்தக்காரணத்தைக்கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. பண அஞ்சல்கள் முடிவுத் தேதிக்கு ஐந்து தினங்களுக்கு முன்பு வரை தான் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் படிவங்கள் சாதாரண அஞ்சலில் தான் மனுதாரர்களுக்கு அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் ஏற்படும் தவறுகளுக்கு மின் வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது. ஒப்பந்தப் படிவங்களுக்கு விண்ணப்பிக்கையில் ஸ்பெசிபிக்கேஷன் எண், ஒப்பந்த விலை செலுத்தியதற்கான ரசீது முதலியவற்றைத் தவறாது அனுப்பவேண்டும். மேற்படி ஒப்பந்தப் படிவங்கள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத் தக்கதல்ல.

ஒப்பந்தங்கள் பரிசீலிக்கப்படுகையில் நேரில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்கள் 1—9—1971 லிருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் கீழே ஒப்பமிட்டுள்ளவரை குறைந்த விலை ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது வேறு ஒப்பந்தப் புள்ளியையோ அனுமதிக்கத்தான் வேண்டும் என்று கட்டுப்படுத்தாது என்பதும் அறிவிக்கப்படுகிறது.

**மேற்பார்வை**
**மின்பொறியாளர்.**

(த. 25)



## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,

**சென்னை கிழக்கு டிவிஷன்**

எண் : எம்இ 4/289/71.

நாள் : 25—8—1971.

வியாசர்பாடி அருகே வடசென்னை புதூர்ந் திட்டத்தில் கீழ்க்கண்ட வேலைகளுக்காக, தனித்தனியாய் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் உறையின் மேலே வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் குறிக்கப்பட்டு, 4—10—1971 பிற்பகல் 3 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் வரிசை. | வேலையின் விவரம். | சுமார் மதிப்பு ரூபாய். | கட்டுத் தொகை. ரூபாய். | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (விற்பனை வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | நடுத்தர வருமானப் பிரிவு வகை இல்லங்கள் (1-ல் 6) வாடகைக்கான அடுக்கு வீடுகள் (Flats) டிசைன் 124ஏ/70படி இரண்டு பிளாக்குகள் கட்டுதல் (தொகுதி-1). | 2,46,000 | 3,700 | ரூ. 15 |
| 2 | ஷை (தொகுதி-2). | 2,46,000 | 3,700 | ரூ. 15 |
| 3 | குறைந்த வருமானப் பிரிவு வகை இல்லங்கள் (1-ல்6) வாடகைக்கான அடுக்கு வீடுகள் டிசைன் 152/70படி இரண்டு பிளாக்குகள் கட்டுதல் (தொகுதி-1). | 1,26,000 | 1,900 | ரூ. 10 |
| 4 | ஷை (தொகுதி-2) | 1,26,000 | 1 900 | ரூ. 10 |
| 5 | ஷை (தொகுதி-3) | 1,26,000 | 1,900 | ரூ. 10 |
| 6 | ஷை (தொகுதி-4) | 1,26,000 | 1,900 | ரூ. 10 |
| 7 | கடைகள் விருந்தினர் அறைகள் (மூன்று அடுக்கு) கட்டுதல் (எண்கள் 10). | 1,51,500 | 2,275 | ரூ. 10 |

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3·05 மணிக்குப் பிரிக்கப்படும். மேற்கொண்டு விவரங்களையும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு) அவர்கள் அலுவலகத்தில் உரிய விலையைச் செலுத்தி (இது திருப்பித் தரப்படுவதற்குரியதல்ல) 20—9—1971லிருந்து அலுவல் நாட்களில் காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 2மணிவரைபெற்றுக் கொள்ளலாம். எவ்விதக் காரணமும் கூறுமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்கக் கீழே கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

**டி. ஜகதீசன்**
நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு).

(த. 29)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

**தேசிய நெடுஞ்சாலை வட்டம்,, சென்னை-1.**

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 21-9-1971 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விபரம். | முன்வைப்புத் தொகை. |
|---|---|
| 1. விருதுநகர் மாற்றுப் பாதை சாலையில் கட்டப்படவிருக்கும் மேம்பாலத்துக்கு அணுகி சாலை அமைத்தல். வடக்கு (Ch 14725-விருந்து 15559 வரை) | 3,260 |
| 2. விருதுநகர் மாற்றுப்பாதை சாலையில் கட்டப்படவிருக்கும் மேம்பாலத்துக்கு அணுகி சாலை அமைத்தல். தெற்கு (Ch 15559-விருந்து 16739 வரை). | 2,225 |

ஒப்பந்தப்புள்ளிகள் 21-9-1971 அன்றே மாலை 3·15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலிய வற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசியநெடுஞ்சாலை கோட்டம், ராமநாதபுரம் அலுவலகத்தில் 15-9-1971 முதல் 20-9-1971 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 5·88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேல்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் ராமநாதபுரம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் 'ரெவினியூ டெபாஸிட்' என்ற தலைப்பின் கீழ், கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், ராமநாதபுரம் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

**டி. எம். ஏ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை),
சென்னை-1.

(த. 48)

## ஏல விற்பனை

### தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் பல ஜாதிகள்.

இடம் : அரசாங்க தடிமண்டி, நாகர்கோயில்.

தேதியும் நேரமும் : 17 & 18-9-1971 முற்பகல் 9·00.

அளவு : ஏறத்தாழ 1,500 கனமீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலிலுள்ள மண்டிச்சரக அலுவலருக்குவிண்ணப்பிக்கவும்.

**எஸ். கொண்டாஸ்,**
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென் பிரிவு.

(ந. 46)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### வேளாண்மைத் துறை

### ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் பொருட்டும், இனுங்கூர் அரசு விதைப் பண்ணையில் நீர் இறைப்பு வேலைகளுக்காக 20 எச். பி. மின்சார மோட்டார்கள் பம்பு செட்டுகளுடன் முழுமையாக, பல்வேறு அளவுகளில் ஜி.ஐ. டீஸ், ஏர் ரிலீஸ் வால்வுகள், ஸ்லூயிஸ் வால்வுகள், ஜி.ஐ. கேட் வால்வுகள், ஜி.ஐ. பைப்புகள், ஜி.ஐ. சப்ளிங்குகள், ஜி.ஐ. பெண்டுகள், பல்வேறு அளவுகளில் ஆர். சி. சி. பிரஷர் பைப்புகள் முதலியன சப்ளை செய்வதற்காக 15—10—71 மாலை 3-00 வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மேற்கண்ட பொருட்களின் வரையளவு விவரங்கள், ஒப்பந்தப் புள்ளி வடிவங்கள், பத்திரங்கள் முதலியவைகளை உதவி வேளாண்மைப் பொறியாளர் (மண் வளப் பாதுகாப்புத் திட்டம்), சாலை ரோடு, திருச்சி-3 அவர்களிடம் ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ ரூ. 3 (ரூபாய் மூன்று மட்டும்) அத்துடன் 3 சத விகித விற்பனை வரியும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். (இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.)

ஒப்பந்தப் புள்ளிகள் அறிவிப்பு மூலம் ஒத்தி வைக்கப்பட்டாலொழிய அதே நாளில் மாலை 4-00 மணிக்கு, கீழே கையொப்பமிட்டவரால், அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**எஸ். சவடமுத்து,**
கோட்ட வேளாண்மைப் பொறியாளர், திருச்சி.

(த56)

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு வனத்துறை

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட மைலார் ரப்பர் கூப்புகளிலிருந்து அவைகளுக்கெதிரே குறிப்பிட்டுள்ள கனமீட்டர் தடிகளை ஏற்றி நாகர்கோவிலிலுள்ள அரசு வன மண்டிக்குச் சேர்ப்பிக்க அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 30—9—1971-ஆம் நாள் மதியம் 12·00வரை பாளையங்கோட்டையிலுள்ள திருநெல்வேலி தென்பிரிவு மாவட்ட வன அலுவலரால் கோரப்படுகின்றன. இதன்பேரில் விவரங்களுக்கு குலசேகரத்திலுள்ள மரம்வெட்டுப்பிரிவு வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

| கூப்பு எண். | | கனமீட்டர். |
|---|---|---|
| மைலார் 60 | .. .. | சுமார் 420 |
| மைலார் 61 | .. .. | சுமார் 515 |
| மைலார் 62 | .. .. | சுமார் 540 |

**எஸ். கொண்டாஸ்,**
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென்பிரிவு.

(ந. 39)

## பால் விற்பனை

இந்தப் பண்ணையின் தேவை போக, மீதமுள்ள எருமைப் பால் காலை, மாலை வாங்க விரும்பும் நபர்கள், லிட்டர் என்ன விலைக்கு வாங்குவார்கள் என்பதை முத்திரையிடப்பட்ட உறையில் 25-9-1971 மாலை 3·00 மணிக்குள் கண்காணிப்பாளர், ஆட்டுப்பண்ணை, காட்டுப் பாக்கத்திற்கு அனுப்பவேண்டும். பால் வாங்குபவர், வாங்கும் ஒரு மாத பால் பணத்தை, முன் பணமாகச் செலுத்த வேண்டும். தற்சமயம் காலை 30 லிட்டர், மாலை 20 லிட்டர் பால் கிடைக்கும்.

**கண்காணிப்பாளர்,**
ஆட்டுப்பண்ணை,
காட்டுப்பாக்கம்.

(த52)

## வேலை வாய்ப்பு

ஆயுதப்படை உதவி இளம் ஆய்வாளர் பதவிக்குக் கீழ்க்கண்டுள்ள தகுதி உடையவர்கள் திருச்சி காவல் துறை கண்காணிப்பாளருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும். குறிப்பிட்ட விண்ணப்பத்தாள் திருச்சி காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அதற்காக 25 காசு தபால்தலை ஒட்டிய அவர்களுடைய முகவரி எழுதப்பட்ட உறையுடன் திருச்சி காவல் துறை கண்காணிப்பாளருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட விண்ணப்பத்தாள் பூர்த்தி செய்யப்பட்டு 30-9-1971-க்குள் திருச்சி காவல் துறை கண்காணிப்பாளருக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

காலியுள்ள பதவி—2 (இரண்டு)

1. தகுதி—

எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டும். பாஸ் செய்திருக்க வேண்டுமென்று அவசியமில்லை.

2. வயது—

1-10-1971-ல் 18 வயது முடிந்திருக்க வேண்டும். 25 வயது முடிந்திருக்கக் கூடாது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் மலைச் சாதியினருக்கும் 30 வயது முடிந்திருக்கக் கூடாது.

3. உயரம்—

168 செ. மீட்டருக்குக் குறையக் கூடாது.

4. மார்பு—

சுற்றளவு மூச்சு இழுத்த நிலையில் 86 செ. மீட்டருக்குக் குறையக்கூடாது. குறைந்த அளவு மார்பு விரிவு 5 செ.மீ. இருக்கவேண்டும்.

5. மொழி—

தமிழ் தெரிந்திருக்கவேண்டும்.

6. கட்டணம்—

ரூ. 10 கஜானாவில் செலுத்தி அதற்குரிய ரசீது அனுப்ப வேண்டும்.

**காவல்துறை**
**கண்காணிப்பாளர்**
**திருச்சிராப்பள்ளி.**

(த-47)

## பதனிடுதல்

### தமிழ்நாடு அரசு

### மீன் துறை

### அறிவிப்பு

சென்னையை அடுத்துள்ள எண்ணூரில் அரசுக்குச் சொந்தமான உறைபதனச்சாலை (Freezing Plant) தற்பொழுது மீன் துறையினரால் நடத்தப்பட்டு வருகிறது. மீன்கள் மற்றும் இறால் முதலியவைகளை இச்சாலையில் பதனிட விரும்புவோர் இதன் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கட்டணம் மற்ற விவரங்களுக்குக் கீழ்க்கண்ட அதிகாரியை அணுகவும் :—

"மீன் துறை உதவி இயக்குநர், செங்கல்பட்டு இருப்பு சென்னை, நிர்வாக அலுவலகக் கட்டடங்கள், சென்னை-6."

**மீன்துறை இயக்குநர்,**
**சென்னை-6.**

(த53)

## ஒப்பந்தப்புள்ளி

61

### தமிழ்நாடு அரசு தொழில் வணிகத்துறை.

தமிழ்நாடு அரசுக்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், தொழில் துறையின் கட்டுமானப் பிரிவு மற்றும் இதர துறைகளின் உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில் வணிகத் துறை அவர்களால் 6—10—71 மாலை 3-00 மணிவரை வரவேற்கப் படுகின்றன. கீழே குறிப்பிட்டுள்ளபடி ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசி நாள் அன்று மாலை 3-10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப் படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. ரூ. | வேலையை முடிக்க வேண்டிய காலம். | பத்திரங்கள் கிடைக்கும் தேதி. | ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குரிய கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| 1 மேட்டூரில் மேம்படுத்தப் பட்ட பிளாட்டுகளில் 34,09,500 லிட்டர் (7,50,000 காலன்) கொள்ளளவுள்ள தரைமட்ட ரிசர்வாயர் கட்டுதல். | 4,500 | 10·40 | 6 மாதம். | 20—9—1971. | 6—10—1971 |

1. ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்), வேலூர் அவர்கள் அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் 20—9—1971 முதல் விற்பனைக்குக் கிடைக்கும்.

3. விற்பனை வரியும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையும் சேர்ந்த ரூபாய் 10·40-ஐ (எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ " XXIX Industries Other Receipts " என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம், எண் 4, தியாகராஜபுரம், வேலூர், அவர்கள் கணக்கில் கட்டவேண்டும்.

4. கட்டுத் தொகையை சலான் வடிவிலும், ஷெட்யூல்டு பாங்குகளின் ' கால் ரசீது டெப்பாசிட் ' வடிவிலும் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம், வேலூர் அவர்கள் கணக்கில் செலுத்தப்பட்ட கட்டுத் தொகைக்குரிய ஷெட்யூல்டு பாங்குகளின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசின் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரிய பாண்டுகளும் விற்பனை விலையில் 5 சதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் கருத்தறிந்தே தேசிய சேமிப்புப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. வேலையை ஏற்று முடிக்க விரும்பும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள், பெரிய கட்டட வேலைகளின் கட்டுமானத்தில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மேத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்
கட்டுமானம்.

சென்னை-2.
(த 61)



## தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

### ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், புரசைவாக்கத்தில் உள்ள சாலைமாநகரில் பல அடுக்குக்கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்குமுத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 21-9-1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தப்புள்ளி வைத்து அனுப்பும் உறையின் மீது, ஒப்பந்ததாரர்களின் பெயரையும் வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு ரூ. | கட்டுத்தொகை ரூ. | ஒப்பந்தப் பத்திர விலை. |
|---|---|---|---|---|---|
| | | | | L.S. | |
| 1 | I | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி1, பி2. | 1,86,000 | 2,800 | |
| 2 | II | ஷை பி3, பி4 | 1,86,000 | 2,800 | |
| 3 | III | ஷை பி5, பி8, பி9. | 2,79,000 | 4,200 | |
| 4 | IV | 24 குடியிருப்புகள் கொண்ட பி6, பி7, 16 குடியிருப்புகள் கொண்ட சி. | 2,48,000 | 3,720 | |
| 5 | V | 32 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்புகள் A1, A2. | 2,47,000 | 3700 | |
| 6 | VI | 1·15 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கம் 21 மீட்டர் உயரத்தில் கட்டுதல். | 32,500 | 500 | |
| 7 | VII | 6·1 மீட்டர் விட்டம் கொண்ட கிணறு கட்டி இறக்குதல். | 25,000 | 375 | |

வரைபடங்களையும் ஒப்பந்தப் பத்திரங்களையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 14-9-1971 முதல் 20-9-1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 21-9-1971 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் காரணமின்றி நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

தாண்டவராய சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
(த 43)

நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம்-3.

### ஒப்பந்தப் புள்ளி

#### தமிழ்நாடு மின்சார வாரியம்.

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை 6/71-72.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான பாரங்களையும், ஏடுகளையும் அச்சடித்துக் கொடுப்பதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை 30-9 1971 ஆம் நாள் பிற்பகல் 4·00 மணியளவில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றது.

விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் பிரதிகளைப் பெற ரூ. 3 (ரூபாய் மூன்று மட்டும்) (வரிகள் உள்பட) கட்டணத்தை நேரிலோ அல்லது பணவிடைத்தாள்கள் மூலமாகவோ தலைமைக் கணக்காயர், செலவினப் பகுதி, மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பைக்காரா மின் திட்டம், கோயம்புத்தூர்-12 அவர்களுக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

காலம் கடந்து வரும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எவ்விதக் காரணமும் இல்லாமல் ஒப்பந்தப்புள்ளிகளைத் தள்ளுபடி செய்யவோ அல்லது பகிர்ந்து கொடுக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்,
பைக்காரா மின் திட்டம்,
கோயம்புத்தூர்-12.
(த50)

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்.,
## 34, அண்ணா சாலை, சென்னை-2.

| | | |
|---|---|---|
| வேலையின் பெயர் | .. | உதகமண்டலத்தில் பொது அறை பிளாக் கட்டுதல். |

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மத்தியப் பொதுப் பணித்துறை முதலியவைகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப் புள்ளி நாளும், நேரமும். | | 30—9—1971 மாலை 3-00 வரை. |
| ஒப்பந்தப் புள்ளிகளைத் திறக்கும் நாள். | | 30—9—1971 மாலை 3-30 |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை. | | ரூ. 30 + ரூ. 1·10 வி.வ. + அஞ்சல் செலவு ரூ. 3·00. |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம். | | 15—9—1971 முதல் 29—9—1971 மாலை 4-30 வரை. |
| ஒப்பந்த வடிவம் | .. | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை | .. | ரூ. 11,100. |

கட்டுத் தொகை, கிராஸ் செய்யப்பட்ட பாங்க் டிராப்ட் வடிவில் " தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட் சென்னை"க்குச் சேர்ப்பிக்கப்படவேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான கட்டணத்தை ரொக்கமாகவோ, தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்டுக்கு பாங்க் டிராப்ட் ஆகவோ செலுத்தலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணம், திருப்பித் தரப்படமாட்டாது. நிறுவனத்தின் திட்டப் பொறியாளரிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களைப் பெறலாம்.

ஏ. எஸ். அஹ்லுவாலியா,
(த.82) நிர்வாக இயக்குநர்.

## ஏல விற்பனை

28—9—1971-ஆம் தேதி காலை 11-00 மணிக்கு கோவை மத்தியச் சிறையில் கீழ்க்காணும் உபயோகத்தில் இல்லாத இயந்திரங்கள் ஏலத்தில் விடப்படும்.

1. Cloth calendering machine (Finishing plant—without Motor) complete .. 1
2. Rotary Oil Mill (Pestle and Mortor) (without motoı) 1

2. ஏலத்தில் பங்கு பெற விரும்புபவர்கள் முன்பணம் ரூ. 500 பிணையத் தொகை செலுத்த வேண்டும்

3. இந்த ஏலத்தைப் பற்றிய இதரத் தகவல்களை கோவை மத்தியச் சிறைக் கண்காணிப்பாளரிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். வாசுதேவன்,
கோவை மத்திய சிறை, கோவை, கண்காணிப்பாளர்.
3—9—1971.
(த.69)



## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்.,
## 34, அண்ணா சாலை,
## சென்னை-2.

| | | |
|---|---|---|
| வேலையின் பெயர் | .. | ' மைல்டு ரவுண்ட்ஸ், வழங்கல் குறித்து. |

எம்.எஸ். ரவுண்ட்ஸ் டெஸ்ட்டட் ஐ. எஸ். 226/62—100 டன்கள் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் தர கடைசி நாள் 30—9—1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, திட்டப் பொறியாளர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட் அவர்களுக்கு மனுச் செய்து இலவசமாகப் பெறலாம்.

ஏ. எஸ். அஹ்லுவாலியா
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்.
(த.81)



## தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை.

ஒரு லோகோ டீசல் என்ஜின் எண் 3,10,030, 30 குதிரை சக்தி கொண்டது, எப்படி, எங்கே உள்ளதோ அதே நிலையில் 30—9—1971 காலை 11-00 மணி அளவில் கல்லணைக் கால் வாய்க் கோட்டத்தைச் சேர்ந்த முதல் சிறு கோட்ட (அரண் மனையில் உள்ளது) பொதுப் பணித்துறை அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். வண்டியைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். பொதுப் பணித் துறையினருக்கு ஏலத்தை ரத்து செய்யவோ தள்ளி வைக்கவோ, முழு உரிமை உண்டு. இது பற்றி மேலும் தகவல் பெற விரும்புவோர் தஞ்சையில் அரண் மனையில் உள்ள கல்லணைக் கால் வாய்க் கோட்டத்தைச் சேர்ந்த முதல் சிறு கோட்ட உதவிப் பொறியாளர் அவர்களை அணுகவும்.

இராமலிங்கம்,
நிர்வாகப் பொறிஞர்,
கல்லணைக்கால்வாய்க் கோட்டம்,
(த-62) தஞ்சை



## தமிழ்நாடு மின்சார வாரியம்

## தென்னார்க்காடு மின் அமைப்பு

### குத்தகை அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகப் பொருள்களைக் கொண்டுசெல்வதற்கான 1971–72 ஆண்டு குத்தகைக்கான மூடி முத்திரையிட்ட சாற்றுக் குறிப்பெண்ணும், தேதியும் குறிப்பிட்ட விலையொப்பங்கள் ( Tenders ) இவ்வலுவலகத்தில் 25—9—1971 நண்பகல் 12·00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், சாற்றுக் குறிப்பு எண்ணும். | | வேலையின் குறிப்பு. | வேலையின் உத்தேசத் தொகை. ரூ. | குத்தகைக் காலம். |
|---|---|---|---|---|
| 1 | TRPT-I/71-72 (சிமெண்ட் கம்பங்கள் கிரில்கள்தவிர்ந்தமற்ற). | 1971-72 ஆண்டுக்கான பொருள்களை ஏற்றுதல் இறக்குதல் உள்பட பல்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லுதல். | 1,00,000—00 | ஒப்பந்தத் தேதியிலிருந்து 31—3—1972 வரை. |
| 2 | TRPT-II/71-72 | 1971-72 ஆண்டுக்கான சிமெண்ட் கம்பங்கள் கிரில்கள், ஆகியவற்றை ஏற்றுதல் இறக்கிடுதல் உள்பட வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லுதல். | 1,00,000—00 | ஷை |
| 3 | TRPT-III/71-72 | 1971-72 ஆண்டுக்கான பொருள்களை விழுப்புரம் மத்திய பண்டக சாலை, விழுப்புரம் புகை வண்டி நிலையக் கிடங்கு ஆகியவற்றுக் கிடையே ஏற்றுதல் இறக்குதல் உள்படக் கொண்டு செல்லுதல். | 25,000 | ஷை |

விலைப்புள்ளிகளைக் குறித்து அனுப்புவதற்குரிய நமூனா ஒன்று அடங்கிய மேற்கண்ட ஒப்புச் சாற்றுக் குறிப்புப்பிரதிகள் ( Copies of Specifications ) வேண்டுவோர், ஒப்புச் சாற்றுக் குறிப்புப்பிரதி ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 (திருப்பித்தரப்படமாட்டாது) தலைமைக் கணக்கர், தென்னார்க்காடு மின் அமைப்பு, விழுப்புரம் என்ற முகவரிக்குப் பண அஞ்சல் மூலமாகவோ ( Money order ) அல்லது நேரிலோ செலுத்தி 15—9—1971 முதல் 24—9—1971 வரை அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்புச்சாற்றுக் குறிப்புப்பிரதிகள் வாங்குவதற்கான பணத்தைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும், தேவையான ஒப்புச் சாற்றுக் குறிப்பெண்ணையும் (Specification No.) தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### ஒப்பந்த அறிவிப்பு.

*1642 எஸ். டி. 2, தேதி 1—9—1971*

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம் சார்பாக கீழ் வரும் பணிக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள், 8—10—1971 மாலை 3·00 மணி முடிய, கோவை பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம் 25-1, மூன்ருவது வீதி, டாட்டாபாட், கோவை-12-ல் வரவேற்கப்படுகிறது. மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 4·00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளாலோ, வரப்பெற்ற ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் .. .. | சேலம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—இரண்டாம்நிலை—இரண்டாம் கட்டம் (பகுதி-2)—20, 24 அங்குல கிராவிட்டி மெயின் பைப்புகளைப் பதித்தலும் இணைத்தலும், மற்ற வேலைகள் செய்தலும். |
| 2 | ஒப்பந்தமுறை .. .. | மொத்தத் தொகை (L.S.) |
| 3 | பிணைப்பணம் .. .. | ரூ. 8,960 (ரூபாய் எட்டாயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபது மட்டும். |
| 4 | பணி முடிக்க வேண்டிய காலம். | ஆறு மாதங்கள். |
| 5 | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை | ரூ. 10·35 (விற்பனைவரி உள்பட). |
| 6 | ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் தேதி. | 10—9—1971 முதல் 6—10—1971 முடிய |

மேற்படி பணிக்கான ஒப்பந்தப் பத்திரங்களை, நிர்வாகப் பொறியாளர், 28, ஔவையார் தெரு, சுப்ரமணியம் நகர், சேலம்-5 விலாசத்துக்கு, மணியார்டர் மூலமாகவோ நேரில் பணம் செலுத்தியோ பெற்றுக் கொள்ளலாம்.

பிணைப் பணத்தை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் " கேட்பு வரைவோலை " சேலம் நிர்வாகப் பொறியாளரின் சார்பில் செலுத்தவோ அல்லது கஜானுவில் சேலம் நிர்வாகப் பொறியாளர் பி.டபிள்யூ. III. O.R. தலைப்பில் செலுத்தவோ செய்யலாம். அங்கீகாரம் செய்யப்பட்ட வங்கிகளின் பொறுப்புறுதிகள் பிணைப் பணத்திற்காக ஒப்புக் கொள்ளப்படும். பிணைப்பணம் இணைக்கப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளருக்கு ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது அனைத்து ஒப்பந்தத்தையோ காரணம் இல்லாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்.**

(தூ 85)



## பயிற்சி

### அறிக்கை.

சைதாப் பேட்டை ஆசிரியர் கல்லூரி, புதுக்கோட்டை, கொமாரபாளையம் ஆகிய பகுதிகளிலுள்ள அரசினர் பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவைகளில் தமிழ் ஆசிரியர்கள் பயிற்சி வகுப்பில் சேருவதற்காக ஆண் மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. பயிற்சிக் காலம் 1971 நவம்பர் 1 முதல் 1972 மார்ச் 31 வரை 5 மாதங்கள்.

மனுக்களைப் பெறுவதற்குக் கடைசி நாள் 18—9—1971. மனு வடிவங்களையும் இதர குறிப்புகளையும் முதல்வர், ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை அலுவலருக்கு எழுதி, சுய விலாசம் எழுதிய 20 காசுகள் அஞ்சல் வில்லை ஒட்டிய உறையை உடன் வைத்தனுப்பி இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**கல்லூரிக் கல்வி இயக்குநர்.**

(த.75)

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

அறிஞர் அண்ணு நகர் திட்டம்
அறிக்கை நாள் : 2—9—1971.

அறிஞர் அண்ணு நகரில், உயர் நிலைப் பள்ளிகள், தொடக்கப்பள்ளிகள், நர்சரி பள்ளிகள், மருத்துவமனைகள், பெட்ரோல் பங்குகள் முதலியவைகளுக்கான மனையிடங்கள், வாடகை—கிரய அடிப்படையில் அல்லது கிரயத்துக்கு ஒதுக்கப் பெறுதற்கு உள்ளன. இந்த ஒதுக்கீடு கொடுப்பதற்கான மனுக்கள் 15-10-1971 வரை வரவேற்கப்படும். மனு வடிவங்களையும் இதர குறிப்புகளையும், நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், அறிஞர் அண்ணு நகர், கோட்டம் சர்குலர் பில்டிங், அண்ணு நகர் சென்னை-40-ல் ரு. 10 (ரூபாய் பத்து மட்டும்) செலுத்தி 15—9—1971 லிருந்து பெற்றுக் கொள்ளலாம்

**எஸ். பி. பழனிவேல்,**
*நிர்வாகப் பொறியாளர்*

(த.73) (அ.அ.ந.)

## வேலைவாய்ப்பு

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

பொதுப் பணித் துறை, தொழில் துறை (நிர்மாணப் பிரிவு) நெடுஞ்சாலைகிராமப் பணித் துறை, ஆகியவற்றின் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வையாளர்கள், இளநிலைப் பொறியாளர்களை நிரந்தரமாக்குதல் (Regularisation).

பொதுப்பணித்துறை, தொழில் துறை (நிர்மாணப் பிரிவு), நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை, ஆகியவற்றில் ஓராண்டுக்குக் குறையாமல் அதாவது 3-4-1971-ல், ஓராண்டுக் காலம் பணியாற்றியிருக்கும், மேற்பார்வையாளர்கள், இளநிலைப்பொறியாளர்களிடமிருந்து விண்ணப்ப மனுக்கள் 2-11-1971 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

குறிப்பு.—3-4-1971 அன்று வெளியிடப்பட்ட கழகத்தின் அறிவிப்பையொட்டித் தற்காலிக வேலைகளை நிரந்தரமாக்க மனுச் செய்திருந்தவர்கள், மீண்டும், இதற்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

தகுதி I.—பொதுப்பணித்துறை தொழில் துறையின் நிர்மாணப் பிரிவிலும் மேற்பார்வையாளர்களாகவும், இளநிலைப் பொறியாளர்களாகவும் நியமிக்கப்பட வேண்டியவர்களுக்கு:—

1. பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவினரால், நிதி உதவிக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட, ஏதாவது பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிலையத்தில் பெற்றுள்ள பொறியியல் பட்டம் (சிவில், மெக்கானிக்கல் அல்லது எலக்ட்ரிகல்)

(அ) கிண்டி பொறியியல் கல்லூரியின் பொறியியல் பட்டம் (சிவில், மெக்கானிக்கல் அல்லது எலக்ட்ரிக்கல்)

அல்லது

(ஆ) கிண்டி பொறியியல் கல்லூரியின் எல்.சி.இ. டிப்ளமா அல்லது மேல்நிலை உதவியாளர் டிப்ளமா (Upper Subordinate).

அல்லது

(இ) சென்னை மாநில தொழில் நுணுக்க, கல்வி, பயிற்சி வாரியம் அளித்த எல். சி. இ. அல்லது எல்.எஸ்.இ. டிப்ளமா.

அல்லது

(ஈ) ஏ. எம். ஐ.இ. (இந்தியா) தேர்வில் (ஜியோடெசி) பாடத்தைக் கூடுதல் பாடமாகவோ, அல்லது விருப்பப் பாடமாகவோ எடுத்து, ஏ, பி பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்கள், கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மனுச் செய்யலாம்.

1. 'ஸர்வே' பயிற்சியில் ஓராண்டுக்குக் குறையாமல், பயிற்சி பெற்றதற்கு ஆதாரம் காட்டப்பட வேண்டும்; அல்லது

2. பொதுப் பணித் துறையில் ஓவர்சியராகவோ அல்லது மேற்பார்வையாளராகவோ, வேலை பார்த்திருக்க வேண்டும்; அல்லது

3. கிண்டி பொறியியல் கல்லூரியில் மேல் நிலைப் பணியாளர் (Upper Subordinate) அல்லது எல்.சி. இ. டிப்ளமா பெற்றவராகவோ, அல்லது, சென்னை மாநில தொழில் நுணுக்க, கல்வி, பயிற்சி வாரியத்தினுல் அளிக்கப்பட்ட எல்.சி.இ. அல்லது எல்.எஸ்.இ. பட்டம்பெற்றவராகவோ அல்லது இதற்கு இணையான வேறு ஏதாவது ஒப்புதல் அளித்த தகுதி பெற்றவராகவோ இருக்க வேண்டும்.

குறிப்பு.—இளநிலைப் பொறியாளராக கவனிக்கப் படுவதற்கு விண்ணப்பம் செய்பவர்கள், ஏ. எம்.ஐ. இ. (இந்தியா) தேர்வில் ஏ. பி, பிரிவுகளில் தேர்ச்சி அடைந்தவர்கள் தேர்ச்சி அடைவதற்கு முன்பாகவோ அல்லது தேர்ச்சி அடைந்த பின்னரோ, மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல், வேலை பார்த்த அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

அல்லது

உ. சென்னை மாநில, தொழில் நுணுக்க, கல்வி, பய்ற்சி வாரியத்தின் எல். எம். இ. அல்லது எல். ஏ. இ. டிப்ளமா பெய்றவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—சென்னை மாநில, தொழில் நுணுக்க, கல்வி, பயிற்சி வாரியத்தினர் அளித்த எல். எம். இ. அல்லது எல். ஏ. இ. டிப்ளமா வைத்திருப்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் மேற்பார்வையாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் படும் போது, போதுமான அளவு வேலை அனுபவம் உள்ளவர்கள் என்று சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளர்களால் சான்றிதழ் வழங்கப்பட்டால்தான், நியமனத்திற்குக் கவனிக்கப் படுவார்கள்.

மற்றும்

டிப்ளமா பெற்றபின் குறைந்தது இரண்டு ஆண்டுக்காலமாவது பொறியியல் பணியில் வேண்டிய அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.

II. நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறையில், மேற்பார்வையாளர்கள், இளநிலைப் பொறியாளர்களை நியமித்தல்—

1. பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவினரால், நிதி உதவிக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட ஏதாவது பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிலையத்தில் பற்றுள்ள பொறியியல் பட்டம் (ஹைவேஸ், சிவில், அல்லது மெக்கானிக்கல்)

அல்லது

2. (அ) கிண்டி, பொறியியல் கல்லூரியின் பொறியியல் டிப்ளமா.

அல்லது

(ஆ) கிண்டி, பொறியியல் கல்லூரியின் மேல்நிலை உதவியாளர் அல்லது எல். சி. இ. டிப்ளமா.

அல்லது

(இ) மாநில, தொழில் நுணுக்க கல்வி, பயிற்சி வாரியம், சென்னையினுல் அளிக்கப்பட்ட எல்.சி.இ. அல்லது எல்.எ.இ. டிப்ளமா.

அல்லது

(ஈ) கிராம உயர் நிலைக் கல்விக்கான தேசிய மன்றம் (National Council for Rural Higher Education) அளித்த சிவில் மற்றும், கிராமப் பொறியியல் டிப்ளமா.

அல்லது

(உ) சென்னை மாநில, தொழில் நுணுக்க, கல்வி, பயிற்சி வாரியத்தினுல் வழங்கப்பட்ட ஆட்டொமொபைல்ஸ் அல்லது மெக்கானிக்கல் பொறியியல் பட்டம்.

அல்லது

(ஊ) ஏ. எம். ஐ. இ. (இந்தியா) தேர்வில், ஏ. பி, பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் கீழ்க் கண்ட நிபந்தனைகளுக்குட்படுவார்கள்.

1. மனுதாரர்கள் கீழ்க் கண்ட பாடங்களை எடுத்திருக்க வேண்டும். 6 (எ) தாளில், A பிரிவில்

(1) Theory of Structures and Strength of Materials.

(2) Theory of Design of Structures.

(3) Geodesy.

(iv) Roads and Hydraulics and Hydraulic Machinery.

2. ''ஸர்வே''யில் ஓராண்டுக்குக் குறையாமல் பயிற்சி பெற்றுள்ளதற்கான ஆதாரம் காட்ட வேண்டும் ; அல்லது

3. பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறையில் ஓவர்சியராகவோ அல்லது மேற்பார்வையாளராகவோ, ஓராண்டு பணியாற்றியிருக்க வேண்டும், அல்லது

4. கிண்டி பொறியியல் கல்லூரி அளித்துள்ள மேல் நிலை உதவியாளர் அல்லது எல்.சி.இ. டிப்ளமா அல்லது சென்னை, மாநில தொழில் நுணுக்க, கல்வி, பயிற்சி வாரியத்தினரால் அளிக்கப்பட்ட டிப்ளமா அல்லது கிராம உயர் நிலைக்கல்விக்கான தேசியமன்றத்தினால் அளிக்கப்பட்ட சிவில் மற்றும், கிராமப் பொறியியல் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—இளநிலைப் பொறியாளர்களாகக் கவனிக்கப்படுகிறவர்கள், மேலே 6ல் குறிப்பிட்டுள்ள தகுதியைப் பெற்றிருப்பதோடு, பல்கலைக் கழகநிதிஉதவிக் குழுவிடம் ஒப்புதல் பெற்ற ஏதாவது நிதி உதவி பல்கலைக் கழக நிறுவனத்தில், இண்டர்மீடியட் தேர்வில் தேர்ச்சி பெற்றவராகவோ அல்லது, அதற்கு இணையாக மாநில அரசினால் ஒப்புதல் பெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதோடு, ஏ. எம். ஐ. இ. (இந்தியா)தேர்வில், ஏ, பி. பிரிவுகளில்தேர்ச்சிபெற்ற பின் குறைந்தது நான்கு ஆண்டுகளாவது, அனுபவம் பெற்றிருக்க வேண்டும்

மற்றும்.

டிப்ளமா பெற்ற பின் குறைந்தது 2 ஆண்டுகளாவது, பொறியியல் பணியில் வேலை பார்த்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

இந்தப் பதவிகளின் சம்பள விவரம்—

1. மேற் பார்வையாளர்: மாதம் ரூ. 325-15-475-20-575, 25-650.

2. இளநிலைப் பொறியாளர்—மாதம் ரூ. 400-15-475-20-575-25-650.

முழுவிவரங்களுக்கும்,விண்ணப்பப் படிவங்களுக்கும், செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வுக் கழகம், அண்ணா சாலை-சென்னை-2 என்ற முகவரிக்கு வேலையின் பெயரைக்குறிப்பிட்டு, 35 காசு அஞ்சல் தலை ஒட்டப்பட்டு, குறைந்தது 23 செ. மீ. நீளமுள்ள உரையில், நூலஞ்சல் என்று குறிப்பிட்ட உறையை உடன் வைத்து எழுத வேண்டும்.

(த. 87)

---

## பயிற்சி

---

### லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

பெண்களுக்கான தமிழ் ஆசிரியர் பயிற்சி வகுப்புகளில் சேர்த்தல்.

லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி, திருவல்லிக்கேணி, சென்னை-5-ல் தமிழ் ஆசிரியர் பயிற்சி வகுப்புகளில் சேர பெண் மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. வகுப்பு, 1971 நவம்பர் 1-ல் தொடங்கும்.

மனுக்கள், கல்லூரி முதல்வர், லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி, சென்னை, அவர்களுக்கு 1971 அக்டோபர் 1-க்குள் வந்து சேரவேண்டும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு சுய விலாசமிட்ட 20 காசு அஞ்சல் வில்லை ஒட்டிய உறையை உடன் வைத்து, முதல்வர், லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி, சென்னை அவர்களுக்கு எழுத வேண்டும்.

கல்லூரிக் கல்வி இயக்குநர்

(த 67)

---

## பயிற்சி

---

அனைத்திந்தியப் பணிகளுக்கான

புகுமுக—தேர்வு பயிற்சி நிலையம்

சென்னை-35.

ஐ. ஏ எஸ்., ஐ. பி. எஸ்., தேர்வுக்கான பயிற்சி அளிப்பதற்காகத் தாழ்த்தப்பட்டவர்கள், மலை சாதிப் பழங்குடியினர், அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர், நாடோடி மற்றும் ஓரளவு நாடோடிகளாக வாழும் பழங்குடியினர் ஆகியவர்களிடமிருந்து, மேற்கூறிய பயிற்சி நிலையம் மனுக்களை வரவேற்கின்றது. உணவு, உறைவிடச் செலவு, கற்பிக்கும் செலவு ஆகியவைகளை அரசே ஏற்றுக் கொள்ளும். பெண்களுக்கான தங்கும் வசதி, சேப்பாக்கத்தில் உள்ள மாநிலக் கல்லூரி பெண்கள் விடுதியில் கிடைக்கும். மனுக்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 30—9—1971.

2. பயிற்சியில் சேர்வதற்குக் கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

(1) இரண்டாம் வகுப்பில் தேர்வு பெற்ற பட்டதாரிகளாகவோ அல்லது கலை, விஞ்ஞானப் பாடங்களில் பட்ட மேல்படிப்புப் பட்டம் பெற்றவர்களாகவோ இருக்க வேண்டும். பி. எல். பட்டம் பெற்றவர்களும் மனுச் செய்யலாம்.

(2) 21 வயது அடைந்தவர்களாகவும் ஆனால் 1—8—1972 அன்று 29 வயது அடையாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

(3) தாழ்த்தப்பட்ட மலை சாதி வகுப்பு, அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு நாடோடி மற்றும் ஓரளவு நாடோடிகளாக உள்ள வகுப்பு ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு, நாடோடி மற்றும் ஓரளவு நாடோடிகளாக வாழும் வகுப்பு ஆகியவற்றைச் சார்ந்தவர்களிடமிருந்து பயிற்சிக்கு இருவர் சேர்த்துக் கொள்ளப்படுவர். அவர்களின் உச்சவரம்பு வயது 24.

3. பயிற்சியில் சேர்வதற்கு இதற்கெனத் தனியே உள்ளே வடிவம் மூலம் மனுச் செய்ய வேண்டும். இப்படிவத்தை முதல்வர் புகுமுக—தேர்வுப் பயிற்சி நிலையம் எண் 22, மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை-35 அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவர்களிடமிருந்து மனுவையும், தகவல் தொகுப்புகளையும் பெற (1) தாழ்த்தப்பட்ட வகுப்பா அல்லது மலை சாதி பழங்குடி வகுப்பா அல்லது அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பா நாடோடிவகுப்பா அல்லது ஓரளவு நாடோடிகளாக வாழும் பழங்குடி வகுப்பா என்பதையும், (2) தேர்வு பெற்றுள்ள பட்டத் தேர்வு, (3) பிறந்த தேதி, 1—8—1972-ல் வயது ஆகியவற்றையும் குறிப்பிட்டு எழுதி, ரூபாய் 1·50.க்கு அஞ்சல்தலை ஒட்டப்பட்ட சுய முகவரியுள்ள உறையையும் வைத்து அனுப்ப வேண்டும்.

முதல்வர்,

புகுமுக-தேர்வு பயிற்சி நிலையம்,

(த. 80) சென்னை-35.



---

## ஒப்பந்தப் புள்ளி

---

### தமிழ்நாடு அரசு

பொதுப் பணித் துறை,
சென்னை செங்கற்பட்டு வட்டம்

ஒப்பந்தப் புள்ளி ஒத்திவைப்பு அறிக்கை.

வேலையின் பெயர் : கிண்டி, கிங் நிலையத்தில் கூடுதல் விலங்கு விடுதி கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி தர கடைசி நாள் 28-8-1971 மாலை 3-00 மணி என்று இருந்த கெடு 24-9-1971 மாலை 3-00 மணி வரை ஒத்தி வைக்கப் படுகிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், சென்னை- செங்கற்பட்டு சர்க்கிள், பொதுப் பணித் துறை, சென்னை-5-ல் 15-9-1971லிருந்து 22-9-1971 வரை எல்லா அலுவல் நாட்களிலும் அலுவல் நேரத்தில் கிடைக்கும்.

இதர நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

பி. கே. கந்தசாமி,

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கற்பட்டு வட்டம்

(த. 79)

---

## பயிற்சி

---

### அறிக்கை

நவம்பர் 1971-ல் நடைபெறவிருக்கும் மருத்துவ ஆவணங்கள், தொழில் நுட்பப் பணியாளர்களின் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளல்.

நவம்பர் 1971, முதல் நாள் முதல் துவங்க விருக்கும் மருத்துவ ஆவணங்கள், தொழில் நுட்பப் பணியாளர்களின் பயிற்சியில் சேர்வதற்கு இயக்குநர்—கண்காணிப்பாளர், குழந்தைகள் நல நிலையம், குழந்தைகள் மருத்துவ மனை, எழும்பூர், சென்னை-8 அவர்களால் செப்டம்பர் 30, 1971 அன்று மாலை 5-00 மணி வரை மனுக்கள்வரவேற்கப்படுகின்றன.

தகுதி—

(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின், கலை அல்லது அறிவியல் பற்றிய புகுமுகவகுப்பு அல்லது இன்டர்மீடியட் தேர்வு அல்லது அதற்குச் சமமான தேர்வில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். மற்றும், (2) தட்டெழுத்து கீழ் நிலை (ஆங்கிலம்) தேர்வில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

மருத்துவ ஆவணப் பராமரிப்பில் அனுபவம் உள்ளவர்களுக்கும் மருத்துவப் பதிவாளர் அலலது அறுவைச் சிகிச்சைப் பதிவாளர் அலுவலகத்திலோ அல்லது கல்வி கற்பிக்கும் மருத்துவ நிறுவனங்களின் ஆவணத் துறையிலோ பணியாற்றி யுள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது : பயிற்சி பெற விரும்புகின்றவர்கள் பயிற்சிபெற சேரும் மாதத்தின் முதல் நாள் அன்று 24 வயது முடிந்தவர்களாக இருக்கக் கூடாது. இந்த வயது வரம்பு, பணியில் உள்ளவர்களுக்குப் பொருந்தாது.

மனுத்தாள் மற்றும் இதர விவரங்கள் பெற இயக்குநர் கண்காணிப்பாளர், குழந்தைகள் நல நிலையம் குழந்தைகள் மருத்துவ மனை, எழும்பூர், சென்னை-8 அவர்களுக்குக்கடிதம்எழுதி, அத்துடன் ரூபாய் 1-00-க்கு (ரூபாய் ஒன்றும் மட்டும்) இயக்குநர், கண்காணிப்பாளர், குழந்தைகள் நல நிலையம், குழந்தைகள் மருத்துவ மனை, எழும்பூர், சென்னை-8அவா்கள் சார்பாக இந்தியபோஸ்டல் ஆர்டர் வாங்கி கிராஸ் செய்து இணைத்து அனுப்புவதுடன் தங்களது முகவரியுள்ள 9×4 அங்குலம் அளவுள்ள உறையில் அஞ்சல் தலை ஒட்டி (50 காசுக்கு) அதையும் வைத்து அனுப்பவேண்டும்.

பணியில் உள்ளவர்கள் பூர்த்தி செய்த மனுக்களை, அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் மூலமாக அனுப்ப வேண்டும்.

டாக்டர் வி. பாலகோபால்

ராஜூ,

இயக்குநர் & கண்காணிப்பாளர், குழந்தைகள் நல நிலையம்,
குழந்தைகள் மருத்துவ மனை.
எழும்பூர். சென்னை-8.

தேதி : 6-9-1971.

(த 74)

---

## அறங்காவலர் பதவி

---

### திருவலஞ்சுழி திரு. நல்ல நாயகம் பிள்ளை அறக்கட்டளை

(கும்பகோணம் உதவி நீதிமன்றம் அசல் வழக்கு எண். 79—16 ஏற்பாட்டுத் தீர்ப்பாணை)

இதனால் தெரிவிப்பது யாதெனில் திருவலஞ்சுழி திரு நல்ல நாயகம்பிள்ளை அறக்கட்டளைக்கு (TRUSTEE) அறங்காவலராக இருக்க விருப்பமுள்ளோர்கள் கும்பகோணம் உதவி நீதி மன்றத்திற்கு இந்த விளம்பரம் வெளியான தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் விண்ணப்பிக்கும்படிக் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தகுதிகள்

(1) மனுதாரர் இருபத்து ஐந்து (25) வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

(2) மனுதாரர் நல்ல வசதிகளும், சொத்துக்களும் உடையவராக இருக்க வேண்டும்.

(3) மனுதாரர் கும்பகோணம் வட்டத்தில் (Tal k) நிலையாக வாழ்பவராக இருக்க வேண்டும்.

மேலும் விவரங்கள் வேண்டுவோர் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு. என். நவநீதகிருஷ்ணன், பி.ஏ. பி.எல், வழக்கறிஞர் பாணாதுறை வடக்குவீதி, கும்பகோணம் அவர்களை அணுகவும்.

தே. பெ. க. பழநிசாமி,

உதவி நீதிபதி,

கும்பகோணம்.

உதவி நீதிமன்றம்
கும்பகோணம்

(த. 23)

பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்குச்சேர்ப்பிக்கப் படாவிட்டால் அதற்கு மின் வாரியம் பொறுப்பல்ல. மலிவான அல்ல வேறு எந்த விலையொப்பத்தையும்ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. எந்த ஒரு விலையொப்பத்தையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் கூறாது தள்ளுபடி செய்யவோ அல்லது ஆர்டரை இரண்டு அல்லது மேற்பட்ட விலையொப்பதாரர்களுக்கு இடையே பிரித்துக்கொடுக்கவோ கீழ்க்கண்டவருக்கு அதிகாரம் உண்டு. கட்டுத் தொகை ( Earnest money Deposit ) செலுத்தாமல் அனுப்பப்படும் விலையொப்பங்களும் குறிப்பிட்ட உரிய தாள்களில் அனுப்பப்படாத விலையொப்பங்களும் குறித்த தேதியும், நேரமும் தள்ளிச் சேர்ப்பிக்கப்படுபவையும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது ஒருவர் பெயரில் வாங்கப்பட்ட விலையொப்ப நமூனுக்களும் ஒப்புச்சாற்றுக்குறிப்புப் பிரதிகளும் மற்றொருவர் பயன்படுத்தக்கூடாது.

தவணைத் தேதியில் பிற்பகல் 3.00மணிக்கு இவ்வலுவலகத்தில் வந்துள்ள விலையொப்பதாரர்கள் முன்னிலையில் கீழ்க்கண்டவரால் விலையொப்ப நமூனுக்கள் பிரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
தென்னார்க்காடு மின் அமைப்பு,
அஞ்சல்பெட்டி-10.
விழுப்புரம்.

(த. 38)

## ஒப்பந்தப் புள்ளி

### விழுப்புரம் நகராட்சி

கீழ்க்குறிப்பிட்ட வேலைகளுக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27—9—1971 திங்கள்கிழமையன்று பிற்பகல் 4 மணி வரையில் நகராட்சிஅலுவலகத்தில் ஆணையர் அவர்களால் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகளை அன்று மாலை 4-30 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். பொறுப்புத் தொகை செலுத்தாதவர்களின் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | மதிப்பீடு தொகை. | ஒப்பந்தத் தொகை. | பொறுப்புத் தொகை. | ஒப்பந்தப் புள்ளி அட்டவணை விலை. |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 நகராட்சி உயர்நிலைப் பள்ளியின் விளையாடுமிடத்தில் '' திறந்த வெளி அரங்கு '' கட்டுதல். | 22,000 | 16,650 | 850 | 10 |
| 2 திரு. வி. க. வீதியில் ஸ்டால்கள் கட்டுவது. | 18,500 | 15,500 | 800 | 10 |
| 3 நகராட்சி பேருந்து நிலைய விஸ்தரிப்பில் தாரிடும் வேலை. | 14,000 | 13,000 | 650 | 5 |
| 4 கீழ் அனுமார் கோயில் வீதி, கோர்ட்டு சந்து, நவாப் தோப்பு சந்து— தாரிடும் வேலை. | 6,000 | 6,000 | 300 | 2 |
| 5 நாப்பாளய தெரு, நாப்பாளய சந்து—தாரிடும் வேலை. | 5,000 | 5,000 | 250 | 2 |
| 6 அங்காளம்மன் கோயில் தெரு, ஜல்லி போட்டு தாரிடும் வேலை. | 2,900 | 2,900 | 145 | 2 |

பெ. இ. பத்மநாப மேனன்,
ஆணையாளர்.

நகராட்சி அலுவலகம், விழுப்புரம்,
(த. 68)



569

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்.

(பொது நிர்மாண வட்டம், திருச்சி)

கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித் தனி விலை ஒப்பங்கள் (Seperate sealed Tenders) அடியிற் கையொப்பம் இட்டவரால் வரவேற்கப்படுகின்றன. விலை ஒப்பங்கள் கீழே குறிப்பிட்ட முடிவுத் தேதிகளில் பிற்பகல் 1 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், சாற்றுக் குறிப் பெண்ணும். | | கட்டுத் தொகை. | பொருட்களின் விபரம். | வழங்க வேண்டிய இடம். | சுமாராக தேவைப் படும் அளவு. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|---|---|
| | | | | For Destination | கி. கி. | |
| 1 | PC/2TLC/OT E.33/71-72 | 2,400 | M.S.7"X 5/8" ஸ்டெப் போல்ட் மற்றும் 2 நட்டுகளுடன். (175X16MM) | மதுரை, தாழையூத்து, திருச்சி ஸ்டோர்கள். | 15,000 | 30—9—1971. |

மேற்படிப் பொருட்களைப் பற்றிய குறிப்புகள் ஏனைய நிபந்தனைகள் அடங்கிய (Tender specimen Forms) பிரதி ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் (திரும்பப் பெறக்கூடியதல்ல) தலைமைக் கணக்காயர், பொது நிர்மாண வட்டம், திருச்சி அவர்களிடம் ரொக்கமாகவோ, அல்லது மணியார்டர் மூலமாகவோ (கூப்பனில் சாற்றுக் குறிப்பெண்ணைக் குறிப்பிட்டு) செலுத்தவும். கூப்பனில் தேவையான சாற்று எண் தெளிவாகக் குறிப்பிடாமல் இருந்தால் மணியார்டர் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தபாலில் வரும்போது பிரதிகள் தவறிவிட்டாலோ, தாமதப்பட்டாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது. பொருட்களைப் பற்றிய குறிப்புகள் வேண்டும் கடிதங்கள் முடிவு தேதிக்குக் குறைந்த பட்சம் நான்கு நாட்கள் முன்னதாக வரவேண்டும்.

விலை ஒப்பங்கள் குறிப்பிட்டுள்ள முடிவு தேதியன்று பிற்பகல் 3 மணிக்கு அவ்வமயம் வந்திருக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

மேற்கண்ட பொருள்களை வழங்குவதற்கான உத்தரவை ஒருவருக்கோ அல்லது பலருக்கோ, கொடுக்கவும், எந்த ஒருவருடைய விலை ஒப்பந்தத்தையோ அல்லது அத்தனை பேர்களுடைய விலை ஒப்பந்தங்களையோ நிராகரிக்கவும் அடியில் கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொது நிர்மாண வட்டம்,
மன்னார்புரம், திருச்சி-1.

(த. 76)

## ஒப்பந்தப் புள்ளி

### அரசினர் பொது மருத்துவ மனே, சென்னே-3.

மருந்து வகைகள் மற்றும் சர்ஜிகல் சம்பந்தப்பட்டவைகள் (Medicines Surgical Instruments and appliances etc) ஆகியவற்றை அரசினர் பொது மருத்துவமனே, சென்னே-3-க்கு 1—10—1971 முதல் 31-3-1972 முடிய சப்ளே செய்ய, குறிப்பிட்ட ஒப்பந்த பாரத்தில், நகலுடன் கூடிய முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 25—9—1971 பிற்பகல் 2 மணி வரையில் நாணயமான நிறுவனங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன: "XXIII Medical J-Miscellaneous" என்ற தலைப்பிட்டு இரண்டு ரூபாய்க்கு ஒரு சலானும் அதே தலைப்பில் (விற்பனே வரிக்காக) ஏழு காசிற்கு மற்றொரு சலானும் எழுதி அதை ரிசர்வ் பாங்கில் செலுத்தி, சலான்களே ஒரு விண்ணப்பத்துடன் அடியிற் கையொப்பமிட்டவரிடம் கொடுத்து ஒப்பந்தப் பாரங்களேப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட தலைப்பில் ரிசர்வ் பாங்கில் செலுத்திய பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

**டாக்டர் பி.ஆர். பாலகிருஷ்ணன்,**
முதல்வர்,
அரசினர் பொது மருத்துவமனே,
சென்னே-3.

(த. 65)

## ஏல விற்பனே

ந.க.எண்: 50629/பி2/71

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள், 1971-ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 27-ஆம் தேதி, திங்கட்கிழமை காலே 10-30 மணியளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலே 24—9—1971 வெள்ளிக்கிழமை அன்றும், 25—9—1971 சனிக்கிழமை அன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**ஆணேயாளர்,**
காவல் ஆணேயாளர் அலுவலகம்,
எழும்பூர், சென்னே-8.

(தது 64) நாள்: 3-9-1971





### மேற்பார்வைப் பொறியாளர்களின் அலுவலகம் பொ. ப. து.

இராமநாதபுரம் வட்டம், ம ரை:
ந. க. எண் 28842—69, 143/வ2/நாள் 21-8-1971.

**ஒப்பந்தப் புள்ளி 2-வது விளம்பரம்.**

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப் பணித்துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெருவட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்டவேலேக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள கண்மாய்ப் பாசனத்தில் உள்ள நில உரிமை பெற்ளேர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 24-9-1971-ஆம் தேதி மாலே 4 மணி வரையில் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலேயின் பெயர்—உப்பாற்றின் குறுக்கே அணே கட்டி, செய்களத்தூர் மற்றும் 26 கண்மாய்களுக்குப் பாசனம் வழங்கும் திட்டம்.

| | அணேக்கட்டுவேலே 0 முதல் 55 மீட்டர் வெள்ளத் தடுப்புக்கரை பைல்கட் ஆப் உள்பட. | அணேக்கட்டுவேலே 55 முதல் 76 மீட்டர் தலே மதகு மணல் போக்கி மதகு வெள்ளத்தடுப்புக் கரை பைல்கட் ஆப் உள்பட. |
|---|---|---|
| ஒப்பந்த வகை | கே-2 | கே-2 |
| கட்டுத்தொகை | ரூ. 7 100 (ரூபாய் ஏழா ரத்து நூறு) | ரூ. 7,900 (ரூபாய் ஏழாயிரத்துத் தொள்ளாயிரம்). |
| ஒப்பந்தப் புள்ளி விலே (வரி உள்பட.) | ரூ. 20.70 | ரூ. 20.70 |
| வேலே முடிக்கவேண்டிய காலம். | 12 மாதங்கள். | 12 மாதங்கள். |

வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 24-9-1971 அன்று மாலே 4-30 மணிக்கு அலுவலகம் வந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலேயில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் மேற்படியார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேற்கண்ட வேலேகளே எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தப் பத்திரத்திற்கான தொகை ரூ. 20-70ஐ அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப்பொறியாளர் (பொதுப்ப ரித் துறை) இராமநாதபுரம் பெருவட்டம் மதுரை-1 என்ற விலாசத்திற்கு மனுச்செய்தால் மேற்படி வேலேக்கான ஒ ந்தப் பட்டியல் விதிகள் முதலியவைகள் ஒப்பந்தப் புள் யுடன் வழங்கப்படும்.

ஒப்பந்தப்ப ளியின் விலேயான ரூ 20-ஐ "பி.டபிள்யூ.டி. III ஓ.ஆர். என்ற கணக்குத் தலேப்பில் நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, சிவகெங்கை கோட்டம், சிவகெங்கை அவர்கள் கணக்கிலும் விற்பனே வரிக்காக ரூ 0·70 (எழுபது காசை) "12 விற்பனே வரி" என்ற கணக்குத் தலேப்பிலும் அரசாங்கக் கருவூலத்தில் தனித் தனியாகச் செலுத்தி ரசீதுகளே அனுப்ப வேண்டும். இத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும்பொழுது உறையின் மேல் வேலேயின் பெயரும் கருவூல ரசீது எண்ணும் எழுதப் பட்டிருக்க வேண்டும். உறை மூடி அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அலுவலகத்தின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில்தான்தொகை குறிப்பிட்டுக் கொடுக்கவேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) இராமநாதபுரம் வட்டம், மதுரை அலுவலகத்தில் 14—9—1971 முதல் 22—9—1971 முடிய விற்பனேக்காக இருக்கும். ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 22—9—1971 மாலே 5 மணிக்குள் வந்து சேர வேண்டும். இதற்குப் பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ இத்துறையினர் பொறுப்பாக மாட்டார்கள். இதுபோன்ற செயல் இத்துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

இவ்வேலேயை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கட்டுத்தொகை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெடியூல்ட் வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு செக்குரிட்டிகள், தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் பத்திரங்கள், அரசாங்க சேமிப்புப் பத்திரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு அல்லது தற்போதைய மதிப்பு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறுவிதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வேலேயை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திற்கான வருமானவரி, விற்பனேவரி முதலியவைகளேச் செலுத்தியதற்கு அத்தாட்சியாகச் சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

ஆயக்கட்டுதாரர்கள் பங்கு எடுத்துக் கொண்டால் டிபுடி தாசில்தாருக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிடமிருந்து, சொத்து உரிமை சர்டிபிகேட்டும், அத் திட்டத்தில் பயன்பெறும் கண்மாயில் ஆயக்கட்டுதார் என்பதற்கும் அத்தாட்சி வாங்கி ஒப்பந்தத்துடன் இணேக்க வேண்டும். கட்டுத்தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில் தொகை குறிப்பிட்டுக் கொடுக்காமலோ இருந்தால் அவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப்படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனே ஒப்பந்தப் புள்ளிகளேயும் நிராகரிக்க உரிமை பெற்றுள்ளார்.

22—8—1971.

**ரெ. ராமசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை.

(த. 45)

## ஒப்பந்தப் புள்ளி

### மீன் துறை

எண்ணூரில் இத்துறைக்குச் சொந்தமான உறைபனி நிலேயத்தை ( Freezing plant ) குத்தகைக்கு விடுவதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 30—9—1971 பிற்பகல் 2-00 மணிவரை சென்னே மீன் துறை இயக்குநரால் ஏற்றுக் கொள்ளப்படும். இது குறித்த விவரங்களே மீன் துறை இயக்குநரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**மீன்துறை இயக்குநர்.**
நிர்வாக அலுவலக கட்டடங்கள்,
சென்னே-6.
8—9—1971.

(த. 68)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

செங்கல்பட்டு மின்பெரு வட்டம் காஞ்சிபுரம்.

1—9—1971-ஆம் தேதி (தமிழரசு பிரதி, தமிழ் பதிப்பு, பக்கம் 33) வெளியிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி.

முடிவு தேதி : நீட்டிப்பு.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தச்சாற்றுக் குறிப்பு விற்கும் முடிவுத் தேதி, ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும் முடிவுத் தேதி, ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி கீழ்க்கண்டவாறு நீட்டிக்கப்படுகின்றன :—

(1) ஒப்பந்தச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் விற்கப்படும் முடிவுத் தேதி 12—10—1971.

(2) ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும் முடிவுத் தேதி 13—10—1971 பகல் 12 மணி வரை.

(3) ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி 13—10—1971 பகல் 2 மணி.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
செங்கற்பட்டு மின் பெரு வட்டம்
காஞ்சிபுரம்.

(த. 88)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், பொது சுகாதாரப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இது போன்ற வேறு அரசு துறைகளில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) அவர்களால், எண் 17, சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2, என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 19—10—1971 (செவ்வாய்) மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலை 3·30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| வேலையின் பெயர் | .. | பழனி குடிநீர் வழங்கும் திட்டம்—நாலாம் கட்டம்—பழனியில் கோடை கால ஸ்டோரேஜ் டேங் கட்டுதல். |
| ஒப்பந்த வடிவம் | .. | மொத்தத் தொகை: |
| கட்டுத் தொகை | .. | ரூ. 37,000: |

இந்தத் தொகையை ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்ட்டாகவோ அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் காரண்டியாகவோ நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| வேலையை முடிக்கவேண்டிய காலம். | 18 மாதங்கள்: |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. | ரூபாய் 25·88 (விற்பனை வரி உட்பட). |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை 14, ராமமூர்த்திசாலை சொக்கிகுளம், மதுரை-2, என்ற முகவரியில் உள்ள நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், அவர்களிடமிருந்து 12—10—1971 அன்று மாலை 5 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

கே. கோவிந்த மேனன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு.பொ.), மதுரை-2.

தேதி : 25—8—1971.
(த.63)

## ஒப்பந்தப்புள்ளி.

### தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை
### வைகைச் சீரமைப்புத் திட்டம்.

(மறு ஒப்பந்த அறிக்கை.)

மதுரை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் பொதுப் பணித்துறை கீழ்க்கண்ட வேலைக்கு கே 2. ஒப்பந்த வகையில் ஒப்பந்தங்களை தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில் 22—9—1971 அன்று மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்வார். அன்று மாலையே 4-00 மணிக்கு அந்த ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் 15—9—1971 முதல் 20—9—1971 வரை விற்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | கட்டுத் தொகை: ரூபாய். |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்டத்தில், சிவகெங்கை வட்டத்தில் வைகை நதியின் குறுக்கே கட்டப்படும் பார்த்திபனூர் ரெகுலேட்டரில் பகுதிகள் 9, 10 & 11 கட்டுதல். | 12,000 |

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்களின் விலையான ரூ. 20-ஐ நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை வைகைச் சீரமைப்பு '' ஹெட் ஒர்க்ஸ் '' கோட்டம் பரமக்குடி அவர்களின் கணக்கில் பி.டபிள்யூ.டி. III ஓ. ஆர்: என்ற தலைப்பிலும் அதற்கான விற்பனை வரி மற்றும் சர் சார்ஜ் 75 காசுகளை '' XII—Sales tax (d) Miscellaneous '' என்ற தலைப்பிலும் அரசாங்கக் கருவூலங்களிலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ செலுத்தி உண்மை ரசீதை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டுத் தொகை, சலான், ஷெட்யூல்ட் வங்கிகளின் '' deposit at call '' ரசீது அல்லது ‘ Demand draft '' அரசாங்க செக்யூரிட்டிகள், தேசிய மயமாக்கப்பட்ட 14 வங்கிகளின் உத்திரவாதம், மேலும் தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்கள் அல்லது தேசிய சேமிப்புப் பத்திரங்கள் மார்க்கெட் மதிப்பில் 5 விழுக்காடு குறைத்துப் பெற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகை வேறு எந்த வகையிலும் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சி. தேசிகசங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
மதுரை வட்டம், மதுரை-2.

(த.49)

### தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றும் வாரியம்,

573

ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு குடிசைமாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கிரே நகர் பள்ளத்தில் (புளியந்தோப்பு நெடுஞ்சாலை) பல அடுக்குக் கட்டடங்களைக் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 23—9—71 அன்று 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின்மீது, ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரியமுறையில் குறிப்பிட வேண்டும்.

| எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை. |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. | |
| 1 | I | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி1, பி-2, பி-3. | 2,79,000 | LS / 4,200 | |
| 2 | II | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி-12, பி-13, பி-14. | 2,79,000 | 4,200 | |
| 3 | III | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி-4, பி-5 | 1,86,000 | 2,800 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு வகைக்கும்) |
| 4 | IV | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி-6, பி-7 | 1,86,000 | 2,800 | |
| 5 | V | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி-8, பி-9 | 1,86,000 | 2,800 | |
| 6 | VI | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி-10, பி-11 | 1,86,000 | 2,800 | |
| 7 | VII | 1.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நீர் நிலைத் தேக்கம் 21 மீட்டர் உயரத்தில் கட்டுதல். | 51,000 | 765 | |
| 8 | VIII | 6.1 மீட்டர் விட்டம் கொண்ட கிணறு கட்டி இறக்குதல். | 25,000 | 375 | |

வரை படங்களையும், ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களையும், கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 13—9—71 முதல் 22—9—71 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 23—9—71 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் காரணமின்றி நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ, நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

தாண்டவராய சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
(த-44)

நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம்-3.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்

### ஒப்பந்த அறிவிப்பு எண் 6/71-72.

வேலையின் பெயர்.—நிமிடத்திற்கு 300 கனஅடி கொள்ளளவும் சதுர அங்குலத்திற்கு 150 பவுண்டுகள் அழுத்தமும் கொண்ட நடமாடும் டீசலால் இயங்கும் ஏர் கம்ப்ரெசர் 2 எண்ணிக்கைகள் வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறிய வேலைக்கு நிலநீர் இயக்குநர், சென்னை-4 அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் 15-10-1971 அன்று மாலை 3 மணி வரை முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் நிலநீர் இயக்குநர் அவர்களால் அதே நாள் மாலை 4 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மெட்ராஸ் பைனான்சியல் கோடு, வால்யூம் 1-ன் வடிவம் 9.

2. முன் வைப்புத் தொகை—ரூ. 4,500.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும், விற்பனை வரி ரூ. 0·40 (நாற்பது காசு மட்டும்).

4. கீழே குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் அலுவலக நேரத்தில், ஒப்பந்தப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்குஉரிய தேதி—15-9-1971 முதல் 11-10-1971 வரை.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittances III Other Remittance என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர் நிலநீர்க் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "XII Sales-tax (b) Receipts under State Sales-tax Act, General Sales-tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ செலுத்தப்படவேண்டும். சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

**ச. பஞ்சநதம்,**
இயக்குநர்.

நில நீர் இயக்குநர் அலுவலகம்
82, இராயப்பேட்டை
நெடுஞ்சாலை, சென்னை-4.
(த51)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

என் 1087/71 எஸ்டி 1.

நாள் 4—8—1971.

கீழ்க்கண்ட வேலைக்காகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள் அவர்களால் 25-1, மூன்றாவது தெரு, டாட்டா பாத், கோயம்புத்தூர்-12-ல் அவருடைய அலுவலகத்தில் 22-9-1971 பிற்பகல் 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டு, அதே நாளில் பிற்பகல் 4-00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் : புஞ்சைப் புளியம்பட்டி நீர் வழங்கு திட்டம் 3-வது கட்டம்—7-00 லட்சம் லிட்டர் (1.5 லட்சம் காலன்) திறனுள்ள மேல்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர், அவசியமான குழாய் இணைப்புகளுடன் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை : ரூ. 3,500 (ரூபாய் மூவாயிரத்து ஐநூறு மட்டும்).

வேலையை முடிக்க வேண்டிய காலம் : 6 மாதங்கள் (ஆறு மாதங்கள் மட்டும்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 10-35 (ரூபாய் பத்து காசுகள் முப்பத்தைந்து மட்டும்-விற்பனை வரி உட்பட.)

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்காலம்: 9—8—1971 முதல் 20-9-1971 வரை நிர்வாகப் பொறியியல் பொறியாளர், பொ. சு. பொறியியல் டிவிஷன், எண் 11/8. பாஷ்யகாருலு சாலை, ஆர்.எஸ். புரம் கிழக்கு கோயம்புத்தூர்-2.

அவர்களிடம் பத்திரங்கள் விலையை ரொக்கமாகக் கொடுத்தோ பண அஞ்சலில் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். கட்டுத் தொகை, தேச உடைமையாக்கப்பட்ட, பாங்க் ஒன்றின் டிமாண்ட் டிராப்ட் வடிவிலோ அல்லது நிர்வாகப் பொறியாளர் (பொ.அ.பொ.) கோயம்புத்தூர்-2 அவர்கள் பெயரில் கருவூல சலான் வடிவிலோ கட்டவேண்டும். தேச உடைமை ஆக்கப்பட்ட பாங்க் ஒன்றின் பாங்க் காரண்டியும் ஏற்கப்படும்.

காரணம் ஏதும் கூறாமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளருக்கு (பொ.சு.பொ.) உரிமை உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்.**
(த. 13)

---

## தனியார் அச்சகங்களுக்கு

### எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநர் அலுவலகம், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1.

**அரசினர் அச்சு வேலைகளை, தனியார் அச்சகங்களுக்குக் கொடுத்தல்**

அரசினர் அச்சு வேலைகளில் சில இனங்கள், தனியார் அச்சகங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. இந்த அச்சு வேலைகளை மேற்கொள்ள விரும்புவோர், இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 அவர்களுடன் தொடர்புகொண்டு மேல் விவரங்களைப் பெறலாம்.

**ஜி. ரஙகாராவ்,**
(த40) **இயக்குநர்.**





### தமிழ்நாடு அரசு

### தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம்

**சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.**

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்துக்காகவும் அதன் பொருட்டும் துறைக்குரிய வடிவத்தில், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, பொது சுகாதார பொறியியல் துறை (தமிழ் நாடு குடிநீர், வடிகால் வாரியம்), பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை, மற்றும் இதர அரசு நிறுவனங்களில் உரிய பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) தமது அலுவலகம் எண் 17. சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2-ல் 1—10—1971 வெள்ளிக்கிழமை மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். அவை அதே நாளில் மாலை 3-30 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்—

திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம்—லப்பை குடிக்காடு நீர் வழங்கு திட்டம்—முதல் கட்டம், மேல் கட்ட ஆர். சி. சி. சர்வீஸ் ரிசர்வாயர் 3.5 லட்சம் லிட்டர் திறன் உள்ள தாகக் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்—

மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—

ரூ. 2,600 (ரூபாய் இரண்டாயிரத்து அறுநூறு மட்டும்).

ஒப்பந்தப் புள்ளியுடன் இத் தொகை, கருவூல சலான் வடிவிலோ டிமாண்டு டிராப்ட் வடிவிலோ, தேச உடமை ஆக்கப்பட்ட பாங்கின் காரன்டி வடிவிலோ, நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் கோட்டம், திருச்சி அவர்கள் கணக்கில் சேர்ப்பிக்கப்பட்டுக் காண்பிக்கப்பெற வேண்டும்.

வேலையை முடிக்கவேண்டிய காலம்—

ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை—

ரூ. 10.35 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப்பொறியியல்கோட்டம் பி-15, தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சி-3 அவர்களிடமிருந்து 27—9—1971 மாலை 5 மணி வரை பெறலாம்.

**கே. கோவிந்தமேனன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு.பொ.)

மதுரை-2,
நாள் 31—8—1971.
(த55)

---

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

அக்ரானமி துறை, மத்திய பண்ணை, கோயம்புத்தூர்-3,

நாள் : 2—9—1971.

எச். 5/1738/71.

**ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு.**

கோயம்புத்தூர்-3, வேளாண்மைக் கல்லூரி & ஆராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த, கல்லூரிப் பண்ணை, கால்நடை பேணும் நிலைய மத்திய பண்ணைக்குத் தேவையான கால்நடைத் தீவனங்கள் (நிலக்கடலைப் பிண்ணாக்கு, பருத்தி விதை, உப்பு, அரிசித் தவிடு, கோதுமைத் தவிடு, தாது உப்புக் கலவை) 1—10—71-லிருந்து 31—3—72 வரை உள்ள காலத்துக்கு வழங்குவதற்காகக் கோயம்புத்தூர்-3, வேளாண்மைக் கல்லூரி & ஆராய்ச்சி நிறுவன டீன் அவர்களால், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25—9—1971 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

2. ஒப்பந்தப் புள்ளிகள் : "1—10—71 முதல் 31—3—72 வரை உள்ள காலத்துக்கு, கால்நடைத்தீவனம் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள்" என்று குறிப்பிடப்பட்டு டீன், வேளாண்மைக் கல்லூரி & ஆராய்ச்சி நிறுவனம், கோயம்புத்தூர்-3 அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் ஒவ்வொன்றுடனும், கீழ்க்கண்டவைகளைச் சேர்த்து அனுப்ப வேண்டும்.—

(1) ரெவின்யூ டிபாசிட் வகையில் கட்டுத் தொகையாக ரூ. 50-க்கு சலான்.

(2) உரிய அலுவலரிடமிருந்து சால்வன்சி சான்றிதழ்.

(3) வருமான வரி கிளியரன்ஸ் சான்றிதழ்.

(4) விற்பனை வரி கிளியரன்ஸ் சான்றிதழ்.

(5) கால்நடை தீவன சாம்பிள்கள் 2 கிலோ கிராம்.

3. எவ்விதக் காரணமும் கூறாமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், ஏற்கவோ நிராகரிக்கவோ கோயம்புத்தூர்-3, விவசாய கல்லூரி & ஆராய்ச்சி நிறுவன டீன் அவர்களுக்கு உரிமை உண்டு.

4. ஒப்பந்தப் புள்ளி வடிவங்களையும் இதர விவரங்களையும் பெற, மத்திய பண்ணை உதவி அக்ரானமிஸ்ட்டிடம், விற்பனை வரி உள்பட 53 காசுகள் செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

5. ஒப்பந்தப் புள்ளிகள், கோயம்புத்தூர்-3 விவசாயக் கல்லூரி & ஆராய்ச்சி நிறுவனம் மத்திய பண்ணை உதவி அக்ரானமிஸ்ட் அவர்களால் 25—9—71 மாலை 3-30 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில், கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவன கால்நடை பராமரிப்புப் பேராசிரியர்-மத்திய பண்ணை அடிஷனல் உதவி அக்ரானமிஸ்ட் அவர்களுடன் பிரிக்கப்படும்.

**கே. ராமகிருஷ்ணன்,**
(த. 54) டீன்.

## ஏல விற்பனை

### ஏல அறிவிப்பு

அரசு தலைமைச் செயலகம் அமைந்துள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டை சென்னை 9-ல், அறிஞர் அண்ணு அரங்கம் அருகில் கீழ்க்கண்ட அரசு கார்கள் 22—9—1971 முற்பகல் 11 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

| காரின் பெயர். | மாடல். |
|---|---|
| எம்.எஸ்.ஒய். 7070 (டாட்ஜ் கிங்ஸ்வே). | 1956 மாடல் |
| எம்.எஸ்.எஸ். 8607 (அம்பாசிடர்). | 1966 மாடல் |

ஏலம் கோர விரும்புவோர் விற்பனை நிபந்தனைகளை அறிய, அரசு தலைமைச் செயலகம் மோட்டார் வண்டிகள் பிரிவு கண்காணிப்பாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

**டி. வி. வெங்கட்ராமன்,**
அரசு கூட்டுச் செயலாளர்.

(த57)

## ஒப்பந்தப் புள்ளி

### சென்னை மாநகர காவல்துறை

**சென்னை நகரில் சாலைகளில் குறியிடுவதற்காக வெள்ளை பிளாஸ்டிக் ஸ்டட்கள் வழங்குவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரல்**

1. சென்னை மாநகர காவல் துறை போக்குவரத்துத் துறைக்கு தேவைப்படுகின்ற, சாலைகளுக்கு குறியிடுவதற்கான வெள்ளை பிளாஸ்டிக் ஸ்டட்டுகள் 1971 ஆகஸ்ட் 1-லிருந்து 1971 டிசம்பர் 31 வரை உள்ள காலத்துக்கு வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

2. ஒப்பந்தப் புள்ளிகள் 30—9—71 மாலை 4-00 மணிக்குள் கீழே கையொப்பமிட்டவருக்கு வந்து சேரவேண்டும்.

3. ஒப்பந்தப் புள்ளி வடிவங்கள், நிபந்தனை விவரங்களை காவல் துறை ஆணையாளர் அலுவலகம் (ஸ்டோர்ஸ் பிரிவு) எழும்பூர், சென்னை-8ல் ரூ. 2.06 (ரூபாய் இரண்டு, காசுகள் ஆறு) மட்டும் செலுத்திப் பெற வேண்டும். இத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

**காவல்துறை ஆணையாளர்,**
மாநகர் போலீஸ் அலுவலகம்,
எழும்பூர், சென்னை-8.

(த58) நாள் 28—8—1971.

## ஏல விற்பனை

''பெட்ரோலினல் இயங்கக் கூடிய — சவர்லெட் — நோயாளியை ஏற்றிச் செல்லும் வண்டி—1950-ஆம் வருடத்திய மாடல்—125¼'' W. B. பதிவு எண்—MSZ—6658.''

மேற்கண்ட வண்டி 24-9-71 அன்று காலை 10-30 மணியளவில் தற்போது உள்ள நிலையில் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஏலம் விடப்படும். விருப்பமுள்ள ஏலம் கோருபவர்கள் மேற்கண்ட முகவரியில் அலுவலக நேரத்தில் வண்டியைப் பார்வையிடலாம். மற்ற விற்பனை விதிமுறைகளை நேர்முகமாகவோ எழுத்து மூலமாகவோ மேற்கண்ட அலுவலகத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு எழுத்து மூலமாகக் கேட்டால் அத்துடன் அவர்கள் முகவரி எழுதிய உறை ஒன்று சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

**டாக்டர் டி. நாகராஜன்,**
எம்.டி., எப். ஸி.ஸி.பி. (யு.எஸ்.ஏ.)
கண்காணிப்பாளர்,
தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
தஞ்சாவூர்-4.

(த59)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

9/10, மூர் தெரு, சென்னை-1.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன, நிர்வாக இயக்குநரால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு 6-10-1971 மாலை 3·00 மணி வரை ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | வேலை விவரம். | முன்வைப்புத் தொகை ரூபாய். |
|---|---|---|
| 1 | விருந்தாசலத்தில் 2,200 டன் கொள்ளளவு கொண்ட இரண்டாவது சேமிப்புக் கிடங்கு கட்டுதல் மற்றும் அதைச் சுற்றிச் சாலை அமைத்தல். | 6,250 |
| 2 | காஞ்சிபுரத்தில் 2,200 டன் கொள்ளளவு கொண்ட இரண்டாவது சேமிப்புக் கிடங்கு கட்டுதல் மற்றும் அதைச் சுற்றிச் சாலை அமைத்தல். | 5,800 |
| 3 | விருத்தாசலத்தில் கட்டவிருக்கும் இரண்டாவது சேமிப்புக் கிடங்கிற்குத் தேவையான இரும்பு உத்தரம் மற்றும் இதர சாமான்கள் வழங்குதல் Supply and erection of angle iron Trusses and other accessories. | 2,000 |
| 4 | காஞ்சிபுரத்தில் கட்டவிருக்கும் இரண்டாவது சேமிப்புக் கிடங்கிற்குத் தேவையான இரும்பு உத்தரம் மற்றும் இதர சாமான்கள் வழங்குதல் Supply and erection of angle iron Trusses and other accessories. | 2,000 |

வேலை பற்றிய முழு விவரங்களை இந்த அலுவலகத்திலிருந்து 13-9-1971-க்குப் பிறகு எல்லா வேலை நாட்களிலும் நேரிலோ, தபால் மூலமோ ரூ. 25·92 (விற்பனை வரி உட்பட) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

G. M. White, I.A.S.
நிர்வாக இயக்குநர்.

சென்னை-1.
(த. 60)



## பயிற்சி

### கர்நாடக இசைக் கல்லூரி, சென்னை-28.

**அறிவிப்பு.**

இக் கல்லூரியில் 1971-72 கல்வி ஆண்டில் கீழே குறிக்கப்பட்ட வகுப்புகளில் சேருவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:—

(அ) மூன்று வருட வாத்திய விசாரதா பட்ட சான்றிதழ் புல்லாங்குழல் பயிற்சி.

(ஆ) மூன்று வருட வாத்திய விசாரதா பட்ட சான்றிதழ் மிருதங்கப் பயிற்சி.

அபேட்சகர்கள் குறைந்தது எஸ்.எஸ்.எல்.சி. பூர்த்தி செய்த பொதுப் படிப்புடையவர்களாக இருக்க வேண்டும். அந்தப் பயிற்சிகளில் விசேஷத் தகுதியுடையவர்களுக்குப் பொதுப் படிப்பிலிருந்து விலக்களிக்கப்படும். அபேட்சகர்கள் 1971 ஜுலை 1-ஆம் தேதியன்று 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். தகுதியுடையவர்களுக்கு வயது வரம்பிலிருந்து விலக்களிக்கப்படும்.

கல்வி ஆண்டின் ஆரம்பத்தில் ஒரே தவணையாகக் கொடுப்பதானல் இப் பயிற்சிகளுக்கான கட்டணம் ஒரு வருடத்திற்கு ரூ. 75 ஆகும். மூன்று தவணைகளாகக் கொடுப்பதானல் ஒரு பருவத்துக்குக் (Term) கட்டணம் ரூ. 26. மூன்று தவணையாகக் கொடுப்பதானல் ஒவ்வொரு பருவத்தின் ஆரம்பத்திலும் கட்டணம் செலுத்த வேண்டும்.

கல்லூரியில் சேரும்போது இரண்டு ரூபாய் பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு மாணவரும் ஒரு பருவத்துக்கு ஒரு ரூபாய் விளையாட்டுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு மாணவரும் எச்சரிக்கைத் தொகை ரூ. 10 கொடுக்க வேண்டும். பயிற்சி முடிந்து கல்லூரியை விட்டுப் பிரிந்து செல்லும் போது இது திருப்பித் தரப்படும்.

கல்லூரியில் பெண்களுக்கான ஒரு விடுதி இருக்கிறது. உணவுச் செலவு விடுதியில் வசிப்போருக்குச் சமமாகப் பங்கிடப்படும்.

கல்லூரி முதல்வருக்கு 50 காசு நேரில் பணமாகக் கொடுத்தோ மணியார்டர் மூலம் செலுத்தியோ விண்ணப்ப நமூனு பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப நமூனு அனுப்புவதற்கு 20 காசு தபால் வில்லை ஒட்டப்பட்டதும் சொந்த விலாசம் எழுதப்பட்டதுமான உறை அனுப்பவேண்டும்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் தகுதிகளைக்காட்டும் சான்றுக் கையொப்பமிட்ட சான்றிதழ்களுடனும் ஒரு ரூபாய் பதிவுக் கட்டணத்துடனும் கல்லூரி முதல்வருக்கு அனுப்பி வைக்க வேண்டும். எல்லா விண்ணப்பங்களும் கல்லூரி முதல்வருக்கு 20-9-1971 தேதிக்கு முன்னல் வந்து சேர வேண்டும்.

**முதல்வர் (பொறுப்பு).**

(த. 36)

## ஒப்பந்தப் புள்ளி

**தமிழ்நாடு அரசு**

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்

82, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை-4.

**சீட்டு ஒப்பந்தப் புள்ளி**

அறிக்கை எண் 3/71-72.

வேலையின் பெயர்—300 எம்.எம். நடுவிட்டமுள்ள சி. ஐ. பைப்புகள் 'எல்ஏ' வகை சாக்கெட், ஸ்பிகாட் முனைகளோடு ஸ்டாண்டர்டு நீளத்தில் வழங்கல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் பொருட்டும் மேலே குறிப்பிட்ட வேலைக்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்தில் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30-9-1971 மாலை 3-00 வரை நிலநீர் இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை நிலநீர் இயக்குநர் அவரது அலுவலகத்தில் அதேநாளில் மாலை 3-30 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிப்பார்.

ஒப்பந்த வடிவம்—எம். எப். சி. வடிவம் 9, வால்யூம் 1.

கட்டுத் தொகை—ரூ. 1,400.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்).
விற்பனை வரி 40 காசுகள்.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—2 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்களை 1-9-1971 முதல் 27-9-1971 வரை மேலே கண்ட அலுவலகத்தில் வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் (Public Works Remittances III Other Remittances) என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்; விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் விற்பனைவரி (பி) மாநில விற்பனை வரிச்சட்டத்தின் கீழ், 'வரவினம், பொது விற்பனைவரி' என்ற தலைப்பிட்டுச் செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்பு தான் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

**இயக்குநர்,**
நிலநீர்.

(த. 30)

## ஏல விற்பனை

### தமிழ்நாடு அரசு
### வேளாண்மைத்துறை

**ஏல அறிவிப்பு**

திருவாரூர் விவசாயக் கருவிகள் ஓர்க் ஷாப்பின் பொதுக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 27-9-1971 மாலை 3 மணிக்கு ஒரு செவர்லட் லாரி (எம். எஸ். சி. 9574) 1945 மாடல், பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

அலுவல் நாட்களில் அலுவல் நேரத்தில் அந்த வண்டியைப் பார்வையிடலாம்.

அரசின் நலன் கருதி, ஏலத்தை ரத்து செய்யவோ, ஒத்தி வைக்கவோ வேளாண்மைத் துறைக்கு உரிமை உண்டு.

விற்பனை நிபந்தனைகள் குறித்து மேல் விவரங்களைப் பொதுக் கண்காணிப்பாளர், விவசாயக் கருவிகள் ஓர்க் ஷாப், திருவாரூர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**வேளாண்மை இயக்குநர்,**
சென்னை-5.

(த.41)

## ஒப்பந்தப் புள்ளி

### சமூக நலத்துறை

### ஒப்பந்த அறிக்கை 2/71-72.

தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம் அசீசு நகர் செட்டில்மெண்டில் உள்ள தொழில் நிலையங்கட்கு 1970-71-ஆம் ஆண்டிற்கான பலவகைப் பட்ட நூல் ரகங்களும், மரங்களும் (Yarn and Timber) வழங்குவதற்கு முத்திரையிடப் பட்ட ஒப்பந்த விவரங்கள் (Sealed Tenders) பெயர் பெற்ற நிறுவனங்களில் இருந்தும், ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் (contractors) இதனடியில் கையொப்பமிட்டவரால் 30-9-1971-ஆம் தேதி வியாழக் கிழமை பகல் 12-00 மணிவரை வரவேற்கப்படுகின்றன: ஒப்பந்த விவரங்கள் வந்து சேரவேண்டிய தேதியை ஒத்தி கொடுப்பதற்கான கோரிக்கை எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2. நெய்வேலி டவுன்ஷிப் கிளைக் கருவூலத்தில் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 500·00 (ஐநூறு மட்டும்) கட்டுத் தொகை கட்டிய சலானுடன் இணைந்து வராத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

3. ஒப்பந்த விவரங்கள் மேற்கூறப்பட்ட அதே தேதியில் பிற்பகல் 1-00 மணிக்குத் திறக்கப் படும். அப்போது ஒப்பந்த விவரங்கள் கொடுத்திருப்பவர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் நேரில் வந்திருக்கலாம். ஒப்பந்த விவரங்களில் கொடுக்கப்படும் விலைப் பட்டியலை அசீசுநகர் செட்டில் மெண்டில் இப் பொருள்களைக் கொண்டுவந்து கொடுப்பதற்கு உடன்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. குறைந்த பட்ச விலைப் பட்டியல் உள்ள ஒப்பந்த விவரங்களைத்தான் இதன் அடியில் கையொப்பமிட்டிருப்பவர் அங்கீகரிக்க வேண்டுமென்ற கட்டாயம் எதுவுமில்லை. காரணம் கூறுமல் எந்த ஒப்பந்த விவரத்தையும் அங்கீகரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ அவருக்கு அதிகாரம் உண்டு. இந்த நிபந்தனைகட்கு உட்படாத ஒப்பந்த விவரங்கள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் சரக்குகளை வினியோகம் செய்வதற்கு முன்னதாகவே அவைகளின் விலை மதிப்பீட்டுத் தொகையில் 10 சதவிகிதமோ அல்லது அடியிற் கையொப்ப மிட்டிருப்பவரால் நிர்ணயிக்கப்படும் மற்றெந்தத் தொகையோ வைப்புத் தொகையாக (Deposit) செலுத்துவதுடன் ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்வதற்கான உடன்படிக்கை (Agreement) ஒன்றும் எழுதிக் கொடுக்க வேண்டும். வைப்புத் தொகையைக் கட்டத் தவறினாலோ அல்லது உடன்படிக்கைப் பத்திரத்தை எழுதிக் கொடுக்கா விட்டாலோ பொருள்களை வினியோகம் செய்வதற்குக் கொடுக்கப்பட்ட உத்திரவு எந்த நேரத்திலும் ரத்து செய்யப்படும்.

6. தேவையான நூல் மற்றும் மர வகைகள் பற்றிய குறிப்பிடுகைகள் (Specifications) நிபந்தனைகள் (Conditions) ஆகியவற்றை இதன் அடியில் கையொப்பமிட்டிருப்பவரிடமிருந்து விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

**தா. திருநாராயணன்,**
மேலாளர், அசீசு நகர் செட்டில் மெண்டு, ஊமங்கலம் அஞ்சல்,
விருத்தாசலம் தாலுக்கா,
தென்னார்க்காடு மாவட்டம்.

(த. 35)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### பொதுப்பணித் துறை

### சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும் தமிழக பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர்—நீலகிரி சர்க்கிள் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 4-10-1971 மாலை 3-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான ''மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள்'' பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்—கோயம்புத்தூர் அரசினர் கலைக் கல்லூரியில். தமிழ்ப் பயிற்சி பிளாக் மீது இரண்டாவது தளம் கட்டுதல்.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 2,550.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, வரைபடங்களுடன் விற்பனை வரி உட்பட—ரூ. 10.35.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர் பொ. ப. து. கோயம்புத்தூர் டிவிஷன் அவர்களிடம் எழுத்து மூலமாகக் கேட்டும், மேலே குறிப்பிட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தியும் (இது திருப்பித்தரப் படமாட்டாது) 25-9-1971-லிருந்து அலுவல் நாட்களில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

**எம்.எஸ்.கோபாலகிருஷ்ணன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ. ப. து.
கோயம்புத்தூர், நீலகிரி சர்க்கிள்,
கோயம்புத்தூர்-1.

(த. 42)

## ஏல விற்பனை

### கிராம நல வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், சென்னை.

### ஏல அறிவிப்பு

சென்னை-53, அம்பத்தூரில் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 30-9-1971 முற்பகல் 11 மணிக்கு பழைய டைப்ரைட்டர்கள், டூப்ளிகேட்டர்கள் ஆகியவை, கிராமநல வளர்ச்சி இயக்குநராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பகிரங்க ஏலம்மூலம் விற்பனைசெய்யப் படும். வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து இது சம்பந்தமான நிபந்தனை விவரங்களைப் பெறலாம். டைப்ரைட்டர்களையும் டூப்ளிகேட்டர்களையும் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரை பார்வையிடலாம்.

**எம். ரகுபதி,**
கிராம நல வளர்ச்சி இயக்குநர்.

(த. 31)



## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொறியியல் பணித் துறை, திருச்சி வட்டம், த.பெ. எண். 55, திருச்சிராப்பள்ளி-1.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி, அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | வேலையின் பெயர் ... | திருச்சி மாவட்டம், ஆலங்குடி வட்டம், ஆலங்குடி அரசினர் மருத்துவ மனையில் பதினாறு படுக்கைகள் கொண்ட ஒரு பகுதிக் கட்டடம் கட்டுதல். |
| 2 | ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம். | 8—10—1971 மாலை 3-00 மணி |
| 3 | பிணைப் பொறுப்புத் தொகை. | ரூ. 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்). |
| 4 | ஒப்பந்த முறை — | மொத்தத் தொகை. |
| 5 | முடிக்க வேண்டிய காலம். | பத்து மாதங்கள். |
| 6 | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. | ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்). |
| 7 | விற்பனை வரி — | 0·88 (எண்பத்தெட்டு காசுகள் மட்டும்). |
| 8 | ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி. | 20—9—1971. |
| 9 | விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதி, மற்றும் நேரம். | 8—10—1971 மாலை 3-30 மணி. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் "XXXVII Public Works-State Revenue-Miscellaneous" மற்றும் "XII Sales Tax (6) receipts under the State Sales Tax Act General Sales Tax" என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறுமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விபரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**ந. முத்துக்கிருஷ்ணன்,**
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த-27)

## பயிற்சி

**அனைத்திந்தியப் பணிகள், போட்டித் தேர்வுகள் முதலியவைகளுக்காகப் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குத் தனிப்பயிற்சி நிறுவனத்தில் சேர்த்தல்.**

சென்னையில் தொடங்கப்பட இருக்கும் மேற்கண்ட நிறுவனத்தில் சேருவதற்காக போஸ்ட் கிராஜுவேட் டிகிரி பெற்றவர்களிடமிருந்து மனுக்கள் 20—9—1971 தேதிக்குள் வரவேற்கப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இந்த நிறுவனத்தில் முனைப்பான பயிற்சி அளிக்கப்படும். உணவு உறைவிட வசதிகள் இலவசம்.

மனு வடிவங்களையும் இதர விவரங்களையும் '' பிற்பட்ட வகுப்பினர் துறை இயக்குநர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 '' அவர்களிடமிருந்து பெறலாம்.

**டி. பி. பாரதி,**
பிற்பட்ட வகுப்பினர் துறை இயக்குநர்.

(த.20)

## ஏல அறிவிப்பு

பொது (செய்தி விளம்பர)த் துறையைச் சேர்ந்த கீழ்க்கண்ட வேன்கள் 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதியன்று முற்பகல் 11மணிக்கு தமிழ்நாடு பொது (செய்தி, விளம்பர)த் துறையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வேன் எண் : எம்.எஸ்.வி. 2612 மாடல் 1962 போர்டு.

வேன் எண் : எம்.எஸ்.வி.9061 மாடல் 1962 பெட்போர்டு

வேன் எண்: எம்.எஸ்.டபுள்யூ 7653 மாடல் 1961.

ஏலம் கேட்கக் கருதுபவர்கள் மேற்படித் துறையின் துணை இயக்குநரின் அனுமதி பெற்று அலுவலக வேலை நேரங்களில் மேற்படி வண்டியைப் பார்வையிடுவதுடன் விற்பனை நிபந்தனை குறித்துத் தகவலையும் பெறலாம்.

**இயக்குநர்,**
பொது (செய்தி, விளம்பரத்) துறை
தமிழ்நாடு அரசு.
சென்னை-9.

(த. 26)

## ஏல விற்பனை

### தமிழ்நாடு அரசு

### மீன்துறை

அரசுக்குடைமையான பறிமுதல் செய்யப்பட்ட கீழ்க்கண்ட விசைப்படகுகள் கீழ்க்கண்ட விவரப்படி ஏலத்தில் விடப் படும் :—

| வரிசை எண். | படகு எண். | அளவு. | இயந்திரம். | ஏலம் நடைபெறும் இடம். | நாள். | நேரம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | ஐ.பி. 163 .. | 30 அடி. | ரஸ்டன் 2 சிலிண்டர்; | மீனவர் பயிற்சி நிலையம், குளச்சல். | 24—9—1971 | காலை 10 மணி; |
| 2 | ஐ.பி. 261 .. | டிடை | டிடை | டிடை | டிடை | டிடை |
| 3 | ஐ.பி. 264 .. | டிடை | டிடை | டிடை | டிடை | டிடை |
| 4 | ஐ.பி. 258 .. | டிடை | டிடை | வீபுரம் | 25—9—1971 | காலை 9 மணி. |
| 5 | ஐ.பி. 262 .. | டிடை | டிடை | டிடை | டிடை | டிடை |
| 6 | ஐ.பி. 355 .. | டிடை | ரஸ்டன் 3 சிலிண்டர்; | டிடை | டிடை | டிடை |
| 7 | ஐ.பி. 214 .. | டிடை | ரஸ்டன் 2 சிலிண்டர்; | குலசேகரன்பட்டினம் துறைமுக அலுவலகம் அருகில். | 30—9—1971 | காலை 10 மணி; |
| 8 | ஐ.பி. 256 .. | டிடை | டிடை | அரசினர் மீன் உணவு நிலையம், மண்டபம். | 21—9—1971 | டிடை |
| 9 | ஐ.பி. 271 .. | டிடை | டிடை | டிடை | டிடை | டிடை |
| 10 | ஐ.பி. 216 .. | டிடை | டிடை | கீழக்கரை அரசினர் பனிக் கட்டி நிலையம். | 22—9—1971 | பிற்பகல் 3 மணி. |
| 11 | ஐ.பி. 232 .. | டிடை | டிடை | இராமேசுவரம் அரசினர் பனிக்கட்டி நிலையம். | 20—9—1971 | பிற்பகல் 4 மணி. |

இதர விபரங்கள் தூத்துக்குடி மீன்துறை துணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ச. சே. ஆரோக்கியசாமி,
மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்),
தூத்துக்குடி.

(த.37)



### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுப் பணியில் அரசினர் அச்சகத்திற்கு 9 உதவி அலுவலர் நிர்வாகிகள் (Assistant Works Managers) நியமனத்திற்காக மனுக்கள் 1971 செப்டம்பர் 24-ஆம் நாள் மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன. தகுதிகள் :—

(1) அச்சுத் தொழில் தகுதி —அச்சு வேலைகளில் செயல்முறை அனுபவம்.

(2) 'காஸ்டிங் முறைக் (Costing System) கணக்கில்' அறிவு.

சம்பளம் : மாதமொன்றுக்கு ரூபாய் 550—25—600—35—950.

வயது : 1-7-1971-ல் 30 வயதுக்குக் கீழ். குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதிக்கு மேல் பொதுக் கல்வித் தகுதியுள்ள ஷெட்யூல்ட் வகுப்பினர், ஷெட்யூல்ட் பழங்குடியினர், பின்னடைந்த வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை. மற்ற ஷெட்யூல்ட் வகுப்பினர், ஷெட்யூல்ட் பழங்குடியினருக்கு, மேல் வயது வரம்பு 5 ஆண்டுகளும் அங்கவீனமுற்றவர்களுக்குப்பத்து ஆண்டுகள் வரையிலும் தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் அவர்தம் புதல்வர்கள், திருமணமாகாத பெண்கள், மற்றும் 1-1-1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரடர் அல்லது சார்ஜெண்டு மேஜர் இன்ஸ்ட்ரடர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசிய மாணவர் படை கேடட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—7—71-ல் 40 வயதிற்குட்பட்டவர்களாக இருப்பவர்களாயினும் 1—1—64-ல் அல்லது அதற்குப் பின்னர், கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் விஷயத்திலும், இலங்கை, பர்மா ஆகியவற்றிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்புட்படத் தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விபரங்களையும் "செயலாளர், தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம்—சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ·மீ. நீளமுள்ள சுய விலாசமிட்ட 0·35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி, நூல் அஞ்சல் என்று குறிப்பிட்டு உறையை உடன் வைத்தனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

(த.12)

---

கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 7-10-1971 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன :—

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு சபார்டினேட் சர்வீசில் சென்னையிலுள்ள விலங்கு மருத்துவக் கல்லூரிக்கு பயாலஜி டெமான்ஸ்ட்ரேட்டர்—ஒரு நியமனம் : கெமிஸ்ட்ரி டெமான்ஸ்ட்ரேட்டர்கள் மூன்று நியமனங்கள் ; பிசிக்ஸ் டெமான்ஸ்ட்ரேட்டர்கள்—மூன்று நியமனங்கள்.

சம்பளம் :—மாதம் ஒன்றுக்கு ரூ. 325—15—550.

வயது : 1—7—1971-ல் 27 வயதுக்குக் கீழ்.

தகுதி : (1) டெமான்ஸ்ட்ரேட்டர் (பயாலஜி), ஜுவாலஜியைப் பிரதான பாடமாகவும் பாட்டனியைத் துணைப் பாடமாகவும் கொண்டு, பல்கலைக் கழக மானிய கமிஷன் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றின் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி.எஸ்ஸி. டிக்ரி.

(2) டெமான்ஸ்ட்ரேட்டர் (கெமிஸ்ட்ரி), கெமிஸ்ட்ரியை முக்கியப் பாடமாகவும்பிசிக்ஸைத் துணைப்பாடமாகவும் கொண்டு, பல்கலைக் கழக மானிய கமிஷன் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி. எஸ்ஸி. டிக்ரி.

(3) டெமான்ஸ்ட்ரேட்டர் (பிசிக்ஸ்) பிசிக்ஸை முக்கியப் பாடமாகவும் கெமிஸ்ட்ரி, கணிதம் ஆகியவைகளைத் துணைப் பாடங்களாகவும் கொண்டு பல்கலைக் கழக மானிய கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றின் முதல்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி.எஸ்ஸி.டிக்ரி.

ஷெட்யூல் வகுப்பினர் ஷெட்யூல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள். அவர்களுடைய புதல்வர்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் தேசீய மாணவர் படையில் 1—1—1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார் ஜண்ட் மேஜர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசிய மாணவர் படை கேடெட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவைகளிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1-7-71-ல் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்களானாலும் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 1—1—1964ல் அல்லது அதற்குப் பின்னர் குடி பெயர்ந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை, பர்மா ஆகியவைகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உள்பட தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும் இதர விவரங்களையும் "செயலாளர், தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை—2" என்ற முகவரிக்கு, பதவிப் பெயரைக் குறிப்பிட்டு கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ளசுய விலாசமிட்ட 0. 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி நூல் அஞ்சல் என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த.7)

## நூல்களுக்குப் பரிசு

### சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

தமிழில் உயர்ந்த நூல்கள் வெளிவருவதை ஊக்குவிக்கும் நோக்குடன் சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தைத் தமிழக அரசு வகுத்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் 1—1—1966 முதல் 31—12—1967 வரை அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட பத்து வகைகளில் அடங்கும் நூல்கள் பரிசுக்குரிய ஆய்விற்காக ஏற்றுக்கொள்ளப் பெறும்.

(1) சிறு கதை.

(2) நாடகம்.

(3) கவின் கலைகள்.

(4) கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுய சரிதை, பயண நூல்கள்.

(5) தாவர இயல், விலங்கியல், புவியியல், உயிரியல், காட்டியல்.

(6) பௌதிகம், இரசாயனம்.

(7) கல்வி, உணவியல்.

(8) வரலாறு, தொல்பொருள் இயல்.

(9) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவம்.

(10) சிறப்பு வெளியீடுகள்.

2. மேலும் இத் திட்டத்தின்கீழ் 1—1—1968 முதல் 31—12—1970 வரை அடியிற்கண்ட இருபது வகைகளில் அடங்கும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள நூல்கள் பரிசுக்குரிய ஆய்விற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) கவிதை.

(2) நாவல்.

(3) மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்.

(4) பிற மொழிகளில் தமிழ்.

(5) மானிடவியல், சமூகவியல், பூகோளம், அரசியல், சட்டம்.

(6) பொருளாதாரம், வாணிகவியல்.

(7) கணிதம், வானவியல்.

(8) பொறியியல், தொழில் நுட்பவியல்.

(9) மருத்துவம், உடலியல், உணவியல், ஆரோக்கியம், சுகாதாரம்;

(10) தத்துவம், சமயம், அளவியல், அறவியல்.

(11) சிறு கதை.

(12) நாடகம்.

(13) கவின் கலைகள்.

(14) கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுய சரிதை, பயண நூல்கள்.

(15) தாவர இயல், விலங்கியல், புவியியல், உயிரியல், காட்டியல்.

(16) பௌதிகம், இரசாயனம்.

(17) கல்வி, உணவியல்.

(18) வரலாறு, தொல்பொருள் இயல்.

(19) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவம்.

(20) சிறப்பு வெளியீடுகள்.

3 ஒவ்வொரு தலைப்பிற்கும் முதற் பரிசு ரூ. 2,000-மும் இரண்டாவது பரிசு ரூ. 1,000-மும் அளிக்கப்படும். ஒரு தலைப்பின் கீழ்ப் பரிசுக்குத் தகுதியுள்ள நூல் அத்தலைப்பின் கீழ் அமைந்துள்ள எப் பொருளிலும் இருக்கலாம்.

4. ஒரே தலைப்பின் கீழ் இரு முறை யாதேனும் ஒரு பரிசை முன்னரே பெற்றுள்ள நூலாசிரியர் அதே தலைப்பின் கீழ் மூன்றும் முறையாகப் பரிசு பெறத் தகுதி உடையவரல்லர். மேலே சொல்லப்பட்ட தலைப்புகளில் பரிசளிப்புக்காக நூல்கள் அனுப்பும்போது எந்தத் தலைப்பில் எந்த நூல் அனுப்பப்படுகிறதோ அந்தத் தலைப்பில் இதற்கு முன் அந் நூலாசிரியர் இரு பரிசுகளைப் பெறவில்லை என்பதற்குரிய உறுதிமொழியையும் நூலுடனே அனுப்ப வேண்டும். எந்தத் தலைப்பின் கீழ் நூல் வெளியிடப்பட்டுள்ளது; அது வெளியிடப்பட்ட தேதி ஆகிய விவரங்களையும் நூலாசிரியர் தெரிவிக்க வேண்டும்.

5. பரிசுப் போட்டிக்கு நூல்களை அனுப்ப விரும்பும் நூலாசிரியர்கள், நூலின் ஆறு படிகளைத் " தமிழ் வளர்ச்சி இயக்குநர், குறளகம் (இரண்டாவது மாடி), சென்னை-1 " என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். நூல்களை 15—10—1971-ஆம் நாளுக்கு முன்னதாக அனுப்ப வேண்டும்.

முத்து. இராசாக்கண்ணனார்,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்.

(த. 3)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
### ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை போன்ற அரசுத் துறைகளில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்கண்ட பணிகளுக்காக, தனியாக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மதுரை வட்ட மக்கள் நல்வாழ்வுத்துறை மேற்பார்வைப் பொறியாளரால், 13, சர். பி. டி ராஜன் சாலை, மதுரை என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் 20—9—1971 பிற்பகல் 3 மணி வரை பெறப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்தப் பாரம். | விலை. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|---|
| | | | ரூ. பை. | |
| 1 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2-வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களை விநியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி I. | K-2 | 5 18 | ரூ. 960 (ரூபாய் தொள்ளாயிரத்து அறுபது மட்டும்). |
| 2 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2-வது கட்டம் மற்றும் CI, AC & P. V. C. குழாய்களை விநியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப்பகுதி—திட்டப்படி—பகுதி II. | K-2 | 5 18 | ரூ. 1,140 (ரூபாய் ஆயிரத்து நூற்று நாற்பது மட்டும்). |
| 3 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2-வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களை விநியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி III. | K-2 | 5 18 | ரூ. 1,250 (ரூபாய் ஆயிரத்து இருநூற்று ஐம் பது மட்டும்). |
| 4 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2-வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களை விநியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி IV. | K-2 | 5 18 | ரூ. 1,180 (ரூபாய் ஆயிரத்து நூற்றி எண்பது மட்டும்). |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் பிரிவு, 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி அலுவலகத்திலிருந்து 18—9—1971 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின் உறை மீது வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

20—9—1971 மாலை 3·30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளரால் (P. H. E.) அல்லது அவரால் நியமிக்கப்படும் அலுவலரால் அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

முடிவுத் தேதிக்குப் பின் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்பட மாட்டாது.

கே. கோவிந்த மேனன்,
மேற்பார்வைப் பொறியாளர் (P.H.E),
மதுரை-2.

தேதி : 18—8—1971.

(த. 6)

## தமிழ்நாடு அரசு

### குடிநீர், வடிகால் வாரிய சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், சென்னை சார்பிலும் அதற்காகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்காகக் கீழே குறிப்பிட்டுள்ள முறையில், துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20-9-1971 மாலை 3-00 மணிவரை, இத் துறையில் மேற்பார்வைப் பொறியாளரால் (பொது சுகாதார பொறியியல் சர்க்கிள்) ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3-30 மணிக்கு சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.பொ. சர்க்கிள்) அவர்களால் அல்லது அவரால் அமர்த்தப்படுபவரால் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| வேலையின் விவரம். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|
| 1 ராமநாதபுரம் நீர் வழங்கு திட்டம், ஒருமித்த கிணறு கட்டுமானம். (Collection well) (Cap. 6·00 Mld.) | 6,000 |
| 2 சிவகங்கா நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு. (Cap. 5·0 Mld.) | 5,000 |
| 3 திருச்சி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு. (Cap. 50 Mld.) | 45,000 |
| 4 கோயில்பட்டி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 15 Mld.) | 15,000 |

இந்த நான்கு வேலைகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் பொ. சு. பொறியியல் சர்க்கிள், மதுரை அவர்களால் பெறப்பட்டு அவரால் திறக்கப்படும்.

| | |
|---|---|
| 5 ஆம்பூர் நீர்வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 9 Mld.) | 10,000 |
| 6 வாணியம்பாடி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 9 Mld.) | 10,000 |
| 7 திருப்பத்தூர் நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 10 Mld.) | 12,000 |

5, 6, 7 வேலைகளுக்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொ. சு. பொறியியல் சர்க்கிள், சென்னை அவர்களால் பெறப்பட்டு, அவரால் திறக்கப்படும்.

1 முதல் 7 முடிய ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்த வடிவம் —மொத்தத் தொகை.

இந்த வேலைகள் ஒவ்வொன்றும் முடிக்கப்பட வேண்டிய கால அளவு : 6 மாதங்கள்

1 முதல் 7 முடிய ஒவ்வொரு வேலைக்கும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 10.00 (ரூபாய் பத்து மட்டும். இத்துடன் விற்பனை வரி.)

ஒப்பந்தப் பத்திரங்களுக்குரிய தொகையை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ செலுத்தி நிர்வாகப் பொறியாளர் 1/14, எட்வேர்டு எல்லியட்ஸ் சாலை, பொது சுகாதாரம் பொறியியல் டிவிஷன், சென்னை-4 அவர்களிடமிருந்து 25-8-1971 முதல் பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணம், எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிகளை வழங்க, கால நீட்டிப்பு தரப்படமாட்டாது.

எவ்விதக் காரணமும் கூறுமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் பகுதியாகவோ, முழுதுமாகவோ நிராகரித்துவிட ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்கும் அதிகாரமுள்ள அதிகாரிக்கு உரிமை உண்டு.

தலைமைப் பொறியாளர்,
பொது சுகாதாரப் பொறியியல் மற்றும் எம்.பி.எஸ். ஒர்க்ஸ்.

(த. 8)



## தமிழ்நாடு அரசு

### பொதுப் பணித்துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 22—9—1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்—
   மன்னார்குடியில் சப்-டிவிஷனல் மாசிஸ்ட்ரேட் கோர்ட் கட்டடங்கள் கட்டுதல்.
2. ஒப்பந்த வகை—L. S.
3. பிணைப்புப்பணம்—ரூ. 2,750. (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக்கொள்ளப்படும்.)
4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 30.
   அரசினர் கருவூலத்தில் பொ. ப செலுத்துத் தொகை 111 மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் செயற் பொறியாளர், கல்லணைக் கால்வாய், தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.
5. விற்பனை வரி : ரூ. 1.05 அரசினர் கருவூலத்தில் XII. விற்பனை வரி 'பி' பற்றுச் சீட்டு மாநில விற்பனைவரி சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி எனும் தலைப்பில் செலுத்தல் வேண்டும்.
6. கட்டடங்கள் கட்டுவதற்கான கால அளவு
   8 மாதங்கள்.
7. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள் :— 16—8—1971

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.)
தஞ்சாவூர் வட்டம்.

9—7—71. தஞ்சாவூர்.

(த. 15)





## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தெற்குக் கோட்டம்

### ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தென்சென்னை புறநகர்ப் பகுதித் திட்டத்திற்கான கீழ்க்கண்ட வேலைகளுக்காக வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயர் ஆகியவை உறைமீது குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட தனித் தனியான ஒப்பந்தப் புள்ளிகள் அதனதன் பெயர்களுக்கு எதிரில் குறிப்பிடப்பட்ட நாட்களில் மாலை 3 மணிக்கு முன் கிடைக்குமாறு அடியில் கையெழுத்திட்டவரால் வரவேற்கப் படுகிறது. ஒப்பந்தப் புள்ளிகள் அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| எண். | வேலையின் விவரம். | வேலையின் மதிப்பீடு. ரூ. | கட்டுந் தொகை. ரூ. | ஒப்பந்த புள்ளி விலை. ரூ. | கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| 1 | பெசந்த் நகரில் ஒன்றில் இரண்டு எண் 3 படுக்கை அறைகள் கொண்ட குடியிருப்புகள் (பிளாட்ஸ்) உள்ள 3 கட்டடங்கள் கட்டுவது—(பிளாக்குகள்) அணி-1. | 1,92,000 | 2,880 | 10·30 | 21—9—71. |
| 2 | பெசந்த் நகரில் ஒன்றில் இரண்டு எண் 3 படுக்கை அறைகள் கொண்ட குடியிருப்புகள் (பிளாட்ஸ்) உள்ள 3 கட்டடங்கள் கட்டுவது—(பிளாக்குகள்) அணி-2. | 1,92,000 | 2,880 | 10·30 | 21—9—71. |
| 3 | பெசந்த் நகரில் ஒன்றில் இரண்டு எண் 3 படுக்கை அறைகள் கொண்ட குடியிருப்புகள் (பிளாட்ஸ்) உள்ள 3 கட்டடங்கள் கட்டுவது—(பிளாக்குகள்) அணி-3. | 1,92,000 | 2,880 | 10·30 | 22—9—71. |
| 4 | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகக் கட்டட எல்லைக்குள் சிற்றுண்டி விடுதி, அரங்கம், அலுவலகம் ஆகியவற்றிற்காக 4 மாடிகள் கொண்ட ஒரு கட்டடம் கட்டுவது. | 1,90,000 | 2,850 | 10·30 | 22—9—71. |
| 5 | பெசந்த் நகரில் டி.டி. எண் 2பி/70யின்படி, ஒன்றில் 4 ஆக சிறிய இரு அறைகள் கொண்ட எல்.ஐ.சி. குடியிருப்புகள் 6 கட்டடங்கள் கட்டுவது அணி எண் 1. | 2,16,000 | 3,240 | 15·45 | 22—9—71. |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | பெசந்த் நகரில் டி.டி. எண் 2பி/70யின்படி, ஒன்றில் 4 ஆக சிறிய இரு அறைகள் கொண்ட எல்.ஐ.சி. குடியிருப்புகள் 6 கட்டடங்கள் கட்டுவது அணி எண் 2. | 2,16,000 | 3,240 | 15·45 23—9—71. |
| 7 | பெசந்த் நகரில் டி.டி. எண் 2பி/70யின்படி, ஒன்றில் 4 ஆக சிறிய இரு அறைகள் கொண்ட எல்.ஐ.சி. குடியிருப்புகள் 6 கட்டடங்கள் கட்டுவது அணி எண் 3. | 2,16,000 | 3,240 | 15·45 23—9—71 |
| 8 | பெசந்த் நகரில் டி.டி. எண் 2பி/70யின்படி, ஒன்றில் 4 ஆக சிறிய இரு அறைகள் கொண்ட எல்.ஐ.சி. குடியிருப்புகள் 6 கட்டடங்கள் கட்டுவது அணி எண் 4. | 2,16,000 | 3,240 | 15·45 23—9—71. |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மற்றும் பிறதகவல்களை நிர்வாகப் பொறியாளர், தெற்குக் கோட்டம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை-35-ல் உள்ள அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 2 மணி வரை பணம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். குமரேசன்,
நிருவாகப் பொறியாளர் (தெற்கு).

(த. 94)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

#### அரிசன நலத்துறை

கீழ்க்கண்டவற்றை வழங்குவதற்கு மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இந்த ஒப்பந்தப் புள்ளிகள் ஒவ்வொன்றும் தனித் தனியாக அரிசன நலத்துறைஇயக்குநரிடம் 16—10—1971 மாலை 4 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பி வைக்கப் பட வேண்டும். இலவசமாகப் புகை வண்டி மூலமாக, சம்பந்தப்பட்ட மாவட்ட நல அலுவலரின் தலைமை அலுவலகத்தில் இந்தப் பொருள்கள் கிடைக்கவேண்டும். பழுது பார்க்கும் வசதிகள் பற்றியும் இந்த ஒப்பந்தப் புள்ளியில் விவரங்கள் தரப்படவேண்டும்.

எந்தப் பொருளுக்காக ஒப்பந்தப் புள்ளி அனுப்பப் படுகிறதோ, அதன் பெயர் உறை மீது தெளிவாகப் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எந்த விதக் காரணமும் காட்டாமல், ஒப்பந்தப் புள்ளியை ஏற்றுக் கொள்ளவோ, தள்ளிவிடவோ, முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ளவர், அரிசன நல இயக்குநர்.

ஒப்பந்த நிபந்தனைகள் நிறைவேற்றப் பட்டபின் ஒப்புதல் பெற்ற விதத்தில் மாவட்ட நல அலுவலர் பணத்தினைப் பட்டுவாடா செய்வார்.

பொருள்களுக்கான வரைக் குறிப்புகளை அரிசன நல இயக்குநர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 இடமிருந்து 11—10—71-க்கு முன் எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 3 வரை பெற்றுக் கொள்ளலாம்.

மாதிரிக் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவற்றை 23—10—71 அன்று பார்வையிடுவதற்காக அரிசன நல இயக்குநர் அலுவலகத்திற்கு ஒப்பந்தப் புள்ளிதாரரின் செலவில் கொண்டு வர வேண்டும்.

சென்னையில் பார்வையிடும் போது காட்டப்பட்டது போன்ற அதே தரத்திலுள்ள பொருட்களையே மாவட்ட நல அலுவலர்களுக்கு வழங்க வேண்டும். மற்றப்படி அவை தகுந்த தொழில் நுணுக்க அதிகாரியினால் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வழங்க வேண்டிய பொருட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது பற்றித் தெரிவிக்கப்படும். அவர் அதற்கான ஒப்பந்தத்தை ஸ்டாம்ப் தாளில் கையெழுத்திட்டுத் தருவதோடு மொத்த மதிப்பீட்டில் 10 சத விதத்தைக் காப்புத் தொகையாக ஒழுங்காகவும் விரைவாகவும் பொருட்களை வழங்குவதன் பொருட்டுக் கட்ட வேண்டும்.

வழங்க வேண்டிய பொருள்கள்.

1. கொல்லன் வேலைக் கருவிகள்.
2. தச்சு வேலைக்கான கருவிகள்.
3. வெட்டுக் கருவிகள் (Loggings)

இயக்குநர்,
அரிசன நலத்துறை,
எழிலகம், சென்னை-5.

(த.92)



# தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

ஒப்பந்தப் புள்ளி

கடித எண் 101/71/எச்.டி./தேதி 1—9—71.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், கீழ்க்கண்ட பணிகளுக்காக உறையின்மீது வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயர் எழுதப் பெற்ற மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து நிர்வாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியம், 1-வது கோட்டம், 35/37, ஜெகாங்கீர் தெரு, 2-வது கடற்கரை சாலை, சென்னை-1ஞல் 1—10—71 மாலை 3 மணி வரை வரவேற்கப் படுகிறது. ஒப்பந்தப் புள்ளிகள் அடியில் கையெழுத்திட்டவரால் அன்றே மாலை 3-05 மணிக்கு, அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | ஒப்பந்த விவரம். | வேலையின் தோராய மதிப்பீடு. ரூ. | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (திருப்பித்தரப் படமாட்டாது). |
|---|---|---|---|---|---|
| 1 | இராயபுரம் டென்ஸ் வேரிட்டர்ஸ் எல்லைக்குள் ஆர். எஸ். எண் 499-ல் டி.டி. 7/71-ன்படி 4 மாடிக் கட்டடங்கள் (32 குடியிருப்புகள் கொண்ட பிளாக்-1, 24 கொண்ட பிளாக்-1) கட்டுவது—அணி எண்-1 (பிளாக் 1 & 2). | முழுத் தொகை. | 3,08,000 | 4,620 | ரூ. 20 + விற்பனை வரி. |
| 2 | இராயபுரம் டென்ஸ் குவார்ட்டர்ஸ் எல்லைக்குள் ஆர். எஸ். எண் 499-ல் டி.டி. 7/71-ன்படி 4 மாடிகள் கொண்ட குடியிருப்புகள் (1 பிளாக்கில் 32 குடியிருப்புகள் கொண்ட 2 பிளாக்குகள் 24 கொண்ட 2 பிளாக்குகள் கட்டுவது. அணி-2(பிளாக் 1 முதல் 6). | முழுத் தொகை. | 6,16,000 | 9,240 | ரூ. 20-ம்+விற்பனை வரியும். |
| 3 | அணி-3 (பிளாக்குகள் 7 முதல் 10). | முழுத் தொகை. | 6,16,000 | 9,240 | ரூ. 20-ம்+விற்பனை வரியும். |
| 4 | (ஒரு பிளாக்கில் 32 குடியிருப்புகள் கொண்டது ஒன்று) அணி-4 (பிளாக் எண் 12). | முழுத் தொகை. | 1,76,000 | 2,640 | ரூ. 15-ம்+விற்பனை வரியும். |
| 5 | (ஒரு பிளாக்கில் 24 குடியிருப்புகள் கொண்ட பிளாக்-1) அணி-5 (பிளாக் எண் 11). | முழுத் தொகை. | 1,32,000 | 1,980 | ரூ. 15-ம்+விற்பனை வரியும். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம்-1, 35/37, ஜெகாங்கீர் தெரு, 2-வது கடற்கரை சாலை, சென்னை-1 அலுவலகத்திலிருந்து 15—9—71 முதல் 29—9—71 வரை எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11 மணியிலிருந்து மாலை 3 மணி வரை, விற்பனை வரியுடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்குப் பணம் கட்டிய செலானைத் தந்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்கான விலையினை சென்னை சைதாப்பேட்டையிலுள்ள ஸ்டேட் பாங்கில் '' Personal Deposit Account (P.D. A/c) of the Executive Engineer, Slum Clearance Board Division I '' என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். விற்பனை வரி ''XII—Sales tax B receipt under Sales tax Act'' என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். பொது விற்பனை வரியும், இரு செலான்களும் தரப்பட வேண்டும்.

ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லாவற்றையுமோ எந்தவிதக் காரணமும் காட்டாமல் தள்ளிவிடும் உரிமை உண்டு.

எம். ஆத்மநாதன்,
நிருவாகப் பொறியாளர்,
குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
(கோட்டம்-I).

(த, 93)

---

## பயிற்சி

### தமிழ்நாடு அரசு

தொழில் நுட்பக் கல்வித் துறை,
சென்னை—25.

அறிக்கை

மைய பன்னுட்பத் தொழில் பள்ளியில் (மத்திய பாலிடெக்னிக்), அடையார், சென்னை 20-ல் (1) உலோகவியல் (மெட்டலார்ஜி), (2) மருத்துவ தளவாட தொழில் நுட்பவியல் ஆகியவற்றில் உயர் டிப்ளமா வகுப்புக்குச் சேர்த்துக் கொள்ளல்.

தகுதியுள்ளவர்களிடமிருந்து இந்த வகுப்பில் சேர்வதற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

சேருவதற்குரிய தகுதி :

(1) உலோகவியலில் உயர் டிப்ளமா வகுப்பு—

இந்த வகுப்பில் சேர விரும்புகின்றவர்கள் இயந்திரப் பொறியியலில் அங்கீகரிக்கப்பட்ட பட்டமோ அல்லது டிப்ளமாவோ பெற்றிருக்க வேண்டும்.

(2) மருத்துவத் தளவாடத் தொழில் நுட்பவியலில் உயர் டிப்ளமா வகுப்பு.

இந்த வகுப்பில் சேர விரும்புகின்றவர்கள் மின்சாரப் பொறியியல் அல்லது எலக்ட்ரானிக்ஸ்ஸில் அங்கீகரிக்கப்பட்ட பட்டமோ அல்லது எலக்ட்ரானிக்ஸ் அல்லது எலக்ட்ரானிக் விருப்பப் பாடமாக அமைந்த மின்சாரப் பொறியியலில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளமாவோ பெற்றிருக்கவேண்டும்.

வகுப்பு விவரம்

உலோகவியலில் உயர் டிப்ளமா வகுப்பு

இந்த வகுப்பு, படிப்புடன் தொழிற்சாலைகளில் நேரடிப் பயிற்சி முறையில் (Sandwich Pattern), ஆறுமாதக் காலம் கொண்ட 3 பருவத்திற்கு (Three Semesters) நடைபெறும்.

வகுப்பின் நோக்கம்

இந்த வகுப்பின் நோக்கம் இந்த வகுப்பில் வெற்றி பெற்றவர்கள் உலோகவியல் வல்லுநர்களாகப் பணியாற்றக் கூடிய அளவுக்கு, உலோகவியல் அடிப்படை மற்றும் நவீன மேம்பாடு முறைகளைப் பரிசோதனை வேலைகளுடன் தொடர்புபடுத்திக் கற்பிப்பதேயாகும். இதனால் தொறிற்சாலைகளில், மேற்கொள்ளப்படும் பல்வேறு உலோகவியல் முறைகளில் மாணவர்களுக்குப் பழக்கம் ஏற்படுத்துவதற்காக அவர்களுக்குப் படிப்புடன் நேரடிப் பயிற்சியும் இணைந்த (Sandwich Type) முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மருத்துவத் தளவாடத் தொழில் நுட்ப வியலில் உயர் டிப்ளமா வகுப்பு

இவ்வகுப்பு ஒவ்வொன்றும் 6 மாதக் காலம் கொண்ட 3 பருவத்திற்கு (Three Semesters) நடைபெறும்.

வகுப்பின் நோக்கம்

இவ்வகுப்பின் நோக்கம், மருத்துவ மனைகளில் பயன்படுத்தப்படும் மின்சார—மருத்துவ, இயந்திர தளவாடங்களைப் பராமரிப்பது, பழுது பார்ப்பது ஆகியவற்றில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதேயாகும்.

ஒவ்வொரு பருவத்திற்கும் படிப்புக் கட்டணமாக ரூபாய் 90-ம், சிறப்புக் கட்டணமாக ரூபாய் 20-ம் இவ்வகுப்புகளுக்கு வசூலிக்கப்படும். வகுப்பில் சேரும் போது, கருவிகள், தளவாடங்கள் தொலைந்து போதல் அல்லது பழுதுபட்டு விடுதல் வகையில் ஒவ்வொருவரும் கட்டுத் தொகையாக ரூபாய் 25-00 செலுத்தவேண்டும்.

மேற் கூறிய வகுப்புகளில் சேர விரும்புகின்றவர்கள், இதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள மனுவைப் பூர்த்தி செய்து, பதிவுக் கட்டணமாக ரூபாய் 5·00 க்கு கிராஸ் செய்யப்பட்ட போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும். முதல்வர் மைய பன்னுட்பத் தொழிற் பள்ளி (மத்திய பாலிடெக்னிக்), அடையார், சென்னை-20 அவர்கள் அலுவலகத்தில் கிராஸ் செய்யப்பட்ட ஒரு ரூபாய் போஸ்டல் ஆர்டர் செலுத்தி மனுத்தாள்களை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள், முதல்வர், மைய பன்னுட்ப தொழிற் பள்ளி, அடையார் சென்னை-20 அவர்களுக்கு 20—9—1971 அன்றோ அல்லது அதற்கு முன்போ வந்து சேர வேண்டும்.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25.**

(த. 66)






"உரம் செய்வதை உற்றார் செய்யமாட்டார்" என்பது பழமொழி. இது பழமொழியாயினும், வாய்மை மொழியென நிருபித்துள்ளார் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த காரமடையிலுள்ள திரு ஏ. ஜி. ரெங்கநாதன் அவர்கள். இவர் கடந்த சம்பா பட்டத்தில் ஐ.ஆர். 20 நெல்லைப் பயிர் செய்து ஏக்கருக்கு 3,553 கிலோ மகசூல் எடுத்துள்ளார். இதனால் இவருக்கு ஏக்கருக்கு ரூ. 1,300 நிகர லாபமும் கிடைத்துள்ளது.

"எனக்கு ஐ.ஆர். 20 நெல் சாகுபடியில் அமோக விளைச்சல் கிடைத்ததற்கும், அதிக லாபத்திற்கும் காரணம், நான், தழை, மணி, சாம்பல் சத்துக்கள் நிறைந்த என். பி. கே. MF காம்ப்ளக்ஸ் உரங்களை மண் பரிசோதனைச் சிபாரிசுப்படி இட்டேன்; இதனால் நல்ல பலன் கண்டேன்." இவ்வாறு திரு ஏ. ஜி. ரெங்கநாதன் கூறுகிறார்.

ஐ.ஆர். 20 நெல்லைப்பயிர்செய்ததில் இவருக்குக் கிடைத்துள்ள மகசூல், மற்ற எவரும் பெறாத மகசூலாகும். ஏன், வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் கூட அதிகபட்சம் ஏக்கருக்கு இரண்டே முக்கால் டன் அளவே விளைந்துள்ளது. ஆகவே தான், காரமடை திரு ஏ. ஜி. ரெங்கநாதன் ஏக்கருக்கு மூன்றரை டன் அளவு, பெற்றுள்ள மகசூல் அமோகமானது, ஆச்சரியப் படக்கூடியது, பாராட்டக் கூடியது என்று பலர் கருதுகின்றனர்.

"இச் சாதனையைப் புரியத் தூண்டுகோலாய் அமைந்தது மதராஸ் பெர்ட்டிலைஸர்ஸ் நிறுவனம் ஆகும். அந்த நிறுவனத்திற்கு எனது நன்றி" என்கிறார் திரு ஏ. ஜி. ரெங்கநாதன். சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை. ஆகவே, சுடர் விளக்கான உழவர் குழாத்திற்கு, மதராஸ் பெர்ட்டிலைஸர்ஸ் தூண்டுகோலாய் உதவுகிறது. மதராஸ் பெர்ட்டிலைஸர்ஸ் நிறுவனம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தும் "விஞ்ஞான விஸ்தரிப்புத் திட்டத்தின்" கீழ் உழவர்களின் கழனிகளிலேயே நிருபணங்களை அமைத்து உயர் விளைச்சல் ரகங்கள், சமச்சீர் உரமிடுதல், பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக்கடைப்பிடித்தல், பல பயிர் சாகுபடி செய்தல் ஆகியவை, செயல்முறையில் செய்து காண்பிக்கப்படுகின்றன. இம் மாதிரியான நிருபணத்திற்காகவே, திரு ஏ. ஜி. ரெங்கநாதன் அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவரது தோட்டத்தில் இரண்டு ஏக்கர் பரப்பளவு, நிருபணத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த நிருபண வயலில்தான் ஐ. ஆர். 20 நெல் பயிரை மதராஸ் பெர்டிலைஸர்ஸ் நிறுவனத்தாரின் சிபாரிசுப்படி பயிர் செய்து அவர் அமோக விளைச்சலைப் பெற்றார்.

ஐ.ஆர். 20 நெல் பயிரிடுவதற்கு முன், "உழவர்கள் தங்கள் மண்ணைப் பரிசோதனைசெய்து மண் வளத்திற்கு ஏற்ப உரமிடுவது லாபகரமானது" என்பதை அறிந்த மதராஸ் பெர்ட்டிலைஸர்ஸ் நிறுவனத்தார், திரு ரெங்கநாதன் தோட்டத்து மண்ணையும் தங்களது மண் பரிசோதனை நிலையத்திலேயே பரிசோதனை செய்தனர். சென்ற ஆகஸ்டு, முதல் வாரத்தில் இரண்டு ஏக்கரிலும் நடவு செய்யத் தேவையான 20 சென்ட் நாற்றங்காலில், 30 கிலோ விதை நாற்றுவிடப்பட்டது. நாற்றங்காலை நல்ல முறையில் உழுது, புழுதி ஆன பின் நாற்றங்காலுக்கு ஏக்கருக்கு 50 வண்டி வீதம் தொழு உரம் போட்டு, நெல் விதைகளை அக்ரசான் மருந்தில் கலந்து பின் தெளிக்கப்பட்டது. நாற்றுப் பறிக்கப் பத்து நாட்களுக்கு முன்பு நாற்றங்காலில் என்டிரின், டைத்தேன் மருந்துகள் கலந்து தெளிக்கப்பட்டது.

நடவு வயலை நன்றாக உழுது ஏக்கருக்கு இருபது வண்டி வீதம் தொழு எரு போடப்பட்டது. பிறகு, நடுவதற்கு முன், ஏக்கருக்கு 15 : 15 : 15 MF காம்ப்ளக்ஸ் உரம் 120 கிலோவை இட்டு, உழுது, பின் பரம்பு அடித்து, நடவு செய்யப்பட்டது. செழுமையாக இருந்த நாற்றங்காலிலிருந்து 24 நாட்கள் வயதான நாற்றுகளைப்பறித்து நடவு செய்யப்பட்டன. 20 செ.மீ.க்கு 10 செ.மீ. இடைவெளிவிட்டு நடப்பட்டது.

நட்டபின், சீக்கிரமே பயிர் பச்சை கொண்டு, நல்ல முறையில் வளர்ந்தது. நெற்பயிருக்கு நடவு செய்யும்போது சமச்சீர் அளவில் அடியுரமாக காம்ப்ளக்ஸ் உரமிடுவது மிகவும் முக்கியம். அதனால் பயிருக்கு உடனடியாக உணவு கிடைத்து அதிக தூர் வெடித்து, பயிர் செழுமையாக வளரும். அவ்வாறே, நட்டபின், கதிர் வாளிப்பாகப் பெருகுவதற்கும், மணிகள் எல்லாமே முற்றுவதற்கும் நட்ட 22-ஆம் நாளும், 45-ஆம் நாளும் மேலுரமாக யூரியா ஏக்கருக்கு 50 கிலோ வீதம் ஒவ்வொரு தடவையும் இடப்பட்டது. அதாவது மொத்தமாக ஏக்கருக்கு 100 கிலோ யூரியா

இரண்டு தடவைகளில் மேலுரமாகத் தூவப்பட்டது. இவ்வாறு, அடியுரமாக ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்தும், 18 கிலோ மணிச்சத்தும், 18 கிலோ சாம்பல் சத்தும், மேலுரமாக ஏக்கருக்கு 46 கிலோ தழைச் சத்தும் இடப்பட்டன. ஆகவே, மொத்தமாக 64 : 18 : 18 கிலோ என்ற அளவில் ஐ.ஆர். 20 நெல் பயிருக்கு உரமிடப்பட்டது. ஆனால் மண் பரிசோதனை சிபாரிசு இல்லாத நிலங்களுக்கு 75 : 35 : 35 என்ற அளவில் உரச்சத்துக்களை இடவேண்டும். இது பொதுவான சிபாரிசு ஆகும். மண் பரிசோதனை செய்வதால், சரியான அளவு உரமிட்டு, அதிக லாபம் பெற முடியும்.

''ஏரினும் நன்றால் எருவிடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு''

என்பதற்கு ஏற்ப, ஐ.ஆர். 20 பயிர் சாகுபடியில் பயிர்ப் பாது காப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதும் அவசியமாகும். திரு ரெங்கநாதன் அவர்கள் ஐ.ஆர். 20 நெல் பயிருக்கு நட்டதிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை என்ட்ரின், டைத்தேன், ஹீலியோடோக்ஸ், பாலிடால் ஆகிய மருந்துகளை மாற்றி மாற்றி மொத்தத்தில் ஐந்து முறைகளும் குருத்துப் பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பயிரைக் காக்கச் செவின் குருணைகளை இரண்டு முறைகளும் பயன்படுத்தினார். கோவை மாவட்ட உழவர்கள் பொதுவாகப் பயிர்களுக்கு மருந்தடிப்பதில் சலிப்பே பெறாதவர்கள். ஆகவே திரு ரெங்கநாதன் ஐ.ஆர். 20 நெற் பயிருக்குத் தொடர்ந்து மருந்து தெளித்ததில் ஆச்சரியமே இல்லை. இப்பயிர்ச் சாகுபடியில் திரு ரெங்கநாதன் அவர்களுக்கு எலித்தொல்லை தான் அதிகம். ஆகவே, எலிகள் பயிர்களை அழிக்காமல் இருக்கப் பயிரைச் சுற்றிலும் மின் வேலி கூட அமைத்தார். ஐ.ஆர். 20 பயிர் நன்றாக வளர்ந்து குலுங்கியதால், யாவரின் கவனத்தையும் ஈர்த்தது. இந்த வயல், கோவையிலிருந்து உதகை செல்லும் நெடுஞ்சாலையின் அருகில் இருந்ததால், சாலை வழியே செல்லும் எல்லோரின் கவனத்தையும் கவர்ந்தது. விதைத்த 135 நாட்களில் பயிர் அறுவடை செய்யப்பட்டது. திரு ரெங்கநாதனுக்கு ஐ.ஆர். 20 நெல் சாகுபடி செய்ய மொத்தம் ஏக்கருக்கு ரூ. 840 செலவாயிற்று. ஏக்கருக்கு 3½ டன் விளைச்சலிலிருந்து ரூ. 2,100 வருமானம் கிடைத்தது. ஆகவே, செலவு போக ஏக்கருக்கு ரூ. 1,300 நிகர லாபத்தை அவர் பெற்றார். ஐ.ஆர். 20 நெல் சன்ன ரகத்தைச் சேர்ந்ததால், விற்பதில் சிரமம் இல்லை. அதே சமயத்தில் மூட்டைக்கு ரூ. 4 அதிகமாகவும் விலை கிடைத்தது.



''பேச்சு, கருத்தின் தொகுப்பு. ஆகையால், பேச்சு பயனும் சுவையும் தருவதாக இருக்க, கருத்துக்களைக் கவனித்தாக வேண்டும். கருத்து சிந்தனையின் விளைவு. சிந்தனை, காண்பன கேட்பனவற்றிலே தொடர்ந்து ஏற்படும் ஆர்வம். ஒரே பொருள், காண்போருக்கு வெவ்வேறு சிந்தனையைக் கிளறி வெவ்வேறு கருத்தை அண்டி, அதற்கேற்ற முறையிலே, பேச்சு பிறக்கச் செய்யும். வேப்பிலை, வைத்தியர், பூசாரி எனும் இருவருக்கும் வேறு வேறான எண்ணம் தருவது போல.



ஐ.ஆர். 20 நெல்லைப் பயிரிட்டு திரு ரெங்கநாதன் செய்த சாதனையை மற்ற உழவர்களும் செய்து காட்டமுடியும். ஆகவே, அவரைப் போன்றே, ஐ.ஆர்.20 நெல் பயிர் செய்வோர், சமச்சீர் அளவில் மண் பரிசோதனை செய்து என்.பி.கே. MF காம்ப்ளக்ஸ் உரமிட்டுப், பயிர்ப் பாது காப்புச் செய்து, திருந்திய சாகுபடி முறைகளைக் கடைப்பிடித்தால் அமோக விளைச்சல் பெற முடியும்.

டி: கணபதி,
பயிற்சி, விளம்பர அலுவலர்,
மெட்ராஸ் பெர்ட்டிலைசர்
லிமிடெட்







# தேரையும் சேயிழையும்



இலக்கியப்பித்தன்

தேரை—என்பது தவளைக் குடும்பத்தில் தோன்றிய ஒன்று; இந்தத் தேரை குழந்தையின் மேல் விழுந்தால் குழந்தை மெலிந்துவிடும் என்கிற மூட நம்பிக்கை இன்னும் மக்களிடமிருந்து முழுதுமாக மறைந்தபாடில்லை. தேரைக்கும் குழந்தையின் மெலிவுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. இதுபோலவே,

தேரை—விழுந்த தேங்காயைப் பலர் பயன்படுத்துவதில்லை. தேரைவிழுந்த தேங்காயின் உள்ளீடான பருப்பு வளர்ச்சியின்றித் திரைத்துப் போயிருக்கும். இது, தென்னையில் தோன்றும் ஒரு வகை நோய். இதற்கும் தேரை என்று பெயரிட்டு வழங்குகிறோமே தவிர, தவளைக் குடும்பத்தில் தோன்றிய தேரைக்கும், தேங்காயின் உள்ளீடான பருப்பைத் திரைத்து மெலிய வைக்கும் தேரை நோய்க்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. 'தேரையார் தெங்கிளநீர் உண்ணார் பழிசுமப்பர்' என்னும் தமிழ் நாவலர் சரிதம் இதனையுணர்த்தும்.

தேரை— நாம் முன்னர்க் குறிப்பிட்டது போல் தவளைக் குடும்பத்தில் தோன்றி மரத்தில் வாழும் வாழ்க்கையை மேற்கொண்டன; இவற்றில், மரத்தில் வாழ்வதைவிட்டு, மண்ணுக்கே திரும்பி வந்துவிடுவனவும் உண்டு.

தேரை—கல்லுக்குள் உயிர் வாழ்வதைச் சிற்பிகள் கண்டாய்ந்து தெளிவுறுத்துகின்றனர். 'கல்லினுள் தேரைக்கும்' என்னும் கவிஞர் வாக்கும் இதனை உறுதிப்படுத்தும். இது தவிர,

தேரையார்—என்னும் சித்தர் ஒருவர் பண்டைத் தமிழகத்தில் மருத்துவத் துறையில் சிறந்து விளங்கினர். இவரைத் தருசௌமியரின் மாணவர் என சிலரும் கத்தியரின் மாணவர் எனச் சிலரும் கூறுவர்.

தேரையாா— தாம் வாழ்ந்த காலத்தில், அரிதின் முயன்றும் நீக்கமுடியாத அரசன் ஒருவனின் தலைவலியைப் போக்கினர் என்பர். அதாவது, தேரையார், அரசனின் கபாலத்திற்குள் ஒரு தேரை இருப்பதைக் கண்டறிந்தார். பின், சம்மோகினி என்னும் ஒரு பச்சிலையின் உதவியால் அரசனுக்கு மயக்கத்தை உண்டாக்கி, அவனுடைய கபாலத்தைத்திறந்து, அங்கிருந்த தேரைக்கு ஒரு நீர்க்கிண்ணத்தைக் காட்டினர். அதைக் கண்டதும் அந்தத் தேரை நீர்க்கிண்ணத்திற்குள் பாய்ந்தது. உடனே, சந்தான கரணி என்னும் மற்றொரு பச்சிலையின் உதவியால், திறந்த கபாலத்தை முன்போல் பொருத்தித் தலை வலியைப் போக்கினர். இப்படி ஒரு கதை வழங்கி வருகிறது. வடமொழி நூலான போஜப் பிரபந்தத்திலும் இத்தகையதொரு கதை வழங்குகிறது. இவ்வாறு மருத்துவத் துறை வல்லுநராக விளங்கிய தேரையார் பதார்த்த குண சிந்தாமணி, நீர்க்குறி நெய்க்குறி சாத்திரம், தைல வருக்கச் சருக்கம், வைத்திய மகவெண்பா, மணிவெண்பா முதலிய பல நூல்களையும் இயற்றி இலக்கியத் தொண்டும் புரிந்திருக்கிறார். அடுத்து,

தேரை—பழிச் சொல் பெற்றது போல் பழிக்கு ஆளான சேயிழை ஒருத்தியை நமக்கு முத்தொள்ளாயிரம் என்னும் சத்தான நூல் படம்பிடித்துக் காட்டுகிறது. முத்தொள்ளாயிரம், முடியுடையரசர் மூவரையும் பற்றிப் பாடப்பெற்ற இனிய-எளிய பாடல்களின் - வெண்பாக்களின் தொகுப்பு. இவற்றுள் ஒன்றே தேரையையும், அந்தத் தேரையைப்போல் பழியினைப் பெற்ற சேல்விழியாளையும் நமக்குக் காட்டுகின்றது. சேயிழையாளே பேசுவதாக அமைந்துள்ளது அந்தப் பாடல்!

'தேரை' பழிச்சொல் பெற்றது போல நானும் பழிச்சொல் பெற்றேன். ஆம்! தேங்காயைத் தேரை தின்னவில்லை; தேரை விழுந்ததாகக் கூறப்பெறும் தேங்காயினுள் தேரையும் காணப்பெறவில்லை! அதுபோலவே, திரண்ட-திண்ணிய தோள்களையுடைய— தோள்வலிவுடைய சோழ மன்னனுக்கும் எனக்கும் எத்தகைய தொடர்புமில்லை. எனினும், நான் சோழ மன்னனைக் காதலிப்பதாக — சோழமன்னனிடத்துக் காதல் கொண்டிருப்பதாகக் கருதி என் தாயும் என்னைக் கோல்கொண்டடித்துக் கடிந்து கொள்கிறாள். சோழ மன்னனை நான் கண்டது தவிர வேறு எத்தொடர்பும் கொண்டதில்லை. தேரையைப் போல் பழிசுமத்தப் படுகிறேன்!

"தேரை மீது பழிசுமத்தித் தூற்றுவது போல இந்த ஊர் மக்களும் என்மீது பழிசுமத்தி, என்னையும் சோழமன்னனையும் தொடர்பு படுத்தித் தூற்றுகின்றனர். உண்மையில் எனக்கும் சோழமன்னனுக்கும் எத்தகைய தொடர்புமில்லை! நான் மன்னனைப் பார்த்தது தவிர வேறு ஒரு பாவமும் செய்தறியேன். ஐயகோ! பழியோரிடம்! பாவம் ஓரிடமா? அப்படித்தானே இருக்கிறது என் நிலை" என்று வேதனை கலந்த குரலில் அந்தச் சேல்விழியாள் பேசுவதை அப்படியே நமக்குப் படம்பிடித்துக் காட்டும் முத்தொள்ளாயிரப்பாடலைப் பாருங்கள்.

அன்னையும் கோல்கொண்டு
அலைக்கும் அயலாரும்
என்னை அழியுஞ்சொல்
சொல்லுவர்—நுன்னிலைய.
தெங்குண்ட தேரைப்
படுவழிப் பட்டேன்யான்
திண்தோள் வளவன்
திறத்து!



593



"கண்கவர் கலைப்பொருட்களின் களஞ்சியம்'' நமது தமிழகம. இதன் அரிய பொருட்களில் பத்தமடைப் பட்டுப்பாயும் ஒன்ருகும். அயல் நாடுகளிலிருந்து வருகை தருவோருக்குத் தமிழ் நாட்டிலிருந்து வழங்கப்படும் கலைப் பொருட்களில் ஒன்று பத்தமடைப்பாய் என்பது ஒரு மரபாகவே அமைந்துவிட்டது. ருஷ்ய நாட்டு முன்ளுள் அதிபர் குருசேவ், திபெத் நாட்டு தலாய்லாமா, பஞ்சன்லாமா, இங்கிலாந்து ராணி எலிசபெத், மார்ஷல் டிட்டோ போன்ற உலகப் பெருமக்களுக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட பெருமை பத்தமடைப் பட்டுப் பாய்க்குரியது. மேலும் கவர்ச்சி தரும் கலைப் பொருளாக மட்டுமின்றி அன்ருடத் தேவைக்குப் பயன்படும் பொருளாகவும் இது பயன்படுகிறது.

சிறந்த பொருட்கள் எல்லாம் அது பிறந்த இடத்தின் பெயரைத் தாங்கி நிற்பது இயற்கையே. ''கும்பகோணம் கொழுந்து வெற்றிலை'', ''விருதுநகர் வெள்ளரிப் பிஞ்சு'' என்பது போலத்தான் பத்தமடைப் பட்டுப்பாய் தான் பிறந்த ஊரைப் பெற்று நிற்கிறது. பத்தமடை கிராமத்தில் உலகத்திலேயே எங்குமே நெய்யாத மிக நேர்த்தியான துணி போன்ற பட்டுக் கோரைப் பாய்களைத் தயார் செய்கிருர்கள். இதனைப் பெரும்பாலும் முஸ்லீம் பெருமக்களே நெசவு நெய்து, இங்குள்ள கூட்டுறவுச் சங்கத்திலே கொடுத்து வருகிருர்கள். 1954-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இச்சங்கம் 111 உறுப்பினர்களைக் கொண்டதாக அரசின் பார்வையில் நடைபெற்று வருகிறது.

## கோரை பதனமாகும் முறை

இந்தச் சங்கத்தில் 140, 120, 100, 50, 40, 30 என்னும் தரமுள்ள பாய்களை உறுப்பினர்கள் நெசவு செய்து கொடுத்து அதற்குரிய விலையைப் பெற்றுக் கொள்கிருர்கள். பொதுவாக, இந்தத் தரப் பாய்கள் இம் மாவட்டத்தில் ஓடிவரும் தாமிரபரணி நதிக் கரையின் ஓரத்திலுள்ள ஓடைகளில் வளரும் தாமிரபரணிச் சத்து மிகுந்த கோரைகளைக்கொண்டே நெய்யப்படுகின்றன. தமிழக அரசு இந்தச் சங்கத்திற்கு மருதூர் அணை கோரைக் காட்டின் ஒரு பகுதியையும், கருங்காடு கோரைக்காட்டையும் வெகுமதி அளித்துள்ளனர். இப்படிப்பட்ட கோரைகளை அறுவடை செய்து கொண்டு வந்து இந்தச் சங்கத்தின் மூலம் உறுப்பினர்களுக்குக் கட்டுக் கட்டாக ஒரு குறிப்பிட்ட விலையில் விற்கிருர்கள். இதனைப் பெற்ற உறுப்பினர்கள் வெய்யிலில் சில நாட்கள் காயப் போட்டு அவைகளைச் சிறு சிறு கட்டுகளாகக் கட்டித் தாம்பிரபரணி நதியின் கிளையான கன்னடியன் கால்வாயில் நன்ருக ஓடும் நீரில் சுமார் 7 அல்லது 8 நாட்கள் ஊற வைத்துத் தினமும் சென்று சுத்தம் செய்துவருவார்கள். கோரைகள் ஊறி ஊறி மேல் தோல் வெளியே வரும் பக்குவத்தில் அந்தக் கட்டுக்களை இல்லத்திற்கு எடுத்து வருவார்கள்.




இங்கிலாந்து ராணி எலிசபெத் சென்னை மாநகருக்கு வருகை தந்தபோது அவருக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களில் பத்தமடைப் பட்டுப் பாயும் ஒன்று. ஆயிரம் ரூபாய் வரை விலையுள்ள பட்டுப் பாய்களை எவ்வாறு நெய்கிருர்கள், பத்தமடைப் பட்டுத்தொழில் எந்த நிலையில் உள்ளது என்னும் விவரங்களைத் தருகிறது இந்தக் கட்டுரை.

## மயிரிழைபோல

ஊறிய கோரையை எண். 140 120, 100 போன்ற பாய்களுக்குத் தரம் வாரியாக மேல் தோலைமட்டும் வெளியே எடுத்துக் கத்தியின் நுனி கொண்டு கீறுவார்கள். 100-ஆம் நெம்பர் பாய்க்கு ஒரு கோரையை ஐந்து கால்களாகக் கீறுகிருர்கள் என்ருல் 120-க்கு 8 ஆகவும், 140-க்கு 10 ஆகவும் கீறி எடுப்பார்கள்.

இவ்வாறு கோரையானது மயிரிழைபோல வந்துவிடும். இப்படிப்பட்ட நிலையில் சாயம் பிடிப்பார்கள். சாயங்களைச் சங்கம் வாங்கிவந்து உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்கிறது. கொதிக்கும் நீரில் போட்டுக் கீறி எடுத்த கோரைகளைக் கட்டி வைத்துச் சாயம் பிடிப்பார்கள். இந்தச் சாயம் உறுதி வாய்ந்தது.

பின்பு, இந்தச் சங்கத்தில் இருக்கும் 100-ஆம் நிர் 80-ஆம் நிர் நூல்களை உறுப்பினர்கள் வாங்கிச் சென்று நூற்று, பசையிட்டு பாவுகளில் போட்டுத் தறியைத் தொடக்கம் செய்வார்கள். பின்பு பாவினில் மேற்சொன்ன கீறிய கோரைகளைத் தறியின் ஊடே கொடுத்து முறுக்கேற்றி நெசவு செய்வார்கள். இப்படிப்பட்ட பாய் நாள் ஒன்றுக்கு நிர் 100-ல் 3½ சாண் 120-ல் 3 சாண் 140-ல் 2 சாண் வரையும் நெசவு செய்வார்கள். பின்பு அதனை இருகரத்திஞலும், இறுக்கமாக நெருக்குவார்கள். அதனை தொழிலாளர்கள் கடத்துதல் என்று சொல்வார்கள். இதளுல் பாதிப்பாய் இறுகும். இப்படியாக ஒரு முழுப்பாயினைத் தயார் செய்யக் கிட்டத்தட்ட நிர் 140-க்கு பாய்க்கு 15 நாட்களும் நிர் 120-க்கு 13 நாட்களும், 100-க்கு 10 நாட்களும் ஆகும். இப்படிப் பட்ட பாய்களைத் தறியிலிருந்து அறுத்து ஓரத்தைக் கட்டியும் தேய்த்தும் வழவழப்புச் செய்து, பூர்த்தியாக்கிச் சங்கத்தில் கொடுத்து அதற்குரிய விலையைப் பெற்றுக் கொள்வார்கள்.

சங்க உறுப்பினர்களில் சுமார் 30 பேர்கள் மட்டுமே இதனை நெய்கிருர்கள். குடும்பத்தினரும் உதவுகிருர்கள். இவர்களுக்கு நாள் ஒன்றுக்குச் சராசரியாக ஒரு நபருக்கு ரூ. 1 வரை தான் மொத்தக் கூலியாகக் கிடைக்கும் நிலை இருக்கிறது.



இதுவரை விஞ்ஞானத்தின் விருந்தை நாம் சுவைத்தவர்களே தவிர, சமைத்தவர்களில்லை. விருந்தை வெளிநாட்டார் படைத்து அழைத்தால் போய் அருந்திவிட்டு, பிறகு குறையும் கூறியிருக்கிருேமே தவிர நாம் அதிகமாக எதையும் கண்டுபிடிக்கவில்லை.

## ஒரு பாய் விலை ஆயிரம் ரூபாய்

நெம்பர் 140, 120, 100 கொண்ட பாய்களாலேதான் இப் பாய்க்குப் பெயரும் புகழும் வந்தது. இந்தத் தரத்தினை 9அங்குலத்திற்குப் பாயின் இடையே வைத்துப் பார்த்தால் அந்தப் பாயானது 140 நூல்களை கொண்டதாக இருந்தால் அதனை 140 பாய் என்றும் 120 நூல்களைக் கொண்டதாக இருந்தால் அதனை 120 பாயென்றும் கூறுவார்கள். இங்கே உயர்தரப் பாய்களாக நிர் 140 தரப் பாய்களுக்கு மேலே நெய்வது இல்லை. இங்கிலாந்து ராணி எலிசபெத் அம்மையாருக்குச் சென்னை ராயல் இன்குரன்ஸ் கம்பெனியாரால் 1953-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2-ஆம் தேதி வழங்கிய பாயை (சுமார் மதிப்பு ரூ. 1,000) பத்தமடை உயர்ரகப் பாய் நெசவாளர்களே 140 தரத்தில் நெய்து கொடுத்தார்கள்.

## உற்பத்திக் குறைவு

மேலும் 140, 120, 100 எண் பாய்கள் அதிக விலையில் இருப்பதால் எல்லோருமே வாங்க முடிவதில்லை. மேற்சொன்ன 30, 40, 50 தரமுள்ள பாய்களையே சங்கம் உறுப்பினர்களை நெசவு செய்து வரச் சொல்லுகிறது. இதற்குக் காரணம் இந்தப் பாய்கள் ரூ. 7 முதல் 20 வரை மதிப்புள்ளவைகளாக இருக்கின்றன. மேலும் இந்தப் பாய்களில் வேலைப்பாடுகளும், பெயர் பதிப்பதாலும், இந்தப் பாய்களும் விலை ஏற்றத்துடன் காணப்படுகின்றன. இந்தப் பத்தமடையிலே உறுப்பினர்கள் அல்லாதவர்கள் இந்த 30,40 எண் கோரைப் பாய்களையே நெய்கிருர்களே தவிரப் பட்டுப்பாயை நெய்வதில்லை. இவர்களும் சுமார் 20 குடும்பத்தினர் வரை நெசவு நெய்து இவ்வூர் வியாபாரிகளிடமே கொடுத்து விடுகிருர்கள். உறுப்பினர்களால் நெய்யப்பட்டு வரும் நடுத்தரப் பாயை இந்தச் சங்கமானது இந்தியாவிலும், தமிழகத்தினுள்ளும், வியாபாரிகளின் மூலம் அரசு விற்பனை நிலையத்தின் மூலமும் விற்பனை செய்து வருகிறது. ஆளுல் பட்டுப்பாய்கள் அதிகம் விற்பனையாவதும் இல்லை. அதிகம் தயார் செய்யவும் முடிவதில்லை. மேலை நாடுகளின் வியாபாரத்திற்கு அனுப்பிளுல் அவர்கள் ரூ. 100-க்கு மேலும் ரூ. 1,000 வரையும் கேட்கிருர்கள்: அவர்களுக்கு உற்பத்தி செய்து அனுப்ப முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

மேலும் இந்தச் சங்க விளம்பரத்திற்காகவும், வியாபாரத்திற்காகவும், குற்ருலக் கிளை விற்பனையகத்தை இது உருவாக்கியுள்ளது. ஆளுல் இந்தக் கிளை விற்பனை நிலையமானது குற்ருல பருவக்காலத்தில் மட்டுமே விற்பனையை அதிகரித்துக் கொடுக்கிறது. மற்றைய மாதங்களில் இந்த கிளை, விற்பனை நிலையத்தை அமைப்பதில்லை.



பத்தமடை கூட்டுறவு பட்டுப் பாய்ச் சங்கம் ஆண்டுக்குச் சுமார் ரூபாய் 70,000 பெறுமானமுள்ள பாய்களை விற்பனை செய்து வருகிறது. அண்மையில் பொதுப் பணி அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்களும் கூட்டுறவு அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனுர் அவர்களும் பத்தமடைப் பட்டுப் பாய் கூட்டுறவுச்சங்கத்துக்கு வருகை தந்திருந்தார்கள்.

# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரோஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லிக்கோ வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.



**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிசால், மற்றும் எம். பி. கிரிசால், சைலினால், பாலிவாலென்ட் ஃபினால் கலவை.

**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், டீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தர வல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்.,**
**நெய்வேலி-1**

PDSNLC946T70



# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



**தி என்பீல்டு இந்தியா லிமிடெட்**
**சென்னை-19**


# உலகம் சுற்றும் வாலிபர்கள்!



இதில் ஆசியக் குழுவைச் சேர்ந்தவர்கள் 8 பேர், பல ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிவிட்டுப் பாகிஸ்தான் வழியாக இந்தியா வந்துள்ளனர். இவர்கள், டெல்லி, ஆக்ரா, பம்பாய், பூனா, பெங்களூர் ஆகிய நகரங்கள் வழியாக ஆகஸ்டு 2-ஆம் தேதியன்று சென்னை மாநகர் வந்து சேர்ந்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த இந்தக் குழுவின் தலைவர் பெயர் பசோலா. குழுவில் ஒரு புகைப்படக்காரரும், டெலிவிஷன் படப் பிடிப்பாளரும், கார் மெக்கானிக்கும் இடம் பெற்றிருந்தனர்.

இதுவரை இவர்கள் கடந்து வந்துள்ள நாடுகள் 17. நகரங்கள் 50. சுற்றிய தூரம் 16,000 கிலோ மீட்டர்கள்.

இப் பயணத்திற்கு இவர்கள் எடுத்து வந்த ஊர்திகள் 3. ஸ்டாண்டர்டு கார் போன்ற சாயலிருந்தாலும், ஜீப் போன்று எந்தச் சாலையிலும் ஓடத்தக்க விதமாகக் காரை அமைத்திருக்கிறார்கள். வெளிநாட்டு இஞ்சினைப் பயன்படுத்தி, முழுக்க முழுக்க மணிலாவில் செய்யப்பட்டவை இந்தக் கார்கள்.

எனவே இந்தச் சுற்றுப் பயணத்தின் முக்கிய நோக்கம் எல்லா விதமான சாலைகளிலும் செல்ல உறுதியானதுதானா இந்த ஊர்தி என்று சோதனை செய்வதும், அதன் மூலம் பல்வேறு வெளி நாடுகளில் இந்த ஊர்திகளின் புகழைப் பரப்புவதுமாகும்.

பார்ப்பதற்குச் சற்றுப் புதுமையாக—வேடிக்கையாகக் காட்சியளிக்கும் இந்தக் கார்கள் பாலைவனங்களிலும், கடும் புயல் வீசும் பகுதிகளிலும், மழை, வெய்யில் எந்தப் பருவ நிலையிலும், ஓடத்தக்க விதமாக அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எனவே இந்தப் பயணத்திற்கு, பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த கார் நிறுவனங்கள், விளையாட்டுச் சங்கங்கள், ஊர்திகள் ஓட்டுநர், பழுது பார்ப்போர் சங்கத்தார் ஆகியோர் உதவி புரிந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

பல நாடுகளைச் சுற்றிப் பார்த்ததில் பலவிதமான அனுபவம் பெற்றுள்ளனர் இந்தக் குழுவினர். இந்தியச் சாலைகள், கார் ஓட்டுவதற்குப் பிற நாடுகளை விட வசதியாக உள்ளன என்பது இவர்களின் கருத்து.

இவர்கள் அதிகச் சிரமப்பட்டது, ஈரான் நாட்டுப் பாலைவனங்கள் — ஆப்கானிஸ்தானத்திலுள்ள குறுகிய சாலைகள் ஆகியவற்றைக் கடக்கும்போது! பல நாடுகளில் இவர்களுக்குத் தொல்லை தந்தவை குறுக்கே பறக்கும் பறவைகளும், சாலையில் திரியும் விலங்கினங்களுமே!

இந்தியாவில் ஒரு புதிய அனுபவம்—டெல்லி அருகே இவர்கள் வந்த கார்களில் ஒன்று தலைகுப்புறக் கவிழ்ந்து விட்டது. ஆனால் நல்லவேளை, யாருக்கும் ஆபத்து இல்லாமல் அனைவரும் தப்பிவிட்டனர். கவிழ்ந்து விட்ட காரை அக்கம் பக்கச்


**தமிழரசு**

**சந்தா**

ஓர் ஆண்டு ரூ. 8.00
அரை ஆண்டு ரூ. 4.00
தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிர்வாகி:
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை - 2

இராம வாசிகளின் துணையோடு அரும்பாடுபட்டுத் தூக்கி நிறுத்தி ஓட வைத்தனர்.

சென்னைக்கு வந்த இந்தக் குழுவினருக்குத் தமிழக-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கே. இராசாராம் அவர்கள் தலைமையில் பொதுப்பணி அமைச்சர் திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள் முன்னிலையில் ஒரு வரவேற்பு, கன்னிமாரா உணவு விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிலிப்பைன்ஸ் நாட்டின் கவுரவத் தூதர் திரு எம். ஏ. சிதம்பரமும், ஏர்பிரான்ஸ் நிருவாகி கே. ஆர். கோபாலனும் முன்னின்று இந்த வரவேற்பை நடத்தினர். வரவேற்பில் தமது குழுவினரை அறிமுகப்படுத்திய இந்த லண்டன்—மணிலா ஜீப்னி குழுத் தலைவர் திரு ரோனி பசோலா குழுவின் இளைஞரான புகைப் படக்காரரை (திரு வில்லி) அறிமுகப்படுத்தும்போது விபத்தில் ஏதாவது நேர்ந்திருந்தால் இந்த இளைஞரை இப்போது பார்த்திருக்க முடியாது என்று உருக்கமாகத் தெரிவித்தார். இவரை இளைஞர் என்று குறிப்பிட்டுத் தெரிவித்த போதிலும் குழுவினர் அனைவருமே இளைஞர்கள் தாம். கிருதாவும், ஹிப்பி கிராப்புமாக அவர்கள் " தற்கால நாகரிகத்தில் " மூழ்கியவர்களாகவே காணப்பட்டனர். துணிச்சல், உலகம் முழுவதும் சுற்ற வேண்டுமென்ற ஆவல், அவர்களது சுறுசுறுப்பில் தெரிந்தன.

அவர்களது துணிச்சலைப்பாராட்டிய அமைச்சர் திரு இராசாராம் அவர்கள், அந்த நாட்களில் (1957) அண்ணாவுடன் பம்பாய் வரை சிறிய காரிலேயே பயணம் செய்து திரும்பியதைச் (சுமார் 1,800 மைல்கள்) சுவைபடத் தெரிவித்தார்கள். விரைவில் சென்னைக்கு வரவேண்டும் என்பதற்காகக் காரில் வந்த மூவரும், ஒருவர் மாற்றி ஒருவராக




உலகம் சுற்றும் வாலிபர்களின் ஊர்தியை சுற்றுலாத்துறை அமைச்சரும், பொதுப்பணித்துறை அமைச்சரும் பார்வையிடுகிறார்கள்.

இரவு பகலாக விடாது காரை ஓட்டிவந்ததை எடுத்துக் கூறினார்கள்.

1956-ல் இந்தியா முழுவதும் காரிலே சென்று சுற்றிப் பார்த்து வந்துள்ளதாகவும், அமெரிக்காவில் நியூயார்க் நகரிலிருந்து நயாகரா நீர்வீழ்ச்சியைக் காணக் காரில் சென்று வந்ததாகவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பொதுப்பணிஅமைச்சர் பேசும் போது, தமிழ் நாட்டில் போக்குவரத்துக்கேற்ற நல்ல சாலைகள் உள்ளன என்றும், இதுபோன்று காரில் வலம்வரும் போட்டியைச் சென்னையிலும் நடத்த இவர்கள் முன் வரலாமென்றும் குறிப்பிட்டார்கள்.

சென்னையிலிருந்து இந்தக் குழுவினர் சிங்கப்பூருக்குச் சென்றனர். சிங்கப்பூருக்குக் கார் எப்படிச் சென்றது என்று கேட்கிறீர்களா? கடலில் தான்! கப்பல் ஏறிச் சென்றன கார்கள். நீர்ப்பகுதிகள் தவிர பிற நிலப் பரப்புகளில் இந்தக் கார்கள் மூலம் பல இன்னல்களையும் பொருட்படுத்தாது, தங்கள் நாட்டிலிருந்திருந்தால் தாங்கள் பெறக்கூடிய—மூன்று மாத ஊதியத்தையும் தியாகம் செய்து, உலகம் சுற்றும் இந்த இளைஞர்களின் முயற்சி பாராட்டத்தக்கதே!



# தமிழ்ச் சுரங்கம் திரு.வி.க.

அ. நாகலிங்கம்

"எனக்குப் பிறப்பு
வேண்டும்; பிறப்புப் பயன்
கருதாத் தொண்டுக்குப்
பயன்படுதல் வேண்டும்."
—திரு. வி. க.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தேசிய விடுதலைக்காகப் போராடியவர்கள் பலர். அவர்களுள் ஒருவராய் இலங்குகின்றார் திருவாரூர் விருத்தாசல முதலியார் மகன் கலியாண சுந்தரனார்.

திரு. வி. க. என்ற நான்கு எழுத்தினுள் ஓர் உலகமே அடங்கியுள்ளது. அவ்வுலகத்தில் தமிழாசிரியர், பத்திரிகையாசிரியர், விடுதலை வீரர், சமய ஞானி, தொழிலாளர் தலைவர். சமூகச் சீர்திருத்தக்காரர் எனப் பல்வேறு அறிஞர்கள் நடமாடுகின்றனர். இவ்வறிஞர்களையெல்லாம் தன்னகத்தே கொண்டு விளங்கும் உலகமான தமிழ் நாட்டின் 'திருவடிவு' ஆன திரு. வி. க. அவர்கள் 26-8-1883-ல் பிறந்தார். இந்த ஆண்டு அவரது 89-ஆவது பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது.

சென்னைக்கு அருகிலுள்ள பூந்தமல்லியை அடுத்த துள்ளம் என்ற ஊரில் பிறந்தவர் திரு.வி.க. சோழிய வேளாளர் மரபில் பிறந்த திரு.வி.க. இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் மெட்ரிகுலேஷன் வரை பயின்றார். அப்பொழுது யாழ்ப்பாணம் மேலைப்புலோலி நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள் தொடர்பால் நடந்த வழக்கொன்றின் காரணமாக மெட்ரிகுலேஷன் தேர்வு எழுதவில்லை. பள்ளிப் படிப்பு 'வெம்பி வீழ்ந்தது.'

தமக்குக் கல்விக் கண்ணைத் திறந்த தம்மாசிரியர் கதிரைவேற்பிள்ளை அவர்கள் தொடர்பால் தமிழ் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்டார். சமயநூல்களையெல்லாம் கற்க வேண்டும் என்ற ஆர்வம் திரு. வி. கவுக்கு ஏற்பட்டது. அவ்வார்வத்தை மயிலை தணிகாசல முதலியார் போன்றோர் வாயிலாகத் தீர்த்துக் கொண்டார்.

பின்னர், ஸ்பென்சர் கம்பெனியில் கணக்கர் வேலை செய்து வந்தார். அப்பொழுது விடுதலைப் போராட்டம் வீறிட்டெழுந்தது. லாலா லஜபதிராயின் நாடு கடத்தலும், வங்காளப் பிரிவினை ஒட்டி எழுந்த சுதேசி இயக்கமும், விபின் சந்திரபாலரின் சென்னைப் பேச்சும், இங்கிலாந்து பார்லிமெண்டு உறுப்பினரான கீர் ஹார்டியின் ஸ்பென்சர் வருகையும், அவரது வரலாறும், திரு. வி.க. உள்ளத்தில் புதைந்து கிடந்த விடுதலை உணர்ச்சியையும் நாட்டுப்பற்றையும் வீறிட்டு எழச் செய்தன. அன்று முதல் அரவிந்த கோஷால் நடத்தப்பெற்ற 'பந்தே மாதர'ப் பத்திரிகையின் வாசகரானார். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் மணிமொழிக்கிணங்கத் தாம் அறிந்துகொண்ட பத்திரிகைச் செய்திகளைக் கம்பெனியில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு எடுத்துரைத்தார். இதனைக் கண்ட கம்பெனியாரின் மிரட்டல் காரணமாக வேலையிலிருந்து பதவி விலகல் செய்தார்.

நண்பர் ஒருவரின் முயற்சியினால் ஆயிரம்விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளியில் அவருக்குத் தமிழாசிரியர் வேலை கிடைத்தது. தலைமை ஆசிரியர் ஜான் ரத்தினம் பிள்ளையின் தொடர்பினால் கிறித்துவ சமயம் பற்றித் தெரிந்து கொண்டார். இடையே சச்சிதானந்தம் பிள்ளை போன்றோர் முயற்சியினால் தாம் படித்த வெஸ்லி கல்லூரியிலே தலைமைத் தமிழாசிரியரானார். அவரால் அப் பள்ளியில் பணியாற்றிய பண்டிதர்களின் சம்பளமும் உயர்த்தப்பட்டது. மேலும், சில வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

நாட்டின் நிலைமையை நன்கு கவனித்து வந்த திரு.வி.க.வுக்கு அரசியலில் நாட்டு விடுதலைக்காகத் தொண்டு செய்தல் வேண்டும் என்ற வேட்கை எழுந்தது. அதனால் தலைமைத் தமிழாசிரியர் வேலையை விடுத்து 7-12-1917-ல் 'தேச பக்தன்' என்னும் நாளிதழுக்கு ஆசிரியரானார்.

தேச பக்தன் ஆசிரியராக இரண்டரை ஆண்டுக் காலம் திகழ்ந்தார். அக் குறுகிய காலத்தில் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் இந்தியாவிற்கும்—சுதந்திரப் போராட்டத்திற்கும் சிறந்த முறையில் தொண்டாற்றினார். பின்னர் 'நவ சக்தி' என்னும் இதழுக்கு ஆசிரியராகச் சுமார் இருபதாண்டுக் காலம் விளங்கினார். இக் காலங்களில் காங்கிரசில் இருந்து சிறந்த முறையில் பணி புரிந்தார். தொழிலாளர்க்கென இந்தியாவில் முதன் முதலில் 'சென்னைத் தொழிலாளர் சங்கத்தைச்' சில நண்பர்களின் துணையோடு 27-4-1918-ல் தோற்றுவித்தார். அன்று முதல் சுமார் 30 ஆண்டுக் காலமாகத் தொழிலாளர்க்கெனப் போராடினார்.

முப்பத்தோராவது தமிழ் நாடு காங்கிரஸ் மாநாட்டின் தலைவராகக் காஞ்சியில் நியமிக்கப்பட்டார். இங்ஙனம் தலைவராக மட்டுமின்றி, அவ்வப்பொழுது நடக்கும் ஒத்துழையாமை இயக்கம், உப்பு சத்தியாக்கிரகம் முதலிய பல நிகழ்ச்சிகளிலும் சட்ட சபைத் தேர்தலிலும் பெருந் தொண்டாற்றினார். இதில் என்ன வியப்பு என்றால், பலரையும் சிறையில் அடைத்த ஆங்கில அரசாங்கம் இவருக்கு மட்டும் சிறை வாழ்வு அளிக்க

வில்லை. 1921-ஆம் ஆண்டு இவரை நாடு கடத்த முயன்ற வெலிங்டன் பிரபு, சர். பி. தியாகராயச் செட்டியார், தலைமை அமைச்சர் பனகல் ராஜா ஆகியவர்களின் அறிவுரையின் பேரில், அம் முயற்சியைக் கைவிட்டார். இங்ஙனம் அரசியலில் போராடிய திரு. வி. க. பின்னர் காங்கிரஸ் உறுப்பினராக மட்டும் இருந்து கொண்டு தொண்டாற்றினர்.

ஆங்காங்கே தொழிற்சங்கங்கள் அமைத்தார். சமய மாநாடுகளில் தலைமை வகித்துச் சமயங்களின் சீரிய கொள்கைகளைச் செவ்வனே விளக்கிச் சமயத்தின் உள்ளக் கிடக்கையை மக்களுக்கு அறிவுறுத்தி வந்தார். இவர் தலைமை தாங்கிய தொழிற் சங்கங்களும், சமய மேடைகளும் பலப் பல. இலங்கைக்கு இருமுறை சென்று, மாணாக்கர் மாநாடுகளில் தலைமை வகித்தார். இங்ஙனம், தமிழ் நாட்டிலன்றி இலங்கையிலும் இவருடைய தொண்டு பயன்பட்டது.

சமயம் மட்டுமன்றிப் பெண்கள் நலனுக்கென உழைத்தார். கலப்புத் திருமணம் பல நடத்தி வைத்தார். இருளில் மூழ்கிக் கிடக்கும் பெண்களை ஒளி பெறச் செய்தார். கைம்மை அடைந்த பெண்களுக்கு மறு மணமும் அமைதியான வாழ்க்கை நடத்தவும் தம்மாலான உதவிகளைச் செய்தார். ஒரு நாட்டில் பெண்கள் முன்னேறினலன்றி அந்நாடு சிறந்து விளங்க முடியாது என்பதை உள்ளத்தில் கொண்டு, பெண்களுக்குக் கல்வி முதலியன கொடுத்துப் பெண்களை அடுக்களையிலிருந்து வெளி வந்து உலகைக் காணச் செய்தார்.

இங்ஙனம் பல துறையிலும் நுழைந்து அவற்றையெல்லாம் ஒளி பெறச் செய்த திரு.வி.க. தம் 70-ஆவது வயதில் (17-9-1953) இயற்கையோடு இரண்டறக் கலந்தார்.

எழுபதாண்டுக் காலம் உயிர் வாழ்ந்த திரு. வி. க. ஐம்பது (50)க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். அவர் நடத்திய 'தேச பக்தன்', 'நவசக்தி' பத்திரிகைகளும் அக்கால அரசியல், சமூக நிலைகளைச் செவ்வனே விளக்கும் கருவூலமாக விளங்குகின்றன.

இவர் காங்கிரசில் தொண்டாற்றியபொழுது காங்கிரஸ் மாநாடுகளெல்லாம் ஆங்கிலத்திலேயே நடைபெற்றன. அதைக் கண்ட இவர் மாநாடுகள் யாவும் தாய் மொழியிலேயே நடத்தல் வேண்டும் என்று வலியுறுத்தினர். தேசபக்தன், நவசக்தி இதழ்களையும் தமிழிலேயே நடத்தி அரசியல் முதலிய பலவற்றையும் மக்களுக்குப் புரியும் அழகிய தமிழில் எடுத்துரைத்தார்.

அரசியலில் காந்தியக் கருத்துக்களைப் பின்பற்றி காந்தியம் எப்படி மனித வாழ்க்கைக்குத் துணையாக வல்லது என்பதை 'மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்' என்னும் அரிய நூலில் 1927-ஆம் ஆண்டிலேயே எழுதினர். 'இந்தியாவும் விடுதலையும்' என்ற நூலில் விடுதலைப் போராட்டத்தைப் பற்றி எழுதியுள்ளார்.

சமய வாழ்க்கையில் தம் சமயமான சைவத்தை நன்குணர்ந்ததன்றிப் பிற சமயங்களான வைணவம், சமணம், கிறித்துவம், பௌத்தம் பற்றிய நூல்களையும் படித்து உண்மைப் பொருளை அறிந்துகொண்டார். அதனுல் சமயங்களின் உட்பொருள் 'சன்மார்க்கம்' என்பதை உணர்ந்தார். தாம் உணர்ந்ததைச் 'சைவத்தின் சமரசம்' 'தமிழ்நாடும், நம்மாழ்வாரும்' 'தமிழ் நூல்களில் பௌத்தம்' 'அருகன் அருகே அல்லது விடுதலை வழி' 'கிறித்துவின் அருள் வேட்டல்' 'கிறிஸ்து மொழிக் குறள்' போன்ற நூல்களில் பிற சமயங்களின் உண்மைகளைக் கொண்டு தெளிவுறுத்துகிறர்.

சமய நூல்கள் மட்டுமின்றிப் பொருளாதார—சமத்துவம் பற்றியும் நூல் எழுதியுள்ளார். மேனாட்டு கார்ல் மார்க்ஸின் கருத்துக்களை காந்தியக் கருத்துக்களோடு இணைக்கிறர். காந்தீயம் உயிர் என்றும் மார்க்சியம் உடல் என்றும் அவ்விரண்டும் இணைந்தாலன்றிப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நீங்கா என்பதனைப் 'பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தீயமும்' என்னும் நூலில் விளக்குகிறர்.

பெண்கள் நாட்டின் உயிர்நாடி என்பதனை உணர்ந்த திரு.வி.க. பெண்களுக்காகப் 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' என்னும் அரிய நூல் எழுதிப் பெண்ணின் பெருமையை ஆண்கள்-பெண்கள் அனைவரும் உணரச் செய்தார்.

இவருக்கு முன்பு மக்கள் தமிழில் வெளிவரும் கருத்துக்களையும் புரிந்துகொள்ள இயலாததாயிருந்தது. இவர் பத்திரிகையுலகில் புகுந்த பின்னர் பாமர மக்களுக்கு அழகிய எளிய இனிமைத் தமிழில் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும்படிச் செய்தார். கருத்துக்களைச் சிறு சிறு சொற்களிலும் சொற்றெடர்களிலும் எளிய முறையில் உணர்த்தினர். இதனுல் 'தமிழ்த் தென்றல் திரு.வி.க.' என்று மக்களால் பாராட்டப் பெற்றர்.

இவருடைய 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை', 'சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து', 'என் கடன் பணி செய்து கிடப்பதே', 'முருகன் அல்லது அழகு', 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்', 'உள்ளொளி' போன்ற பல நூல்கள் தமிழ் மக்களால் என்றும் நினைவில் வைத்துப் போற்றப் பெறுபவை.

தாம் நூல்கள் இயற்றியதோடல்லாமல் பிறரையும் நூல்க... எழுதத் தூண்டினர். இவர் நண்பர்கள் எழுதிய நூல்களுக்கும் வெளி நாட்டிலுள்ள தமிழர் எழுதிய நூல்களுக்கும் தமக்கே உரிய அழகிய தமிழில் அணிந்துரை, முன்னுரை முதலியன அளித்துள்ளார். ராஜாஜியின் 'ஸோக்ரதர்', பண்டிதை அசலாம்பிகை அம்மையாரின் 'காந்தி புராணம்', 'திலகம் புராணம்', பேராசிரியை ஈ.த. இராஜேசுவரி அம்மையாரின் 'குழவி உள்ளம்', தென்னுப்பிரிக்கத் தமிழர் இராமசாமியின் 'தமிழ் மதம்', பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் 'ஊரும், பேரும்', டாக்டர் மு.வ.வின் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' போன்ற பலர் இயற்றிய நூல்கள் இவர் அணிந்துரைகளைப் பெற்றுள்ளன.

எளிய குடும்பத்தில் பிறந்து இளமையிலேயே மக்களையும் மனைவியையும் இழந்து தம் தமையனார் திரு. வி. உலகநாதர் குடும்பத்தோடு ஒன்றி 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் கொள்கையின்படி வாழ்ந்து இன்று தமிழ் நாட்டு மக்கள் உள்ளத்தில் தமிழ் மறுமலர்ச்சித் தந்தையாக இடம் பெற்றுத் திகழ்கின்றர் நம் திரு. வி. க. ●



பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்

# வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | பை |
|---|---|---|
| முந்திய இதழ்களின்படி தொகை | 13,18,473 | 30 |
| டிரில்லிங் டிவிஷன் வேலையாட்கள் சங்கம், சிவகங்கை எம் (சி) மூலமாக. | 51 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கொடைக்கானல் (காசோலை). | 100 | 00 |
| சாகுபுரம், தாரங்கதாரா கெமிகல் தொழிலாளர் சங்கம். | 27 | 00 |
| ஏ. ராமசாமி, அரசாங்க பொது மருத்துவமனை, சென்னை-3. | 20 | 00 |
| கரோலின், ஆசிரியர், 2/4, மலையப்பன் தெரு, சென்னை-1. | 10 | 00 |
| வி. ராஜாராம் பிள்ளை, ... 41, கதீட்ரல் ரோடு. | 10 | 00 |
| அழகு, (கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கார் ஓட்டுநர்). | 10 | 00 |
| இந்தியா மீடர்ஸ் லிமிடெட், அம்பத்தூர் சென்னை-53 (காசோலை) | 10,000 | 00 |
| தென்னர்க்காடு மாவட்ட ஆட்சியாளர். | 69,869 | 29 |
| தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் .. | 13,739 | 00 |
| திருச்சி மாவட்ட ஆட்சியாளர் .. | 90,056 | 82 |
| நெல்லை மாவட்ட ஆட்சியாளர் ... | 2,529 | 30 |
| கோவை மாவட்ட ஆட்சியாளர் — | 65,969 | 07 |
| மதுரை மாவட்ட ஆட்சியாளர் — | 83,460 | 00 |
| நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் — | 9,735 | 15 |
| தலைமையாசிரியர், அரசினர் உயர் நிலைப்பள்ளி, பெருமங்கலம். | 15 | 00 |
| உதவி ஆணையர், திருநெல்வேலி அறநிலையப் பாதுகாப்புத்துறை. | 800 | 00 |
| துணைப்பதிவாளர், மதுராந்தகம் | 25 | 00 |
| மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், நெல்லை. | 336 | 00 |
| வருவாய்த்துறை அலுவலர், காஞ்சிபுரம். | 690 | 00 |
| ஊராட்சி ஒன்றிய ஆணையர், எல்லாபுரம், | 100 | 00 |
| கோட்ட அலுவலர், என்.சி.எம்.பி பாளையங்கோட்டை. | 32 | 00 |
| இந்தியன் டெக்ஸ்டைல் பேப்பர், டியூப் கம்பெனி லிமிடெட், விருதுநகர். | 100 | 00 |
| குமுதம் எண்டோமெண்ட்ஸ், சென்னை-10. | 1,000 | 00 |
| கோட்டாட்சித் தலைவர், கோவில் பட்டி. | 5,147 | 00 |
| நிலவளத் துணைப்பதிவாளர், காஞ்சிபுரம். | 495 | 00 |
| தாசில்தார் தென்காசி ... | 689 | 92 |
| மாவட்டக் கல்வி அலுவலர், திருவள்ளூர். | 100 | 00 |
| பிராந்தியப் போக்குவரத்து அலுவலர், வேலூர். | 3,270 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலர், வாலாஜாபாத், செங்கற்பட்டு மாவட்டம். | 329 | 00 |

| | | |
|---|---|---|
| நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் ... | 261 | 65 |
| நகரமன்ற ஆணையர், பாளையங்கோட்டை. | 612 | 00 |
| ஊராட்சி ஒன்றிய ஆணையர், தாத்தையங்கார்பேட்டை. | 175 | 00 |
| ஆணையர். (பொறுப்பு) கீழப்பாவூர். | 302 | 00 |
| உதவிப்பதிவாளர், உடங்குடி .. | 33 | 00 |
| தாசில்தார், திருச்செந்தூர். | 2,625 | 28 |
| வனச்சரக அலுவலர், திருநெல்வேலி. | 225 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கடம்பத்தூர். | 531 | 50 |
| இணைத் துணைப்பதிவாளர், காஞ்சிபுரம். | 50 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பூந்தமல்லி. | 170 | 00 |
| துணைப்பதிவாளர், குரும்பூர், நெல்லை மாவட்டம். | 74 | 00 |
| மருத்துவ அலுவலர், பி.எய்ச்.சி., பத்தமடை. | 20 | 00 |
| உதவி மாவட்ட ஆட்சியாளர், செங்கற்பட்டு. | 800 | 00 |
| திரு சித்தையன், சூரமங்கலம், (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் மூலம்.) | 5 | 00 |
| மாவட்ட வனத்துறை அலுவலர், நெல்லை. | 225 | 00 |
| கோட்டாட்சித் தலைவர், காஞ்சிபுரம். | 250 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், வேப்பந்தட்டை. | 150 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், உப்பிலியாபுரம். | 120 | 00 |
| தாசில்தார், தூத்துக்குடி .. | 2,280 | 95 |
| சீனியர் எண்டோமாலஜிஸ்ட், கோட்டஅலுவலர், என்.இ.எம்.பி. தென்காசி. | 60 | 00 |
| வேலைவாய்ப்பு அலுவலர், துணை வேலைவாய்ப்பு அலுவலகம், காஞ்சிபுரம். | 61 | 50 |
| தாசில்தார் (பொறுப்பு), மேலூர் ... | 1,350 | 00 |
| கோட்டாட்சி அலுவலர், கோவில்பட்டி. | 4,339 | 73 |
| துணைத் தாசில்தார், பாளையங்கோட்டை. | 1,333 | 00 |

| | | |
|---|---|---|
| வேளாண்மை வருமான வரி உதவி ஆணையர், திருநெல்வேலி-2. | 1,102 | 00 |
| திரு எஸ். வீரமகராஜு, நியூ அக்கெயிங்கு, மேற்கு வங்காளம். | 10 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கொடைக்கானல்-2. | 600 | 00 |
| தலைமையாசிரியர், அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பாபநாசம். | 25 | 00 |
| தலைமையாசிரியர், பி.எம். உயர்நிலைப்பள்ளி, கரூர். | 173 | 50 |
| நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, தூத்துக்குடி டிவிஷன். | 130 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், செம்பொனார்கோவில். | 597 | 50 |
| அறங்காவலர், ஸ்ரீநீர்த்தபுரீசுவரர் கோவில், கெ.ஆடூர், சிதம்பரம். | 150 | 00 |
| துணைப்பதிவாளர், உத்தரமேரூர் .. | 25 | 00 |
| திரு என்.வி. சீனிவாசன், துணைப் பதிவாளர், திருக்கழுக்குன்றம். | 25 | 00 |
| பிராந்திய போக்குவரத்து அலுவலர், திருநெல்வேலி. | 6,322 | 00 |
| கோட்டாட்சித் தலைவர், சைதாப்பேட்டை. | 2,349 | 00 |
| கோட்டப்பொறியாளர், எய்ச் அண்டு ஆர் டப்ளியூ. | 865 | 00 |
| துணைத்தாசில்தார், பாளையங்கோட்டை. | 450 | 00 |
| உதவி மாவட்ட ஆட்சியாளர், செங்கற்பட்டு. | 950 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலர், பாளையங்கோட்டை. | 550 | 00 |
| திரு பாலன், இராயபுரம் .. | 48 | 00 |
| திரு பாண்டியன் (முதல்வர் அலுவலகம் வாயிலாக). | 40 | 00 |
| அண்ணா மன்றம். (முதல்வர் அலுவலகம் வாயிலாக). | 10 | 00 |
| எம்.ஜி.ஆர் மன்றம் (முதல்வர் அலுவலகம் வாயிலாக). | 10 | 00 |
| திரு முரசொலி மாறன் (முதல்வர் அலுவலகம் வாயிலாக). | 10 | 00 |
| திரு குப்புராஜ், மீனவர் குடியிருப்பு இராயபுரம். | 101 | 00 |
| திரு எம். தேசி (முதல்வர் அலுவலகம் வாயிலாக). | 101 | 00 |

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

### வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்படவேண்டும்

வினா : 1971-ஆம் ஆண்டு ஜூன் மாத 'தமிழரசு' இதழ் பார்த்தேன். அதில் வெளியாகி இருந்த கேள்வி பதிலைக் கண்டு மகிழ்ந்தே இக்கேள்வியைக் கேட்கின்றேன். என் நிலத்தில் தீவிர சாகுபடி செய்ததில் என்னிடம் எச்.பி. 1 கம்பும், எம்.சி.யு. 5 பருத்தியும் கைவசமிருக்கிறது. அவற்றை நல்ல விலைக்கு எங்கே விற்கலாம்? நான் என்ன செய்ய வேண்டும்? இங்குள்ள அரசு விவசாயக் கிடங்கிலும், பருத்தி அபிவிருத்தி அதிகாரியிடமும் கேட்டால் அவர்கள் விதை வாங்கியாகிவிட்டது என்று சொல்கிறார்கள். எனவே நான் அவைகளை எப்படி விற்பது? தயவுசெய்து பதில் கொடுக்கும்படித் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

— எஸ். கே. இராமசாமி,
திருநெல்வேலி-2.

விடை : வேளாண்மைத் துறையினரின் மேற்பார்வையுடன் சாகுபடி செய்யும் பதிவு செய்து கொண்ட விதைப் பண்ணை உழவர்களிடமிருந்து மட்டுமே, அதுவும் விதைப்பதற்குத் தகுந்த விதைகள் மட்டுமே, வாங்கப்படுகின்றன. உங்களிடம் உள்ள எச். பி. 1 கம்பு தானியத்தை விதைக்காகப் பயன்படுத்தக் கூடாது. எனவே, வேளாண்மைத் துறை அலுவலர்கள் உங்களிடம் உள்ள எச். பி. 1 கம்பு தானியத்தை வாங்கிக்கொள்ள மாட்டார்கள். உங்களிடம் உள்ள எம்.சி.யு. 5 பருத்தியைப் பருத்தி அபிவிருத்தி அலுவலரும் வாங்கிக் கொள்ள முடியாது.

நீங்கள் அவைகளை விற்பனை செய்ய வேண்டுமானால் உங்கள் அருகாமையில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை ( Regulated Market ) நாடுவதே நல்லது. திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டி, சங்கரன்கோவில், தூத்துக்குடி, புதூர், கழுகுமலை, கடம்பூர், தென்காசி, அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் உள்ளன. உங்கள் ஊருக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்குச் சென்று, அதன் கண்காணிப்பாளர் அவர்களைச் சந்தித்துக் கலந்தாலோசியுங்கள். அவர் உங்களிடம் உள்ள எச். பி. 1 கம்பு, எம்.சி.யு. 5 பருத்தி ஆகியவைகளை விற்பனை செய்ய ஆவன செய்வார்; அல்லது என்ன செய்ய வேண்டும் என்பதற்குரிய வழிவகைகளைக் கூறுவார்.

* * *

வினா : தேக்குமர விதை எங்கு கிடைக்கும்? மணல் பூமியில் விளையுமா? எப்படிப் பயிரிட வேண்டும்? அதற்குத் தண்ணீர் எப்போதும் தேவையா? விளக்கம் தேவை.

—எஸ். மஹபூப் பாஷா,
சுங்குவார்சத்திரம்.

விடை : மிகுந்த சத்துள்ள மண்ணும் அதிக மழையும் உள்ள இடங்களே தேக்கு மரம் வளர்க்க ஏற்றதாகும். வறட்சியையும், பனியையும் தாங்கிக் கொள்ளும் சக்தியற்றது தேக்கு. எனவே, வறட்சியும், பனியும் இல்லாத இடங்களே தேக்கு மரம் வளர்க்க ஏற்றதாகும்.

கோ—25 நெல்



பொதுவாக, தேக்குமர விதைகள் விற்கப்படுவதில்லை. ஆனல் நாற்று விட்டு வளர்ந்த கன்றுகளே விற்பனைக்குக் கிடைக்கின்றன. உங்களுக்குத் தேவைப்படும் தேக்குக் கன்றுகளை வனத்துறையின் (Forest Department) நாற்றங்கால்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அல்லது தனிப்பட்டவர்கள் நடத்தும் நர்சரிகளிலிருந்தும், பெற்றுக்கொள்ளலாம். மணல் பூமியிலும் தண்ணீர் வசதி இருக்குமானல் தேக்கு வளர்க்கலாம். ஆனல் தேக்கு மரம் குறுக்களவில் மிகவும் பெரியதாக வளராமல், நீண்டு வளர்ந்து விடுகின்றன. தேக்குக் கன்று நன்கு வளரும் வரை, மண் காய்ந்துவிடாமல் தண்ணீர் விடுதல் வேண்டும். தேக்குக் கன்றுகள் வளர்ப்பது பற்றிய மேலும் விவரம் அறியத் தங்கள் பகுதியில் உள்ள வனச்சரக அலுவலர் அவர்களையோ அல்லது வன உதவிப் பாதுகாவலர் அவர்களையோ கலந்தாலோசியுங்கள்.

• • •

வினு : கோ, 25 நெல் பற்றி கீழ்க்கண்ட விவரங்களைத் தெளிவாய்த் தெரிவிக்கவும்.

1. நாற்று தயார் செய்தல்.

2. நடவு வயல் தயார் செய்தல்.

3. கீழ் உரம், மேலுரமிடுதல்.

4. பயிர்ப்பாதுகாப்பு.

5. வயது.

6. மகசூல்.

— நா. சாத்தூரப்பன்,
காளாம்பட்டி.

விடை : ஒரு ஏக்கரில் கோ-25 நெல் சாகுபடி செய்ய, 18 கிலோ விதையை 12 செண்ட் நாற்றங்காலில் நாற்று விடவேண்டும். விதைகளுடன் அக்ரசான் அல்லது செரசான் அல்லது டீ.எம்.டீ.டி. மருந்தை, ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கலந்து 6 மணி நேரம் வைத்திருந்த பின்பு, முளைகட்டுவதற்குத் தண்ணீரில் ஊறப் போட வேண்டும். நாற்றங்காலுக்கு 1½ அல்லது 2 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது ஒரு வண்டி தழை எரு போட வேண்டும். நாற்றங்காலை 54 அடி நீளம்×8 அடி அகலம் உள்ள, மேடைப் பாத்திகளாக அமைத்துக்கொண்டு ஒவ்வொரு பாத்தியிலும், 1½ கிலோ முளைகட்டிய விதைகளைத் தூவ வேண்டும். நாற்றுகள் நன்கு வளரவில்லையானல் நாற்றுப் பறிப்பதற்கு 10 நாட்கள் முன்னதாகப் பாத்திக்கு ½ கிலோ வீதம் அமோனியம் சல்பேட் போடவும். நாற்றுப்பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக 12 செண்ட் நாற்றங்காலுக்கு 25 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 50 மில்லி லிட்டர் எண்ட்ரின் மருந்தை 25 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். நாற்றுவிட்ட 40 முதல் 45 நாட்களுக்குள் நாற்றைப் பறித்து நடவு செய்து விடவேண்டும். நாற்றுகளை வரிசைக்கு வரிசை 10 அங்குல இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 6 அங்குல இடைவெளியும் விட்டு நடுவதே சிறந்தது.

நடவு வயல் தயார் செய்ய நிலத்தை இரும்புக் கலப்பையால் அல்லது டிராக்டரால் நன்கு உழுது சேருக்க வேண்டும். ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் அல்லது 5 வண்டி தழை எரு ஆகியவைகளைப் போட வேண்டும்.

கடைசி உழவில் 17 கிலோ தழைச்சத்து(85 கிலோ. அமோனியம் சல்பேட் அல்லது 37 கிலோ யூரியா), 21 கிலோ மணிச்சத்து (130 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 14 கிலோ சாம்பல் சத்து (23 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்) ஆகியவைகளை அடி உரமாகப் போட வேண்டும்.

நாற்றுவிட்ட 21-ஆம் நாளும், கதிர் உருவாகும் சமயத்திலும் ஆக இருமுறை மேலுரமிடுதல் சிறந்தது. ஒவ்வொரு தடவைக்கும் 5½ கிலோ தழைச்சத்து (27.5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 12 கிலோ யூரியா) மேலுரமாக இடப்பட வேண்டும்.

நாற்று நட்ட 21-வது, 42-வது, 63-வது நாட்களிலும் தொண்டைப்பூ பருவத்திலும் 0·05 சத பாரத்தியான் அல்லது 0·04 சத எண்ட்ரின் மருந்தோடு 0·6 கிலோ தாமிர பூஞ்சானக் கொல்லி கலந்து தெளிக்கவும். நெற்பூவில் பால் பிடிக்கும் சமயத்தில் நாவாய்ப் பூச்சி தோன்றிப் பாலை உறிஞ்சிப் பதராக்கிவிடுவதைத் தடுக்க ஏக்கருக்கு 10 கிலோ பி.எச்.சி. 16 சதத்தூளைத் தூவ வேண்டும். சம்பாப் பட்டத்தில் (ஜூலை—ஜனவரி) கோ-25 நெல்லின் வயது 180 நாட்கள். ஆனல் தாளடி அல்லது பிசானம் பட்டத்தில் (செப்டம்பர்—மார்ச்சு) இதன் வயது 165 நாட்களாகக் குறைந்து விடுகிறது. இது வரை ஏக்கருக்கு 4,544 கிலோ வரைக்கும் மகசூல் கொடுத்துள்ளது.

• • •

வினு : அக்ரசான் அல்லது செரசான் மருந்தை விதைப்பதற்கு முன்பு நெல் விதையுடன் எப்படிக் கலக்க வேண்டும்? கருவியின் மூலம் என்றல் அது கிடைக்கும் இடம், அதனைப் பயன் படுத்தும் முறை ஆகியவைகளைத் தெரிவியுங்கள்.

— கா. பாலசுப்ரமணியன்,
விருதுநகர்.

விடை : ஒரு கிலோ நெல் விதைக்கு 2 கிராம் அக்ரசான் அல்லது செரசான் மருந்து வீதம் கலக்க வேண்டும். விதைகளையும் மருந்தையும் விதை கலக்கும் கருவியில் இட்டு நன்கு சுற்ற வேண்டும். விதை கலக்கும் கருவி (Seed Treating Drum) உங்கள் ஊர்நல ஊழியரிடம் (கிராம சேவக்) இருக்கும். அல்லது ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலரிடம் கிடைக்கும். அவர்களைச் சந்தித்துக் கேட்டு வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். விதை கலக்கும் கருவியைப் பாதி விலையில் நீங்களே பெற்றுக் கொள்ளலாம். விதை கலக்கும் கருவி உடனடியாகக் கிடைக்காவிட்டால், விதைகளைத் தரையின் மேல் குவித்து, அதன்மேல் மருந்தைப் பரவலாகத் தூவி, உங்கள் கைகளினலேயே நன்கு கலக்குமாறு செய்துவிடலாம். விதையுடன் மருந்து கலந்த 6 மணி நேரத்திற்குப் பின்புதான் தண்ணீரில் ஊறப்போட வேண்டும்.






## 16. இனிக்குமே நெஞ்சம் எமக்கு

கட்டித் தழுவிக் கனிஇதழில் முத்தமிட்டே
ஒட்டி உறவாடி உண்மையிலே—தொட்டில்
தனிவிட்டு நாளெல்லாம் தாலாட்டுப் பாட
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வித்துவான் ஆ. சுப்புலட்சுமி, எழும்பூர்.

இன்ப மணத்தில் இசையரங்கில், எம்பெருமான்
அன்பு வழிபாட்டில், ஆட்சிதனில்,—பண்பார்
தனித்தமிழைக் கேட்டுத் தழைக்கும்போ தெல்லாம்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் மா. கணபதி, திருச்செங்கோடு.

ஆற்றங் கரையோரம் அந்தி நிலவொளியில்
காற்றுக் குளிர்ந்தடிக்கும் காவினிலே—நேற்றுத்
தனிமையினில் என்னன்பர் தந்தசுகம் எண்ணில்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—குழ. அண்ணமலை, கோவை.

பள்ளியில் கற்கின்ற பாலர்கள் யாவருமே
தெள்ளிதாய்த் தேர்வினிலே தேர்ச்சிபெற்றல்—உள்ளம்
இனிக்குமே மாந்தர் எவருக்கும்; சால
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—மு. ப. சங்கரலிங்கம், உடுமலைவடுகபாளையம்.

தென்றல் அணைக்கத்தான் தேன்சிந்தும் பூஞ்சோலை!
குன்றில் முகில்தழுவின் கொண்டாட்டம்—குன்ற
தனித்தநறுஞ் செந்தமிழைச் சற்றே நினைக்க
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—கே. டி. அரசு, மணமேடு.

தொடுத்த வழக்கதனில் தொல்லைநாள் மைசூர்
கொடுத்தவவ் வாக்குறுதிக் கூற்றை—எடுத்துக்
கனிவாக வாதாடிக் காவிரியைப் பெற்றல்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ஐ. மகபூப்ஜான், எருமைப்பட்டி.

அன்றிரவில் என்னை அவரணைத்த போதில்வான்
நின்றெம்மைக் கண்டாய் நிலவே! யாம்—இன்று
தனிக்கிளிகள் ஆயினும்நின் தண்முகத்தைக் காணில்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ந. மங்கையர்க்கரசி, சென்னை-7.

மேனட்டார் போலநாம் மேன்மையுற அம்புலிக்குத்
தானகச் சென்று தமிழ்மணத்தைத்—தேனய்
நனியோங்கச் செய்யும்நாள் நன்னளா மந்நாள்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் பா. இராமநாதன், பேரையூர்.

வற்ருத காவிரியாள் வாழ்வளிக்க வொட்டாமல்
முற்ருத கன்னடர்கள் மூடுகின்றர்—பெற்ற
கனிவோடு மீண்டுமிங்கே காவிரியைத் தந்தால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சிறுமதுரைச்செல்வி, மதுரை-1.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
வித்துவான் ஆ. சுப்புலட்சுமி,
மாநிலப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
எழும்பூர்,
சென்னை-8.

கண்ணென்றும் முத்தென்றும் கட்டிலிலும் தொட்டிலிலும்
எண்ணிலாப் பிள்ளையரை யீன்றுவிட்டு— மண்ணில்
குனிந்து நடப்போர் குடும்பநலம் கண்டால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சிவ. சிவாநந்தன், அறந்தாங்கி.

மேட்டுக் குடியினரே மேதினியை ஆள்வரெனும்
காட்டுக் குரல்தந்தோர் கண்பிதுங்க—நாட்டைத்
துணிவாய் அரசாளும் தூயோர் திறத்தால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வி. மாணிக்கராஜ், எம்.ஏ., கொட்டாரம்.

அறமும் பொருளுடனே ஆர்ந்துள்ள இன்பத்
திறனெல்லாம் தீஞ்சுவையாய்த் தேர்ந்து—பெறவே
தனிசிறந்த முப்பாலை நன்காய்ந்து பார்க்கின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

மண்குடிசை நீங்கி மாண்புறு சென்னையினில்
எண்டிசையு மோங்கும் எழில்மனைகள்—கண்ட
கனவதுதான் முற்றும் நனவானால், கண்ணே
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—அ. இரத்தினசாமி, ஆல்வேலிப்பட்டி.

அன்னைத் தமிழில் அறிவியல் நூல்பலவும்
இந்நாட்டில் தோன்றி எழுச்சிபெறத்—தொன்மைக்
கனியாம் கலைமுழுதும் கல்வியினில் நின்றால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் ந. ஆ. அண்ணாமலை, நத்தம்.

உண்ண உணவும் உடுக்க உடையுமாய்
நண்ணவோர் நல்லிடமும் யாவர்க்கும்—எண்ண
நினைக்கும் விருப்பம் நிறைவேறும் நாளில்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வி. வி. நடராசன், சென்னை-34.

குடிசையை வீடாக்கிக் கூவம் திருத்திப்
படியரிசி பாங்குடனே இட்டு—மிடியை
நனிபோக்கும் நம்கலைஞர் நல்லாட்சி எண்ணி
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—அரிமார்த்தாண்டன், அகஸ்தீஸ்புரம்.

பெரியர் சிறியரென்று பேதமெது மின்றி
உரியதனை சீருடைய ஒன்பாப்—பரிசைத்
தனித்தன்மை காக்கும் தமிழ்க்கவிஞர் பெற்றால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சி. ரா. கோபாலன், கோவை-18.

அன்னை மொழிநோய் அழிப்பாரை 'வைத்தியரென்'(று)
அண்ணா மலைக்கழகம் ஆக்கியதை—எண்ணின்
கனியின் நறுஞ்சுவையாய்க் கற்கண்டின் பாகாய்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—பொ. வேலம்மாள், கொட்டாரம்.

எந்தமிழர் ஆட்சியைப்போல் இந்திய மாநிலங்கள்
சிந்தித்துச் சீராய்ச் செயல்பட்டால்—எந்தாய்
இனிதே மகிழ்ந்தின்பம் எய்திடுவாள், அந்நாள்,
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—செ. இராமலிங்கன், புதுச்சேரி-4.

நாட்டினிலே நல்லமைதி நாளும் தொழில்வளர்ச்சி
வீட்டினிலே இன்ப விளக்கமே—காட்டும்
தனித்தமிழின் ஆட்சி தழைத்தலால் தேனாய்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் துரை முருகு, திண்டுக்கல்-1.

பிச்சை எடுப்பாரைப் பேணிப் பிழைப்பளிக்க
இச்சையுடன் செய்தார் எழில்திட்டம்—மெச்சக்
கனிந்திடும் காலம் ; கலைஞரின் தொண்டால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சண்முகதாயுமானவன், பொன்மலை.

நாநலத்தில் அண்ணா ; நடுநிலையில் வள்ளுவனார்
பாநலத்தில் பாவேந்தர் ; பைந்தமிழர்—மானம்
தனித்திலங்கச் செய்கலைஞர் தன்னாட்சி எண்ண
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் நெறிமுடியார், சமத்தூர்.

வருத்தம் ஒருபால்; மகிழ்ச்சி மறுபால்
இருத்தல் சமூக இழிவே—திருத்தி
புனிதச் சமத்துவம் பூத்திடச் செய்தால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வ. ராசசேகரன், சென்னை-7.

அண்ணா வழிநடக்கும் ஆற்றலுள்ள தம்பியர்கள்
கண்ணாய்த் தமிழ்நாட்டைக் காத்திடுவர்-திண்ணம்
இனிப்பிரிந்து நில்லோம் எனத்தமிழர் சேர்ந்தால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ப. பாலசுப்பிரமணியம், சென்னை-17.

கல்லூரிப் பாடமொழி கச்சேரி ஆற்றுமொழி
எல்லாரும் கோயிலினில் ஏத்துமொழி—எல்லாம்
இனியிங்(கு) எமதுயிர் இன்றமிழ் என்றால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் சி. வெ. இராமசாமி, பி.ஏ., பொள்ளாச்சி.

செந்தேன் மலர்தழா சித்திரமுன் செவ்வதழா,
எந்தஇதழ் தித்திக்கும் என்றுணரா—இந்தத்
தனிக்கோட்டை வாழ்வைத் தளிர்க்கொடி நீமாற்றின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சி. சௌ.கருப்பன் செட்டி, திருச்சி-15.

ஆலைக் கரும்பாய் அனல்மேல் மெழுகாக
ஓலைக் குடிசைக்குள் உய்ந்துவரும்—கூலி
இனம்வாழத் திட்டமிடும் இவ்வரசை வாழ்த்த
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

ஏற்றநிலம், வீடுநல்கி ஏழைகட்கு வாழ்வளித்து
நாற்றிசையும் பேறுபெற்ற நம்கலைஞர்—ஆற்றல்
நினைக்கும்போ தெல்லாம் நினைக்கும்போ தெல்லாம்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—போ. நீராவிப்பாண்டியன், சிவகாசி.

நல்லவரைக் கொன்றுவிட்டு நாட்டை அழித்துவிட்டு
வல்லவரை வாட்டிவரும் வல்லூறே —பொல்லா !
மனிதனே ! நின்கொடுமை மாண்டதென்று கேட்டால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—காரை கணேசன், சென்னை-4.

இல்லாமை நீங்கி இரக்கும் நிலையொழிந்து
கல்லாமை மாறிக் கலைவளர்ந்தால்—நல்லாய் !
இனித்தழைக்கும் இச்சமூகம் என்னுமே மாப்பில்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன்கோட்டை.

வீட்டுக்(கு) இருபிள்ளை ; வீதியெல்லாம் பள்ளிகள் ;
நாட்டுக்கோர் நல்ல அரசாட்சி ; காட்டும்
தனித்துணிவில் தன்னிகரில் மக்களென வாய்த்தால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—கே. எஸ். பைரோஸா, கம்பம்.

இன்றமிழே ஆட்சியில் வீற்றிருக்க எம்கலைஞர்
நன்முறையில் காத்து நலமளித் (து)—என்றும்
மனிதகுலம் போற்றவே மாட்சியுறச் செய்தல்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வித்துவான் பெ. அண்ணாமலை, சென்னை-1.

மூடப் பழக்கமெனும் மொய்த்துள்ள பேய்க்கூட்டம்
ஓடப் பகுத்தறிவு ஓங்கிடவே—நாடக்
கனிக்குநிகர் நற்கருத்து காசினியிற் சூழின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் நா. கோபாலகிருட்டினன், அம்பிகாபுரம்.

[illegible] யந்தொழியப்
பூவிழந்து குங்குமப் பொட்டிழந்து—கூவும்
தனிவிதவைத் தையலர்தம் கைப்பிடிப்பார் காண
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—மு. ஜெய்ராணி, சின்னதாராபுரம்.

பண்ணார் தமிழைப் பரம்பொருட்கும் ஏற்பித்த
தண்ணார் செயலைத் தனித்தோழி —எண்ணின்
தனிக்காதல் நல்லிரவு தன்னைவிட மேலும்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ச. தமிழ்வேலன், கோட்டூர்.

அறம்வளர்த்தோன் ; செந்தமிழை ஆராய்ந்தோன் ;வாழ்வின்
திறம்உரைத்தோன் ; நாகரிக, சீர்மை—சிறக்க
இனிதாண்டோன் தாழ்ந்த இழிவகற்றும் தொண்டால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—லீலா கணேசன், நரிக்கல்பட்டி.

நில்லென்று சொன்னாலும் நில்லாத வெண்ணிலவில்
சில்லென்று பூத்த திருமலர்—வல்லி
பனியிதழ் தோய்ந்தூறிப் பாலெடுத்த தென்னின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—கி. கா. இராசேந்திரன், சென்னை-7.

புரப்பாரைத் தேடிப் புறப்பட்ட நாள்போய்
இரப்பாரைத் தேடுநாள் இந்நாள்—வரப்பார் !
இனித்தமிழன் ஆட்சி இருளழிக்கும் ஆட்சி !
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—தமிழாலயன், குளமங்கலம்.

ஆண்டுவரும் மாநிலங்கள் அத்தனையும் சீர்தூக்கின்
ஈண்டு தமிழ்நாட்டுக் கீடாமோ ?—வேண்டித்
தனியரசு பெற்றுத் தமிழரே ஆண்டால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—கி. இராமகிருட்டிணன், மேல்பட்டாம்பாக்கம்.

அனைத்தும் தமிழால் அரசாளச் செய்தெம்
மனத்தில் வதிவீரன் செய்கை—நினைத்தால்
பனிக்குமே கண்கள் ; பரவுமே கைகள் ;
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—இரா. பூமா. அருப்புக்கோட்டை.

கங்கைத்தாய் தெற்குவந்து காவிரியாம் தங்கையுடன்
இங்குதவும் நாள்தொட்டே இந்நாடு—தங்கத்
தனிச்சுரங்கம் ; தாரணிக்கே சொர்க்கந்தான் ; அந்நாள்,
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வித்துவான் ச. சீத்தாராம், கோம்பை.

கற்கண்டு போலிலங்கும் கன்னித் தமிழினிலே
நற்கவிதை கற்குங்கால் நானிலத்தில்—உற்ற
துணிவுடனே பொல்லாத சோம்பலெல்லாம் நீங்கி
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

பைந்தமிழ் நாட்டின் பசுமைப் புரட்சியினால்
நைந்தோர்கள் வாழ நனிவிளையும்—செந்நெற்
கனிநற் 'கருணை' நெற்கண்டால் கற்கண்டாய்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—கோ. கலியாணசுந்தரன், திருமணமங்கலம்.

அனைத்துயிரும் ஆக்கி அருள்வோனின் கோயில்
தனைச்சுற்றி வாழ்மக்கள் தாய்மொழியில்—தேனின்
இனிய தமிழில் இறைவாழ்த்தா ! ஆகா !!
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ந. தமிழரசன், ஆண்டிமடம்.

உள்ளபல தொல்லைகளால் உள்ளமிகச் சோர்ந்திருப்பேன்;
துள்ளுநடை போடுமென்றன் தூய்மழலை—மெல்ல
மணிக்குவளைக் கண்ணுருட்டி அம்மா எனுங்கால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

இலகும் தமிழசைக்கே ஈடேது மில்லை
அழகுத் தமிழினிமை யாரறியார் ?—பழைமைக்
கனித்தமிழ்த் தீங்கவிதை கற்கும்போ தெல்லாம்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

அண்ணா வழிவந்தோர் ஆளும் தமிழ்நாட்டில்
கண்ணாய் இரவலரைக் காத்தளிக்கும்—எண்ணம்
இனிதாய் நிறைவேறி ஏற்றம் பெறுமேல்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—அ. கணபதி, பி.ஏ., பி.டி., பைம்பொழில்.

கன்னம் குழிவிழவே கண்ணிரண்டும் பூவிரிய
இன்னல் தொலைக்கும் இலக்கியமாய்—மின்னும்
பனியொளியாய் மென்மழலைப் பாவலரின் பாட்டாய்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

மாநிலத்தில் தன்னாட்சி மையத்தில் கூட்டாட்சி
நாநிலத்தில் நம்மவர்க்கு நல்லுறவும்—வானில்
தனிக்கொடியும் நம்நாடு தன்னகம் கொள்ளின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ப. சீனிப்பாண்டியன், நெடுவயல்.

எல்லாத் துறைகளிலும் இன்பத் தமிழ்மொழியை,
வல்லாங்கு கண்டே மகிழ்தலுறும்—நல்லார்
தனிக்கவிதை போற்றும் தமிழரசின் தொண்டால்,
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வித்துவான் சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

சங்கத் தமிழ்மொழியைச் சாற்றும் திறன்கண்டு
சிங்கத் தமிழ்நெஞ்சம் தித்திக்கும்—எங்கும்
கனித்தமிழே வீற்றிருக்கக் காணும்நாள் வாழ்வில்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—கொன்றை, இளம்பரிதி.

சித்திரத்துச் சீரவளை, சிந்தை நிறைந்தவளை
முத்துத் தமிழவளை, மூத்தோர்தம்—சொத்தை ;
தனிக்கலையை ஈன்றவளைத், தாயை, நினைக்க
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வெ. செகநாதன், பி.எஸ்ஸி., பி.டி., கோவை.

குங்குமச் செவ்வாய்க் குமிண்சிரிப்பும், நெஞ்சினிலே
தங்கும் அழகுமயில் தன்நடையும்,—பொங்கிக்
கனிந்திருக்கும் பெண்ணவளின் கண்ணேக்கும் கண்டால்
இனிக்குமே நெஞ்சம் எமகது.

—ந. தமிழ்நேசன், செயங்கொண்டசோழபுரம்.

முக்கனியும் சர்க்கரையும் முற்றல் கழைக்கரும்பும்
செக்கச் சிவந்தயிதழ் சேல்விழியாள்—நோக்கும்
இனியமணத் தென்றலுமே ஒவ்வாத் தமிழ்கண்
டினிக்குமே நெஞ்சம் எமக்கு.

—தேவராசன், கூடன்குளம்.

வண்டமிழ் நாட்டின் வளமார் தெருவெங்குந்
தண்டமிழ்ச் சொற்பலகை தான்கண்டால்—தொண்டர்
தனிப்புகழைப் பாடிமகிழ் சான்றோர் கனிபோல்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சி. வடிவேல்முருகன், தேனி.

மக்களுக்குச் சட்டத்தால் மாண்பெல்லாம் ஆக்கிவிட
எக்கால மானாலும் ஏலாதே—தக்க
தனிமுயற்சி தன்னால் மதுக்குடியை மாய்ப்பின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—பொ. முனியப்பன், கூகலூர்.

திங்கள் முகங்கனிந்து செவ்வாய் இதழ்திறந்து
மங்களமாய் வார்த்தைசொல் மாமயிலே—பொங்கும்
பனிபோலும் மென்கரங்கள் பட்டாலே போதும்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—காங்கேயன், வெங்கல்பாளையும்.

# திருவாளர் பொன்மொழியார்

இடைவேளைவரை விறுவிறுப்பாகச் செல்லும் திரைப்படம், அதற்குப் பிறகு வழக்கமான சினிமா பாணியில் முடிவது போல-பழைய துப்பறியும் சாம்புவின் கதையாக திருவாளர் பொன்மொழியாரின் புகழ் வாய்ந்த சரிதத்தின் ஒருபாகம் 'பொக்'கென்று முடிந்தது.

அதாவது-காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாகியது.

அதன் விளைவு—

''பகிர்ந்த துன்பம் பாதியாகிறது; பகிர்ந்த இன்பம் இரட்டிப்பாகிறது'' என்று ஜெர்மன் நாட்டிலே சொல்வார்களாம்.

திருவாளர் பொன்மொழியாருக்கும் அருந்ததிக்கும் இன்பம் இரட்டிப்பு இல்லை-ஏழுமடங்கு அதிகமாகியது. எட்டாவது அதிசயமாக இருவரும் நெருக்கமாகப் புன்னகை தவழ வீற்றிருந்த கோலம்தான் என்னே?

'திருடின விறகும் எரியும்' என்பார்கள். எப்படியோ நடந்து முடிந்துவிட்ட நிகழ்ச்சிகளும் பொன்மொழியாருக்கும் அருந்ததிக்கும் பெரும் புகழைத் தேடிக் கொடுத்துவிட்டன.

வரிசை வரிசையாக வந்து நின்று மாலை அணிவித்து வாழ்த்திச் செல்வோர் கூட்டம் ஏராளம்! ஏராளம்!

இந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்கும் பொழுது நிச்சயமாக பொன் மொழியாருக்கும் அருந்ததிக்கும் தங்களின் திருமண நாள் நினைவுக்கு வந்திருக்காது. அன்று வாழ்த்துவதற்கு இவ்வளவு பேர் வரவில்லை.

இங்கிலாந்து நாட்டிலே ஒரு பழமொழி வழக்கில் உண்டாம்: ''தருமம் ஒருபோதும் ஏழையாக்கினதில்லை; களவு ஒருபோதும் பணக்காரனுக்கியதில்லை; செழுமை ஒருபோதும் அறிவாளியாக்கினதில்லை'' என்று.

அதுபோல, 'புத்திசாலித்தனமும் இவ்வளவு புகழை வாங்கித்தராது' என்று சொல்லும் வகையில் பெரும் புகழெய்தி விட்டார்கள் பொன்மொழியார் தம்பதிகள்.

அது எப்படி?

## 6

ஓடும் ரயிலில், 'இன்ஸ்டண்ட் குருவுடன்' பொன்மொழியார் ஏறினர் அல்லவா ?

அந்த வண்டியில் போலீசார் சிலர் சாதாரண உடுப்பில் இருந்தார்கள். ஒரு பயங்கரத் திருட்டுக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் அந்த வண்டியில் பிரயாணம் செய்வதாகத் தகவல் கிடைத்து இருந்தது போலீசாருக்கு வெகு நாட்களாக அந்தக் கூட்டத்தை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு இருந்த போலீசார் அந்த வண்டியில் பிரயாணம் செய்த சந்தேகத்துக்குரியவர்களை எல்லாம் கவனித்து வந்தார்கள்.

ஆனால், அந்தத் திருட்டுக் கூட்டத்தின் தலைவனை மட்டும் கண்டுபிடிக்கவே முடியாதாம். அவன் எப்பொழுதும் தனித்து வருவானும். அவனுடைய கூட்டத்தில் யாரைக் கேட்டாலும் அவனைப்பற்றி எந்தவிதத் தகவலும் தரமாட்டார்களாம்.

போலீசாரில் சிலர், முதலில் திருவாளர் பொன்மொழியார் தான் அந்தத் திருட்டுக் கூட்டத் தலைவன் என்று முடிவு கட்டியிருந்தார்களாம்.

ஆனால், சென்னையிலிருந்து வந்த ஒரு தகவல் அவர் பெரிய துப்பறியும் நிபுணர் என்று சொல்லிற்றும். அதனால் அவரைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தார்களாம்.

குருவுடன் பொன்மொழியார் அந்த வண்டியில் ஏறவே, திருட்டுக்கூட்டத்தினர், தங்கள் தலைவர், துறவி வேடத்தில் வரவே வழக்கம் போல எழுந்து நின்று கைகூப்பி வணங்கினர்களாம்.

குரு-அதாவது திருட்டுக் கூட்டத்தின் தலைவன் வெளியில் எங்குச் சென்றாலும் தன் கூட்டத்தார் பக்கமே வரமாட்டாராம். எதிர்பாராத வகையில் இன்று தன் கூட்டத்தார் இருந்த பக்கம் சென்றுவிட்டார்; அதற்குக் காரணம் பொன்மொழியார்தான். ஓடும் ரயிலில் ஏற, அந்தப் பெட்டிக்கு அவரை இழுத்துச் சென்றது பொன்மொழியார்தானே!

பெரிய துப்பறியும் நிபுணர் என்பதால் பொன்மொழியார் திருடர் கூட்டத் தலைவனை அங்கே சாமர்த்தியமாக அழைத்து வந்து விட்டார் என்று போலீசார் நினைத்தார்கள். திருட்டுக் கூட்டம் அகப்பட்டுக் கொண்டது. அந்தச் சாதனையைச் செய்தவர் பொன்மொழியார்.

'கேழ்வரகில் நெய்வடிந்த' இந்தச் செய்தியைப் பொன்மொழியாரின் மனைவி அருந்ததியே நம்பவில்லை. நம் தலையெழுத்து, நாம் நம்புவோம்.

"இளவல்"

ஆமாம், பொன்மொழியாரைப் பெரும் துப்பறியும் நிபுணராக்கியது யார்?

தட்டுத் தூக்கி தாமோதரன் தான்!

• • •

தன்னுடைய பழைய புத்தகங்களைத் தேடிக்கொண்டு பூகம்பசாமியுடன் தாமோதரன் கடைக்குச் சென்ற பொழுது பரபரப்படைந்ததைக் கண்டும் காணுமலும், இருந்த தாமோதரன், அன்று இரவு எழும்பூர் ரயில் நிலையத்தில், 'எப்படியும் கண்டுபிடித்துவிடுவேன், எப்படியும் கண்டுபிடித்துவிடுவேன்' என்று பொன்மொழியார் முணகிக்கொண்டு சென்றதையும் கண்டார்.

அவருடைய முணகலைக் கேட்ட மற்றவர்கள் ஏதோ ஒரு பைத்தியம் என்று முடிவு கட்டியிருப்பார்கள். ஆனுல், அன்று காலையில் அமெரிக்காவில் பழைய பேப்பரில் உள்ள வாசனையை வைத்து ஒரு திருட்டுக் கூட்டத்தைக் கண்டுபிடித்ததைத் தாமோதரன் படித்ததால் தன்னுடைய 'மசால்வடை நண்பன்' பெரும் துப்பறியும் நிபுணனுகிவிட்டதாக நினைத்தார். அந்தச் சமயத்தில் அங்கே வந்திருந்த தன் நண்பரான போலீஸ் அதிகாரியிடம் விவரத்தைத் தெரிவித்தார்.

அதன் விளைவுதான் திருவாளர் பொன்மொழியார் துப்பறியும் நிபுணராகிவிட்டார். அடித்தது யோகம். அவருக்கு மட்டுமா, அருந்ததிக்கும்தான்!

• • •

''உன் வாழ்நாள் முழுவதும் நீ உன் மனைவியை உன் முதுகின் மேல் சுமந்து செல்லலாம். ஆனுல், நீ ஒருதடவை அவளைக் கீழே இறக்கிவிட்டால் 'எனக்குக் களைப்பாக இருக்கிறது' என்று அவள் சொல்வாள்'' என்பது இத்தாலி நாட்டுப் பழமொழியாகும்.

அதுபோல இத்தனை நாள் அடங்கிச் சென்ற தன் கணவர் இன்று வரம்பு மீறி அதுவும் பூகம்பசாமி எதிரில் பேசியது அருந்ததிக்குப் பெருத்த அவமானமாகி விட்டது.

அடங்கிக் கிடந்தவர் அடக்கி நினைக்கலாமா ?

''இன்று வரட்டும் வீட்டுக்குப் பார்த்துக் கொள்கிறேன்'' என்ற முடிவோடு அமர்ந்திருந்தாள். அரேபிய நாட்டில் ஒரு பழமொழி உண்டாம், ''கோபத்தோடு எழுகிறவன் நட்டத்தோடு உட்காருவான்'' என்று! அந்தக் கதையாகிவிட்டது, அருந்ததியின் நிலை—

பழைய புத்தகங்களை வாங்கிச் சென்ற ஆள், அந்தப் புத்தகங்களின் நிறத்தையும் அதிலிருந்து வீசும் நாற்றத்தையும் கண்டு ''யாரும் வாங்க மாட்டேன் ஏன்கிறுர்கள். நீங்கள் திரும்ப எடுத்துக் கொண்டு பணத்தைத் தந்தாலும் தாருங்கள், தரா விட்டாலும் கவலையில்லை. இந்தப் புத்தகங்களை என் வீட்டில் வைத்திருக்க முடியவில்லை! அவ்வளவு நாற்றம்'' என்று கைவண்டியிலிருந்து புத்தகங்களை இறக்கி வாசலிலேயே கொட்டிவிட்டுச்சென்றுன்.





அருந்ததிக்குக் கோபம் கோபமாக வந்தது. பழைய புத்தகங்களுக்கு எடைக்கு எடுத்து அவன் கொடுத்த ரூபாய்களைத் திருப்பி எறிந்தாள்.

அந்த நேரத்தில், அகில உலக நுண்கிருமிகள் வளர்ச்சி பற்றிய செமினுரில் கலந்து கொள்ள வெளிநாட்டிலிருந்து வந்திருந்த சிலர் அவ்வழியே சென்றனர்.

பொன்மொழியார் வீட்டின் பக்கம் இருந்து வீசிய நாற்றத்திலிருந்து கண்ணுக்குத் தெரியாத கிருமிகளின் நாற்றம் என்று கண்டு கொண்டனர். நீண்ட நெடுநாட்களாக இந்தக் கிருமிகளை ஆராய்ச்சிக்காக எப்படி வளர்ப்பது என்று தெரியாமல் தவித்துக் கொண்டார்கள்.

பொன்மொழியார் மனைவி அருந்ததி புத்தகங்களின் மூலம் நுண்கிருமிகளை வளர்த்ததை அந்தக் கருத்தரங்குக்கு வந்திருந்த அத்தனை பேரும் ''ஆகா' ஓகோ'' என்று—பாராட்டியுரைத்தார்கள்.

மறுநாள் மாலை பத்திரிகைகள் எல்லாம், ''அருந்ததி அந்தாதி''யைப் பாடியிருந்தன.

பொன்மொழியார் சொல்லியிருந்த ரஷ்யநாட்டு முதுமொழி ஒன்றை அருந்ததி நினைத்துப் பார்த்தாள். 'காதலும், குருட்டுத்தனமும் இரட்டைச் சகோதரிகள்' என்ற முதுமொழியை, 'புகழும் முட்டாள்தனமும் இரட்டைப் பிறவிகள்' என்று திருத்தலாம் என்று முடிவு கட்டினுள்.

மறுநாள், காலையில் அருந்ததியின் தோழியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. பொன்மொழியார் போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டதாகவும் தானே நேரில் பார்த்தாகவும் எழுதியிருந்தாள்.



## போனுல் வராது!

அண்ணு அவர்கள் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த வழியாகக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஓர் ஊரில் நாடகத்தில் கலந்து கொள்வதற்காக உந்து வண்டியில் சென்று கொண்டிருந்தார்.

அண்ணு பேசுவதை அறிந்த கலைவாணர் காரோட்டியை நிறுத்தும்படியாகக் கூறினுர். கலைவாணருடன் வந்த ஒருவர் ஏன் நிறுத்தச் சொல்கிறீர்கள் என்றுர். அதற்குக் கலைவாணர் அண்ணு 'பேசிக் கொண்டிருக்கிறுர்; கேட்டுவிட்டுப் போவோம்' என்றுர்.

உடனே அந்த ஆள் சொன்னுர் "அண்ணு பேச்சைத்தான் பல தடவை கேட்டிருக்கிறீர்களே! அதுவும் சென்னையிலே அடிக்கடி கேட்டுக் கொள்ளலாமே, நமக்கு நாடகத்திற்கு நேரமாகிறது. ஆகவே புறப்படுவோமே'' என்றுர்.

அப்போது கலைவாணர் சட்டென்று சொன்னுர்.

"அண்ணுபேச்சு ஒவ்வொரு கூட்டத்திலும் புதுமையாகஇருக்கும்; ஆகவே இப்போது கேட்காவிட்டால் இனிமேல் வேறு பேச்சுதான் கேட்க முடியும், போனுல் வராத சரக்கு—புதுச்சரக்கு அண்ணுவின் பேச்சு!'' என்று கூறி, அண்ணுவின் பேச்சைக் கேட்ட பிறகே நாடகத்திற்குச் சென்றுர்.

அருந்ததி துடித்தாள். தன் கணவர் போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டார் என்பதற்காக அல்ல:

ஊரெங்கும் தன்புகழ் கொடி கட்டிக் பறக்கத் தொடங்கிய நேரத்தில் இப்படிப் போய் தன் அப்பாவிக் கணவர் அகப்பட்டுக் கொண்டு தன் புகழுக்கு மாசு படரவிட்டு விட்டாரே என்று.

தன்னைப் பாராட்ட வந்த ஒரு போலீஸ் அதிகாரியிடம் பொன்மொழியாருக்குப் புத்தி சரியில்லை என்பதைச் சொல்லி விடலாம் என்று பேசத் தொடங்கினுள்.

பொன்மொழியார் பெயரைக் கேட்டவுடன் போலீஸ் அதிகாரி, தான் வந்த விவரத்தைச் சொன்னுர். அவர் அருந்ததியைப் பாராட்ட வரவில்லையாம். பொன்மொழியார் பற்றிச் சொல்ல வந்தாராம்:

பொன்மொழியாரின்சாமர்த்தியத்தையும் திறமையையும் புகழ்ந்தார். இரண்டு நாட்களாக போலீசாருடன் ஒத்துழைத்துத் திருட்டுக்கூட்டம் முழுவதையும் பிடித்துவிட்டாராம். சமயம் அறிந்து பொன்மொழியார் சொன்ன வார்த்தைகளினுல் தான் திருட்டுக் கூட்டம் சரியாக அகப்பட்டுக் கொண்டதாம்.

அருந்ததிக்குப் பெருமை தாங்கவில்லை.

'சாய்ந்தால் சாய்கிற பக்கம் சாயும் செம்மறி ஆடுகள்' என்று அருந்ததி கேள்விப்பட்டிருக்கிறுள்.

அதிர்ஷ்டமும் அப்படித் தானே ?

எதுவாக இருந்தால் என்ன? பொன்மொழியார் தம்பதிகளை மாலை, மரியாதையோடு ஏராளமானவர்கள் வந்து வாழ்த்திச் சென்றுர்கள் ; செல்கிறுர்கள் !

'' உச்சியிலிருந்து விழுபவனை ஒவ்வொருவனும் கீழே தள்ளிவடுவான். ஏறுபவனையும் ஆகா, ஓகோ என்று ஏற்றியும் விடுவார்கள். ஆகவே, பொன்மொழியார் தம்பதிகளுக்குப் புகழுக்குப் பஞ்சமா ?

பின் எதற்குப் பஞ்சம் ?

அறுவைக்குப் பஞ்சம்.

திருவாளர் பொன்மொழியார் சரிதம் தற்காலிகமாக முடிந்ததால் !



விவசாயப் பெருமக்களுக்கு !

# கோரமாண்டல் பெர்டிலைசர்ஸ் லிமிடெட், செகந்தராபாத்

சிறப்பாகச் சேவை செய்திடும் வகையில்

**க்ரோமோர்**

உற்பத்திகள் விற்பனையாகும் எல்லா மாநிலங்களிலும்

அவர்களின் முக்கிய விற்பனை ஏஜண்டுகளாக

**இ. ஐ. டி. பாரி லிமிடெட்**

மற்றும்

மகாராஷ்டிரா, குஜராத், பீகார், உத்திரப் பிரதேசம், ஹரியானா, மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, மைசூர், ராஜஸ்தான், கேரளா ஆகிய மாநிலங்களில் அவர்களின் விற்பனை ஏஜண்டுகளாக

**ராலீஸ் இந்தியா லிமிடெட்**

இப்போது செயலாற்றி வருகின்றனர்




# அண்ணா மொழி கேளீர்

கிணற்றை ஓர் ஆணியைக் கொண்டு தோண்டி விட முடியாது. கடப்பாறை இருந்தால் கொஞ்சம் கஷ்டப்பட்டுத் தோண்டி முடிக்கலாம். ஆணியை உபயோகித்தால் கையில் தான் காயம் உண்டாகும். மிக விரைவில் தோண்ட வேண்டுமானால் நமக்கு விஞ்ஞான சாதனங்கள் தேவை. விஞ்ஞான சாதனங்களைப் பற்றி மக்கள் அறிந்து கொள்வதற்கு முன்னர் மக்களுக்கு விஞ்ஞானத்திலே நம்பிக்கை ஏற்படும்படிச் செய்ய வேண்டும். அப்போது தான் உற்பத்தி பெருக வழியுண்டு.

* * *

எல்லாப் புத்தகங்களையும் விடச் சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம் தான். உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.

* * *

உள்ளத்தில் கொதிப்பு ஏற்பட்டால் பேசாமலிருந்து விடக் கூடாது. பேசிப் பேசி ஆத்திரம் வெளியேற வார்த்தைகளைக் கொட்டிவிட்டால்தான் கொதிப்பு அடங்கும். பேசாமலிருந்தால் அந்தக் கொதிப்பு வளரும். ஆசாமி கருகி விடக் கூடும். விளைவு என்ன என்பது பற்றிக் கவலையின்றி விபரீதமான காரியங்கள் செய்யக் கூடும்.

கோபுரங்களிலே அந்தக்காலத்தில் அகல் விளக்கு— இந்தக் காலத்திலே மின்சார விளக்கு ; ஏன் ? காலத்திற்கேற்ற மாறுதல் ஏற்படத்தான் செய்யும்.

கோபுரத்தைப் போல ஓரளவுக்கு இக் காலத்தில் புகைக் கூண்டை அமைக்கிறோம். ஒரு விதத்தில் பழமைக்கும் புதுமைக்கும் போராட்டம் நடக்கிறது.

* * *

அரசியல் என்பது அடுத்துள்ள ஒருவனின் பிரச்சினை என்று அலட்சியப் படுத்தக் கூடாது. அது ஒரு நாட்டைச் சேர்ந்த ஒவ்வொருவரின் பிரச்சினையுமாகும்.

* * *

மனித நீதி அரச நீதியை விடப் பெரியது ; அது தான் அரச நீதிகளை அவ்வப்போது மாற்றியும் திருத்தியும் வருவது.

* * *

இந்த நாட்டின் நிலை உயர்ந்திருந்தும் நினைப்பு உயரவில்லை • காரணம் மூட நம்பிக்கைதான்.

* * *

தமிழார்வம் வளர்கிற நேரத்தில் அதற்குச் சுவையும் பயனும் ஊட்டி அதை வழிகாட்டி அழைத்துச் செல்ல வேண்டும் தமிழ்ப் புலவர்கள். அத்தகைய வழிகாட்டும் திறன் அவர்களுக்கு உண்டு ; ஆனால், நாட்டு மக்களை எங்கே, எப்படி அழைத்துச் செல்வது என்பதைப் புலவர்கள் முதலில் தெரிந்துகொள்வது நல்லது.

* * *

நீதி, நீதி என்று சொல்லுகின்றார்களே, நீதி என்றும் நிலையுடையதா ? நிகண்டுகளுக்குக் கட்டுப்பட்டு நிற்கக் கூடியதா ? அல்லவே அல்ல. ஒரு காலத்திய நீதி மற்றொரு காலத்தையும் கருத்தையும் கொண்டு நீதி என்று அறுதியிட்டுக் கூற எவராலும் முடியாது.

* * *

துணிக் கடைக்குச் சென்றால் பல புடவைகள் கண்ணுக்குக் கவர்ச்சியாக இருக்கும். ஆனால் அதில் சிலவற்றையே நாம் எடுத்து வருகிறோம். அது போல நம்முடைய வாழ்வில் மனம் நாடுவது பல. கிடைப்பதோ ஒன்றிரண்டு.

* * *

கோழி வளர்ப்பார்கள் ; குரங்கை வளர்ப்பார்கள்; இன்னும் ஏதேதோ செய்வார்கள். ஆனால் உலகத்தில் பிறந்த மனிதர்களை வளர்க்கும் வழி மட்டும் அறிந்து வைத்திருக்க மாட்டார்கள்.

கேட்டால்,—"மரத்தை வைத்தவன் தண்ணீர் விடமாட்டானா" என்று கூறிவிடுவார்கள்.

* * *

தாய்ப்பால் குடிக்கிறது குழந்தை ! எது வரையில் ? வேறு உணவுகளை உண்டு, ஜீரணித்துக்கொள்ளும் பக்குவம் பெறுகிற வரையில்.

தொழில் துறைக்கு அரசு அளிக்கும் உதவியும் அதைப் பெறும் தொழிலமைப்பு, வளரும் பக்குவத்தைப் பெறுவதற்காகத்தான்.

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரியில் படிக்கும் பொழுது பாடங்களையோ குறிப்புகளையோ அப்படியே உருப்போட்டு, தேர்வில் பதில் எழுதும் வழக்கத்தைமேற்கொள்ளவில்லை. அவர் பாடங்களையும், அத்துடன் மேற்கோள் காட்டும் மற்ற நூல்களையும் விரிவாகப் படித்து, அவற்றின் கருத்துக்களை நன்கு மனத்தில் கொண்டுவிடுவார். பின் அவற்றை வைத்துத் தேர்வில் தமது நடையிலேயே எழுதி விடுவது வழக்கம்.

அண்ணா அவர்கள் கல்லூரி இரண்டாவது வகுப்பில் படிக்கும் பொழுது, ஆங்கில வகுப்பை நடத்திய பேராசிரியர் ஒருவர், பாடஞ் சொல்லிக்கொடுப்பதில் சிறந்தவர் என்றும் கருதப்பட்டவர்.—அவர் வகுப்பில் கொடுக்கும் கேள்வி—பதில்களையும், குறிப்புகளையும் மாணவர்கள் உருப்போட்டு வைத்து விட்டால் போதும், தேர்வில் 'வெற்றி' பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. அண்ணா மட்டும், வகுப்பில் குறிப்புகள் எடுத்துக் கொள்வதில்லை. மற்ற மாணவர்களெல்லாம் தான் சொல்வதை ஒன்று விடாமல் எழுதித் தள்ளிக் கொண்டிருக்கும் பொழுது, அண்ணா மாத்திரம் பேசாமல் உட்கார்ந்திருப்பதைப் பேராசிரியர் பார்த்து விட்டார்.

"அண்ணாதுரை! நீ என் சும்மா உட்கார்ந்திருக்கிறாய்?" என்று ஆசிரியர் கேட்டார்.

"நான் குறிப்பு எடுக்கவில்லை!" என்று அண்ணா பதிலளித்தார்.

"ஏன்?"

"அவற்றை உருப்போட்டு அப்படியே ஒப்பிக்க வேண்டாமென்று நான் நினைத்தேன்."

"கர்வம் பிடித்தவன்! உட்கார்!" என்று ஆசிரியர் சொல்லி உட்காரவைத்தார். அண்ணாவும் குறிப்புகளை எழுதவில்லை.

கடைசியாகப் பல்கலைக் கழக இண்டர் தேர்வு நடந்து, தேர்வு முடிவுகள் வெளிவந்ததும், அறிஞர் அண்ணா அவர்கள் ஆங்கிலப் பாடத்தில் முதலாவதாகத் தேறியிருந்தார். அதற்காக அவருக்கு ஒரு பரிசும் வழங்கப்பட்டது. பரிசு வழங்கும் விழாவில், பரிசுப் புத்தகங்களை வாங்கிக் கொண்டு அறிஞர் அண்ணா அவர்கள் வந்ததும், அவருடைய ஆங்கில ஆசிரியர் எதிர்ப்பட்டு வாழ்த்தினார்.

நன்றியைத் தெரிவித்துவிட்டு, "சார்! உங்களுடைய குறிப்பை நான் உருப்போட்டு ஒப்பித்திருந்தால், தேர்ச்சி பெற்றிருப்பது நிச்சயம்: ஆனால் இந்தப் பரிசைப் பெற்றிருக்க முடியாது" என்று வேடிக்கையாக, அண்ணா சொன்னார்.




ஆசிரியர் சிரித்தபடி, 'நீ கெட்டிக்காரன் என்று எனக்குத் தெரியுமே!" என்று சமாளித்துக் கொண்டார்.

• • •

1933-ஆம் ஆண்டு!

பி. ஏ. ஆனர்ஸ் தேர்வில் அண்ணா கலந்து கொண்டார். ஐந்து கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். ஆனால், இரண்டே கேள்விகளுக்கு மட்டும் தான் விடையளித்திருந்தார். அந்த இரண்டு கேள்விகளுக்குரிய விடைகளுக்கே முதல் மதிப்பெண் கிடைத்துவிட்டது. முழுதும் எழுதியிருந்தால் ஆயிரக்கணக்கில் மதிப்பெண்கள் வாங்கியிருப்பார் போலும்! அவரது விடைத்தாளைத் திருத்திய மாநிலக் கல்லூரிப் பேராசிரியர் தமது மற்றொரு மாணவரிடம் சொல்லிப் பாராட்டிய வாசகங்கள் இவை;

"பச்சையப்பன் கல்லூரி மாணவர் ஒருவர், கட்டுரைப் பேப்பரில் இரு கேள்விகளுக்கு மட்டுமே பதில் எழுதியிருந்தார். அவ்விரு பதில்களும் என்றும் காணாத அளவு உயர்ந்த தரத்தில் இருந்தன. ஆகவே அவர் மற்றக் கேள்விகளுக்குப் பதில் எழுதாததையும் 'பொருட்படுத்தாமல் அவரது விடைத்தாளுக்கு முதல் மார்க் கொடுத்தேன்.

"அந்தப் பதில்களில் எத்தனை விரிவான படிப்பு, நுட்பமான தெளிவு, அழுத்தமான உரைமொழிச் சிறப்பு ஆகியவற்றைக் கண்டேன் தெரியுமா? படித்தால் அவரைப் போல் படிக்க வேண்டும்."

—இவ்வாறு ஒரு பேராசிரியரே புகழும் அளவுக்குக் கல்வியில் சிறந்து விளங்கியவர் அண்ணா.

• • •

1948-ஆம் ஆண்டு!

ஜனவரி 31-ஆம் நாள்!

அண்ணா தனது வீட்டிலே, சோர்வுற்ற நிலையில், கலங்கிய கண்களுடன் அமர்ந்திருந்தார். அவரது அன்னையாரும், தொத்தா என்றழைக்கப்பட்ட அவரது சிறிய அன்னையாரும், அவரது அருகில் அமர்ந்திருந்தார்கள்.

அன்று அண்ணாவின் வீட்டிலே சமையல் கிடையாது! அனைவரும் பட்டினி கிடந்தார்கள். முதல் நாள் மாலையிலிருந்தே அந்தப் 'பட்டினி' தொடங்கியிருக்கிறது. ஏறக்குறைய மூன்று நாட்கள் அண்ணாவும், அவரது குடும்பத்தாரும் பட்டினி கிடந்திருக்கிறார்கள்! காரணம் என்ன தெரியுமா?

ஜனவரி 30-ஆம் தேதி மாலை காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியைக் கேள்விப்



பட்டதிலிருந்து, அண்ணாவின் உள்ளம் துன்பத் தீயில் விழுந்து, தவித்துக்கொண்டிருந்தது; அதன் விளைவால்தான் அண்ணா தமது குடும்பத்துடன் உண்ணா நோன்பு பூண்டிருந்தார். காந்தியடிகளிடம் மிகுந்த பற்று வைத்திருந்தவர் அண்ணா என்பதற்கு இந்த நிகழ்ச்சி சான்றாகத் திகழ்கிறது.

• • •

பல வருடங்களுக்கு முன்பு!

கரூரிலே ஒரு முக்கிய பிரமுகருக்குத் திருமணம். அண்ணாவின் தலைமையிலே அந்தத் திருமணம் நடைபெற்றது. அன்று மாலை கரூரில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. அதில் கலந்து சொற்பொழிவாற்றினார் அண்ணா. சொற்பொழிவை முடித்துவிட்டு, தான் தங்கியிருக்கும் இடத்துக்கு வந்தார். தனது நண்பர்களுடன் உரையாடத் தொடங்கினார். இரவு இரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது. அண்ணா சளைக்காமல் உரையாடினார். ஆனால், பாவம் நண்பர்களால் முடியவில்லை. தூக்கம் அவர்களைத் தள்ளாட வைத்தது. அவர்களது நிலையை உணர்ந்தார் அண்ணா.

"எல்லாரும் தூங்கச் செல்லுங்கள்" என்று கூறினார். அண்ணாவைவிட்டுவிட்டுச் செல்ல எவருக்கும் மனம் இல்லை. அவர் விழித்துக் கொண்டிருக்கிறாரே, நாம் உறங்குவது நியாயமா என்றெல்லாம் அவர்கள் நினைத்துக் கொண்டதனால், தூங்கச் செல்வதற்கு மறுத்துவிட்டார்கள்.

உடனே அண்ணா,

"எனக்குத் தூக்கம் வருகிறது" என்று சொல்லியபடி, படுத்துவிட்டார்.

அண்ணா படுத்த உடனே மற்ற நண்பர்களும் படுத்துவிட்டார்கள். ஏற்கெனவே தூக்கத்தின் பிடியில் அகப்பட்டுத் தத்தளித்த நண்பர்கள், சில நிமிடங்களில் உறங்கிவிட்டார்கள்.

ஆனால்........கால் மணி நேரத்தில் அண்ணா எழுந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு, ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கி விட்டார்.

திருமண வீட்டைச் சேர்ந்த ஒருவர், இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்தவர், மெதுவாக அண்ணாவிடம் வந்தார்.

"என்ன அண்ணா, தூக்கம் வருகிறது என்று சொன்னீர்கள்; இப்போது புத்தகம் படிக்க ஆரம்பித்து விட்டீர்களே" என்றார்.

"அவர்கள் எல்லாரும் தூங்கி வழிந்தார்கள். தூங்கச் சொன்னால் மாட்டோம் என்று சொன்னார்கள். என்னால் எல்லாருக்கும் தொல்லை நேரக் கூடாது என்பதற்காகச் சிறிது நேரம் கண்ணை மூடிக்கொண்டு இருந்தேன்"—அண்ணா பதில் சொன்னார்.

அவரது அன்பு உள்ளம், பண்பு உள்ளம் கண்டு அந்த நண்பர் வியந்து போனார்.

•

1968-ஆம் ஆண்டு!

அண்ணா அவர்கள் ஆந்திர மாநிலத்தில் சுற்றுப் பயணம் செய்தார்கள். குண்டூர், தெனாலி ஆகிய ஊர்களில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். ஆந்திரத்தில் அண்ணாவுக்கு ஏராளமான வரவேற்பு. மக்கள் வெள்ளம் திரள் திரளாகக் கூடியது அவரைக் காண—அவரது பேச்சைக் கேட்க!

அண்ணா ஆங்கிலத்தில் பேசினார். அந்தப் பேச்சு தெலுங்கில் மொழி பெயர்க்கப்பட்டது.

குண்டூர் நகராட்சி, அண்ணாவுக்கு மாபெரும் வரவேற்புத் தந்தது. வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க அளவுக்குச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாக அது திகழ்ந்தது.

நகராட்சித் தலைவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு பெரிய வணிகர். மிளகாய் வியாபாரம் செய்பவர். அவர் வரவேற்பு மடலில் அண்ணாவைப் புகழ்ந்து கூறியிருந்தார்.

வரவேற்புக்குப் பதில் சொல்லத் தொடங்கினார் அண்ணா.

"ஒரு மிளகாய் வியாபாரி இவ்வளவு இனிமையாகப் பேசுவார் என்று நான் கருதவே இல்லை. (I never thought a chilly 'merchant could speak so sweet)" என்று சுவை ததும்பக் குறிப்பிட்டார். மக்கள் மன்றம் நீண்ட நேரம் சிரிப்பைச் சிந்திக்கொண்டிருந்தது.

**தொகுப்பு: எஸ். எஸ். சுந்தரம்**

## வெண்பாப் போட்டி—19

ஈற்றடி: **வெல்லும் உலகை விரைந்து**

முடிவுத் தேதி 1—10—1971

பரிசு: ஓராண்டு **'தமிழரசு'** அன்பளிப்பு.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.




ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு, அச்சிடுபவர் : அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.